T. 703.

சதகத்திரட்டு

[2-ம் பாகம்.]

MANUSCRIPTS
1918
MADRAS

இதில்

பத்துச் சதகங்கள்

அடங்கியுள்ளன.

சென்னை:
தராவஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1914

விலை ரூபா 1.

703

விஷய அட்டவணை.

ம்.	சதகப்பெயர்.	பக்கம்.
	கைலாசநாதர் சதகம்	1-66
	ஜெயங்கொண்டார் சதகம், ...	1-36
	திருமுகவிலாசம்	1-26
	குருநாத சதகம்	1-21
	அவையாம்பிகை சதகம்	1-62
	அருணாசல சதகம்	1-23
	அண்ணாமலைச் சதகம்...	1-64
	வடவேங்கட நாராயண சதகம்	1-48
	தொண்டைமண்டல சதகம்	1-48
	கோகுல சதகம்	1-20
	திருத்தொண்டர் சதகம்	1-67

உ

சிவமயம்.

கயிலாசநாதர்

சதகம்.

12.3

இது

சேலம் சிதம்பரம்பிள்ளை அவர்களால்

இயற்றப்பெற்று,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

விலை அணா 2.

உ

சிவமயம்.

கயிலாசநாதர் சதகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

சீரார் கயிலாச தேவன்மிசை யான்சதகம்
பாராரும் பைந்தமிழாற் பாடவே - ஏராரு
மிந்துநதிச் செஞ்சடிலத் தெந்தைதரு மைந்தனாகச்
சந்தமதத் தந்திமுகன் காப்பு.

கடவுள் வாழ்த்து.

ஆசிரிய விருத்தம்.

சீர்மேவு திங்களணி தேவனே வண்மைபெறு
தில்லைவளர் நடராசனே
செங்கண்மா லயனுநின் னடிமுடிகள் காணாம
றேடிய மஹாதேவனே
தார்மேவு பொங்கர வணிந்தசிவ சம்புவே
சங்கரா கங்காதரா
தயாபர விநோதமெய்ஞ் ஞானச் சொரூபனே
சண்முகனை யீன்றகோவே
பேர்மேவு முப்பத்து முக்கோடி தேவர்க
ளிறைஞ்சிடு மலர்ப்பாதனே
யெழின்மிகு கரத்தினின் மான்மழு தரித்தவோ
ரெந்தையே யெனையாளுவாய்
கார்மேவு சோலையொடு சங்கமா நதிசூழ்ந்த
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (க)

நூல்.

செய்யுள் வகை.

நால்வகைச் சாதியும் பலவகையி னீதியொடு
நாற்கவிகள் சொலு முறைமையு
நவில்பரம லோபிரன் னடக்கைபண் டிதர்முறைமை
நாலெட்டி ராகவிதமுஞ்
சால்புயர் புராணமொடு வேந்தர்கவி யாண்டநா
டத்துவ மனைத்தி னியல்புஞ்
சகலநற் கணிதசாத் திரமட்ட வர்க்கமுந்
தகுசகுன லட்சணமுட
னூல்களிற் சரசாஸ்திர மேன்மைபெறு கொக்கோக
நூலினொடு கர்ப்போட்டமு
நுண்மையாங் * கந்துகத் தியல்புசா முத்திரிக
நூன்மர பெலாமி தனிலே
காலமுத லியாவரு மறிந்திட வுரைத்தனன்
கற்பக விராசமேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே.

வேதியர் சிறப்பு.

ஆகம புராணகலை சாத்திரத் துண்மையுண
ரதிமந்திர பலமகிமையும்
யாகாதி கருமமோ டியமநிய மங்களு
மநுட்டான விதிமு றைமையும்
யோகநெறி வழுவாது காலைநீ ராடலு
முவந்திடலு மெக்கிய வோம
முள்ளமகிழ் சீலமுங் காயத்திரி நிலைமையு
முயர்வேத மோது சீரும்

* கந்துகம் - குதிரை.

பாகமிரு மவுபாச மர்க்கியபாத் தியமுமெய்ப்
பயனுதவு கிரியை யாவும்
பனிரண்டு மாதமுந் தவருது புரிவரிப்
பண்புமறை யோர்பெருமை காண்
காகனக வாழ்வுதரு மாமலைகள் சூழுமுயர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௫)

அரசர் சிறப்பு.

நீதிநெறி வழுவாது செங்கோ னடாத்துவது
நிலைமையது கோடாமலு
நிறைகுடியி லபிமான மொடுமந்திரி யோசனையு
நீள்சத்திப மிகுதானமுஞ்
சாதிமுறை யவரவர்க் கேற்றமரி யாதையுஞ்
சதுர்வித வுபாயங்களுஞ்
சர்வவுயி ரியாவையுந் தன்னுயிர்போ லெண்ணலுஞ்
சதுரங்க சேனைபலமும்
வாதிபிரதி வாதிகள் வழக்கினடு நிலைமையது
மாருது முடிபு சொல்லு
மாதளக் கர்த்தர்பிர தானிதா னுபதிசூழ்
மகிமையும் வெற்றி வளமுங்
காதல்சே ரிவையெலா மரசர்கட் குரியவாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௬)

வைசியர் சிறப்பு.

வந்தமுத லைச்செலவி டார்கணூற் றுக்கொன்று
வட்டியுங் கொள்வர் மிக்க

வண்டப் புரட்டர்முறி தந்துதங் கட்கடகு
வைக்கினுங் கடனளிக் கார்
தந்திடும் பற்றுவா விற்பிசகி டார்சொன்ன
தவணைசற் றெனினும் வழுவார்
தந்நாணை யக்காரர் கேட்டனுப் பினுமிங்கு
தாமதித் தேகொ டுப்பார்
பந்துசன மெனினுநா ணயமிலா தவரெனிற்
பணத்தினுறு தூசுங் கொடார்
பாவாணை ரைக்காணி லுபசரித் தேநல்ல
பரிசளித் துள மகிழுவார்
கந்தமணி வணிகர்முறை யிந்தவகை யென்பர்காண்
கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே.

வேளாளர் சிறப்பு.

ஆட்சிதரு நீதியுங் கொற்றவர்கள் புஜபலமு
மதிவீர சூரர் வலியு
மாயிரவர் வாணிப மியற்றுதனு முலகெலா
மன்னதா தாவென் பதுந்
தாட்சியொன் றில்லாத வந்தணர் மகத்வமுந்
தங்குசுப கல்யாணமுஞ்
சந்ததஞ் செபதபம் பூசைநே மங்களிவை
தப்பாமலேபுரிவது
மோட்சநிலை தருமருட் குருவினுப தேசமும்
முனிவரிரு டியர் சீலமு
மூவுலக முட்புகழ வாழ்வுபெறு தலுமிவைகண்
முற்றுமே ழியர்பெருமை காண்
காட்சிதரு கர்த்தனே சூட்சகா ருண்ணியனே
கற்பக விராச மேவுங்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௬)

கவிஞர் பெருமை.

அணிகொளு மிலக்கிய விலக்கணக் கடன்மடுத்
தாசுமது ரஞ்சித்திர
மாகும்வித் தாரநாற் கவிமழை பொழிந்தெவரு
மிரிதரி தெனச் சொல்லவே
துணிகொளும் பிரபந்த மவையுட் கலம்பகஞ்
சொற்சந்த மாலை வண்ணந்
துகளிலா மடல்கோவை பரணிபிள் ளைக்கவிதை
தொகைநிலைச் செய்யுண் முதலாத்
திணிகொளுபர் நூலெலா மரைநொடியி லேசொலுந்
திறனுநன் மதுர வாக்குஞ்
செப்புமவை யோர்கள்பிர மிக்கவிடி யென்னவே
செய்யும்பிர சங்க நடையும்
கணிகொளிவை யாவுமுடை யோன்கவிஞ னெங்கள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௭)

உலுத்தரியல்பு.

தெள்ளுதமிழ் வாணரைக் கண்டுட னடுங்கித்
திடுக்கிட் டுளம் பதைத்துத்
திகைத்துமுகம் வேறாகி வாயடைத் துக்கண்
குழிந்துபெரு மூச்செ றிந்து
மெள்ளவே யோடிப் பதுங்கிப் பணப்பெட்டி
மீதிற் கவிழ்ந்து காக்கும்
வீணுலோப ரைச்செத்த சவமெனவு மாகாது
வீறுகல் லெனலொவாது

வள்ளமா மென்றிடினு மமையாது கழுதையாய்
வருக்கவுங் கூடாதுபுன்
வயிரவ னெனச்சொலவு மாகாது பதரென
வழுத்திடவு மாகாதுகாண்
கள்ளமன முள்ளமா லோபிக்கு லோபியிணை
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அ)

பிறவிக்குணம்.

விரும்பனத் தோடுபிடி யானைநன் னடைகற்க
மேதினியில் யார்முயன்றார்
வீறுகடன் மீனுக்கு மாமைக்கு நீந்தல்செய
மேனாள் பழக்கினவ ரார்
கரும்பினுக் கிரசமும் பாம்புக்கு விடமுமங்
கார்தான் புகட்டினார்கள்
கானமல ருக்குமண மும்முள்ளின் முனையுமிக்
காசினியி லெவராக்கினார்
பரும்புலியி னெடுபூனை பறவையா ளிகளெலாம்
பாயப் பழக்கினவரார்
பாரவரை யுறைகழுகி னுக்கிரைக ளிங்கென்று
பார்த்தெவர்கள் சொல்லி வைத்தார்
கரும்புவியி லிவையெலாம் பிறவிக் குணங்கள்காண்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கூ)

செல்வத்தால் வருமுயர்வு.

புல்லர்க டமக்குமிகு செல்வபாக் கியம்வரிற்
பொதிமுதத்தின் முத்தப்பனும்

புகழ்முத்து முத்தையா முதலியா ராம்பின்பு
புகன்றிடுவ ரவர்க ளெனவே
செல்வர்க்கு மிக்கதாய்க் * கிள்ளாக்கு சென்றிடுஞ்
செந்தமிழ்ப் புலவோ ரெலாந்
தியாகிமக ராஜனே யென்றுகொண் டாடுவார்
† திருட்டியுந் தெரியாது போம்
நல்லசெவி கேளாது வாயடைத் திடுமிக்க
நண்பினரை யெதிர் காணினு
நட்டதலை யேறிடா மட்டிக் ‡ குலாவர்கடை
நாயினுங் கடைய ரந்தக்
கல்லாத மூடரைப் படைத்தவித மறிகிலேன்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௧௦)

அரிதெனல்.

ஊமைசெவி டொடுபேடு குருடுகூ னின்றியே
யுலகிற் செனித்த லரிதா
மோருறுப் புங்குறைக ளின்றியுயர் குலமதி
லுதித்தலது தனினு மரிதாம்
வாய்மைமிகு கல்விமா னவதரி தாஞ்செல்வ
வானவ ததினுமரிதாம்
வணக்கமு மொழுக்கமும் வாய்ப்பதரி தாந்தர்ம
வானவ ததினு மரிதா
மாமிதினு மத்துவித நெறியுணர்ந் தாசா
னநுக்கிரகம் பெறுவ தரிதா

---

* கிள்ளாக்கு - உண்டியற்சீட்டு. † திருட்டி - கண்.
‡ குலாவர் - ஆடம்பரக்காரர்.

மட்டாங்க யோகமெய்ஞ் ஞானமு நிறைந்திடுத
லதினுமரி தரிது கண்டாய்
காமிசிவ காமியபி ராமிமதி சாமியே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கக)

இறந்துமிருக்கின்றவர்.

தேவால யங்கோ புரங்கல்வி பயிலிடந்
தேர்முதல வுண்டாக்கி னோர்
செகமெலாங் கீர்த்திபெறு மோயாத கொடையுளோர்
தேசத்தி னீதி மன்னர்
காவியஞ் செய்கவிஞர் சுத்தரண வீரரொடு
கனவித்தை கற்றபெரியர்
கதிர்மதியு முள்ளளவு மாறாத வறனெலாங்
காதல்கொடு செய்த பேர்கள்
வாவிகூ டஞ்சோலை தருமசத் திரமடம்
வண்மைபெற வேசெய்த பேர்
வானகத் துயிரகன் றேகினும் புவியதனின்
மாளாத பேர்க ளிவர்காண்
காவுடைய * கோவமுயர் மாவுடைய தேவுமதி
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கஉ)

இருந்துமிறந்தவர்.

வெகுசன விரோதியர்கள் பழிமிகக் கொண்டபேர்
† விதரணர்க் கியாதபேர்

* கோவம் - பொன். † விதரணர் - விவேகிகள்; வித்வான்கள்.

வேட்டகந் தன்னிலே மருவுண் டிருந்தபேர்
வெருகடன் பட்ட பேர்கள்
செகமதனி லேவழக் கோரமது சொல்லுவோர்
செப்புமொழி தப்பு நடையோர்
தினந்தினம் பொய்யுரை புகன்றுபா வலர்தமைத்
திருப்படிக் கின்ற தீயோர்
* மகதமுத லாம்பாஷை யாவையுங் கற்றவையில்
வாய்மூடி நின்ற பேர்கள்
மாறுத வறுமையோர் தீராத பிணியாளர்
மனைவியை வழங்கி யுண்போர்
† ககமென வலைந்துதிரி யினுமாண்ட பிணமென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கக)

செல்வச்சிறப்பு.

பொருளுள்ள பேர்களுக் கருளுண்டு புகழுண்டு
புண்யவச மிக்க வுண்டு
பூதலத் தவரெலாங் கண்டவுட னேதொழுது
பூபதி குபேர னென்பார்
திருகொன் றிலாதமதி யுண்டுதிற னுண்டுமெய்த்
தேசிகர்த மருளு முண்டு
தீங்கியற் றினுநன்மை யென்பார்கள் பெருமையுந்
தீரமொடு வீர முண்டாங்
கருளுண்டு பந்துஜன வுறவுண்டு நண்பினர்க
ளானோர்க ளுண்டு நிதமு
மவர்முகந் தன்னிலழ குண்டுகளை யுண்டுநல்
லானந்த பூர்த்தி யுண்டு

---

* மகதம் - பதினெண் பாஷையு ளொன்று. † ககம் - பறவை.

கருணைசெய் தன்பர்கட் கழியாத நிதியுதவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கச)

வறுமைக்கொணம்.

படியதனி லேநூல்கள் பலகற் றுணர்ந்துநற்
பண்பினு லுயர்வு பெறினும்
பரிபவந் தருகின்ற வறுமைகுடி கொண்டிடிற்
பதிதரென வேமெலிகுவார்
மடிமைவிட் டொழியாது துயின்மிக விரும்புவார்
வாய்ச்சொலெங் குஞ்செலாது
மங்கல மிழந்தமா தருமவ மதிப்பர்பிறர்
மனைவயிற் செல வஞ்சுவார்
கொடியோ ரெனப்பெயர் தரிப்பர்மித மின்றியூண்
கொள்ளுவர் பகை யாவருங்
கூரறிவு குன்றுமோர் காசுக்கு நம்பாத
கொள்கைவறு மைக்குணங் காண்
கடிகம ழிதழ்க்கொன்றை முடியிடை யணிந்தருள்செய்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கரு)

கோபக்கொடுமை.

குற்றங்கண் மூவகையு ளன்றிலாக் கோபமே
கொடிய தன் செய்கை கூறிற்
குடிகெடுக் கும்பாப மதுவிளைத் திடுநல்ல
குணமழிக் குந்தன் முன்னே
யுற்றபொரு ளினையறிய வொட்டாது பலநாளு
முறுகண்ட் ணைத்தந்திடு

மோங்குகன மொடுசிறப் பியாவையு மழித்துமெய்
யுறவோர்க ளவமழிக்கு
மற்றவர்சொல் புத்தியுஞ் செவிதனக் கேறாது
மடமையின் மூழ்கு விக்கு
மாறாத துன்பம் பயக்குமிதை மாற்றிநின்
மலரடி தொழச்செய்கு வாய்
கற்றவ ரகத்துளுறை வுற்றபரி சுத்தனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கசு)

கல்விச்சிறப்பு.

கடலுலகி லுற்றபொரு ளுக்குள்ளே நன்மைதரு
கல்விநிலை பெற்ற பொருளாங்
கனலினா லுருகாது புனலினாற் கரையாது
கள்ளராற் றிருடொணாது
திடமான ராசாதி ராசரா லும்மதைத்
தெண்டம் பிடிக்கொணாது
தெரிவைபொது மாதராற் சேதமா காதொருவர்
செலவிடிற் குறைவுறாதங்
* கடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை
யளவிடவு முடியாதுகா
ணப்பொரு ளினைப்பெறா திப்புவியி லலைகின்ற
வற்பருறு பயனென் கொலோ
கடகய முரித்துடலி னிற்றரித் திடுதேவ
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கஎ)

---

* அடம் - பொல்லாங்கு.

பொருளாசைக்களவிலையெனல்.

கடலிடத் தாழமு மதனினுண் மணலையுங்
* கனம்பொழி மழைத் தாரையுந்
† காயத்தி னிலைமையும் யோகியர்கண் மகிமையுங்
கருதுகல் விக்கெல்லையு
மடவார்க ணினைவையுங் கவியினுட் பொருளினொடு
மாருத நிதருளையு
மகமேரு வளவையுஞ் சிரமீது ரோமமும்
வானத்தி னிறை மீன்களும்
புடவிநதி சலமுமா லோபியரு லோபமுமோர்
போதளவு செய்தாலுமே
பொருண்மீதி லாசைதனை யளவிடக் கூடாது
பூதலமெ லாந்துதிக்குங்
கடவுளே யரிபிரமர் காணொ வண்ணமே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கஅ)

இவர்க்கிது துரும்பெனல்.

கனயோக மார்க்கத்தி னின்றதுற விக்குநற்
காவலர்க ளோர் துரும்பு
கசடறக் கற்றுணர் வுடையோர்க்கு முத்தமிழ்க்
கடலெலா மோர் துரும்பு
தினமுங் கொடுக்கின்ற கொடையாள ருக்கதிக
திரவியமு மோர் துரும்பு
திவ்விபசுந் தரமுள வரம்பையா கினுமவ
டெளிந்தவர்க் கோர் துரும்பு

---

* கனம் - மேகம். † காயம் - ஆகாயம்.

மனமிக வருந்தியே பசியிலார்க் குக்கருப்
பதுவுமோர் சிறு துரும்பா
மதிகரண வீரருக் குயிரொரு துரும்புபா
வலர்க்குமதி யார்துரும்பாங்
கனமிலகு சோலைவளர் சேலநக ரைச்சார்ந்த
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கக)

இவரித்தன்மையரெனல்.

அரியரன் பிரபந்த முறுதியாக் கேளாத
வசடனே கனசெவிடனு
மாங்கார மதுகொண்டு பெரியோரை மதியாத
வறிவிலா தவனூமையாம்
பெரிதாந் தலங்கணதி சென்றுதுதி செய்யாத
பேர்களே சப்பாணியாம்
பிசகாம லனுதினமு நின்பதம் தரிசியாப்
பெருமூட னதிகுருடனாந்
தருமங்கொ டுப்பாரைத் தடுத்திடுங் கொடியனே
சண்டாளன் மாபாவியாந்
தாரணியி லிவர்தம்மை யயனிந்த வண்ணமே
தப்பாம லேவகுப்பன்
கரிதனை யுரித்துமுய லகனையு மிதித்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (உ0)

இப்பத்திரஞ் செல்லாதெனல்.

சகமதனின் முப்பதாண் டுக்குமேற் பட்டகைச்
சாதன மெனும் பத்திரந்

தந்திட்ட தொருமுதற் பொருளுக்கு வட்டியது
சமமாகு காலமளவுந்
தகவுறுந் திறமுடைய ஞகியே தனிகன்மிகு
தனமிகுஞ் செல்வனுகிச்
சமீபத் திருந்துவாழ் கின்றகட ஞளியைச்
சற்றேறனுங் கேளாமலுந்
துகளிலாச் சிட்டனைக் காட்டாம லும்மவன்
சும்மா விருந்து விடிலோ
தோன்றுமப் பத்திர நீதித் தலத்தினிற்
றேல்வியுற் றழியுமெனவே
ககனத்தர் துதிமுனிவ ரகமுற் றுரைத்தனர்கள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (உக)

இது செல்லுமெனல்.

முன்னோர்கள் சொன்னநற் புத்தியுண ராதமுழு
மூடனெதிர் வருவதறியா
மூர்க்கங்கொ ளுன்மத்த னுரைவிட் டோடினேன்
மூதுரை வழாது காக்கு
மன்னவர்க் குத்தன்னு ளஞ்சினே னிளமைபெறு
வாலிபன் யாதாயினும்
வகுத்திடுந் திறமிலா தவன்மிகு பயத்தினல்
மனம்வருந் திடப்பட்டவ
ரிந்நிலந் தனிலெவ ரிடத்தாயி னும்பொரு
ளேற்றெழுதி யீந்த பத்ர
மெக்கா லு நெடுநாள தாயினுஞ் செல்லுமென
வேயிசைத் திடுவர் முனிவோர்
கன்னல்வில் லியைமுன்ன மின்னலடை யச்செய்த
கற்பக விராச மேவுங்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (உஉ)

குருவினியல்பு.

சீலமுயர் நிலைமையும் பாசவயி ராக்கியமுஞ்
சிவபத்தி மிகவு முளராய்த்
திகழ்கின்ற வேதாந்த நாதாந்த யோகாந்த
சித்தாந்த நெறியுணர்ந்து
பாலதா கியநாலு வேதமறு சாத்திரம்
பதினெண் புராண முடனே
பகர்கின்ற வறுபத்து நாற்கலைக் கியானமும்
பயனறிந் தநுபோகராய்
மேலதா கியவாறு தலமுங் கடந்துபாழ்
வெளிகண்டு வீரசைவ
விதிமுறை வழாதுமெய்ஞ் ஞானவழி காட்டுவோர்
மேலான சற்குருவாங்
காலனை யுதைத்துமார்க் கண்டனைக் காத்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (உந)

வைத்தியரியல்பு.

நாடிகணி தானமு மெண்வித பரீட்சையொடு
நாடிப் பிணிக் குறிகளு
நவசித்தர் கோரக்கர் கும்பமுனி தன்வந்திரி
நவிலும்வா கடமுணர்ந்து
சாடிவரு மூலிகையு மறுபத்து நான்காஞ்
சரக்குவகை முறைதெரிந்து
தயிலங்கள் பஸ்பங்கள் கிருதங்கள் குளிகையொடு
சகலவவு ஷதமுறைகளு

நீடுமா யுருவேத நூலுமக ராதியு நிகண்டுபனி
ரண்டு மோர்ந்த
நிலையுளோர் தங்களைப் பண்டிதர்க ளென்பரிந்
நீணிலந் தனிலாணவக்
காடதனை வென்றசிவ யோகியர் நிதம்பரவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (உச)

வியாதிவருமூலம்.

மயிரினு லுமியினுற் கடுவழி நடக்கையால்
மலசல மடக்கை யாலு
மனதுதுய ரத்தினுற் கல்லினு னெல்லினுன்
மாதர்கள் புணர்ச்சி யாலுந்
தயிரிரவி லுண்ணலாற் கனிபல வருந்தலாற்
சருகூற னீரினுலுந்
தயிலம்து மூழ்கிமட மங்கையொடு சேர்தலாற்
றண்பனியி னுற்காலையில்
வெயில்காய்தல் கண்விழிப் பகாலபோ சனமதால்
வெகுநித்திரை செய்த லாலும்
விளம்பிடும் பத்தியத் தாழ்வினுல் வினையினுல்
வியாதிவரு மூலமென்பார்
* கயிரவந் தனைவென்ற செவ்விதழ் மடந்தைசூழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (உரு)

---

* கயிரவம் — செவ்வாம்பல்.

இலட்சுமியிருப்பிடம்.

கொற்றவ ரிடத்தினுங் கோக்களின் வாலினுங்
குணவான்கள் வதனத்தினுங்
குடத்தினுறு பாலினுங் கடல்வார ணத்தினுங்
கொடியினுந் துரகத் தினுஞ்
சுற்றமீங் காதமனை தன்னினுங் கற்புமிகு
தோகைய ரிடந் தன்னினுஞ்
சொல்லரிய சிவிகைபே ரிகைதனங் களினுமது
சூதனன் றிருமார் பினுஞ்
சற்றுயி னும்வாய்மை தவறா ரிடத்துஞ்
சலத்தினுந் தானி யத்துஞ்
சாதிமல ரதனினும் புண்ணிய ரிடத்தினுந்
தங்கநவ ரத்தி னத்தும்
கற்றவ ரிடத்தினுந் திருமக ளிருப்பிடங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (உசு)

மூதேவியிருப்பிடம்.

வருகின்ற யாசக ரிடத்துநோ யினருளும்
வாகின்மட மங்கை பாலும்
வனசூகை முகமதிற் றீபத்தி னிழலினும்
மட்குளை யின்புகை யினுங்
குருதிமட வரிநீழ லாடுதாட் புகையினுங்
கொட்டியிடு முத்தா ளினுங்
குருவரசு நிழல்விளாத் தாணிமர நிழலினுங்
குலைக்குநாய்க் காற்றா ளினும்
பெருகுதனர் தன்னைப் பெருக்கிடுந் தூளினும்
பிணமயா னப்புகை யுளும்

பிறலாங் கந்தையினு மதிகபோ சனரினும்
பேசுபொய் யினரி டத்துங்
கருதரிய மூத்தா ளிருக்குமிட மிவையென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (உஎ)

கலிகாலவியல்பு.

* தாலமா நிழலினல் லோரமுத முண்கினுந்
தப்பாது குடியரென்பர்
தனமிகுத் துளபேர்கள் பித்தளை யணிந்திடிற்
றங்கமென் றேமொழிகு வார்
வாலிபந் தன்னிலே யதிசுசில ராகவே
வைகினும் விடனென்பர் காண்
வறுமைசே ரெளியவர்கள் வயிரமது பூண்கினும்
வளையற்க லெனவுரைப்பார்
சீலந்து ரந்தினு மகத்தினக் கிரமமுஞ்
செயுமீன ரைப்புகழுவார்
சித்தசுத் தியதாகி ஞானநெறி தேர்ந்திடுந்
திவ்வியபெரி யோரை யிகழ்வார்
காலகலி யுகதருமமீதென வுரைத்திடுவர்
கற்பக விராச மேவு
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (உஅ)

இதற்கிதுநன்றெனல்.

ஈயாத லோபியைப் பல்லெலாங் கெஞ்சுவதி
லேற்றுண்ப தேநன் றதா

---

* தாலம் - பனைமரம்.

மிடர்தரு வியாதியாற் றேகமிக மெலிவதி
　　லிறந்திடுவ தேநன் றதாந்
தாயர்தந் தைகளுவக் காப்பிள்ளை பலரினுஞ்
　　சற்புத்ர னொருவ னன்றாந்
தன்மனைவி யாட்கஞ்சி யில்வாழ்க்கை செய்வதிற்
　　சந்நியாச மிக்க நன்று
மோயாது நிலையிலாச் சொற்பல் வுரைப்பதினு
　　முறுதிமொழி யொன்று நன்று
முதவாத லோபர்மேற் கவிசொலித் திரிவதினு
　　முன்னடி துதித்த னன்றாங்
காயத்திரி மந்திரமற வாதவே தியர்துதிசெய்
　　கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
　　கயிலையங் கிரிவாசனே. (உகூ)

கெருவத்தாற்பங்கழந்றோர்.

பிரமனது கெருவமும் மாறன் புகழ்ச்சியும்
　　பீடுபெறு வாலி யகமும்
பேரிலங் கைக்கரச னாற்றலு மிராட்சசப்
　　பெண்டாட கைச்ச மர்த்துந்
திரிபுரர்க ளெண்ணமுந் தக்கனது வேள்வியுந்
　　தீங்குபுரி துரிய னினைவுஞ்
சினங்கொள்கயி டன்மதஞ் சூரபற் பன்றளந்
　　தீரமிகு வீர வலியு
மிரணியன் பிடிமான மும்பகா சூரன
　　தியம்பொணா வுயிர் பறிப்பு
மின்னும் பராக்கிரம மிகுந்தபுர வலர்மதமு
　　மீதகில நிலைநின் றதோ
கரியமா றேடியுங் காணாத பாதனே
　　கற்பக விராச மேவுந்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௯௦)

கடனீயாவிடம்.

வாத்தியார் கவிவாணர் வறுமையர்க டனதுகுரு
மறையோர்கள் மந்திர வாதி
மாதர்பொது மங்கையர்கள் பண்டிதர்க ளஞ்சாத
டாவீர ரடிமை யானோர்
சாத்திரஞ் சொல்பவர்கள் கருணிகர்கள் தச்சாண்டி
தபசிசந் நியாசி தட்டான்
சவாகன் கூத்தாடி வேசிகாந் தன்பந்து
தாயாதி யிவர்கட் கெல்லாம்
பூத்தநற் செல்வர்கட னீந்திடின் மீண்டுமப்
பொருள்வந் துறுது கேட்கிற்
பொல்லாங்க தாய்ப்பினுங் கைபொருட் சேதமாய்ப்
போகுமென வேயு ரைப்பார்
காத்தருள்செய் கர்த்தனே நீத்தவ ரகத்தனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௯௧)

பயனிலாதவை.

கற்பிலா மங்கையர்க் கேழுசுற் றாணும்வெங்
காவலு மிருந்து மென்ன
காஞ்சிரங் கனியதைத் தேன்குடந் தனில்வெகு
காலம திருத்தி யென்ன
வற்புத மாகவே யரியகவி தைகளெலா
மற்பர்மு னுரைத்து மென்ன
வசாத்யரோ யாளருக் கமுதசிந் தாமணி
யரைத்துப் புகட்டி லென்ன

நற்புவியி லேபிறந் தொருசுகிர்த மும்பெரு
நரரிருந் தாவதென்ன
ஞானநெறி யின்றியே கோடிநூ லோதினும்
லாபமென் னதுபோல வாங்
கற்பனைய முறுவலார் பொற்புயர் நடஞ்செய்திடு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௩௨)

இவர்பகையாகாதெனல்.

அற்றூர் தமைத்தாங்கு வேந்தருப தேசிக
ரமைச்சர்மிகு பொருள் படைத்தோ
ரரியமந் திரவாதி கபடர்நய வஞ்சக
ரதிதுட்ட ரொடு கோபர்கள்
கற்றுயர்ந்த பாவாணர் பிறர்கள்வர விடுதூதர்
கள்ளமர் புரிசூரர்கள்
கருணிகர் வைத்தியர் தவத்தினி லுயர்ந்துமெய்க்
காட்சிதரு சிவயோ கியர்
சற்றுகி லும்மிந்த வீரெண்ம ரோடுபகை
தான்கொளிற் றுன்ப முளதாஞ்
சர்வசன முங்கொல்ல வந்தகொடு விடமுண்ட
தற்பரா சிற்சொருபனே
† கற்று குழாமேய்க்க வுற்றுன் றினம்பரவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௩௩)

---

* கற்பு - முல்லை. † கற்றுகுழாம் - இளங் கன்றையுடைய பசுக் கூட்டம்.

இருந்தும் பயனிலாதவை.

இரவலர்க் குதவாத நிதிமதியி லாவான
மிசைபொரு ளிலாத பாட
லிரக்கமில் லாமனது வணக்கமில் லாமதலை
யேந்திழை யிலாவில் வாழ்க்கை
புரவியில் லாதபடை சதுமறையி லாவேள்வி
புஷ்பமில் லாத சோலை
புத்திர ரிலாதமனை மந்திரி யிலாவரசு
புகழ்படைக் காத வுடலந்
திரவிய மிலாவிளமை கவிஞரில் லாதசபை
செங்கோ லிலாத நாடு
தியானமில் லாதசெப மாலய மிலாதவூர்
தீரமில் லாத சேனை
கரங்கா லிலாததநு சுவரிலாச் சித்ரமாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௩௪)

கெருவியாவோர்.

தனையே புகழ்ந்துபிறர் யாரையு மிகழ்ந்திடுஞ்
சண்டியே தனக் கெருவியாஞ்
சற்றிரங் காதெருது போற்றலையை யாட்டிடு
சழக்கனே மதக்கெருவி யாம்
விநயங்க ளொடுபெரியர் செய்நூ லழிக்கின்ற
விகடனே தமிழ்க் கெருவியாம்
வேசையர்க ளாசையான் மனைவியை வெறுப்பவன்
வெகுமமதை சேர் கெருவியா
மனைவோரு மறியவே மதுவுண்டு திரிபவ
னங்கார மிகு கெருவியா

மட்டதிசை யாள்பவன் றுட்டத் தனஞ்செயி
லதிகார வெருவி யென்பார்
கனமான கிருபைவைத் தெனையாண்ட முதல்வனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௩௫)

பட்டணச்சிறப்பு.

பக்கமொரு நாற்காத நீளஞ் சவுக்கமாய்ப்
பலர்கணிறை தருமா வணம்
பணிவாவி மாடமா ளிகைமேடை கோபுரம்
பகால யங்க ளுடனே
மிக்கரத கசதுரக பதாதிகே தனமாடல்
வேசையர்க ளாடல் பாடல்
வீதியிரு பாலினுந் தாழைகமு கஞ்சோலை
மேவுமொளி சூழு மணிக
டக்கபுக ழந்தணர்கண் மன்னர்மந் திரிமுதற்
சகலசா தியரு முளதாச்
சற்சனரொ டட்டலட் சுமிவாச முள்ளதே
சதுரங்க பட்டண மதாங்
கைக்குளே நெல்லியங் கனியெனக் காட்சிதரு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௩௬)

குணமாறதெனல்.

வேதமந் திரமோதித் தேன்பால் புகட்டினும்
வேம்பது கரும்பா குமோ
வெண்மைதரு சீனிச் சொரிந்துபயிர் செய்யினும்
வெள்ளுள்ளி குணமா றுமோ

கோதையர் முலைப்பால் குடித்துவளர் கினுமந்தி
 கொடியகேட் டையினீங் குமோ
கோடிமாத் திரையிலே கிபம்பல வளிக்கினுங்
 குக்கலின் வானி மிருமோ
சாதிமலர் மாலைபோ னெட்டியிற் செய்திடிற்
 சற்றேனும் வாச முறுமோ
சற்குணமி லாதவர்க் கெத்தனை யுரைக்கினுஞ்
 சண்டிக் குணம் போகுமோ
காதலொடு * மாறனை யணைந்தைய னையருள்
 கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
 கயிலையங் கிரிவாசனே. (௩௭)

கருமிகளாவோர்.

மனிதனென வுருவுகொண் டுனதுதிரு வடியிணை
 வணங்கிடா னொரு கருமியா
மனைவிசுத ரிலையவே வேசியே கதியென்று
 வைகுவோ னொரு கருமியாந்
தனமிக விருக்கவுண் ணாதுடுக் காதுமெய்
 தளருவோ னொரு கருமியாஞ்
சந்நியாசி யாகியும் பெண்ணாசை விட்டிடாச்
 சண்டாள னொரு கருமியா
மனவாத ஞானநூ லோதியா ணவமதை
 யகற்றிடா னொரு கருமியா
மன்னைதந் தையர்கள்பசி நோய்கொண் டலைந்திட
 வருந்துவோ னொரு கருமியாங்
கனகசபை தன்னிலே நடனமிடு பாதனே
 கற்பக விராச மேவுங்

* மாறனை - மால்தன்னை; விஷ்ணுவை.

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௩அ)

கருடதரிசனபலன்.

ஆதிவா ரந்தனிற் கருடனைத் தரிசிக்கி
லரியபிணி யாவு மகலு
மழகுபெறு திங்கண்மங் களவார முந்தொழ
வகத்தினுறு துயர்க ளும்போம்
நீதிதரு புந்தியுங் குருவார முந்தொழ
நெடியசூ னியமு மகலு
நிறைவெள்ளி சனிவார முறவுசா ருங்காலை
நித்தமுந் தரிசித் திடின்
மேதையொடு தனகனக வாகனா திகண்முதன்
மேன்மைபெறு செல்வ முளதாம்
வேந்தரென வாழ்ந்தே திருக்கண் களிக்கமுடி
விற்பரம பதமடை குவார்
காதலுட னேபணிசெ யன்பருக் கருளுதவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௩௯)

பதினெண்புராணம்.

மதிக்கின்ற பௌடிகங் காந்தமார்க் கண்டேயம்
வாமனங் கூர்மம் லிங்க
மன்னுசிவ பிரமாண்டம் வாராக மச்சமிவை
மங்கைபா கன்பு ராணந்
துதிக்கின்ற பாகவதம் வைணவங் காருடந்
தோன்றுநா ரதமா லதாஞ்
சொல்லரிய பிரமமொடு பதுமம் மிரண்டுமால்
சுதனயற் குரிய வென்பார்

விதிக்கின்ற பிரமகை வர்த்தமா தித்தற்கு
மேவுமக் கினித னக்கோ
வெற்றிசே ராக்கேய புராணமீ ரொன்பதென
மிக்கோ ருரைப்பர் கண்டாய்
கதிக்கின்ற தொண்டரு ளுதிக்கின்ற சோதியே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சO)

உள்ளூரிற் சிறப்படையாதார்.

உள்ளூரில் வேசையர் பணிக்கருப தேசிக
ளுபாத்தியா ரான பேர்க
ளுயர்தவம் புரிகுரவர் மறுதேச மன்னர்க
ளோங்குவா தியர் தூதர்க
டெள்ளுதமிழ் வாணர்கள் கூத்தாடி * கோணங்கி
செப்படிகள் கற்ற பேர்க
டிறமாண நாணயர்கள் சோசியர் வைத்தியர்கள்
சிலதொழில் கற்றுளோர்க
ளுள்ளபடி யிரெட்டுப் பேர்களையு மெள்ளளவு
முள்ளூரி லுறுதி கொள்ளா
ருண்மையாக் தள்ளுண்ப ராகிலும் புதியர்தமை
யுலகெலாங் கொண்டாடு வார்
கள்ளகலி யுகமதி னடக்கையிது வாகுமே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சக)

---

* கோணங்கி - கோமாளி; விதூஷகன்.

இராகம் முப்பத்திரண்டாவன.

மண்டலம் புகழும்வே ளாவளி சாரங்க
மாளவி நாரா யணி
மலகரி குறிஞ்சிதே வக்கிரியை பூபாளம்
வாராளி தன்னி யாசி
குண்டநற் கிரியைபல் லதிதேசி சாவேரி
கூர்ச்சரி பட மஞ்சரி
குணகௌளி பௌளிபங் காளந்தே சாட்சரி
கோதில்சீ மேக ரஞ்சி
யண்டர்துதி கைசிகம் காம்போதி காந்தாரி
யாமிலலி தைவ சந்த
மமர்நாட்டை பைரவி யிந்தோள முந்தோடி
யாரிரா மக்கிரி யையுங்
கண்டமெழு ராகங்கண் முப்பத் திரண்டதாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சஉ)

வாத்தியங்களாவன.

தாளவாத் தியமொடு திறமான மத்தளஞ்
சாமண்ட லந்தாரை யுஞ்
சகமெலா மோசைபெழு கின்றபே ரிகையுலகு
சாற்றுசர மணிவாத் தியமு
நீளவாத் தியமதாங் கின்னரியி ளெடுமுரசு
நேர்ந்ததவ ளச்சங் கமு
நேரான கொம்போசை பூரிதம் பட்டமிந்
நீணிலமெ லாமொ லிக்கு
மேளவாத் தியமும்வெகு விதமான நாகசுரம்
வெற்றிதரு தம்பூ ருடன்

வேடிக்கை யானதோர் டங்கா வுடுக்கையும்
விநோதமிகு மெக்கா ளமுங்
காளவாத் தியமுமெந் நாளினு முழங்கிடு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சங)

தொண்ணூற்றாறு தத்துவம்.

பூதங்க ளைந்தாகும் ஞானவிந் திரியமாம்
பொறியைந்து புலனைந்த தாம்
பொல்லாத தொழில்கரும விந்திரிய மைந்ததாம்
புகழ்பெறுங் கரண நாலாந்
தாதுவேழ் குணமூன்று மலமுமோ ரைந்ததாஞ்
சாற்றிடு விகார மாறுந்
தழைத்திடும் வாயுவொரு பானென்பர் மண்டலந்
தானுமொரு மூன்ற தாகு
மாதார மாறுகும் வாசல்களு மொன்பதா
மவத்தையைந் தாகு மிக்க
வருமைசேர்ந் துயர்நாடி பத்ததாங் கோசமைந்
தாம்பிணியு மூன்ற தாகுங்
காதல்செய் கருவியிது தொண்ணூற்றொ டாறென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சச)

இதுவரையிற் கலியாண்டவரசர்.

ஆதிப் பரிச்சித்தைஞ் ஞூறுசென மேசய
னாண்டதுவு மூந்நூறதா
மடவாக வேநரேந் திரனொன்று மூன்றுநூ
றவன்புதல்வ னெண்ப தொன்று

நீதிபெறு விக்கிரனு மீராயி ரஞ்சாலி
    நிறைமூன்று நூற்றைம்பதா
  நிதிபோஜ னைம்பதைந் தெண்டிங்க ளுனூறு
    நிகரில்பிர தாப ருத்ரன்
சாதிமநு சோழனிரு நூற்றெடிரு பத்திரண்
    டாம்ராயர் மூவைம் பதாஞ்
  சமர்புரி துலுக்கரைஞ் ஞூற்றியே ழைந்ததாஞ்
    சாற்றுபரி தாபி முதலாக்
காதிகலி யுகமதிற் கும்பினி யரசுகாண்
    கற்பக விராச மேவுங்
  கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
    கயிலையங் கிரிவாசனே. (சரு)

தோத்திரம்.

சுக்கிலசு ரோணிதந் திரண்டுருவ தாயதிற்
    ற்றேனரம் பெலும்பு மாகித்
  தொல்லைமல பாண்டத்தி லீரைந்து திங்களாய்த்
    துவண்டுகரு வூர் கடந்தே
யொக்கவைம் பூதங்கள் கோட்டைகொண் டேமாயை
    யுலகினி லுதித்து நாளு
  மூரினடை நூலோதி நாரியிடை மயன்மீறி
    யுட்கவலை சமுசாரமா
மிக்கடலின் மூழ்கிவலை சிக்குமா னென்னவே
    யிடறுழன் றதுபோதுமே
  யிப்பிறப் பதுநீக்கி மாணுந்த காலமு
    னெழுந்தருளி யென்ற னுடைய
* கக்கிஷமெ லாந்தவிர்த் தனதுபத மேயருள்செய்
    கற்பக விராச மேவுங்

* கக்கிஷம் - வருத்தம்.

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சகு)

இதுவுமது.

அஞ்சுதே நெஞ்சமுங் * கிஞ்சிதம தாகினு
மடங்கியருள் பெறவு மில்லை
னடவிமலை குகைதனிற் சருகிலை யருந்தியே
யருந்தவ மியற்றியு மிலேன்
பஞ்சவிந் திரியம தடக்கிலே னுன்றிருப்
பணிவிடை புரிந்து மில்லேன்
பத்தியுட னஞ்செழுத் தோதுகில் லேனருட்
பரமனே யானுன் பதந்
தஞ்சமென நம்பினே னேழைபங் காளனே
தர்மவர்த் தனி பங்கனே
சருவசன ரட்சகா வெனதுசஞ் சலமெலாந்
தவிர்த்தருள்வ துனது கடனே
கஞ்சன்மா லிந்திரன் றேவர்முனி வோர் தொழுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சஎ)

சுகமகிழ்ச்சி.

துதிவாணி திருவருளும் விசயநல் லாடையுந்
துணிவறிவு சௌபாக்கிய முஞ்
சுகமான போகமுந் தனதானிய லாபமுஞ்
சொல்லரிய மைந்தர் வளமு
மதிபெருங் கல்வியொடு ஞானமுந் தர்மமு
மகத்தான பேர்க ளுறவும்

---

* கிஞ்சிதம் - அற்பம்.

வண்மைமிகு கீர்த்தியு மிராப்பகன் மகிழ்ச்சியும்
வயதுசம் பூர்ணயுரு
மதிகசுந் தரமான தர்மவர்த் தனியுமை
யமையநீ ரிருவ ருந்தா
மடைவதற் கரியவிவ் வைந்நான்கு வகையுநும்
மடியனேற் கருள்புரிகுவீர்
கதிர்மதி யுடன்றேவர் கினரர்காந் தருவர்சூழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சஅ)

கற்புடைப்பெண்டிரியல்பு.

தங்கணா யகரினிற் றெய்வம்வே றிலையெனச்
சந்தத நினைந்தவர் சொலைத்
தட்டாது கோபம்வர வொட்டாது திட்டமாச்
சாற்றுபணி விடைகள் செய்தே
பொங்கமா யவர்குறிப் போர்ந்தொழுகி நித்தலும்
போந்தபெரி யோர்க் கருத்திப்
புரிந்தவ ருளங்களித் திடவிருந் தாற்றியிரு
போதுநன் னீரடியே
திங்கள்வத னத்திலே தங்குபொட் டிட்டுமெய்த்
தேசுற வலங்க ரித்துத்
தினமுநா யகனுண்ட பின்னுண்டு முன்னெழுஞ்
செல்விகற் புடைய ளாவள்
கங்கணந் திரிசூல மான்மழு தரித்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சகூ)

வேசையரியல்பு.

புருடனைக் கண்டவுட னேகத விடுக்கினிற்
போயொளித் திடுவர் பின்பு
பொல்லாத தாய்க்கிழவி தன்னையவர் பாலினிற்
போக்கிவச னிக்க விடுவார்
மருடருங் கண்ணிணர் சற்றருகி லேவந்து
மயல்விளைத் துறவு செய்வார்
மன்னநின் னடிகளிச் சிறுகுடிலில் வைத்தபெதம்
மாதவ மெனச் சொல்லுவா
ரருணிறைந் தவர்போல விருகையி னுற்றமுவி
யாவலொடு முத்த மிடுவா
ரையநீ பிரியிலெம துயிர்பிரியு மென்றவர்க
ளாவிமுழு தும் பறிப்பார்
கருமையணி வேசையர்கண் முறைமையிது காணென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (ருO)

வருடமறுபதுக்கு மாதம் பிறக்குநாள்.

ஆதியிற் சித்திரை மாதம் பிறக்குநா
ளன்றைத் தினங்கார்த் திகை
யானமார் கழியுமறு நாளினி லுதித்திடு
மதிகன்னி மூன்றி லாகு
நீதிதை யாடியும் வைகாசி நான்கிலா
நிகழ்த்துமைப் பசி யாறிலா
நிறைமாசி யைந்திலா மாணியா வணியுட
னோர்ந்தபங் குனி யேழிலா
மாதமுந் நான்குமுன் சொன்னவா ரங்களில்
வழுவாம லேயு திக்கும்

வருடங்க ளறுபதினு மாதம் பிறக்கின்ற
வாரங்க ளிவ்வித மதாங்
* காதக ரகத்திலெய் தாதவொரு பிரமமே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (ருக)

வருடமறுபதுக்கும் வாரநட்சத்திரந் திதி நாழிகை பிறப்பு.

மூன்வருட முதயநாள் பின்வருட மறுதின
முளைத்திடும் வருடங்கடா
முளைத்தநட் சத்திரம் பதினொன்றி னுதயமா
முறைவருட நட்சத்திரம்
பின்றிதி பிறந்திடும் மீராறு தன்னிலே
பிறக்கின்ற வருடமாகும்
பிறந்தமுன் னாழியீ ரெட்டின்மேற் றோன்றிடும்
பிசகாமல் வகைவிபரமாய்
வன்மையில் லாமலே வருடநட் சத்திரம்
வாரங்க டிதிகளுடனே
வளர்நாழி கைத்தொகையு மிவ்விதம தாமென
வழுத்தினர் செழித்த நூலோர்
கன்மவினை யொழியவே நன்மையரு ளையனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (ருஉ)

கலியுகமுஞ் சாலிவாகன சகாப்தத் தொகையும்.

பிரித்திடு மறுபதை யெண்பத்தி ரண்டினிற்
பெருக்கிக் கணக்காக்கவே

---

* காதகர் - கொலைபாளிகள்; கொடியர்.

பேர்பரா பவமுத னடக்கின்ற வருடம்வரை
பிசகாது தொகை யானதி
லுரைத்தபனி ரண்டுங் கழித்திடக் கலியாண்டு
ளோங்கிய சகாப்த வகைகே
ளுள்ளபடி யறுபது மிருபதோ டொன்பானை
யொட்டிப் பெருக்கி யேதான்
விரித்தபிர பவமுத னடக்கும்வரு டம்வரையில்
விடாதுதொகை கூட்டி யதனில்
விளம்புபதி னொன்றுங் கழித்திடச் சகாப்தமதின்
விபரமிது வென்பர் மேலோர்
கரத்தினின் மான்மழு தரித்திடுங் கடவுளே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (ருஅ)

மாதம் கஉ-க்கும் நட்சத்திர மறிவது.

கனமான சித்திரைத் திங்கணட் சத்திரங்
கண்டதே யொன்ற தாகுங்
கருதரிய ரிஷபத்தி லைந்தானி யொன்பதாங்
கடகமோர் பதின்மூன்ற தாந்
துனிசிங்க மஃதுபதி னேழ்கன்னி மூவேழ
தாந்துலா மூவெட்ட தாந்
தொடுகார்த்தி யிருபதேழ் மார்கழி யிரண்டதாஞ்
சொன்மகர நாலாகுமே
செனிகும்ப மாறதா மீனமஃ தொன்பதாஞ்
சித்திரைத் திங்கண் முதலாத்
திகழ்கின்ற மாதங்கள் பனிரண்டு மிவ்விதஞ்
சேர்ந்துவரு நட்சத் திரங்
கனகசபை நாதனே யெனதுகலி நீக்கியருள்
கற்பக விராச மேவுங்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (ருச)

வருடம் கூய-க்கும் பஞ்சாங்கப் பிறப்பு.

பங்குனித் திங்களி லுகாதி பிறந்தநாள்
பாருலகி லரச னென்பார்
பத்திதரு சித்திரை பிறந்தநாண் மந்திரி
பகர்சிம்ம சேனுபதி
யங்குவரு மாடிநாள் பயிர்தனக் குடையவ
னுனதனு தானியாதியா
மானிவள் ளந்தாங்கி தனபதி யகரமைப்
பசியரச * வர்க்காபதி
யிங்கானி யாதிரை யுதித்தநாண் மேகாதி
பதியென வியம்பு வார்க
ளீராறு மாதம் பிறந்தநாட் கதிகார
மீதென்பர் கணிதநூலோர்
† கங்கிலாப் புதியபஞ் சாங்கபல மிவ்வணங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (ருரு)

மாதம் கஉ-க்கும் அமாவாசைவரு நட்சத்திரம்.

சித்திரைக் கசுபதி வைகாசி ரோகணி
சிரானி திருவா திரை
சேருமா டிப்பூச மாஞ்சிங்க மகமாந்
திகழ்புரட் டாசி யுத்ரம்
மற்றுலாஞ் சோதியாங் கார்த்திகைக் கனுடமா
மார்கழியி னுக்கு மூல

---

* ஆர்க்கம் - பொன். † கங்கு - அளவு.

மகரமுத் ராடமா மாசியி லவிட்டமெய்
வளர்பூரட் டாதி மீன
மொத்தவம் மாவாசை யீராறு மாதமு
முதித்துவரு நட்சத்திர
முண்மையிது வாகுமென வன்மைபெறு பெரியோ
ருரைத்தனர்கள் கணித நூலிற்
கத்தனே யத்தனே சித்தம்வைத் தெனையாண்ட
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (ருசு)

மாதம் கஉ-க்கும் பௌர்ணைவரு நட்சத்திரம்.

சித்திரைத் திங்களிற் பௌரணை யுதிப்பதே
சித்திரை நட்சத்திரம்
சேர்ந்தவை காசியில் விசாகநட் சத்திரந்
திகழானி கேட்டை யாகு
மத்திபெறு கடகத்தி லுத்திரட் டாதியா
மாவணி யவிட்ட மாகு
மதிகன்னி மதிபூரட் டாதியைப் பசிகார்த்தி
கைமாத மஸ்வனியதா
மற்றமார் கழிமாத மான்றலை தைப்பூச
மாசிமக மீன முத்ர
மாதமீ ராறினும் தவறாது பௌரணை
வருகுநட் சத்திர மாகுங்
கத்தியலை யாதுபரி சுத்தவெனை யாண்டருள்செய்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (ருஎ)

நட்சத்திரத்தில் அமிர்தயோகம்.

மூலதிரு வோணமு மிரேவதியு மஸ்தமு
மூவுத்ர முட னருக்கன்
மோதுமான் றலைசோதி புனர்பூசந் திருவோண
மோ * டுருளி சோமவார
மோலவுத் திரட்டாதி ரோகணியு மூலமு
முத்திரமு மங்காரக
னுத்திரட் டாதிமுப் பூரமுத் ரங்கீர்த்தி
யுயர்புதன் சோதி குதிரை
சூலமக மிருபூசம் வியாழநா ளிரேவதி
தூரகமு மஸ்த மூலஞ்
சுக்கிரவா ரஞ்சதைய ரோகணி மகங்கிர்த்தி
சோதியுஞ் சனிநா ளுறுங்
காலமிது வாநாள்க ளமுதயோ கங்களாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (ருஅ)

நட்சத்திரத்தில் மரணயோகம்.

அனுடமுங் கேட்டையு மகமும் விசாகமு
மவிட்டமிவை யாதி வார
மானபூ ரட்டாதி கிர்த்திகை விசாகமோ
டமைமகஞ் சோம வார
முனுசதைய மாகிரை விசாகபூ ராடமிவை
யோங்குமங் களவாரநா
ளுற்றரே வதியஸ்த தூரகமூ லம்புநர்தி யுரோணிமான்
றலைகார்த் திகை

* உருளி - உரோகணி.

யொனுசதைய மாதிரை யுத்திரங் குருவார
முரோகணி மகங் கேட்டையா
மோணமா யிலிபூச மாணயோ கம்வெள்ளி
யுத்திரம் பூரட்டாதி
கனசனியி லாயிலிய மஸ்தம்ரே வதிசித்ரை
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௫௯)

திதியிலமுதயோகம்.

குருவுக்கு நவமியுஞ் சதுர்த்தசித் திதியுடன்
கூடிறு லமிர்த யோகங்
கொடுஞ்செவாய் நாயிறு முதற்றிதியே காதசி
குணமான சஷ்டி யுடனே
தரும்புகர் திங்களுந் துதிகை துவாதசி
தம்மினல் லமிர்த யோகந்
தனிபுதன் றிரையோதசி திருதிகையு மட்டமி
தான்கூடி லமிர்த யோகங்
கரியசனி தசமியொடு கூடியே வந்திடிற்
கனமான வமிர்த யோகங்
காசினியி லிந்நாட்க டிதியமிர்த யோகமாக்
கழறினர் கணித நூலோர்
கரிமுகனை யுங்கந்த சாமியையு மீன்றவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௬0)

திதியில் தந்தயோகம்.

இரவியிற் சிராறு திங்கள்பதி னென்றதா
மியைந்தசெவ் வாய் பஞ்சமி

யினியபுத னுக்குமே ரண்டுபொன் னற்கா
றிடும்புகர்க் கெட்டு மாமே
சரசமில் லாச்சனிக் கொன்பதிவ் விதநாட்க
டத்தயோ கமதாகுமே
சகலசுப காரியங் களுஞ்செய்ய லாகாது
தாரித்திர ஞஞ் செனிக்கிற்
புரமதின் மனைகோல லாகாது தீமைகள்
பொருந்துமென மேலோர்கண் முன்
புகன்றிட்ட சோதிடப் படியாக வடியனும்
புகன்றனன் புவிய தனிலே
கரதல கபாலனே கண்ணுதன் மூர்த்தியே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௬௧)

தரித்திரயோகம்.

அனுடமொடு நாயிறும் முத்திரா டந்திங்க
ளங்கார கன்சதைபமு
மசுவதி புதன்வார மிருகசீ ரிடங்குரு
வாயிலிய சுக்கிர வாரஞ்
சனிவார மஸ்தமுங் கூடிவரு மாயினது
தாரித்ர யோக மென்பார்
தனம்புதைத் திடவுநன் மருந்துணவு மாகாது
தானியம் விதைக்கொ ணாது
முனியோட்ட லாகாது கடன்கொளிற் றீராது
மூத்தணிகள் பூண லாகா
முதல்விருந் தாகாது சபைகூடி லவமான
முழுமிடிய ஞமுதிக்கிற்
கனியினுக் குலைகைவலம் வந்தவன் றந்தையே
கற்பக விராச மேவுங்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கஎ)

மரணயோகம்.

அனுடமுந் துதிகையும் மூவுத்தி ரங்கிர்த்தி
கைபரு மகம் பஞ்சமி
யதிசஷ்டி ரோகணி சித்திரை சுவாதியோ
டானதூ வாதசியுமே
மனுவஸ்த மூலமுஞ் சத்தமி தனிற்கூடின்
மரணயோ கங்களாகு
மதிகரும மாகாது சோபனஞ் செயில்விதவை
மாவித்தை சொலின் மூடனாந்
தனதானி யங்கண்முத லுண்ணினோய் வறுமையாந்
* தடம்போகி லுடன் மரணமாந்
தப்பாது முன்னூ லுரைத்தபடி யானுமிச்
சதகத்தி லுஞ்செப்பி னேன்
கனமான மிடியோட வடியார்க ணடமாடு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கஅ)

நட்சத்திரத்திற்கும் நாளுக்கும் பகை.

ஆதிவா ரம்பரணி சோமவா ரஞ்சித்ரை
யரியசெவ் வாயுத்திர
மவிட்டமும் புந்தியுங் குருவார முங்கேட்டை
யதிவெள்ளி பூராட முஞ்
சோதிசனி யோடிரே வதியுமாக் கூடிடிற்
சோபனஞ் செயில் விதவையாஞ்

---

* தடம் - வழி.

சொல்லுறுதி கொள்ளாது வழிபோகின் மரணமாந்
துணையாகி விடருற் றிடும்
நூதனப் பிரதிட்டை யாகாது புதுமனைக
ணோக்கியே கோல லாகா
நோயாங் குழந்தையுஞ் செனித்திடின் மாயுமென
நூலோ ருரைத்த படியே
காதலுட னிக்கவிதை தன்னிலு முரைத்தனன்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சுச)

கிழங்கிடுநாட்கண்முதலியன.

ஓணமா திரைபூச சதையமூ வுத்திர
முரோகணி யவிட்ட மிவைதா
மொன்பானு மேனோக்கு நாண்மனைக டோப்புவிதை
யூன்றிடவு மிக்க நன்றாம்
வேணமுப் பூரமும் பணிகார்த் திகைமகம்
விசாகமா யிலிய மூலம்
விளங்குமிவ் வொன்பதும் வையகந் தன்னிலே
வேர்கிழங் கிடு நாட்களா
மூணுமான் றலைகேட்டை சோதிசித் திரையனுட
மோங்கஸ்த மிரு பூசமு
முயரிரே வதியொடிவ் வொன்பது மாங்கொடிக
ளூன்றுதற் குரிய நாளாங்
காணுத்தற் கரியநின் னடியென்று காண்பனோ
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சுரு)

பல்விழநலியது வீழ்ப்பலன்.

ஆதிவா ரந்தனின் மேலான பகைவரு
மானமதி சீவ னழிவா
மங்கார கன்பகைவர் தன்னிட ராம்புத
னனைபிதா மக்கள் சேத
நீதிகுரு வாரநாட் கரிபுரவி யுறவினொடு
நீணிதியெ லாமகற்று
நிகர்வெள்ளி சனியுடற் பிணியுண்டு பீடையா
நிகழாவி னமுத மெண்ணெய்
பாதக மகற்றுகோ மயமோம நெய்வெண்ணெய்
பரிகார மாக்கொண் டிடிற்
பல்லியெலி யோந்திபாம் பரணைவிழு தோடங்கள்
பற்றற வகன்று விடுமே
காதிரா வணனையொரு விரறனி னெரித்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௬௬)

வாஸ்து எழுகின்றநாள்.

சித்திரைக் கீராற தாந்துலா மெட்டினிற்
செய்கார்த்தி கைப்பத் தினிற்
சீராடி பதினொன்று சிங்கமா றுயர்மாசி
தேதியிரு பத்தி ரண்டில்
வைத்தவை காசியிரு பானொன்று நாளினில்
வாஸ்துவெழு கின்ற தினமாம்
வையகந் தன்னிலே புதுமனை யெடுப்பவர்
மகராச ராக வாழ்வார்
பத்தடிகள் பதினொன்று பனிரண்டோ டேழடிகள்
பார்த்தகலம் வைக்க நன்றாம்

பாருலகி லிவ்வாறு செய்தனல மென்றுயான்
பழமொழிப் படிசெப்பி னேன்
கத்தனை முனம்வீர பத்திரனை யீன்றவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கூஎ)

வீடுகட்டுகையிற் சாத்திரம் பார்த்தல்.

மனைகோல வேகுழிகள் கெல்லிநீர் விட்டுமேன்
மலர்தூவ வலமாகி டில்
வாழ்வா மிடப்புறஞ் சுற்றிடிற் பகையதாம்
வண்டுபுழு காணி றீதாஞ்
சினையாகு சிலைகாணி லாக்கமாஞ் செங்கனிதி
சிரானை நண்டு பல்லி
தேரை சிலந்தியாம் பூச்சியிவை கண்டிடிற்
செம்மையா மம்மனைக டாந்
தனதாமை பாம்புதே ளுடும்பு புலி பூரமிவை
தாங்காணின் மனைகள் பாழாஞ்
சங்குகன யோகமாம் வேர்கள்கா ணப்பொரு
டப்பாது சேத மாகுங்
கனமனைகள் கோல்பவர்க் கிவைநல்ல சகுனமாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கூஅ)

கிரகச்சுற்றுமவற்றினாட்சி நிலையும்.

கதிரவன் புகர்புந்தி யந்தந்த மாதலக்
கனத்திலொரு மாதம் வாழ்வர்
கலைநா ளிரண்டேகான் மாதமொன் றரைகுசன்
காரிவரு டம் ரண்டரை

பெதிர்குருவு மோராண் டிராகுகே தொன்றரையி
தேற்றகிர கச்சுற் றதா
மிசைகிரக நிலையாட்சி கேள்கதிர வன்சிங்க
மேதிங்கள் கடக குசனுஞ்
சதிர்விருச் சிகமேட புதன்மிதுன கன்னியாஞ்
சாசகுரு தநுசு மீனஞ்
சனிமகர கும்பமும் புகர்துலா மிடபமுஞ்
சாற்றிஞ ராட்சி நிலையே
கதலிசண் பகவனங் கூவிளங் கன்னல்சூழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௩௯)

கௌளி சொல்லல், தும்மல், ஆந்தை காகம் கூவுதலிவற்றிற் காருட லட்சணம்.

குழமேட ராசிபடை யொலிகளிட பப்பலன்
கூடியோட்டு மிதுன நோயாங்
குலவுகட கம்நன்மை சிங்கமமு தந்தயிர்
கொடுத்திடுங் கன்னி வெற்றி
விழுதுலாந் தூதோலை வரும்விருச் சிகம்பொனும்
விருந்துண்டு தநுசி னுக்கே
மேன்மகர ராசிகோ ணெண்டுதீ தாங்கும்ப
மீனமுமகிழ்ச்சி நல்கு
மெழுவார மிரவுபகல் பனிரண்டு கோணமு
மியம்பிடுங் கௌளி தும்ம
லிசைகாக மாந்தைகட் காருட பலமைந்து
மிவ்வித மெனப் புகலுவார்
கழனியிற் செந்நெலொடு கன்னல்வள மோங்கிடுங்
கற்பக விராச மேவுங்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எ0)

மனுஷகணமுதலிய மூன்றுமறிவது.

அசுபதி சுவாதியும் மான்றலை யிரேவதியு
மனுடமுந் திருவோணமு
மஸ்தபுனர் பூசமும் பூசமீ தொன்பது
மடைவான தெய்வ கணமாம்
பசுபரணி ரோகணி முப்பூர மதனிலும்
பண்புடைய மூவுத் திரம்
பகருதிரு வாதிரையில் வொன்பதி லுதித்தவர்கள்
பாருலகின் மனிதர் கணமாம்
விசாகமுங் கார்த்திகை சதையசித் திரையினொடு
விட்டமுங் கேட்டை மூலம்
விளம்பாயி லியமக மிவற்றினி லுதித்தவ
ரிராட்சத கணங்க ளாவார்
கசமதை யுரித்துமன் மதனையு மெரித்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எக)

குளிகனிராகுகாலம்.

பருதியிரு பத்திரண் டரையின்மேற் குளிகன்மதி
பதினெட்டே முக்காலின் மேற்
படை* குருதி பதினைந்து புந்திபதி னொன்றேகால்
பார்த்திபற் கேழரையின் மேற்
கருதுபுகர் மூன்றேமுக் காலின்மேற் சனிதனிற்
கதிருதய லயநடுவினுங்

---

* குருதி - செவ்வாய்.

காரியின் புதல்வனுங் குளிகன்வரு வேளையிது
கண்டறிக ராகுகாலந்
திருவார மேழுமே செல்லுசனி முடிவா
வெனச்சே ரெழுத்தின் தொகை
திறமாக மூன்றேழுக் காலொடு பெருக்கிடிற்
றெரித்திடு மிராகு காலங்
கருவினி லுதித்திடா தருள்செயுங் கடவுளே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எஉ)

சென்மநட்சத்திர வாரபலனும் மாதபலனும்.

இரவிவா ரத்தில்வழி நடையிந்து போசன
மியம்புசெவ் வாய்வசியமா
மினிமைதரு புதன்வித்தை குருவினிற் பொன்னுடை
யியல்வெள்ளி செல்வ முளதாம்
நரகசனி வியாதியாஞ் சென்மநட் சத்ரமதி
னுட்களிப் பலனீந்திடும்
நவிலுமவ ரவர்செனன நட்சத்ர முதன்மாத
நண்ணுநட் சத்ர வரையிற்
சரியாக வேயெண்ணி யேழிற் பெருக்கியது
தனையெட்டி லேகழிக்கத்
தானேகல் பிணிலாபம் வழிசேற னிதிதருஞ்
சாரின்ப வவமான மாங்
கருதினோர் மாதபல னிவ்வண்ண மாகவே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எங)

ருதுநட்சத்திர வாரபலன்கள்.

உத்திராட முதலவீ ராறுநட் சத்திரமு
முத்தம மெனச் சொல்லுவா
ருயருந்திரு வாதிரை தொடர்ந்தநட் சத்திர
மோரேழு மத்திபமதா
மத்தமுஞ் சித்திரையு மதிவாழ்வு குன்றுமற்
றுறுமே விதவை யாக்கு
மருக்கனிற் சிசுவழிவு சோமவா ரத்தினல
மங்கார கன்விதவை யாம்
புத்திரர்க ளுண்டுபுதன் குருவார நன்மையாம்
புகரெனிற் செல்வ முளதாம்
பொல்லாத சனிதனிற் பிணிபீடை யுண்டெனப்
போற்றினர்க ளேற்ற நூலோர்
கத்தியலை யாதுன்னை நித்தந் துதிக்கவருள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எச)

புதுவஸ்திரமுடுக்க நாள் நட்சத்திரம்.

மூவுத்தி ரந்தானு மஸ்தமொடு நான்கின்மேன்
மொழிபூச மிவ்விரண்டு
முடன்ரோணி யநுடமுஞ் சத்தமி துதிகையுடன்
முனைதசமி பஞ்சமியுமே
துவாதசி திர்திகை திரையோதசி யட்டமி
சுகமா மருக்க னன்றுஞ்
சொன்மதி தனக்* குறுகண் செவ்வாயி னுக்கிடர்கள்
சுகவெற்றி போம் புந்தியில்

* உறுகண் - அச்சம்.

நோவுவரும் வாழ்வுபோ மரணமா குஞ்சனி
நுவல்குரு சுக்ர வாரம்
நோயில்லை திருவுண்டு வஸ்திரபூ டணமுண்டு
நுண்ணாரும் பெருமை யுண்டாங்
காவுலகில் யாவர்க்கு மிவைகல்ல நாட்களாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எரு)

பயணம் போகுநாள் போகாதநாள்.

அங்கார கன் * னிந்திரி சனிதிங்கள் தெற்குமே
லதின்மேற்கு புந்திகுருவா
மாதிவா ரம்வெள்ளி வடதிசைச் சென்றவர்க்
காகாத காரியமுமாந்
தங்கியிடு பரிதியொடு வெள்ளியிற் கீழ்த்திசைத்
தானேகி லதிக பகையாஞ்
சனிமதியு மேற்றிசைச் சென்றிடிற் காரியந்
தானகன் றோடி விடுமே
மங்களவா ரம்மதில் தெக்ஷணத் திசையேகின்
மரணமாம் போன வர்க்கு
வாரகுரு புந்தியில் வடதிக்கு நோக்கிடின்
மறுபடி திரும்பி டார்கள்
கங்குலும் பகலுமென் பங்கினி லிருந்தருள்செய்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எசு)

காகநூல்.

அங்குதய நன்மையாய் விருந்துபொ ருணஷ்டியா
மழுகையான் மடந்தை வருவ

---

* இந்திரி - கிழக்கு.

ளதிவருணந் தீமூட்டல் முகில்பொழுதி லுதிரஞ்சா
மாகுமிது காக சாஸ்திரந்
தங்கிட பிருந்துவல மாகவே சென்றிடிற்
சருவகா ரியமுமாகுந்
தரையினீர் புற்றிலு மகனெல்பான் மாத்திலுந்
தான்கூவன் மிக்க நன்றாந்
தொங்கியிடு கனிபலாக் கௌவிழுக் கிணைநக்கல்
சோறிரைகள் கௌவி வருத
றொடர்வழியின் முன்னோடல் வாய்மெல்ல னன்றதாந்
தொல்லுலகில் யாவ ருக்குங்
கங்கையாஞ் சங்குநதி பெருகுவள நாடெனுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எஎ)

சேஞ்சேல்லேழம்பிற்பலன்.

எமநிருதி வருணதிசை செஞ்செல் லெழும்பிறை
விஷ்டபாக் கியங்க ளுண்டா
மிந்திரதிசை வாயுதிசை யீசனழ லன்றிசை
யெழும்பினற் றீங்கு வருமே
யமர்சிசுத் தொட்டிலடி மரணமாந் தூணடியி
லம்மனைக் கிறை மரணமா
மானபஞ் சணையினடி கட்டிலின் கீழுறி
னந்தமனை யாளூ மரணம்
விமரிசைய தாநிலத் திற்செல் லெழும்பிடின்
வீடடங் கலு மாயுமே
விபரமுட னிந்நூலு முன்னூ லுரைப்படி
விளம்பிடும் புவியதனிலே
கமகமென வாசமிகு புஷ்பவன மேபெருகு
கற்பக விராச மேவுங்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எஅ)

தேங்காய்ச்சகுனம்.

அடியது பருத்துமுடி சிறுகிவட் டமதாகி
லாக்கமுக் கூறாய்விடி
னதிகசந் தோஷமா மைந்திரண் டாயுடையி
லளவிலாச் செல்வ முளதாம்
நெடினரம் பிருகோண மாகிலோ துன்புறு
நிதானமாம் வாழ்வு தானு
நிறையோ டகன்றுதான் முட்டைபோ லாகிடி
னீலரத் தினஞ் சேருமாம்
வடிவுசுக் கெட்டாகி லரிசிவத் தியானமாம்
வட்டமா யுடையி னன்றாம்
மஹாகண பதியின்முன் றேங்கா யுடைக்கையின்
மகிழ்சுபா சுபசகுனமாங்
கடலுலகில் யாவரு முணர்ந்திடச் செப்பினேன்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (எகூ)

இடமாகவேண்டுவன.

கலைமானும் வானரங் கருடனுங் கீரியுங்
காடான் கருங் கூகையுங்
கரடிநாய் பன்றிமூஞ் சூறுந்தை யாமையுங்
காடையொடு பூனை சிட்டும்
வலையுய வுடும்பிவைகள் வலமிருந் திடமாகின்
மாவெற்றி தரு சுகுணமாம்
வழிப்பயண மாகுகையி லோர்தும்ம லாணைதலை
வாசற் படியிடித்தல்

கலறியே யிருமனும் போகாதே யென்றிடனு
மாங்கவன் றொடை யிருத்த
லவச்சொனுப சரித்தலிவை யாவுநன் றல்லவெவ்
வனுவனு முடிந்திடாது
கலியுகந் தன்னிலிது கைகண்ட சாஸ்திரங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அ0)

எதிர்வரில் நலமுந் தீதுமாவன.

நிறைகொண்ட நீர்க்குடம் பாற்குட மெருக்கூடை
நீடுமங் கிலி யரசர்பார்
நிகழ்த்திடுங் கர்ப்பமுறு மாதர்வே சையர்சிறுர்
நீள்வளைக ளுபய மறையோர்
கறைபலாக் கனியன்ன மிவையெலா முன்வரிற்
காரியங் கைகூடிடுங்
கனகுட்டை மொட்டையுந் தவசிதட் டானுடன்
காதுமூலை நாசி யிலியு
மறையாள னொருவனவ பாண்டநா விதன்கோடி
வஸ்திரம்விரி தலையன் செக்கான்
வாணியன் விறகுசந் நியாசியக் கினியெதிர்
வந்திடிற் றீதென்பர்காண்
க்றைகண்ட னேதொண்டர் தெண்டனிடு பாதனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அக)

உயிர்விடு நாளின்றோஷம்.

உத்திரட் டாதிபூ ரட்டாதி ரேவதி
யுரோகணி யவிட்ட சதைய

மொருவருட தோடந்தா னுற்றபஞ் சமியிலே
யோராறு மாத தோடஞ்
சித்திரைநாள் புனர்பூச முத்திரங் கிர்த்திகை
செய்யமான் றலைவிசாகஞ்
சித்திதரு முத்ராட மிவ்வேழு மேமூன்று
திங்கள்வரை யுந்தோஷ மாம்
நத்துமூ லங்கேட்டை யாகுமிரு நாட்களு
நாற்பது தினந் தோஷமாம்
நலமாக மேற்கண்ட நட்சத்தி ரந்தவிர
நன்றதா மற்ற நாட்கள்
கத்தனே யுலகினுயிர் செத்தநாட் டோஷமிது
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அஉ)

ஆடுமாடு கொள்ளாதநாள்.

சித்திரை மகத்தினே டுத்திரபூ சத்திலுஞ்
சேர்ந்தமோ கணி தன்னிலுஞ்
செப்பவிட் டத்திலு முத்திரா டத்திலுந்
திகழுத்தி ரட்டாதி யோ
டொத்தவிவ் வெட்டுநட் சத்திரந் தன்னிலே
யுலகுளோ ரெவர்க ளுந்தா
முயர்புரவி மாடாடு கானடை யடிமையொ
டொட்டைமுத லிவைக ளெல்லா
மெத்தனைகொள் கினும்வருட மொன்றிலே மாயுமென்
றியம்பினர் சோதி டத்தி
லிதமாக யாவர்களு நற்றினந் தன்னிலிவை
யெய்திடின் மிக்க நன்றாங்
கத்துமுத லியகொடிய பித்தினை யகற்றியருள்
கற்பக விராச மேவுங்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அ௩)

சூரியகலை.

பார்க்கினுப தேசமும் வித்தையுஞ் சேவையும்
படையோட்டு களவு சூதும்
பசாசோட் டியபங்கொளல் வழக்குபகை தீர்த்தலும்
பரிகரித் தேரூர்தலும்
வார்த்தையொ டெழுத்தெழுதல் கீதங்கள் பாடுதன்
மருந்துண்ணல் புனலாடுதல்
மந்திரஞ் செபித்திடுதல் விடமதை யறிந்துதன்
மணிமந்தி ரங்களுடனே
தூர்த்தல்கொடு பிணிமுதற் றம்பனநல் யோகமாஞ்
சூரிய கலைக் குரிமையே
தும்பிமுக னைப்பெற்ற வம்பிகை தனக்குமுன்
சுவாமியுரை செய்த விவைபாங்
கார்க்கோட விடமுண்ட கண்டவெனை ரட்சிக்குங்
கற்பக விராச மேவுங்
கஙகைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அச)

சந்திரகலை.

கிளைக்குமனை யாடையா பரணங்கள் பூணலுங்
கேணிதோண் டிட லடிமையுங்
கீழ்சலங் தான்காணன் மன்னரெதிர் சாந்தியுங்
கீர்த்திப்பிர திஷ்டை சுரமு
முளைக்குநல் விதைநாட்ட லுண்மைவச னஞ்சொலன்
முபல்தரித் திரர்க்குதவுதன்
மொழிகல்வி கற்குதல் தனம்புதைத் திடுதலிவை
முற்றுமதி கலையிலாமே

விழிக்கனலி னுலநங் கன்றனை யெரித்துளோன்
விளம்புசாத் திரநூலி தாம்
விபரமா யுலகுளோ ரியாவரு மறிந்திட
விரித்துரைத் தனனெளிய னுங்
களிக்கவறு பத்துமூ வர்க்குமெய்ப் பதமுதவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அரு)

உபயகலைகள்.

ஆதியா யிருக்கின்ற வுபயகலை சமனதா
யடைவுட னடப்ப தாகி
லப்பொழுது தொட்டிடு நினைத்திடுங் காரிய
மாகா ததினிச்சயம்
நீதியாய் மனதினி னினைத்தன்முடி யாதுதான்
நினையாது வந்தெய் திடும்
நிலையாத தவமது நிலைத்திடு மிக்கலையி
னேர்மையிஃ தாகு மெனவே
வாதவூ ரர்க்காக நரிபரிய தாக்குமெம்
மாதேவர் மன மகிழ்ந்து
மண்ணுலகி லியாவருந் திண்ணமிது வென்றுணர
வகைவகைய தாவுரைத்த
காதிபெறு சரநூலின் மார்க்கமிது வாகுமே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அசு)

பதுமினிப்பெண்குணம்.

செண்பக நிறத்தினுள் கூவிளங் கொங்கையாள்
செய்யமலர் வாச முடையாள்

செயமதுர வாக்கினுள் பொய்யுரை சொலாதவள்
செந்திரு தனக்கு நிகரா
ணண்பாக வேயமரர் பெரியோர் தமைப்பணிவ
ணடையன்ன மின்சொ லுடையா
ணவிலிடை சிறுத்திடும் வெண்டுகி லுடுப்பணல்
லல்குறு மரை நேரினுள்
வண்மைபெறு சுரதநீர் கோகனக வாசமா
மானனைய காட்சி யுடையாண்
மாதுரிய கனியுண்ப ளெட்பூவி னுசியாண்
மாலிரவி சாயா முனங்
கணமெனுங் கண்படாள் பதுமினிப் பண்பிதாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அஎ)

சித்தினிப்பெண்தணம்.

சித்தினிப் பெண்ணடை பிடியானை போல்பவள்
சிவந்துடன் மிகுந்த வழகுந்
திருவலம் புரிகழுத் தினள்வஞ்சி போல்வள்
செய்யவிரு தனம் பசுமையாள்
சுத்தவன் னத்துகிலி லிச்சையது கொள்ளுவாள்
சுரதநீர் மதுவாசமாந்
துடியான வார்த்தையுடை பரவுதன முடையளிதழ்
துகிர்கொவைக் கனிபோன்றவண்
மெத்தமய லாகவே யிருபோது மோர்சாம
மேவியணை வாள்புருடனை
மிகவற்ப மாகவே யுண்பள்சங் கீதத்தின்
மீதுநற் பிரிய முடையள்
கத்தனே சித்தினிப் பெண்களித் தன்மையர்கள்
கற்பக விராச மேவுங்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அஅ)

சங்கினிப்பெண்குணம்.

சங்கினிப் பெண்ணினுடல் சிறுகாது பெருகாது
சமனுருவ தாயிருக்குஞ்
சாற்றிடுங் கழுதையைப் போற்கூவு வண்மூன்று
சாமம் விடாது புணர்வாள்
அங்குமேகோள் பொய்யுரை பொருந்தியிடு நாவின
ளடியுதடு நீள முடையா
ளல்குல் கறுப்பதா நடுவிரல்க ணீண்டவ
ளகோரமோ பாக்கினி யுளாள்
தங்கிய சிவந்தமல ராடைமே லன்பினள்
* கலிப்பொடு களிப்பு முடையாள்
தனகும்ப மனையவள் வஞ்சக மனத்தினள்
சீரவெம் மையினை யுடையள்
† கங்குலகில் சங்கினிப் பெண்குணமி தென்பர்காண்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (அகூ)

அத்தினிப்பெண்குணம்.

அத்தினிப் பெண்ணினுட லுயரமா மெந்நாளு
மடியுதறி யேநடப்ப
ளவன்மிக்க தூலமா மரணையுடல் போற்குறி
யகன்றுமணி யார்ந்தி ருக்குங்
கற்றுழை நாறுடலி னுடிவரி னிச்சையாள்
கனமுலை சுரைக்கா யனள்

---

* கலிப்பு - ஆரவாரம். † கங்கு - எல்லை.

கருதூண் பொசிப்பள்குறு கியகழுத் தினளொழுகு
காமநீர் நாற்ற முடையள்
சத்தமிடி யோசைபோற் பேசுவாள் பாதவிர
ருனீண் டிருப்ப தன்றிச்
சாற்றிடு மிராப்பகன் முழுவதும் புருடனைத்
தழுவிவெகு கோஷ்டி செய்வள்
கத்தனே யத்தினிப் பெண்குணமி வண்ணமாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கூ0)

ஸ்ரீகளுக்கு இந்தியநிலை.

பெருவிரல் பெருங்கால்கள் காடணி முழந்தாள்
பெருங்குய்ய முந்தி மார்பும்
பெறுங்கொங்கை கைமூல கண்டங் கபோலம்வாய்
பேதைகண் ணெற்றி யுச்சி
மருவுமீ வைந்துதா னத்தினி விடப்புறம்
வளர்பிறை தன்னி லாகும்
வலப்புறம் தேய்பிறை தன்னிலே தாள்வதாம்
வலதுபா தம்வரையிலு
மருளுமுப் பதுதான மும்போக நிலைநிற்கு
மமுதினுக் கேழாமிட
மதிவிட மிருக்குமா மன்றுபோ கத்தொழி
லணுவளவு மாகா தெனக்
கருதினர் மதனநூ லதனிலே கொக்கோகர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கூக)

போகிக்குநாள்.

அரிவையர்கள் பூப்புநா ளன்றுமுத லீரெட்ட
தானநாள் வரை தன்னிலு
மடைவாக வேகருத் தரிக்குநா ளதினொன்கி
லாஞ்சிசுக் கல்வி வானும்
பெருகுநா ளோந்தினிற் சோரனு மாறினிற்
பெருந்தவசி யேழாந் தினம்
பிரபல தயாபர னெட்டதனின் மிடியனும்
பீடுதன வானொன் பதி
லரியபத் தாந்தினங் காமியாம் பதினொன்றி
லதிதுட்ட னீரா றினி
லருமைமிகு பண்டிதன் பதின்மூன்றி னேயினே
னமருபதி னன்கி லீனன்
கருதேந்தல் பதினைந்தி லீரெட்டில் யோகியாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கூஉ)

க்ஷவரத்திற்குரியநாள்.

சேருமுத் திரநான்கும் பூசபுனர் பூசமுந்
திகழுமுத் ராட நான்குஞ்
செய்யமான் றலையுத்தி ரட்டாதி மூன்றுமாந்
திதிதசமி நன்ற தாகும்
மாரிவரு துதிகைதிரு திகையினொடு பஞ்சமி
வளர்கின்ற சத்தமியுமே
வருக்குந்திர யோதசி துவாதசி மதிபுதன்
மயிர்கழித் திடுத னன்றும்
பாருலகில் வைகாசி யானியா வணிகார்த்தி
கைதைபுங் குனிதன் னிலே

பண்புதரு க்ஷவரமது செய்துகொள வேயஷ்ட
பாக்யங்கண் மேன்மே லுறுங்
காருலவு சோலையொடு சிகரநெடு மலைகள்சூழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கூ௩)

க்ஷவரத்திற்காகாதநாள்.

ஆடிமார் கழிமாசி கன்னிமா தந்தனி
லாஞ்செல்வ மதுநீங்கிடு
மருக்கனுயி ரழிவாகு மனைவிபொருள் சேதமா
மானகுரு மானசேதம்
நாடிவரு சுக்ரவா ரத்துடற் பலவீன
நவில்சனிக் கெவையு நாச
நவமிதன நஷ்டமாஞ் சதுர்த்திதாய்க் காகாது
நற்சஷ்டி பிதுர் சாபமாஞ்
சாடிவரு சதுர்த்தசியிற் சோதரர்க் காகாது
தன்மனைவி போமஷ்டமி
சாற்றுசெவ் வாய்நாயி றெண்மதித் தோடமாஞ்
சனிகுருவி னுக்கிடரதாங்
காடுமலை யாவுமகில் சூழுமிட மெனவீறு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கூ௪)

கேற்போட்ட நாட்கள்.

மார்கழித் திங்களி லொன்பதாந் தேதிமேன்
மாமழைக் கெற்போட்ட மாம்
வளர்சித்ரை வைகாசி நாலரை நாட்களா
மன்னுதரு பதின்மூன்றரை

யாரிரண் டொன்றரைத் தேதிநா ளுக்குமே
லானிக்கு நாளொன்றரை
யாடிக் கிரண்டேகா லாவணி புரட்டாசி
யைப்பசி கார்த்தி கைக்கும்
பார்நா ளிரண்டேகான் மார்கழித் திங்களிற்
பற்றுநா ளதுவு முக்கால்
பட்சமுட னிவ்விதங் கெற்போட்ட மோடிடிற்
பஞ்சமது நீங்கி யுலகிற்
கார்மழை சொரிந்துநற் சீர்வள மிலங்கிடுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (சுரு)

அசுவலட்சணம்.

விதிகொள்பரி சிரமதின் மத்தகச் சுழிரண்டு
மேன்மவுன சுழிமூன்றதாம்
விளம்புஞ் செழுங்குளம் பிற்சுழிக ணன்கதாம்
வீறிய கழுத்தோர் சுழி
சதிகொணரி காகம் பருந்தலகை * சவையோரி
சாற்றிடுங் கேழ லிவைக
டருகுரல்க ளின்றிநல் வேழமங் கலஞ்சங்கு
தனிவாத்ய மென முழங்க
மதிக்கின்ற நாதமணி யோர்பதந் தூக்கியொலி
மாதங்க மென வாயினும்
வளர்செல்வ மிகுமமர்க் களஞ்சென்று பொருதினும்
வந்திடும் வெற்றி யுடனேங்
கதிகொண்ட தூரககுண மீதென விளம்பிடுங்
கற்பக விராச மேவுங்

* சவை - கூட்டம்.

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கூசு)

அசுவத்திற்கு ஆகாத சுழிகள்.

சந்திரசுழி யகிலாண்ட வர்த்தமுந் தண்டையடி
தானுடற் பக்கச் சுழி
சாற்றுகவ் வகச்சுழிக் காவத்த சுழியுடன்
சதிரிலா வளைய சுழியும்
விந்தைய திலாததாங் கொடியசுழி கேதாரி
வீறுமடி சேர்ந்த சுழியும்
விகடகே சாப்பத்தங் கச்சுநிலை பட்டடை
வெள்ளிவிழி கொள்ளிப் பதஞ்
சிந்தனை பெருகிடுந் திரிகண்டி ணிக்குண்டி
செயமிலா விலங்கின்சுழி
சேரவே சுடலைமுக நஞ்சபா தத்துடன்
செப்புமிச் சுழிகளெல்லாங்
கந்துக மதற்குமிக வாகாத சுழியென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே (கூள)

சாமுத்திரிக லட்சணம்.

தாமரை யெனக்கண்ண னுகிறன முடையனுந்
தருமதுக் கண்ண னெனிலோ
சகலசன திருவுண்டு கீழனிக்க னுடையவன்
முராணியில் ராம னவன்
பூமருவு விழியினன் பொருந்துரைப் புலவனும்
பொருகங்கை யாணை சங்கு
பொற்கொடிகள் குண்டலஞ் சமுத்திரஞ் சாமரம்
பூங்கா மிருக்கி லாசு

ஞமரைக ணுமே மகரமிரு பிடரிதனி
லாறு யமைந்த தாஞ
லருநிதித் தலைவனு முதுகினி லிருந்திடி
லதிசெல்வம் வயது நூறுங்
காமுறுசா முத்திரிக லட்சணமி தென்பர்காண்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௬அ)

இதுவுமது.

தோளுகை நடுவிரலி னளவுநூ லிரட்டித்துச்
சொல்பாத பெருவிரன் முதற்
றொடர்நெற்றி நாசிவாய் நின்றிடிற் கயிறுதான்
தொலையாத செல்வ முளதா
மாளுக்கு நெற்றிவரை யைந்தாகி னூறுநான்
காகிலெண் பானுகுமே
யமருமூன் றறுபதா மிரண்டற்கு நாற்பதா
மதனிலொன் றற்கிருபதாந்
தாளோடு கரிகுரற் பரிமுழக் கங்கள்போற்
றவன்சிறு முழக்கமாயின்
றரணியிற் செல்வனும் பதுமினிப் பிரியனுஞ்
சாஸ்திர முரைத்த வாறே
காளகண் டத்தனே யாலடிவி லாசனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (௬௯)

இந்நூல்பாடியகாலம்.

ஆதிகலி நாலாயி ரத்துத் தொளாயிரத்
தாகுமுப் பானி ரண்டி

லாயிரத் தெழுநூற் றைம்பத்து மூன்றுவரு
டஞ்சகாப்தம் விகுர்தியா
நீதிசே ராண்டுமே டத்திங்கள் குருவார
நேர்ந்தபனி ரண்டாந்தின
நிறைகன்னி திதியைந்தி ேைடமிர்த யோகமிவை
நீடிரே வதி நாளினிற்
சாதியில் வீரசை வன்விசுவ லிங்கன்பர்
தருசிதம் பரவாணன் யான்
சதகமெனு மிப்பநுவ னின்னடிக் கன்புகொடு
சாற்றின னுவந் தாளுவாய்
காதலுட னடியர்தொழு கறைமிடற் றண்ணலே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (கOO)

வாழி.

சீர்வாழி நான்மறையி னோர்வாழி விண்ணினுறை
தேவர்முனி வோர்கள் வாழி
செந்தா மரைத்தவிசு வந்துளாள் வாழியித்
தேசமன் னவர்கள் வாழி
பார்வாழி கலைமங்கை வாழிசெந் தமிழ்வல்ல
பாவாணர் வாழி நிதமும்
பாவுசெங் கதிர்வாழி மதிவாழி துதிவாழி
பத்திபுரி தொண்டர் வாழி
கார்வாழி யைங்கரன் றுள்வாழி முருகவேள்
கழல்வாழி நாரண னெனுங்

கருமுகி னிறக்கடவுள் வாழியெவ ரும்பரவு
கயிலையங் கிரிநாதரென்
போர்வாழி தர்மவர்த் தனியம்மை வாழியா
னுரைத்தவிச் சதகம் வாழி
யுவப்புடன் கற்றுளோர் கேட்டுளோர் வாழியவ
ருறவினரும் வாழி தானே.

கயிலாசநாதர் சதகம் முற்றுப்பெற்றது.

சிவமயம்.

கயிலாசநாதர் சதகத்தின்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அங்காரகன்	48
அங்குதய	48
அசுபதிசு	45
அஞ்சுதே	30
அடியது	50
அணிகொளு	5
அத்தினிப்	56
அரியான்	13
அரிவையர்கள்	58
அற்ரூர்	21
அனுடமுங்	37
அனுடமூங்	40
அனுடமொடு	39
ஆ	
ஆகம	2
ஆடிமார்	59
ஆட்சிதரு	4
ஆதிகலி	62
ஆதிப்பரிச்	28
ஆதியா	54
ஆதியிற்சித்	32
ஆதிவாரந்தனிற்	25
ஆதிவாரந்தனின்	42
ஆதிவாரம்	40
இ	
இரவலர்க்	22
இரவியிற்	38
இரவிவாரத்	46
ஈ	
ஈயாத	18
உ	
உத்திரட்	51
உத்திராட	47
உள்ளூரில்	26
ஊ	
ஊமைசெவி	7
எ	
எமனிருதி	49
ஓ	
ஓணமாதிரை	41
க	
கடவிடத்	12
கடலுலகி	11
கதிரவன்	43
கலைமானும்	50
கற்பிலா	20
கனமான	34
கனயோக	12
கி	
கிளைக்குமனை	53
கு	
குற்றங்கண்	10
குருவுக்கு	38
குழுமேட	44
கோ	
கொற்றவரி	17
ச	
சகமதனின்	13
சங்கினிப்	56
சந்திரசுழி	61
சி	
சித்திரைக்கசு	35
சித்திரைக்கிரா	42
சித்திரைத்	36
சித்திரைமகத்	52
சித்தினிப்	55
சீ	
சீரார்	1

செய்யுள்.	பக்கம்.
சீர்மேவு	1
சீர்வாழி	63
சிலமுயர்	15
சு	
சுக்கிலசு	29
செ	
செண்பக	54
சே	
சேருமுத்	58
த	
தங்கணையகரி	31
தனையே	22
தா	
தாமரையெனக்	61
தாலமா	18
தாளவாத்	27
து	
துதிவாணி	30
தெ	
தெள்ளுதமிழ்	5
தே	
தேவாலயங்	8
தோ	
தோளுநகை	62
நா	
நாடிகணி	15
நால்வகைச்	2
நி	
நிறைகொண்ட	51
நீ	
நீதிநெறி	3
ப	
பக்கமொரு	23
பங்குனித்	35
படியதனிலே	10
பருதியிரு	45
பா	
பார்க்கிலுப	53
பி	
பிரமனது	19
பிரித்திடு	33
பு	
புருடனைக்	32
புல்லர்கடமக்கு	6
பூ	
பூதங்க	28
பெ	
பெருவிரல்	57
பொ	
பொருளுள்ள	9
ம	
மண்டலம்	27
மதிக்கின்ற	25
மயிரிணை	16
மனிதனென	24
மனைகோல	43
மா	
மார்கழித்	59
மு	
முன்வருட	33
முன்னோர்கள்	14
மூ	
மூலதிரு	37
மூவுத்திரங்	47
வ	
வந்தமுதலைச்	3
வருகின்ற	17
வா	
வாத்தியார்	20
வி	
விதிகொள்பரி	60
விரும்பனத்	6
வெ	
வெகுசன	8
வே	
வேதமங்	23

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

உ

சிவமயம்.

ஜெயங்கொண்டார் சதகம்.

இது
மதுரைச்சீமை சிவகங்கை சமஸ்தானம்
கீழைச்சேவற்பட்டு
இளையாற்றங்குடி. எழுநகரமென்று சொல்லப்பட்ட
நேமரகாத்திலுதித்த
அழகப்பசெட்டியார் குமாரர்
முத்தப்பசெட்டியார் அவர்கள்
இயற்றியது.

மேற்படியார் பௌத்திரர்
நாராயணஞ் செட்டியார்
கேட்டுக்கொண்டபடி பதிப்பித்த பிரதிக்கிணங்க

சென்னை:
மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
1913.
விலை அணா 2.

சிவமயம்.

ஜெயங்கொண்டார் சதகம்.

காப்பு.

விநாயகர்துதி.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்பொருந்துந் தென்னைமச் செயங்கொண்ட சோழீசர்
திருப்பேர் வாழ்த்திப்
பார்பொருந்துங் குறுவிருத்தப் பாமாலை தனிலுலகப்
பழமைச் சொல்லை
யேர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப் புவியிலுள்ளோ
ரிசைந்து கேட்கக்
கார்பொருந்துங் துதிக்காத்தான் வெயிலுகந்த கணபதிதாள்
காப்புத் தானே. (க)

முருகர்துதி.

நகாமெல்லாம் பணிந்தேத்துஞ் செயங்கொண்ட சோழீச
நாய ஞர்மேன்
மகரநெடுங் கடலுலக வதந்தியைச்செந் தமிழால்யான்
வழுத்து தற்கே
யகாமுத லவ்வெழுத்தென் றுதியின்முப் பாற்சொன்ன
வவன்றாள் போற்றிச்

சிகர்வரை மீதெழுந்த சிறந்தவடி வேலவன்றாள்
சென்னி சேர்ப்பாம். (உ)

கலைவாணிதுதி.

சிலைவேளை வென்றபிரான் றென்னேம நகரில்வளர்
செயங்கொண் டார்மே [லே
லுலகினுள்ளோர் வழக்கமதாய்ச் சொன்னசொல்லைத் தமிழா
யுரைப்ப தற்குக்
கலைவாணி யாகியுல குள்ளமட்டும் படிக்கவந்த
கவிதை தன்னின்
மலர்வேதன் மனைவியென்றன் மனத்திலிருந் திவ்வுரையை
வழுத்து வாளே. (௩)

அவையடக்கம்.

பத்தருளத் தினிற்சூரி தண்டலையென் றெமக்குரைத்த
பாமர் மீதில்
வித்தகர்முன் னுலகவழக் கத்தையெடுத் தொருநூறு
விருத்தஞ் செய்தா
ரத்தைநிக ரெனச்செயங்கொண் டார்மீதின் முத்தையன்சிற்
றறிவி னாலே
மத்தகயந் தனக்குமுன்னே சிற்றெறும்பு நடந்ததென
வசனித் தேனே. (௪)

பாயிரம் முற்றிற்று.

நூல்.

வான்மீகர் கதை.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நல்வேட வான்மீகர் சப்தரிஷி களைச்சேர்ந்த
ராம மந்த்ரஞ்
சொல்லநா வில்லாது கற்றறியா மையின்மரா
வெனமுன் சொன்னார் [டார்
வில்விசையன் றெவ்வைவெல்லக் கணைகொடுத்த செயங்கொண்
விளங்கு நாட்டிற்
கல்விதனக் கழகுகச டறமொழித லெனமுன்னோர்
கழறு வாரே. (௧)

மார்க்கண்டர் கதை.

அருமறைமார்க் கண்டர்நித்தந் திருக்கடவூர் வேணியனை
யன்பாய்ப் பற்றி
வரு * சமன்றன் பகையடக்கித் தீர்க்காயு ளாய்ப்புவியில்
வளரா நின்றார்
தருவைநிகர் தென்னேனம நகரில்வளர் செயங்கொண்டார்
தமிழ்சேர் நாட்டிற்
பெருமரத்தைச் சுற்றிநின்ற வல்லியுஞ்சா காதெனவே
பேசு வாரே. (௨)

பாண்டவர்கள் கதை.

அருமைசெறி பாண்டவர்கள் பங்காளி செய்கொடுமை
யாற்கா டாண்டு
முரிமையுடன் றருமர்செய்த நன்றியினாற் றிரும்பவும்வந்
துலகை யாண்டார்

---

* சமன் - எமன்

பருவரைவில் லாவளைத்த செயங்கொண்டா ரேமெவரும்
பண்பாய்ச் செய்த
தருமமே தலைகாக்கு மதர்மமழித் திடுமெனவுஞ்
சாற்று வாரே. (௩)

இளையான்குடிமாறர் கதை.

உழுதிளையான் குடிமாறர் முளைவாரி யன்னமன்பர்க்
குதவிப் பாரில்
வழுவாத கீர்த்தியுட னொருநாளுங் கேடில்லா
வாழ்வு பெற்றார்
மழுவேந்துங் கரதலத்தார் செயங்கொண்டார் வளநாட்டின்
மறைக ளோதித்
தொழுவாரெல் லாமுழுவார் தலைக்கடையி லென்றுலகஞ்
சொல்லு மாதோ. (௪)

கிரவுஞ்சம்பிளவுபட்ட கதை.

தஞ்சமெனச் சரண்புகுந்த வமரர்களைப் புரப்பதற்காச்
சரவ ணத்தின்
மஞ்சனெனத் தோன்றியவேள் வடிவேலாற் கரவுஞ்ச
மாய்ந்த தன்றோ
செஞ்சரணத் தால்யமனை வென்றசெயங் கொண்டாரே
தேவ ரேனும்
வஞ்சநெஞ்சைப் பிளக்குமிது பொய்யல்ல வுலகினிச
வசனந் தானே. (௫)

இராமர் கதை.

அரியோனைக் கௌசிகன்பால் விடமலைத்தான் றசரதன்விட்
டதற் கிலாபங்
கரியோன்று னதிகசௌந் தரியனுக்குந் தனுவினுக்குங்
கழலத் தார்க்கு

முரியோனு கிபமறைதேர் முனியன்றோ செயங்கொண்டா
ருலகந் தன்னிற் [ன்றும்
பெரியோரைத் துணைக்கொளென்ற வௌவைவாக்கியத்திலோ
பிசகி ராதே. (சு)

இராமர் வனவாசஞ்சென்ற கதை.

* **பா**னுகுல ராமனுக்குப் பட்டாபி ஷேகமெனப்
பகர்ந்த போது
கூனியொரு சூத்திரத்தைக் கொடுக்கவவ னுரைவிட்ட
கொள்கை போல
மானணியுங் கரத்தாரே செயங்கொண்டா ரேபுவியின்
மகிமை சேர்ந்த
யானைநிழல் பார்க்கையிலே தவளைவந்து கலக்கிவிடு
மதுமெய் தானே. (எ)

இராவணன் கதை.

† **தொ**டைக்கிலங்கு மார்பனிலக் குமணன்வில் வலுவென்றான்
சொன்ன பேச்சை
யடக்கிரா வணனுளை யோரம்பா னுன்வெல்வே
னறியென் றுற்போற்
சடைக்கிதழி மாலையணி செயங்கொண்டா ரேயெதிரி
தளத்துக் கஞ்சிப்
படைக்குப்போ காதவர்கள் நல்லசே வகரெனவும்
பகரு வாரே. (அ)

வாலி சுக்கிரீபர் கதை.

பேரினுயர் வாலிசுக்கி ரீபரிரு வரும்பகையாய்ப்
பிரிய ராமர்

---

* பானு - சூரியன். † தொடை - மாலை.

காரியத்துக் காகவந்து கடலடைத்துச் சிறைமீட்ட
கணக்குப் போலே
மேருவைவில் லாய்வளைத்த செயங்கொண்டா ரேயுலகில்
விளங்குஞ் சொல்லு
மூவிரண்டு பட்டதென்றுற் கூத்தாடிக் கேலாப
முண்டென் பாரே. (௯)

மூதேவி சீதேவி பிறந்த கதை.

* செல்லோடே யிணங்குகடற் றிருவுடன்மூத் தாள்பிறந்த
செய்தி பாரி
னல்லோடைச் சலத்தில்சில பாசிபடர்ந் திடலுந்த
னஞ்ச யன்கை
வில்லோடே மோதியதோட் செயங்கொண்டா ரேவயலில்
விளைவுண் டான
நெல்லோடே பதருமசந் தனிலதரும் பிறந்திருக்கு
நேர்மை தானே. (௧0)

சரஸ்வதி கம்பரை நீங்கிய கதை.

நங்கைகலை வாணிகம்ப ரிடத்திருக்கத் தண்டிகையி
னலமாய் வாழ்ந்தா
ரங்கவடான் புறம்போகக் கம்பான்றே கூவிக்கோ
ராளா ஞரே
செங்கையுகி ரால்வேதன் சிரத்திலொன்றைத் துணித்துவிட்ட
செயங்கொண் டாரே
சுங்கமா றியபோது சுண்ணம்புங் கொடுக்கார்தொல்
புவியு ளோரே. (௧௧)

வாமனன் அரிச்சந்திரன் கதை.

† தாப்பாய்வா மனன்கையின் மாவலிதண் ணீரைவிட்டுத்
தாணி தோற்றான்

* செல் மேகம். † தாப்பு - சமயம்; குறித்த நேரம்.

வாய்ப்பாய கோசிகன்றன் வஞ்சனையா லரிச்சந்த்ரான்
மனைவி விற்றான்
றீப்போலே விழிகாட்டி மதனுடலை யெரித்துவிட்டு
செயங்கொண் டாரே
பார்ப்பார்க்கு வாய்ப்போக்கொண் ணாதாண்டிக் கதுதானும்
பகரொ ணாதே. (கஉ)

திருஞானசம்பந்த சுவாமிகள் கதை.

பண்ணாருங் கவுணியர்வி பூதியினால் வழுதிசுரம்
பாதி தீர்த்தா
ரெண்ணாயி ரஞ்சமணர் திருநீற்றை மறந்துகழு
வேறி மாய்ந்தார்
பெண்ணைச் சடையில்வைத்த செயங்கொண்டா ரேயுலகிற்
பெருமை சேர்ந்த
வெண்ணீறே வினையகற்றுந் தரிப்பவர்க்குச் சிவகதியு
மேவுந் தானே. (கங)

துரியோதனன் கதை.

புள்ளாலே பொறியரவத் துசன்மடிந்தாற் றருமருக்குப்
பொரும்போ ருண்டோ
துள்ளாடத் திருப்பிவிட்டுப் பின்பவனைச் செயிக்கமிகத்
தொல்லை யாச்சே
வெள்ளானைக் கிறைபணியுஞ் செயங்கொண்டா ரேபகையை
மெலிவி யாமன்
முள்ளாலே யெடுப்பதைக்கோ டாலியா லெடுக்கவந்த
முறைமை யாமே. (கச)

அகலிகை கதை.

பண்டகலி கையையிந்தி ரன்களவாய்த் தழுவிவெளிப்
படுஞ்சா லத்தைக்

கண்டுமுனி சகியாம லிருவரையுஞ் சபித்ததனாற்
கனவீ னந்தா
னிண்டைபுனை சடையாரே செயங்கொண்டா ரேபுவியி
லில்லாள் பேச்சைக்
கொண்டவன்றாற் றும்போதே கூரையொக்கத் தூற்றுமெனக்
கூறு வாரே. (கரு)

தாரை கதை.

கடலீன்ற சந்திரனைக் குருமனைவி கலந்தணையக்
கருதி வாவென்
றிடவுமதி தொடலாமோ பின்வருவ தறியாம
லிணங்கி னானே
சடையிலங்கக் கங்கையணி செயங்கொண்டா ரேமாரன்
சரந்தாங் காம
னுடைகுலைந்த பின்புசொந்த முறைமைகள்கொண் டாடுவரோ
வுலகு ளோரே. (கசு)

காந்தக்கற்கோட்டை யழிந்த கதை.

சுற்றுமதிற் கலிங்கசிந்து சூழுசிக் காந்தமெனுந்
துருவந் தன்னை
யெத்தும்விலை மாதர்களாற் பண்டுகரு ணாகரன்வென்
றிட்டா னன்றோ
சைத்திகிரி யோன்பணியுஞ் செயங்கொண்டா ரேமிகுந்த
கருத்துண் டான
புத்திமான் பலவானா மென்றுலகோர் சொல்லுவதும்
பொருந்துந் தானே. (கள)

தருமர் கதை.

ஆளைப்போல் வருமிருகந் தனக்கும்வீ மனுக்கும்வழக்
கான நியாய

வேளைக்கா தாவுதர்மர் வீமனுடல் பாதிமிரு
கத்துக் கென்றார்
வேழப்போர் வையைத்தரித்த செயங்கொண்டா ரேசினி
வெல்லம் போட்டு
நாழிப்பால் வார்த்தானு நடுச்சொல்வா ரறிவுமிகு
நடுவுள் ளோரே. (கஅ)

வாலி மறுசனன மெடுத்த கதை.

விழியெதிர்நில் லாதொளித்து வாலியைமா லெய்துகொன்று
விடவே வாலி
வழியுடனே மறுசனன மெடுத்தரியை யெய்துபழி
வாங்கி ஞனே
அழலுமழு வணிகரத்தார் செயங்கொண்டார் நன்னாட்டி
லமரர்க் கேனும்
பழிகிழம தாகிவிட்டுப் போவதில்லை யென்றுலகோர்
பகரு வாரே. (கக)

அம்பிகாபதி கதை.

அரசன்மக ளாரையம்பி காபதிசேர்ந் ததனைமன்ன
னறிந்து நாட்டுசென்
றுருசிபிறந் தொருநாளத் தாட்சியுட னவனுயிரை
யொழித்தா னன்றோ
பாசணியுங் காத்தாரே செயங்கொண்டா ரேமிகுந்த
பழக்க மேனுஞ்
சாசமிஞ்சி ரவிக்கையிற்கை போடவொண்ணா தென்றுலகோர்
சாற்று வாரே. (உ0)

விபீஷணன் கதை.

கும்பகர்ன னுக்கிளையோன் றமையனுயிர் நிலைகாட்டிக்
கொல்லென் றேநி

கும்பலக்குந் துறவுசொல்லி யிலங்கைமன்னன் வலுவைமுற்
குறைத்தா னன்றோ [றுங்
செம்பிரன்னுட் டவர்புகழுந் தென்னேம நாட்டில்வளர்
செயங்கொண் டாரே
தம்பிபிறக் கத்தரையா மென்றிடுஞ்சொல் லரக்கனுக்கே
தகுங்கண் டீரே. (உக)

கண்ணன் மலையைக் குடையாக எடுத்த கதை.

கல்லான மாரியையிந் திரனனுப்ப வாய்ப்பாடிக்
கண்ணர்க் கம்பு
வில்லேது மின்றியொரு கற்குடையால் வந்தமழை
விலக்கி னரே
செல்லாருங் குழலிசௌந் தரியையிடப் பாகம்வைத்த
செயங்கொண் டாரே
வல்லார்க்குப் புல்லுமோ ராயுதமா மென்றுலகோர்
வழங்கு வாரே. (உஉ)

சூர்ப்பநகை மூக்குமுலை யறுபட்ட கதை.

* உறுக்குதலு நயத்தலுமார் சூர்ப்பநகை யிலக்குமண
னுயர்தோள் சேரச்
சுறுக்கிற்சென் றெடுக்கவவ னிணங்காமன் மூக்குமுலை
துணித்தா னன்றோ
† மறிக்கிசைந்த கரத்தாரே செயங்கொண்டா ரேமிதுந்த
மயலுண் டாகிச்
சிறுக்கிமன தறியாமற் செடிதனைக்கை யாற்றாக்கித்
திரிந்த வாறே. (உங)

சீதை கதை.

தேன்மொழிச்சீ தையையரக்கன் சிறையெடுத்து வனத்தில்
செயலா லுந்தா [வைத்த

---

* உறுக்குதல்-கோபித்தல். † மறி-மான்.

ஞனமட்டும் பார்க்கவவள் கற்பழியா தக்கினியி
லமிழ்ந்து மீண்டாள்
மான்விழியாள் சௌந்தரிபா காசெயங்கொண் டாரேநின்
வளஞ்சேர் நாட்டிற்
முன்பதிவி ரதையானுற் றேவடியாள் வீட்டினித்தந்
தரிக்க லாமே. (உச)

அருச்சுனன் கதை.

பண்டுகிணற் றினிலெறிந்த பௌத்திரத்தைத் துரோணர்சிலை
பாணம் போட்டுக்
கொண்டுவரக் கண்டதனஞ் சயனுமந்த விற்றொழில்கைக்
கொண்டா னன்றோ
வண்டுவிழி யுமைபாகா செயங்கொண்டா ரேயுமது
வளஞ்சேர் நாட்டில்
கண்டதைக்கற் கின்றவனே பண்டிதனு வானென்றே
கருது வாரே. (உரு)

நளனைப் பாம்பு கடித்த கதை.

நண்ணு * கழை வனமெரிய மேற்கிடந்த பாம்புசெத்தி
டாமற் றூங்கி
மண்ணில்விட நளன்காத்தி லரவுகடித் தவனுடலை
வடுச்செய் தாற்போல் [பின்
வெண்ணிலவைச் சடையில்வைத்த செயங்கொண்டா ரேகுடி
மெலிவு தீரப்
புண்ணியத்துக் குழுமெருதைப் பல்பிடித்துப் பார்ப்பரெனப்
புகலு வாரே. (உசு)

ஓரரசன் பெண்சாதியின் கதை.

நயவேந்தன் பாரியொரு துன்மார்க்க னைகொண்டு
நடந்தே யாற்றி

* கழை - மூங்கில்.

வியல்புடனே போய்ச்சலத்தி னின்றதைச்சிந் தாமணியி
வியம்பி னாரே
கயல்விழியா ருமைபாகா செயங்கொண்டா ரேதனது
கணவன் போலே
அயல்வீட்டான் மகனவனு மாபத்துக் குதவானென்
றறைகு வாரே. (உஎ)

சேதுபதிராசா மகள் கதை.

பெண்ணைவாழ்க் கைப்படுத்தச் சேதுமன்னன் குறித்தவிடம்
பிசகி மேலாங்
கண்ணர்பரி சோதனைக்குந் தப்பிவிதிப் படிமுடவன்
கைக்கொண் டானே
பண்ணுலவு புகழ்மேவுஞ் செயங்கொண்டா ரேமூவர்
பாரித் தானு [பவர்க
மெண்ணெய்தனைத் துடைத்திடலா மெழுத்ததனைத் துடைப்
பில்லைத் தானே. (உஅ)

குஷ்டரோகியின் கதை.

பண்டுகுட்ட ரோகியுந்தான் பாரதங்கேட் டாநோயும்
பஞ்சா யோடி
விண்டுவரு கைபிற்கதையைப் பொய்யென்முன் மறைந்தகுட்ட
மீறிற் றன்றோ
தண்டமிழுக் கருள்புரியுஞ் செயங்கொண்டா ரேபூதந்
தழும்பா தீசன்
உண்டென்ற பேருக்குண் டில்லையென்ற பேர்க்கில்லை
யுண்மை தானே. (உகூ)

மனுநீதிச்சோழன் கதை.

முன்னொருசோ ழன்புதல்வன் றேர்க்காலி லான்கன்று
முறியக் கண்டே

பின்னதற்கீ டாய்த்தனது பிள்ளையைத்தேர்க் காலிலிட்டுப்
பெருமை சேர்ந்தான்
றென்னேம நகரில்வாழ் சௌந்தரநா யகிமகிழ்ந்த
செயங்கொண் டாரே
தன்னுயிர்போன் மன்னுயிரை யெண்ணுவர்தே வர்முனிவர்
தமக்கொப் பாரே. (௯0)

இந்திரசித்தன் கதை.

கண்ணார்படை தனைச்செயிக்க விந்த்ரசித்த னிகும்பலையைக்
கருதிச் செய்தே
நண்ணியயா கமுமுடியுந் தருணத்தி லிலக்குமணு
ஞசஞ் செய்தான்
மண்ணையுண்டோன் விழிபதத்தார் செயங்கொண்டா ரேகோல
மத்து டாடி
வெண்ணெய்படும் வேளையிலே தாழியுடைந் திடுதன்முன்செய்
வினையென் பாரே. (௯க)

இராவணன் கதை.

அற்புதரா மன்கைவனு முதனுட்சண் டையிலரக்க
னறிந்தும் புத்தி
சொற்பமகோ தரன்பேச்சைக் கேட்டலவோ குலத்தோடுந்
துஞ்சி னனே
தற்பரசு தாசிவனே செயங்கொண்டா ரேநல்யோ
சனையில் லாத
துற்புத்தி மந்திரியா லரசுக்கே யீனமென்ற
சொல்மெய் தானே. (௯௨)

சகராள் கதை.

ஆவலாய்ப் பரிதேடிக் கபிலரிஷி யிடத்திற்போ
யகம்பா ராட்டித்

தாவியவெஞ் சினத்தாலே யறுபதினா யிரம்பேர்கள்
சகராண் மாண்டார்
காவடருந் தென்னேமச் செயங்கொண்டா ரேபொறுமை
கருதிச் செய்யாக்
கோபமே பெரும்பாவ மதுசண்டா ளம்மெனவுங்
கூறு வாரே. (௩௩)

இராக்கதன் கதை.

ஆற்றையணி தேநோக்கி யொருநிருதன் றவசுசெய்ய
வவனுக் கோர்வாள்
கூற்றையுதைத் தோனனுப்பக் குறுக்கிற்சென் றிலக்குமணன்
கொண்டா னன்றோ
நாற்றிசையும் பணியவருஞ் செயங்கொண்டா ரேயனந்த
நாளா யொட்டிக் [ண்ட
காத்திருந்தோன் பெண்டுதனை நேற்றுவந்தோன் கைக்கொ
கணக்குத் தானே. (௩௪)

பாரதக்கதை.

விதுரன்வின் முரித்தான்கன் னனும்பாம்புக் கணைதிரும்ப
விட்டா னில்லை
யெதிரிபடை தனைத்துரியோ தனன்செயிக்கப் படைத்தலைவ
ரிணங்கி னாரே
மதுரையி * லிந் தனம்வளையல் விற்றசெயங் கொண்டாரே
மருவார் போரில்
குதிரைநட வாவிடின்மா வீரர்பறந் திடுவாரோ
கொக்காய்த் தாமே. (௩௫)

மணியடித்தகதை.

சாத்திரவே தியர்வதிட்டர் தருமராது சத்திரத்திற்
சலச்சோ றுண்ட

---

* இந்தனம் - விறகு.

மாத்திரமே லட்சமறை யோர்புசித்தா லாடுமெணி
மலிந்தா டிற்றே
நேத்திரத்தா லனங்கனுட றனையெரித்த செயங்கொண்டார்
நிமலர் நாட்டிற்
பாத்திரத்தை யறிந்துபிச்சை யிடவேண்டு மென்றுலகோர்
பகரு வாரோ. (௬௬)

கிருட்டினன் தருமரைப் பொய்சொல்வித்த கதை.

அன்பான தருமராசு வத்தாமா வெனும்யானை
யமரில் வீழ
வன்பான புயவசுவத் தாமர்பட்டா ரெனப்பிசகி
வழுத்த லாச்சே
முன்பாத வன்னெயிற்றைப் பறித்தெறிந்த ஜெயங்கொண்டார்
முதல்வர் நாட்டிற்
றன்பானை தனைச்சாயப் பிடிப்பதுண்டோ வெவருமென்று
சாற்று வாரே. (௬௭)

பஞ்சபாண்டவர்கள் போர்க்குச்சென்ற கதை.

மன்னர்துரோ ணரையோனன் கொடுபோயிற் றென்றொரு
வழுத்தக் கேட்டே [சொல்
பொன்னிரத மேறியம்பு வில்லெடுத்தை வருஞ்சமர்க்குப்
போனா ரன்றே
நன்னயவே தன்சிரத்தி லொன்றுதுணித் திட்டசெயங்
கொண்டார் நாட்டிற்
சின்னப்பாம் பானாலும் பெரியகொம்பா லடியென்றே
செப்பு வாரே. (௬௮)

அச்சுதவாணன் கதை.

வேணியரா னைப்பணியு மச்சுதவா ணக்குரிசில்
வெள்ளாண் மைச்சீர்

ஆணியவல் லமையான்மூ வேந்தரையுங் காவலில்வைத்
தவதி செய்தான்
பாணிமழு வணிசெயங்கொண் டாரேயெத் தொழில்களுக்கும்
பழுதுண் டேபார்
காணியைநட் டுக்களத்தி னிற்பதுவே நன்மையெனக்
கருது வாரே. (௩௯)

தக்கன் கதை.

கயிலைத்தா னுமைப்போலே மறுசிவனை யுண்டுபண்ணக்
கருதித் தக்கன்
செயலற்றே செய்வேள்வி யுங்குலைந்து வேற்றுமுகஞ்
சேர்ந்தா னன்றோ
* வயிலைப்போல் விழியுமைசேர் செயங்கொண்டா ரேயிந்த
வவனி மேலே
உயரத்தான் பறந்தாலு மூர்க்குருவி பருந்தாகா
துண்மை தானே. (௪0)

தக்கன்மகத்தில் வந்த தேவர்கள் கதை.

ஆணவத்தக் கன்மகத்தி லவியுணவந் திடுதேவ
ரவர்க ளெல்லா
நாணமொடு மானபங்க முற்றனரோ வீரபத்திர
நாதராலே
† பாணிதனின் மழுவணிந்த செயங்கொண்டா ரேருசியும்
பசியும் பார்க்கு
மூணருந்தங் கருமமிழந் திடுவரென்ற பழமொழிதா
னுண்மை தானே. (௪௧)

இந்திரன் நளனைத் தூதுவிட்ட கதை.

வனத்திறையிந் திரனளன்பாற் சென்றுனக்கு வருமான
மாதைத் தானென்

---

* அயில் - வேல். † பாணி - கை.

றனக்குவரும் படிபேசித் தமயந்தி தனையிணக்கித்
தாவென் ருற்போற்
சினக்குமா வணிந்தடியார் மனக்கவலை தீர்த்தருளுஞ்
செயங்கொண் டாரே
உனக்குமறை செப்புவிப்போர் தொக்கிரவை நீர்தாவென்
றுரைத்த வாறே. (சஉ)

பிரமனைச் சிவன் சபித்த கதை.

கஞ்சனுக்குப் புவியிற்கோ யிலுட்பூசை யில்லையெனக்
கடிந்தீர் மீட்டுங்
கெஞ்சினபின் மறையவர்செய் பூசையெல்லா முனக்கெனவே
கிருபை செய்தீர்
* பஞ்சவனுக் காய்மாறி நடித்தசெயங் கொண்டாரே
பகைவ னைத்தா
னஞ்சிநல்ல வார்த்தைசொன்னாற் பொல்லாப்பு வருவதில்லை
யவனி யோர்க்கே. (சங)

அகலிகை சாபந்தீர்ந்த கதை.

முனியகலி கையைக்கல்லாச் சபித்துவிர்த் திக்கும்வழி
முறைசொன் னற்போன்
மனுவேந்த னுகிபரி நடந்திடுந்தாட் படப்பழைய
வடிவா னளே
† தனவானைத் தோழனென்ற செயங்கொண்டா ரெயெவர்க்குந்
தலைநாள் செய்த
வனுபோகந் தொலைந்திடும்போ தவிழ்தமுஞ்சித் திக்குமென்ப
ரவனி யோரே. (சச)

விபீடணன் மகுடம்பெற்ற கதை.

வளமையுள்ள ராமனைவி பீஷணன்சேர்ந் திலங்கைமணி
மகுடம் பெற்றான்

---

* பஞ்சவன் - பாண்டியன். † தனவான் - குபேரன்.

தளரரக்க ருடனிருந்தே யயர்க்குவந்தா லவனையொக்கச்
சரிப்பா ரன்றோ
களபமணி தனத்திசௌந் தரிபாகர் செயங்கொண்டார்
கனத்த நாட்டி
னிழலருமை வெய்யிலிற்போ னுற்றெரியு மென்பதுவு
நிசங்கண் டீரே. (௪௫)

அரிச்சந்திரன் கதை.

செப்புமரிச் சந்திரன்று னீசனுக்கே விலையாகிச்
சென்றே நெஞ்ச
மொப்பிமயா னமுங்காத்த நிமித்தியத்தா லிழுக்கவனுக்
கொருபோ துண்டோ
மைப்படியுங் கண்ணிசௌந் தரிபாகர் செயங்கொண்டார்
வளஞ்சேர் நாட்டிற்
குப்பையிலே கிடந்தாலுங் குன்றிமணி நிறத்திலொன்றுங்
குறைவு றாதே. (௪௬)

அமராவதி யேன்பவள் கதை.

வணக்கமுடன் சித்திரபுத் திரனையம ராவதிதான்
வணங்கிப் பொங்க
லிணக்கமுடன் செய்யாத நியமத்தா லவட்குமெத்த
விடெய் திற்றே
யணைக்கடலின் மேனடந்த முகில்பணியுஞ் செயங்கொண்டா
ரருள்சேர் நாட்டிற்
கணக்கனுக்குக் கைக்கூலி கட்டியன்றோ குடியிருக்கக்
கடனென் பாரே. (௪௭)

விடத்திற்குப்பயந்த விஷ்ணு கதை.

கடியவிடம் பாற்கடலிற் றோன்றியபோ தருகிருந்த
காருத் தன்று

னெடியபபத் துடனீங்கி யுங்கருநி றம்படைத்தா
ணிசம தன்றோ [டார்
கொடியிடைப்பெண் சௌந்தரியா ளிடப்பாகர் செயங்கொண்
குலவு நாட்டிற்
படைதனக்கோ டிப்பிழைப்பார் பஞ்சமதற் கிருந்துபிழைப்
பாரென் பாரே. (சஅ)

பஞ்சதந்திரக் கதை.

இறமுளசஞ் சீவகனைத் தமாகன்கண் டழைத்துவந்து
சிங்கத் துக்கு
மிறையுளமந் திரியாக வைத்தபின்சிங் கந்தனக்கு
மிடபத் துக்குங் [டார்
குறைவில்பகை யுண்டுபண்ணி விட்டதன்றோ செயங்கொண்
குலவு நாட்டி
லுறவுதனைப் போலிருந்துங் குளவியைப்போற் கொட்டுவர்க
ளுண்டென் பாரே. (சகூ)

அறிவீன னரசன்மேற்பாடியகதை.

அறம்பெற்ற சோழனைமண் ணுண்ணிமாப் பாவையென்
றதிலோர் பாட்டாய் [ருள்
வெறும்பித்தன் சொல்லவந்த வேந்தர்சபை யோர்கள்பொ
விளங்கச் சொன்னார்
திறம்பெற்ற பரிசுகொண்டான் றென்னேம நகரில்வளர்
செயங்கொண் டாரே
யெறும்புக்குந் தன்கையா லெண்சாண்மெய் யென்றுலகோ
ரியம்பி னாரே. (ருு)

கர்னமகாராஜன் கிண்ணங்கொடுத்த கதை.

வாழிரவி சுதன்வலக்கை யாலெடுத்துக் கொடுக்குமுன்னே
மனம்வே றாமென்

றேழைமறை யோர்க்கிடக்கை யாலேயெண் ணெய்க்கிண்ண
மீந்தா னன்றோ
வாழிதனிற் பள்ளிகொள்ளு மால்பணியும் பொற்பாதச்
செயங்கொண் டாரே
நாளையென்பார் கொடைதனக்குச் சடுதியிலே யில்லை யென்ற
னலம தாமே. (நக)

விசுவாமித்திரன் வெற்றியுடையாத கதை.

புகழரிச்சந் திரனிசவா னெனவதிஷ்டர் சொலவவனைப்
பொய்ய னாக்க
மிகவெகுண்டு சபதமிட்டே யானமட்டும் பார்த்தயர்ந்து
விசுவா மித்ரன்
செகமறிய மக்கனப்பட் டிருந்ததையா வருமறிவார்
செயங்கொண் டாரே
முகடுமுட்ட வருகோபந் துரும்புகுத்த வேலையென
மொழிந்த வாறே. (நஉ)

சுப்பிரமணியர் கதை.

அண்ணலருள் சரவணவேள் புனக்குறப்பெண் வெயிலினிற்கு
மவதி பார்த்துத்
தண்ணுலவு வேங்கைமர நிழலாலன் றவள்வருத்தந்
தனைத்தீர்த் தாரே [தான்
விண்ணவர்க்காய் விடத்தையுண்ட செயங்கெண்டா ரேகனந்
விளங்கு நாட்டிற
பெண்ணொன்றாற் பேயுமொக்க விர்ங்குமென வுலகுள்ளோர்
பேசு வாரே. (நந)

கிருட்டினன் ஐவரைக்காத்த கதை.

வெள்ளல்கன்னன் கைநாகக் கணைப்புலன்மா லறிந்தவன்றன்
[illegible] வைப்போய்ப்

பிள்ளைகண்மே ளுகமொரு தாம்விடப்பா னிறுத்தெனவும்
பேசச் சொல்லித்
தெள்ளியபஞ் சவருயிரைக் காத்தார்தென் னேமநகர்ச்
செயங்கொண் டாரே
வெள்ளம்வரும் முன்னணைக் கோலிவைப்போர் காரியங்கண்
மிகநன் றாமே. (ருச)

இரணியன் கதை.

ஆச்சரிய விரணியனட் டாக்கரத்தை யிகழ்ந்தார்போல்
லாப்பெண் ணமற்
கூச்சமறத் தள்ளியிர ணியநமா வென்றதிறைற்
குலைந்தான் றேகம்
பேச்சிமுலை யுண்டமுகில் பணிசெயங்கொண் டாரே நீர்
பெருகாற் றுக்கு
ணீச்சறியா மைந்தரைவெள் ளங்கொண்டு போமென்ற
னிசங்கண் டேரே. (ருரு)

உருக்குமாங்கதன் கதை.

நன்னிலத்தி லுருக்குமாங் கதராச னொருவிரத
நடாத்தி னானென்
றந்நகரு மவ்விரதந் தொடங்கியதால் யமனவரை
யணுகக் கூடா
தென்னயம தண்டனைசே ராதிருந்தார் செயங்கொண்டா
ரிலகு நாட்டின்
மன்னவனெப் படியோமன் னுயிருமந்தப் படியெனவும்
வழுத்து வாரே. (ருசா)

நளன் கதை.

அடவிசென்று நகரிழந்து வறுமைதங்கி யுடன்மெலிந்தே
யம்மா னூர்வந்

திடவுமம்யா னேவலிறு லமைச்சரழைத் திடவருவ
திலேபோ வென்ற
திடநளனை மாமனெதிர் கொண்டழைக்கச் சம்மதித்தான்
செயங்கொண் டாரே
கடுகுசிறுத் தாலுமென்ன காரம்போ காதெனவுங்
கழறு வாரே. (ருஎ)

சூரபத்மன்.

பூதலமும் பொன்னுலகு மேவல்கொண்ட சூரனான்
புதல்வற் கஞ்சிச்
* சூதமர மாயொளித்துக் கடைசியிற்செவ் வேள்கரத்திற்
றுசமா னானே
தாதவிழ்பூங் கொன்றையணி செயங்கொண்டா ரேசெடியைத்
தாண்டித் தாவிக்
காதமோ டினுமுயற்குக் கைத்தூக்கென் றுலகிலுள்ளோர்
கழறு வாரே. (ருஅ)

பொய்த்தவ வொழுக்கத்தோர் கதை.

பூமிதனிற் சிலர்நீறிட் டிருகாமுங் குவித்திருகண்
பொத்திக் கொண்டே
காமியர்கண் மேற்பொருண்மேன் மனங்கிடக்க வாயிலா
காமிவன் றுற்போ
னேமியணி வோன்றேட வரியபதச் செயங்கொண்டார்
நிமலர் நாட்டின்
மாமிதலை மேற்கையும் வேலிபுறத் தினிற்கண்ணும்
வைத்த வாறே. (ருகூ)

திருவிளையாடற் புராணக் கதை.

பெண்ணிறக்கத் தொங்கலம்பால் வில்வேட னடுத்துவாப்
பெண்ணுக் காளன்

---

* சூதம் - மாமரம்.

கொன்றதுநீ யென்றிழுக்க மதுரையிற்சுந் தரர்நியாயங்
கொடுத்துத் தீர்த்தா
ரண்ணலா னேசெயங்கொண் டாரேகா தாரக்கேட்
டதும்பொய் யாருங்
கண்ணாரக் கண்டதும்பொய் தீர்க்கவிசா ரிப்பதுமெய்
காணுந் தானே. (௯0)

துரியோதன னரசிழந்த கதை.

கூறுமரா வக்கொடியோன் பாண்டவருக் கைந்நிலமுங்
கொடுக்கே னென்று
வீறுசொன்னான் சுடக்கொடுத்த பின்னுயிரோ டுலகமுற்றும்
விட்டா னன்றோ
நீறணிமெய்ச் செயங்கொண்டா ரேயாற்றோ டேமூடர்
நேர்போனாலும்
* போறதல்லா லோடக்கா ரனுக்கரைக்கா சுங்கொடுக்கப்
பொருந்தி டாரே. (௯௧)

விநாயகர் மாங்கனி பெற்ற கதை.

வேய்க்குமகன் மூத்தபிள்ளை கரத்தினின்மாங் கனிகொடுக்க
வெகுண்டு வேலர்
வாய்க்கினிய கனிநமக்குத் தரவிலென்று கோபமுடன்
மலைமேற் சென்றார்
பாக்கியஞ்செந் தமிழ்க்குதவுஞ் செயங்கொண்டா ரேவிரைத்த
பழனந் தோறுந்
தாய்க்குவிளைந் தாலுமென்ன தனக்குவிளைந் திடவேண்டித்
தவஞ்செய் வாரே. (௯௨)

சீவகன் கதை.

பெலமுற்ற சிங்கமொரு கன்றீனும் படியெழுதிப்
பின்னே செம்பொன்

---

* போகிறதல்லா லென்பது போறதல்லாலென விகாரமாயது.

விலைபெற்ற கரியையரிக் கன்றுதுள்ளிப் பாய்ந்தகதை
மெய்யா மென்றே
சிலைபெற்ற கூளேந்த்ரன் விறலிதனில் விளங்குதன்றோ
செயங்கொண் டாரே
குலவித்தை கல்லாமற் பாதிவரு மென்றுலகோர்
கூறு வாரே. (௯௩)

கொக்கு மீன்களை மடித்துத் தானும்மடிந்த கதை.

தண்ணார்மீன் களைச்சருவ சீவதாய பா* பகந்தான்
றயவாய்ப் பேசி
யெண்ணமற் சிதைத்தபழி தனக் † கலவன் பகக்கழுத்தை
யிடறிற் றன்றே
பண்ணார்சிந் தாமணியில் விழுந்ததன்றோ செயங்கொண்டார்
பாவு நாட்டிற்
கொன்றாரைக் கொல்லுமல்லாற் கொலைவிடா தென்றுலகோர்
கூறு வாரே. (௯௪)

வாமனவதாரக் கதை.

உலகமெல்லா முடல்சிறுத்துஞ் சிறியவா மனனளந்தா
னொருபா தத்தா
லலகையின்காத் திரங்களென்ன வாலகிருஷ்ணன் பாலருந்தி
யலகை மாய்த்தான்
சிலைநுதலாள் சௌந்தரிநா யகியையிடப் பாகம்வைத்த
செயங்கொண் டாரே
மலைபெரிதா னாலுமென்ன சிற்றுளிக்குப் பயஞ்சனிக்கும்
வண்மை தானே. (௯௫)

புட்கரன் நளனை வரவழைத்த கதை.

காவலன்புட் கரனளனைச் சூதாட வரவழைத்த
கபடங் கண்டே

---

* பகம் - கொக்கு. † அலவன் - நண்டு.

மேவியரு தாடாமற் றள்ளிவிட்டாற் சனிநளனை
வினைசெய் வானே
வாவிதிகழ் தென்னைமச் செயங்கொண்டா ரேமிகுந்த
வளஞ்சேர் நாட்டி
ஞாவிதன்செய் தியையறிந்து குடுமியைப்பத் திரப்படுத்த
னலமென் பாரே. (௧௬)

குமுண ராசன் கதை.

சிம்மாச னன்குமுணன் சிரம்போலே விழிமூக்குச்
செவிவாய் செய்து
சம்மாரம் பண்ணிரத்தச் சோரிசிந்தக் கொடுத்ததுவுந்
தட்டா னன்றோ
பெம்மானே தென்னைமச் செயங்கொண்டா ரேமலையைப
பிரட்டுங் கையான்
கம்மாளன் பசுவைத்தான் காதறுத்துக் கொள்ளுமெனக்
கழறு வாரே. (௧௭)

ஆமை வாயாற் கெட்ட கதை.

கொடியையிரண் * டோதிமங்கள் விப்பறக்க நடுக்‡கூர்மங்
குலவிச் செல்கா
ணெடியிலொரு செய்திசொல வாய்திறந்தா மையும்வீழ்ந்து
நொறுங்கிற் றன்றே
வடிவுளதந் திரக்கதையு முண்டுசெயங் கொண்டார்வாழ்
வளஞ்சேர் நாட்டி
னெடுங்கிணறும் வாயாலே நாறுமென்றே சொல்லுவர்க
ணிசங்கண் டோரே. (௧௮)

திரிசங்கு ராசன் கதை.

நம்புகுரு வசிஷ்டர்பகை யிருந்திருக்கும் போதுதிரிச்
சங்கு ராசன்

---

* ஓதிமம் - அன்னம். ‡ கூர்மம் - ஆமை.

வம்புரைத்த கோசிகராற் சொர்க்கமதி லேற்றியதான்
மகிமை யுண்டோ
சம்புமகா தேவசெயங் கொண்டாரே யெதிராளி
தனுவா லெய்த
வம்புவிழக் கையிலிழை கட்டினன் மெய்யினிற்புண்
ணறி டாதே. (௬௯)

சுக்கிரன் கண்ணிழந்த கதை.

கூடச்சமற மாவலிபூ மியைக்கொடுக்க மால்வாங்கக்
குறுக்கீக சுக்ரன்
பேச்சறியா மற்பேசிக் கண்ணிழப்பா னேனெதுங்கிப்
பிழைக்கொண் ணதோ
வாச்சரியஞ் செயங்கொண்டா ரேயிலங்கா புரிராம
ராண்டா லென்ன
வேச்சிலரக் கர்களாண்டா லென்னென்று குரங்கந்நா
ளிருந்த தன்றே. (எ0)

மானமுள்ள மகாபுருடன் கதை.

நீரெடுத்தோர் கலசமதிற் கவசமுஞ்செய் தொருவன்வந்தா
னெடுநாள் கும்பம்
பாரில்விழுந் துடையவின்னு மொருகலச மென்மானம்
பார்க்கும் போது
சீரலவென் றழுதானென் றொருகதைசொல் வார்நேமச்
செயங்கொண் டாரே
யாரெனினு மானமிழந் துயிர்காப்ப தென்னவென்பா
ரவனி யோரே. (எக)

கருடன் கதை.

விருப்பமறை யோன்றனக்குப் பிறந்தகிரு தனை * யுவணன்
விழுங்கும் வாயி

* உவணன் - கருடன்.

னெருப்பெழச்சுட் டதனூற்செங் கருடனிரு தனைவிடுத்தா
னெனவோர் பாட்டிற்
றிருப்பதிவேங் கடசதகந் தனிலுரைத்தார் முன்பெரியோர்
செயங்கொண் டாரே
நெருப்பிருப்ப தறியாமற் றொட்டாலுஞ் சுடுமெனவே
நிகழ்த்து வாரே. (எ௨)

பட்டணத்துப் பிள்ளை கதை.

கையினிற்பட் டணத்தார்க்குத் தமக்கைநஞ்சு கலந்துபல
காரஞ் செய்தே
யையமறக் கொல்லவென்றே கொடுக்கவவண் மனைநெருப்பா
லழிந்த தன்றோ
துய்ய * பிஞ கச்சிலையிர் செயங்கொண்டா ரேபிறர்க்குத்
துன்பங் காணச்
செய்ததி வினைதானுஞ் செய்தவர்க்கே சேருமெனச்
செப்பு வாரே. (எ௩)

விக்ரமாதித்தன் கதை.

சிந்தைமகிழ் விக்ரமா தித்தனுக்கா யிரவருடந்
தேவி யீந்தாள்
புந்திவலு மந்திரிசொல் லாலிரண்டா யிரவருடம்
புவியை யாண்டான்
சுந்தரர்க்குத் தூதுசென்ற செயங்கொண்டா ரேதருமந்
துலங்கு நாட்டின்
மந்திரங்கால் மதிமுக்கா லென்றுலகந் தனிலுள்ளோர்
வழுத்து வாரே. (எ௪)

காளிதாசன் கதை.

நிசகாளி தாசனரண் மனைவாயிற் புகவேண்டி
நிருபன் கீர்த்தி

---

* பிஞகம் - சூலம், அல்லது சிவன் வில்.

சுகநாசி பல்லைபோலென் றுரைத்ததனாற் செல்லவிட்டார்
தோன்றப் போவென்
றிசைவாங்கிர் வாணம்போ சன்றன்மேற் பகர்ந்தனன்காண்
செயங்கொண் டாரே
பசுமாட்டுத் தோலதனைப் புலிபோர்த்துக் கொண்டிருந்த
பண்பு தானே. (எரு)

இராவணன் போர்க்குத் துணிந்த கதை.

யாகத்தாற் செயமுமில்லை பிறப்பதினி நிசமெனக்கொ
ளென்னைப் பெண்ணே
லோகத்தா ரிராமனென வுரைக்குமட்டு மிராவணனென்
றுரைப்பார் போர்க்குப்
போகத்தான் றுணிந்தனென்று னரக்கனதாற் செயங்கொண்
பொருந்து நாட்டிற் [டார்
சாகத்தான் றுணிந்தவர்க்குச் சமுத்ரமுழங் காலளவு
தானென் பாரே. (எசு)

நக்கீரர் கதை.

அத்தனீ காத்தெழுதி யடிமைக்கீந் திட்டசெய்யு
ளதனை நோக்கிச்
சற்றுந்தா மதியாம லிபற்கைமணங் கூந்தலுக்குத்
தகுதி யென்றல்
குற்றமெனப் பயமின்றி யுரைத்தனர்நக் கீரர்செயங்
கொண்டா ரேசொல்
வித்துவான் மதயானை யிரண்டுமொப்பென் றுரைப்பதுவு
மெய்ய தாமே. (எஎ)

துரோணர் பெண்சாதி கதை.

உச்சிதமாய்த் துரோணர்சொன்ன மொழிப்படியே யவர்மனை
ளுடையில் லாமற் [யா

பிச்சையிடக் கொள்சிவனுக் கக்கணமே யிந்திரியம்
பிறந்த தன்றோ
தெட்சணமா முனிபரவுந் தென்னேம நகரில்வளர்
செயங்கொண் டாரே
யிச்சையுள்ள காமுகர்க்குக் கண்கண்ட விடத்தினிலென்
றியம்பு வாரே. (எஅ)

வாதாபி கதை.

மெத்தநாள் வாதாபி வேதியர்க ளுயிரையுண்டு
மேவிக் கும்ப
சித்தனைச்சாப் பிடநினைந்தான் சித்தனவ னுயிரைமுற்றுஞ்
சிதைத்துப் போட்டான்
மத்தகசந் தனையுரித்த செயங்கொண்டா ரேயார்க்கு
மனதுக் கேற்க
நித்தியங்கட் டப்பாலை முற்றவுந்தான் பழுத்திடுமோ
நிலத்து மீதே. (எகூ)

நாரை மூக்குக் குவமை சொல்லிய கதை.

பார்புகழும் பாண்டியர்க்குச் சங்கத்தார் போறிவாற்
பகர வொண்ணு
நாரைமூக் குக்குவமை பனங்கிழங்கென் றொருபுலவ
னவின்று னன்றோ
சீருலவுங் கங்கைதிங்க ளரவமொடு கொன்றையணி
செயங்கொண் டாரே
காருலவும் புவியிலுள்ளோ ராகாயந் தனையும்வரை
கட்டு வாரே. (அ0)

விறன்மிண்டநாயனுர் கதை.

ஆரூரெல் லையின்மிதியே னென்றவிறன் மிண்டர்தனை
யான்சோ தித்தப்

பாரிலொரு கான்மிதிக்கச் செய்ததுகண் டக்காலைப்
பதறி யீர்த்த
சீருவந்து சிவன்காட்சி கொடுத்தானன் றோநேமச்
செயங்கொண் டாரே
பேருலகின் மனங்கலங்கிப் பிரியாமற் பிடித்தவர்க்குப்
பேறுண் டாமே. (அக)

செங்நாப்புலவர் கதை.

உற்றசெங்நாப் புலவர்மிக்க கணிகணன்மேற் கோபமதா
யுலகுண் டோனை
யிற்றையாம் புறப்படுவோ மினியுன்பாய் சுருட்டியெழுந்
திருமென் றோதச்
சித்தசன்றன் றாதைவர தப்பெருமா ளெழுந்தனரே
செயங்கொண் டாரே
பத்தருளத் தினிலீசன் குடியிருப்பா னெனச்சொல்லும்
பண்பு தானே. (அஉ)

குசலன் கதை.

மிகப்பெரிய மாலசுவந் தனைப்பிடித்துக் கட்டிவந்த
வினைப்போர் தன்னைப்
பகற்பொழுதிற் பொடியாக்கித் தாதைதனை வென்றகுசன்
பண்பு பாரீர்
செகத்தரசர் புகழவருந் தென்னேம நாடதிபச்
செயங்கொண் டாரே
தகப்பனொரு பாக்கெனவும் பிள்ளையொரு தோப்பெனவுஞ்
சாற்று வாரே. (அங)

இரேணுகாதேவி கதை.

தன்பரசு ராமனது தாயுடலிற் பறைச்சிதலை
தரித்த மின்னை

ணன்பரிடங் கொண்டுவர விவண்முழுதும் பறைச்சியென
றிண்புயனை யிவளைப்பபாற் றுர்த்தித்தனர்க்கேசெய்க் குரைத்தனரே
செயங்கொண் டாரே
[illegible]ண்புளவெண் சாணுடம்பிற் சிரசுபிர தானமெனப்
பகரு வாரே. (அச)

கண்ணன் கதை.

பார்த்தனுக்கே ரதமூர்ந்தோன் மூத்தபல பத்திரனைப்
பாரைச் சுற்றென்
றேய்த்தனுப்பித் தன்னைச்சார்ந் தோரைரட்சித் தண்ணனைச்
திருந்து வாழ்ந்த [சார்ந்
நூற்றுவரை மடியவுஞ்செய் தான்செயங்கொண் டாரேநீர்
நுவலக் கேண்மோ
மூத்ததுவே மோழையென்று மிளையதுவே காளையென்று
மொழிகு வாரே. (அரு)

நிரம்பவழகியர் கதை.

பொன்னார்செல் வமுந்தமிழும் பொருந்தாசன் றருக்கதனாற்
புலவ ருக்குண்
மன்னனை நிரம்பவழ கியரையண்டங் காக்கையென
வழுத்தக் கேட்டே
யன்னார்நீ யேயண்டங் காக்கையென்றார் செயங்கொண்டா
ரணிகொ ணாட்டிற்
றன்னாலே தான்மெலிந்தா லண்ணாவி யென்னசெய்வான்
றாணி மீதே. (அசு)

நந்திராசன் கதை.

ரூத்திரப்பா வைபைநிகர்மெய் யிதனைநம்பொண் ணுதெனவுந்
துணைவன் கல்விக்

காத்துமதத் தஞ்செய்துல குள்ளமட்டும் புகழ்படைத்தா
னன்றோ நந்தி
போற்றியசுந் தரர்க்காய்முன் முறிகாட்டுஞ் செயங்கொண்டார்
புனித நாட்டிற்
கீர்த்தியப கீர்த்தியிவை வந்தாற்போ காவெனவே
கிளத்து வாரே. (அஎ)

சுவாகாள் கதை.

ஆறுரிஷி பத்தினிமார் பழுதுபடா திருக்கையிலே
யன்னோர் ரூபங்
கூறுசுவா காளெடுத்தக் கினிதேவைத் தழுவரிஷிக்
கூட்டங் கூடிச்
சீறியறு வரைத்துரத்தத் தவசுக்கே கினரன்றோ
செயங்கொண் டாரே
* வாறவிதி வந்ததென்றால் வளைந்தாடும் பாணையென்று
வழுத்து வாரே. (அஅ)

அருந்ததி கதை.

நித்தியசந் யாசியென்று நித்யோப வாசியென்றும்
ரிஷிகள் கூற
வத்தைமெய்யென் றருந்ததியாள் கங்கைதனக் குரைத்துவழி
யன்பாய்க் கேட்கச்
சித்தமகி ழருந்ததிசொற் றனக்குவழி கங்கைவிட்டாள்
செயங்கொண் டாரே
பத்தினியுத் தமிவாக்குப் பலிக்குமெனத் தேவரொக்கப்
பணித்திட் டாரே. (அக)

மிருகண்டர் கதை.

மதிமெதுவா லொருநூறு வியன்மதியாற் பதினாறு
வயதுறு புத்ர

---

* வாற - என்பது வருகிற என்பதன் விகாரம்.

*னெதுதருவோ மெனச்சிவனை நல்லபிள்ளை வயதீரெட்
டிருந்தாற் போது
மதுதருவீ ரென்றுமிரு கண்டுமுனி யன்றுரைத்தார்
செயங்கொண் டாரே
யிதசாணி யொருகூடை மிக்கசவ்வா தோர்பணத்தி
னிடையென் பாரே. (௬0)

அனுமான் கதை.

சலியாமற் கடற்றண்டி மருத்துமலை கொணரனுமான்
றடந்தோ டன்னை
நலியாம லிந்த்ரசித்தன் பாசத்தாற் கட்டிவிட்டா
னலம தான
கலியாண முரசொலிக்குந் தென்னைமச் செயங்கொண்டார்
கனத்த நாட்டில்
வலியார்க்கு வலியாரு மிருப்பரென்றே யுலகிலுள்ளோர்
வசனிப் பாரே. (௬௧)

பாண்டியராசன் கதை.

மதுரைமன்ன னிடத்திருந்த குதிரைபற்று தெனவிலைக்கு
மாவ னேக
மிதமுடன்சே கரித்தநிமித் தியத்தான்முன் பரிமுழுது
மிழந்தா னன்றோ
நிதியனைத்தோ முமைவேண்டுஞ் செயங்கொண்டா ரேயேரி
நிறைக்க வேண்டிப் [த்துப்
புதியவெள்ளம் வரப்போய்முன் னிருந்தவெள்ளத் தையுமிழு
போன வாறே. (௬௨)

விறகுதலையன் மனையாள் கதை.

* தெகிட்டாக்கா தலைவிறகு தலையன்மனை யாள்கூத்தன்
றிகிலிட் டேங்கப்

* தெகிட்டா - தெவிட்டாத.

புகட்டியல்லோ கற்பழியா மற்கவிகேட் டாடனது
புருடன் பேரின்
முகட்டாளி லையிற்றுயில்வோன் பணிசெயங்கொண் டாரேசீர்
முதிர்ந்த நாட்டிற்
பகட்டாற்பங் கெடுப்பரெனப் பொரியரிசி யிடியெனவும்
பகரு வாரே. (௯௩)

சூரியனைச் சக்கரத்தால் மறைத்த கதை.

வாணிமா துலன்றேழ னிறவாமற் காக்கவென்ன
வகைசெய் வோமென்
றுணியிர வியைத்திகிரி யான்மறைத்துப் பார்த்தனைக்காத்
தருளி னாரே
நாணரவாற் பொன்மலையை வளைத்தசெயங் கொண்டார்வாழ்
நலஞ்சேர் நாட்டில்
* வேணுமென்று நூற்றுன்மெல் லியநூலாய் நூற்றிடுவர்
மெய்ய தாமே. (௯௪)

மயிலிராவணன் கதை.

அச்சமில்லாத் துராக்கதரா வணனைமயி லிராவணன்சேர்ந்
தழிந்து போனான்
பட்சமுள்ள விபீஷணன்று னரக்கனைவிட் டொதுங்கிமிகப்
பண்பாய் வாழ்ந்தான்
கச்சணியுந் தனத்திசௌந் தரிபாகர் செயங்கொண்டார்
கனத்த நாட்டிற்
றுர்ச்சனரைக் கண்டவுடன் றூரப்போ வென்றுலகோர்
சொல்லு வாரே. (௯௫)

வரகுணசோழன் மனையாள் கதை.

வல்லவர குணசோழன் மகளைமணஞ் செய்தருளி
வடிவைப் பார்த்தே

* வேணும் - வேண்டுமென்பதன் விகாரம்.

யல்லிருக்குங் குழலியிவண் மருதப்பர்க் காவணமக்
கன்னை யென்ற
நில்லமன்று ளாடிமெய்யி லைக்கியமாம் படிசேர்த்தான்
செயங்கொண் டாரே
நல்லதுகண் டானயன் றனக்கென்றே யுலகினுள்ளோர்
நவிலு வாரே. (௬௬)

நக்கீரர் கதை.

அரசிலையிற் பாதிபட்சி பாதிமச்ச மானவிந்தை
யனைத்தும் பார்த்து
விரவுளநிட் டையைமறந்த நக்கீரர் தமைப்பூதம்
விழுங்கத் தூக்கித்
திரண்மலையி லடைக்கவள்ளி கணவனன்றோ விலக்கிவிட்டான்
செயங்கொண் டாரே
யுரைசெய்தவ மறந்தாற்கை தவமாகு மென்றௌவை
யுரைத்த வாறே. (௬௭)

வேடன் கதை.

அடவியில்வே தியர்க்கொருவே டன்றினைமாப் பருந்தபல
னுற்கா சிக்குத்
திடமுளமன் னவன்சேயாத் தினையரியப் பொற்கலத்திற்
செனித்தா னன்றோ
வடவரையைச் சிலையாக வளைத்தசெயங் கொண்டாரே
வையந் தன்னி
லிடுவதுபிச் சைபின்பு பெறுவதுவே மோட்சமென
வியம்பு வாரே. (௬௮)

துர்வாசமுனி கதை.

வாய்ச்சுதெனத் துர்வாச ருக்குமாங் கதனைமெத்த
வருத்த வாழி

பாச்சலினான் முனியைவெல்ல வரவுருக்கு மாங்கதன்றான்
பரித்தா னன்றோ
ரேச்சமறச் சிலந்திப்பூச் சியைக்கதிசேர்த் திட்டசெயங்
கொண்டார் நாட்டிற்
சாட்சிக்கா ரணைப்பணியார் சண்டைக்கா ரணைப்பணியத்
தகுமென் பாரே. (௯௯)

வரரிஷி கதை.

சிவயோகர் வெகுளியினால் வரரிஷியு * மகிடமெனச்
செனித்தான் பாரிற்
பவமடியாற் கற்றவுமை லிங்கப்ரா ணியைவதைத்த
பழியின் றோஷ [டார்
நவதீர்த்த மாடியன்றோ தொலைந்ததென்பார் செயங்கொண்
நலஞ்சேர் நாட்டிற்
றவமுடையோர் மனமழுங்கச் செயப்படா தென்றுலகோர்
சாற்று வாரே. (௧௦௦)

ஜெயங்கொண்டார் சதகம்

முற்றிற்று.

* மகிடம் - எருமை.

உ

கடவுள் துணை.

எழுநகரத்தார் பெயராற் பாடிய

திருமுகவிலாசம்.

இது

மதுரைச்சீமை செவ்வற்பட்டு இளையாற்றங்குடி

எழுநகரமென்று சொல்லப்பட்ட

நேமநகரத்திலுதித்த

அழகப்பசெட்டியார் குமாரர்

முத்தப்பசெட்டியார் பாடி,

ஊனைநகர், வீரபண்டாரம் குமாரர்

சுப்பிரமணிய பண்டாரத்திற்கு

அளித்தது.

மேற்படியார் பௌத்திரர்

நாராயணஞ் செட்டியர்

கேட்டுக்கொண்டபடி பதிப்பித்த பிரதிக்கிணங்க

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

உ

கடவுள் துணை.

எழுநகரத்தார் பெயராற் பாடிய

திருமுகவிலாசம்.

விநாயகர்தோத்திரம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

இருநிதியஞ் சேருகின்ற வேழ்நகரத் தார்மேற்
றிருமுக விலாசமது செப்ப—வருளாற்
குணபதியா மீசன் குழவியென வுற்ற
கணபதிபொற் றாண்மலரே காப்பு.

நூல்.

கலிவெண்பா.

கங்கை நதிதரித்தோர் கண்ணுதலார் சூரனுக்குச்
சங்கையில்லா வாழ்வு தனைக்கொடுக்க - வங்கவனுந்

தேவாதி கட்கிடுக்கஞ் செய்ததனு லிந்திரன்பாற்
றேவாதி கள்பலருஞ் சென்றடர்ந்து - பூவாளி

வேளை யானிடத்தின் மேவிச் சுரரிடுக்கந்
தாளாய்ப் பறந்திடவே சொல்லுமென்றார் - வேள்சிவன்பாற்

சென்று னமார்சொன்ன செய்திபெல்லா மீசன்முன்பு
நின்றுங் குரையா னிகரின்மதன் - மன்றன்மிகு

பூவாளி யச்சிவன்மேற் பொங்குமழை போனின்று
தூவினு னீசனிவன் றுஷ்டனென்றே - தாவிமதன்

றன்னை யெரித்திடவே தானவரும் வானவரும்
பன்னுஞ் செபதபஞ்செய் பண்ணவருந் - தங்நிலைவிட்

டோடினு ரந்நா ளொருகோடி சென்றபின்பு
கூடினு ரிந்திரன்பாற் கோவென்றே - கூடுமுன்னே

சத்தரிஷி மாதர் தமக்கக் கினிபகவான்
மெத்தமயல் கொண்டவன்றன் வீட்டில்வந்து - சித்தநொந்

யன்ன மருந்தா திருந்தா னவண்சுவாகா
ளென்னவென்று ளுள்ள தியம்பினு - னன்னயமா

வென்றன் றிராணி யினியறிவீர் சத்தரிஷி
துன்றுமட வார்களுன்னைத் தோயவே - யொன்றுமுத்தி

செய்வனென்று ணல்லதெனச் சிந்தைமகிழ்ந் தக்கினிதான்
மெய்பொடித்துச் சத்தரிஷி மின்னுரின் - மைவிழியா

ளாறுரிஷி மாதர்வடி வாகினு ளச்சுவாகாள்
தேறவொண்ணு தாசைதணைத் தீர்ப்பையென்று - கூறியே

யொவ்வொருத்தி யாய்ச்சென் றுலகத்திற் றன்மனசு
செவ்வையொத்துக் கொண்டமைய றீர்ந்தனனே - திவ்ய

வருந்ததியைப் போலவடி வாகமாட் டாதுள்ளம்
வருந்திக் கணவனிடம் வந்தா - டிருந்திழைமா

ரின்னொருத்தி யேதுவா வில்லையென்று னுள்ளபடி
சொன்னவற்றைக் கேட்டுத் துயர்தீர்ந்தா - னிந்நிலத்திற்

சத்தரிஷி ஞானத்ருஷ்டி தன்னு லறிந்துகம
லத்துமட வாரை யருகழைத்துச் - சத்தி

யருந்ததிகற புக்குங்க ளாறுபேர் கற்பும்
பரிந்துபற்று தென்று பகர்ந்து - திருந்துஞ்

சரவணப்பொய் கைக்குட் டவசுசெய்வீ ரென்றே
யரிவையரைப் போவென் றனுப்பத் - திருநுதலார்

சத்தரிஷி வாக்காற் சரவணப்பொய் கைக்குள்வந்து
சத்தியமே யெண்ணித் தவஞ்செய்தா - ருற்றதெய்வ

மன்னவனுந் தேவர்களும் வந்தக் கினிபகவான்
றன்னை யருகழைத்துச் சாற்றினு - ரென்னவென்றாற்

சூரன் செயுமிடுக்கண் * சோமன் றரித்தவர்பா
னீருரைத்து மீளுமென்றார் நேசமாய்ச் - சீருடனே

செல்லுமுன்னே மாலாய்ச் சிவனு மிடப்பாக
மெல்லியலு மொன்றான வேளையிலே - மெல்லநடந்

தக்கினியோன் பொற்கதவை யண்ணினன் மெய்வெளிச்ச
மிக்கசுடர் போலே விளங்கியதாற் - றிக்கெனவே

சங்கராு மக்கினியோன் றன்னைக்கண் டேமனசு
சங்கோச மாய்விரைந்து தாமெழுந்தா - ரங்கவர்க்கு

விந்துபிர வேசிக்க வீறமெழி லக்கினியே
வந்துகையி லேந்தென வழுத்தினு - ரந்த

வான்விந்தைத் தாங்கிநின்ற வக்கினியோன் றன்னைத்
திரமாக விந்தவிந்தைச் சீரா - யுரமாகத்

தாட்டிகமாய்க் கொண்டு சரவணப்பொய் கைக்குளிதைப்
போட்டுவிடு மென்னப் புகன்றார்கள் - கேட்டவனு

மக்கணமே விந்துதன்னை யந்தச் சரவணப்பொய்
கைக்குள்விட்டு வந்தான் கருணையுடன் - மிக்கவிந்து

---

* சோமன் - சந்திரன்.

மாறு குழந்தைகளா யக்கங்கை யிற்பிறந்து
மீறி விளையாடும் வேளையிலே - கூறரிய

வீஸ்வரு மீஸ்வரியு மேகாந்த மாகமந்த
வாசமா மந்நதியில் வந்திடவே - யீஸ்வரிபார்த்

திந்தநதி யிற்குழந்தை யேதென்று தேவர்பிரா
னுன்றன் குழந்தையென்று னுண்மகிழ்ந்து - விந்தையுட

னாறு தலையுஞ்சேர்த் தாவ லுடனுசை
மீறி யெடுத்துமடி மீதில்வைத்தே - யாறிரண்டு

கானு முருவுமிரு காலாக்கிச் சேர்த்தெடுத்து
வேலுமொன்றாய் மிக்ககரம் பன்னிரண்டாய்ச் - சீலமுட

னாறுசிர சாய்த்தேவர்க் காறுதலை யாமெனப்பே
ராறுமுக மென்றே யானுரைக்க - வீறு

முமையுந் திருமுலைப்பா லூட்டிக் கொடுபோஞ்
சமைபத்தி லங்கே தவஞ்செய் - * யமைநிகர்தோட்

சத்தரிஷி மாதாரான் றட்பணிந்து தங்களுக்குப்
புத்தியென்ன வென்று புகன்றார்க - ளத்தரும்பார்த்

திந்தக் குழந்தையைக்கே ளென்ன வவர்கேட்கச்
சிந்தை மகிழ்மதலை செப்புமன்று - முந்துலகிற்

கார்த்திகைநட் சத்ரங் கருதுவோர் தங்கள்வினை
மாற்றியவர் கேட்ட வரங்கொடுப்பேன் - கார்த்திகைநட்

க்ஷேத்ரப் பதவியிலே செல்லுவீ ரென்றுதுய
ராற்றிமட வாரை யநுப்புவித்துச் - சூத்திரங்கள்

செப்தசுவா காடனக்குஞ் சேவித்தோர் தங்களுக்கு
மெய்யிலங்கு பீடையொடு விக்கினங்க - ளெய்துகின்ற

---

*அமை - மூங்கில்.

போதிவையெல் லாந்தீர்ந்து போகச் சுவாகாவென்
றோதவுட னேபயங்கொண் டோடுமே - யாதலினு
லிந்தப் பெருமை யுமக்கென் றவர்சொல்லச்
சிந்தை மகிழ்ந்து சிவனுமையும் - பிந்தா
திடுக்கி யிருகரத்தா லேந்தியுமை யாள்பாற்
கொடுக்க வளர்ந்தகும ரேசா - மடுக்கரையில்
வண்டாடும் பூங்கமல மாதுவிளை யாடிவளர்
குன்றக் குடியிற் குமரேசா - சென்றன்று
வீறு மசுரர்குலம் வேரறுத்துச் சூரனுடல்
கூறுப் பிளந்த குமரேசா - தாரணியி
லற்றவர்க்குத் தாரகமா யண்டர்க ளுட்டுக்குக்
கொற்றவனாய் வந்த குமரேசா - வுற்றசுட
ரம்பனைய கண்ணுடைய் வானைகுற வள்ளியிரு
கொம்பனையர்க் கேற்ற குமரேசா - நம்புதலாய்த்
தேடுமடி யார்தமது சிந்தைதனி லேயிருந்து
கூடிவிளை யாடுங் குமரேசா - * தாடாண்மை
யன்றசுரர் நெஞ்ச மதிர்கனக வேல்வாங்கிக்
குன்றுருவ வெய்த குமரேசா - மன்று
ளலத்தையறி யாச்சமணர் நாலா யிரரைக்
கொலைக்கழுவி விட்டகும ரேசா - பலத்தெழுந்து
நீலநிறச் சேவறன்னை நித்தங்கை யிற்பிடித்துக்
கோலமயி லேறுங் குமரேசா - சால
மிடிதீர்த் தமரர்தமை மிக்கதெய்வ லோகங்
குடியேற்றி வைத்தகும ரேசா - படிபுகழுஞ்

* தாடாண்மை - முயற்சி.

சந்திர சேகரர்க்குந் தையல் சௌந்தரிக்கும்
சிந்தைகளி கூரவந்த சேயனே - * யந்தமுயர்

மான்மருகா கங்கை மகனேவேண் மைத்துனனே
வேன்முருகா யாவருக்கு மெய்ப்பொருளே - கான்சே

ரொருமான் மகடனுட னுற்றதெய்வ மங்கை
யிருமாத ருக்கு மிறைவா - கருணைதரு

மும்மூர்த் திகடமக்கு மூர்த்தியே நால்வேதச்
சிம்மா தனத்திருக்குந் தேவனே - செம்மைமிகு

மஞ்சு முகனுதவு மாறுமுக னேயேழு
மஞ்சுலவு மங்கை மலையோனே - ரஞ்சிதமா

யெட்டானைக் கொம்பைநெஞ்சி லேற்றிரத்னப் பந்திகளைத்
திட்டமுட னேயழுத்துஞ் சேவகத்திற் - கெட்டியெனும்

பத்துமுடி ராவணனைப் பட்டுருவ வாளிதொட்ட
கத்திரிகை யோன்மருகா காவலனே - யுற்றுநினை

தன்னந் தனித்தவர்க்குஞ் சாலப் பசித்தவர்க்கு
மன்னங் கொடுத்தா தரிப்பவனே - யிந்நிலத்திற்

கார்த்திகைநட் சத்ரங் கருதுவோர் சஞ்சலத்தைத்
தீர்த்துப் பலன்பெருகச் செய்பவனே - சாற்றரிய

சட்டி விரதந் தனையநுட்டிப் போர்கடமை
மட்டில்லாப் பாக்கியத்தில் வைப்பவனே - திட்டமுடன்

சோமவா ரத்தைத் துதிப்போர்க டம்மனதி
னேமமத னைக்கொடுக்கு நேயனே - பூமிபுகழ்

வெள்ளிக் கிழமை விரதமுற்ற பத்தர்கட
முள்ளத்தி லேயிருக்கு முத்தமனே - துள்ளுந்

* அந்தம் - அழகு.

தந்தி முகம்பண்டைத்துச் சப்பாணி யாயிருக்குந்
தொந்திவயிற் றோனுக்குச் * சோதரா - சந்ததமுஞ்

சித்தச னார்க்குந் திசைமுகனுக் குஞ்சிறந்த
மைத்துனனா வந்தமயில் வாகனா - வெத்திசைக்கும்

வீறு திருச்செந்தூர் மிக்கபரங் குன்றமுத
லாறுபடை வீட்டுக் கதிகாரா - நீறணியு

மக்கினிக்கண் ணான்கைலை யம்பதியா மீசனருள்
கைக்கனிக்குச் சுற்றிவருங் காங்கேயா - திக்கடவி

மானுக்கும் பூமிமட மானுக்குஞ் சீதையெனு
மானுக்கு மிக்க மருகனென்றே - மீனமதித்

தேரடியி னின்றிதெல்லாஞ் செப்பினேன் கேட்டுவெற்றிக்
கூரியவேற் கையார் குமரேசன் - பார

விடும்பேச னைக்கூவி யிப்பொழுதே சென்றங்
கடிவாரத் தேயொருவ னாரோ - திடமாகப்

பன்னுதமிழ் நம்மேற் பகர்கின்றா னீவிரைந்தே
யன்னவனை யிங்கே யழையெனவே - சொன்னவுடன்

றுக்கிடும்பன் வந்துன்னைச் சண்முகவ ருத்தாரம்
வாக்குரைத்தார் நீயுமின்று வாவெனவே - பாக்யமெனச்

சென்றே னவர்பாற் சிகண்டிமலை யாதிபனைக்
கண்டேன் மனது களிகூர்ந்தேன் - கொண்டாடித்

தோத்திரங்கள் செய்தேன் சுகந்தங்கள் வீசுதிருக்
காத்திரத்தைக் கண்டேன் கருணையுடன் - போற்றரிய

செந்தா மரைத்தடமுந் திவ்யகரம் பன்னிரண்டும்
சந்த்ரோ தயம்போலச் சண்முகமும் - விந்தைபெறுஞ்

* சோதரன் = சகோதரன்.

சேவற் கொடியுஞ் சிறந்தமயில் வாகனமு
மூவர்மன மெச்சு முனைவேலுந் - தேவர்மட

மாதுவள்ளி யம்மை மகிழ வினிதிருக்குங்
கோதறுதேன் வாயான் குமரனையென் - றீதறவே

கண்டேன் மனத்திற் கவலை வறுமையெல்லாம்
விண்டே னெனதுடலம் விம்மினே - னண்டர்பணி

கந்தா கடம்பா கதிர்வேலா கங்கைபெற்ற
மைந்தா மயூர கிரிவாசா - நந்தாக்

கருணைக் கடலே கனிந்துருகிப் பாடு
மருணகிரி நாதர்க் கருள்வோய் - திருவிருக்கும்

பூங்கொடியாள் வள்ளி புனத்துக் கொருநிழலாய்
வேங்கைமர மாகிநின்ற வேலோனே - பூங்கமலத்

தண்ணலை வன்சிறைக்குள் ளாக்கிவைத்தாய் சூரைவென்று
விண்ணவர்க்கு மிக்கசிறை மீட்டுவந்தா - யண்ணலுக்கு

நன்னயமா கச்செவியி னற்பிரண வப்பொருளைச்
சொன்னவனே சூழுஞ் சுடரொளியே - என்னையின்று

காப்பாற்ற வேண்டுமென்றேன் கந்தர்திரு வாய்மலர்ந்து
வாய்ப்பா யுரைத்ததமிழ் வாணனே - தாப்பாயுன்

னூரையுமுன் றந்தை யுயர்பே ரையுமுன்றன்
பேரையுஞ்சொல் லென்றார் பிரியமுடன் - சீர்பெறவே

விற்பனஞ் சேருணை வீரபண்டா ரத்தின்மகன்
சுப்பிர மணியனென்று சொன்னேனு - னப்போதி

லிந்தநகர்க் குன்னூ ரிரைங்கா தங்கடந்து
வந்ததென்ன வென்று வழுத்தினார் - சந்ததமும்

போகா வறுமை புலிபோல வென்னுயிரும்
பாகாருந் தன்மைப் பசுபோல - வேகமுறும்

துன்பக் கருடனுடன் ரூபாவ மென்னுயிரு
மின்பமனு வத்தனையு மில்லாமன் - முன்புகண்ட

நச்சரவைப் பாய்ந்து நடனமிடுந் தோகைமயில்
பச்சோந்திக் கஞ்சும் பழைமையைப்போன் - மெச்சுசெல்வ

மில்லா வறுமையினு லில்லாண்முன் வாய்பேசச்
செல்லாம னெஞ்சந் தியங்கியே - நல்லோர்கள்

கூடுசபைக் கேகமனங் கூடாம லேவிரைந்தே
யோடி யொளித்தே னுறுகணுல் - வாடுவதால்

நாடுதொறுஞ் சென்று நடந்தலுத்துப் பேர்கேட்டு
மூடர்களைப் பொல்லாத மூர்க்கர்களைப் - பாடுதமிழ்க்

கீயாரைச் சார்ந்தோர்க் கிடுக்கண்செய் வோரைமிகத்
தீயாரை மாறுச் சினத்தோரைப் - பேயான

சண்டாள ரைப்புரட்டுச் சல்லியரை யேழைமுகங்
கண்டிரங்கா லுத்தக் கயவர்களைக் - கொண்டாடிக்

காமனென்றுஞ் சோமனென்றுங் காண்டிபனென் றும்பலத் [தில்
வீமனென்று மிக்க விதுரனென்றும் - பூமிபுகழ்

தென்னனென்று மிக்க திருமாலென் றுங்கொடைக்குக்
கன்னனென்றுஞ் செல்வக் கனகனென்று - நன்னயஞ்சேர்

மேருவென்றுங் கொண்டலென்றும் வேண்டியதெல் லாங்கொ [டுக்குந்
தாருவென்றும் பாடிச் சலித்தலுத்துச் - சீருயர்ந்த

மஞ்சரியு மோர்பணமாய் வண்ணமுக் காற்பணமா
யஞ்சுபதம் பாடி யரைப்பணமாய் - மிஞ்சியகூத்

தாட்டுக் கிசைநா டகத்துறைக் கோர்பழைய
வேட்டியாய்ப் பத்து விருத்தமுடன் - சீட்டுக்

கவிக்கோவோர் நாள்வயிற் றுக் கஞ்சிபாய் வெண்பா
செவிக்கினிய முத்தமிழுஞ் சேரப் - புவிக்குளொரு

பாக்குக்கும் வெற்றிலைக்கும் பாவிகளைச் சொற்புகலச்
சாக்குக்கும் பாடிச் சலிப்பாகி - நாக்குலர்ந்து

எடும்புண் ணாகி யெழுத்தாணி யுந்தேய்ந்து
பாடு மனமும் பரதவித்தே - யேடெழுதிச்

சுண்டுவிர லுங்காய்த்துத் தொண்டைகம்மல் பாடியதாற்
கண்டதல்லா லோர்பலனுங் கண்டிலேன் - வண்டரவர்

செப்புமுலை வேசையர்க்குந் தீக்குந் திருடருக்குந்
தப்புமுன்னே கட்டித் தலைக்கீழாய் - மெய்ப்பூஞ்ச

லாட்டுவார்க் குஞ்சவுக்கோ டைந்து மணிக்கயிற்றின்
மூட்டுவார்க் குங்கொடுப்பர் மூடரவர் - பாட்டினர்க்குச்

செய்யா ரினியிவர்பாற் செல்வதினிற் சாரமில்லை
யையா வெனைநீநன் காதரித்துத் - தொய்யாமற்

காவென்றே னப்பொழுது கந்தர்திரு வாய்மலர்ந்து
வாவென்றென் னோடு வசனிப்பார் - மேவியநீ

யென்பாலுன் பாட்டை யியம்பினுப் வண்புலவா
வுன்பாலென் பாட்டை யுரைக்கக்கே - ணம்பாவென்

றந்தையுமோர் பெண்ணைச் சடையில்வைத்தா ரச்சடையி
லந்தமிலா வூமத் திலையணிந்தார் - முந்த

விடுகாட் டெலும்பை யெடுத்தணிந்தா ரன்றிக்
கடுவா யரவுகழுத் திட்டார் - திடமொடுறுந்

தொண்டர்தமை யுண்டார் சூழ்ந்தகட னஞ்சையுண்டார்
கண்டிருந்தும் பிள்ளைக் கறியுண்டார் - கொண்டாடிச்

சீர்வேட னெச்சிலுண்டார் தின்றதெல்லாம் பற்றும
லீரே ழுலகு மிரந்துண்டார் - பாரறியப்

பிட்டுக்கு மண்சுமந்தார் பின்னே விறகுவிற்றார்
மட்டுக் கடங்கா வளையல்விற்றார் - திட்டமுடன்

வில்லடியும் பட்டார் விசையனங்கை யாலொருவன்
கல்லடியும் பட்டெம்பு * கண்ணினார் - நன்மதுரை

† மாறன் பிரம்படியும் வாங்கினார் பாறனக்காய்
வீறிடையன் கையரிவாள் வெட்டுண்டார் - கூறிய

சூலாயு தம்படைத்தார் தொல்வேடன் றன்செருப்புக்
காலா லுதைக்கக் கனிந்திருந்தார் - சீலமுடன்

மாடெடுக்கப் பெற்றார் மருட்கொண்டார் தில்லைதனி
லாடெடுத்தா ரென்றுபெய ராயினார் - தாடாண்மை

யும்பர்தொழுங் குற்றாலத் தூரி லுபர்ந்திருக்குங்
கும்பமுனி கையாற் குறுகினார் - செம்பதும

வேதன் சிரசிலொன்றை வெட்டினார் மன்மதனைப்
பாதாதி கேசமெல்லாம் பார்த்தெரித்தார் - சூதாய்த்தேர்

வண்டிக்கா லிற்சோமன் மைந்தனையும் போட்டரைத்தார்
சண்டனெனு மேமன் றனைவதைத்தார் - சென்றெதிராய்

முப்புரத்தை வென்றகதை மூவுலகி லுள்ளவர்கள்
செப்புகின்றார் கேட்டாற் சிரிப்பாமே - யிப்படியென்

றந்தை பிரபலங்க ளாயார் வளப்பமதை
யுன்றனுக்குச் சற்றே யுரைக்கக்கேள் - பிந்தாம

* கண்ணல் - கன்றல். † மாறன் - பாண்டியன்.

லம்பலத்தி லாடினு ளம்புவிக்குந் தாயானுள்
கம்பநதி யிற்றவசு கைக்கொண்டாள் - கும்ப

முலேகளுமூன் றுனுண் முனைப்புலித்தோல் போர்த்தாண்
மலேயரைய னுக்குமக ளானுள் - பலவலேஞர்

சாதியிற்சேர்ந் தாள்சத்தி தானென்று ளம்மலேமேற்
றீதறவே வீற்றிருக்குந் தேவியந்த - மோது

முருமாறி யேகுறத்திக் கொப்பாகச் சென்று
கருமாறி யேகைக் கொடுத்தாள் - பரிவாசச்

செல்லாயி ரங்கோடிச் சீவர்க் கிருநாழி
நெல்லாற் படியளந்த நீலியென்பர் - சொல்லுவதென்

றந்தைபட்ட பாடனைத்துந் தாயார்க்குண் டேபுலவா
வென்றமையன் செய்தி யியம்பக்கேண் - முந்தவனை

தந்தைக்கு முன்பிறந்தார் தந்திமுக மாயினர்
விந்தைப் பெருச்சாளி மேற்கொண்டார் - முந்த

வாதக்கா லானுர் வயிறுபெரி தானுர்
பாதைகுளம் வீதி பலவிடங்கண் - மீதிருந்தே

யன்னையைப்போற் பெண்டேடி யாயாச மாய்மனதி
லுன்னி மரத் * தூரி லுட்கார்ந்தார் - பின்னையென்றன்

மாமன்வா லாற்றை வழுத்தக்கே ளுந்திதனிற்
† பூமனையும் பெற்றார் புவிபுரக்க - நேமி

பதித்தார் துளசி தனையணிந்தார் பாம்பை
மிதித்தார்பா லாழிமேன் மெள்ளக் - குதித்தோ

ராலிலேயின் மேற்றுயின் றுவையுமே யோட்டிவருங்
கோலிலேயும் பள்ளிகொண்டார் கூசாமற் - சால

---

* தூர் - அடி. † பூமன் - பிரமன்.

மனையாளை நெஞ்சில்வைத்தார் மாமோ கினியா
யெனையீன் றவரோ டிணங்கிக் - கனமாய்

அரியா புத்ரனென்றே யாண்பிள்ளை பெற்றார்
தெரியாத பேர்களுண்டோ செப்பும் - பெரியதொரு

ஆடகனைக் கொன்றங் கவன்குடலை மாலையிட்டுக்
கூடிருக்க ரத்தங் குடித்துவிட்டார் - கோடியெனு

மாய்ச்சிமுலைப் பாலையுண்டா ராவலடங் காமற்
பேய்ச்சிமுலைப் பாலும் பிடித்துண்டா - ராய்ச்சியர்கள்

பாடிதனி லுள்ளோர் பாற்பொங்க விட்டதெல்லாங்
கூடியுண்டார் பாற்றயிருங் கொள்ளையுண்டார் - நாடரிய

மண்ணையுண்டார் பாடி மடவா ரறியாமற்
கண்மருட்டி யாடை களவாண்டார் - வண்மைக்

குருந்தேறிக் கொண்டார் குதிரைகிடை யாமற்
பருந்தேறிக் கொண்டார் பகட்டாய் - வருந்தாமல்

காய்ச்சியபா றன்னைக் களவாண்டு தம்முடைய
வாய்ச்சிகையாற் கட்டுண் டடியுண்டார் - கூச்சமின்றி

யாடவராய் மிக்கபதி னாறு யிரமாதர்க்
கூடியே மிக்க களிகூர்ந்தார் - மோடிசெய்து

மாமனையுங் கொன்றுவிட்டார் வஞ்சகமா யண்ணனையும்
பூமிப்பிர தக்ஷணமாய்ப் போகவிட்டார் - நேமி

பானு தனைமறைத்தார் பார்த்தனுக்குத் தேரோட்டிக்
கானிலுறை யைவரையுங் காத்திருந்தார் - மேன்மையுடன்

சொல்லவொணா வஞ்சத் துரியோத னாதிகளைக்
கொல்ல வகைவிவரங் கூறினார் - சொல்லுவதென்

பாரினி லேபுரட்டுப் பண்ணியநிஷ் டூரமெல்லாம்
யாருமறி வார்களது வல்லாமற் - சீர்கிழவிக்
கூனு நிமிரக் குறித்தெய்தார் மாரீசன்
பாணையெய்தார் தென்னிலங்கை வாழரக்கன் - சானகியைக்
கொண்டேக மிக்கசிறைக் கோலமுற்ற பெண்ணைநத்திச்
சென்றழைத்துக் கொண்டுவகை தீராதே - வண்டரன்று
நாட்டிவருக் கோட்டாம னற்சிறுதா யார்வனத்தி
லோட்டிவிட்டார் கண்முன் றுலகறியப் * பூட்டகமா
வஞ்சகப்போ ராய்மறைந்து வாலியைக்கொன் றார்காட்டிற்
றஞ்சமற்ற பெண்பிள்ளைச் சங்கரித்தார் - ரஞ்சிதமாய்க்
கல்லைப்பெண் ணாக்கிவிட்டார் காலாந் திரன்செய்தி
சொல்லத் தொலையாதே சொற்புலவா - நல்லதினி
பென்றனியற் செய்தி யிபம்பக்கேள் யாவருக்குங்
கந்தனென்று போரானேன் கள்வரைப்போன் - முந்தமுந்தக்
கோழி பிடித்தேன் குறத்திதனை மாலையிட்டேன்
பேழை வயிற்றனுக்குப் பின்னானே - னீள்கூந்தல்
வேடிச்சிக் காய்வனத்தில் வேங்கைமர மாகிமயல்
வாடிக்கை மாதருக்கு மாலானே - னூடறியத்
தந்தைக் குபதேசஞ் சாற்றினே னப்பனுக்கு
விந்தைக் குருக்களென்றார் மேதினியோர் - தந்தைவெகுண்
டானாலும் பிள்ளை யதிகப்ர சங்கியென்று
மீனாக்கி யேகடலில் விட்டுவிட்டார் - நானிலத்திற்
றேர்பிறவி யானேன் சிவிகைதனி லேறுவர்முன்
கூர்மயின் மீதேறிக் கொண்டிருந்தேன் - சாரமாய்

---

* பூட்டகம் - இளப்பமானவேலை.

வெண்ணீ றணிந்தேன் மிருகடப்பந் தாரணிந்தேன்
கண்ணீரா ருனேன் கருணையுடன் - பண்ணுகவிக்

காம்புலவா கேட்டிலையோ வாண்டி தனையடித்தாற்
சாம்பர் பறக்குமென்பார் தாரணியின் - மாம்பழத்துக்

காகவே நான்கையிலை யம்பதியைச் சுற்றுமுன்னே
தாகத்தா லென்றமையன் றந்தைதனை - வேகமாய்ச்

சுற்றி யடிபணிந்து சூதக் கனியதனைப்
பற்றிக்கொண் டார்நான் பதறியே - மெத்த

வருகோபத் தாலே மாதாபி தாவைவிட்டுத்
திருவாவி னன்குடியிற் சென்றேன் - பரிவாக

வன்னைவந்தா ளென்னை யழைத்தா ளொருதரமே
மென்னபிள்ளாய் செய்த குறையென்ன - முன்னஞ்

சகிப்பா ரிலையா தமையன் புசித்தாற்
பகைப்பாரோ மாம்பழமோ பாரந் - தெகிட்டாப்

பழநீ யெனவே பகர்ந்தா ளதனாற்
பழநியென்றும் பேரானேன் பண்பாய் - விழவார்

மலைவா யலைவாயில் வாழ்க்கையுற்றேன் பின்னுஞ்
சொலல்வேண்டு மென்றுற் றுலையா - நிலையிருப்பு

வேலொழிய வென்கையில் வேறுபொரு ளுண்டானாற்
சாலவுரைப் பாய்நான் றருகிறேன் - ஞாலமிசை

பங்கமில்லை நாங்கள்பட்ட பாடெல்லா முன்னிடத்தில்
சங்கதியாய்ச் சொன்னேன் றமிழ்ப்புலவா - வெங்கள்பிழைப்

பிப்படியெல் லாமிருக்க வென்பாலி லுன்றுயர
மெப்படிச்சொல் வாயென் றியம்பினா - ரப்போ

தூன்மத் தளத்திடைப்போ யுற்றதுயர் சொன்ன
வருமைக் கிணையென் றதிசயித்துக் - கருணையுடன்

தாமரைசூழ் வாவி தனிற்போன வண்டுகெஞ்ச
மாமதுவைத் தானுமுண்ணு மற்போமோ - கேமியினுன்

மாலுக்கா கப்பயந்து வந்துதஞ்ச மென்றுசொல்லச்
சீலக் குருச்சேத் திரன்றனக்காய் - ஞாலமிசைத்

தாராரு நீள்விசயன் றுமோ தானுடனே
போராடிக் காத்ததுவும் பொய்யலவே - சீர்முனியைக்

காக்கும் வகைக்கானுர் காலன் றனையுதைத்து
மார்க்கண் டனைக்காத்த வாறுபோற் - றீர்க்கமுட

னென்னை யடர்கலிக ளெல்லாந்தீர்த் துப்பவிஷூ
தன்னைக் கொடுப்பாய் தயாபரா - வன்னதெய்வம்

நீயே யெனக்கல்லா னீடுகதி யில்லையென்றேன்
மாயோன் மருகன் மனமகிழ்ந்து - நேயமுடன்

தன்மைய தாமோ தமக்குவந்த கார்யமதிற்
பின்னுக்கு வாங்குவரோ பேருலகி - னன்னயமாய்

மிக்கசன மாய்த்தனது வீட்டில் விருந்துவந்தாற்
பக்கத்திற் றள்ளுவதும் பண்பலவே - யக்கதைபோ

னம்மா லழைத்தகவி நாவலா வுன்னைநான்
சும்மா விடாமலொன்று சொல்லக்கே - ணம்மடியார்

பார்த்திவர் காவிரிப்பூம் பட்டினத்தின் முன்வைசியர்
கோத்திரத்தின் மிக்க குபேரனைப்போல் - வீற்றிருக்கு

மந்நாளிற் பாண்டிநகர்க் கானகுடி வேண்டுமென்று
தென்னுடன் தேசிகர்பாற் சென்றுரைத்து - முன்னுனை

மெத்த வுபசாரம் வேண்டுவதெல் லாமுரைத்துச்
சித்தர் திரும்புதற்குச் செய்திசொல்லிச் - சத்தியமாய்த்

திங்கள்கதி ருள்ளமட்டுந் தேசிகரே யென்றூட்டி
யுங்கண் மாபிற் கொருகாலும் - பங்கம்

வராவொட்டே னென்று வலதுகை கைக்கொடுத்தே
யிரவி யொளிரதத்தி லேற்றிப் - பரிவாய்

வளமை யுடனழைக்க வந்தே நலமா
யிளைசைமா நைப்பதி யிருந்தார் - களிகூர்ந்தே

யஞ்செழுத்தை யுட்செபிப்போ ரல்லும் பகலுமெனை
நெஞ்சில்விட்டு நீங்காத நிண்ணயத்தார் - ரஞ்சிதமாய்த்

திருமாற் கடிமைசெய்வோர் தெய்வமெல்லா மொன்றென்
றுரிமையுடன் போற்றிவளர் வுற்றோ - ரிருநிதியம்

வேண்டினோ ருக்குதவி மிக்ககனத் தைப்பெற்றோர்
பாண்டிநா டாள்வோன் பதம்பணிவோர் - நீண்டபுகழ்த்

தேசா திபர்புகழுஞ் செய்ய திருப்புனவை
யாசா னழக ரடிபணிவோர் - நேசமுட

னன்னைதந்தை தெய்வமுத லாசானைப் போற்றுதலாய்
மன்னவரைக் கூட வணங்காதார் - முன்னுயர்ந்த

மேரு கிரியுரைத்தும் வேழந் தனைநிறுத்தும்
பேருலகின் மிக்கான பேரானோர் - யாரு

மதிசயிக்கக் காவேரி யாறுதனைப் பஞ்சுப்
பொதியா லடைத்தபுக ழாளர் - மதியாற்

கடலி லெறிந்தபொன்னைக் காசினியோர் தாமெச்
சிடவழைத்த வேலை சிங்க - நெடுங்கிணற்றில்

வீம்புக்குத் தம்வீட்டில் வெள்ளாட்டி பாற்சவடி
தாம்பிட்டு நீரிறைத்த தாஷ்டியர்க - டேம்பவே

கல்யாண வாயிலிலே காவணக்கா லுக்குயர்ந்த
நல்பவளக் காலதனை நாட்டினோர் - வல்லிரவில்

மற்கதவு வெள்ளிதனை வாங்கிவிட வக்கணமே
பொற்கதவு நாட்டிப் புகழ்படைத்தோ - ரிப்புவியில்

சீரகப்பூந் தாரணிந்தோர் சிங்கக் கொடிபடைத்தோர்
காரிணையாச் செம்பொன் கவிக்கீவோர் - பார்புகழுங்

கத்த னிளைசைக் கைலாய நாதரையும்
நித்தியகல் யாணியையு நெஞ்சில்வைப்போர் - நத்தினரை

யாட்கொண்ட நாதருட னுஞ்சிவபு ரத்தேவி
தாட்கமலம் போற்றிவளர் தாட்டிகர்கள் - வேட்காம்

வடிவாரும் பேட்டை வளரொளியோர் மிக்க
வடிவுடையா ளைப்பணியு மாண்பார் - படிபுகழுந்

தெள்ளு தமிழ்சேர் திருவேளூர்க் கற்பகமாம்
பிள்ளையா ரைப்பணியும் பேராள - ரள்ளிநிதி

செய்யு நியமச் செயங்கொண்ட சோழீசர்
தையல் சௌந்தரியைத் தாள்பணிவோர் - வையமகிழ்

பூவுடைய வூரிற் புகழ்தே சிகராடியோர்
யாவுடைய மாதி னடிபணிவோர் - தேவர்புகழ்

வேலி னம்பரின் மிருத்தகண் டீசரொடு
சாலவுங்கா மாட்சியிரு தாள்பணிவோர் - மேவிப்பை

தான்றோன்றி யீசரையுஞ் சங்கரியை யும்போற்று
* மான்மதஞ்சே ருந்துளவ மார்மார்பர் - தேன்சிறந்த

* மான்மதம் - கஸ்தூரி.

மாதைப் பதியில் வளருமைஞ்ஞாற் றீசர்மகிழ்
காதல் பெரியவளைக் கைதொழுவோர் - சாதகமாய்

ராசசிங்கம் வாழ்பூமி நாதர்சிவ காமியையும்
நேசமுடன் போற்றி நிறைந்திருப்போர் - வாசனையாய்

நானிலத்தோர் கொண்டாட நம்மிடத்தின் மிக்கவன்ன
தானமடங் கட்டிவைத்த * தாளாளர் - மேன்மைத்

திருவாவி னன்குடியிற் சென்றெதிர்த்த பேர்க்குத்
தருவாய்க் கொடுக்குமன்ன தான - ரிருநிதிய

நாடறியப் பூவுலகி னன்முந் திரிதேடிக்
கோடி யளிக்குங் கொடையாளர் - தேடிநிதி

மாயேஸ் வரர்பூசை மாரு தரிபூசை
சேயார்மும் மூர்த்தி பிரதிஷ்டை - மாயாத

ஆருணிகள் † கூபமிவை யுண்டுபண்ணி மிக்கதர்மந்
தாரணியிற் செய்திட்ட சற்புருஷர் - வாரஞ்

சிகரத்தி லேற்றிவைத்த தீபம்போ லேழு
நகரத்தார் யாரு நமதடியார் - மிகவவர்கள்

வீர ருனைக்காக்க வேண்டித் திருமுகமுந்
தாரே னவரிடத்திற் றான்சென்று - பூரணமாய்க்

கனகவணி கேசரிரு கையிற் றிருமுகத்தை
மனமகிழ வீவாய் வணிகேச - ரனைவர்களுங்

குன்றக் குடியிற் குமரர் திருமுகத்தைக்
கண்ட வுடனே களிகூர்ந்து - கொண்டாடி

யுன்னை யடர்கலிக ளோடக் கனகநிதி
தன்னைக் கொடுத்தா தரிப்பார்க - ளிந்நேரஞ்

---

* தாளாளர் - ஊக்கமுள்ளோர்; வைசியர். † கூபம் - கிணறு.

செல்லுவா யென்று திருமுகந்தந் தென்னை
யல்ல லறவிங் கனுப்பினார் - நல்லதென்றே

யிங்கிதமாய் மெய்கூர்ந் தினிதாய் நடந்துகொற்ற
மங்கலத்திற் சென்றேன் வணிகேசர் - சங்கதியாய்க்

கூடி யுலகாயி கோயிலுக்கு நேர்வடக்காய்
நாடி விடுதிக்கு ணன்னயமாய் - நீடிவளர்

மாவுக்கு மேற்காய் வணிகேச ரெல்லாருங்
காவணத்துக் குள்ளிருந்தார் கண்டேனான் - பூவணத்த

இந்திரனைப் போலிருந்த வேழுநக ராதிபர்க்குக்
கந்தர் திருமுகங்கை யிற்கொடுத்தே - னந்தமுடன்

வித்தாரக் கைவாங்கி வேலர் திருமுகத்தை
வைத்தார் சிரசில் வணிகேச - ருற்றுநான்

குன்றாக் குடியிற் குமரர்பா லென்றுயரை
விண்டதுவு மென்னிடத்தில் வேலவரும் - பண்பாய்ச்

சலிப்பை யுரைத்ததுவுஞ் சாகரந்தான் சுட்டாற்
கலக்கச் சலமுண்டோ கந்தா - நலத்துடனே

யென்கவலை தீரவகை யென்னவென்று கேட்டதுவும்
வன்மைக் குபேர வணிகருக்கா - யன்பாந்

திருமுகத்தைத் தந்ததுவுஞ் செப்பினே னப்போ
மருவுநிதி மிக்கவணி கேச - ரொருமையுடன்

வந்த திருமுகத்தை வாசித்தா ரப்போது
சிந்தைமகிழ்ந் தேயஞ்சல் செப்பினார் - கந்தமலர்

வேணு நிதியீந்தார் மிக்கவஸ்தி ரங்கொடுத்தார்
பூணுமெனத் தங்கநகை பூட்டினா - ரூணுறவா

புண்டிருக்க நெற்கொடுத்தா ரூரும் பலவாகக்
கண்டிருக்க மெத்தக் கனஞ்செய்தார் - கொண்டாடித்

திட்டமுடனேவணிகர் செய்புங்கல் யாணமதிற்
கட்டளையா யோர்பணமுங் கண்டெழுதிச் - சட்டமுடன்

சாதனமுந் தந்தார் சஞ்சலமெல் லாந்தீர்த்தார்
மாதனவா ளுகவென்னை வாழ்வித்தா - ராதலினாற்

றுங்கமலை யான்வாழி துய்யதமி ழோர்வாழி
யெங்கும் படியா ளிறைவாழி - மங்களமாய்

வாழுகும ரேசர் மகராசர் தென்னிலைசை
யேழுகக ரார்வாழி யே.

திருமுகவிலாசம் முற்றிற்று.

சிவமயம்.

தனிக் கவிகள்.

ஊனையூர்ப்பாரதியாரவர்கள் வினாவாக இயற்றியது.

நேரிசை வெண்பா.

ஓங்குபத்மா சூரனைக்கண் டோடியொளித் தார்விசையன்
வாங்குதனு வால்பூசை வாங்கினா—ரீங்கிருக்கும்
நன்னியமச் சோழீச னார்செயங்கொண் டாரென்று
லென்னசெயங் கொண்டா ரிவர்.

மேற்படி வினாவிற்குத்தரமாக
முத்தப்பசெட்டியாரவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

என்னசெயங் கொண்டா ரிவரென்றான் முப்புரத்தைச்
சொன்னமய மாச்சமைத்த சோழீசர்—பின்னுஞ்
சிரித்துச் செயங்கொண்டார் சித்தசனைக் கண்ணு
லெரித்துச் செயங்கொண்டா ரே.

ஜெயங்கொண்டார் சதகத்தின்

பாயிரகவி.

சுந்தரமுதலியார் சொல்லியது.

ஆசிரியவிருத்தம்.

திருமதுரைச் சீர்ப்பட் டினோயாற்றங் குடிச்செட்டி சீமானென்னு, முருமதன னழகப்ப னுதவியமுத் தையனெனு மொப்பில் சிங்க, மருமறைசாத் திரங்களா டாகமங்கள் புராணங்க ளனைத்துந் தேர்ந்து, பெருகுபழ மொழிநூறுங் கதைநூறுஞ் சதகமெனப் பேசிற் றமால்.

சிவமயம்.

ஜெயங்கொண்டார் சதகத்தின்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அச்சமில்லாத்	34
அடவிசென்று	21
அடவியில்வே	35
அண்ணலருள்	20
அத்தனீ	28
அரசன்மக	9
அரசிலையிற்	35
அரியோனைக்	4
அருமறை	3
அருமைசெறி	3
அறம்பெற்ற	19
அற்புதரா	13
அன்பான	15
ஆ	
ஆச்சரிய	21
ஆணவத்தக்	16
ஆருரெல்	29
ஆவலாய்ப்	13
ஆளைப்போல்	8
ஆறரிஷி	32
ஆற்றையணி	14
உ	
உச்சிதமாய்த்	28
உலகமெல்லா	24
உழுதிளையான்	4
உறுக்குதலு	10
உற்றசெங்நாப்	30
க	
கஞ்சனுக்குப்	17
கடலீன்ற	8
கடியவிடம்	18
கண்ணர்படை	13
கயிலைத்தா	16
கல்லான	10
கா	
காவலன்புட்	24
கு	
கும்பகர்ண	9
கூ	
கூச்சமற	26
கூறுமரு	23
கை	
கையினிற்பட்	27
கொ	
கொடியை	25
ச	
சலியாமற்	33
சா	
சாத்திரவே	14
சி	
சிந்தைமகிழ்	27
சிம்மாச	25
சிலைவேளை	2
சிவயோகர்	36
சீ	
சீர்பொருந்	1
சு	
சுற்றுமதிற்	8
சூ	
சூத்திரப்	31
செ	
செப்புமரிச்	18
செல்லோடை	6
த	
தஞ்சமெனச்	4

செய்யுள்.	பக்கம்.
தண்ணார்மீன்	24
தண்பரசு	30
தா	
தாப்பாய்வா	6
தி	
திறமுளசஞ்	19
தெ	
தெகிட்டாக்கா	33
தே	
தேன்மொழிச்	10
தொ	
தொடைக்	5
ந	
நகரமெல்	1
நங்கைகலை	6
நண்ணுகமை	11
நம்புகுரு	25
நயவேந்தன்	11
நல்வேட	3
நன்னிலத்தி	21
நி	
நிசகாளி	27
நித்தியசங்	32
நீ	
நீரொடுத்தோர்	26
ப	
பண்டகலி	7
பண்டுகிணற்	11
பண்டுருட்ட	12
பண்ணாருங்	7
பத்தருளத்	2
பா	
பார்த்தனுக்	31
பார்புகழும்	29
பானுகுல	5
பு	
புகழரிச்சந்	20
புள்ளாலே	7
பூ	
பூதலமும்	22
பூமிதனிற்	22
பெ	
பெண்ணிறக்கத்	22
பெண்ணைவாழ்க்	12
பெலமுற்ற	23
பே	
பேரிலுயர்	5
பொ	
பொன்னார்	31
ம	
மதிமெதுவா	32
மதுரைமன்ன	33
மன்னர்துரோ	15
மி	
மிகப்பெரிய	30
மு	
முனியகலி	17
முன்னொருசோ	12
மெ	
மெத்தநாள்	29
யா	
யாகத்தாற்	28
வ	
வணக்கமுடன்	18
வல்லவர	34
வளமையுள்ள	17
வள்ளல்கன்னன்	20
வனத்திறை	16
வா	
வாணிமா	34
வாய்ச்சுதெனத்	35
வாழிரவி	19
வி	
விதுரன்வின்	14
விருப்பமறை	26
விழியெதிர்	9
வே	
வேணியர	15
வேய்க்குமகன்	23

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்.

[82 பக்தர்களின் சரித்திரம்: உயர்ந்த கிலிட்டு பயிண்டு: விலை நூபா 3.]

இதிலடங்கிய பக்த சிரேஷ்டர்களின் பெயர் :

(1) புண்டலீகர், (2) ஜயதேவர், (3) துளசிதாசர், (4) நாமதேவர், (5) கபீர்தாசர், (6) ஞானதேவர், (7) கூர்மதாசர், (8) ராகாகும்பார், (9) கோராகும்பார், (10) பரிசாபாகவதர், (11) ஜகமித்திரர், (12) ஜோகபரமானந்தர், (13) நரஹரிபக்தர், (14) ஜனபாயி, (15) மச்சேந்திரநாதர், (16) கோபிசந்தராஜன், (17) சாங்கதேவர், (18) சோகாமேளர், (19) பத்மநாமவேதியர், (20) ரோகிதாஸர், (21) பிம்பாஜிபக்தர், (22) நரசிம்மமேதா, (23) இராமதாஸர், (24) பிரமசாரி, (25) சூரதாஸர், (26) சேனாபிகர், (27) சாத்வீகராஜன், (28) கருமாபாயி, (29) ஜயவந்தபக்தர், (30) சுரதாசர், (31) ரசிகமுராரிபக்தர், (32) மீராபாயி, (33) தாசிகான்ஹோ பாத்ரா, (34) தாமாஜிபண்டிதர், (35) மிருத்யுஞ்சயபக்தர், (36) பானுதாசர், (37) ஏகநாதசுவாமிகள், (38) மாண்கோஜிபோதலே, (39) பகிரம்பட்டர், (40) கணேசநாதர், (41) கேசவசுவாமி, (42) கோமாயியம்மாள், (43) லதீப்ஷாபக்தர், (44) சந்தோபாப்க்தர், (45) நீளோபாபக்தர், (46) உத்தவசித்சனர், (47) நாபாஜிபக்தர், (48) நானக்தாஸர், (49) பிரேமாபாயி, (50) சிளாபாயி, (51) சமர்த்தராமதாசசுவாமி, (52) மண்டலீகராஜன், (53) பிளாபாயி, (54) ராமாபாயி, (55) ராமராஜர், (56) ஒகருசாவ்கார், (57) ஹரிஅனந்தவைஷ்ணவர், (58) ராமசந்திரபட்டர், (59) சுஹக்ஷாபக்தர், (60) பன்னஹாசிரசபுத்திரர், (61) ஜயமல்லராஜர், (62) ஸ்ரீதரபண்டிதர், (63) ஹரிபாலதாசர், (64) ஜம்புதாசர், (65) தஜைசாடர், (66) சுகாநந்தர், (67) மாதவதாசர், (68) ஹரிவியாசர், (69) திரிபுரதாசர், (70) லாடேபாவா, (71) திரிலோசனதாஸர், (72) சஜ்ஜனகசாருகர், (73) அங்கதபூபதி, (74) குணவதிபாயி, (75) குபாராபாயி, (76) கிரிதரலால், (77) பலக்புகார், (78) ஷேக்பரீத்தாசர், (79) சக்குபாயி, (80) குபாகும்பார், (81) கமலாகரர், (82) துக்காராம் சுவாமிகள்.

மதவிருக்ஷம்.

உலகத்திலுள்ள பெரிய மதங்களின் சரித்திரமும் வரலாறும் ;
கிலிட்டு பயிண்டு: விலை நூபா 1—12—0.

திவ்விய தேசயாத்திரையின் சரித்திரம்.

[பரதகண்டத்தில் பிரதானமான பல திவ்ய ஸ்தலங்களின் மகிமையும் விசேஷங்களும், அந்த ஸ்தலங்களுக்கு இந்நூலின் ஆசிரியர் செய்த யாத்திரையின் வரலாறும்:] விலை ரூபா 2.

இதிலடங்கிய முக்கியமான ஸ்தலங்களின் பெயர்கள் :

பிரயாகை, நைமிசாரண்யம், காசி, கயா, பர்த்வான், சந்திரநகர், கல்கத்தா, பூரி ஜகந்நாத், சோடாநாக்பூர், டார்ஜிலிங், குர்ஷாங், நேப்பாளம், அயோத்தி, பைசாபாத், லக்ஷ்மணபுரி, நிம்சாரம், ஹரித்துவாரம், டேராடேன், மஸ்ஸூரி, ஹிமாசலம், கங்கோத்ரி, கேதார்நாதம், பதரிகாச்சிரமம், கயிலாசமலை, மானஸசரோவரம், கான்பூர், ஆக்ரா, குவாலியர், பரதப்பூர், ஆள்வார், வடமதுரை, கோகுலம், பிருந்தாவனம், கோவர்த்தனம், மல்லர்புரம், பலதேவம், பிரசன்னு, நந்தகமனம், டில்லி, லாகூர், அமிர்தசாரம், பானிப்பட்டு, தனேசுவர், சிம்ஹலம், அம்பாலா, காங்கிரா, இராவல்பிண்டி, புஷ்பபுரி, காஷ்மீரம், ஜயப்பூர், இராஜபுட்டானு, உஜ்ஜினி, இந்தூர், பஞ்சவடி, பம்பாய், பூனு, பண்டரிபுரம் முதலியன.

ஸ்ரீ பர்த்ருஹரி வைராக்கிய சதகம்.

விலை அணு 3.

இந்நூலாசிரியரும், பிரஹ்மநிஷ்டருமாகிய ஸ்ரீ பர்த்ருஹரி என்னும் மஹாநுபாவர் ஸ்ரீ சங்கரபூஜ்ய பகவத்பாதாசாரிய சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ கோவிந்த பகவத்பாதாசாரிய சுவாமிகளின் புத்திரர். இவர் வைராக்கியத்திலும் ஞானத்திலும் சிறந்தவர். இவர் நீதிசதகம், சிருங்காரசதகம், வைராக்கியசதகம், வியாகரண மஹாபாஷ்யகாரிகை முதலிய அநேக கிரந்தங்களை வடமொழியில் இயற்றியிருக்கின்றனர். இவற்றுள் வைராக்கியத்தையும் ஞானத்தையும் விசேஷமாகப் போதிக்கும் வைராக்கியசதகம் என்னும் இந்நூலைத் தமிழில் செய்யுள் வடிவமாக மொழிபெயர்த்து, அச் செய்யுளுக்கு உரையும், ஸ்ரீபர்த்ருஹரியின் சரித்திரமும் சேர்த்து அச்சிடலாயிற்று.

பழமொழி அகராதி.

இதில் தமிழ் நாடுகளில் வழங்கும் சுமார் 12,000 பழமொழிகள் அகராதி வரிசையாகத் திரட்டி அச்சிடப்பட்டுள்ளன: உயர்ந்த கிலிட்டு பயிண்டு: விலை ரூபா 2.

உ

சிவமயம்.

திருமூலர்மரபிலெழுந்தருளிய

கருணையாநந்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

குருநாதசதகம்.

சென்னை:

மதராவ்ஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

விலை அணா 1.

சிவமயம்.

குருநாதசதகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

வேதன் றிருமாலும் விண்ணோருங் காண்கில்குரு
நாதன் சதகம் நவிலவே - பாதநிழற்
றந்தானைச் சுந்தரப்பொற் றுளானைநம்போல
வந்தானை நெஞ்சேநீ வாழ்த்து. (௧)

குருவே துணையாகக் கூறினு ளுங்
குருவே துணையாகக் கூடுங் - குருவே
துணையா யிருந்தறிவிற் றன்னியெங்கும் நிற்பா
ரிணையார் நமக்குநெஞ்சே யீங்கு. (௨)

நூல்.

கலிவிருத்தம்.

உலகஞ்சுகஞ் சொருபஞ்சிவ முணர்கின்றிலே னேயண்டினே
இலகுஞ்சுட ருதயங்களி லிதயம்பதிந் திலையென்கொலோ [ன்
கலகஞ்சிறந் தொலிதங்கிடுங் கலைகண்டருங் கதிநம்பினேன்
குலகுஞ்சர னருள்தாதையாங் குருநாதனே குருநாதனே (௧

பூதாதிநா தமுநின்னதாம் * பூராயமாம் விழிபூத்தநின்
பாதாதிகேச முநிற்குணம் பகல்கோடியோ மதிகோடியோ
ஏதாதிகண் டறியத்தகே னெல்லாமுநின் னருளையனே
கோதாதிதீ தறவான்கடற் குருநாதனே குருநாதனே. (உ)

திருநா ...ளைப் திறமாகிளைப் திகழ்பானுமா மதியாகிளைய்
உருவாகிளை † யருவாகிளை யூனோடுயி ருறவாகிளைப்
மருவாகிளைப் மலராகிளைப் மனமாதியெண் வடிவாகிளைப்
குருவாகிளை யெனையாண்டவா குருநாதனே குருநாதனே (ங)

நின்றுப்பெருங் கண்ணனவன் நீயாகிளை ளைர்சொலாய்
கொன்றுப்பெரும் பாவங்களார் கொண்டாடினுங் குணபானுநீ
சென்றுப்பெருந் தீயிற்சிறு திவலைச்சலஞ் செப்பத்தருங்
குன்றுப்பெருஞ் செல்வத்துரைக் குருநாதனே குருநாதனே.

பிணக்கேடனை மலமாசனைப் பிணிமூப்பெனும் பிறவிக்குளே
கணக்கேடனை மூன்றற்றிடாக் ‡ கசுமாலனைக் கனபாவியைச்
சுணக்கேடனை யிச்சைக்குளே சுழல்மூடனைக் கெடு || பூடனைக்
குணக்கேடனை யாட்கொள்ளுவாய் குருநாதனே குருநாதனே.

திருவாழ்கவெண் டிசைவாழ்கமால் திசைமாமுகன் முதல்
வாழ்கவைத், தருவாழ்கவிந் திரன்வாழ்கநற் றவமாமுனி வரர்
வாழ்கவிண், ணுருவாழ்கமற் றவைவாழ்கவெண் ணுருவாழ்க
விச் சதகஞ்சொலக், குருவாழ்கநல் லடிவாழ்கநன் குருநாதனே
குருநாதனே. (சு)

மாதாபிதா குருதெய்வநீ மற்றொன்க் குற்றுருநீ
நாதாபிறப் பறநின்றநீ நாளுமிவை தானுகுநீ

---

* பூராயம் - விசித்திரம். † அரு - உருவமற்றது. ‡ கசுமாலன் - குற்றமுள்ளவன். || பூடன் - புல்லன்.

வேதாபிதா விண்ணோருநீ வெண்மைப்படி கழுமொத்தநீ
கோதாபுறர்க் குன்பாலுநீ குருநாதனே குருநாதனே. (எ)

மலமாயைகன் மழுமாயதின் மருவத்தகுங் குணபேதமு
நிலமாயைபொன் னுடன்மாதரை நினைவாருனை நினையாவணஞ்
சிலமாயையால் வரவிட்டநின் சிவமாயையை யறிவார்களார்
குலமாயையைத் தலை* நூறிடுங் குருநாதனே குருநாதனே. ()

ஆறாறுமென் னறியாமையா லறவாடினே னறியாய்கொலோ
போறாறுமின் னுடலைச்சதம் போலாய்நினைந் தொழியாதெனை
யூறாறுமென் னுயிராலுமுன் னுணர்வாலுனை யுணரத்தகாக்
கோறாறுமென் மறையோதுமே குருநாதனே குருநாதனே.

மிடியேனைவல் வினையாளனை மிகுமாயையி லழிபேயனை
விடியேனைவம் படும்வாயனை வீழுஞ்சடப் பவமாயனைத்
துடியேனைவந் தடிசாயனைத் துயரம்படுங் கடலோலனைக்
கொடியேனைவங் கணமாயனை குருநாதனே குருநாதனே.(௧0)

ஆணுமனின் னறிவாய்மன † மம்போருகத் திலைநீர்நிகர்
தோணுமனின் றயர்வெய்திடத் தோலின்றொழி லாறொடாறுங்
காணுமனின் னருள்வாரியைக் கருதித்திரிந் தறவாடுநாள்
கோணுமனின் னருள்தந்தவா குருநாதனே குருநாதனே. (௧௧)

நாறுனெனச் சொலிவீணிலே நடமாடுபாழ்ம் பிணமான
நான், வாறுனெனப் பொருள்சொல்லியோர் வார்த்தைக்குளே
வடிவொப்பிலா, தேறுனெனக் கருணாசந் தேங்கித்தெளிந்
திடுதேறலாங், கோறுனெனப் பணிகொண்டவா குருநாதனே
குருநாதனே. (௧௨)

---

* நூறிடும் - அழித்திடும். † அம்போருகம் ; தாமரை.

பொல்லாச்சனி வேட்கைக்குளே பொங்குஞ்சிறு வாழ்க்
கைக்குளே, நில்லாப்பனி சோகைக்குளே நிமிடங்கன வாக்
கைக்குளே, வில்லாத்தனி வானிற்குளே விளைவாய்வரு மையிற்
குளே, கொல்லாயினி மேலாகினுங் குருநாதனே குருநாதனே.

சொல்லற்கரி தொருமாயைநின் சொருபத்தினி லுளவாகினுல்
வெல்லத்தகும் பொருளுண்டரோ விளையாடினுய் வீடேறினுற்
புல்லற்கரி தாகாதெனப் புகலுஞ்சிலர் கதையாதல்போற்
கொல்லற்குளு சிகள்விற்குமோ குருநாதனே குருநாதனே. ()

வம்பிட்டவாய்ப் பறையோதுவார் வலதாகினே னெனமீறவே
கம்பிட்டநாய் கடிகோலல்போற் கடுகுஞ்சிலர் கரையேறிலார்
அம்பிட்டநின் னடிசாய்ந்தரோ வரனேயெனப் பலகாலமுங்
கும்பிட்டவர் கரையேறுவார் குருநாதனே குருநாதனே. (கரு)

துஞ்சுங்கணப் போதிங்ஙனந் துயிலுந்தனித் துடலானதிங்
கஞ்சுப்பிறித் தறிவாணிறைந் தயர்காலம்விண் டறியாமையா
னெஞ்சுந்தளர்ந் தலைமோதுமுன் னீநானிறந் தறிவாகநான்
கொஞ்சுந்திருத் தாளீகுவாய் குருநாதனே குருநாதனே. (கசு)

மதிக்காதறஞ் சுடுமூடரை மனக்காமியின் னுடற்கேடரைத்
துதிக்காவரந் தருமைபனே துணைக்காதர முனையல்லதார்
சதிக்காமனைப் படலஞ்செயச் சகிக்காதிக் கினிநாளுமே
கொதிக்காதவன் றனையிந்தவா குருநாதனே குருநாதனே. ()

தடுக்கின்றதா ரோர்க்கிவதைத் தானங்கதைப் பறிக்கின்றதார்
எடுக்கின்றதா ரெறிகின்றதா ரிவனுனவ னென்கின்றதார்
படுக்கின்றதா ரெழுகின்றதார் பார்த்தாலுனை யலதொன்றிலை
கொடுக்கின்றதார் கொடாரெங்ஙனங்குருநாதனே குருநாதனே.

முனிமாதவர் பலகோடிபேர் முடிராசர்கள் பலகோடிபேர்
நனிவானவர் பலகோடிபேர் நரர்காந்தருந் திரர்கோடிபேர்
கனிமாலயன் பலகோடிபேர் கமலாசனத் திருபாலினுங்
குனிவார்களுன் கழலியாவருங் குருநாதனே குருநாதனே. ()

திருமாமணித் தளங்களிற் றிகழ்*பீடிகை யறுகானடு, வொருமாமணிச் சுடராய்விரிந் தொருகோடிகோ டிகளொப்பிலா, தருமாமணிக் கதிர்குண்டல மசையாதிருந் தகிலேச ஞங், குருமாமணிக் குலதெய்வமே குருநாதனே குருநாதனே.

சிறுகும்பணி பசுவிந்திரன் சிலதும்பர்நா யகனென்கொலோ
மறுகும்பணிக் கொருகாமதேன் மலரைந்தருச் சனைபன்றியி
லிறுகும்பணிக் கெனனீநினை யெண்ணற்கருந் தருகாமதேன்
குறுகும்பணிக் கின்றேவலாங் குருநாதனே குருநாதனே. ()

தூலங்களைந் துணையண்டினோர் தொடரும்பவந் தலைகண்டபேர், சீலங்களைந் தலைவாயினிற்சிதறுந் துரும்பினர்சேர்கிலார், மூலங்களைந் தயன்மால்களும் முடியுந்தா மொவ்வாமைபாற், கோலங்களைந் தாருய்குவார் குருநாதனே குருநாதனே. (உஉ)

நீடிக்குனிந் துடலாடினு நிலநீள்வனந் தனிமேலாடினும்
பாடிக்குனிந் துறவாடினும் பலகாலுனைச் செல்காலமாய்
நாடிக்குனிந் திடுமூடர்க ணம்பார்களுன் செம்பாதமுங்
கூடிக்குனிந் துய்வார்களோ குருநாதனே குருநாதனே. (உ௩)

மெய்யாதியிற் றொடருந்தொழின் மெய்யென்பவர்க் குய்வென்கொலோ, பொய்யாதியிற் குள்ளஞ்சினேன் பொய்யன் றனைப் பொருளென்றெனை, வையாதியிற் றெழிலும்படி வானுடருமற்றோர்களுங், குய்யாதியிற் காலந்தளுங் குருநாதனே குருநாதனே. (உ௪)

---

* பீடிகை - ஆசனம்.

பையன்றனைப் பவமுங்கிடும் படிறன்றனைப் பலனுய்ந்திடா
தையன்றனைத் தொடரும்படிக் கடர்வாதனைக் கிடலாகுமோ
வெப்பன்றனை யினியாகிலும் வெளிவீடுறச் செய்மாதர்கார்
*குப்பந்தனை நினையாமலாள் குருநாதனே குருநாதனே. (உரு)

சாடிக்குமோர் தடிகாரனைச் சவமுந்திவந் தெதிராடுமோ
ஆடிக்குமோர் பாதந்தனி லத்தொத்தலாற் சுதிகூடுமோ [ல்
சோடிக்குமோர் சகடங்களுஞ் சுள்ளாணியின் றடையென்பரா
கூடிக்குமோர் குறிகாணுநீ குருநாதனே குருநாதனே. (உசு)

† சேடிக்குநின் சொருபத்தினிற் செல்லாவிடி லென்னுசுகந்
தேடிக்குநின் னருளல்லதேற் றேவாதிதே வருமெங்ஙன
மேடிக்குநின் னருள்வாதவூ ரெந்தைக்கும்வந் தனமாகினோர்
கோடிக்குநின் னரு‡டாரகங் குருநாதனே குருநாதனே. (உஎ)

நிமிருந்திசை பகிரண்டமு நிமிர்கின்றநின் சுடர்தங்கின
மமரும்படிக் கிருபைகூரையாவையாமெய்யா வருள்வெள்ளமே
ஞிமிறுந்திரண் டொருகோடிகள் ஞிம்மென்றுபா டொலிநே
ரிடக், குமுறும்பிர ணவரூபனே குருநாதனே குருநாதனே.()

நிலனன்றனல் வெளியன்றறி நினைவன்றசை விண்ணன்றடர், மலனன்றலர் மணனன்றயன் மதனன்றக மயனன்றறச், சிலனன்றருஞ் செயலன்றஃகுஞ் சிவமென்றுறுஞ் சிறிதென்றுமோர், குலனன்றரு மறைபேசுமென் குருநாதனே குருநாதனே. (உகூ)

ஆவென்றபர்க் குயிர்போகினு லலறிச்சில ரருகாகிநின், றோவென்றடித் தழுவாரையொத் தோடித்திரிந் திவன்பங்கினிற், சாவென்றதின் ஞளில்லையோ சதியாயெமன் கொடு

* குய்யம் - மர்மஸ்தானம். † சேடிக்கும் - அலங்கரிக்கும்.
‡ தாரகம் - ஆதாரம்.

போகினாற், கூவென்றழும் படிசெய்திடாக் குருநாதனே குரு
நாதனே. (௰)

* சரவற்குல † மசரங்களுஞ் சகலாகம மிதிகாசமு
நரவற்குல முதலாதியாய் நானாவிதப் பலசீவரும்
பரவற்குல மலதில்லையார் பாத்தாணிறை பரிபூரணக்
குரவற்குலக் குருராயனே குருநாதனே குருநாதனே. (௰௧)

மலைப்பாதகங் களின்மூழ்கியான் மனமாயையா வினை
மாய்வனோ, புலைப்பாதகங் களின்மூழ்கினாற் புவியாள்கட னாண
தல்லவெச், சிலைப்பாதகங் களின்வீழ்கினுஞ் சிவசற்குரு வெ
ளினீங்குமே, கொலைப்பாதகங் களைமாய்த்திடாக் குருநாதனே
குருநாதனே. (௰௨)

நிலமாதரும் விண்மாதரும் நினையண்டுமா முனிமாதரும்
பலமாதரும் பணிமாறிபே பலகால்வல மிடமாயினுஞ்
சிலமாதரும் பணிகொள்ளினுஞ் சிவமாயிருந் தசையாதநின்
குலமாதரும் பணிபாதனே குருநாதனே குருநாதனே. (௰௩)

என்போடுநீ குதிரந்தசை பெழுபத்திரா யிரமார் ‡ கசை,
நம்போடுசேர்த் துறநீள்பசை நவவாயில்தோன் மயிர்மேய்ந்
தசை, வம்போடுவா னலவித்திசை வளியூடுபோய் வருமா
மிசை, கும்போடுலைந் தலையாதுசெய் குருநாதனே குரு
நாதனே. (௰௪)

செம்பாகுவன் களிம்பல்லவே திருவெண்கலம் பல
தல்லவே, யிம்பாகுமன் றிடைநாடக மெம்போனுருக் கொண்
டிங்ஙனங், தெம்பாகுநின் னடிதொட்டிந்நாட் டேய்ந்தற்றி

* சரம் - அசையும் பொருள். † அசரம் - அசையாப் பொருள்.
‡ கசை - நரம்பு.

டாப் புளியென்னுமோர், கொம்பாகும்நின் னருளோங்குநாள் குருநாதனே குருநாதனே. (௩௫)

இலைவேல்விழி மடமாதரா ரிளமாமுலை யவைமாய்கை யிற், கலைவேன்மன நிலையாகிலென் கதிகாணிலென் கரையே றிலை, னுலைவேனையாள் வதுமெந்தநா ளுடன்மித்தையே லெவைசொந்தநாள், குலைவேன்றனக் கருள்கூரையா குரு நாதனே குருநாதனே. (௩௬)

அண்டத்தில்வா ழுயிரியாதினு மசைவித்தசித் தலர்பூவினுங்
கண்டத்தில்வா ழொலியாதினுங் கதிராதியா மொளியாதினும்
பிண்டத்தில்வா ழியல்பென்னநீ பிரியாவிதம் பலகோடியாய்
கொண்டத்திலங் குரையாடுவாய் குருநாதனே குருநாதனே.()

நாடானபா ருளநீளமு நராண்டமே முதலாளினு
மேடானவெண் கலைபாஷைசித் தெல்லாமுவந் தெமதூதர்கை
யாடானநல் லுபிர்விட்டுமே லாகந்தளர்ந் திடுபோதிலே
கோடானகோ டிகள்கற்றுமென் குருநாதனே குருநாதனே.()

ஆதாரமார் பொருளாருணை யல்லாதெவ ரெல்லாமுநின்
பாதாரவா ழிபைநம்பினோர் பரிசாலகத் தொழிலாளர்கள்
கேதாரமுங் கயிலாயமுங் கெடிநீள்சிவத் தலமியாதினுங்
* கோதாரநின் குறியென்பர்காண் குருநாதனே குருநாதனே.

மண்ணாகிநுப் நீர்வன்னிகான் மாவானமுந் தானாகினுய்
கண்ணாகிநுப் மனமாகினுய் கதறும்பல கதையாகினு
மெண்ணாகினு மெழுத்தாகினு மேகச்சிதா காசத்தினிற்
குண்ணாகினுய் கடலாகினுய் குருநாதனே குருநாதனே (௪0)

சீமைச்சிமிண் மயிர்மொய்த்திடுஞ் சலதாரையென் சிறு வாசல்புன், தூமைச்சல மொழுகித்தினந் தூலைபாமனு றிடு

* கோதார - சிறந்த பிரணவத்தை யுடையவனே.

மல்குலாந், தீமைக்குழிக் கிரையாய்விடிற் றின்னக்கரை யடையன்கொலோ, கூடைக்கட விழியாமலாள் குருநாதனே குருநாதனே. (சக)

நன்றைப்பிளந் தெறிவார்களார் நாடற்கருந் தீமைகுறித்
தின்றைக்குரா ரேக்கென்பரே லியார்கள்தே னீயொத்தவர்
பின்றைப்பிறப் பாளர்க்கிடம் பிறியாமல்வந் தெனையாண்டருள்
கொன்றைச்சடை முடிபெற்றனன் குருநாதனே குருநாதனே.

நன்றைப்பிளந் தெறிசூரனை நாடிப்பிளந் தெறிவேனிகர்
ஒன்றைப்பிளந் தெறிவாயதென் றேதப்பெறி னடர்காலனும்
இன்றைப்பிளந் தெறியத்தகா தென்னுளுமிங் கினிதாணவக்
குன்றைப்பிளந் தெறிவேலவர்க் குருநாதனே குருநாதனே.()

தூராத* பாண் குழிசாண் †வயின் துலையாமனன் றனை கொண்டுமே, தீராதவல் வினையாய்மனந் திகைப்பாகினேன் றிகைப்பூண்டிதோ, ஆராதவஞ் சகமாயையை யறமோதிடக் கிருபைபாரையா, கோராதமா மணிமாலையாங் குருநாதனே குருநாதனே. (சச)

ஊரேதினம் பேரேதின முறவேதினம் பகையேதினஞ்
சீரேதினஞ் செயலேதினஞ் சிந்தாகுல மெல்லாமிவை
பாரேதினம் விண்ணுதியாய்ப் பகர்போதினி லெல்லாமலங்
கூரேதினஞ் சொல்லாயெலாங் குருநாதனே குருநாதனே. ()

மெய்யன்பிலா தவர்பாலுநீ மெய்யன்பிலா தவனாகுவாய்
பொய்யன்பிலா தவர்பாலுநீ பொய்யன்பிலா தவனாகுவாய்
கையன்பிலா தவனாகுநின் கழனம்பினென் கைதாவையா
கொய்யன்பிலா மலமாசறக் குருநாதனே குருநாதனே. (சரு)

---

* பாண் - பாழ். † வயின் - வயிறு.

சத்தாதியிந் தியமைம்பொறிச் சடமாகுமிவ் வையைந்திவை
யித்தாதியோ டொத்தாடிநா னிசைதந்தியின் னிசையாகினாற்
சித்தாதியா யறியாமலிச் சீவாதியா லலைவென்கொலோ
கொத்தாதி..ய வருகாரணக் குருநாதனே குருநாதனே. ()

கல்லாதமா மடையன்றனைக் கசடன்றனைப் பொருளாகவே
சொல்லாதமா வசனஞ்சொலிச் சோராதறி வினிலாரவைத்
தில்லாதமா றுலகன்னிய மில்லாமன லின்பம்பெறக்
கொல்லாதமா விரதந்தருங் குருநாதனே குருநாதனே. (சஅ)

தீதற்றமா தவமாகுநின் றீவாந்தரக் கரைகாண்பதார்
வாதற்றமா விரதங்களாம் வந்துன்னடிக் கன்பாகுமார்
ஏதற்றமா வடிவஞ்சொலி லெங்குஞ்சுடர்ப் பொங்காகரங்
கோதற்றமா மணிமேகமே குருநாதனே குருநாதனே. (சகூ)

சித்தாலசைந் திவைகானலார் செகத்தாய்விரிந் திடலாகுமென்
றுத்தாலகன் கதைகற்றபே ருன்னாரிவை பொன்னாகினும்
பெத்தாலவர்க் கிடராகுமிப் பேராசையின் பிணியற்றவர்க்
குத்தாலநா யகதேவனெங் குருநாதனே குருநாதனே. (ரு0)

பண்டாய்மறை நான்குங்கலை பலகோடிசாத் திரம்பண்ணற, விண்டாய்குவா ரறிவாயிரார் வீவைக்குழன் றலைவாரையா, தொண்டாய்நினக் கடியானெனத் தொண்டாகநா டோறுமூழியங், கொண்டாய்ருகுந் தடிநீழலிற் குருநாதனே குருநாதனே. (ருக)

இன்பத்தினிற் றுன்பத்தினி லிசையற்றழுந் துடலத்தினிற்
சம்பத்தினி லென்பற்றினிற் சகப்பற்றினி லகப்பற்றினிற்
கம்பத்தினில் விம்பத்தினிற் கலக்கத்தினின் மயக்கத்தினிற்
கும்பத்தினிற் றம்பித்தியோ குருநாதனே குருநாதனே. ()

ஆடற்பதிக் காசாயவ ராருணைப்பதிக் கனலாயருள்
நாடற்பதிச் சந்தாய்த்திரு நாவற்பதிக் கமுதாய்மிளிர்ந்
தோடற்பதிக் காளத்திசூழ்ந் தோங்கும்பதிக் காசிக்குயர்
கூடற்பதிக் கதிபாதெய்வக் குருநாதனே குருநாதனே. (ருந)

ஏழாக்கினு மெட்டாக்கினு மெண்ணிக்கைபற் றொன்றாக்கினு
யூழாக்கினும் வினையாக்கினு மூணுமெனு முணர்வாக்கினும்
சூழாக்கினு மேகத்திலிச் சூதாகுமோ சொல்லப்பெறிற்
கூழாக்கினு மினியென்செய்வாய் குருநாதனே குருநாதனே().

ஆளாகுநின் னடியாரெலா மருகாகநா னறியாதவன்
வாளாகுமிங் குளவாய்மனம் வாடாவெனில் வருகாதெனிற்
றாளாகுநின் றேனூறலைத் தாராவிடிற் றாகங்கெடாக்
கோளாகுமிவ் வழிமாளுமோ குருநாதனே குருநாதனே. ()

செண்டாடுவா ரொழியாமனஞ் சேணூடறி வாய்நின்ற லார், உண்டாடுவார் சுவைகண்டதி லூடாடுவார் யோனிக் குளே, தொண்டாடுவார் துறைகாண்கிலர் தொழிலோய்விலா துயரத்தையே, கொண்டாடுவா ரலதில்லையாற் குருநாதனே குருநாதனே. (ருக)

மெய்யாதவன் போனின்னருண் மேலாயவ ரென்சொல் குவார், பொய்யாதவன் குருடன்கணிற் பொல்லாங்கினு லில் லாததாம், செய்யாதவன் னுளகாலமுஞ் சேரார்கதி சேராரவர், கொய்யாதவன் மலர்ப்பாதனே குருநாதனே குருநாதனே. ()

போட்டான்கணிற் குறியொன்றினுற் போனல்வரா வழி முத்தியைக், காட்டான்பணின் றிசைமாற்றினுற் கண்ணுபி ருந் தறியாமையான், மீட்டான்மணிப் பொன்னுதிபாய் மின் னார்முதற் றிரையூடுறக், கோட்டான்கணில் ரவிகாணுமோ குருநாதனே குருநாதனே. (ருஅ)

தீட்டாகிநன் றிவைமாய்கையைத் தின்னத்தினச் சுவை
போலுறுஞ், சூட்டாகினின் னருளுக்கிடர் சுட்டாதிருந் திடல்
காண்சுகம், பூட்டாகிமன் றிவையால்வரும் பூதங்களா வேசங்
கொளிற், கூட்டாகிநன் றிவையன்றுகாண் குருநாதனே குரு
நாதனே. (௫௯)

பெற்றுப்பிர மாண்டங்களும் பேருருனக் கியாதிங்ஙனம்
வித்தாய்விரிந் திடலியாதவை வினவிற்றனக் கபலம்படா
முத்தாய்விளங் கொளியாய்வளர் மூவாதிதே வர்கள்பூதமுங்
குத்தாய்விளைந் தலர்பூடணக் குருநாதனே குருநாதனே. (௬0)

விண்டார்கணைக் கெண்டைக்கிணை விழிமைக்கலந் தறியாமடர்
வண்டார்மலர்க் குழலென்பர்காண் வாயானல மயிலென்றிடார்
கண்டார்தசை தோலென்பெனக் காண்பார்கண்மற் றிலையாகை
கொண்டார்வினைக் கீடாமுடற் குருநாதனே குருநாதனே [யாற்

முத்தாய்வள ரொளியாயெழின் மூலாதிகா ரணமாய்முதற்
பூத்தாய்சா மசாங்களாம் புவனங்களிற் பிறனுண்ணிலோ
பாத்தாயிருந் தறிவானுமாய்ப் பாத்தானுநீ வேறுகுமோ
கோத்தாய்நிறைந் தெங்குநீயாய்க் குருநாதனே குருநாதனே.

சூலாசைகொண் மலடிக்குநேர் சுகபோகசொற் பனமா
மகன், மேலாசைகொண் டலையப்பெறின் மெய்யாகுமோ வது
போலுடற், றேலாசையான் மெலியாமனின் றேறுதற்றசிற்
பொருளுக்கனு, கூலாசைதந் தருள்செய்குவாய் குருநாதனே
குருநாதனே. (௬௨)

வீணாகமும் மலமாசுறில் வீணாகுநா ளவமாகிறைற்
பூணாகவந் தடுபாதிகள் பொன்னேயுரும் பொன்றுமவை
சேணாகநின் னிருபாதிகச் செயலிற்கலந் தணுகாவிடிற்
கோணாகமுஞ் சதிசெய்குநங் குருநாதனே குருநாதனே. ()

வேதாந்தசித் தாந்தத்தினில் வெளியாண்டசித் தாந்தத்தினில்
நாதாந்தசித் தாந்தத்தினி ளைந்தசித் தாந்தத்தினில்[லோ
ஏதாந்தசித் தாந்தத்தினி லெனையாண்டுவைத் திடுவாய்கொ
கோதாந்தசித் தாந்திப்பர குருநாதனே குருநாதனே. (௬௫)

மெய்வாய்கணிற் செவிநாசியின் மேவிச்சிறந் தறியாவெனி
லைவாய்வழிக் கிடமெங்ஙன மறிவாவென வறியார்களார் [தாற்
செய்வாய்செவிக் கையாதினுஞ் செய்வித்திடுஞ் செயனின்ன
கொய்வாய்சிர மீவாய்பினுங் குருநாதனே குருநாதனே. (௬௬)

வாதாட்டமண் பெண்பொன்னிவை வருமூவகைப் பொ
ருளாகுமிச், சூதாட்டநன் றிவைகாட்டிமேற் சுகரூபமாந் தனை
மாய்ப்பகென், ஏதாட்டநின் வினையாட்டெனி லென்னுசைவிஞ்
சிடிலங்கெனுங், கோதாட்டம்விண் டறிவாகவை குருநாதனே
குருநாதனே. (௬௭)

காற்றூடி கயிறுபோலவுங் கண்ணாடியி னிழல்போலவுஞ்
சேத்தாடியும் ரசம்போலவுஞ் சிறியோர்கள்பம் பாம்போலவும்
பாத்தாடினுன் றொழிலொப்பிடிற் பகல்ராவினு மிலையன்றியிற்
கூத்தாடியுன் றொழிலார்சொலுங் குருநாதனே குருநாதனே.

எட்டாதபே ரறிவானவ ரெல்லாமுமா யல்லாதபேர்
சுட்டாதசிற் சுகமானவர் சுரர்பூசிதர் தவமாதவர்
கிட்டாதநின் மலர்க்கானவர் கிடையாமன்மா சடைவேனையாள்
கொட்டாதசீர் முதலானவர்க் குருநாதனே குருநாதனே. ()

வாசப்புரந் தான்மான்முதல் வானாடரு மறியார்கணின்
னேசப்புரந் தனிலாருறும் நெட்டேரநெஞ் சறுசிற்சுகத்
தேசப்புரங் குடியேறவுந் தேகாதியற் றாசாள்கெனக்
* கோசப்புரங் களைவென்றருள் குருநாதனே குருநாதனே.()

---

* கோசம் - செல்வம்.

வெறும்பைத்தசை தூர்க்கந்தமாம் வெங்கும்பியை விழை
க்கந்தையை, பெறும்பைத்தனக் கீயைத்தனக் கென்றிங்கிறு
மாந்தூறிடு, நறும்பைத்தக ருடலைச்சதம் நம்பித்திரிந் திடு
மென்மனக், குறும்பைத்தவிர்த் திடமோதிடுங் குருநாதனே
குருநாதனே. (௭௧)

ஒன்றேபக னுருவேவசொலி னெப்பாருனக் கிப்பார்மிசை
நன்றேசெயின் றீதேசெயி னானேவதற் காளாகுவேன்
நன்றேயெனக் குயிராய்ப்பொரு ளாவிக்குள வாகுந்திருக்
குன்றேபரஞ் சுடரேயருட் குருநாதனே குருநாதனே. (௭௨)

துறையற்றநீள் பிறவிக்கடல் துலையாகுமித் துறைமீள
யான், உறையற்றகத் திலையொத்தன னெளிமங்கிடா தருள்
பெற்றையா, பொறையற்றநெஞ் சொடும்வாழ்கிலன் புகழுந்
திருவடியாகுநின், குறையற்றசெல் வமுமீகுவாய் குருநாதனே
குருநாதனே. (௭௩)

எறியற்றநீள் கடலொத்திடு மெனையற்றபாழ் வெளியிற்
குளே, வெறியற்றசிற் றெளியிற்குளே வேறற்றவைம் புலனைந்
துறும், பொறியற்றகண் ணுடையையநின் பொதுவிற்றனித்
தினிதாகநான், குறியற்றபோ தமுமீகுவாய் குருநாதனே குரு
நாதனே. (௭௪)

தேறுதபா ழொருகாலமும் தெளியாதுறுஞ் சிந்தைக்குணன்
மாறுதவாழ் வினையின்னதென் மதிக்காமனின் கதிக்காகிலே
ஆறுதநல் லமுதாய்வரு மானந்தமோ னெந்தமெக் [ன்
கூறுதபே ரானந்தமோ குருநாதனே குருநாதனே. (௭௫)

சிணமுஞ்செய லெனக்கொன்றிலன் சிவமன்றியிங் கன
மொன்றிலை, கணமும்பிறித் துயிருய்கிலேன் களைநின்களை
யிடையொன்றிரா, மணமுற்றிடு மலர்ப்பாதனே மனமாதியைத்

தொழினீதனே, குணமுங்குறி யறநின்றிடுங் குருநாதனே குருநாதனே. (எசு)

சிற்றேவலன் றுலகில்லையால் சீவாதிரூ பமுமெங்குறும்
எத்தேசகா லமுநின்கழற் கென்னுசைமற் றுன்னுதுணைப்
பெற்றேனன்றனை யறிவாகநான் பேசாதபூ சனைவந்தனங்
குற்றேவல்கொண் டருளையனே குருநாதனே குருநாதனே.()

தேடத்தகும் பொருளொன்றிலைத் தேவென்றுனைத் தொழுவேனலா, னுடத்தகும் பொருளொன்றிலை நாடுந்திரு வடிநீழலை, யோடத்தகும் பொருளொன்றிலை யோய்வற்றதா ரமுமாம்வழி, கூடத்தகும் பொருளொன்றிலை குருநாதனே குருநாதனே. (எஅ)

ஞாலாகலா நானுவிதா நாமாருபா ஞானுகரா
தூலாமலா சூராவிரா சூட்சாதிசூட் சுமகாரணா
லீலாவிலா சாபூரணா நீதாபரா போதாகரா
கோலாகலா * தேசோமபா குருநாதனே குருநாதனே. (எகு)

நெடும்பத்திசெய் திடன்முற்றினுன் னேசத்தினோர் நினை யற்றவர், கெடும்பத்திசெய் திடுவேன்றனைக் கேளாயெனி னுளாகிலேன், அடும்பத்திகண் டருள்சேரனு னுகாதெலா மாகாவிடுங், குடும்பத்தினி லினிமாய்த்திடாக் குருநாதனே குருநாதனே. (அo)

உச்சந்தனி லசைவற்றநின் னுதயச்சுட ரருள்வெற்பிண்ட
யச்சந்தவிர்ந் திடவந்திருந் தனுசூதமற் றிடுமென்றனு
டுச்சந்தனக் கயலற்றெழுந் துகளுற்றபொய்ப் போதத்திருட்
கொச்சந்தவிர்ந் தெரிபானெனுங் குருநாதனே குருநாதனே.

---

* தேசோமயம் - பேரொளி.

அடுத்தேனுனக் காளாகவே யல்லற்படுந் துயர்போக்கவே, கெடுத்தேனுனக் கல்லாதபேர் கேள்விக்குமுன் னுள்ளிட்டோர், விடுத்தேனுடல் பொருளாவியை வித்தாகுநின் கொத்தாகவே, கொடுத்தேனுனக் கெனைமுன்னமே குருநாதனே குருநாதனே. (அஉ)

பாராதியாய்த் திரைபூதமும் பகிரண்டமாய் வளர்காதமும்
தாராதிபுத் திரமித்திரர் தனமாதிதன் னுயிரேமுதற்
போராதியா கியபோகமும் பெண்மைப்பட மிகுதாகமுங்
கோராதிருந் தவர்முத்தராங் குருநாதனே குருநாதனே. ()

எட்டாதருங் கோடுடேதே னேறத்தகா முடவன்கையிற்
கிட்டாதவன் னிட்டப்படிக் கிடையாதனு னடைவென்கொலோ
கட்டாதருங் காலிக்கிணைக் கடிதாமனத் தலைநோய்படக்
குட்டாதடைத் திலையென்வசங் குருநாதனே குருநாதனே. ()

பாவிக்கிலிங் குனைபல்லதிற் பற்றற்றிடே னின்பத்திலார்
தாவிக்கனின் னடிதாவணந் தம்பித்தது வாய்நிற்பனியான்
ஆவிக்குநல் லுறவிங்ஙன மாரென்பதிங் கருளல்லதார்
கோவிக்கிலிங் கயல்போக்கிலன் குருநாதனே குருநாதனே. ()

துடிகொண்டவிப் பகிரண்டமுந் துருவாதியாம் பலபிண்டமுங்
கெடிகொண்டமா லயனண்டருங் கேடாய்விடுந் திசைகாலமும்
வடிகொண்டகா லனுமூழியும் வாவுஞ்செல விலைகண்டுளங்
குடிகொண்டசின் மயரூபனே குருநாதனே குருநாதனே. ()

கணமேனுமியா னினையேனுனைக் கல்லாதபுல் லறிவேனுமெய்
வணமேறிவந் துனையெய்துவென் வடவானிழல் வருதெய்வமே
மணமேதரும் மலரேமறை வடிவேயடி முடியற்றசற்
குணமேநிறை கடலேயருட் குருநாதனே குருநாதனே. (அஎ)

ஆட்டுக்குழா முடன்கூடியே யாடாய்மடங் கலும்வாடியே
காட்டுக்குள்வாழ்ந் தினந்தேடிலாக் கதைபோலுமியா னுனே
வீட்டுக்குணீ யடியார்கடன் விளையாடவிங் கதிபாதகக்[நாடிலா
கூட்டுக்குள்யா னலறத்தகா குருநாதனே குருநாதனே.(அஅ)

நெஞ்சுக்குத வியகோலமு நெட்டுரு வியகாலமும்
பஞ்சுக்குரு வியபொத்துடல் பகைமாறநின் றகைமீறியே
யஞ்சுக்குரு வியசுத்தமா மறிவைப்பெற வலதாசையாய்க்
குஞ்சுக்குரு வியையொத்தனன் குருநாதனே குருநாதனே.()

ஈனப்பிற வியின்மூழ்கினு மினிதாகுநின் னருளெங்குறும்
மானப்பிற வியவெங்*கரா வாயிற்படின் மனமெங்கறுந்
தீனப்பிற ரிடமேவினின் றிருநின்றபே ரருளென்பெறுங்
கூனப்பிறை முடிசூடுவோய் குருநாதனே குருநாதனே. ()

தனியாயினம் பிரிமானெனத் தமியேன்மிகு தளர்வெய்தினு
மினியாய்நினை யடைவோர்கதி யிதுவோசொலா யிவைஞாய
பனியாமல மகல்பானுவே பரிபூரண மலதோர்தெய்வங் [மோ
குனியாமல்வந் தெனையீகுவாய் குருநாதனே குருநாதனே. ()

தேனுண்டுமிழ் வரிவண்டுபோய்த் தேடுஞ்சில மலர் கண்டுணும், நானுண்டுமிழ் மறுவிங்கிலே நளினத்திரு மல ரெங்குளாய், வானுண்டுமி ழுயின்கதை வலதற்றன்யான் நில முற்றுநீ, கோனுண்டுநன் றுனையெண்ணினேன் குருநாதனே குருநாதனே. (கூஉ)

மோசானுபூ திகளானமர் மோகத்தொழில் பசுஞாயமாய்
நேசானுபூ திகளுற்றபேர் நெய்மாண்டதீ பமுமொத்தநின்
பேசானுபூ திகள்கண்டிலார் பெருமானெனல் லருடாரகங்
கூசானுபூ திகடந்தருள் குருநாதனே குருநாதனே. (கூ௩)

கரா - முதலை.

பாடும்படிக் குன்கீதமே பணிசெய்தவற் குன்பாதமே
சூடும்படிக் குன்னீதியே தொழுதற்குநின் னருட்சோதியே
நாடும்படிக் குந்நாதமே நவிலும்படிக் குன்போதமே
கூடும்படிக் கருள்செய்குவாய் குருநாதனே குருநாதனே. ()

சீமானுனைத் தனிதேடினன் சிந்தித்துநொந் தறவாடினேன்
பூமானெனைப் பொருளென்றுமே பூதப்பிரி வுறவோதினய்
நாமாகுநீ நமென்றதார் நன்மாமறைப் பொதுவிண்டனன்
கோமானெனக் குனையன்றியார் குருநாதனே குருநாதனே. ()

எட்டும்படிக் கென்பார்சில ரெழுத்தின்படிக் கென்பார்சிலர்
ஊட்டும்படிக் கென்பார்சில ருன்னார்களுன் பொன்னார்கழல்
ஆட்டும்படி யசைவன்றியில் லளவிட்டநல் லடியார்நடுக்
கூட்டும்படி யருள்கூரையா குருநாதனே குருநாதனே. (கூகூ)

வனித்தாதியாய் வருபோகமும் வாஞுதியாய் வருசோக மும், செனித்தாதியால் வருதேகமுஞ் செய்விக்குநின் செயல் சித்திரம், இனித்தாதியாம் பதமேவில னிறைவாவிரண் டற வேண்டுவேன், குனித்தாதியாம் புரம்வென்றவா குருநாதனே குருநாதனே. (கூஎ)

பழுதற்றபா தகனன்பிலாப் பதிதன்பொலா தவன்மிஞ் சினேன், னழுதைம்புலா திகள்வென்றுமே யருளைப்புகுஞ் சிகையென்பவன், தொழுதும்பர்சூழ் திருமுத்தனுன் றுணை தந்திட வருவன்கொலோ, கொழுதும்பைசூ டியசுந்தரா குரு நாதனே குருநாதனே. (கூஅ)

நெஞ்சத்தின்வா தனைபற்றறு நேப்பானிக ரெனினின்றிடுங்
கஞ்சத்தினன் னூலான்மத கரிகட்டுவார் கதைபோலநின்
வஞ்சத்தின னிவனுருமோ வலியாயநின் வழிகூட்டினுற்
கொஞ்சத்தின மெனைக்கைவிடேல் குருநாதனே குருநாதனே.

அறியப்படும் பொருணீயலா யறியப்படாப் பொருணீயலாய்
பிறியப்படும் பொருணீயலாய் பிறியப்படாப் பொருணீயலாய்
செறியப்படும் பொருணீயலாய் செறியப்படாப் பொருணீயலாய்
குறியப்படும் பொருணீயலாய் குருநாதனே குருநாதனே. ()

குருவென்றனைப் பணியாதவர் கூடுங்கதி யவைகண்டிலேன், குருவென்றனை யருச்சித்திலார் குறுகுஞ்சுக மவையென்கோலோ, குருவென்றனை யடையப்பெறின் குறையொன்றில குணமென்பராற், குருவென்றனைத் தொழுமேழைகாண் குருநாதனே குருநாதனே. (க0க)

திருவாழ்கவெண் டிசைவாழ்கமால் திசைமாமுகன் முதல்வாழ்கவைந், தருவாழ்கவிந் திரன்வாழ்கநற் றவமாமுனி வரர்வாழ்கவிண், ணுருவாழ்கமற் றவைவாழ்கவெண் ணிசைவாழ்கவிச் சதகஞ்சொலக், குருவாழ்கநல் லடி வாழ்கநன் குருநாதனே குருநாதனே. (க0உ)

நேரிசை வெண்பா.

சற்குருவென் னையன் சதகமொரு நூற்றொன்றுஞ்
சற்குருவென் னையற்குச் சாற்றினேன் - சற்குருவென்
னையனை யல்லா வியாமா ருலகமெங்குன்
பொய்யன் றதுவாம் பொருள்.

குருநாதசதகம் முற்றிற்று.

உ

சிவமயம்.

குருநாதசதகத்தின்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அடுத்தே	16
அண்டத்	8
அறியப்	19
ஆ	
ஆடற்	11
ஆட்டுக்	17
ஆணும	3
ஆதாரமார்	8
ஆவென்	6
ஆளாகு	11
ஆணு	3
இ	
இலைவேல்	8
இன்பத்	10
ஈ	
ஈனப்	17
உ	
உச்சந்	15
உலகஞ்	1
ஊ	
ஊரோதி	9
எ	
எட்டாதரு	16
எட்டாதபே	13
எறியற்ற	14
என்போடு	7
ஏ	
ஏட்டும்	18
ஏழாக்	11
ஒ	
ஒன்றே	14
க	
கணமே	16
கல்லாத	10
கா	
காற்றூடி	13
கு	
குருவென்	19
குருவே	1
ச	
சத்தாதி	10
சரவற்	7
சற்குரு	19
சா	
சாடிக்கு	6
சி	
சிணமுஞ்	14
சித்தால	10
சிறுகும்	5
சிற்றேவ	15
சீ	
சீமா	18
சீமைச்	8
சூ	
சூலாசை	12
செ	
செண்டாடு	11
செம்பாகு	7
சே	
சேடிக்கு	6
சொ	
சொல்லற்	4
ஞா	
ஞாலா	15
த	
தடுக்கின்ற	4
தனியா	17
தி	
திருமா	5
திருவாகி	2
திருவாழ்க	2

செய்யுள்.	பக்கம்.
திருவாழ்கவெண்	19
தீ	
தீட்டாகி	12
தீதற்றமா	10
து	
துஞ்சுங்	4
துடிகொண்	16
துறையற்ற	14
தூ	
தூராத	9
தூலங்	5
தே	
தேடத்	15
தேருத	14
தேனுண்டு	17
ந	
நன்றைப்பிளந்தெறி	9
நன்றைப்பிளந் தெறிவா	9
நா	
நாடான	8
நானுனெனச்	3
நி	
நிமிருங்	6
நிலமா	7
நிலனன்	6
நின்றுப்	2
நீ	
நீடிக்குனிங்	5
நெ	
நெஞ்சத்	18
நெஞ்சுக்	17
நெடும்	15
ப	
பண்டாய்	10
பழுதற்ற	18
பா	
பாடும்	18
பாரதி	16
பாவிக்	16
பி	
பிணக்	2
பூ	
பூதாதி	2
பெ	
பெற்றாய்	12
பை	
பையன்	6
பொ	
பொல்லாச்	4
போ	
போட்டான்	11
ம	
மண்ணுகி	8
மதிக்கா	4
மலமாயை	3
மலைப்பா	7
மா	
மாதாபிதா	2
மி	
மிடியேனை	3
மு	
முத்தாய்	12
முனிமாதவர்	5
மெ	
மெய்யன்	9
மெய்யாத	11
மெய்யாதி	5
மெய்வாய்	13
மோ	
மோசானு	17
வ	
வம்பிட்ட	4
வனித்	18
வா	
வாசப்	13
வாதாட்ட	13
வி	
விண்டார்	12
வீ	
வீணுக	12
வெ	
வெறும்	14
வே	
வேதன்	1
வேதாந்த	13

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

ஸ்ரீ விருத்திப்பிரபாகரம்:—*விசாரசாகர நூலாசிரியராகிய சாது ஸ்ரீ நிச்சலதாஸரவர்கள் ஹிந்திபாஷையி லியற்றிய அரிய வேதாந்த நூலின் தமிழ்மொழிபெயர்ப்பு வசனம்*	4	0	0
ஸ்ரீ விசாரசாகரம்:—(புதிய பதிப்பு)	3	4	0
பஞ்சதசப்பிரகரணம்:—*சதுர்வேதபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகள் அருளிச்செய்த இந்நூல் தமிழில் வினுவிடை ரூபமாக எழுதப்பட்டுள்ளது* ...	1	0	0
சூதசம்ஹிதை [*செய்யுள்*]:—*இதில் பிரமகீதையும் சூதகீதையும் அடங்கியுள்ளன*	1	8	0
அகம்புற ஆராய்ச்சி விளக்கம்:—*வேதாந்த சாஸ்திரத்தின் பல அரிய விஷயங்களைத் தமிழில் வசனரூபமாகத் திரட்டி ஸ்ரீமத் சச்சிதாநந்தசுவாமிகள் மாணுக்கர் ஒருவர் இயற்றிய அரிய நூல் [நூலாசிரியர் படத்துடன்]* ...	1	4	0
ஸ்ரீ பகவத்கீதை:—*ஸ்ரீமத் பொன்னம்பலசுவாமிக ளியற்றிய கூடார்த்ததீபிகை என்னும் உரையுடன்* ...	2	0	0
பிரபோத சந்திரோதய வசனம்:—*அல்லது மெய்ஞ்ஞான விளக்கம்*	1	0	0
பிரபுலிங்கலீலை வசனம்:—*நூதனமாய் தமிழில் வசனப் படுத்தப்பட்ட அரிய நூல்*	0	12	0
ஒழிவிலொடுக்கம்:—*சிதம்பர சுவாமிகள் உரையுடன்* ...	1	0	0
அகஸ்தியர் தேவாரத்திரட்டு:—*மூலமும் உரையும்* ...	0	12	0
ஸ்ரீ விவேகாநந்த விஜயம்:—*விவேகாநந்த சுவாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத்திரட்டும் [சுவாமிகள் படத்துடன்]*	1	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்:—*ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் அற்புத சரித்திரமும், கதாமிர்தமும் [பரமஹம்சர் படத்துடன்]*	1	4	0
பச்சையப்பமுதலியார் சரித்திரம்:—(*தென்னிந்தியாவில் பிரக்யாதிபெற்ற கோடீசுவரராகிய இத்தர்மப்பிரபுவின் சரித்திரமும் படமும், அவர்மீது பல வித்வான்கள் பாடிய பாடல்களும், கீர்த்தனங்களும்*)	0	10	0

ஸ்ரீ சங்கர விஜயம்:—
திரம் (ஆதி சங்கரர் பட
பாள் படமும் கூடியுள்ள
திருவிசைப்பா, திருப்பல்ல
யுட்டிரட்டு:—மூலமும் உ
கல்லாடம் மூலமும் உரையும்.
பயிண்டு ... ...
திருவெங்கைக்கோவை:—(சிவப்பிரகாச
இவ்வரிய கோவைக்கு நூதனமாய் எழுதப்பட்டபதவுரை, கருத்துரை, விசேஷ உரைகளுடன்) 2 8 0
இந்து பைபில் என்னும் ஆரியர் சத்திய வேதம் :—உபநிஷத்துக்கள் முதலிய ஹிந்துமதத்தின் உண்மைகள். [நூலாசிரியர் படத்துடன்] 1 12 0
மதவிருக்ஷம்:—(உலகத்திலுள்ள பெரிய மதங்களின் சரித்திரமும் வரலாறும்: [மூன்று பாகம் அடங்கியது] ... 1 12 0
ஸ்ரீ குமாரதேவர் சாஸ்திரக்கோவை :—(மஹாராஜா துறவுமுதலிய பதினாறு சாஸ்திரங்களடங்கியது) ... 0 10 0
குசேலோபாக்கியானம் :—குசேலரது திவ்ய சரித்திரத்தைக் கூறும் இந்நூல் 620 பக்கங்களும், 772 செய்யுட்களும் ஒவ்வொரு செய்யுளுக்கும் பதவுரை, பொழிப்புரை, விசேஷ உரைகளும், 28 படங்களும் கொண்டுள்ளது)... 3 0 0
ஷை மூலம் மாத்திரம் தனி (அரும்பதக் குறிப்புடன்) ... 0 6 0
திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்:—(இந்தியாவிலுள்ள பல திவ்விய ஸ்தலங்களின் மகிமையும் விசேஷங்களும், அந்த ஸ்தலங்களுக்கு இந்நூலின் ஆசிரியர் யாத்திரை செய்த வரலாறும்) 2 0 0
ஸ்தலயாத்திரைப் பொதுவிதி, ஸ்ரீ காசிமான்மியம், காசி இராமேசுவர யாத்திரை விளக்கம் 0 6 0
சிவமஹாபுராணம்:—வேதவியாச முனிவரருளிய பதினெண்புராணங்களு ளொன்றாகிய இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் வசனரூபமாக மொழிபெயர்க்கப்பட்டது: 48 படங்களுடன்: 5 0 0

உரையும், இந் திரச்சுருக்கமும்)	0	6	0
புண்யகால மகி —அரியவசன நூல்)	0	4	0
யர் என்னும் கவி என்னும் ஒரே துறை பாட லமைந்தது ...	0	4	0
—இதில் பல வித்வான்கள் பாடி தாலாட்டுகள் அடங்கியுள்ளன	0	4	0
தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு:-முதல் மூன்று பாடல்களுக்கு விரிவான உரையும், நூல் முழுதும்வரும் பாடல்களிலுள்ள அரும் பதங்கட்குக் குறிப்புரையும் அடங்கியது (சுவாமிகள் சரித்திரம், படத்துடன்) ...	1	0	0
திருவாசகம்:—(புதிய பதிப்பு) மாணிக்கவாசக சுவாமிகள் ஆப்டோன் படத்துடன்: இப்பதிப்பில் செய்யுள்கள் மூல த்தை வாசிக்கும்போதே கூடியமட்டும் பொருள் விளங் கும்படி சந்தங் கெடாதவண்ணம் சந்தி பிரிக்கப்பெற்று, பைகா (பெரிய) எழுத்தில் நூதனமாய் அச்சிடப்பட்டுள் ளன: மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரமும் காலவரை யுடன் நூதனமாய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது ...	1	0	0
பட்டினத்துப் பிள்ளையார் பாடல் முற்றும், புராண முற் றும், பத்திரகிரியார் புலம்பல் முற்றும் (நூலாசிரியர் களின் சரித்திரத்துடன்)	1	0	0
பழமொழி அகராதி:—(இதில் தமிழ் நாடுகளில் வழங்கும் சுமார் 12,000 பழமொழிகள் அகராதி வரிசையாகத் திரட்டி அச்சிடப்பட்டுள்ளன)	2	0	0
நைடதம் மூலமும் உரையும்:—(இதில் அன்னமும் தம யந்தியும் அமைந்த உயர்ந்த ஆப்டோன் வர்ணப்படமும், 27 விதகிராப் படங்களும் அடங்கியுள்ளன)... ...	2	0	0
ஷை மூலம் (செய்யுளகராதியுடன்)	0	12	0
ஸ்ரீபக்தலீலாம்ருதவசனம்:—(82 பக்தர்களின்சரித்திரம்)	3	0	0

உ

சிவமயம்.

மாயூரம் நல்லதுக்குடி

கிருஷ்ணையரவர்களியற்றிய

அவையாம்பிகை சதகம்.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

விலை அணா 2.

உ

சிவமயம்.

அவையாம்பிகை சதகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

அவையாம் பிகைசதக மன்பா யுரைக்க
உபய சரண முதவுஞ்—சபைநடுவுள்
ஆடுகின்ற வையன்முத லன்பாகப் பெற்றெடுத்த
கோடுள * மா தங்கங் குறித்து.

நூல்.

பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பாதாம் புயத்திற் சிறுசதங்கைப் பணியுஞ்
சிலம்புங் கிண்கிணியும்
படர்பா டகமுந் தண்டையுடன் பணியுங்
கொலுசுந் தழைத்தருளும்
பீதாம் பரமுந் துவளிடையும் பிரியா
தரைஞாண் மாலைகளும்
பெருகுந் தாள நவமணியும் புனையுங்
குப்பு மிருபுயமும்

---

* மாதங்கம்-யானை; இங்கே யானை முகத்தினையுடைய விநாயகரைக் குறித்தது.

போதா ரமுத வசனமொழி புகலு
நகையுங் கயல்விழியும்
புண்ட ரீகத் திருநுதலும் பொன்போற்
சடையு மதிமுகமும்
வாதா டியபே ரின்பரச வதனக்
கொடியே யுனையடித்தேன்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (க)

அஞ்சு முகத்தி நலமுகத்தி யாறு
முகத்தி சதுர்முகத்தி
யலையிற் றுயிலு மான்முகத்தி யருணை
முகத்தி பரம்பரத்தி
பஞ்சா க்ஷரத்தி பரிபுரத்தி பாசாங்
குசத்தி நடுவனத்தி
பதுமா சனத்தி சிவபுரத்தி பாரத்
தனத்தி திரிகுணத்தி
கஞ்ச முகத்தி கற்பகத்தி கருணா
கரத்தி நவகுணத்தி
கயிலா சனத்தி நவகுணத்தி காந்தண்
மலர்போற் சதுர்க்கரத்தி
* மஞ்சு நிலத்தி பரம்பரத்தி மதுரச்
சிவத்தி மங்களத்தி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உ)

உச்சிக் கிளியே யருட்கிளியே யுணர்வுக்
குணர்வா யுயிர்க்குயிரா

* மஞ்சு - அழகு.

யுதித்த கிளியே பரவெளியி லொளிவான்
பழத்தை யுண்ணிவரும்
நற்சொற் கிளியே கதம்பவன நகரில்
வாழும் பரைக்கிளியே
ஞானக் கிளியே மறைவனத்தி னடனக்
கிளியே சிவக்கிளியே
பச்சைக் கிளியே யன்பர் * ததி படரும்
வாவி யோடையினிற்
பரவுங் கிளியே நிதிக்கிளியே பவழக்
கிளியே பதிக்கிளியே
வச்ரக் கிளியே நவபீட வாசற்
கிளியே யருளமையும்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ரு.)

பண்டு மறையின் முடிவினுள்ளே பழுத்த
பழமே யருட்பழமே
‡ பரிபா கத்துப் பத்தர்நெஞ்சிற் படர்ந்த
பழமே நவமுடியே
என்றுங் கனிந்த திருப்பழமே யிமையோர்
தேடித் தேடியுமே
யெட்டாப் பழமே காசினியி லெவர்தாந்
தனையே யுணர்ந்தோர்கள்
கண்டு புசிக்கும் பதிப்பழமே கருணைப்
பழமே சிவப்பழமே
கயிலா யத்தி லான்முடிமேற் கனிந்த
பழமே கதிப்பழமே

---

* ததி - தத்துவம். ‡ பரிபாகம் - ஏற்ற பக்குவம்.

மன்றுண் மணக்கு மடியவர்க்கு மாயோ
கியர்க்கு முதலிநிற்கும்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ச)

தேனே பாலே சருக்கரையே தெவிட்டா
ருசியே கற்கண்டே
சீனி யுடன்முப் பழச்சாற்றிற் சிறந்த
ரசமே செம்பொன்மலை
மானே மடமே மடக்கொடியே வளர்ந்த
வனமே திருவதன
மயிலே குயிலே யன்பரெலாம் வாரிச்
சொரியு மனுநிதியே
ஊனே யென்ற னுயிர்க்குயிரே யுள்ளும்
புறம்பே யுறுமொழியே
யொளிசேர் கனகக் கற்பகமே யுதித்த
சுடரே திருப்பரமே
வானே வானின் வளிக்கனலே வனமே
பூவே வரைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ரு)

பஞ்சா பாணி நவபூரணி பரஞ
பாணி தவசாணி
பரமேஸ் வரியே யீஸ்வரியே பஞ்சா
க்ஷாத்தி பங்கயத்தி
எஞ்சா னுடம்பிற் றெண்ணூற்று றிசைந்த
தத்வா திகமுகமே

யிறையோ னிடத்தி னடனமிடு மிமையோர்க்
காசே யேகவெளிக்
கஞ்சா சனத்தி னிலையாளே கருணை
லயத்து ளுறைபவளே
கன்னற் சிலையு மம்பூவுங் கரத்திற்
சிறந்த பரைத்திருவே
வஞ்சா குலந்தீர் திருவடியர் மனத்து
ளுறையுங் கிருபைக்கடலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சு)

எங்கு நிறைந்த வருண்மணியே யேக
மணியே யொளிர்மணியே
யிறையோ னிடத்தி னடனமிடு மிமைய
மணியே நவமணியே
கங்குல் பகலுங் கண்டவெளிக் கலைநான்
குடைய திருமணியே
கண்ணின் மணியே பொன்மணியே கமலா
சனத்தில் வளர்மணியே
தங்கு மடியா ரிதயமதிற் றழைத்த
மணியே நவமணியே
தரணிக் கொளிவா யிரவுபகல் தானே
வளர்ந்த தவமணியே
மங்குங் கருத்தை நிலைநிறுத்தி வதன
வெளியிற் படர்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எ)

அழியச் சனன வலைமுழுது மலையு
மனத்தை நிலைநிறுத்தி

யாதா ராதி யடிநடுவு ளருணை
சலத்தின் மேவினுள்ளே
சுழியைத் திறந்து வாயுவதாற் சுடரே
சகபூ ரகத்தாலுந்
தோன்றுங் கும்ப காதியுடன் சோதி
படரு ஞானவெளி
விழியுந் திறக்கு மதிக்குழம்பு மிகுந்து
சுரக்கு நவக்கிரக
வெளியா மேலே வெளிபடர்ந்து விம்மித்
தனையே யாண்டருள்வாய்
வழியைப் பொருத நாயடியேன் மனத்தா
மரையு ணீவருவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அ)

கண்ணா ரமுதே யுனையெனது * கண்டான்
களிக்க மொழிகுளறக்
கதித்த வுயிரு முடல்புளகங் காணும்
பருவம் பெறுவேனோ
விண்ணா ரமுதே சிவபுரத்தில் விளைந்த
கனியே தேன்கடலே
வீசிப் படர்ந்த கமலமதில் வீற்றே
யிருக்கும் விழிச்சுடரே.
பெண்ணா னதுவே யாண்வடிவே பேணு
மலியே பிறங்கொலியே
பேதை நாயே னிதயமதிற் பிரியா
திருக்குந் தவக்கொழுந்தே

* கண்டான் - கண்தான்.

மண்ணு டியவ னிடப்பாகம் வளருங்
கொடியே மடமயிலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கூ)

தீரா மயக்கப் பிணிநோயைத் தீர்க்கு
மருந்தே யருமருந்தே
தேவா திகளு மறியாத ஸ்ரீகிருஷ்
ணு தி * சோதரியே
ஆரா திப்பார் பூசிப்பா ரமைந்துன்
னும மதைநினைப்போ
ரடுத்தோ ரின்ப சுகமுமுனை யடையு
மெனவே மறைவிளம்ப
நேரா யிருந்து களிப்பவளே நித்யா
னந்த சுகப்பொருளே
நெறியே குறியே யெனையாளு நிமலி
யமலே சுகத்தாளே
வாரா கினியே துட்டரிட மனத்தை
யழிக்குஞ் சினத்தாளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (க0)

மெய்யிற் படர்ந்த வருட்கடலே வினவு
ஞான முளரியினில்
விரிவாய்ப் பொருந்தும் பாநிதியே வினையை
யகற்றும் பதமுடையாய்
உய்யுந் தவத்தோர் மேலோர்க ளுறுதி
யுடனே மகிழ்பதியே

---

* சோதரி - சகோதரி.

ஒன்று யோக முடிவதனி லொளியாய்
வெளியா யுதித்தவளே
செய்ய கமலத் தயன்மனைவி தினமும்
பணியுந் திருவருளே
தேகா தேகக் கொடியையெலாஞ் சிறந்து
நிறைந்த சின்மயமே
வையத் தடங்கா வருளமலை வருணா
வருணா வொளிமணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கக)

வன்ன மொன்று யிரண்டாகி வளர்ந்தோ
ரைந்தா யெட்டாகி
வானும் வானின் வளிக்கனலாய் வனமாய்ப்
பாராய் வகையைந்தாய்ப்
பன்னு மறையோர் நான்காகிப் பரந்த
சாத்ர முடனாறாய்ப்
பதினெண் புராண வாகமங்கள் பரிந்தோ
ரிருபத் தெட்டாகி
உன்னி நெடுமா லயனாலு முலகை
வகுக்கக் காப்பாற்ற
வுடனே சங்கா ரித்திடவு முமையா
ளொடுதன் கேள்வனுமாய்
மன்னி நிதமு மூட்டிவைத்த மதலாய்
மேரு மகளாக
மயிலா புரியுல் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கஉ)

தந்தை தாயார் சுற்றத்தார் சகல
வாழ்வு முனதருளே

தமியேன் செய்யும் வினையுனது சடல
முனது வுயிருனது
சிந்தைக் கிசைந்த வடிமையென்றும் செகத்தி
லெவர்க்குந் தெரியாதா
சிந்தா மணியே யெனக்குவருஞ் செயலே
யுனது செயலலவோ
சொந்த வடிமை கிடந்தலையச் சும்மா
விருந்தா லுனைவிடுமோ
சோதி வதன மணிவிளக்கே * துவாத
சாந்தப் பெருவெளியே
மைந்த னெனவந் தாண்டருள்வாய் வசன
வதனி நவச்சரணி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கரு)

பேயே னூமை விழிக்குருடு பேணுஞ்
செவிடு கான்முடமாய்ப்
பிள்ளை யெனவே யீன்றவர்க்குப் பிரிய
விடவு மனதாமோ
நாயேன் செய்யும் வினைமுழுது நலமாய்ப்
பஞ்சுப் பொறியெனவே
† நகத்திச் சிவத்து ளெனதுயிரை ஞானப்
பதியுட் சேர்த்தருள்வாய்
ஆயே யமலை யருட்கடலே யகிலா
தார முடிவிளக்கே
யணங்கே யிணங்கு மடியவர்கட் கமுத
ஞான மருளரசே

---

* துவாதசாந்தம் - பன்னிரண்டா மவத்தை. துவம் - இரண்டு, தசம் = பத்து. † நகத்தி - அகற்றி.

மாயே செகமோ கனமான வடிவே
முடிவே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கச)

எண்ண வடங்கா தெனதுசென்ம மேட்டி
லெழுதி முடியாதங்
கிடிப்பார் நீண்ட மரம்போலு மெமனார்
பதியி லடைந்தலைந்து
பெண்ணின் மயக்கம் வினைமயக்கம் பிறவி
மயக்கந் துலையாது
பித்தர் சாலப் புலைபருடன் ப்ரமைகொண்
டடிமை யலைவேனோ
வண்ணக் கலையே கதிமுதலே வனசப்
பதியே யதிமதுர
வனமே கனமே யோகியர்கண் மனமே
குடியே வாரிதியே
மண்ணிற் கனக முடிநடுவுண் வாதா
டியபே ரொளிவிளக்கே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கரு)

பறந்த பறவை நாற்காலாய்ப் படரும்
விலங்கு மூர்வனவும்
பதிய தனில்வாழ் சீவர்களும் பாரி
னிலையாந் தாபரமும்
பிறந்த மனிதர் தேவரொடு பிசகா
தெடுத்த செனனமதிற்
பெற்ற தாயா ரெத்தனையோ பிறவி
மனையாள் புதல்வர்களும்

நிறைந்த கோடா கோடியினி னிலையா
னதுவு மொன்றறியே
னீயே தாயென் றநுதினமு நெறியே
யருளிப் பிறவியினி
மறந்து விடவு முனதுபப வனச
மலர்த்தா ளீந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கசு)

செடத்தை யெடுத்து மயல்நிகழத் திகைப்பி
னுயிரு மகப்படவுந்
தேசா சார வதிமோகத் திருக்கில்
மனமு முருக்கமுடன்
கடத்தை யெனதென் றபிமானக் கருமா
மயிலா ருடனைச்
காத லதனி னுயிர்மறைந்து கலங்கிக்
கலங்கி யலைவேனே
நடத்தை யறியாப் பரிபாக நாவா
னுன்ற னிருபதத்தை
நம்ப மனதி னுறுதியொன்றாய் நாட்டி
யெனையோ ராளாக்கி
மடத்தை யறிய வதிலழைப்பாய் மதிவா
ணுதலே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கஎ)

காவே யிலங்கும் பொன்னிநதிக் கரையே
யிலங்கு மயிலைநகர்
கங்கை முதலாம் புண்யநதி கருதிப்
பணியு மூதூரே

பாவே யிலங்குங் கவிவாணர் பகரு
மறைவே தாகமங்கள்
பயிலும் வீதிக் கழுகிளநீர் பாயும்
வாழை குருந்தேறும்
ஆவே யிலங்கு வயல்சூழு மதிலே
நாளு விருக்ஷமுட
னமுத ரசமாய்க் கனிபழுக்கு மருகிற்
பறவை யினஞ்சூழும்
மாவே யிலங்கு மருதினமு மருவுங்
கயிலை நிகராமம்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கஅ)

என்ன மயக்க மிதுபுதுமை யிதையா
ருடனே யானுரைப்பே
னெடுக்க முடியா வினைச்சுமையை யேழை
தலைமீ தெடுத்தேற்றி
மன்னிப் பிறக்க விடமுமன்றி வாகாய்
நடக்க வழியுமன்றி
மயக்கக் கொடுவேல் முனைக்கானில் வனவே
டர்கள்செந் நாயுடனே
என்னை மறிக்கக் கொடுமையுட னெழுந்தே
* யுழுவை பாய்ந்திடவிட்
டிதிலே நிறுத்தி யலைச்சலைவிட் டெங்கே
யொளித்தா யீஸ்வரியே
வன்ன மயிலை யெனக்குரைக்க வசன
மதுவொய் யானதென்னே

* உழுவை - புலி.

மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கக)

பாகு சேருங் குழலணங்கே பணத்தை
யணியுஞ் சதுர்த்தோளி
பாதி மதியுங் கதிரணியும் பரம
ஞான வெளிச்சுடரே
ஆகும் பருவ மறிந்தென்ற னுவி
யாமுன் னுபயபத
மடுத்துக் கவிதைச் சரந்தொடுத்தே யமைந்து
பொழிய வரந்தருவாய்
ஏகு மயக்கத் துட்டருட னினிதா
வெனைச்சேர்த் தகற்றாதே
யிமவா னளித்த திருமகளே யெங்கு
நிறைந்த பெருவெளியே
வாகு பொருந்துங் கிருஷ்ணனது வரிசைத்
துணைவி சுகவதனி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உ0)

விதியின் முறைமை யெத்தனைநாள் வினையிற்
படுவ தெத்தனைநாள்
விசுவா சிக்கக் கொடுமையன்றி வினையும்
பகையு மெத்தனைநாள்
அநிக வினையு மெத்தனைநா ளற்ப
வாழ்வு மெத்தனைநா
ளதிலே குரோதித் திருப்பதெலா மழியும்
வகையு மென்நாளோ
பொதிகை மலைய னரியபனும் புகழ்சேர்
காமன் றிசைப்பாலன்

போற்று முன்ற னிருசரணம் பொருந்தி
மகிழ்வ தெந்நாளோ
மதியைத் தரித்த முகில்வேணி மயிலே
குயிலே வான்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உக)

சிந்தா மணியின் பூசைசெய்தாற் செகத்தி
லெவர்க்குங் குறைவருமோ
செல்வ முடனே கல்விதருந் திரளாம்
வினைக ளென்பவெலாம்
முன்று ஞான போதிலேயே முதல்வி
யுன்ற னருளுலகில்
மூழ்கிக் கனமாய் வினையிருளு முறியப்
படர்ந்து மறைந்ததுபோல்
இந்தா வெனவே நீகொடுத்த வியல்பை
யல்லான் மானிடரோ
டேற்கை சேர்க்கை யவருரைத்த தேதா
கிலுமுண் டோவுரையாய்
மைந்தா வெனவே யமுதளித்த வகையை
நீயு மறந்தாயோ
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உஉ)

வெகுநாட் பழய வடிமையென மிகவுங்
கனிந்தே யருளளித்து
வெளியைக் காட்டிக் களிப்புடனே விம்மி
விழிநீர் சொரிந்தருளத்
தருமெய்ஞ் ஞானச் சாரமெலாந் தந்தோந்
தந்தோ மென்றுரைத்த

தாய்தான் மறந்தா லுலகிலினித் தானார்
பகையா ரென்னசெய்கேன்
புகழ்நா ரணியே யுன்னைவிடப் பொருளு
மருளும் வேறுமுண்டோ
பொல்லா தவனு னானாலும் பிள்ளை
யிவனென் றருள்புரிவாய்
வருத்த சேயைப் பால்கொடுத்து வளர்க்கா
திருக்குந் தாயுமுண்டோ
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உரு)

* சோத்ர வழியால் வருவினையுந் † தொக்கு
வழியால் வருவினையுந்
தொடருஞ் ‡ சட்சு வழியாலுஞ் சொன்னு
வுடனே § யாக்ராணம்
பார்த்த வழியிற் காரணமதைப் பற்றி
யுயிரைக் கலங்கடித்துப்
பண்ணும் வினையும் வெகுகோடி பாழ்போ
னதுவும் வெகுகோடி
ஆற்றிற் கரைத்த புளியெனவே யாச்சு
தொருவர்க் குதவியன்றி
யடியேன் முன்னு ளொருவருக்கு மாகா
தவனே வதையினித்தான்
மாற்ற வகையு மறியாயோ வருத்த
வெனையு மறந்தாயே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உச)

---

* சோத்திரம் - காது. † தொக்கு - தோல். ‡ சட்சு - கண்.
§ ஆக்ராணம் - மூக்கு.

நாளோ வினையோ வீணோ நாளு
 தொழிலுக் கானதுவு
நலஞ்சேர் நிட்டைக் குதவிவரு நாழி
 யொன்று யினுமிலையோ
சூளைக் குயவன் விதிவசத்தாற் றுக்க
 சுகமுந் தொடர்ந்துவரத்
துன்மார்க் கத்தால் வந்ததென் றுஞ் சொல்வார்
 பாரிற் சூழ்மனிதர்
வேளைக் கிசைந்த மொழிபேசி வினையிற்
 புகுந்த சுகம்போதும்
விமாயை யொழித்தே யமலசுக வெளியைப்
 பொருத்தி வினைப்பிறவி
மாளும் படிநீ யருள்புரிவாய் வாலாம்
 பிகையே வான்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
 அவையாம் பிகைத்தாயே. (உரு)

என்ற னினைப்பு மினிக்கடந்தே யேக
 வெளியி னிலைதுறந்தே
யிரவு பகலு மற்றவிட மினிதா
 கியுபே ரொளிவிளக்கே
சந்திக் கரையின் முடிமேவேற்றித் தனையுந்
 தலைவ னடிசேர்த்துச்
சாட்சாத் கார பூரணமாய்ச் சர்வா
 னந்த மாயிருக்க
உன்ற னிருதா ளடிக்கருணை யொளிசேர்
 கனகக் கிரிமுடிமே
லாதித்தா யெனது வினையறவு முமையே
 யிமையோர்க் கரசான

மந்த்ரக் கலைச்சி நவகோணம் வாழும்
யோக நாயகியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உசு)

காமக் கிரிபீ டத்தழகி கனக
சபையி னடனமிடுங்
காலி வீரி கவுமாரி காமேஸ்
வரியே யீஸ்வரியே
பூம தேவி நான்முகவன் புணரு
மனைவி யிந்த்ராணி
புகழ்நா ரணியுந் தினம்பணியும் பூர்ண
கலையே கதிமுதலே
சோம னுதய மணிநுதலே சுருதி
ஞான முடிமுதலே
துவாத சாந்த நிலையாளே சுகமே
ஞான மணிவிளக்கே
* வாம நயனி யதிரூபி வனசா
கினியே மாமணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உஎ)

மூலத் துதிக்கு ஞாயிறுபோன் முளரி
யிதழாய்ச் சதுர்முகனாய்
மூல வுந்தித் திருமாலாய் மூளுங்
கால காலனுமாய்
மேனுற் றருளுஞ் சதாசிவனும் விரியு
மிதமொன் றருள்பரையும்

* வாமம் - அழகு.

வித்தா ரமுமா யுலகனைத்தும் விரிவாய்
நின்ற விரிசுடரே
ஞாலத் தமைந்த விருபதமு நடனச்
சிலம்புங் கிண்கிணியு
நறுகும் பெருகு மிந்துநிதி ஞான
நிதியாம் பரமநிதி
மாலற் றவர்க்கு முதவிநிற்கு மதுர
வசனி நவசரணி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உஅ)

என்றுன் மயக்கத் திருவினையு மிடியும்
வகையும் பொருதாதோ
வேழை தனையே பகைப்பவர்க ளிருமா
நிலத்திற் சலிமையுண்டாய்
நான்றான் பெரிய னென்றுரைத்த நாவும்
வாயு மிகவடைத்தே
நகரிற் பயண மாகிவர நடத்தாய்
கருணைச் சுடர்விளக்கே
தான்றான் செய்த வினைமுழுதுந் தனக்கே
யன்றி மனக்கவலை
தன்னாற் போமோ வென்மனதுட் டவழ்ந்து
புழுங்கு தென்னசெய்கேன்
வான்றான் பரவுந் திரிபுரையே மௌன
தீப மலர்க்கொடியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (உகூ)

கள்ள மயக்கந் தொடராமற் கவலைப்
பிணிகள் படராமற்

கனவை நிஜமாய்த் தொடர்ந்தடர்ந்து கரைய
விழியின் புனலாறுய்த்
துள்ளி மனந்தான் மிகச்சலனந் தொடுத்துத்
தொடுத்தே யலையாமற்
சுகமா யுன்ற னிருபதத்தைத் தொண்டன்
மனதுட் கொண்டருள்வாய்
உள்ள படியே மனத்தடத்தி லொன்ருய்
வாழுங் கனிபமுதே
வோங்கா ரத்துக் குள்ளிருந்தே யுயர்ந்த
கமலா சனத்தரசே
வள்ளன் *மயத்தி யருண்மயத்தி வனச
முகத்தி கனகசத்தி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௩0)

பெரியோ ரெவரைப் பழித்தேனே பிரம
தவத்தை யழித்தேனே
பெற்ற தாயார் பசித்திருக்கப் பேணி
வயிற்றை வளர்த்தேனே
அரிய தவத்தோர்க் கிடைஞ்சல்செய்தே யற்ப
ரிடத்திற் சேர்ந்தேனே
வறியா மையினு லென்னகுற்ற மார்க்குச்
செய்தே னைவறியேன்
கரிய வினைதா னெனதறிவைக் கலங்க
முடித்த முடிச்சதையுங்
கரைக்க வுன்கிர் பானந்தக் கடாக்ஷம்
பொருந்தி யருள்புரிவாய்

---

* மயத்தி - அழகுடையவள்.

வரிவிற் புருவ மடமானே வதனம்
பிகைவா லாம்பிகையே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௩௧)

கனத்த மலையை யெடுத்தணுவாய்க் காலா
லூன்றி மீதுவைத்தால்
கால்தான் தாங்க வசமாமோ கருணை
நிதியே யினியுனது
சினத்தை மகன்மேற் பொருத்திநின்றாற் சிறியேன்
பொறுத்து நிலைப்பேனே
சிவமே யுனது தயவுவாச் செய்வா
யினி * யஞ் சுகவினமே
தொனித்த மறையின் முடிவிளக்கே சோதி
வதனச் சுடரொளியே
சுத்த வியோம மண்டலத்திற் சுகமாய்
வளருந் துரந்தரியே
மனத்து ளழுக்கை யகற்றியுன்றன் மலர்ப்பா
தமதிற் சேர்த்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௩௨)

கிளியே யருண வொளிச்சுடரே கிர்பைசேர்
வதன முழுமதியே
கெடியா முன்ற னிருபதநான் கிடைக்கும்
வகையும் பெறுவேனே
ஒளியா யிருக்குங் கனகசபை யொன்றே
யிரண்டே விபரிதமே

---

* அஞ்சுகம்-அழகிய கிளி.

யுரைக்குங் கருணா நிதிமயலே யுதித்த
பரம னுடனாடும்
அளியா ரமுதே தபாம்பரையே யணுவி
லணுவா யண்டபிண்ட
மமர்ந்த சிவமே ஞானவெளிக் காசே
வேதத் துட்பொருளே
வளியே சுழியி னடமிடுகண் மணியே
யெளியேற் கினியருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௩௩)

கவலைக் கடலின் வினையலையிற் கனத்த
மனமா கியமடுவிற்
கைநீச் சாக நீஞ்சவென்றாற் கரைதா
னடுத்துக் கிட்டவிலை
சவல மலையி லிடர்படவுந் † தகையும்
வெகுளி காமமது
தாவி வரவுங் கைப்பிடிக்கத் தாணு
தாவு மில்லாமல்
குவளை விழியிற் புனல்பெருகக் கோகோ
வெனயா னழுதுநின்றாற்
குறித்துன் னருட்டோ ணியிலேற்றிக் கொண்டே
கரையிற் சேர்த்தாள்வாய்
மவுனச் சிவனா ரிடப்பாகம் வளருங்
கருணா நிதிமயிலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௩௪)

---

* சவலம் - நடுக்கம். † தகையும் - இளைக்கும்.

நல்லார் நடக்கும் வகையறியே னுனை
னெனவே யுலகமதில்
நாடு வீடு மாடுமக்கள் நம்பு
மனையாள் வாழ்வதனில்
பொல்லா வறுமை பொருந்திவரப் புல்லர்
தம்பால் வருந்திநின்று
பொழுதை வீணுக் கழித்தொழித்துப் பொய்யா
முடலம் வீழ்ந்துவிடில்
எல்லா மெனதென் றிருந்தவெலா மெள்ள
ளவும்பின் றொடர்வதில்லை
யிவைநீ நிறுத்தி மயக்கவதை யானே
வறியேன் விதிவசத்தால்
வல்லா ணவத்தா லழியாதென் மனதிற்
குடிகொண் டாண்டருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௩௫)

அடியார் செய்யும் வினைதனக்கோ ரருள்செய்
துவந்து காக்கிலையோ
யான்மாத் திரந்தா னுன்றனுக்கே யாகா
தவனுய்ப் போனேனே
படிமேன் முன்செய் தவக்குறையோ பத்தர்
தமக்குத் தீம்புசெய்த
பாபந் தானே வறியாமற் பலவா
யென்ற னுயிர்மறுகி
முடியாக் கலக்கங் கொள்ளவைத்து மூழ்காற்
றடிக்கு தென்னசெய்கேன்
மோச மான விருவினையில் முளைத்தே
யெழுந்த செனனமதை

மடியக் கிர்பைதா னினியருள்வாய் வைய
வாலைத் திரிபுரையே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௬௬)

எங்குஞ் சரியாய் நீயிருந்தே யேற்றல்
குறைச்சல் பேதகத்தி
லெண்ணு துயிரை யிப்பிறப்பி லேதான்
வயது மறியேனே
சங்க மாழி தரித்தருளுஞ் சகல
வுயிர்க்கு முயிர்க்குயிராய்த்
தானு யிருந்த தவப்பொருளே தமியேன்
செய்த வினைமுழுதும்
மங்கும் படியே நீபார்த்து மயங்காக்
ககனப் பெருவெளியில்
மாறுக் கருணைக் கமலமதில் வாழக்
கிர்பைநீ தானருள்வாய்
வங்கங் கொழிக்கும் பொன்னிநதி வளர்ந்த
புனலா றிசைந்துவரு
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௬௭)

ஓல மிடவு மமலையுந்தா னுறுதி
மனதிற் பொருத்தவில்லை
யொருநா ழிகையா யினுமிடிய னுபய
பதத்தைத் நினைத்ததில்லை
கால மறிந்து நினதடியர் கருது
மொழியுங் கேட்டதில்லை
கனமா கியசம் சாரமெனுங் கடலி
னிடைவீழ்ந் தலைமோத

நீல விருளில் விழிக்குருடாய் நின்றே
மயங்கிக் கிடப்பேனை
நீதான் கிருபை பொருந்தியுன்ற னெறிதா
னளித்து நிலையில் வைப்பாய்
வாலை முடிவே கனகமுடி வான
திருவே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௩அ)

ஆண்ட வளுநீ யாமாகி லழகு
துரைச்சி நீயாகில்
அருண னிறத்தி நீயாகி லமுதச்
சிவத்தி நீயாகில்
பூண்ட விமயா சலத்தினுயர் பொன்னே
நீசா ளுமாகிற்
புகழ்ந்தே யெனக்குன் னருண்முலைப்பால் புசிக்கக்
கொடுத்த தாயாகில்
நீண்ட புகழ்முன் சமயமெனு நெறிதந்
தது நிசமாகில்
நிலத்தி லெனையே பகைத் தாட்டும்
நேரில் லாப்பாழ்ம் பேருடலம்
மாண்டு விடவே யருள்புரிவாய் வாரா
கினியே யருண்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௩௯)

அலையிற் றுரும்பாய் மனதலைய வனலின்
மெழுகாய் மனமுருக
வழிந்த பழம்போ லுடல்தளர வருவி
விழிகள் புனல்சொரிய

கலையி லறிவும் பிசகிநின்ற கலக்க
மதனை யகற்றியொரு
கனஞ்சே ருன்ற னிணையடியைக் காண
வசங்கொண் டிருக்கவைத்தாய்
சிலையைப் பிடித்த கரத்தழகி சிவத்தி
தவத்தி பவமகற்றி
செயமே தரித்த மனோகாத்தி சிந்தா
மணிரத் னுபரணி
மலையி லுதித்த நவபீட வாச
முறைமா யேஸ்வரியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சo)

உடலும் பகைக்க வகம்பகைக்க வொக்கப்
பிறந்தார் மனையாட்டி
யுடனே பகைக்க வூர்பகைக்கவொழிந்த
பெரியோர் களும்பகைக்கக்
கடலும் பகைக்க நிலம்பகைக்கக் கனல்கால்
ககன முடன்பகைக்கக்
கருதி யிருக்கும் வேளையதைக் கண்டா
யோவென் மாதாவே
சடலந் தனையே பகைப்பதல்லால் சர்வ
மூல முதல்வியுனைத்
தானே பகைக்க மிகக்கபவர் தம்மா
லாமோ தார்க்குழலே
மடலம் பரையே யுனையடுத்தேன் வந்தென்
றனைநீ காத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சக)

உற்றார் பெற்றார் தமைவேண்டே னூழி
வினையால் வரும்பொருளே
யுடலம் வேண்டேன் செழித்திருக்கு மூரு
முலக மதைவேண்டேன்
சற்று யினுமிவ் வுலகிலுள்ள தன்மா
திகளும் வாவேண்டேன்
றன்னை யறிய வறிவருளுந் தாயே
யுன்ற னிருபதங்கள்
பெற்றா ரடியேன் சிரமதனிற் பிரியா
திருக்க வகைவேண்டிப்
பிடித்தே னெனது மனதுறுதி பிசகா
திருக்க வரமருள்வாய்
மற்று ரையுநா னம்பவில்லை வரையின்
மகளே யுனையடுத்தேன்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சஉ)

ஒன்றே டொன்று நெருங்கியிந்த வுடலை
விலக்கி யுயிர்நெகிழ
வுற்றகால மதனி லெனக் குனது
பதங்க ளெதிராக
நின்றே யெனக்குன் னருளளிப்பாய் நீயே
கருணைக் கடல்மயிலே
நேரி லமைந்த பாநிதியே நித்யா
னந்த மானவளே
அன்றே யனைத்து மொன்றாக வாஞ
ரிடத்தி லிருப்பவளே
யடர்விற் புருவ மணிநுதலே யமுதே
யென்ற னகத்துயிரே

மன்றே பொருந்து மிருபாத மறவா
திருக்க வரமருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சங)

அன்பத் தோரா மக்ஷரத்தி யகிலாண்
டத்தி யந்தரத்தி
*யமல சுகத்தி யருமயத்தி யருண
நிறத்தி யம்பரத்தி
எண்பத் தோராம் பதங்கடந்த வேக
வெளிச்சி காரணத்தி
யிமயா சலத்தில் வந்தருளி யிருநா
ழிகைநெற் கொண்டுலகில்
உம்ப ரடியர்க் கறம்வளர்த்த வுமையே
யருள்வா ரிதிமாதே
யுனது பதத்தை யடியேனு முரைத்து
மகிழ வரமருள்வாய்
மண்பூத் தலரும் கமலமதில் வளருங்
கனமே கொடியனமே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சச)

மண்ணால் காகந் தனைப்பிடித்து வாரி
யெடுத்துத் தலைமீது
வைத்தே யாடும் பூசாரி யனம்போ
லெனது மனமுன்றன்
அண்ணாந் திருந்து குறிபார்த்தே யசையா
திருக்கி லசைந்துருகி

* அமலம் - அழுக்கின்மை.

யமுத தாரை யொழுகிவா வதனுட்
பொழுதைச் செலுத்தவருள்
* ஒண்ணுங் கனக முடிப்பொருளே யுள்ளச்
சிவமே நவரசமே
யொன்று யூக மனத்துயிரா யுயிருக்
குயிரா யிருந்தவளே
வண்ண லயமே ஞானவெளி வனமே
யெனைவந் தாண்டருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சரு)

அவகா லத்தில் மனமுமெனக் கடங்கா
தெழுந்தே யெழுந்துவிம்மி
யகத்தைப் படைத்தே யுனதுதிரு
வருளத் தாதிதனைமறந்து
பவமா மயலா ருடன்சேர்ந்து பண்ணும்
வினைநா னென்னசொல்கேன்
பார்க்க வென்று லதற்கொருவர் பகைப்பா
ருலகி லுள்ளவர்கள்
சிவமா யிருந்த சமுத்திரத்தைத் திருகாய்
நினைக்கு திநின்வலுமை
தேய்த்தே யுனது திருவருளைத் திறமாய்த்
தரவே வரமளிப்பாய்
மவுன தீப வலர்கொடியே வண்மூ
லிகையே பூரணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சசு)

---

* ஒண் - பிரகாசம்.

வினையின் பயனே பயனதனை வெறுக்கத்
தறிக்கப் போகாதோ
வெய்யோ னுதயத் தெதிர்பனியும் விம்மிச்
சுரந்து வளர்ந்திடுமோ
நினையு நினைப்பு மதற்காதி நீயு
முனது பதியோனு
நிசமா யென்றன் வசமானல் நில்லா
தெந்த வெவ்வினையும்
தனையே யறிந்தா லின்பதுன்பத் தடைதான்
வந்தா லதுங்கரோ
தகைசே ரிவைகட் கஞ்சுவரோ தாயே
யிருந்த சவுந்தரியுன்
மனையை யறியக் கருணைபுரி மணிநா
தாந்தத் திணிச்சுடரே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சஎ)

கனிந்து கனிந்துன் றனைப்பாடிக் கசிந்தே
யிருகண் புனல்பெருகக்
காதுன் னுபயத் திருவருளாங் கதையைக்
கேட்ப வகைபுரிவாய்
இனந்தா னுறவாய் மனம்புதைய வெந்த
நாளும் வருந்தியிந்த
விடத்தி லிருந்தால் மயக்கமுறு விரவும்
பகலு நினதருளே
நினைந்த படியே சிந்தைசெய்ய நெறியை
யுதவி யெனைக்காப்பாய்
நித்யா னந்தப் பழம்பொருளே நிமலி
யமலை டகழ்விமலி

வனத்த சடலத் தொழிலுனது மதியே
யிதமா யருள்புரிவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சஅ)

குலந்தான் நலந்தான் குடியிலுள்ள குணந்தான்
கனந்தா னெமதெனவே
கொள்ளுங் கயவர்க் கதுவசனங் குலவு
மூன்ற னிருபதத்தைச்
சிலந்தி யிழைபோ லறிவுருகச் செகத்திற்
கண்டு பிடித்தவர்க்குச்
செகதூ ஷணிப்பு நகைப்புமென்ன செய்பு
மவரை மலர்க்கொடியே
அலர்ந்த முளரி முகத்தாளுன் னடிமை
யான நாயேனை
யார்தா னகைத்துப் பழித்துமென்ன வாதி
கிருஷ்ணன் றன்றுணைவி
மலர்ந்த மனமா ரடியவர்பால் வளரு
மொளிசேர் நிலமாதே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சகூ)

நீர்மேற் குமிழி யாமுடலை நிலையா
மெனவே கயவரெலாம்
நின்று புவியிற் றனந்தேடி நீள
மபக்கான் மிகவாடிப்
பார்மேற் பெரியோர் தமைப்பழித்துப் பண்ணும்
வினைகள் வெகுகோடி
பாவி யர்கள்பாற் சேராதுன் பதமே
கதியாய்ப் பொருத்திவைப்பாய்

கார்மேற் பொருது மதிக்கதிரே கனகா
பரணி மணிப்பிறையே
கனக முடியில் வளர்ந்தெழுந்த கஞ்சா
சனத்து நிலைபாளே
வார்மேற் பொருது மலர்க்கரத்தி வானில்
வளரு முகில்வேணி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ருo)

ஏழை யென்னையே காக்கவகை யெடுத்த
வுன்ற னிதயமெலா
மிரங்கி யிரங்கிச் சலித்துமதி யென்னையே
குறிக்கப் பொருந்திலையோ
சூழ வுன்ற னிருபதத்தைச் சுகமாய் மனதிற்
பொருத்தி யின்னஞ்
சொந்த வடிமை யாக்கிலையோ சும்மா
விருப்ப தென்வகையோ
ஆழி யமுதை யடுத்தவருக் ககத்திற்
பசியு முண்டாமோ
வமுத வருஷம் பொழிந்திடிலென் னதிட்ட
மதிலோர் குடியாக
வாழப் பிடித்தா லுன்னையென்னால் வசனித்
திடவாக் கினைதருவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ருக)

கொடுங்கை தன்னா லெடுத்தசிறு குழந்தை
தனைத்தா யெறிவாளோ
கோபங் கொண்டால் யானிகரோ குலவுங்
கருணை நிலையாளே

அடங்கி யுனது கோபமெலா மகற்றி
யெனது பரிதாப
மறிந்து கிர்பைதா னருள்வேண்டி யாள்வாய்
வேத விழிப்பொருளே
துடங்கும் பாம ணிடப்பாகத் தொளிரு
மணியே யணித்தாயே
துலையாச் சனன வலைபகலத் தோற்று
முனது துணைப்பாதம்
மடங்கத் தெரிய மனதடங்க வாரிக்
கருணை பொழிந்தருள்வாய்
மயிலர் புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ருஉ)

கானலதனைப் புனலாகக் கருதி
நினைக்கும் வாறதுபோற்
கவலை யுடனே குடும்பமெனுங் கனவா
கியபொய்ம் மாய்கைதனில்
ஈச ருடனே யிருந்துசொல்லி யெல்லா
மெமதென் றுயிலாக
விருமாப் படைந்து மனம்வீணா யிருந்து
கலங்கித் திரியுதையோ
நானென் னவே மகிழ்ந்திருந்த நடத்தை
யறியச் சிவபுரத்தில்
நாதன் கழல்க ளுணர்வினுள்ளே நடுவாழ்ந்
திருக்க வருள்புரிவாய்
வானானந்தத் தவக்கொடியே வனச
மதியே வாணுதலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ருந)

சகல பகவான் றிருக்கிருஷ்ண சாமி
துணைவி பார்வதியே
வந்தித் திடவே தேவரெலா மகிழத்
தோற்று மலர்க்கொடியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௬0)

மூகம்பார்த் தொருவர் பேசாமல் முனிவாய்
ராக்ஷ தர்கள்போலே
முடியப் பழித்த பழிப்பாலே முனையு
மழுங்கி யென்றனுயிர்
அகந்தா னழுகு தினியதைத்தா ளோரா
டுரைப்ப தருட்கடலே
யதிக வினையே னற்பருக்கே யனைத்தும்
வசிய மாகுதையோ
சகந்தா னகைத்தால் ஞானியென்பர் தமியேன்
பருவம் பொருந்தாமற்
றூயே யனையாய் வேண்டுவரந் தனைசெய்
திருத்தி யெனதுளத்தில்
மகனு மெனவே யருள்புரிவாய் வடிவே
வேத மறைமுடிவே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௬௧)

அரசே யென்ற னகத்துயிரே யமுதே
கருணை மதிநுதலே
யகண்டா காரப் பெருவெளியே யமலச்
சுகமே யந்தரமே
உரைசேர் மறையின் முடிமுதலே யுணர்வே
யுணர்வி னொளிச்சுடரே

யோத லறியா வதிசயுமே யுமையே
யிமையோர்க் கரசான
தரைசேர் தண்டைச் சிலம்பணியுந் தாளி
யணிதி யணிதோளி
தருணு தருணச் சிவபுரத்தி சர்வா
னந்த பரம்பரத்தி
வரிசை யிமயா சலத்திலிறை மயிலே
யெனக்குன் கிர்பைபுரிவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கூஉ)

ஒன்றே கனக முடிமுதலே யொளியே
வெளியே * யகண்டிதமே
யுலகா சாரங் கடந்துநின்ற வுமையே
யமலச் சுகப்பொருளே
ஏன்றே யுலக மனைத்துயிர்க்கு மிரவும்
பகலு மெங்கெங்கு
மிருநா ழிகைநெற் கொண்டேகை யிசைய
வளர்த்த மலர்க்கொடியே
தன்றே மூலா தாரமுதற் ருவும்
பருவ நடுவணையிற்
றழைந்த பரமே நிதிமயமே சாதாச்
சாகாப் பூரணமே
மன்றே நடன மிடுசரண மயிலே
குயிலே சிவபதியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கூங)

* அகண்டிதம் - பூரணம்.

ஆய்ந்த வுன்ற னருணூலை யடுத்தே
யிழையாத் தொடுத்தெடுத்து
மதனைக் கயிறு முறுக்கிமன ரழுக்கை
யிருத்தி யுன்றனிரு
தோய்ந்த சிவக்கால் தனைப்புகட்டித் தொண்ணூற்
றாறு கருவிமயல்
தொடுத்த சடத்தை யிகழ்ந்துனது துவாத
சாந்த நிலைதனிலே
பாய்ந்த படியே குடியர்க்கப் பலசொற்
பனமுங் கண்டுவிடப்
பதத்தைக் கடந்தே யிதத்துடனே பரனார்
தந்த சிவபுரத்தில்
வாய்ந்த வாஞ்சை யுடன்புகழும் வானே
வானோர் தொழுந்தேனே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கூச)

அருளுக் கறிவா யிருந்தெய்வ மமர்ந்த
திருநாட் கொடியேறி
யலங்கா ரமுமாச் சித்தமெனு மமை * கே
டகக்கி லெழுமங்களி
மருவு மனதைப் பலிகொடுத்து வரிசை
யுடனே நடுவீதி
வரிசை பலவா மதிசயங்கள் வகைதா
னுரைக்க முடியாது
சுருளப் பிரியா ரதமேறிச் சோதி
வதன வொளிதாண்டிச்
சுத்த † வியோம நிலையதனிற் சுகமாய்
நிறுத்திக் கொடியிறக்கி

* கேடகம்-ஒருவகை வாகனம். † வியோமம்-ஆகாயவெளி.

மருளற் றிருப்ப வருள்புரிவாய் வாலாம்
பிகையே காரணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சுரு)

ஊசி துனியின் மனத்தையுன்னி யுயர்ந்த
மனிதர் மயிர்பதினு
ன்றுநுழையா விடத்தில்தம ரொடுங்கி
யடங்கிக் குறிபார்க்கில்
காசிப் புனலு நிறைந்தகங்கைக் கரையுங்
கடந்து திரைகடந்து
கனக மணியி னொளிகடந்து கருணைக்
கடலுந் தான்கடந்து
பேசும் பருவ முரைகடந்து பெருமை
சிறுமை தனைக்கடந்து
பேயி னுடனே பேயனுமாய்ப் பிரமை
கொண்டென்ற னறிவழிந்து
வாசித் தடமே கடந்துநின்ற மௌனு
னந்தமெனக்கருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சுசு)

செல்ல மனது மடங்கியபின் சென்றே
யூமைப் பருவமது
சேர வரவே யறிவழிந்து செகத்தோர்
நகைத்துப் பகைத்திடவே
அள்ளி முளரித் தடந்தாண்டி யருண
வுதய ரவிதாண்டி
யடங்கி யிருக்கச் சிவபுரத்தி லடியே
னடியாய் நிலைக்கவருள்

நிலங்கால் ககனங் கடலனலும்
நீளவிருந்த நெறிச்சுடரே
நிரவி யுலகெங் கினுமுயிராய் நிறைந்தே
யிருந்த தவப்பொருளே
பலகா லமுமுன் னிருபதங்கள் பாடிப்
பாடிக் கசிந்துருகிப்
பரவும் விழிகள் புனலாருய்ப் பருகி
யெனது மனதுருகக்
கலையோ காலைத் தெரிந்திருக்கக் கனக
வெளிகள் மறந்திருக்கக்
* கபிலைப் பசுவுங் கதறிக்கத்திக் கன்றைத்
தேடி வருவதுபோல்
மலமாக் காதி யகலவெண்பால் வந்துன்
னருட்பால் தந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ருச)

எந்த நாளு முனதருட்பே ரழகை
யறிவி லொருபிடியா
யிருத்தி மகிழ்ந்து கனககிரி யேறி
முடியை யீசனது
சிந்தை மிகுந்து புகழ்ந்துவரச் செல்வ
முடனே கல்விவரச்
செகச்சா லங்க டமைக்கடந்து சிற்சொருப
மனம் புணர்ந்து
வந்துன் ஞுத முடியருளு மௌனா
னந்தச் சுடர்விளக்கே

* கபிலைப்பசு = தேவபசு.

மாலா கியகிருஷ் ணன்றுணைவி வனச
மலரி னிலையாளே
மைந்த னிடம்வந் தெனைக்காப்பாய் மணியே
யோக வொளிமணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ருரு)

கொஞ்சுங் கிளியே யருள்பழுத்த கொம்பே
கதம்ப வனத்தில்வளர்
குயிலே யிமயா சலத்தில்வருங் கொடிவான்
மதியே பேரொளியே
அஞ்சு தொழிலுக் கதிகாரி யதிமோ
கனமே மாமாயை
யமுத வசனி நான்மறைக்கு மடங்கா
தகண்ட பெருவெளியே
* விஞ்சு புகழ்சேர் திருமகளும் வேதன்
மனையா ளொடுநிதமும்
மிகுந்து பணியு மரியயனும் † விபுதர்
முனிவர் மறையோர்கள்
வஞ்சி யேயுன் பதங்காண வகையு
மறியார் வளமயிலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (ருசா)

ஏதோ மனத்தின் விபகார மிதனு
லுயர்த்தி தாழ்த்தியென
விறந்தும் பிறந்து நாகமதி லிருந்து
மனது சஞ்சலிப்பப்

---

* விஞ்சு - மிஞ்சிய. † விபுதர் - தேவர்கள்.

பேதா பேத மிகப்பேசிப் பெருமை
பெறுமை யிதனாலே
பெற்ற சுகந்தா னினிப்போதும் பிரியா
துன்ற னிருசரணை
வேதாந் தவருட் கமலமதை விருதாப்
பிடித்துக் கருகிநிற்ப
வெட்ட வெளியோ னேகனுடன் விளங்கக்
கருணை நிலையருள்வாய்
மாதா வேமெய்ஞ் ஞானமுதே வரையின்
முடியில் வளர்பவளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௫௭)

சோற்றுத் துருத்தி வெகுபுழுக்கள் சுகமா
யென்ற னகமெனவே
சொல்லி வளருங் கருநாடு சூளைக்
குபவ னுத்தியதால்
பார்த்துப் பிடித்த பழம்பாண்டம் பகைத்தே
யேமன் றானுடைக்கும்
பனங்காட் டிலுறை நரிநாய்கள் பருந்தும்
விருந்தா யருந்திமகிழ்
ஊற்றைப் பிணத்தை யெனதெனவே யுகந்து
நின்ற சுகம்போது
முனது பதங்க ளென்மனத்து ளூறவே
கருணை மிகவளிப்பாய்
மாற்றொன் றில்லா தருட்கனக வரையின்
முடிமேல் வளர்பவளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௫௮)

எடுத்த சனன மிறக்குமுன்னே யென்சிந்
 தையுணீ வரவேண்டு
மிரவும் பகலு முனதடியை யேற்றும்
 வரநீ தரல்வேண்டும்
அடுத்த கலக மிருவினைக ளறவே
 சிவத்தி னுறவேண்டு
மணுட்டா ணதி தன்னையிழந் தமல
 சுகத்தைப் பெறவேண்டும்
தொடுத்த படியே யெனைச்சார்ந்து தூக்கி
 யெடுத்து நடுவணையிற்
சுகமா யிருப்ப வரமருள்வாய் துவாத
 சாந்த நிலையாளே
* மடுத்த கனத்தி நின்மயத்தி மடமே
 கருணைக் கடலாளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
 அவையாம் பிகைத்தாயே. (ருகூ)

உந்திக் கமலத் துறைவாழ்வே யோங்கா
 ரத்தி சதுர்க்கோணத்
தொளிரு மிதய நிலையாளே யுமையே
 கமலா சனமணியே
சிந்தித் திடவே யறுகோணஞ் செறிந்த
 மனையி னிலையாளே
செயமோ கினியே டாகினியே சிந்தா
 மணியே யோகினியே
சந்தித் திடமே யுன்னிருதா டனையே
 யருள்வாய் தற்பரையே

---

* மடுத்த – நிறைந்த.

பொல்லா வறுமை தனையகற்றிப் பொழுதை
மறைத்துச் சரமேகம்
பொழியும் வகைபோற் கவிமேகம் பொழிய
மொழிநல் வாக்களித்தே
வல்லா ளுக்கு மெனையாள்வாய் வாலாம்
பிகையே நாரணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எச)

அரிபிர்ம் மாதி தேவரொடு மலையைக்
கடைய விடம்பிறக்க
வதனுற் பயந்தே யபயமிட வபயங்
காத்தோன் கரியுரித்தோன்
எரியப் புரத்தை நகைத்தெரித்தோ னிறையோ
னென்ப ரறியாதா
ரிறையோ னுடலில் நீபாதி யிருந்தே
செய்த விபகாரம்
தெரியா துலக மறியாதோ சிவனுர்
தமக்கோர் தொழிலேது
தேகம் நீயுன் றொழிலெனவே செப்பு
மறைக ளநுதினமும்
வரிவில் தரித்த மலர்க்கொடியே வந்தென்
றனையா தரித்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எரு)

இறையி லிருந்த வதிசயத்தை யெவரா
லறிய வசமாகு
மீசன் றனக்குட் டானறிவா னிருமா
நிலத்தோ ரறியாரே

நிறையுங் கடலு நிலம் * பவன நெருப்பு
ககன மறியாதே
நின்னை யறிந்தார் பிறப்பிறப்பு நிலத்திற்
றிரும்ப முளையாரே
அறையுஞ் சிலம்பு மிகவொலிக்க வமுத
கிரணச் செஞ்சரணி
யடியே னறிவுக் கோரறிவா யமைந்தே
யிருந்த பரம்பரையே
மறைவின் முடிவி னடனமிடும் வனச
மலர்ப்பூம் பதத்தாளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எசு)

கருத்தோ செலுத்தச் சல்லடைக்கண் களைப்போற்
கலங்கி மயங்குதையோ
கனவி லெவர்க்கு மபகாரங் கருதி
னுப்போற் காணலுற்றேன்
பருத்த விருளில் விழிக்குருடன் பாதை
யறிந்து நடப்பானோ
பதியே யெனது மதிவினையால் படும்பா
டிவைநா னேதுசொல்வன்
ஒருத்த ருதவி யதுங்காணே னுனையே
யடைந்தே னொளிச்சுடரே
யுதித்த கதிர்முன் னிருள்போலு மோட்டி
வினையை வாட்டிடுவாய்
வருத்த மறிந்த தாயேயுன் மலர்ப்பா
தத்தில் வீழ்ந்தடுத்தேன்

* பவனம் - காற்று.

மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எஎ)

சத்த பரிச மொடுரூபங் தரித்த
ரசமா கனக்கந்தந்
தாவும் பொறிகள் தாமறியுந் தனையே
யறியுங் காரணமது
உற்ற வுயிர்தா னிவையறியு முயிர்தா
னறியு மதுசாக்ஷி
யுகந்த சாக்ஷி தனையறிய வொருவர்
தமையு நான்காணேன்
முத்த வறிவு முடையோர்தாம் முதர
சாக்ஷி தனையறிந்து
மோகா வேசந் தனைக்கடந்த முனிவ
ராளு ரிருபதங்கள்
வைத்தென் சிரசிற் றியானமுடன் மகிழ்ந்தே
யிருக்கும் வகைபுகலாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எஅ)

தனதென் றிருப்ப துலகமதிற் றந்தை
யொடுதாய் தனதாமோ
தனந்தான் றனதோ வகந்தனதோ தழுவு
மனையாள் தனதாமோ
எனதென் றிருந்த பாழுமுட லிதுதான்
றனதோ மனந்தனதோ
வெல்லாம் பிரபஞ் சவிர்த்தியினு லிதம்போற்
காவி லிசைந்திருப்ப
உனது பதத்தை யான்பிடித்தே யுணர்ந்தொத்
திருக்கா வகையெடுத்தே

னுடலும் மனதும் வினைவசத்தா லோங்கித்
தாள வடிக்குதையோ
மனது நீங்கி யெனதுவச மாகக்
கருணை யதுபுரிவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எக)

காண வேண்டு மிருபதத்தைக் களிக்க
வேண்டு மநுதினமுங்
கவலைக் கடலா கியவினைகள் கரைய
வேண்டு மெனையகன்று
தோண வேண்டும் ஸ்ரீகிருஷ்ணன் றுணைவி
யுனது திருக்கருணை
தோற்ற வேண்டும் நடுவணையிற் றுவாத
சாந்த வெளியில்மனம்
பூண வேண்டு மருளமுதம் புசிக்க
வேண்டு மெனதுடலம்
புகழ வேண்டு மருட்கவிதை பொழிய
வெனக்குன் னருள்புரிவாய்
வான மதியே * யபாஞ்சி மணியி
லிருந்த சவுந்தரியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அ0)

அத்து விதமே சிவபுரமே யணுவி
லணுவே யகண்டிதமே
யமுதச் சிவமே யழகொழுகு மருண
நுதலே நவநிதியே

* அபாஞ்சி - புடமிட்ட பொன்.

நல்ல கமல முகத்தாளே நந்தி
விடையோ னிடத்தாளே
நறுமா மலர்ச்செஞ் சடையாளே நதிகள்
பெருகும் பதத்தாளே
வல்ல பரையே பரம்பரையே மௌன
தீப மோகனமே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௬௭)

அடர்ந்த ககன முடிவினிலோ ரமுத
நதிதான் பெருகிவர
வதனைப் புசித்துப் பணிதந்தே யடியேன்
மனதா லயமாகத்
தொடர்ந்த சிவமே யநுக்ரகித்துத் தொல்லை
வினையைப் பறக்கடித்துத்
தொலையாச் செனன வழிதொலைத்துச் சுகமா
யிருக்க வருள்புரிவாய்
படர்ந்த வருண மணிநுதலை பரம
சுகவா னந்தமதிற்
பாவ மகன்ற மனத்துள்வளர் பத்மா
சனியே வான்மணியே
மடந்தைப் பருவ முடையாளே வளர்மின்
கொடிபோ லிடையாளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௬அ

அணுவுக் கணுவா யிருக்குமுனை யறிய
வசமோ வருட்கடலே
யார்தா னறிவா ரரிபிரம னவரா
லறியா வதிசயத்தாய்

குணமுற் றகன்ற நிரஞ்சனமே குறியற்
றிருந்த பரம்பரமே
கொள்ளைப் பிறவி தனையகற்றுங் கொடியே
ககன மின்கொடியே
கணுவற் றகண்ட வருட்கரும்பே கண்ணின்
மணியே மணியினுள்ளே
கலங்கா திருந்த வொளிச்சுடரே கருணைக்
கடலே நவமணியே
மணமுற் றொளிர்பூங் கமலமிசை வளருந்
திருவே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சுசு)

நெஞ்சிற் சபலம் பொருந்தாது நின்னை
யறிவா லுணர்ந்தொன்றாய்
நினைக்கப் போகின் றதுவுமிலை நெறிமாற்
றயருமாறதுபோல்
பஞ்சுப் பொறிபோற் பவமகலப் பரவும்
நினைப்பு களுமகலப்
பரிந்தென் பால்வந் தருள்புரிவாய்
பரமானந்த சுகப்பொருளே
அஞ்சு முடலா யிருப்பவளே யாறுங்
கடந்த பரம்பரையே
யமுத வசனத் திருக்கிருஷ்ண ஞதித்
துணைவி யந்தரியே
வஞ்சி நவமோகனரூபி வதனும் புயத்தி
யருண் மயத்தி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எ0)

பச்சை முழுப்பொன் னிறமுடனே பளிங்கு
பவள முடனீலம்
பருத்த மேக முடனுகப் பரவி
யிருக்கும் பசுங்கிளியே
அச்ச மறவே யதன்மீதி லருண
வுதய ரவிகோடி
யகண்டா கார ரூபமதா யமர்ந்த
சிவமோ கனமாதே
செச்சை யடிமே லணிச்சிலம்புஞ் சிறுகிண்
கிணித்தண் டைகளொலிக்கச்
சிவனோ டிருக்குங் கொலுமுகத்தைச் சிறியேன்
காண வருள்புரிவாய்
வச்சவுனது பொரு ளெனக்கு வரத்தாற்
கருத்தி லுரைத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எக)

அணங்கே நவபீ டாசனியே யருளே
யுதய மதிச்சுடரே
யாகாயத்தில் முளைத்தெழுந்தே யருவி
முளரி நிலையாளே
இணங்கு மடியார் நினைந்தபடி யிசைந்த
புவன நவமணியே
யேகா கார மாகவெனை யெடுத்துன்
னருளைக் கொடுத்தாள்வாய்
பிணக்கு மலமா யாதிகளிற் பிரியும்
விடநீ காட்டாதே
போா யிரத்தி தவபுரத்தி பேசா
மோனக் கொடிமடலே

மணங்கொண் டிருக்குங் குழலாளே வந்தென்
றனையாட் கொண்டருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எஉ)

குடும்ப மெனுமைக் கடலதனிற் குலவு
முடலா கியதோணி
குறித்தே பிரமன் வகுத்தவகை கொள்ள
மேற்கால் கீழ்க்காலாய்த்
தடம்புக் கியதோர் நாளையிலே தடித்து
வழியோர் சுழியேகிற்
றுறுமாறு யோர்நொடியிற் றனே யொதுங்கிக்
கிடக்கு தையோ
திடம் புக்கிடவே நேர்கரத்தாய் சேர்ந்து
வரவே கரையொதுங்கிச்
செத்தே தயவாய்ப் பார்த்தருள்வாய்ச் செஞ்சொற்
கிசைந்த திருமாதே
மடம்பார் முடிவி னடனமிடு மதிசூடியபே
ரொளி விளக்கே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (எங)

கல்லாக் கயவர் முகம்பார்த்துக் காத்துக்
கிடந்து விழிப்புனலாய்க்
கரையக் கரைய விதம்பேசிக் கலங்கித்
திரியக் கடையேனும்
கல்லார் பதத்துக் கானதொழில் நடத்தை
யறிய வெனதுமதி
நம்ப வுறுதி யருள்புரிவாய் ஞானா
னந்தச் சுடர்விளக்கே

முத்த ரறிவே கனகமுடி மோனப்
பதியே வதிரசத்தின்
முக்ய ரசமே நவமுடியில் முடித்த
பரமே திருப்பரையே
சுத்த வெளியே வெளிக்குநடு சூழ்ந்த
வொளியே வொளிக்குமுனந்
தோய்ந்த திரையே திரைக்குமப்பால் தோய்ந்த
வெளியே வளிகனலே
மற்று முளப்ர பஞ்சமுறு வடிவே
யெனது மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அக)

* மருத நிலத்தோ னொருபாலில் வந்து
வணங்கக் கனமறலி
வருண னிருதி யருணனொடு வாய்வு
முடிவி லீசான்யன்
பொருந்தி வணங்க வமரர்முடி புனையும்
பதத்தி யருண்மயத்தி
பூமா தொடுவா ணியுவணங்கும் பொன்னு
பரணி பணிபூணி
கருது மடியார் நினைவி லுள்ளங் கனைந்த
வதனி கல்யாணி
காமக் கிரிபீ டாசனியே கன்னி
யுமையே தாரணியே
வருநற் பருவமாக்கியெனை வளர்சே
வடிக்கா ளாக்கிடுவாய்

* மிருதநிலத்தோன் - இந்திரன்.

மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அஉ)

தக்க திரிகோ ணசனத்தி சகல
புவன மானசத்தி
சர்வ பூத மானசத்தி சகலா
கமங்க ளானசத்தி
திக்கு முடையா யமர்ந்தவளே திரிகோ
ணதீ பப்பொருளே
செம்பொற் கலசத் தனத்தழகி திவ்ய
சோதி மயமான
புக்கு மடியார் சிந்தையினில் புகழ்ந்து
நடன மிடுஞ்சரணி
பூத மைந்தாய் நாதாந்தப் பொருளா
யிருந்த மலர்க்கொடியே
மக்கு மெனது மனச்சலன மறுத்துக்
கருணை மிகுந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அங)

அனைத்து மகண்ட முடிவிலொன்று யருளாய்ப்
பழுத்த தவப்பொருளே
யகில புவனத் தனுகரண மான
சுகமே யற்புதமே
செனித்த பிறவித் துயாறுக்குஞ் சீர்வாள்
பிடித்த காத்தழகி
தினமு முனையே பணிந்தவர்கள் சிந்தை
கிலையா யிருப்பவளே
கனத்த மயிடா சுரன்சிரத்தைக் கலங்க
வுதைத்த பதத்தாளே

கருணைக் கடலே யாகிநின்ற கண்மூன்
றுடைய கற்பகமே
மனத்துட் சலன மறக்கருதி மலர்ச்சே
வடியை யளித்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அசு)

ஆரங்கம் பதினா றங்குலமே சுகமாய்
நடன மிடுஞ்சரணி
தொலையா வெளியே வெளிமுதலே சுயம்பிர
காச நிலையாளே
இரங்கு மடியார் சிந்தையுள்ளே யினிதாய்
வளரும் வாரிதியே
யிலகு நினைவு முடையவளே யின
ரகம்விட் டிருப்பவளே
ஆரங்க முடிவில் நடுவணையி லமுதாய்ச்
சொரியு மருணநிதியே
யமல சுகத்தை யடியேனு மடையு
மறிவு தரவேண்டும்
வரங்க ளினிவந் தருள்புரிவாய் வனசா
சனத்து ளிருப்பவளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அஏ)

உம்பர் முனிவர் முதலோர்க்கு முணர்தற்
கரிதா யிருப்பவளே
யோதா வேத முணர்பவளே யுயிருக்
குயிரே யொளிக்கொளியே
அம்பு படர்ந்த விழிப்பொருளே யரவ
முடியி லிருப்பவளே

யரனார் தமது நினைத்தருளு மடியா
ருளத்தூண் மணிவிளக்கே
கும்ப முனிக்கும் வியாசருக்குங் குலவு
நவசித் தாதிகட்குங்
குறிக்குந் திக்குட் பாலர்கட்குங் குறியே
யருளும் நிலையாளே
வம்பில் பழுத்த ரசக்கனியே மதமோ
கினியே யோகினியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அசு)

தொந்த வினையா யிருந்தவினை தொலைக்கு
மருந்தா யிருந்தவளே
துக்க சுகமா யிருந்ததனைத் துடைக்குங்
கதியா யிருப்பவளே
* அந்த கனுமா யிருந்துமவர்க் கதிகா
வனுமா யிருப்பவளே
யரியு மயனு யிருந்துமவர்க் கப்பா
லாகி யிருப்பவளே
முந்தி நடுவா யிருந்துமதன் முதலாய்
முடிவா யிருப்பவளே
முத்தர் சிவமா யிருந்துமருள் மோனப்
பதியா யிருப்பவளே
வந்தித்திடநீ வந்தெனக்கோர் வழியைக்
காட்டி யாதரிப்பாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அஎ)

* அந்தகன் - எமன்.

பூத மைந்து சதுர்க்கரணம் புலனை
ரஞ்சும் பொறிகள்பத்தும்
புகழும் வித்யா தத்துவங்கள் பொருந்தோ
ரேழுஞ் சிவமஞ்சும்
பேதா பேத மோராறிற் பிடித்த
தேகக் கோடியினிற்
பிறந்தும் பிறந்தே யிறந்திறந்து பொய்யைப்
புசித்தே பொய்பேசிக்
காத லுடைய மனத்தையுன்றன் கருணை
விழிகொண் டினிநோக்கிக்
கவலை தணிய வரமருள்வாய் கண்ணே
யெனது கண்மணியே
வாத மகண்ட பெருவெளியில் வளரு
நடனத் தாண்டவத்தி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அஅ)

ஆரா ரகமு நீயாரு யாரா
வமுது நீயாரு
யாரா ருயிரு நீயாரு யாவர்
பொருளு நீயாருய்
பேரா யிரமு முடையாளே பேதா
பேதம் பேசியென்ன
பெருமை சிறுமை நீயாருய் பிரியா
வருளு நீயாருய்
நாரா யணியே பூரணியே நளின
சனத்து ணடிப்பவளே
நாட்ட மறியா தவருளத்தும் நடனம்
புரிந்தே நிற்கிலையோ

வாரா கினியே தயைபுரிவாய் வாலாம்
பிகையே பலவகையே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (அகூ)

தட்டா தினது மொழிகேட்டுத் தமியேன்
பிழைக்கும் வழிதேடித்
தயைசெய் வதுமுன் கடனலவோ தாயே
கருணைக் கோர்முதலே
கட்டா யிருக்கு முலகினுள்ளோர் கலங்கிப்
பிரிய வருள்புரிவாய்
கமலா சனியே மாமணியே கருணை
நிதியே கற்பகமே
முட்டா திருந்த சலன்மிவை மூழ்க
வடிப்பாய் முழுமுதலே
முனிவோர் புகழுந் திருக்கிருஷ்ண மூர்த்தி
துணைவி மோகனமே
வட்டா * காயத் தொளிர்சுடரே வாலாம்
பிகையே வந்தாள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கூ0)

தத்வா தீதச் சுடர்விளக்கே தமியே
னுயிரா யிருப்பவளே
சர்வ லோக தயாபரியே சாக்ஷாத்
கார மானவளே
சித்த மோனத் தடியார்தஞ் சிந்தை
யிடையிற் குடியான

* காயம் – ஆகாயம்.

சேஷா பரணி மலர்ச்சரணி திருவே
யருவே திகழுருவே
வித்தா யடியிற் கனகசபை மேலாய்ச்
சுகமாய்க் * குண்டலியாய்
விளங்கா நிற்கு மருட்கனியே மேலோர்
கிழோர் தொழுபவளே
வற்று துலவு மருட்கடலே மகிழ்ந்தென்
றனைவந் தாண்டுகொள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சுக)

அம்மா வுனையே யடுத்தவர்கட் கனைத்து
முலக வசியமுண்டா
மஷ்டாங் காதி யோகமுட னடியு
முடியுங் கவனமுண்டாம்
தம்மாற் சாபா நுக்ரகமுஞ் சகல
மூர்த்தி கரமாகுஞ்
சடமே வெகுநாள் நரைதிரைக டமையே
யகற்றித் தனியிருக்கும்
சும்மா வவர்கள் விரலசைந்தால் தொடர்ந்தி
ரெழுபார் சுழன்றுருளுந்
துக்க சுகமு மணுகாது சுகரு
பாதி யருளமையும்
வம்மா வதைத்தா னேத்துசொல்வேன் வாக்கு
மனதுக் கடங்காதே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (சுஉ)

---

* குண்டலி - மூலாதாரம்.

பொன்னே நிறைந்த புதுமலரே புகழ்சேர்
மறையின் பொருளணங்கே
பொற்று மரைப்பூங் கமலமதிற் புகழ்ந்தே
யிருக்கும் போதகமே
மின்னே பவழக் கொடிவடிவே மேக
மனைய கருங்குழலே
விளங்கு தவபீ டாசனியே வித்தாய்
மரமாய் மறைமுடிவில்
முன்னே பழுத்த கதிப்பழமே முதிர்ந்த
மொழியிற் படர்ந்தகொடி
முதலே நுதலே குடியாக முடிவா
யிருந்த மோகனமே
வன்னே பொருந்த வருளளிக்கும் வாலாம்
பிகையே வான்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கூடு)

தூல சூக்ஷ்ம காரணமே தொலையாக்
கருணை வாரிதியே
துவாத சாந்த வெளிதனிலே சுகமா
யிருக்கும் நிரந்தரமே
மேலாம் தவத்துக் கதிகாரி விரிந்த
கமல நடுப்பீடம்
வியாபித் தொளியாய் வெளியுதன்மேல் வெளியா
யிருந்த மெய்ப்பொருளே
ஆல கால விடமருந்து மாறு
ரிடப்பா கத்தில்வள
ரமுதே தேக வொளிமயமே யருணும்
புயுத்திரி யம்பகியே

வாலாம் பிகையே யுனையடுத்தேன் வந்தென்
றனைநீ காத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கூச)

மூன்றே யெழுத்தா யிருப்பவளே மூனைமே
லெழுத்தே பதினைந்தா
முதலா யிருபத் தெட்டாக முடிவா
யிருந்த மோகனமே
நீண்ட சமையா சாரமுமாய் நெறியந்
தரமாய் முகமாகி
நிகழா தாரக் குண்டலியாய் நின்றே
யிருந்த நேரிழையே
பூண்ட வடியா ரகந்தோறும் பொன்னம்
பலமாய் நடனமிடும்
பொருளே யருளே யெனையாளும் பொன்னே
கண்ணி னுண்மணியே
* மாண்ட குருவாய் வந்தவளே மருவுஞ்
சுகத்தைத் தந்தவளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கூரு)

ஆறு சமயங் கடந்துநின்ற வருண
நிதியே சுந்தரியே
யாசா பாச மகன்றவர்பா லருளா
யிருந்த வருந்ததியே
தேறும் பதினெண் புராணமுமாய்த் தீபி
கையுமாய் நின்றவளே

* மாண்ட - மாட்சிமைப்பட்ட.

திக்கோர் வடிவாய் நிற்பவளே செகமே
வடிவாய் நின்றாயே
கூறு மன்பத் தொன்றதிலுங் கோடி
கோடி மந்திரமுங்
குறிக்கு மனந்த வேதமுமாய்க் குறிப்பா
யிருந்த பாமாதே
மாறி யெனது மலமறவே வந்தே
யடிமை கொண்டாள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௬௬)

மூக்கட் பரம ரிடப்பாக முதலாய்
முளைத்துத் தழைத்தவளே
முன்ன மவனை யீன்றவளே முடிவி
லவனை யாண்டவளே
செக்க ரிளமா மதிவதனத் தெளிவிற்
றெளிவே தேன்மொழியே
தேவி யாதி பரஞ்சோதி ஸ்ரீபீ
டாதி யருளாதி
பக்கத் துணையே பார்வதியே பரமேஸ்
வரியே காரணியே
பஞ்சா க்ஷரியே யுலகேழும் படைத்த
தாயே பைங்கிளியே
மக்கள் தமைப்போ லெனைக்காக்க வகைநீ
யருள்வாய் வளமயிலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௬௭)

தில்லை யதனுள் நடனமிடுந் திருவே
யருவே திகழுருவே

தெளிந்த பரமே சிவபரமே செகசூத்
திரநான் மறையேமால்
அல்லைத் தொலைக்கு மருமருந்தே யமுதா
னந்தக் கடற்பெருக்கே
யறிவுக் கறிவாய் நீயிருந்தே யனைத்துந்
துதிக்க வருள்பரையே
எல்லை கடந்த ட வெளியே யிசைபுட்
களமே யகண்டிதமே
இதத்துக் கிதமா யிருப்பளே யிரவு
பகலா யொளிப்பவளே
வல்ல மதிசூ டியவனிடம் வளரும்
வாழ்வே யென்கோவே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (கூஅ)

அணியுங் கனக வொளிமலையே யமுத
நதியே யருட்கடலே
யதிகா ராதி தேவதையே யகண்ட
முடிவி லொளிச்சுடரே
யணியு மணியும் புயத்தாளே பரநா
தாந்த மடத்தாளே
பழகு மடியா ரிருதயத்துட் பரவி
யிருக்கும் பனிமொழியே
துணியு மனதா கியயோகி தொடரும்
படியே தொடர்பவளே
தூங்கா துறக்க மானவளே தொலையாச்
சுகமுண் டானவளே
மணியங் கிரணி விளையாடி வளருங்
கொலுவீற் றிருப்பவளே

மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அயையாம் பிகைத்தாயே. (௯௯)

நான்வே றெனநீ வேறுனுப் நானு
வேதப் பொருளானுய்
நாயே னினியா ருடன்பேசி நண்ணுங்
குறையைப் போக்குவது
தான்வே தாந்த முடிவானுல் தனக்கோர்
செயலு முண்டாமோ
சர்வா னந்தி சக்கரத்தி சட்கோ
ணத்தி சதுர்க்கரத்தி
தேன்வே றிசை யுண்டாமோ தீபத்
தொளிவே றுண்டாமோ
தேக முயிரு முயிர்க்குயிராய்ச் சிவமே
யொன்று யானுமே
வான்வே றுண்டோ திருக்கிருஷ்ணன் வளருந்
துணைவி நீயுமையாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. (௧00)

அவையாம்பிகை சதகம் முற்றிற்று.

சிவமயம்.

அவையாம்பிகை சதகத்தின்

செய்யுள் முதற்குறிப் பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அஞ்சு	2
அடர்ந்த	41
அடியார்	22
அணங்கே	43
அணியுங்	59
அணுவுக்	41
அத்துவித	48
அம்மா	55
அரசே	37
அரிபிர்	45
அருளுக்	39
அலையிற்	24
அவகா	28
அவையர்ம்	1
அழியச்	5
அனைத்து	50
அன்பத்	27
ஆ	
ஆண்ட	24
ஆய்ந்த	39
ஆரா	53
ஆறு	57
இ	
இறையி	45
உ	
உச்சிக்	2
உடலும்	25
உந்திக்	36
உம்பர்	51
உற்றார்	26
ஊ	
ஊசி	40
எ	
எங்குஞ்	23
எங்குநி	5
எடுத்த	36
எண்ண	10
எந்தா	33
என்ற	16
என்ன	12
ஏ	
ஏதோ	34
ஏழையெ	31
ஏன்றான்	18
ஒ	
ஒன்றே	38
ஒன்றோ	26
ஓ	
ஓல	23
க	
கண்ணை	6
கருத்தோ	46
கல்லாக்	44
கவலைக்	21
கள்ள	18
கனத்த	20
கனிந்து	29
கா	
காண	48
காமக்	17
காவே	11
கான்	32
கி	
கிளியே	20
கு	
குடும்ப	44
குலந்தான்	30

செய்யுள்.	பக்கம்.
கொ	
கொஞ்சும்	34
கொடுங்	31
ச	
சத்தபரிச	47
சி	
சிந்தாமணி	14
செ	
செடத்தை	11
செல்ல	40
சோ	
சோத்ர	15
சோற்றுத்	35
த	
தக்க	50
தட்டா	54
தத்வா	54
தந்தை	8
தனதென்	47
தி	
தில்லை	58
தீ	
தீரா	7
து	
துரங்கம்	51
தூ	
தூல	56
தே	
தேனே	4
தொ	
தொந்த	52
ந	
நல்லார்	22
நா	
நாளோ	16
நான்வே	60
நி	
நிலங்கால்	33
நீ	
நீர்மேற்	30
நெ	
நெஞ்சிற்	42
ப	
பச்சை	43
பஞ்சா	4
பண்டு	3
பறந்த	10
பா	
பாகுசேரு	13
பாதாம்	1
பூ	
பூத	53
பெ	
பெரியோ	19
பே	
பேயே	9
பொ	
பொன்னே	56
ம	
மண்ணுல்	27
மருத	49
மு	
முகம்பார்த்	37
முக்கட்	58
மூ	
மூலத்	17
மூன்றே	57
மெ	
மெய்யிற்	7
வ	
வன்ன	8
வி	
விதியின்	18
வினையின்	29
வெ	
வெகுநாட்	14

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

திவ்ய தேசயாத்திரையின் சரித்திரம்: (இந்தியாவிலுள்ள பல திவ்ய ஸ்தலங்களின் மகிமையும் விசேஷங்களும், அந்த ஸ்தலங்களுக்கு இந்நூலின் ஆசிரியர் யாத்திரை செய்த வரலாறும்)	2	0	0
சிவமஹாபுராணம்: வேதவியாசமுநிவரருளிய பதினெண் புராணங்களு ளொன்றாகிய இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் வசனரூபமாக மொழிபெயர்க்கப்பட்டது: (48 படங்களுடன் கூடியது)	5	0	0
திருவெங்கைக்கோவை: (சிவப்பிரகாச சுவாமிகளருளிய இவ்வரிய கோவைக்கு நூதனமாய் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை, விசேஷ உரைகளுடன்) ...	2	8	0
இந்து பைபில் என்னும் ஆரியர் சத்தியவேதம்: உபநிஷத்துக்கள் முதலிய ஹிந்துமதத்தின் உண்மைகள். [நூலாசிரியர் படத்துடன்]	1	12	0
மதவிருக்ஷம்: (உலகத்திலுள்ள பெரிய மதங்களின் சரித்திரமும் வரலாறும்: (மூன்று பாகம் அடங்கியது) ...	1	12	0
குசேலோபாக்யானம்: (குசேலரது திவ்ய சரித்திரத்தைக் கூறும் இந்நூல் 620 பக்கங்களும், 772 செய்யுட்களும், ஒவ்வொரு செய்யுளுக்கும் பதவுரை, பொழிப்புரை, விசேஷ உரைகளும், 28 படங்களும் கொண்டுள்ளது)...	3	0	0
ஸ்ரீ விவேகாநந்த விஜயம்: விவேகாநந்த சுவாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத்திரட்டும்: (சுவாமிகள் படத்துடன்)	1	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச விஜயம்: (ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அற்புத சரித்திரமும், கதாமிர்தமும்: பரமஹம்சர் படத்துடன்)	1	4	0
ஸ்ரீ சங்கர விஜயம்: ஆதி சங்கராசாரிய சுவாமிகள் சரித்திரம் (ஆதி சங்கரர் படமும், சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் படமும் கூடியுள்ளது)	1	0	0
ஸ்ரீ பகவத்கீதை: (ஸ்ரீமத் பொன்னம்பலசுவாமிக ளியற்றிய கூடார்த்ததீபிகை என்னும் உரையுடன்) ...	2	0	0

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்: (82 பக்தர்களின் சரித்திரம்)	3	0	0
பிரபோத சந்திரோதய வசனம்: அல்லது மெய்ஞ்ஞான விளக்கம்)...	1	0	0
பிரபுலிங்கலீலை வசனம்: (நூதனமாய் தமிழில் வசனப் படுத்தப்பட்ட அரிய நூல்)	0	12	0
பழமொழி அகராதி: (இதில் தமிழ் நாடுகளில் வழங்கும் சுமார் 12,000 பழமொழிகள் அகராதி வரிசையாகத் திரட்டி அச்சிடப்பட்டுள்ளன)	2	0	0
நைடதம் மூலமும் உரையும்: (இதில் அன்னமும் தமயந்தியும் அமைந்த உயர்ந்த ஆப்டோன் வர்ணப்படமும், 27 விதசித்ரப்படங்களும் அடங்கியுள்ளன)	2	0	0
ஷை மூலம் (செய்யுளகராதியுடன்)...	0	12	0
விநோதரசமஞ்சரி: (நூதனமாய்ச் சேர்க்கப்பட்ட தமிழறியும் பெருமாள் கதையுடன்)	1	2	0
நாலடியார்: (மூலம், பதவுரை, பொழிப்புரை, விசேஷவுரை, இங்கிலீஷ் மொழிபெயர்ப்புகளுடன்) ...	1	2	0
அகம்புற ஆராய்ச்சி விளக்கம்: வேதாந்த சாஸ்திரத்தின் பல அரிய விஷயங்களைத் தமிழில் வசன ரூபமாகத் திரட்டி ஸ்ரீமத் சச்சிதாநந்த சுவாமிகள் மாணாக்கர் ஒருவர் இயற்றிய அரிய நூல் [நூலாசிரியர் படத்துடன்] ...	1	4	0
தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு: முதல் மூன்று பாடல்களுக்கு விரிவான உரையும், நூல் முழுதும் வரும் பாடல்களிலுள்ள அரும் பதங்கட்குக் குறிப்புரையும் அடங்கியது (உயர்ந்த கிலிட்டு பயிண்டு) சுவாமிகள் சரித்திரம், படத்துடன்	1	0	0
திருவாசகம்: (புதிய பதிப்பு) மாணிக்கவாசக சுவாமிகள் ஆப்டோன் படத்துடன்: இப்பதிப்பில் செய்யுள்கள் மூலத்தை வாசிக்கும்போதே கூடியமட்டும் பொருள் விளங்கும்படி சந்தங் கெடாதவண்ணம் சந்தி பிரிக்கப்பெற்று, பைகா (பெரிய) எழுத்தில் நூதனமாய் அச்சிடப்பட்டுள்ளன: மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரமும் காலவரையறையுடன் நூதனமாய் எழுதிச்சேர்க்கப்பட்டுள்ளது ...	1	0	0

உ

சிவமயம்.

காஞ்சிபுரம் வித்வான்

சபாபதிமுதலியாரவர்களியற்றிய

அருணாசல சதகம்.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

விலை அணா 1.

சிவமயம்.

அருணாசல சதகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

திருநாதன் றேடரிய சேவடியான் றன்மேல்
அருணா சலசதக மன்பாத் - தெருணாவால்
சொல்லுதற்கு மும்மதத்த தும்பிமுகத் தான்பதும
மெல்லடியே நற்றுணையா மே.

நூல்.

கலிவிருத்தம்.

பொன்பாவுகொன் றையினோடுவான் புனலாறுவெண் மதிசூடுநீ, என்பாமுமினிதாவணிந் திடுதன்மையா லெளியேன்சொலும், புன்பாடலிங் கிதுதன்னையும் போற்றிக்கொள்வர் யெனவுள்ளெழும், அன்பாலுரைத் தேன்கொண்டருள் அருணாசலா அருணாசலா. (க)

கடியார்துள வத்* தொங்கலான் கமலப்புது மலர்மேவினன்
படியூடிடந் தடிதேடவும் பறந்தன்னமாய் முடிதேடவும்
கொடியேன்மன மேகோயிலாக் குடிமேவினை யெனிலையநின்
அடியாரெலா மென்சொல்லிடார் அருணாசலா அருணாசலா. (உ)

* தொங்கல் - மாலை.

கற்பம்மனு கற்பம்முப கற்பம்மெனு முறையால்வரு
பொற்பின்மிகு திருநீறணி புனிதர்க்கலா னின்றுளெனு
நற்பங்கய நறுமாமலர் நணுதும்மரு டானெய்துமோ
* அற்பின்னடி யார்போற்றிடும் அருணாசலா அருணாசலா.(௩)

வில்லார்மலர்க் கணைபேவிய வேளைப்பொடி யாச்செய்தனை
கல்லாலெறிந் தவன்முத்தியே காணப்பரிந் தனையாதலாற்
பொல்லாமனத் தவனென்றெனைப் புறமேவிடுத் திடலையனே
அல்லார்†களத் தெம்மண்ணலே அருணாசலா அருணாசலா.(௪)

முடிபட்டமென் றனக்கேகமலர் முகிழ்போற்குழைந் திடக்கண்டிடும், வடிபட்டநோக் குடையாள்புவி வாழ்வோடளித் திடுவாண்மனம்,பொடிபட்டநின் றிருமேனியிற் பொரு‡ பூழியன் கையிற்பிரம், படிபட்டபோ தென்பட்டதோ அருணாசலா அருணாசலா. (௫)

வானாகினை வளியாகினை மால்வேதனோ டமரர்க்கெலாங்
கோனாகினை யடியார்மனங் குடிகொண்டவ ருணலூறிடுந்
தேனாகினை யமுதாகினை தேரூர்ந்திடர் செறிபோரினில்
ஆனாகிமால் வாவூர்ந்திடும் அருணாசலா அருணாசலா. (௬)

புல்லாகியே பூடாகியே புழுவாகியே மாமாகியே
கல்லாகியே னுந்நின்னகர்க் கண்மேவிலே னினியெங்ஙனே [ம்
பொல்லாப்பிறப் பொழிந்துய்குவேன் புலைநாயினே னிமயந்தரு
அல்லார்குழற் கொருபாகனே அருணாசலா அருணாசலா. (௭)

---

* அற்பு-அன்பு. † களம்-கண்டம். ‡ பூழியன்-பாண்டியன்.

படைக்குந்தொழி லயற்கீந்தனை பரிக்குந்தொழி லரிக்கீந் தனை, துடைக்குந்தொழி லரற்கீந்தனை துதிக்குந்தொழி லடியார்க்கெலாங், கிடைக்கும்படிக் கினிதீந்தனை கிளரும்வகை தனையன்றுநீ, அடைக்குந்தொழி லாளானதென் அருணாசலா அருணாசலா. (அ)

பரிந்திட்டற மெண்ணான்குமுன் பயில்வாளிருக் கவுநின் னருள், சுரந்திட்டவன் றொண்டர்க்கெனச் சோறன்றுநீ கச் சூரினில், இரந்திட்டதென் னோசொல்லுவா * யெகினத்தவன் றலைபொன்றினை, அரிந்திட்டதிற் பலிதேர்ந்திடும் அருணாசலா அருணாசலா. (௯)

மையார்விழி மலைமாதொடு மருவுந்திருக் கோலத்தையோர்
கையார்புனன் மலரானிதங் காணப்பரி யாதென்னையோ
மெய்யானது வேறாகவே வேதாவரி யுழல்வுற்றனர்
ஐயாவவர் மதியென்கொலோ அருணாசலா அருணாசலா. (௧0)

வாதாசன ஞண்வின்மலை மாலார்கணை மறையேபரி
போதாசன னேசாரதி புவியோத மாக்கொண்டுபின்
நாதாபுர நகைத்திட்டது நவிலும்மவ ரகமங்கவேர்
ஆதாரமா றினுமேலுறும் அருணாசலா அருணாசலா. (௧௧)

முன்னாளிதழ் நறுமாலையு முரிதோலுமே புனையத்தரும்
பொன்னா†ரிதழ்பினோடும்வெம் புலியானைமற் றிவைதம்மொடு
மன்னாப்பயி ரறவெண்ணரியோ வளர்மாமலை யுருவாயினை
அன்னாவெனு மன்பர்க்கருள் அருணாசலா அருணாசலா. (௧௨)

---

* எகினம் - அன்னம். † இதழி - கொன்றை.

மேனுளொரு விழியுன்பத மேல்சாத்திய மாயோன்பெரு
மீனுனநா ளினுமாங்கவன் விழிகொண்டது ருசியென்றுதிங்
கானார்கரும் பதைவேரொடு களைகின்றது போலானதால்
ஆனயனார் தொழுமையனே அருணாசலா அருணாசலா. (கங)

பாரின்கணே யைந்தாகினை பகர்நீரிடை நான்காகினை
சேருந்தழற் கண்மூன்றெனச் செறிந்தாய்வளிக் கிரண்டாகினை
நேரும்விணி லொன்றாகினை நிமிரும்முயிர்க் குயிராகினை
ஆருன்னிலை யறிவார்சொலாய் அருணாசலா அருணாசலா. (கச)

மாறுவாக் தருவோமென வைகுந்தனும் மலர்த்தேவனு
நூறுயிர முறைவந்தெதிர் நுவல்கிற்கினு நின்னன்பர்கள்
பேறுய்ந்தை நினைவார்கொலோ பிறவிக்கட லதுநீந்தவே
ஆறுறுநீத் தவர்வாழ்த்துறும் அருணாசலா அருணாசலா. (கரு)

ஊனந்தரு மிவ்வாழ்வினி லுலையேற்றுமா மையினண்ணியே
ஈனந்தொடர் துயர்மேவினே னென்செய்குவே னெளியேனரு
மோனந்தருநிலையீதென மொழிவாயெனி லினியுய்குவேன் [ண்
ஆனந்தமே யுருவாகிய அருணாசலா அருணாசலா. (கசு)

இடியுங்கரை மரமாமென வெண்ணமலிவ் வுடறன்னையோர்
பிடியுங்குறை யாதுண்டுநான் பெரிதேவளர்த் துனதன்பினில்
படியுங்குண மிலனாயினும் பரிவாருனை யலதியாவரே
அடியும்முடி யுங்காணுண அருணாசலா அருணாசலா. (கஎ)

* மட்டார்மலர் கொடுநின்னடி மலர்பூசனை செய்கின்றி
லார், மொட்டார்தனத் தார்தம்மையே முயங்கித்திகைப் பா

* மட்டு - தேன்.

ணையையோ, கெட்டாரவர் தமக்குன்னருள் கிடையாதுமுப்
புரநீறெழ, அட் * டாரணன் றொழுநின்றருள் அருணாசலா அரு
ணாசலா. (௧௮)

பாம்பின்விட வாயிற்குளே படுதேரைபோ லெளியேனுளந்
தேம்பிப்புல னிற்சிக்குறாத் திகைப்புற்றுநல் லுணர்வின்றியே
சாம்பிக்கிடக் கின்றேனரு டருவாயெனி லினியுய்குவேன்
ஆம்பற்சிறு வாய்பங்கனே அருணாசலா அருணாசலா. (௧௯)

வீட்டுக்கொரு வித்தாகிய மெய்ஞ்ஞானநன் னெறிதேர்கிலார்
பாட்டுக்கருள் செய்வாயெனும் பண்பேணுநன் குணர்கிற்கிலார்
கேட்டுக்கிட மாய்நாடொறுங் கிறிசெய்குவா ருய்வார்களோ
ஆட்டுக்குவல் லவனாகிய அருணாசலா அருணாசலா. (௨௦)

செம்பிற்களிம் பதுநீங்கவே செம்பொன்னெனத் திகழ்
தன்மைபோல், பம்புற்றமும் மலநீங்கவே பரமாவைநீ யென
வோதினை, வம்புற்றநா யேனோர்ந்திலேன் மயிலைக்குளுங்
கயிலைக்குளும், அம்பர்க்குளு மகிழ்பூத்திடும் அருணாசலா
அருணாசலா. (௨௧)

பாராளுமன் னவர்செல்வமும் பகரும்விசும் பிறைசெல்வ
முஞ், சீரானவே தன்செல்வமுந் திருமான்மகிழ் தருசெல்வ
முங், காராருமின் னெனவெண்ணியுன் கழல்போற்றுவார் தஞ்
செல்வமிங், காராலுமோர் வொண்ணாததாம் அருணாசலா
அருணாசலா. (௨௨)

---

* ஆரணன் - பிரமன்.

உனக்குண்மறைந் திந்நாளுநா னுறல்போலென தருளா லினி, யெனக்குண்மறைந் திருமைந்தனே யென்றாய்குரு வாய் வந்துநீ, நினைக்குந்தொறு நினைக்குந்தொறு நீயன்றியொன் றுங்காண்கிலன், அனக்குண்டமோர் * பூதக்கருள் அருணா சலா அருணாசலா. (உ௩)

காவிக்குநேர் விழிமாதரார் காமக்கட லதின்மூழ்கிய
பாவிக்குநின் னிருதாட்புணை பாலித்திடா யெனிலுய்வனோ
நாவிக்கருள் செயுமையனே ஞானத்தவர் புகழ்தூயனே
ஆவிக்குறு துணைமெய்யனே அருணாசலா அருணாசலா. (உ௪)

ஒன்றாகினை பலவாகினை யுளதாகினை யிலதாகினை
யென்றாண மதுகூறுவ தெண்ணாதுதாம் பரமென்றிடுங்
கன்றால்விளா வெறிமாயவன் கமலத்தயன் வெருவுற்றிட
அன்றாழல் வரையாகினை அருணாசலா அருணாசலா. (உ௫)

வளர்கார்த்திகை மாதந்தொறும் வருகார்த்திகை நாடன்னிலே
பளகானதில் லாவன்பர்கள் பரிவாகவே யேத்தித்தொழக்
கிளர்மாமலை தனிலேயொளி கெழுசோதிகாட் டாநின்றநின்
அளவார்தெரி பவரையனே அருணாசலா அருணாசலா. (உ௬)

ஒருபான்மல ரயனாகவு மொருபாறிரு மாலாகவும்
பொருவாவருட் டிருமேனியாய்ப் பொலிவாயிதன் றியுமாமலை
வருபாவையோர் பாலாகவும் வருவாயிதன் றியுமையனே
யருவாவையுன் னருளென்னையோ அருணாசலா அருணாசலா.

---

* பூதக்கு - பூதத்துக்கு.

ஒப்பானதி லொருமூர்த்திபா யொருபாதமார் திரிமூர்த்தியாம்
அப்பான்மைபோன் மலையாகியு மருளின்பெரு மையினையனே
இப்பாருளோர் கண்டேதொழ விருந்தாய்நதி மதியாடர
*வப்பார்சடை முடியண்ணலே அருணாசலா அருணாசலா. ()

இருப்பானது வெளிமாலை யிடத்தேதார்மா கதமாமலை
மருப்பார்மத மலைபெற்றது வளைவில்லொரு பொன்மாமலை
விருப்பாமித ஞாலோவொளி மேவும்மலை வடிவாயினை
யருப்பாரெருக் கணிமாலையாய் அருணாசலா அருணாசலா.(உக)

பொறியின்வழி மனம்போக்கிடார் பொன்னந்திரு வடி சேர்வதுஞ், செறியும்மிரு வினையாளர்க டிகழும்பிற விபிலாழ் வதும், வெறிகொண்மரை பரிதிக்கெதிர் விகசித்துவா டுதல் போலுமென், றறியுந்நிலை யெற்கீந்தருள் அருணாசலா அருணாசலா. (௩0)

படியாவுமோர் குடைநீழலிற் பரிக்கும்மவர் மகிழ்செல்வ முங், கடியார்தரு நிழல்வைகுறுங் † கண்ணாபிரான் மகிழ்செல் வமு, நெடியோன்மகிழ் திருசெல்வமு நின்னன்பர்தாள் பணிந் தேத்திடும், அடியாரடிப் பொடிநேருமோ அருணாசலா அருணாசலா. (௩க)

காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனலின்னடுத் தவஞ் செய்குவார், தேட்டுற்றநற் கதிகாணவென் செயலிங்கிதுன் கோயிற்குளே, வேட்டுற்றல கிட்டேதிரு மெழுகிட்டிலார் க[illegible]

* அப்பு - கங்கை. † கண்ணாபிரான் - இந்திரான்.

காண்பரோ, ஆட்டுக்குமன் றினினின்றிடும் அருணாசலா அருணாசலா. (௩௨)

பிறவாநெறி தருவானுநீ பிறக்கும்படி செய்வானுநீ
யிறவாவரந் தருவானுநீ யிறக்கும்படி செய்வானுநீ
மறவாதுனை வாழ்த்தும்படி வந்தாளவும் வேண்டுமையா
* அறவாணர்வாழ்த் தொலிமேவிய அருணாசலா அருணாசலா.()

உன்றாண்மலர் முடியாகவே யுறுமன்பர்கூற் றுவர்பெற்றபே
றொன்றேனுமா லயன்வானுளோ ருறுகின்றில ரெனிலாங்கவர்
கன்றார்களோ விதுநன்றுகொல் கருணாகரா மதிசேகரா
அன்றாலமுண் டருள்செய்திடும் அருணாசலா அருணாசலா.(௩௪)

மானேந்தினை மழுவேந்தினை மதியேந்தினை நதியேந்தினை
கானேந்திலா வெருக்கேந்தினை கமலன்முடி காத்தேந்தினை
வானேந்தினு ரெனும்பேந்தினை வறியேன்மொழி யையுமேந்தி
ஆனேந்தவே வந்தாளுவாய் அருணாசலா அருணாசலா. [நல்

திருமாலொரு கண்வாங்கியுன் செஞ்சேவடி மிசைசாத்தினன்
கருமாவடர் கூண்ணப்பருன் கண்ணுக்கொரு கண்சாத்தினர்
பெருமானிவர்களில்யாவரேபெரியோரெனச் சிலரெண்ணுவார்
அருமாதவர் மெய்யோர்குவார் அருணாசலா அருணாசலா.(௩௬)

பூமாந்திரேன் முதலோர்தமைப் பொன்றச்செய்வை யெனவோர்ந்துமே, காமாந்தக னவாயெனுங் கருத்தேபெரி தாக்கொண்டுவீ, ணேமாந்தர்கள் புகழ்வாரிது வெறியோமிகு

* அறவாணர் - தருமத்தினால் வாழ்வோர்.

மஞ்ஞானமோ, ஆமாம்பிணை திரிசாரல்சூழ் அருணாசலா அருணாசலா. (௩எ)

கல்லானைமுன் கைநீட்டியே கரும்புண்ணுமா றருள்செய்தநீ
பொல்லாதகன் மனமுன்னருட் போதந்தனை யண்ணச்செய
வல்லாயலைபோனிற்பதென்மாயஞ்சொலாய்மகிழ்தொண்டர்கள்
அல்லாதவர்க் கரிதாகிய அருணாசலா அருணாசலா. (௩அ)

வாட்டேறுகண் ணிசைஞானியார் மைந்தன்றனை யாட்கொண்டநாள், பாட்டேயருச் சனையாமெனப் பகர்ந்தாயஃதுணர்ந்தும்பிறர், மாட்டேகவி சொலவெண்ணுமென் மருணீக்குவா யிருவோர்கள்போ, ராட்டேசெய வவர்முன்வரும் அருணாசலா அருணாசலா. (௩௯)

ஈனந்தரு பிறவிக்கட லிடையேழையேன் பலகால்விழ
ஊனந்தரும் வினையாம்வளி யுறுவித்தலா லுனதின்னருள்
மோனந்தரு குகைசேரவே முன்னிக்கொடு வந்தேனையா
ஆனந்துமா டியவையனே அருணாசலா அருணாசலா. (௪0)

நாய்தன்னினுங் கடையாகிநின் னல்லன்பர்தம் பாணணிலேன், வாய்தன்னினின் றனைவாழ்த்திலேன் வணங்கிப் பணிசெய்தும்மிலன், பேய்தன்னொடா டியவாறுபோற் பித்தேறுமென் னகநண்ணினை, ஆய்தன்னினு மருள்செய்திடும் அருணாசலா அருணாசலா. (௪௧)

சந்தித்துமா லயன்வாதுசெய் தலினுங்கவர்க் கரிதாகினை
வந்தித்தலா லொருபாணன்முன் வந்தாய்விற.கோதிக்கொடு

சிந்தித்திடி லவரித்திறந் தெளிவெய்தியின் னருள்சேர்குவார்
அந்திப்பிறை முடியாளனே அருணாசலா அருணாசலா. (சஉ)

உமையாளரு ளனையாகவு மொருதந்தைநீ தானாகவுந்
தமருன்னடி யாராகவுஞ் சார்பற்றவர் தமைநோக்குறி
னமனார்தனு காதோடுத னேயனுணர்ந் துணையண்டினேன்
அமர்நீதிபார் தொழுமையனே அருணாசலா அருணாசலா. ()

கார்மேவிய களங்கண்டனன் கழன்மேவுமால் விழிகண்டனன்
போர்மேவுகு லங்கண்டனன் போதன்றலைக் காங்கண்டனன்
சீர்மேவுமா திடங்கண்டனன் சிறிபேனிட ரினிக்காண்பனோ
ஆர்மேவுதா ரணிதோளனே அருணாசலா அருணாசலா. (சச)

திருமாலய னைதாண்முடி தெரிவானல மந்தார்முனம்
ஒருமாதுவந் தியின்வாய்தலி னுறுமாறறி கிலாரகிநல்
அருமாறிய திறனென்னையோ வுமைபாகனே யருளாகனே
அருமாதவர் பலபேத்திடும் அருணாசலா அருணாசலா. (சரு)

வெல்லாளமன் னவன்வாழவோர் மகவாயவற் கருளீந்திடும்
* வில்லார்மதி முடியண்ணலே வினையேயன்பிறந் திடவைப்பை
கல்லாய்மா மாயனுநீ கனிவோடமர் தருமிப்பதி [யேயல்
யல்லாவிடந் தனில்வைத்திடேல் அருணாசலா அருணாசலா. ()

வரமாமல ரவனீந்திட வானோர்களுக் கிடரேசெயு
நரகாசுரன் றனைவெல்லமுன் னாராயணன் றவஞ்செய்தலின்
ஒருபாதியாங் கவனுக்களித் தொருபாதிமே தவிக்கீதலால்
அருவாய்மரு வினைபோசொலாய் அருணாசலா அருணாசலா. ()

---

* வில் - பிரகாசம்.

எள்ளுக்குளெண் ணெய்போலவு மெறிமாமணி யொளி போலவுங், கள்ளுற்றபூ மணம்போலவுங் கனகத்துறு மொளி போலவும், விள்ளுற்றிடா துயிர்தோறுநீ மேவுற்றதோர்ந் தவர்ப்போற்றுவேன், அள்ளுற்றநீ றணிமெய்யனே அருணா சலா அருணாசலா. (சஅ)

உமையாளுன விழிமூடநா ளொளிருங்கதிர் மதிவானிடை சமைவாயிருக் கவுநள்ளிரு டாணிக்குண்மூ டியதன்மையாற் கமையாருநின் விழிகாரணக் கதிர்மாமதி யெனவோர்ந்தனன் அமைவாமனத் தவர்போற்றிய அருணாசலா அருணாசலா. ()

பெருமைக்கட னிறவண்ணனும் பிரமன்முத லியதேவரும் ஒருமிக்கமாய் தருமூழிதோ றொருதானுமாய் தானீங்கவே தருமக்கட வுள்வெள்விடை தானுய்வா வுவந்தூர்ந்திடும் அருமைத்திரு வருளாளனே அருணாசலா அருணாசலா. (ரு0)

கலையார்மதி கதிராகுநின் கண்ணோரிரண் டையுமூடு நாண், மலையான்மகள் கழுவாய்செயும் வகைசொல்லியே வினை நின்னரு, ணிலையீதெனி னெவருய்ந்திடார் நிமிர்செஞ்சடை மிசையேமதி, அலையார்நதி யொடுசூடிய அருணாசலா அருணா சலா. (ருக)

தக்கன்முனிந் தேகூறிய சாபந்தொடர்ந் தெய்தாதனைப் புக்கண்முசந் திரனோர்கலை பொலிவெய்தவுன் முடிமீதிலே வைக்கும்படி யச்சந்திரன் மனநைந்துசெய் தவமென்னேயோ * அக்கன்புட னணிமெய்யனே அருணாசலா அருணாசலா. ()

* அக்கு - சங்குமணி.

உன்னன்னிலை வினவும்பொழு துமைதன்னையே வியந்தா ளென, மன்னும்பமு னையிற்சங்கமாய் மருவிச்சிறு விதிமா மக, ளென்னப்பொலி கென்றேவிய தெவர்க்கும்மரு டாவல் லவோ, அன்னத்தவன் பணியையனே அருணாசலா அருணா சலா. (ருக)

விண்ணாளுமிந் திரனக்கினி * விறலந்தக னிருதர்க்கிறை
தண்ணார்வரு ணன்வாயுவே தனதன்னுட னீசானனும்
உண்ணாடிமூழ் கியதீர்த்தமின் றென்றேயெம திடர்தீர்த்திட
அண்ணாமலை யெனநீடிய அருணாசலா அருணாசலா. (ருச)

பூசிக்கநன் மலருண்டுநீம் புனலுண்டுநன் னெறிதேர்குவான்
வாசிக்கவா கமமுண்டுநின் மலர்நோக்கமு முண்டாகுமே
னேசித்தெளி யேனுய்குவே னீறேடுகண் மணிபூண்டுளத்
†தாசற்றவர் தொழுமையனே அருணாசலா அருணாசலா. (ருரு)

திருவாசக மொன்றுண்டுநற் றேவாரமு முண்டாங்கவை
கருவாய்வழி வாராநெறி காட்டும்மெனச் சான்றோர்சொலத்
தெருளாதுவீ ணேயையவோ தெருநாயினுங் கடையாயினேன்
அருமாதவர் துதியோவிலா அருணாசலா அருணாசலா. (ருசா)

பல்லார்விடப் பணியாமுன்னைப் பரிந்தேதொழ வருளீந் ததும், பொல்லாவிட முண்டண்டரைப் புரந்தாள்வது மோர்ந் தும்முனைக், கல்லார்களைச் சேராநெறி கடையேற்கருள் செய வேண்டுமால், அல்லார்சுட லையிலாடிய அருணாசலா அருணா சலா. (ருஎ)

---

* விறல் - வெற்றி. † ஆசு - குற்றம்.

தேவாதிதே வாவென்கிலேன் சிவலோகநா தாவென்கிலேன்
காவாயா னேயென்கிலேன் காபாலிவந் தாளென்கிலேன்
சேவானதூர் வோயென்கிலேன் சிறியேனத ஞலோவையா
ஆவாவென வருள்செய்கிலை அருணாசலா அருணாசலா. (ருஅ)

கன்ணுகுபே ராவிந்திரா காமாமுக சோமாபுவி
மன்னுவென வேபொய்யரை வாழ்த்திக்கவி சொல்லாமனன்
குன்னாருள் பெருமன்பர்தா ளுளம்வைத்துவாழ்த் துறநல்கு
அந்நாவலூ ராளிக்கருள் அருணாசலா அருணாசலா. [வாய்

பச்சென்னிற மொருபாலுறப் பைம்பொன்னிற மொருபாலுற
வெச்சென்றதீ நிறமேவிமேல் வெண்ணீறுபூத் திடநின்றநீ
நச்சுண்டிருண் டிடுகண்டமு நணலுற்றதைம் பூதங்களுக்
கச்சென்னநிற் பதுகாட்டவோ அருணாசலா அருணாசலா.(கூO)

பண்ணுகணைத் துயின்மாயனே பரிவோடுகொத் தருள்செய்குவ
னென்னுச்சில ரெடுத்தோதுவ ரீதுண்மையே யிமையோர்வரை
தன்னுற்கடைந் திடவந்தநஞ் சங்கண்டவ ரஞ்சித்தொழும்
அந்நாள்புர வாவண்ணமென் அருணாசலா அருணாசலா. (கூக)

காமத்தொடு கொலைசூதுபொய் களவுக்கிடந் தந்தென்மனம்
பூமத்தமென் பணிகின்றநீ பொருந்தற்கிடந் தாராமையால்
ஈமத்தெரி நரகம்மெனக் கிடமாகுமென் றெணிநின்னரு
ளாமெய்த்துணை யேநம்பினேன் அருணாசலா அருணாசலா. ()

உனக்குள்ளடி யேன்மேவிய முனையோர்கிலா மையினிவ்
வுடல், எனக்கென்னவீந் தனைமுன்னிரு ளென்றேடுசேர்ந் தந்

தோவெனை, நினக்குப்புறம் பாய்நிற்கவே நீடுற்றதா லென்செய் குவேன், அனக்கன்னிநேர் தருமாதர்சூழ் அருணசலா அருண சலா. (கூ௩)

பாசக்கிடம் * பசுவென்னவும் பசுவுக்கிடம் பதியென்னவு
மாசற்றமா மறைபேசுமம் மாயைப்பசு வாமென்னுளே
தேசிற்பொலி பதியாகுநீ திகழ்கின்றதற் புதமல்லவோ
ஆசைக்குமே னிமிர்சோதியே அருணசலா அருணசலா. (கூ௪)

யான்செய்தனன் பிறர்செய்தனரென நியானெனுமஞ்ஞானமே
யூன்செய்பிற வினைநல்குமென் றுணர்ந்தேனின தருளாலினி
வான்செய்பத விகள்யாவினு மபங்காநெறி தந்தாளுவாய்
ஆன்செய்நெடுங் கொடியாளனே அருணசலா அருணசலா. ()

வெய்யோனுத யஞ்செய்திடில் விரவும்மிரு ளொழிவா தல்போற், பொய்யானதில் குருவந்திடப் பொய்ப்போதநீங் கிடுமென்னவே, மெய்யானநூ லுரைசெய்யவும் வீணேதிரிந் துழல்வார்சிலர், ஐயாவவ ருய்வார்கொலோ அருணசலா அரு ணசலா. (கூகூ)

பரையுன்னிரு விழிமூடுகைப் பதுமத்தனி விரற்பத்திலும்
வருகங்கைபத் தினின்மூன்றயன் மாலிந்திர னுக்கீந்துமற்
றொருநான்குமூன் றையும்வேணியி லொளித்துப்புவ னங்காத்
அருமைச்செய லறிவாரெவர் அருணசலா அருணசலா. [தநின்

மடவார்மய ருனோர்புறம் வருகின்றபல் பிணியோர்புறந்
திடமம்வறு மையுமோர்புறந் தீராதநீப் பசியோர்புறம்

* பசு - சீவன்.

கடனாகும்வன் பேயோர்புறங் கழிமானமாங் குரங்கோர்புறம் அடலான்மெலிந் துணையண்டினேன் அருணாசலா அருணாசலா.

தாய்மார்களுஞ் சலித்தார்வரு சமனாருமோ சலித்தார் மலர், வாய்வேதனுஞ் சலித்தானழன் மலிகும்பியுஞ் சலித் திட்டதாற், சேய்நாளினிச் செயும்வண்ணமென் செப்பாய்பல கலைவேதமும், ஆய்மேலவர் தொழுமையனே அருணாசலா அரு ணாசலா. (௬௯)

மனையாண்மனம் வெறுப்பாகவு மாதாமனம் வெறுப்பாகவுங் கனிவானபெண் கள்பிள்ளைகள் கசந்தேமனம் வெறுப்பாகவுஞ் சனியாமிரு மலுமீளையுஞ் சார்ந்தேழையே னலியாவகை அணையாமென வந்தாளுவாய் அருணாசலா அருணாசலா. (௭௦)

காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனலுக்குளே தவஞ் செய்குவார், நாட்டுக்குளே யறஞ்செய்குவார் நதியாவினும் போய்மூழ்குவார், பாட்டுக்குநால் வர்களெய்திய பரிசிற்பய னடைவார்களோ, ஆட்டிற்பொலி தீக்கண்ணனே அருணாசலா அருணாசலா. (௭௧)

* பறவைக்கர சானைந்தவெம் பணிவந்துபோற் றப்பூண் டநீ, மறமுற்றுமா தவரேவிட வருபாய்பணிந் திடவில்லையோ, திறமுற்றுவன் பிலனென்றெனைச் செயிர்த்தாட்கொளா வகை யென்னைமுன், அறவர்க்கரு டருமையனே அருணாசலா அரு ணாசலா. (௭௨)

* பறவைக்கரசு - கருடன்.

எரிகின்றதீப் போற்சீறியே யியமன்வரு மேற்பேதை யேன், பரிகின்றமார்க் கண்டேயர்போற் பணிந்துன்பதம் போற்றுந்திறந், தெரிகின்றிலே னதனாலினே சிறியேனை யாண் டருள்வெம்பலி, யரிகின்றசென் னியிலேற்றிடும் அருணா சலா அருணாசலா. (எங)

தம்மாலறி வனயாவையுந் தாமல்லவென் பதுமைந்தனே சும்மாவிருந் திடுமாறெனச் சொல்லித்தெரி விப்பான்மலர்க் கைம்மான்முத லியயாவையுங் காந்தோர்குரு வாய்வந்தனை அம்மாவுன தருளென்னையோ அருணாசலா அருணாசலா. (எச)

காலாழ்களர் படுமாயின்வெங் கரிதன்னையு நரிகொல்வது போலாசையாம் படுசேற்றினிற் புலையேன்விழுந் துழல்கின்ற தாற், பாலாமிரு வினைவெல்லுநின் பதமெங்ஙனந் தொழுவே னையா, ஆலாலமுண் டருணாதனே அருணாசலா அருணாசலா.()

பொருளீட்டவு மதனைவப் பொத்தற்சடந் தனையோம்பவு மருளீட்டுமா தர்களாசையின் மயங்கித்திரி தாவுங்கொலோ தெருளீட்டுமித் தனுவிந்தனை தேவாதிதே வாவென்னையே அருளீட்டுமன் பர்கள்போற்றிய அருணாசலா அருணாசலா. ()

பொய்யானதே குடிகொண்டது புழுவானதோ நெளி கின்றது, சையோகமே விழைகின்றது சவமாகிமேல் விழுகின் றது, மெய்யானிங் கிதைநாயினேன் வீணேசுமந் துழல்கின் றிலேன், ஐயாவுன தருள்வேண்டினேன் அருணாசலா அருணா சலா. (எஎ)

இந்நாள்வரை யிழுமுண்டசோ றெல்லாமள விடவெண் ணிலோ, பொன்னுமலை தானேருமோ புலையேனின முணலே பெரி, தென்னுவழல் வேணுதலா லியமன்வர வேயுன்னுவான் அந்நாளின்மு னீவந்தருள் அருணாசலா அருணாசலா. (எஅ)

பறக்குஞ்சிறை மறையன்னமும் படிகீண்டகோட் டொரு பன்றியுங், கறக்கின்றவான் பாலாட்டியே கனிவாயருச்சித்தின் றவன், இறக்கும்படி செயுமன்பர்தா மெய்தும்பய னுணரார் கொலோ, அறக்குஞ்சியஞ் சடையாளனே அருணாசலா அருணாசலா. (எகூ)

தாய்தந்தைநீ குருதெய்வநீ தமியேனுயி ரதுநீயெனு வாய்தந்தனமொழிவேனலான் மனமாண்ட நின்னடியாரொடுந் தோய்தந்துவல் வினைநீங்கவுந் துலையொத்தநன் னிலைகூடவும் ஆய்தந்திலே னுய்வேன்கொலோ அருணாசலா அருணாசலா. ()

மார்த்தாண்டனின் மலையுச்சிமேன் மதியாதுநா டொறு மேகுதல், பார்த்தாங்கவன் வெருவும்படி பணித்தோர்புறஞ் செலவைத்தநீ, வேர்த்தாவென வுனைமேவுமென் வினையோர் புறஞ் செலவைத்திலை, ஆர்த்தார்முடிக் கணியண்ணலே அருணாசலா அருணாசலா. (அக)

தெள்ளித்தெளி தருமன்பர்பாற் சேர்ந்தேபரு னீவாய் படர், முள்ளிக்குவே லிகள்போடுதன் முறையல்லவென் பது போலவ்னை, யெள்ளித்திரு வருளீந்திலை யெனினேழையே னென்செய்குவேன், அள்ளிப்புனன் முடிமேற்கொளும் அருணாசலா அருணாசலா. (அஉ)

தேன்பட்டசொல் லியராசையிற் றிகழாலவாய்க் கரும்பென்னவே, நான்பட்டநோந் தனன்மேலுமோ நமனார்வரி லென்செய்குவேன், கான்பட்டபூங் குழல்பாகநின் கழல்சூடியாட் கொளவேண்டுமால், ஆன்பட்டநீள் கொடியண்ணலே அருணாசலா அருணாசலா. (அங)

பதியாகுநின் பதமாமலர் பணியாதபே யருநின்புகழ்
துதியாதமூ டருமாலயஞ் சூழ்வந்திடாப் புலையாளரும்
கதியாதுகா ணுவரையையோ காலன்கதை யடிபட்டுநைந்
ததியாகுல மடைவாரலால் அருணாசலா அருணாசலா. (அச)

மாயோனையுந் தொழுகின்றிலன் மலரோனையுந் தொழுகின்றில
ஞயேனினை யேபோற்றுவே னல்காயருளெனிலாங்கவர்
ஏயேயென நகைசெய்வரே யெனநாணிநான் மெலிகின்றனன்
ஆயேயென வடியார்க்கருள் அருணாசலா அருணாசலா. (அரு)

* பொருப்புச்சிலை யாயுன்னருட் போதந்தலைப் படுமன்பர்க
ணெருப்புக்கும்வா யுவினுக்குநீ ணீருக்குமஞ் சார்மேலுமோ
மருப்புக்கடா மறலிக்குமே மனமாய்வுறு ரெனவோர்ந்துநின்
அருட்புக்குவான் விழைகின்றனன் அருணாசலா அருணாசலா.()

வாசிப்பதுன் னடியார்புகழ் வந்திப்பதுன் னடியார்பத
நேசிப்பதுன் னடியார்பத நினைகிற்பதுன் னடியார்பதம்
பூசிப்பதுன் னடியார்பதம் புனைகிற்பதுன் னடியார்பதம்
ஆசிப்பதுன் னடியார்பதம் அருணாசலா அருணாசலா. (அஎ)

---

* பொருப்பு - மலை.

பொன்னுக்குளே யொளியென்னவும் பூவுக்குளே மண மென்னவும், என்னுக்குளே நீமேவுவ தெளியேனுணர் தரு மாறுசெய், துன்னுக்குளே யான்மேவவு மொருநீயருள் செய வேண்டுமோல், அன்னக்கொடி யோன்போற்றிடும் அருணாசலா அருணாசலா. (அஅ)

வேலிக்குழுள் ளிடவெண்ணிலார் வெறிகொண்டபேயர் களாகியோர், காலுக்குழுள் ளிடல்போலுனைக் கடையேன்மறந் திதுகாறுமே, மாலுற்றமெய் யதுபோற்றியுன் மலர்த்தாடொழு மாறோர்ந்திலன், * ஆலிக்குழுள் ளத்தோர்க்கருள் அருணாசலா அருணாசலா. (அகூ)

† நட்டுத்தொழா தவனென்றரு ணல்காயிஃ தோர்வாரெனிற் றெட்டுக்கலா லெறிந்தோற்குமுன் றெலையாதவின் பந்தந்து கட்டுக்கதை யென்றேசிலர் கழறிக்கொள்வா ரேயம்மொழி யட்டிச்சுடு மென்காதினை அருணாசலா அருணாசலா. (கூ0)

கையாற்பெறு பயனின்மலர்க் கழலர்ச்சனை யதுசெய்தலே மெய்யாற்பெறு பயன்மெய்யனீ மேவாலய மதுசூழ்தலே பொய்யானதில் வாயாற்பயன் போற்றித்துதி செயலிங்கிவை ஐயாவெளி யேற்கெய்துமோ அருணாசலா அருணாசலா. (கூக)

மலமூன்றுடை யாருக்கருள் வடிவங்கொடு வந்தாங்கவர் சலமூன்றிரு வினையொப்பிலே தருபோதுவா தனைநீங்கியே நலமூன்றுற வருள்செய்யுநீ நாயேற்கருள் செய்வாய்கொலோ அலமூன்றுதோ ளவனேடிய அருணாசலா அருணாசலா. (கூஉ)

---

* ஆலித்தல் - களித்தல். † நட்டு - நேசித்து.

பாசாடவிக் குள்ளெம்புலப் பகைவேடருக் குறவாதலாற்
காசாசையான் கொண்டற்பார்தங் கடைவாயிறோ றுங்காத்திது
பூசாபல னேவென்றுளே புலம்பித்திரிந் துழல்கின்றிலேன்
ஆசாரமா ருதார்க்கருள் அருணாசலா அருணாசலா. (௬௩)

புலையானதோர் தொழில்செய்யினும் பொய்யானதோர் மொழிபேசினுங், கொலையாகிய செயல்செய்யினுங் கொடிதாங் கள வதுசெய்யினு, மலையா துநின் னருள்சேர்வரேல் வறியே னவ ரடிசேர்வனால், அலையாருகு டியவண்ணலே அருணாசலா அருணாசலா. (௬௪)

படைப்பானுநீ யுலகியாவையும் பரிவாயளித் திடுவா னுநீ, துடைப்பானுநீ பொய்பொய்யெனத் தோற்றுவகை மறைப்பானுநீ, கடைப்பாலனுக் கிரகஞ்செயுங் கண்ணாளனுநீயாய யன், அடைப்பாற்றுயில் வோனுபதென் அருணாசலா அருணா சலா. (௬௫)

பாடார்கவி பரியாருனைப் பணிமாமலர் கொடுபூசியார்
தேடாரடி யார்தம்மையுந் தினமுண்டதே யுண்டையையோ
மாடாமெனத் திரிவாரவர் மனம்வெந்துகும் பியில்வீழ்வரே
ஆடாதபே யுடனுடிய அருணாசலா அருணாசலா. (௬௬)

போகாதுவா யுவையுள்ளுளே பூரித்துநே ரிற்போக்கியே
சாகாமனத் தவராகிநின் சார்புற்றிட வேயெண்ணுதல்
சேகார்தரு பலவேணிகள் செறித்தாங்கதன் மேலேறியே
ஆகாயமெட் டிடல்போலுமால் அருணாசலா அருணாசலா. (௬௭)

மாலாரொரு கற்பந்தனின் மழைமேகமாய் வரவாங்கதன்
மேலாயினை பின்னும்மொரு விடையாய்வர வேயூர்ந்தனை
பாலார்மொழி மாதாய்வரப் பரிவாவிடப் பாலீந்தனை
ஆலாலமுண் ணும்பித்தனீ அருணாசலா அருணாசலா. (கூஅ)

பாய்வானதி நீர்ப்பாய்ச்சினும் படரெட்டியின் கனிகைப்பரு
நாய்வாணிமி ராதாற்பல நாண்கொண்டிறுக் கிக்கட்டினு
மாய்வாகிவன் மனநேருறு வகையாங்கவை போலாதலோர்ந்
தாய்வார்க்கரு ளுனையண்டினேன் அருணாசலா அருணாசலா.

கொம்பாரிடை வண்டார்விழிக் கொங்கார்தனச் சிங்காரிக
ட்பான்மனஞ் சென்றேபழி சண்டாளனை யென்றுள்வைபோ
செம்பாகினேர் மொழிபங்கனை சிந்தித்தவர்க் குபர்வீடருள்
அம்பார்சடை நம்பாவொளிர் அருணாசலா அருணாசலா. (க00)

படியாளுநமன் னவர்வாழவும் பரிவோடுமென் னுயிர்வாழவும்
முடியாமறை தான்வாழவும் முதலானசை வம்வாழவுங்
கடியானெறித் தமிழ்வாழவுங் கவிவாணர்யா வரும்வாழவும்
அடியார்கள்வா ழவுநன்கருள் அருணாசலா அருணாசலா. (க0க)

அருணாசல சதகம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

அருணாசல சதகத்தின்

செய்யுள் முதற்குறிப் பகராதி.

செய்யுள்.	பக்கம்.
இ	
இடியுங்	4
இந்நாள்	17
இருப்	7
ஈ	
ஈனங்	9
உ	
உமையாள	10
உமையாளு	11
உனக்குண்	6
உனக்குள்	13
உன்றூண்	8
உன்னன்	12
ஊ	
ஊனங்	4
எ	
எரிகின்ற	16
என்னுக்	11
ஒ	
ஒப்பான	7
ஒருபா	6
ஒன்று	6

செய்யுள்.	பக்கம்.
க	
கடியார்	1
கலையார்	11
கல்லானை	9
கற்பம்	2
கன்னு	13
கா	
காட்டுக்	7
காட்டுக்கு	15
காமத்	13
கார்மே	10
காலாழ்	16
காவிக்	6
கை	
கையாற்	19
கொ	
கொம்பா	21
ச	
சந்தித்	9
செ	
செம்பிற்	5

செய்யுள்.	பக்கம்.
த	
தக்கன்	11
தம்மா	16
தா	
தாய்தந்	17
தாய்மார்	15
தி	
திருநா	1
திருமாலய	10
திருமாலொ	8
திருவா	12
தெ	
தெள்ளித்	17
தே	
தேவாதி	13
தேன்பட்	18
ந	
நட்டுத்	19
நா	
நாய்தன்	9
ப	
பச்சென்	13

செய்யுள்.	பக்கம்.
படியாவு	7
படியாளு	21
படைக்	3
படைப்	20
பதியாகு	18
பரிந்	3
பரையு	14
பல்லார்	12
பறக்குஞ்	17
பறவைக்	15
பன்னு	13
பா	
பாசக்	14
பாசா	20
பாடார்	20
பாம்பின்	5
பாய்வா	21
பாரா	5
பாரின்	4
பி	
பிறவா	8
பு	
புலையான	20
புல்லாகி	2
பூ	
பூசிக்க	12
பூமாந்	8
பெ	
பெருமைக்	11
பொ	
பொய்யா	16
பொருப்	18
பொருளீட்	16
பொறி	7
பொன்ப	1
பொன்னுக்	19
போ	
போகாது	20
ம	
மடவார்	14
மட்டார்	4
மலமூன்	19
மனையாண்	15
மா	
மாயோனை	18
மார்த்	17
மாலா	21
மாறு	4
மானேக்	8
மு	
முடிபட்	2
முன்னு	3
மே	
மேனு	4
மை	
மையார்	3
யா	
யான்செ	14
வ	
வரமா	10
வல்லா	10
வளர்	6
வா	
வாசிப்	18
வாட்டறு	9
வாதா	3
வானு	2
வி	
விண்ணுளு	12
வில்லார்	2
வீ	
வீட்டுக்	5
வெ	
வெய்யோ	14
வே	
வேலிக்	19

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச விஜயம்:—ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அற்புத சரித்திரமும், கதாமிர்தமும் [பரமஹம்சர் படத்துடன்] 1 4

ஸ்ரீ விவேகாநந்த விஜயம்:—விவேகாநந்த சுவாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத்திரட்டும் [சுவாமிகள் படத்துடன்] ... 1 4

ஸ்ரீ பகவத்கீதை:—ஸ்ரீமத் பொன்னம்பல சுவாமிகளியற்றிய கூடார்த்ததீபிகை என்னும் உரையுடன் 2 0

பிரபோத சந்திரோதய வசனம்:—அல்லது மெய்ஞ்ஞான விளக்கம் 1 0

பிரபுலிங்கலீலை வசனம்:—நூதனமாய் தமிழில் வசனப்படுத்தப்பட்ட அரிய நூல் 0 12

ஸ்ரீ சங்கர விஜயம்:—ஆதி சங்கராசாரிய சுவாமிகள் சரித்திரம் (ஆதி சங்கரர் படமும், சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் படமும் கூடியுள்ளது) 1 0

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்:—(82 பக்தர்களின் சரித்திரம்) 3 0

கல்லாடம் மூலமும் உரையும் [புதிய பதிப்பு] ... 3 0

திருவெங்கைக்கோவை:—(சிவப்பிரகாசசுவாமிகளருளிய இவ்வரிய கோவைக்கு நூதனமாய் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை விசேஷ உரைகளுடன் ... 2 8

இந்து பைபில் என்னும் ஆரியர் சத்திய வேதம்:—உபநிஷத்துக்கள் முதலியன (நூலாசிரியர் படத்துடன்) 1 12

மதவிருக்ஷம்:—(உலகத்திலுள்ள பெரிய மதங்களின் சரித்திரமும் வரலாறும்: (மூன்று பாகம் அடங்கியது) 1 12

திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்:—(இந்தியாவிலுள்ள பல திவ்ய ஸ்தலங்களின் மகிமையும் விசேஷங்களும், அந்த ஸ்தலங்களுக்கு இந்நாலின் ஆசிரியர் யாத்திரை செய்த வரலாறும்) 2 0

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மாம்பாக்கம் உபாத்தியாயரென்னும்

பெயருள்ள

திருச்சிற்றம்பல நாவலரவர்கள்

இயற்றிய

அண்ணாமலைச்சதகம்.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

விலை அணா 2.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அண்ணாமலைச்சதகம்.

விநாயகர் காப்பு.

நேரிசைவெண்பா.

அண்டமனைத் தும்பரவு மண்ணா மலைச்சதக
மொண்டமிழாற் பேதையே னோதவே—தொண்டர் மனத்
தெண்ண வரந்தருநல் யானைதிறை கொண்டருண்முக்
கண்ண வரந்தருந்தாள் காப்பு.

நூற்பெயர்.

நேரிசைவெண்பா

மன்னுதிரு வண்ணா மலைச்சதக மென்றும்பேர்
பின்னு மொருநாமம் பேசுவாம்—இந்நிலத்திற்
றங்கு புகழ்வசந்த ராயச் சதகமென்று
மெங்குந் துதிப்பதா மே.

நூல்.

கடவுள்வாழ்த்து.

ஆசிரியவிருத்தம்.

கார்கொண்ட திருமேனி செந்தா மரைக்கண்ணன்
கமலால யத்தென்கணன்
காணரிய பேரொளிச் சுடராகி யண்டக்
கடாகமூ டுருவிநின்ற

வேர்கொண்ட திருவுருவ மருவுருவ மாகியுல
கெங்கும் வியாபியாகி
யெல்லா வுருக்களொடு மூயிராகி யவ்வுயிர்க்
கின்பவா னந்தமாகிப்
பார்கொண்ட தூலசூக் குமமாகி யழியாத
பரசத்தி யிடமுமாகிப்
பஞ்சகிர்த் தியமும் புரிந்தருள் சுரந்தெழும்
பரசிவ மகாலிங்கமே
ஆர்கொண்ட மலைவளச் சிங்கபுரி யரசுசெய்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசை யுண்ணா முலைக்குரிய
வணைா மலைத்தேவனே. (௧)

திருக்கோவலூர் ஸ்தலப்பெருமை கூறியது.

கருணா கரக்குக முனிக்காக வேமுனங்
கைலாய கிரியின்முருகன்
கைவேல் விடுக்கவந் தான்றலா லேதிருக்
கையில்வே லூராகுமெய்ப்
பொருணய ஞரவ தரித்ததல மௌவையார்
புகலும்வெண் பாவினுக்காய்ப்
பொங்குபா னெய்வந்த பெண்ணைநதி சூழ்தலம்
பொன்மாரி பொழியுந்தலம்
வருமா வருட்பெரிய நாயகியும் வீரட்ட
மாதேவர் வாழுந்தலம்
மாதவக் குகமுனி மகந்தனிற் றெய்வீக
மன்னனவ தாரத்தலம்
அருணா சலக்கிருஷ்ண தாண்டவ வசந்தவா
ணந்தகை வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௨)

அபிஷேகவிதி கூறியது.

சுத்தசல மபிடேக நல்லெண்ணெ யரிசிமாத்
தூண்மஞ்ச ணெல்லிமுள்ளி
தூபஞ்ச கௌவியமோ டாவிநெய் பாறயிர்
சுவையான பஞ்சாமிர்தம்
உற்றபல மாக்கதலி மாதளையு மெலுமிச்சை
யோங்குதம ரத்தைநார்த்தை
யொண்கனிச் சுளைகுளஞ் சித்தேன் றிரட்டுபா
லுயர்கருப் பஞ்சாறுடன்
மெத்துமிள நீரன்னம் வில்வநீர் தபனநீர்
மிளிர்பொன் னிரத்னோதகம்
மென்பசுங கற்பூர நன்புனுகு சந்தனம்
விளங்குதா ராபிடேகம்
அத்தனுக் கித்தகைய வபிஷேக மேபுரிந்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (௩)

அருள்பேறுமா றெங்ஙனமென விரங்கல் கூறியது.

தருமல ரெடுத்துனைப் பூஜைபுரி வோமெனிற்
றண்மலர்த் தேனருந்தச்
சமையந் தெரிந்துமுகை யவிழ்கின்ற போதுவிழ்
தனிவண்டி னெச்சிலாம்
விரிபுன லெடுத்துனக் காட்டுவோ மென்கிலோ
மேயுமண் டூகமாமை
மீனத்தை நெண்டிருந் துலவலா லந்தநீர்
மிகுதியுந் தாமெச்சிலாந்
தெரிமறை யிருக்கைாதி மூவர்தே வாரங்க
டிருவாச ... திகளை ...

செய்வமெனி லோதுதிகள் செய்நாக்கு ளெச்சிலென்
செய்துனக் காளாவனே
அருள்பரம தேசிகக் குகநமசி வாயர்திரு
வருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (௪)

திருவண்ணமலைத் தீர்த்தத்தொகைவகை கூறியது.

இந்திரன் றீர்த்தமோ டக்கினித் தீர்த்தமா
மெமதீர்த்த நிருதிதீர்த்த
மியல்வருண தீர்த்தமுயர் வாயுதீர்த் தம்வடக்
கெழிலாங் குபேரதீர்த்தம்
நந்தலறு மீசானி யன்றீர்த்த மிறைவியுண்
ணுமுலைத் தீர்த்தமரிய
நற்லிங்க தீர்த்தமா ணிக்கவா சத்தீர்த்த
நாடரும் பிரமதீர்த்த
முந்துசிவ தீர்த்தமரி மைந்துசக் கரதீர்த்த
மெய்ப்பெருங் கட்கதீர்த்த
முந்நூற்றின் மேலுமறு பதுதீர்த்த மேவுதல
மொழியினின் னருணசலம்
ஐந்துபூ தந்தலத் தொருதலமி தென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (௫)

மூவர் பாடல்பெற்ற சிவஸ்தலமிருக்குமிடங் கூறியது.

காவிரியின் வடகரையி லறுபத்து மூன்றுபதி
காண்டருந் தென்கரையினிற்
கருதுமொரு நூறுமிரு பத்தே ழெனும்பதி
கணிக்கிலீ ழத்திரண்டு

கோவியற் பாண்டிபதி நான்குமலை நாடொன்று
கொங்கிலேழ் நடுநாட்டினிற்
கூறுமிரு பத்திரண் டாந்தொண்டை நாட்டிற்
குறிக்கிலெண் ணான்கு தலமாம்
பூவிரவு துளுவத்தி லொன்றுவட திசையைந்து
புகலிலிரு நூறுமெழுபான்
புணருமோர் நாலுதல மூவர்பா டியதலம்
புண்ணியத் தலமென்பர்காண்
ஆவிதொறு நின்றுணை வளித்திடும் பரமனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௬)

மாசந்தோறு மபிடேகவகை கூறியது.

வருடாதி சித்திரைத் திங்கள்பூ ரணைநாண்
மருக்கொழுந் தபிடேகமாம்
வைகாசி சந்தனம தானியில் பலாப்பழமு
மாங்கனி கதலிக்கனி
கருதாடி சர்க்கரைந லாவணியி லதிரசங்
காணும் புரட்டாசியிற்
காய்ச்சிய திரட்டுபா லைப்பசிக் கன்னமாங்
கார்த்திகைத் தீபார்ச்சனை
திருமார் கழிக்குநெய் தைத்தேன் குடங்கிர்தந்
சேர்ந்தகம் பளமீன்மதித்
திந்தயிர் பரமனுக் காட்டல்வி தி பூரணைத்
திதிதோறு மாசபூசை
யறிதா யறிந்துனக் கபிஷேக மதுபுரிந்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (எ)

விபூதி தரிக்கும் விதி கூறியது.

நித்தலும் வைதீக ராதிமறை யோர்கட்கு
நீர்கொடு குழைத்து நீற்றை
நெற்றியிற் பன்னிரண் டங்குலத் தளவதாய்
நேராய்த் தரித்த னெறியாஞ்
சித்திரமி ழைத்தசிங் காதனத் தரசுபுரி
செங்கைவே லரசருக்குத்
திருநீற்றை யொன்பதங் குலநீள மாய்நுதற்
சேர்த்தணித லேவிதியதாஞ்
சுத்தவை சியருக்கு நாலிரண் டங்குலஞ்
சூத்திரற் கேழங்குலந்
தோகையர் தமக்குநா லங்குலத் தளவெனச்
சொன்னதே மகுடாகமம்
அத்ததே வாங்குலந் திரிசூல வடிவணித
லருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (அ)

பிராமணர் சட்கருமாதி விதிகூறியது.

வேதமதை தானோதன் மற்றொருவ ருக்கோது
வித்தறு மியாகஞ்செயல்
விதியோடு மற்றொருவ ருக்குநல் யாகஞ்செய்
வித்தலோ டேதலேற்றல்
ஓதுமிவை சட்கரும மாகமுன் னியமொன்
றுரைத்தகா ருகபத்தியம்
ஒன்றுசுடர் தக்ஷிணாக் கினியொன்ற திவைமூன்று
முறழுந் திரேதாக்கினி
கேதமறு மியல்பிரம சாரிகிர கத்தன்
கிளர்ந்தவா னப்பிரத்தன்

கேடில்சந் நியாசியிவை யாச்சிரம நான்கதாங்
கீதமே தங்கணுன்காம்
ஆதிவரு ணர்க்கென வியாசமுனி செய்தவிதி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (௬)

அநக்கியங்கோடுக்கும் காலபலன் கூறியது.

இரவிலோ ரையைந்து கடிகையது ஷக்கால
மேத்துவான் மீனினங்க
ளெங்கும் விளங்குமக் காலையி லருக்கிய
மிறைத்திடுதல் பூரணபலன்
மருவுமிரு பானேழு கன்னலரு ணோதயம்
வானிலகு தாரகையெலா
மழுங்கிபு மழுங்கா திருக்கவர்க் கியமீதன்
மத்திமப் பலனாகுமாம்
உரைசெயிரு பானெட்டி லின்னுதய முடிவொளி
யொழிந்தருக் கியமதமமா
முதயமே லர்க்கியம் வந்திமை துனபல
னுரைக்குமறை யோர்க்கென்பர்காண்
அருணகிரி நாதர்புக ழ்பிலவன் றனதையே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (௧0)

அஷ்ட விவாகங்களில் பிராமணர்க் கிவையேற்பதும்
பிராமணர் நித்திய கருமவிதியுங்கூறியது.

கருதுபிர மந்தேவ தம்பிரசா பத்தியங்
காணமகி ழாருடமாங்

கந்திருவ மசுரமுமி ராக்கதம் பைசாச
கலியாண மோரெட்டினிற்
பரவுமுத னன்கும் பொருந்தியா னினிகருப்
பாதான மாதியான
பதினாறு மாச்சிரம நான்குசட் கருமமும்
பழகுமுத் தழலும்வெள்வி
யிரவியுதி யாமுன் னுஷக்கால நீராடி
யென்றதிரி சந்திகால
மிருகையா லர்க்கியம் பூசையௌ பாசன
மியம்புகா யத்திரிசபம்
அரியநால் வேதாத்தி யயனமறை யோர்செய்கை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (கக)

இருபத்தொரு யாகத்தின் பெயர் கூறியது.

ஓதரிய வக்கினிட் டோமமத் தியாக்கினிட்
டோமமக் கிரகாயணி
யுத்தியஞ் சோடசி வாசபே யம்மாக்னி
கோத்திரஞ் சதுர்மாசியந்
தீதிலா வத்தோரி யாமமதி ராத்திரஞ்
செப்புமக் கினியதேயந்
தெரிசபூ ரணமாச நிருடபசு பந்தஞ்
சிராவணி சவுத்ராவணி
மேதனகய சத்திரி சிராத்தமோ டட்டகை
விளங்குயாக் ராயணமுடன்
மேவுபார் வணமாசு வயசியிரு பத்தொன்றும்
வேதநவில் யாகங்களாம்
ஆதிவேள் விப்பில்வந்த வமிசநர சிங்கவே
ளருள்பெறு வசந்தராயர்

அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (கஉ)

அரசாளவேண்டுந் தன்மைகூறியது.

மலையரண் காடரண் மதிலரணு நீரரண்
மருவுமிந் நான்கரணமும்
மந்திரிக டளகர்த்தர் குடிபடையு முடையராய்
வலியசது ரங்கசேனை
நிலையுடைய ராயெளிய ரெளிதினிற் கண்டுகொள
நேரிடுங் கருணையுளராய்
நிலமுழுங் குடிகள்பா லாறிலொரு கடமையின்
ணிதிகொண்டு தனதுநாட்டிற்
கலகமிடு வோர்களைக் கொலைகளவி ஞேர்களைக்
கனதுஷ்ட மிருகங்களைக்
கண்டித்து மனுநா லறிந்துசெங் கோலின்முறை
காத்திடுத லரசாட்சிகாண்
அலைபுனற் பாண்டிநா டாண்டசொக் கேசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (கங)

அரசர்கட் குறுதிச் சுற்றங் கூறியது.

மந்திரியர் கருமாதி காரர்கடை காப்போர்கண்
மருவுநகர் மாக்கள்சுற்ற
மலைபடைத் தலைவரோ டிவுளியே றிடுமறவர்
மதயானை வீரரெண்மர்
சந்ததமு மரசருக் குறுதுணைவ ராமியல்பு
தவருத வந்தணாளர்
சாந்தமுறு நட்பாள ரொடுமடைத் தொழிலர்நோய்
களையறிந் தவிழ்தமீயும்

புந்தியுண் மருத்துவர் கலைஞரு நிமித்திகப்
 புலவரிவ ரைவர்களுமெப்
போதுமர சர்க்குறுதி யாகின்ற சுற்றமிது
 புகலுமனு நீதிகண்டாய்
அந்திசந் தியுமுச்சி வந்தனம் பூசைபுரி
 யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
 வண்ணா மலைத்தேவனே. (கச)

திருமுனைப்பாடிநாட்டுப் பிரமாணங் கூறியது.

மன்னியல் பசும்புரவி யேறியொரு கணமதில்
 வலம்வரும் புவியைநீயே
மாமுடி கவித்தாள்க வென்றுமூ வேந்தரும்
 வாய்மலர்ந் தருளவாங்கே
மின்னுறு குணக்குக் கடற்கரை வரைக்குமிகு
 மேவுமலர் சோலைதெற்கு
விளங்குதிரு வாத்துறை வதிட்டகுடி வெள்ளாறு
 மேற்றிசைக் கொல்லிமலையாந்
தென்னியல் வடக்குப் புனற்றருங் கடியாறு
 செப்புமிந் நான்கெல்லையுட்
டிருமுனைப் பாடிநா டதுசதுர் முடிபெற்ற
 தெய்விக மன்னனாண்ட
அங்கிலையில் சிங்கபுரி நன்னிலத் தரசுபுரி
 யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
 வண்ணா மலைத்தேவனே. (கரு)

தெய்வீகராசன் மங்களங்கூறியது.

பணிவெள்ளி செம்பொனப ரஞ்சிமணி மரகதப்
 பச்சைநிகழ் வைடூரியம்

பவளமா ணிக்ககோ மேதகங் கோமளம்
பணிமுத்து புஷ்பராகம்
மணியுந்து மாபரண மாலையும் பன்னிரு
வகைத்தெய்வ மலர்மாலையும்
மார்பத் தணிந்துமா முடிசூடி யிலகுபசு
வான்புரவி யூர்ந்துவேள்வி
நணியுள் ளெழுந்துவந் துயர்திரு முனைப்பாடி
நாடாந் திருக்கோவலூர்
நல்லசிங் காசனத் தெய்வீக ராசனு
நரசிங்க முனையர்வாழ்க
அணிவெள்ளி கோத்ரகுல தீபமென வந்தநிதி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (கசு)

தெய்வீகராஜன் சதுர்முடிச்சிறப்புக் கூறியது.

பன்னிரண் டலர்மாலை புனைகின்ற திண்புய
பராக்ரமத் தெய்வீகநீ
படையெடுத் தமர்புரிய வேண்டா மெனச்சொலிப்
பாராளும் வேந்தர்காண
மன்னரோர் மூவரும் மல்லுயுத் தம்மேற்று
மல்லாட லுக்கிளைத்து
மற்போர் புரிந்திடற் கிவனொருவ னரசிங்க
மாவீர னெனவியந்து
தென்னனுஞ் சோழனுஞ் சேரனுந் தந்தமுடி
செல்வமுடி யென்றுசூட்டத்
திருமுடி யுடன்மூன்று மொருமுடிச் சதுர்முடித்
தெய்விக குலத்துதித்த
அன்னமென மதிவளரு நிபுணகெம் பீரதுரை
யருள்பெறு வசந்தராயர்

அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (கள)

தெய்வீகராசன் பன்னிரண்டுமாலைவகை கூறியது.

கொம்பலர் பசும்பொனேர் கொன்றைபுனை மாதளை
கூவிளங் குமிழ்சண்பகங்
குலவுபரி மளவகுள மலர்துளவு கமலமலர்
கோங்குசெங் குவளைவாகை
தும்பையார் வேம்புபன் னிருமாலை கொண்டபுய
சுந்தர விலாசமார்பன்
தூயசதுர் முடிமகுட சேகரன் மும்மன்னர்
சொந்தசம் பந்தமுடையோன்
கம்பமத முத்தலைக் காரண்ட னைச்சயங்
கண்டவேல் கொண்டதிறலோன்
காசினியை யெழுநூறு வயதாண்ட தெய்விகக்
காவலன் மகிமைகண்டாய்
அம்புய மலர்ந்தமுக கெம்பீர ராசர்புக்
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (கஅ)

மலையரயன் தெய்வீகனை யவதரித்தமை கூறியது.

கரையில்புகழ் கைலையிற் சிவனுமையு மருவுமக்
காலைமலை யரயனேர்நாட்
கடவுளுக் கறிவியா தேபுகப் பரமனக்
காதன்பா லிலைநோக்கித்
தரையின்மா னிடனைச் சனிப்பையென் றுரைசெயத்
தாழ்ந்தவன் சோர்ந்துநிற்குந்
தருணத்தி லுமையெழுந் தன்மாம னர்பிறவி
சார்வனே வென்றிறைஞ்சி

யுரைசெயச் சாபந் தவிர்க்கவேண் டுவதாலிவ்
வுலகத்தி லீனவயிற்றி
லுதியாமல் வேள்வியி லுதித்தவனி யாள்கவென்
ளேதிடக் குகமுனிமகத்
தரயனென வந்ததெய் விகருலோத் துங்கதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (கசு)

தெய்வீகராசன்
மனைவிகள் பெயர் கூறியது.

சேரன் பயந்தபது மாவதியெ னும்பெயர்த்
தெரிவையும் பாண்டியன்மகட்
டினமால் பொருந்துகாஞ் சனமாலை யென்னுமொரு
தேவியுஞ் சோழனீன்ற
பேரன்பு கொண்டசண் பகமாலை யென்கின்ற
பேதையு மணம்புரிந்த
பெண்ணையாற் றங்கரைக் கோவறெய் வீகனருள்
பெருமா னிலங்குநாவ
லூரன் றுதித்திருத் தொண்டத் தொகைக்குள்
ளுமாபதி யுருக்கலந்தே
யுற்றவறு பத்துமூ வரிலொருவ ராகின்ற
வோங்குநர சிங்கமுனையர்
ஆனவம் மிசகுல குபேரனிகர் செல்வதுரை
யருள்பெறு வந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (உ0)

சத்தபுரிராச குமாரிகளைத் தெய்வீகராசன் மணஞ்செய்தமை கூறியது.

காசிரா சன்மக ளனப்பிரபை தன்னையுங்
காஞ்சியே ரிகதனீன்ற
கமலா வதிப்பெண்ணு மயோத்தியிற் சிசுருமன்
கன்னியாங் கனகையினையும்
மாசறும வந்தியா புரிவிசா லாக்கன்
மகிழ்ந்தருள் கலாவதியினை
மன்னுந் துவாரகைச் சந்த்ரவரு மன்றரு
மடந்தையும் பலமாலையுந்
தேசுவட மதுரையம் போசவிசை யாவருமர்
செல்விகும லக்கண்ணியைச்
செல்வபுரி மாயைமா சேனன் பயந்தமதி
சேர்ந்தவுற் பலநயனியை
ஆசையொடு வேட்டதெய் விகருலோத் துங்கதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (உக)

அங்கவை சங்கவை கலியாணங் கூறியது.

சிங்கள மெனுந்தேய முழுதாளு மன்னன்
சிறந்தபேர் பாரிசாளன்
செய்தவப் பயனாற் பிறந்தநற் குணமான
சிறுமியங் கவைசங்கவை
மங்கையர்க ளிருவரை வளர்த்தெடுத் தௌவையார்
மாமுகக் கணபதிகையான்
மணவோலை யெழுதிமும் மன்னரைக் கோவலூர்
வரவழைத் தறுகிடற்குத்
தங்கிப் பனந்துண்ட மரமாகி யேபழந்
தரநதிப் பெண்ணைநெய்பா

ரூன்வரப் பாடியப் பெண்களைத் தெய்விகத்
தலைவன் மணம்புரியவே
அங்குதவு மௌவைதொழு மைங்கரன் றந்தையே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (௨௨)

மெய்ப்பொருணயனர் சரிதங் கூறியது.

செப்பருந் தெய்வீக மன்னவன் றென்னவன்
செல்விகாஞ் சனமாலையைத்
திருமணஞ் செய்தவளை மருவிப் பயந்ததொரு
சிறுவர்மெய்ப் பொருணயனர்க்
கொப்புறு பசும்புரவி யூர்ந்துமுன் வட்டம்வந்
துற்றநடு நாடுதன்னி
லொத்தவிந் திரதிசை யினத்தங்க ளெல்லா
முவந்தரசு புரிகுவாயென்
றிப்பெருங் கோவலின் மணிமுடி தரித்திட
விருந்தமெய்ப் பொருணயனர்
சன்றசந் ததியெலா நத்தமன் னவனென்
றிருந்திடுங் குடிகள்கண்டாய்
அப்பெரிய மெய்ப்பொருளி னற்குலம் விளங்கவந்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (௨௩)

நரசிங்கமுனையர் சரிதை கூறியது.

வந்துலகில் புகழ்கொண்ட தெய்வீக மன்னனெழின்
மலையமான் றந்தபதுமா
வதிமா தினைப்புணர்ந் தரிதாய்ப் பயந்ததொரு
மைந்தனர சிங்கமுனையர்க்

கிந்தநடு நாடெனுந் திருமுனைப் பாடிநாட்
டெல்லைக்குண் மலைமன்னனு
யிருவென்று முடிசூட்டி வைத்தபடி யாலதற்
கேய்ந்தநர சிங்கமுனையர்
சந்ததியில் வந்தவர்கள் மலையமன் னென்றுபெயர்
சாற்றநெடு மேற்றிசையெலாந்
தங்கிய பெருங்குடிக ளாய்நிறைந் துழுதுபயிர்
தானிடுஞ் செல்வர்கண்டாய்
அந்தநர சிங்கமுனை யரயர்பே ரன்புநெறி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (உச)

குலசேகரநாயனார் சரிதை கூறியது.

சோழன் பயந்தசண் பகமாலை வதுவையிற்
றோய்ந்துதெய் விகனின்ற
தோன்றல்குல சேகரன் சுருதியை யுணர்ந்தன்ன
தாய்முனைப் பாடிநாட்டில்
வாழுமூன் றினிலொன்று தன்பங்கி லாசித்து
வடநாடு போய்வந்துதன்
மனைவியை விடுத்தே குடந்தையின் குடபான்
மணிச்சோழன் மாளிகைக்கண்
ணூழிநெறி யாற்றுதி மூப்பியைச் சேர்ந்ததி
லுதித்தவர்கண் மூப்பனுரென்
றுலகெலாஞ் சொல்லவுஞ் சுருதிமன் னென்றுபெய
ருண்டா யிருப்பர்கண்டாய்
ஆழ்தரு பெருஞ்சுனைகள் சூழ்தருஞ் சிம்மபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (உரு)

மிருகண்டு முனிவரால் காரண்ட னவதரித்தமை கூறியது.

கற்கோட்டை யிறைசைநகர் நந்தன வனத்திற்
கனத்தமிரு கண்டுமுனிவன்
கடவுளைப் பூசிக்க மலர்கொண்டு வாவெனக்
கடிதினொரு பிரமசாரி
விற்கோட்டு மலர்கொயச் செல்காலை வஞ்சனை
விபாவரி யரக்கமாதர்
விளையாட லைக்கண்டு தாழ்த்துவர வம்முனி
வெகுண்டசுர னாவாயெனச்
சொற்கேட்டவ் வசுரனாய்ப் பிறையூர் மலைச்சார
ரூன்றுகா ரண்டனை முன்னீ
துண்டித்த வாகைவேல் கொள்புயத் தெய்விகத்
தோன்றல்புகழ் சொல்லவெளிதோ
அற்கூட்ட மணிகண்ட நாதாவி னோதனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (உசு)

வேளாளர் பெருமைகூறியது.

தேவால யந்தொறுந் திருவிழாப் பூசையுஞ்
செப்பரிய பிரமாலயத்
தெய்வமறை யோர்செய்யு நித்தநை மித்தியமுந்
திரிசந்தி யாகங்களும்
பூவாளு மன்னர்சது ரங்கபல முதலான
பொக்கிஷ மிகுஞ்செல்வமும்
பொன்வெள்ளி தனதானி யம்பல சரக்கினாற்
பொருளாக்கும் வணிகர்தொழிலுங்
கோவாதி சோடச மகாதான தருமமுங்
குவலயத் தனைவர்சுகமுங்

கோளாறு கொண்டுழும் வேளாள ருழுபடைக்
கோலதன் பெருமையன்றோ
ஆவாற் கறந்தபா லபிடேக னேயனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (உஎ)

வைசியர் பெருமைகூறியது.

செம்பொனைக் கல்லினி லுரைத்தாணி வைத்துத்
தெளிந்ததன் மாற்றுரைப்பர்
திரளுடைமை யடகுவைத் தாலுநிலை கண்டுமேற்
செட்டாக நிதிகொடுப்பர்
பம்புநவ ரத்னப் பரீட்சைசர தி கண்களாற்
பார்த்துவிலை யைப்பணிப்பர்
படியுந் தராசுமுண் ணடுநிலை நிதானம்
படைத்தநா நிலைமையுடையார்
நம்பவரு வர்த்தகமு காந்திரங் கோடிபொன்
னம்புவார் வரவுசெலவு
நாடோறு நாடுவார் நாணய மிலார்க்கணுவு
நல்கார்கள் வைசியர்கண்டா
யம்புவியில் வணிகர்பாற் செம்பொன் வளர்ந்திடுந
லருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (உஅ)

நான்குவருணர்க் கறுதொழில்கூறியது.

வேதம் படித்தலொரு வர்க்கோது வித்திடுதல்
வேள்விசெயல் செய்வித்திடல்
வேண்டுவ திரத்தலொரு வர்க்கீத லாறுதொழில்
வேதியர்க் கானவிதியாம்

ஓதரூன் வேள்யிசெய வீதலிவ் வுலகெலா
மோம்பல்படை பயிறல்பொருத
லோராறு மரசர்தொழி லோதலியா கஞ்செய்ய
லோங்குபொரு ளீட்டலீதல்
கோதனைக் காத்தலே ருழல்வைசிய ராறுதொழில்
குயிலுவத் தொழிலேருழல்
கோகாத்தல் காருக வினைத்தொழிற் பொருளீட்டல்
குணமாக வீதலென்றும்
ஆதிசூத் திரர்தொழிற் பகரிவீ தாறுகா
ணருள்பெரு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (உகூ)

சூத்திரமுஞ்சாத்திரமு மவ்வாறெனக்கூறியது.

செப்புமா பஸ்தம்ப சூத்திர மிசைத்திடுந்
தியாயியா யனசூத்திரம்
திறமான சத்தியா ஷாடசூத் திரமறை
தெரிந்திட்ட போதாயனம்
ஒப்பிலாக் காத்தியா யனமாசி ஸாயனமி
தோராறு சூத்திரங்க
ளோதரு வியாகரண சத்தசாத் திரமொன்
றுயர்ந்தசோ திடசாத்திரந்
தப்பறும் பரதசாத் திரமொன் றுரைப்பருந்
தர்க்கசாத் திரமிதொன்று
சாற்றும்வே தாந்தசாத் திரமந்த்ர சாத்திரந்
தருசாத் திரங்களாறும்
அப்புலிங் கத்துருவ மாகின்ற வண்ணலே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௩0)

நிலையுள்ள புகழாளரைக் கூறியது.

பாலனஞ் செய்துளோ ராலய மமைத்துளோர்
 பகர்கோ புரங்கட்டினோர்
 பத்திமணி மண்டபந் தேர்விமா னம்பொன்
 பதித்தவா கனமமைத்தோர்
சாலையன சத்திரம் விக்கிரக ரூபஞ்
 சமைத்துளோ ரன்னதானந்
 தடமேரி யக்ரார நிலமானி யங்கோட்டை
 தண்சாலை யுண்டாக்கினோர்
வேலையா யோயா தளித்தவர்கள் பொய்சொலா
 விரதியர்கள் கவிவாணரான்
 மேலாங் கவித்தொங்கல் பெற்றுளோ ரிவர்களே
 வீயாத புகழ்படைத்தோர்
ஆலிலைத் துயிலுமா லறியாத பரமனே
 யருள்பெறு வசந்தராயர்
 அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
 வண்ணா மலைதேவனே. (௩௧)

சைவமுறை கூறியது.

சந்தவல ரோனுமா லறியாத பரசிவந்
 தானே யனாதியாகுஞ்
 சகலரும் பணிசிவா லயமேய னாதியாஞ்
 சைவமட மாகுமதுதான்
எந்தைசிவ லிங்கவுரு வைத்தீண்டி யர்ச்சித்
 திறைஞ்சிவாழ் மறையோர்கடம்
 மில்லமே யயராதி சைவமட மாமென்
 றிசைக்குமுய ராகமங்கள்
சிந்தையன் பாகியே மறவாது சந்ததஞ்
 சிவசம்ஸ்காராதிகள்

செய்புமறை வேதியர்க ளில்லமே கோகனகை
திகழ்மகா சைவமடமாம்
ஐந்துநதி யாந்தலச் சுந்தரச் சைவனே
யருள்பெறுவ சந்தரராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௧௨)

பதினாறு பேற்றின்வகை கூறியது.

நதிவளந் தருபூமி விளைகின்ற நெல்லாதி
நவதானி யப்பெருமையு
நற்குணத் தொடுசொன்ன சொற்படி நடந்துவரு
நன்மனையு நன்மக்களும்
மதிவளந் தருகின்ற குறைவிலாக் கல்வியுடன்
மனமிக்க ஞானவறிவும்
வளர்கின்ற விளமையொடு மறுவிலா வழகும்
மகிழ்ச்சிதரு நோயின்மையும்
விதிவளந் தருகின்ற வாணாளு மெய்த்திடமு
மெய்த்துணிவு மிக்கபுகழும்
வெற்றியுட னல்லூழு மறுசுவை நுகர்ச்சியும்
மேலாய் நிறைந்ததனமும்
அதிவளந் தருமிதைப் பேறுபதி னாறென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௧௩)

பெண்கொள்ளுமுறை கூறியது.

தன்னுடைய கோத்திர மலாதநற் கோத்திரத்
தகையளாய்ப் பொய்மையிலளாய்த்
தவறிலா தாண்பெண் சகோதரத் தவளாய்த்
தருங்குலத் திழிவில்லளா

யிந்நில மிகழ்ந்தபழி யுடையமர பில்லளா
யேந்துவிண் மீன்பறவையா
றெழில்வரைப் பாந்தள்பெய ரில்லளாய்ப் புருடனுக்
கிளையளாய் மென்மொழியளாய்ப்
பின்னுமுனி வில்லளாய் நன்னய குணத்தளாய்ப்
பெருமிதம் பிணியில்லளாய்ப்
பெருமதி முகத்தளாய்ப் பேசுமிப் பெற்றியுள
பேதையை மணஞ்செய்திடில்
அன்னையினு மிக்கபே ரன்புடைய ளாமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணா வினிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௩௪)

பெண்ணிலக்கணங் கூறியது.

பம்பைச் சுருட்டைமயி ரில்லாம னுனிமயிர்
பகுவாய் பிள்ப்பிலாமற்
பற்றுசடை யில்லாது கட்டைமயி ரோடுசெம்
பட்டைமயி ரில்லாமலுங்
கொம்புபோற் பிறமயிர் குறுகிவர வில்லாது
கொத்தாக மயிரிலாது
கோணலாய் மேன்மயிர் புடைகொண்டி லாதுவரி
கொடுவெள்ளை மயிரிலாது
செம்பிறையி னெற்றிமேற் பாம்பின் படச்சுழிகள்
சேராம லந்நெற்றியுஞ்
செவியுமிரு கண்களுங் குறுகாமன் மூக்கொன்று
திகழ்நீள மில்லாமலும்
அம்பருதி லாவிதே பெண்ணிலக் கணமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௩௫)

புருஷலக்ஷணங் கூறியது.

நெற்றியிடை யோரைந்து கீற்றாய் மடிப்புறையி
னிறைகின்ற வாயுளுண்டாம்
நிரையாக நாலுவரை தோன்றிலெண் பதுவயது
நிலையான வாழ்வுமுண்டாம்
மற்றுமுக் கீற்று யிருக்கிலறு பான்வருட
மட்டினு மகிழ்ச்சியுண்டாம்
மருவுமிரு வரைதோன்றி லாயுளைம் பானேக
வரைதோன்றி லாயுண்முப்பான்
ஒற்றையஞ் சுழிவலம் புரியாய் நடுத்தலையி
லொருமையுட னேயிருந்தா
லுலகமுழு தாளுவா னெற்றியில் வலம்புரிச்
சுழியொன் றிருக்கிலிறையாம்
அற்றுறந் தெழுசோதி நயனப்ர காசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௩௬)

இதுவுமது.

விழிதோள் கதுப்புமூக் கிருமுழந் தாளைந்து
மிகநீண் டிருக்கவேண்டும்
விரன்மயிர் நகந்தோ னெருங்குபல் லிவையைந்து
மெதுவா யிருக்கவேண்டும்
ஒழியாது நீறணியு நெற்றியிரு தோண்மார்பு
மொண்புறங் கைகள்வயிறு
மோதருங் கைம்மூல மாகுமிவ் வாறிட
முயர்ந்தே யிருக்கவேண்டுஞ்
செழியுமுள் ளங்கைகீ ழுதடுமுள் ளங்காற்
சிறக்குமுண் ணாக்குநாக்கு

சேருங் கடைக்கணுகிர் கூறுமிட னேபூஞ்
சிவந்தே யிருக்கவேண்டும்
அழிவிலா நூல்சொலும் புருடலக்ஷணமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௩௭)

இதுவுமது.

இடைமார்பு நெற்றியிம் மூன்றும் விசாலமா
யியல்பா யிருக்கவேண்டு
மிருமுழங் காற்கீழு மாண்குறி கிரீபமிவ்
விடமிகக் குறுகவேண்டுந்
தடையிலா துந்தியுஞ் சந்துதாள் வாய்மிகத்
தாழ்ந்தே யிருக்கவேண்டுந்
தங்குகான் மேன்மையா யங்கைமிக வன்மையாய்த்
தானங் கிருக்கவேண்டுங்
கொடைதருஞ் செங்கையிற் சங்குசக் கரரேகை
கோதண்ட மகரரேகை
குலிசமா லிகைரேகை நளினசா மரரேகை
கோணா திருக்கவேண்டும்
அடையுமிப் புருடலக்ஷணமுடைய ரரசரா
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௩௮)

விபூதியிடுங்காலங்கூறியது.

காலையி லெழும்போது மலசலம் விடுத்துமிகு
கால்சுத்தி செய்தபோதுங்
காரிகை யொடுங்கூடி நீராடி னுந்தரணி
காவல ரிடம்போயினும்

மாலையம் போதினுஞ் சண்டாளர் நிழல்படினு
மறுகூடு சென்றுவரினும்
மாதரூ தகமேவு மங்கையர்க ணிழல்படினு
மாபெரிய ரிடமேயினும்
பால்பழம் போசனங் கொண்டபினு மருமலர்
பறித்திடினு மாபாதகர் ௪௨)
பார்த்திடினு மெவ்வழி பயப்படினு நன்னூற்
படித்திடினு மவிழ்தமுணினும்
ஆலயம் புகினும் விபூதியிடன் முறையென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

அறம் ௩௨ - கூறியது.

ஓதுவார்க் குணவித லாறுசமை யத்துளோர்க்
கோதன மளித்தலாவந்
துரிஞ்சிடத் தறிநாட்ட லொடாறும் பசுவினுக்
குவந்துவா யிரைகொடுத்தல்
காதோலை யீந்திடுதல் கண்ணாடி காட்டலிரு
கண்மருந் திடன்மடங்கள்
கட்டிடுதல் பூஞ்சோலை நாட்டிடுதல் பொருளீந்து
கன்னிகா தானஞ்செயன்
மாதுபோ கம்புரிய வைத்திட றலைக்கெண்ணெய்
வார்த்திடுதல் சுண்ணமீதல்
வருவிலங் கிற்குண வளித்தற விதனுதவல்
வண்ணா னமைத்துவைத்தல்
ஆதுல ரிருந்திட வறச்சாலை செய்வித்த
லருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௪௦)

இதுவுமது.

செம்பொனள வின்றியே விலைகொடுத் துயிர்காத்தல்
சேருஞ் சிறைச்சோறிடற்
றின்பண்ட நல்கலற வைச்சோ றளித்திட
றினந்தோறு மையமிடுதல்
வெம்புநோய்க் கவிழ்தங் கொடுத்தலே றிடபம்
விடுத்தன் மகவினைவளர்த்தன்
மென்மகப் பால்வார்த்த லன்மகப் பெறுவித்தன்
மேவுபிறர் துயர்காத்திட
னம்புமற வைப்பிண மடக்கலற வைக்காடை
நல்குதல் குளங்கல்லுத
னல்லதண் ணீர்ப்பந்தல் வைத்திடுதல் சொற்றிட்ட
நாலெட் டறங்கண்முன்னம்
அம்பிகை வளர்த்ததென் றருமறைகண் முறையிடுந
லருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னிற்றுதிசெ யுண்ண முலைக்குரிய
வண்ண மலைத்தேவனே. (சக)

தந்தகாட்டவிதி கூறியது.

இலைதிகழு மாவன்னி யரியநா யுருவிவே
ரிதழிகரு வேலழிஞ்சி
லீந்துநறு விலிவாகை யார்ந்தபூ லாநெல்லி
யெழிஞவல் வேம்புநார்த்தை
மலர்தருங் கொய்யா நறுங்குமி ழிருப்பைதுவர்
வாய்த்ததாய்ப் பாலுள்ளதாய்
மருவுகைப் புள்ளதாய்த் தருமுறித் தங்குலம்
மறையவர்க் கீராறதாங்
கலைதெரியு மன்னவர்க் கேகா தசாங்குலங்
கனவைசி யர்க்கோர்தசங்

கருதுசூத் திரர்தமக் கொன்பதா மங்குலங்
கழியின்மேற் றேறுள்ளதாய்
அலர்தருந் தந்ததா வனவிதியதாமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சஉ)

விபூதி தரித்திடு முறைமை கூறியது.

குழைத்திடு விபூதிமுன் றங்குலத் தளவதாக்
கொண்டுதலை மேலிடநலங்
கூறுநெற் றியினிலிரு நான்கங் குலத்தளவு
கோணாது நெல்லெள்ளவை
தழைத்தளவை யிடைவிட்டுத் திரிசூல வடிவாய்த்
தரித்திடுத றிரிபுண்டரந்
தனிமார்பி லும்புயத் தாறங்கு லம்முந்தி
தன்னிலோ ரங்குலமிடல்
கழைநிகர் முழங்கையின் மணிக்கட்டி லேநீறு
கனமிலா தேதொட்டிடல்
கழுத்திடுப் பினிலுமூன் றங்குலக் குறியிடல்
கணித்தமகு டாகமவிதி
அழைத்தன்ன முதவுபார்க் கவகோத்தி ரத்தில்வரு
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சங)

பூசைக்காகாத பூக்களைக் கூறியது.

இச்சிலா லரசுபூ சணியெருக் காமணக்
கிலையினி லெடுத்திட்டபூ
வீஞ்சோலை பனையோலை பின்னலிடு கூடையி
லெடுத்தபூ விடதுகையிற்

பச்சிலையி லாவெறுங் கையினி லெடுத்தபூ
பாண்டத் தெடுத்திட்டபூ
பால்போ னிறத்ததுகி லதனிலு மெடுத்தபூ
பரிசுத்த மில்லாவிடத்
துச்சிதம தென்றே யெடுத்தபூ கீழ்விழுந்
துதிர்ந்தபூ மோந்திட்டபூ
வுண்மையாய்ப் பூசனைக் காகாது குற்றமென
வோதுஞ் சிவாகமங்கள்
அச்சுதன் கண்மலர் பறித்திட வுவந்தவா
வருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (சச)

பூசைக்காய் புஷ்பவகை கூறியது.

வில்வமலர் கொன்றைமாந் தளிர்புன்னை மல்லிகை
விரிந்தசத குப்பைதண்ணீர்
மிட்டான் பருத்திபொன் மத்தைவெண் தாமரை
வெண்பட்டி வெள்வழுதுணை
செல்வநிறை தாமரை நறும்பச்சை வெண்காசை
தேமுறழ் மருக்கொழுந்து
செய்யமந் தாரைபன் னீர்முல்லை மாதுளஞ்
செழுமலர்க் கொன்றையாத்தி
புல்லறு கழிஞ்சில்பொன் னாவாரை செவ்வந்தி
பூத்திகழ் குதம்பைவெட்சி
பூளைமலர் நாரத்தைசெவ் வரவிந்த ஞாழலிவை
பூசனைக் காகுமலராம்
அல்லிமலர் கொண்டுசிவ பூசைபுரி நேசனா
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (சரு)

இதுவுமது.

தேவிசெங் கழுநீர் பசுந்தும்பை கோங்குசிறு
 செண்பகம் வெண்பட்டிகை
சிறுநாக மல்லிகை வலம்புரி யடுக்குநந்
 தியாவர்த்த நீலோற்பலம்
நாவல்பூம் பாதிரி புரோசைபொன் மத்தையெழி
 ஞயுருவி குமரிவேங்கை
நாணல்வெண் காக்கணங் கோட்டங் கடம்பலர்
 நறுந்தாளி வெள்ளெருக்குப்
பூவுறு கருந்துழாய் வன்னிவெண் கருமையாம்
 போதுயால் காந்திபிச்சிப்
பூவினொடு வேரிலா மிச்சமிவை சிவபூசை
 புரியுமல ரென்பர்கண்டாய்
ஆவன் போடுதமிழ் நாவலர்க் குதவுமுகி
 லருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
 வண்ணு மலைத்தேவனே. (சசு)

இதுவுமது.

கரியசெம் பைப்பூ பசுங்குசை செழுசேவ
 கன்போது செம்பாதிரி
கள்ளொழுகு வெள்ளவரி வெள்ளைத் திலோத்தங்
 கமழ்ந்திடுஞ் சிவகரந்தை
விரிதரும் வெட்பாலை மாமணிப் பட்டிகை
 மிகுங்கொடிப் புலித்தொடக்கி
மென்குராக் குன்றுத்தி சண்பகம் பூகம்
 விளாகிளுவை வெள்ளைநொச்சின்
மருவுகரு வெண்ணெய்தல் கொட்டைக் கரந்தைகிளை
 மண்டுகண் டங்கத்திரி

மாதனை செருந்தியை வண்ணமிரு வாட்சியிவை
மாபூசை பண்ணுமலராம்
அரியகண் ணப்பர்கண் மலர்கொண்ட விமலனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சஎ)

இதுவுமது.

நிலமருவு தமரத்தை வெண்கோங்க சோகுதண்
ணீராம்ப லாண்குறிஞ்சி
நிலவுவெள் ளைத்துளவு மாவிலிங் கந்தளிர்
நிறைந்திடு பெருங்கரந்தை
குலவிய கருங்காலி செவ்வேங்கை வெண்ணிறக்
கொக்கிறகு வெள்ளடுக்குக்
கூடுமந் தாரங் கதிர்ப்பச்சை யார்ந்தகுங்
குமவலரி கருமைவெண்மை
நல்விளா செவ்வந்தி யோரிதழ்த் தாமரை
நவின்றநூற் றெட்டுவகையின்
நன்மலர் சிவார்ச்சனைக் காமென்று புட்பவிதி
நவிலாக மத்தின்முறையே
அலர்கொண்டு நாடொறு மனோன்மணிப் பூசைபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சஅ)

சிவலிங்க வகைப் பலன் கூறியது.

ஆற்றுமண லாலே யிலிங்கமே பாணித்
தருச்சனை புரிந்தபேருக்
காயுளுண் டாம்பசுஞ் சாணலிங் கப்பூசை
யாற்றுவோர்க் கர்த்தமுண்டா

நீற்றிலிங் கார்ச்சனம் முத்தியுண் டாநித்த
நியதியா யாற்றோரமண்
ணேயலிங் கஞ்செய்து பூசித்த பேர்க்கின்ப
நிதிமைந்தர் பேறுமுண்டா
மாற்றருஞ் சந்தனச் சாந்தா லிலிங்கம்
வகுத்துவழி பாடுசெய்யும்
மானிடர் தமக்குக் குபேரபாக் கியமவனி
மணிமாட மனைகளுண்டாம்
ஆற்றுமுடை யவர்பூசை யரசாக்ஷி செல்வமா
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (சகூ)

அர்ச்சனைமுதலிய தரும மொன்றுக்கொன்று
விசேஷங்கூறியது.

ஓராயி ரம்பூவி னுலருச் சித்தனிக
ரொருவில்வ மர்ச்சித்தலா
மோராயி ரங்கிணறு வெட்டிவைத் ததுநிகரு
மொருதடா கப்ரதிஷ்டை
சீராயி ரம்மனைகள் கட்டிவைத் திடுபலன்
சேருமொரு மடமமைத்தல்
செப்பருங் கிரகத்த ராயிரம் பேர்க்கு நிகர்
தீதிலொரு சந்நியாசியாம்
பேராயி ரஞ்சொல்லு மந்திர நிகர்க்குமொரு
பெருமுத்தி பஞ்சாக்கரம்
பெரிதுமெண் ணன்கற் நிகர்க்குமொரு ஞானியைப்
பிட்சைசெய் வித்தலாகும்
ஆராம சிங்கபுரி வாழ்தருந் தருமதுரை
யருள்பெறு வசந்தராயர்

அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (ருo)

பலன்களைக் குறித்துப் பூசைசெய்ய வாரங்கட்குப் புஷ்பவகை கூறியது.

ஆதிவா ரத்திலே வில்வமர்ச் சிக்கவே
யஷ்டமா சித்தியுண்டாம்
அமலனைச் சோமவா ரந்துளப மர்ச்சிக்கி
லளவிலாச் செல்வமுண்டாம்
நீதிசெவ் வாயினில் விளாவருச் சிக்கினன்
னேயமுள மைந்தருண்டா
நிகழ்புந்தி வாரமா தளையருச் சிக்கினன்
னெறியுமெய்ஞ் ஞானமுண்டாம்
வேதியன் வாரமதில் வங்கமலர் கல்வியாம்
வெள்ளிநா வற்கொழுந்து
மேதினிக் கரசனுஞ் சனிவார மால்காந்தி
மெய்யினோய் வாராதுகாண்
ஆதியினில் வல்லாள ராயற்கு நேயனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (ருக)

ஆலயத்தீப மொன்றுக்கொன்று விசேடங்கூறியது.

ஓதரிய தேவால யங்களுக் குள்ளே
யுவந்துதேங் காயெண்ணெயா
லொருகோடி தீபமிட் டதையொக்கு நல்லெண்ணெ
யொருவிளக் கேற்றிவைத்தா
றீதறுந் தெளிவான நல்லெண்ணெ யொருகோடி
தீபங்க ளிட்டதொக்குஞ்

சேருமிரு கொம்புள்ள வெண்பசுவி னெய்யினாற்
தீபமொன் றேற்றிவைத்தா
னீதிபுனை பசுவினெய் யாயிரம் விளக்கொக்கு
நிரைமுலைக் காயினுப்பை
நெய்விளக் கொன்றிடவிவ் வாயிரஞ் சுடரொக்கு
நிறைகருப் பூரதீபம்
ஆதியிற் பரவைமனை தூதுசெலு மண்ணலே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (ருஉ)

உட்சமயமாறின் பெயருந்தேவதையுங் கூறியது.

சந்தகண பதிபூசை பண்ணுவது பாசுபத
சமயமாக் கதிர்வேலவன்
றன்பூசை பண்ணன்மா விரதசம யஞ்சிவன்
றன்பூசை சைவசமயங்
கந்தரண வீரபத் திரபூசை பண்ணுவது
காளாமு கச்சமயமாங்
கருதுவை ரவதேவ ரைப்பூசை புரியுமது
காணும்வை ரவசமயமாம்
பந்தன பயோதர பராசத்தி யைப்பூசை
பண்ணுவது வாமசமயம்
பகருமிச் சமயங்க ளாறுமுட் சமயமாய்ப்
பன்னுஞ் சிவாகமங்கள்
அந்தரற் கரிதான மெய்ஞ்ஞான பூசைபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (ருஙு)

விபூதிவாங்கித்தரிக்கும் விதிகூறியது.

ஒருகரந் தனைநீட்டி மூன்றுவிர லால்வாங்கி
யொளிவிரலி னாற்பூமிமே
லுதிரும் படிக்குநீ றிடுவோ ரகோரநர
கொருகோடி கற்பமாழ்வார்
இருகரங் கொடுதொழுது வலதுளங் கையிலேற்
றிறைவனெதிர் குருவினெதிரே
யெரியினெதிர் வழிநடுவி லாசூச மேவுழி
யிடாமலெள் ளளவாயினும்
பெருநிலந் தன்னிலே வீழாம லண்ணாந்து
பேசுபஞ் சாக்கரத்தைப்
பேரன்பி னாலுன்னி வெண்ணிற விபூதியைப்
பெட்புடன் பூசுவோர்கள்
அருணிதிய முயர்கதிய மாயுளும் பெருகுவா
ரருள்பெறு வசந்தராயா
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௫௪)

உருத்திராக்கந்தரிக்கும் விதிகூறியது.

உச்சியிடை யோர்மணி தழைத்தவிரு காதிலு
முயர்ந்தமா மணியாறிரண்
டுத்தமாங் கச்சிரத் தெண்ணைந்து நீள்கழுத்
தூடுமுப் பத்திரண்டாஞ்
செச்சையணி மார்புநூற் றெட்டுறுமு ழங்கையிற்
செப்புமிரு பத்தாறதாஞ்
சேர்ந்திரு மணிக்கட்டி லிருபத்தி ரண்டுமணி
தேர்ந்துருத் ராக்கமணியே
நிச்சயப் பயபத்தி நியமநெறி யுள்ளன்பு
நேயநிறை யார்வமுடனே

நித்தலும் பூசைபுரி காலத்தி லாயினு
நீங்கா தணிந்தபேர்கள்
அச்சிவ சொரூபரவ ராமென்னு மாமறைக
ளருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (ருரு)

செபமாலைக்கு விதியும்பலனுங் கூறியது.

செய்யவிரு பத்தைந்து ருத்திர மணிக்கோவை
சேர்த்துசெப மன்பொடுசெயிற்
செப்பரிய முத்திதரு மூவொன்ப தக்கமணி
செல்வமேன் மேலாயிடும்
பையவெண் ணான்குமணி கல்விநல முந்தரும்
பதினைந்து மாபிசாரப்
பாலதாம் பதின்மூன்று மேவுமுச் சாடன
பலந்தருஞ் செபமாலிகை
கையினிற் சிறுவிரலின் மேற்றள்ளன் ஞானமது
காட்டும் பவித்திரவிரல்
கனகமுறு நடுவிரற் பகைதருந் தற்சனி
கடியநோய் விளிவுமுண்டாம்
ஐயமிலை யங்குட்ட மருளே தழைத்திடு
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (ருசா)

செபஞ்செய்யுந் திக்கின்பலன் கூறியது.

நல்லகீழ் முகமா யிருந்துசெப மேசெய்யி
னொடோறும் வசியமுண்டா
நாடுமக் கினிமூலை நோயில்லை தென்றிசையை
நாடிச் செபம்புரியினோ

வெல்லருந்திமைதரு நிருதிநல் குரவே
விளைந்திடுவ குடதிசையதோ
வேண்டி முன்றேடிய பொருட்செலவு வாயுதிசை
வீறுமுச் சாடனமிருஞ்
சொல்லரும் வடக்குமுக மாய்ச்செபஞ் செய்திடிற்
சொன்னமுங் கல்விநலமுந்
தோன்றுமீ சானதிசை முத்திவீ டாமென்று
சொல்லுஞ் சிவாகமங்கள்
அல்லலற வெத்திசையு மாகுமடி கட்குநல்
லருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (ருஎ)

பிரதோஷதரிசனவிதிகூறியது.

நண்ணுதிரை யோதசித் திதியதே பிரதோட
நாளென்று பெயராகுமந்
நாளிலிரு பத்தாறு நாழிகை யதற்குமே
னானா ழிகையுநீல
வண்ணராத் திரியின்மூன் றரைநாழி கைத்தொகை
வரைக்கும் பிர தோடகாலம்
மறவாம லேசிவா லயநந்தி யிருகொம்பு
மத்தியினி னட்டம்வைத்து
வெண்ணந்தி கேசுரன் விஷணத்தை நீவிவான்
மேவுழியி னின்றிறைஞ்சி
விமலசிவ லிங்கத்தை யரகர வெனச்சொல்லி
விழியினாற் றெரிசிப்பவர்
அண்ணலரு ளாற்செல்வ மாயுளும் பெறுவர்நல்
லருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைதேவனே. (ருஅ)

அனுசிதபதார்த்தங்களைக் கூறியது.

பனையினது வெல்லங் கிழங்குநுங் கொடுடனம்
பழமிவை யருந்தலாகா
படர்தரு செடிப்பசலை செம்பசலை சிறுபசலை
பரியகுண் டைச்சுரைக்காய்
சினையுலவு மரவள்ளி யீருள்ளி வெள்ளுள்ளி
செங்கீரை செம்முருங்கை
தென்னைவெல் லத்திநொடு மீச்சவெல் லங்காய்ச்
சிரக்குபான் முள்ளிபுண்ணாக்
கினியதேன் கையாற் பிசைந்ததயி ரொட்டைநெய்
யெருமைசெம் மறியசப்பா
லீன்றநாட் பத்திற் கறந்தபாற் சூதகத்
தில்லிற் கறந்திட்டபால்
அனுசித மிதாசார முடையோ ரருந்திடா
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (ருசு)

நாடோறுஞ்செய்கையால்வரு மைவகைப்பாவமு மதற்குநிவிர்த்தியுங் கூறியது.

தினந்தோறும் பலபண்ட மம்மியி லரைப்பதாற்
செறிவிற கடுப்பிலிட்டுச்
செந்தீ யெறிப்பதாற் றண்ணீர்க் குடத்தினுட்
சேர்ந்திட முகக்குமதனன்
முனைந்துசோ தினிகொடு பெருக்கிநற் சாணிபட
முறையாய் மெழுக்கிடுவதான்
மூரியரி வாண்மணையி லேகறி குறைப்பதான்
மூளுமைம் பாவநீங்க
நினைந்துமறை யோதிட றருப்பணம் விடுத்திட
னெருப்பினிடை யோமஞ்செய

ளியமமொடு பலியிடுத றன்பா லுவந்துவரு
நியதிபெறு மதிதியோர்கட்
கினம்பகிர்த லினைவதினஞ் செயறகவ தென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சு0)

நாடோறுஞ்செயும் பஞ்சயாகங்கூறியது.

பரிவொடுங் காலைக் கடன்கழித் தருமன்ற
பகர்ந்திடுதல் பிரமயாகம்
பலவமர ரிருடிபிது ராதிக டருப்பணம்
பண்ணுவது பிதுரியாகமாந்
தெரிதரும் விதியினாற் றீவளர்த் தோமவினை
செய்குவது தேவயாகஞ்
செப்புஞ் சிவாகமப் படியன்ன பலியிடுத
றோர்ந்திடும் பூதயாகம்
வருமரிய வதிதியர்க் குளமகிழ்ந் தன்னம்
வழங்கன்மா னிடயாகநோய்
மாற்றுமக மைந்துந் தினஞ்செயிற் பாவமது
வாரா தெனத்துணிந்தே
அரனருள் பெறுஞ்சைவ மறையவர் புரிந்திடுவ
தருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சுக)

போசனத்தீற் றுற்றங் கூறியது.

பந்தியிடை யோதன மிருப்புக் கரண்டியாற்
பரிமாற வுண்ணரோடம்
பாவைய ரிடுங்கறியை மீண்டுகொடு வாவெனப்
பன்னியிட் டுண்ணரோடஞ்

சந்தியா காலத்து மத்தராத் திரியினுந்
தயிரடிசி லுண்ணரோடஞ்
சாலவய லாருண்ட நற்கலந் தன்னிலே
தானுண்ண லதிகதோடம்
வெந்தெடுத் திடுமட் கலத்தினுந் தகரத்து
மிகவுடைந் திடுகலத்து
மேவுமுள் ளங்கையினு மிட்டுண்ண னின்றுண்ணல்
மேலான தோடமாகும்
அந்தமிகு பொன்வெள்ளி பாத்திரத் திலையுசித
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௬௨)

போசனகாலந் தன்னபலியிடும் விதிகூறியது.

போஜனஞ் செயுமிடந் திருமெழுக் கிட்டுப்
பொருந்திய கிழக்குமுகமாய்ப்
பொற்பா யிருந்திட்ட வடிசின்மே லுதகம்
புரோட்சித் துடன்வலப்பால்
வாசநறு நெய்யன்ன மைந்துபிடி பலிவைத்து
மந்திர நவின்றுநன்னீர்
வலமாக வாபோ சனங்கொண்ட மிகுதிநீர்
மருவுசிறு விரலின்வழிவிட்
டேசிலப் பலிகொடிக் கிட்டசன மைங்கா
லெழிற்பிரா ணாகுதிபுரிந்
தின்னடிசி லுண்டுத்த ராபோச னங்கொண்
டெழிற்சேட நீர்ப்பெருவிரல்
ஆசில்வழி விட்டெழுத லாசார சைவநெறி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௬௩)

போசனஞ்செய்தபி னநுட்டானவிதி கூறியது.

போசனஞ் செய்தபின் பாசமன முஞ்செய்து
பொற்புடன் வடகிழக்கம்
போருகா சனமேவி வில்வலன் வாதாவி
பொன்றிட வயிற்றைவருடித்
தேசொடுஞ் சீரணஞ் செய்தகும் போதுமச்
சிவமுனியை யுன்னியோர்ந்து
திலமளவு திருநீ றருந்திப் புனைந்துளந்
தேர்ந்தங்கன் யாசமுடனே
வாசியு ளெழும்பிரா ணயாம மாற்றிநா
மௌனமாய் மூவேழுரு
மந்திர மகோரத்தை யுள்ளே செபித்துமேன்
மகிழ்வொடு மிருப்பர்நாளும்
ஆசையுறு கிருகத்த வாச்சிரம நெறியென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ண முலைக்குரிய
வண்ண மலைத்தேவனே. (கூ௪)

தாம்பூலந்தரிக்கும் விதிகூறியது.

மெல்லிலைக் காம்பும் பழுப்போடு காம்பதன்
மேற்பொருறும் புங்கசங்கன்
மிகமுறுக லழுகலும் வதங்கலிவ் வெட்டாகும்
வெற்றிலைக் குற்றநீக்கி
நல்லபாக் கெச்சின்முக் காலுமிழ்ந் தாராய்ந்த
நறியவெள் ளிலைகிழித்து
நண்ணுகற் சுண்ணங் கிராம்பேல தக்கோல
நன்மிளகு வான்மிளகுநேர்
சொல்லருஞ் சுக்குமணை மேவுசா திக்காய்
தொடர்ந்திடுஞ் சாதிபத்திரி

சுகவாச பூரமிவை தாம்பூல சகிதமாய்த்
துய்த்திடுவர் செல்வர்கண்டாய்
அல்லியலர் வாவிசூ மூண்ணியணு மலையனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னுற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சூரு)

தோடம்வரும் வகைகூறியது.

ஊணருந் துங்காலை பேசனகை செய்தல்பிடி
யுண்டையா யுண்ணல்சிந்தல்
ஒருவிரலை நீக்கியுணன் மயிரென்பு பூச்சிபுழு
வுகிர்பட்ட சோறுண்டிடல்
காணுநக மயிரினைப் பல்லாற் கடித்தலொரு
காலினுற் காறேய்த்துநீர்
கழுவிடுத லுண்கலத் தெச்சிலை யுமிழ்ந்திடுதல்
கையிணு னகமுரித்தற்
பாணியாற் றலைசொறிதல் விரலினுற் றலைகீறல்
பாழ்மனையி லேயுறங்கல்
பட்டகஞ் சாக்கட் குடித்தல்பெரி யோரைப்
பழித்தனித் திரையெழுப்பல்
ஆணைதள ளுதலிவை மகாதோட மென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சூசு)

ஆசமனஞ் செய்யுங் காலங்கூறியது.

வாசமலர் கொய்யினும் வீதியிடை போய்வரினு
மலசலம் விட்டுவரினும்
மாதரொடு சம்போக மேவிடினு நீசர்நிழன்
மருவியுடன் மீதுபடினுந்

தூசரை யுடுக்கினும் பலகார முண்ணினுஞ்
சோறுணினு நீருண்ணினுந்
தூயநற் கருமங்க டருமங்கள் புரியினுந்
தொகுசிராத் தங்கள்செயினுந்
தேசுதரு தானங்கள் செய்யினுங் கனிகாய்க
டின்னினுந் தூங்கியெழினுந்
தீயகொலை செய்குவோர் பாயுநிழ றோயினுந்
தீண்டொணு தவைதீண்டினும்
ஆசமன மக்கணஞ் செய்யல்விதி யென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சுஎ)

பூதேவிவாசமுந்தோட மூள்ளவையுங்கூறியது.

நாட்டரசு நீழலும் விளாமரத் தடிநிழலு
நன்மனை விளக்குநிழலு
நடமாடு மனிதர்நிழ லிரவினுடன் மேற்படியி
னலமிலாச் சேட்டைமருவும்
பூட்டுநூன் மறையவர்க டந்நிழன் மிதித்திடற்
புனிதமா யொருவனுண்ட
புனற்சேட மொருவனுண லாடைதோய்த் திட்டநீர்
பொருந்தவுட் கொள்ளலாகா
வீட்டிடை பெருக்கிய விளக்குமாற் றுப்புழுதி
மென்மயி ருகுத்தபுழுதி
விறிடுங் கழுதைநாய்ப் புழுதிவெந் திடுசாம்பல்
வேகாக் கரிப்புழுதியும்
ஆட்டிடைப் புழுதிபட லாகாது மேலென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (சுஅ)

இவ்வகையமையிற் சிறப்பெனக் கூறியது.

விளையுநன் னிலமுமாய்த் தண்ணீரு மருகதாய்
விரையெலா மனையிடமுமாய்
வெள்ளிமலை போலெருது கருமலை யெனக்கடா
விடுகோலு மாயேருமாய்க்
களவிலா நெஞ்சுடைய படியாளு மாயுளுங்
காலத்தி லேயுழவுமாய்க்
கனமான கிடையெருத் தழையுமாய் நாற்றுவிரை
காலுமாய் மேனடவுமாய்
வளமான பாடுமாய்க் களைபறிவு மாய்வேலி
வளைவுமாய் நற்காவலாள்
வைப்புமாய் நாடோறும் வந்துபார்க் குந்திறமு
மாயிருந் தாற்பலிக்கும்
அளையுறுங் கொழுமுனைச் செல்வமே செல்வமா
மருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (சுகூ)

இந்நாணீக்கியிந்நாளிற் கூடிற் சுபுத்திரநதிப்பாரெனல்.

இங்குள சரீரமுண் டாகின்ற வயணமே
காதசி யிலங்குபர்வ
மியலமா வாசைமா தப்பிறப் பாகா
திருக்குநாட் களைநீக்கியே
மங்கையர்கள் பூத்துநீ ராடிய தினந்தொட்டு
வருமா றிரண்டுநாளில்
வாலாய மாய்க்கருக் குழிவாய் திறந்திடும்
மணவாள ரொடுகலந்தாற்
பொங்குசுக் கிலமுஞ் சுரோணிதத் தொடுசேர்ந்து
பூரிக்கு மொண்சிப்பியிற்

பூத்தமுத் தைப்போலு மறுகுநுனி மேற்பனிப்
போலுந் திரண்டுருவமாம்
அங்கமல சன்வந்த மைப்பனே யிவ்வுருவ
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (எ0)

சரீரமுண்டாகுமுறைமை கூறியது.

சுக்கிலஞ் சோணிதத் துட்சேர்ந்து சோணித
சொரூபமாய்த் தமர்வாசலைத்
தோன்று தடைத்திடும் வாயுவே வேலிபோற்
சூழ்ந்துகாக் குறும்விந்துவோ
டொக்கப் பிராணவாய் வொளியாம பானவாய்
வொன்றியே வெளியினிற்கு
முட்பாய்ந்து விந்துடன் பிராணவா யுவுகூடி
யுள்ளே கலந்துநிற்கும்
மிக்குதா னன்கரு வளர்குமக் கருவுக்குண்
மேவும் வியாதிமூன்று
விரவிக் கலக்குமைந் தாநாட் கருக்குமிழி
மேனிபோ லாய்வளருமே
அக்கமணி தூர்க்கையுறை மிக்கபதி வாசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (எக)

சரீரம்வளரும் வகைகூறியது.

கருத்தரித் திட்டபத் தாநா டிரண்டுருவு
கண்டுமூளை போன்மூளைத்துக்
கருதுபதி னைந்தாந் தினத்திலே முட்டைபோற்
காணுமக் கருமிதந்தே

யுருத்தரு முதற்றிங்கள் கம்பமா மிருமதியி
னூற்றதலை முதுகுமுகமா
மோதுமூன் றுந்திங்கள் செங்கையும் பாதங்க
ளூறுவிரல்க ளரையுமுண்டாந்
திருந்துநா லாந்திங்கண் மூக்குமுக வுருவமாஞ்
செய்யவைந் தாந்திங்களிற்
செவிநாவு கண்களாஞ் செப்புமா றுந்திங்கள்
சேர்ந்திடு நகங்களுண்டா
மரத்தமா ணிக்கம் பதித்தமுடி யரசர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (எ௨)

இதுவுமது.

விஞ்சுமே ழாந்திங்கண் மயிர்நரம் பென்பும்
விளைந்திடுஞ் சடமோடுதான்
மேவிடுஞ் சலமலந் தங்குதா துக்களு
மிடைந்துமூச் சுண்டாகுமே
யெஞ்சிலெட் டாந்திங்க டாயுண்ட சாரங்
ளியாவுமுனை யானகதிர்போ
லேய்ந்தருவி பாய்ந்தே கபாலத்தின் வழியாக
விழியவக் குழவிவளருங்
கொஞ்சவுரு வோவொன்ப தாந்திங்க ளறிவுமேற்
கொடுபிறப் பித்தோன்றனைக்
குறித்திரு கரங்கூப்பி யருடா வெனத்தவங்
கொண்டே யிருந்துபுரியும்
அஞ்சலப் பையொரீஇ வெம்பிறவி நோக்குமே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (எ௩)

பிறவித்துன்பத்தினியல்பு கூறியது.

கொடியபத் தாந்திங்கள் சற்குரு பார்வையே
கொண்டிடுங் குழவிதன்னைக்
கோதறு ம்பானவளி கீழ்நோக்கு விக்குமக்
குழவிமிகு துன்பமுற்றுப்
படியிற் பிறந்தபின் பகரரிய மாயா
படப்போர்வை யான்மறைந்து
பண்டையி லிருந்தபே ரறிவழிந் திருவினைப்
பாசவலை யிற்படிந்து
துடியளவு நேரநீங் காக்கவலை நோயிலே
தோயுமிங் கிதனைநோக்கிற்
சுரைக்கொடி படர்ந்ததை நிகர்க்குமிச் சனனமாந்
தோதக மொழிப்பரறிவோர்
அடியணு மலையனே தொடியரா மணியனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (எச)

அட்டலட்சுமிகள் பெயர் கூறியது.

மட்டிலாச் செல்வங்கண் மருவுதன லட்சுமி
வளர்ந்ததா னியலட்சுமி
மணிமாட மனையாதி செந்நெல்வய ஞேட்டங்கள்
வளமிகும் பூலட்சுமி
யிஷ்டபாக் கியகுணச் சந்தான லட்சுமி
யெழுத்தொடு நிறைந்தகேள்வி
யியல்பான புத்திவளர் வித்தியா லட்சுமி
யிசைந்தவீ ரியலட்சுமி
திட்டமா யெங்கணுஞ் சென்றபோ தினும்வெற்றி
சேர்தரும் விசையலட்சுமி

தீமைவந் தாலுங் கலங்கா திருக்கின்ற
தீரதை ரியலட்சுமி
யட்டலட் சுமிவாச நேசதுரை ராசர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (எரு)

ஆடியைந்தாந்தேதிவரும் வாரத்தின்பலன் கூறியது.

ஆடிமா தம்பிறந் தைந்தாந் தினத்திலே
யரியபுத வாரம்வந்தா
லவ்வருட மொருபோக நாடொறு மிகவிளையு
மவனிமே லிட்டபயிர்கள்
பாடுள வியாழம்வரி லிருபோக மேவிளைவு
பாரெலாஞ் சுகசீவனம்
பன்னுசுக் கிரனெனில் கதிர்சாவி சனியனே
பயிரொன் றும் விளையாதுகாண்
நீடுஞா யிறுபயிர்கள் பாழ்திங்க ளொருபோக
நெல்விளையு மேசெல்வமாம்
சேர்ந்தவங் காரகன் பனிச்சோள மேவிளையு
நெறியீது குறியென்பர்காண்
ஆடல்புரி யண்ணலே மாடமா ளிகைசெல்வ
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (எசு)

பெண்கள் ருதுவாதும் நக்ஷத்திரபலன் கூறியது.

மன்னுமச் சுவினியிற் புட்பவதி யாயிடின்
மகிழ்நனுக்கே தோடமாம்
வான்பரணி நாணல்ல மைந்தருண் டாங்கனக
மருவுகார்த் திகைமலடியா

முன்னுமோ ரா கணிதீர்க்க மங்கிலிய முடையளா
    மூலவுமான் றலைதலைவனுக்
  குயர்சுக மளிப்படிரு வாதிரை வெறுப்புமன
    முடையளாம் புனர்பூசநாள்
பொன்னெழில் சுகந்தரும் பூசஞ் சிறப்புடையள்
    பொலியுமா யிலியமைந்தர்
  பூத்தொழியு மகமுரிய புருடன்மே லதிகாமி
    பூரமைந் தர்களானியாம்
அன்னநடை யார்நடன சாலைவளர் சிங்கபுரி
    யருள்பெறு வசந்தராயர்
  அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
    வண்ணா மலைத்தேவனே. (எஎ)

இதுவுமது.

உத்திரம் பதிவிரதை யத்தமென் மேற்செல்வ
    முண்டா யிடுஞ்சித்திரை
  யோங்கிய நலந்தரும் பாங்குறு சுவாதிசுக
    முற்றிடுந் தனிவிசாகம்
மத்திமந் தலைவனுக் கல்லல்புன் னேய்கேட்டை
    மறுபுருட னிச்சைமூலம்
  வாழ்வுபால் பாக்கியம் பூராட மடிமைகெடு
    மாமுத்தி ராடஞானப்
பத்தியுறு மோனநற் பொருளா மவிட்டம்
    பசும்பொனுள் சதையநிதிபோம்
  பகரும் புரட்டைமல டுத்திரட் டாதிமிடி
    படுமிரே வதிநடலையாம்
அத்தந் துகிர்ச்செறி மடந்தையர்கள் பூத்தபல
    னருள்பெறு வசந்தராயர்
  அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
    வண்ணா மலைத்தேவனே. (எஅ)

ஆசௌசமுறாதவிடங்களைக் கூறியது.

தேவால யங்களிற் சந்நிதா னங்களிற்
றிருவிழா விற்சிறந்த
தேர்நடந் திடுபொழுதி லருமறை பகர்ந்தவழி
செய்யுந் தழற்சாலையிற்
பாவாணர் கல்விப்ர சங்கம் புராணம்
படிக்கின்ற வித்வசபையிற்
பார்வைக் கலங்கார சோபன முகூர்த்தங்கள்
பண்ணும் விவாகசபையிற்
கோவான சிங்கா தனத்திருந் தரசுசெங்
கோல்கொண்ட ராசர்சபையிற்
கூறுமிவ் விடமெலா மாசூச மிலையென்று
கூப்பிட் டுரைக்குமறைகள்
ஆவா கனத்தனே மாவார் வனத்தனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (எசு)

அசுவவிலக்கணங் கூறியது.

நீலமர கதமுத்து மாணிக்க மம்பொன்
னிறைந்தவெண் பனிசந்திரன்
நெடியதா மரைமலர்க் காசைமலர் கருமுகி
னெருப்புமணி வண்டுதீம்பாற்
கோலமுறு கின்றசெம் பஞ்சக் குழம்புகுயில்
கூறுமீ ரெட்டுநிறமாங்
குதிரையுத் தமமிவையி லொருநிற முடைத்தாய்க்
குறித்தமுக மார்புச்சிவாற்
காலுமிவ் வெட்டிடம் வெளுப்பா யிருக்கிலது
சுதியட்ட மங்கலமதாங்

கவினுமுக நாற்பாத மைந்தும் வெளுப்புறிற்
கனபஞ்ச கல்யாணியாம்
ஆலவா யிற்பரியி லக்கண முரைத்தவா
வருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (அ0)

இதுவுமது.

கட்டுவாம் பரிநாபி தொட்டுமுன் புறமெலாங்
கதிர்போற் சிவந்துமதிபோற்
கவினுறும் பின்முழுது நலமா வெளுக்கிலக்
கற்கிபகல் விஜயமென்பார்
வட்டமதி போலவே முற்புறம் வெளுப்பாய்
வயங்கியே பிற்புறமெலாம்
வடிவுசெங் கதிர்போற் சிவந்திடுங் கிள்ளையது
மருவுகதிர் விஜயமென்பார்
இட்டநூ றங்குல முயர்ந்தபரி யுத்தம
மெண்பத்து நாலங்குல
மிவுளியது மத்தியம தறுபத்தொ ரங்குல
மியம்புமத மக்கோடையாம்
அட்டமங் கலதுரக நித்தலு நடாத்துதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (அக)

இதுவுமது.

வாசியின் வயதுமுப் பத்திரண் டேவருட
மருவிடும் பத்தவத்தை
மாற்றிலொரு மூன்றுவற் சரமுமிரு மாதமு
மன்னுநாட் பன்னிரண்டாம்

பேசுபரி யெவ்வண்ண பேதக மிருக்கினும்
பெருவெள்ளை தான்கலந்தாற்
பெட்புமிகு மப்புரவி தலைவன் றனக்குப்
பெருஞ்செல்வ முங்கல்வியாந்
தேசுள கறுப்புப் பரிக்குவயி றேனுந்
திகழ்ந்தநெடு மார்பமேனுஞ்
செஞ்சிவப் பேறினும் வெள்ளைநிற மேவினுஞ்
செயவாரு ணத்துரகமாம்
ஆசுமது ரஞ்சித்ர வித்தார கவிஞர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (அஉ)

இதுவுமது.

ஏறுபரி மாக்கழுத் திடையிரட் டைச்சுழி
யிருக்கின்மிடி யின்னலுண்டாம்
இருகாலி லேயிரட் டைச்சுழி யிருக்கிலவ்
விவுளியா னிகளபந்தங்
கூறருங் கொடியவினை யாமிறுதி யுண்டாங்
குதக்குமீ ருதடுதனினுங்
குலவுமுற் காலடியி னுங்கபோ லத்தினுங்
கோதறு முழந்தாளினும்
வீறுசுழி தாநொன்றின் மாவேறு தலைவனை
வெவ்வினை மிகுத்தொறுக்கு
மேவுமிவு ளிப்பந்தி யூடுறப் பண்டய
மெலிந்துநல் குரவெய்திடும்
ஆறுலவு செம்பவள வேணிமதி முடியனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (அ௩)

இதுவுமது.

தெரிதரு கழுத்தினிடை யொருசுழி யிருந்திடிற்
றெய்வமணி யென்றுபெயராம்
திருமகள் விலாசமுண் டாமுகந் தலைநாசி
திகழுமார் பிவைநாலிடம்
மருவிய விரண்டுசுழி யுண்டாயின் வெற்றிதரு
மாறிலாச் சரிமத்தகம்
மணியா யிருக்கிலவ் வாசிமே லேறுவோர்
வாழ்வுமென் மேலெய்துவார்
விரவுநெற் றியினடுவி லொருசுழி யிருக்கினது
விறுநிதி மதியுமுண்டாம்
வேளிவ் விடங்களிற் சுழியிலா விவுளியின்
மேலேற னன்றன்றுகாண்
அரியயற் களவிடற் கரியபே ரழகனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேனே. (அஉ)

இதுவுமது.

வேங்கைநரி சிங்கமுயன் மயின்மல்ல ரம்புமத
வேழங் குரங்குபோல
வேகமுள நடையதாச் சங்குவெண் கன்னலின்
விலாழிகால் வாய்நுரையுமாய்த்
தாங்குவிற் றொனிசங்கு மேகமத் தளமேறு
தண்டிரை மடங்கதொனியாய்ச்
சாற்றுகுற மகள்போற் கவிழ்ந்தமுக மாகநாத்
தழையுமாந் தளிரினிறமாத்
தேங்கமழ் மலர்ந்தகரு நெய்தல்போ லுக்கிரஞ்
சேர்ந்தவிழி யாய்ப்பற்கடாஞ்

செப்பமா யொப்பமாய் வாலேந்து சாணுய்ச்
சிறக்குங் குளம்புயரமா
யாங்குதிரை லக்ஷண முறைத்தவிதி யென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (அ௫)

இதுவுமது.

பாயும் பெரும்பரி முகத்திடை வெளுத்திடிற்
பரராச ரைச்செபிக்கும்
பணிபூண் கழுத்துவால் முதுகிவை வெளுத்திடிற்
பாக்கியமெ லாங்கொடுக்கும்
ஏயுமிரு பிடர்வெள்ளை யாயிருந் தாற்புதல்வ
ரின்பமேன் மேலுமுண்டா
மெழின்மார்பில் வெள்ளையுறில் கவலைநோ யின்றியே
யெப்போது மனமகிழ்தருந்
தோயுமுக மிடதுபால் வெள்ளைநிற மேவிடிற்
றூயசந் தானமுண்டாந்
தோன்றிய வலப்புறம் வெண்ணிறஞ் செல்வமாந்
தூய்முகம் பிற்பாற்சுகம்
ஆயும்ப்ர பந்தகவி நேயம் பொருந்துதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (அசு)

இதுவுமது.

மார்புங் கழுத்துமர வப்படம் போலதாய்
வாழைமட லொத்தசெவியாய்
வதனமுக் கோணமாய் நுதலுயர்ந் தகலமாய்
வைக்குமடி பந்தொத்ததாய்

ஏர்புனையு நாலுகா லுங்கடைந் தேயதை
யெடுத்துநாட் டியதுபோலா
யிருதொடை திரட்சியாய்ச் சுழல்கின்ற போதுதீ
யெழுகடைக் கோலென்னலாய்
போர்புரி முகத்திலே வெட்டினு மெதிர்ப்பதாய்ப்
புரவியோன் மனமறிவதாய்
பொங்ககழி கோட்டையுந் தங்கிய துருக்கமும்
புலியெனப் பாய்கின்றதாய்
ஆர்பரி யிருக்கின்ற துத்தமப் புரவிகா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (அஎ)

இதுவுமது.

கொய்யுளைப் புரவியது நிற்கின்மலை யென்னவுங்
கூத்தினட மகளென்னவுங்
குலவிடும் வாசனையின் மான்மதம் பாளிதங்
குங்கும மகிழ்கொப்பதாய்
வெய்யகட் பொறியரா வட்டநெடு வீதிநடை
விடுசுழற் பங்கென்னவும்
மேலேறு சேவகன் காற்குள் ளடங்கியே
வேகத்தில் வளியென்னவுஞ்
செய்யுநற் சாரிகை பதினெட்டு முள்ளதாய்த்
திருத்தமிரு நான்குவயது
சென்றபரி மேலேறல் விதியென்று மறையாஞ்
செழும்பரியி லேறிவந்தெம்
ஐயநீ பாண்டியற் கறிவித்த தென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னுற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (அஅ)

இவர் முன்னி வின்னது பெறவேண்டுமெனல்.

தாமமா கியபிறவி சாராத மெய்ஞ்ஞான
சாதனம் பெறவேண்டினோர்
சரியைகிரி யாயோக மூன்றுங் கடந்தமெய்ச்
சற்குருவை யடையவேண்டும்
நாமமார் தருசிவா லயலிங்க தரிசன
நாடியருள் பெறவேண்டினோர்
நக்கன் வலக்கைதலை மேற்கொண்ட வதிகார
நந்தியைமுன் காணவேண்டும்
பூமியா ளரசரைக் கண்டுகா ரியசெயம்
பூர்த்தியாப் பெறவேண்டினோர்
புரவலர் கருத்துக் கிசைந்தமந் திரிகள்பாற்
போய்முன்பு காணவேண்டும்
ஆமிக வளங்கள்சிங் காபுரி விளங்கவரு
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (அகூ)

கலவியிற் கோக்கோகலீலை கூறியது.

நாடுமுட லிழையுமா லிங்கன மதோரைந்து
நண்ணுமித முதரபான
நல்லசுவை பதினொன்று மமிர்தநிலை பதினைந்து
நகுநகக் குறிகளேழுங்
கூறுதந் தக்குறிக ளெட்டுமுயர் பறவைபோற்
குரலோசை யெட்டுமிருகைக்
குவிதாட னங்களிரு நான்குமுறை காணங்கள்
கூறுநாற் பத்தெட்டுமே
யூடுகல விப்போக மெய்ம்முயக் கிரெட்டு
முறமுநூற் றிருபதுடனே

யோராறு மொழிகின்ற கொக்கோக விதமறிந்
தாடலோ டினிதாகவே
யாடவரு மங்கையரு மனுபவித் திடலின்ப
மருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (௬௦)

பெரும்பாலுநோய்கள் வாராவகை கூறியது.

எட்டுநா ளைக்கிரு முழுக்காடொவ் வோர்பட்ச
மிருகண் கலிக்கமிடுவோர்
எத்தாக மதிதொறும் பித்தநீ ரெல்லா
மெடுத்திட மருந்துகொள்வோர்
திட்டமா யெண்ணான்கு நாளினுக் கொருகாற்
றிருந்திழை புணர்ச்சிசெய்வோர்
செப்புமொரு மூன்றுமா தத்திலகு நசியமது
சீருடன் செய்துகொள்வோர்
வட்டமா மூவிரு மதிக்கொரு விரோசனம்
வாங்காம லேவாங்குவோர்
வயிறுபசி கண்டுண்ணு வோர்களுக் கொருநோயும்
வாராது மிகுதியாக
அட்டமா சித்திமுன் னிட்டமது ரேசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. (௬௧)

தீயோர்தேடுபொருள் போம்வழிகூறியது.

வையகந் தன்னிலே தீயோர்க ளீட்டுபொருள்
வம்பருக் காம்பிணிக்காம்
வாயோட்ட மாகவே பேயோட்டு பூசாரி
மார்கடஞ் செலவினுக்காம்

கையகங் கொண்டகொலை பாதகர்க் காம்படைக்
கன்னமிடு கள்ளருக்காங்
கஞ்சா மயக்கபினி சாராய மாசுனங்
கடியகட் குடியருக்காம்
மய்யகஞ் சிறிதிலாப் பொய்வழக் கதுபேசும்
வீணருக் காந்தழற்காம்
வேசையர்க் காம்பூத மூசுமண் ணுக்காகும்
வேந்தர்தண் டத்தினுக்காம்
ய்யனே துய்யனே செய்யவெழின் மெய்யனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (கூஉ)

நல்லோர் பொருட்பயன்படுமாறு கூறியது.

சற்கடற் றூரணியி னல்லோர்க ளீட்டுபொரு
டேவால யங்களுக்காந்
தேவாபி டேகமா ராதனைக் காமையர்
திகழ்சமா ராதனைக்கா
ற்கடற் கரைகண்ட புலவர்கட் காமௌன
நுவலுமெய்ஞ் ஞானியர்க்காம்
நோற்குமா தவமுடைய பேர்க்காம் பசிக்கன
நுகர்ச்சிக்கு முதவலாகும்
ாற்கிளரும் வேதநெறி வேள்விகட் காஞ்சுகுண
நண்ணுதா னங்களுக்கா
நற்றொண்டர் பாகவதர் தங்களுக் காம்புரியு
நாலெட் டறங்களுக்காம்
ஆற்கணால் வர்க்குமுன் னருள்பரஞ் சோதியே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (கூங)

பிரயாணத்துக்கு ராசி பலன் கூறியது.

மேடலக் கினமதனி லூர்ப்பயண மாகாது
விறிடப நலமுள்ளதாம்
மிதுனத்தி லேசெலுங் காரியமெ திர்ப்படு
மென்கடக மரசர்சேவை
நாடருஞ் சிங்கத்தி லாதாய மாங்கன்னி
நளிர்ச்சுரங் காணுந்துலாம்
நற்பொருள் கிடைக்கும் விருச்சிகம் பிணியினு
னலிவுட னடுக்கமுண்டாங்
கோடுறுந் தனுசுசத் துருஜயம் மகரமது
கொடியபய மாங்கும்பமோ
கொடியர்தண் டனையெய்து மீனமழை யாற்பயங்
கொண்டயாத் திரைசெய்காலத்
தாடுவே யுருதோளி பங்கவிஃ துண்மையா
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைதேவனே. (சு

முக்குணத்தியல்பு கூறியது.

ஞானமரு டவமேன்மை வாய்மைபொறை மோனமொடு
நவைசெயைம் பொறியடக்கல்
நற்கரும வியல்புநெறி சாந்தமுயர் கல்வியிவை
நல்லசாத் விககுணமாம்
ஈனமறு தானமன வூக்கந் தவந்தரும
மெழில்கல்வி கேள்விஞானம்
இசைவீர சௌரிய மலங்கார மிவையே
யிராசத குணத்தினியல்பாந்
தானுறு நெடுந்துயி லொழுக்கமுத னீதிவழு
தாழ்வுஞ் சமாதிகோபந்

ாவுகொலை பேருண்டி சோம்புபொய் காமமிவை
தாமத குணத்தன்மையாம்
முத மைந்தாடு மந்திவண் ணத்தனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைதேவனே. (௫௫)

நவக்கிரகதானங்கூறியது.

னுவுக் கீந்திடுந் தானமது கன்றீன்ற
பசுவாகு மதிதனக்குப்
பானிறச் சங்குசெவ் வாய்க்குச் சிவப்பெருது
பைம்புதற் குச்செம்பொனும்
னியல் வியாழந் தனக்குவெண் பட்டாடை
மாசுக்கி ரற்குவெள்ளி
மருவிய சனிக்குமிவை கரியநிற மாயிலகு
மயிடமா வெருமைக்கடா
னிய லிராகுவுக் கச்சங் கருப்புடைத்
தானவெள் ளாட்டுக்கடா
தக்கசெங் கேதுவுக் கோதரிய மதயானை
சாற்றுமறை யோர்க்களித்தல்
னது நவக்கிரக தானவிதி யீதென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௫௬)

நவக்கிரகவுருவுந்திசையுங் கூறியது.

டுவட்ட மாமிரவி யுருவிருக் கின்றநிலை
நாடுமக் கினிமூலைதா
ற்சதுர மதியுருக் காற்றிசைத் திரிகோண
நாணிலம கன்வடிவமாம்

வடுவிலீ சன்றிசைப் பாணவடி வம்புதன்
வடதிசைத் தீர்க்கசதுரம்
மருவுபொன் கீழ்த்திசைப் பஞ்சகோ ணத்துரு
வயங்குநீர் தருசுக்கிரன்
மிடையுமேற் றிசைதனுப் போலுருச் சனிநிருதி
மேவுசூர்ப் பாகாரமாய்
மேவுவனி ராகுவட மேற்றிசைத் துவசமென
வெங்கேது தங்குமிடமாம்
அடையுமொன் பதுகிரக வடிவமுந் திசையுமீ
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

நவதானியமுஞ்சமித்துங் கூறியது.

சூரியன் கோதுமை செஞ்சாலி சோமனுந்
துவரைசெவ் வாய்தனக்காஞ்
சொல்லரிய புந்திக்கு நற்பசும் பயறதாந்
தூய்வியா ழந்தனக்கு
வேரியங் கடலையாம் வெள்ளிக்கு மொச்சையாம்
மேவிய சனிக்கெள்ளதாம்
வெற்றிகொ ளிராகுவுக் கானமா டங்கேது
விளைகாண நவதானிய
நாரிய லெருக்குப் பலாசலங் கருங்காலி
நாயுருவி யச்சுவத்தம்
நல்லத்தி வன்னிகூர்ப் புல்லறுகு தர்ப்பையிவை
நவசமித் தாகுமென்றே
யாரிய முணர்ந்தமே லவர்ீது விதியென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

மூவர்தேவாரத்தொகை கூறியது.

பன்னருந் திருஞான சம்பந்தர் செந்தமிழ்ப்
பதிகமீ ரெண்ணாயிரம்
பண்பான சுந்தர ரிசைத்ததே வாரமுப்
பஃதுமே லேழாயிரம்
நன்னுதற் றிலகவதி யாரொடுந் தோன்றுதிரு
நாவினுக் கரசர்சொன்ன
நற்றமிழ்ப் பதிகநாற் பத்தொன்ப தாயிர
நாடுமிம் மூவர்மொழியுட்
(கூ)பின்னரெண் ணூற்ரூறு பத்துநாற் பதிகமிப்
பேருலகு தனில்விளங்கும்
பேசுமிரு நூற்றேழு பத்தைந்து சிவதலப்
பெருமைசேர் பதிகமாகும்
அன்னதிரு முறையோதி நின்னடிப் பூசைசெய்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (கூசு)

சிற்றின்பப் பேரின்ப வட்டாங்கயோகங் கூறியது.

வனிதை பஞ்சணையாறு சுவைபோச னங்கந்த
மருவுசித் திரவஸ்திரம்
மாழைமணி யிழையணித் தயிலதாம் பூலமெண்
வகையதே சிற்றின்பமாந்
தினமணி விபூதிருத் ராக்கபஞ் சாக்கரந்
தீர்த்தப்பிர சாதமாசான்

றெரிசன மிலிங்கசங் கமமெட்டு மன்பருட்
டெளிதரும் பேரின்பமாந்
தனியியம நியமமா தனபிரா ணயாம
தற்பிரத்தி யாகாரமாம்
தாரணை தியானஞ்ச மாதியிவ் வெட்டுமே
சாற்றுமட் டாங்கயோகம்
அனவரத நடனமிடு வளருக பதத்தனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணலி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

நாலு யுகத்திலும் பூசை செய்தவர்களைக் கூறியது.

தீதிலா துயர்கிரே தாயுகந் தன்னிலே
செங்கனற் சோதிமலையாந்
திருமால யன்முத லிமையோர்கண் மறைமுனிவோற்
சிவதரும மேபுரிந்தார்
நீதிமா மணிதிரே தாயுகத் தாகம
நெறித்தபோ தனர்பூசனை
நிதிதுவா பரமதில் வச்சிராங் கதனீன்ற
நிருபனும் வீரசம்பு
நாதனே கலியில்வல் லாளபிர புடதேவ
ராமர்தரு மஞ்சகாப்த
நவிலாயி ரத்தேழு நூறுமெழு பத்துமே
னுடபில வங்கவருட
மாதியாய் நின்றதல தருமகர்த் தாவான
வருள்பெறு வசந்தராயர்

அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௧0

அவையடக்கங்கூறியது.

மௗந் தோயிதழி மாலையொடு மணமிலாப்
பச்சிளம் புல்லறுகினைப்
ழுதென்று தள்ளாம லீசனுள மகிழ்வொடும்
படர்சடையி லேற்றபடியால்
மா னையினு லுரைத்தவிச் சதகமது
மிக்கபுன் சொல்லாயினும்
(௧0 மேதினி யெலாம்புக ழிலக்கண மிலக்கிய
மிகத்தெளிந் தறிநாவலர்
புநின் புகழ்தலப் பெருமையின் றுதியிருப்
பதனு லிகழ்ந்திடாமற்
படியுள நிறைந்தன்பு கொடுபெரி துவந்தருட்
பாலித்து மேற்கொள்ளுவார்
ரியயனொ டிந்திரன் பூசித்த வீசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. (௰

வாழிகூறியது.

ததமு மோதுநான் மறைவாழி யாகந்
தளிர்க்கும் பசுக்கள்வாழி
தரணிகா வலர்வாழி மனுநீதி வாழிமுத்
தமிழ்வாழி வேள்விதனிலே

ந்தெழுந் தெய்வீக மன்னவன் வாழியவன்
மதலைமெய்ப் பொருளையனார்
மைந்தர்வழி வந்தவர்கள் வாழிகுக முனிவாழி
மாதவ நிறைந்துவாழி
சுந்தர மிகுந்தவுண் ணாமுலைத் தாய்வாழி
சோதிப்ர காசமாகத்
தோன்றுமண் ணாமலைப் பரமனார் வாழிமெய்த்
துணைமனோன் மணியும்வாழி
யந்தணர்கள் வாழியெழில் சிங்கபுரி வாழிமெய்
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

அண்ணாமலைச்சதகம்

முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்.

திவ்வியகவி நாராயணதாசர்

அருளிச்செய்த

வடவேங்கட

நாராயண சதகம்

மூலமும் உரையும்.

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

விலை அணா 2

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்.

வடவேங்கட நாராயண சதகத்தின்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அசவா	41
அபாத	7
அயனு	5
அரசன்	17
அலசத்	3
அறவைக்	6
ஆ	
ஆதார	21
ஆபாத	15
ஆளாகி	18
ஆற்று	12
ஆனந்த	20
இ	
இந்தா	23
இரையா	16
இற்கண்	46
ஈ	
ஈசன்	14
ஈன்றே	33
உ	
உடைச்	37
உரலுக்	25
உன்கோ	45
ஊ	
ஊழிற்	36
எ	
எதிரும்	4
எமக்	32
எய்சா	39
எல்லாரு	4
எழுநெட்	34
எனைக்	35
என்மா	40
ஓ	
ஓமங்	6
க	
கச்சுப்	38
கஞ்சப்	34
கண்பொன்	35
கமலத்	40
கவிகல்	30
கன்னிப்	38
கா	
காசிக்	26
காணுங்	29
காற்பா	15
கு	
குடிநீர்	22
குப்புற்	10
குலங்	33
கோ	
கோட்	17
ச	
சமர்த்	43
சமையா	25
சி	
சிவனீ	3
சிற்றப்	24
சு	
சுருக்	8
சுவை	28
செ	
செரிக்	21

செய்யுள்.	பக்கம்.
த	
தகவா	9
தலமே	9
தனுவுக்	37
தன்மைக்	12
தன்னெட்	24
தா	
தாயற்	11
தாளுக்	27
து	
தும்பிக்	19
துளசி	28
துறையூ	41
தே	
தேறுந்	46
தேன்பா	13
ந	
நஞ்சுவி	1
நல்லவட	1
நனிவா	47
நீ	
நீகாசு	5
நீயண்	26
நீர்கொண்	2
நெ	
நெட்டே	29
ப	
பகையான	10
பசியாத	7
பசுக்	32
பசை	30
பண்டிட்	10
பரகா	3
பரலோ	41
பலகூ	31
பா	
பாடே	6
பாலாவ	19
பி	
பிணிவிட்	45
பித்தங்	44
பிரம்புக்	22
பு	
புட்புள்	38
புற்கொண்	16
புன்சொல்	42
பூ	
பூரிக்கு	13
பூவுக்கு	20
போ	
போகேந்	36
ம	
மந்தன்	11
மன்று	23
மா	
மாணே	14
மி	
மிறுக்	42
மீ	
மீன்கூ	42
மு	
முகிலுக்	39
மெ	
மெலியா	43
மை	
மைநாக	32
வ	
வடுநிந்	22
வா	
வாஞ்சித்	31
வாய்க்	18
வாய்செய்	45
வான்சொல்	8
வி	
விக்கற்	25
வீ	
வீட்டுக்	18
வே	
வேட்பித்	13

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வடவேங்கட

நாராயண சதகம்

மூலமும் உரையும்.

பாயிரம்.

நேரிசை வெண்பா.

நஞ்சு வினைக்கா மமுத நமதுயிர்க்காம்
செஞ்சொல்லி னோர்சதகஞ் செப்பியது—விஞ்சுபுகழ்
நாரா யணதாசர் நன்றாக நானிலத்தே
பாரா யணஞ்செய் பவர்க்கு.

(இதன் பொருள்.) இந்தப் பூமியினிடத்து நன்றாகப் பாராயணஞ் செய்பவர்க்கு உபயோக மாகும்பொருட்டு மிகுந்த புகழையுடைய நாராயணதாசரென்பவர் செஞ்சொற்களினாலே திருவாய்மலர்ந்தருளியதாகிய ஒப்பற்ற நாராயணசதக மென்னும் பாமாலையானது, நம்முடைய ஊழ்வினையை யழிக்கத்தக்க நஞ்சாகும்; நமதுயிர்க்கோ காக்கத்தக்க அமுதமாகும் என்றவாறு.

காப்பு.

நேரிசை வெண்பா.

நல்லவட வேங்கடத்து நாரா யணசதகம்
சொல்ல வெனக்குத் துணையாமே - மல்லு

பணியான திண்புயத்துப் பாண்டவர்க்கு முன்னந்
துணையான பாதந் துணை.

(பதவுரை பொருள்.) அழகிய வடக்கின்கணுள்ள திருவேங்கடத்தி லெழுந்தருளிய ஸ்ரீமந்நாராயணன் விஷயமாக ஓர் சதகமென்னும் பாமாலை பாடுதற்கு மாலையின் வளம்பொருந்திய பருமையான வலியுள்ள புயங்களைப்படைத்த பாண்டவர்க்கு முற்காலத்தில் துணையாயிருந்த அவருடைய பாதங்கள் துணையா யிருப்பதுமன்றி என்னுயிர்க்கும் அவைகளே துணையாகும் என்றவாறு.

நூல்.

கலிவிருத்தம்.

பிரிந்திசை வண்ணம்.

நீர்கொண்டுதன் மலர்கொண்டுநன் னெறிகொண்டுநின் குறிகொண்டுவன், சீர்கொண்டுவந் தனைசெய்துனைச் செறிவார்களென் பெறுவார்களோ, பேர்கொண்டிலன் பொறிகொண்டிலன் பெரியோர்களா லருள்கொண்டிலன், நார்கொண்டு கண் டருள்சோதியே நாராயணா நாராயணா.

(இ-ள்.) பரிசுத்தமான தீர்த்தங்களையும் குளிர்ச்சி பொருந்திய புட்பங்களையும் கொண்டு நன்மார்க்கத்தை யறிந்து தேவரீருடைய சொருபத்தைத் தெரிந்து அழகிய ஞானத்தைப் பொருந்தித் தண்டஞ் சமர்ப்பித்து உம்மை ஆராதனை செய்து அடைந்தபேர்களெல்லாம் என்ன பலனைப் பெறுவார்களோ அறியவில்லை; நாயினேன் தாசிய நாம முதலிய பஞ்ச சம்ஸ்காரத்தையும் பாகவதராலே கிருபையையும் கொண்டவனே அல்லன்; ஆதலால் அன்புகூர்ந்து சந்தோஷித்து இரட்சித்தருளவேண்டும்; சோதிமயமாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று.

பரகாரியம் பலசெய்தனைப் பணியாமலே பிணியானபின்
விரகாயிருந் தழுதாவதென் வெறிபார்குணங் குறியார்களோ
உரகாரிமே லுபகாரியா பொருசாரியா வுலவாரியா
நரகாரியே முரகாரியே நாராயணா நாராயணா.

(இ-ள்.) கொலை, களவு, காமம், பொய், வஞ்சனை இவை முதலாகிய அநேக துஷ்ட கிருத்தியங்களைச்செய்து தேவரீரைப் பணியாமல் பிணியானது சம்பவித்த பிற்பாடு கபடமாயிருந்து அழுததினாலே உண்டாகிய காரியம் ஒன்றுமில்லை; ஆதலால், பயித்தியக்காரர் குணங்களை நல்லோர்களை யறிந்து இரட்சிப்பது கடன்; அத்தன்மை போல அடியேனை இரட்சிப்பது உமக்கே கடன்; சர்ப்பங்களுக்குப் பகையாகிய கருடவாகனத்தி லெழுந்தருளி அடியார்களுக் குபகாரமாக வொப்பில்லாத சேவையாய் உலாவிவந்தருளாநின்ற ஐயனே! நரகாசுரனுக்கும் வைரியாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (உ.)

சிவனீதலம் புயனீதலிந் திரனீதல்சந் திரனீதலா
தவனீதல்வின் னவரீதன்மா தவரீதலோ டெவரீதலும்
அவனீதலந் தனிலெண்ணிலுன் னடியாரடிப் பொடியாகுமோ
நவநீதமுண் கருமேகமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) சிவனும் பிர்மாவும் இந்திரனும் சந்திரனுஞ் சூரியனுந் தேவர்களும் ரிஷிகளும் ஆகிய இவர்களுடனே பின்னும் யாவர்களுங் கொடுக்காநின்ற பலன்களை யெல்லாம் பூதலத்தில் எண்ணிப் பார்க்குமிடத்தில் அவை தேவரீருடைய அடியார்கள் திருவடித்தூளுக்கும் ஒப்பாகமாட்டா; ஆதலால் அவர்களை நினைப்பதேயில்லை; கோபாலர் கிரகத்திலே வெண்ணெயை யுண்டருளும் நீலமேகவண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (ங.)

அலசத்தரும் பிணிவந்தநா ளலையாமலே யமரர்க்கிடுங்
கலசத்திலேலார் துளிநல்கியென் கவிதைக்கொளாய் கருணாகரா

குலசக்கரான் சலசேகரான் குலசேகரன் புகழ்சாகரா
நலசக்கரா சலசக்கரா நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேகமானது வருத்தத்தை யடையும்படியான நோய் வந்து அடியேன் அலையாமலிருக்கத் தேவர்களுக்குக் கொடுத்தருளா நின்ற கலசத்தமிர்தத்திலே ஒரு துளி கடாட்சித்தருளி அடியேனுடைய கவிதையைக் கொள்ளவேண்டும்; கருணைத் திருமேனியனே! வச்சிரபாணியுங் கங்காதரனுங் குலசேகராகிய ஆழ்வாரும் தோத்திரம் பண்ணுநின்ற கீர்த்தியாகிய சமுத்திரத்தையும் நல்ல சக்கரத்தையும் தாமரை மலர்போன்ற திருக்கரங்களையும் உடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (ச)

எதிரும்பெரும் பிணியும்பரந் திரையுஞ்செறிந் தெழினும்பறந் துதிரந்திரிந் துடலங்கொளுந் துயரந்தெளிந் துனைநம்பவா மதியங்கிடந் தொளிருஞ்சடா மகுடந்தொறுந் தொனியும்பவா னதிவந்தெழும் பதபங்கயா நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேகத்திலே எதிர்த்து வராநின்ற பெரியதாகிய நோ மிகுந்து இரைப்பு நெருங்கி அழகு குலைந்து உதிரமூர்ந்து கொள் நின்ற துக்கமானது தெளிந்துபோய்த் தேவரீரை அடியேன் நம் படியாகப் பிரசன்னமாகவேண்டும்; சந்திரன் வாசமாய்ப் பிரகாசி நின்ற சிவனுடைய சடாமகுடந்தோறும் முழக்கம் நிறைந்திட ஆகா கங்கையானது வந்தருளாநின்ற திருவடித்தாமரைகளை யுடைத்தா ஸ்ரீமந்நாராயணனே, எ-று.

எல்லாருமுன் னுதரத்துளே யென்றேமெங் குறைகின்றபே[illegible] அல்லாதுவே றில்லாமையா லனைவர்க்குமோ ரருளல்லவோ வல்லாருளார் மாட்டாருளார் வறியாருளார் வாழ்வாருளார் நல்லாருளார் பொல்லாருளார் நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனுடனே ஆத்மகோடிகளெல்லாந் தேவரீருடைய குட்சிக்குள்ளே வாசம் பண்ணுகின்றனவே யல்லாமல் வேறே யிடமில்லையாதலால் யாவருக்குஞ் சமானமான கிருபையேயன்றிப் பேதமில்லையே; அத்தன்மையாயிருக்க இதிலே வலியரென்றும் மெலியரென்றும் தாழ்வினரென்றும் வாழ்வினரென்றும் நல்லவரென்றும் பொல்லாதவனென்றும் உண்டாகியதென்ன மாயமோ! ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (சு)

நீகாசுதா நீதூசுதா நீயாடுதா நீமாடுதா [னென்
போகாதபேர்க் கிடுசோறெனப் புலையர்க்குநெஞ் சுருகச்சொ
ஆகாதகா ரியமென்னிடத் தளவற்றதுண் டவையாய்வையோ
நாகாசலா நாகாலயா நாராயணா நாராயணா.

(இ-ள்) பணமும் வஸ்திரமும் ஆடும் மாடுஞ் சாதமும் ஆகிய இவைகளை நீங்கள் கொடுங்களென்று சொல்லுவதற்கு யோக்கியமில்லாத பேர்களாகிய மிலேச்சருடைய நெஞ்சானது உருகும்படியாய்க் கவிதைபாடித் தேடிக்கொண்ட பொல்லாத காரியங்கள் கணக்கில்லாமலடியேனிடத்தி லிருக்கின்றன; அவைகளை யாராய்ந்துபாராமல் இரட்சிக்கவேண்டும்; சேஷமலையையும் சேஷனாகிய கோவிலையும் பெற்ற ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (எ)

அயனெழுத் தளவன்றியே யதிகங்கணப் பொழுதாயினும்
பயனுபிருப் பவரில்லையிப் படிமீதிலப் படியன்றியே
வியனுயுனைத் தொழுவார்களவ் விதிவெல்வராய் மறைசொல்லு
நயனாதன் புகழ்சோதியே நாராயணா நாராயணா. [மே

(இ-ள்.) பிரமதேவனானவன் எழுதின பிரமாணமே யல்லாமல் அதிகமாக க்ஷணப்போதாகிலும் இந்தப் பூமியிலே பிரயோசனப்பட்டிருப்பவரில்லை யென்றாலும், அப்படியல்லவென்று சந்தோஷமாகத் தேவரீரைத் தொழுதபேர்களெல்லாம் அந்த விதிவசத்தைக் கடந்

திருப்பார்களென்று வேதங்கள் முறையிடுகின்றனவே; நயத்தோடுங் கூடிய நாரதமகாமுனிவர் தோத்திரம் பண்ணுகின்ற சோதிமயமாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (அ)

ஓமங்களால் விரதங்களா லுயர்தீர்த்தயாத் திரைகோடியால்
ஏமங்கள்கன் னியரீதலா லெழுபாரையுஞ் சுழல்கின்றதால்
ஆமைப்புலன் கடிகின்றதா லடைபுண்ணியங் கணமேனுநின்
நாமம்புகன் றதுபோலுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஓமங்களாலேயும் விரதங்களாலேயும் உயர்ச்சிபெற்ற கோடி தீர்த்த யாத்திரைகளாலேயும், சுவர்ணங்களுடனே கன்னிகா தானங்களாலேயும், ஏழு பூமியையும் பிரதட்சணம் வந்ததினாலேயும், உண்டாகிய பஞ்சவிந்திரியங்களை நீக்கினதினாலேயும் வாராநின்ற புண்ணியங்களெல்லாம் தேவரீருடைய திருநாமத்தை க்ஷணப்போதா கிலுஞ் சொல்லிய புண்ணியத்துக்கு ஒப்பாகமாட்டா; ஸ்ரீமந்நா ணனே, எ-று. (௯

பாடேனலோ கவிசிந்துனைப் பணிவேனலோ பலகாலெழுந்
தாடேனலோ பலிபீடமுன் னணுகேனலோ சடகோபமே
சூடேனலோ வலமாகவே சுழலேனலோ கதியென்றுனை
நாடேனலோ கொடியேனலோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீரைக் கவிதைகளாலே பாடினதுமில்லை; உமக்கு தண்டஞ் சமர்ப்பித்ததுமில்லை; பலகாலமுமெழுந்து ஆடினதுமில்லை; பலிபீடத்தின் முன்னே வந்ததுமில்லை; சடகோபத்தை முடியிலே சூ னதுமில்லை; வலமாகச் சூழ்ந்ததுமில்லை; கதியென்று உன்னை நினை ததுமில்லை; இத்தன்மையான பாவியானவன் கடைத்தேறு மார்க் முண்டோ? ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௧0

அறவைக்கெலா மடிமூலநா னருளுங்கெலா மடிமூலநீ
பிறருக்கெலாம் பெறுவித்ததும் பெறுவிப்பதும் பிணைதட்டிமே

உறவைக்கிலென் னுயிர்காவலுக் கொவ்வாதுவா தாரைசெய்
நறவத்துழா யணிமார்பனே நாராயணா நாராயணா. [வெனே

(இ - ள்.) லோகங்களுக் கெல்லாம் அடிவேராகி யிருப்பதுயானேயன்றி வேறில்லை; கிருபைகளுக்கெல்லாம் மூலகாரணமா யிருப்பது தேவரீரேயன்றி வேறில்லை; அபலார்களுக்கு நீர்செய்த பலனையும் இனிச் செய்கின்ற பலனையுந் தராசினுடைய தட்டுக்களிலே பொருந்தவைத்தால் என்னுடைய உயிரை ரெட்சிக்கின்ற பலனுக்கு அவை சரியாகமாட்டா; ஆதலால், வாது பேசுவதில்லை; தேன்பொருந்துந் திருத்துளவந் தரித்த திருமார்பை யுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கக)

பசியாதமந் திரமேவரும் பழிப்பாதமந் திரமந்தகன்
விசியாதமந் திரநோயிலே விழியாதமந் திரநெஞ்சிலே
முசியாதமந் திரமோதுவார் முதலானமந் திரமொன்றிலே
நசியாதமந் திரமோநமோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஒரு மந்திரம், பசியை யெழுப்பாதது; எவர்களாலேயும் பழிப்பில்லாதது; எமன் பாசத்திற் கட்டுப்படாதது; நோயைப் பார்க்காதது; நெஞ்சிலே கெடுதலில்லாதது; ஓதுவார்க்கெல்லாம் முதன்மையானது; ஒன்றினாலேயும் நாசமில்லாதது; அது யாதெனில், ஓம் நமோநாராயணா வென்னுந் திருமந்திரமே யல்லது வேறில்லை; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. (கஉ)

அபராதமா கியபல்சரக் கடலாகவோ டமேற்றியே [மேவன்
விபரீதநோ யலையிற்குளே விடநின்றதாழ் வினையென்செய்
இபராசனைக் கரையேற்றுநீ பெனையேற்றலிங் கரிதல்லவே
நபராசனே சுபராசனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) அபராதங்களாகிய பலசரக்குகளை நெருக்கமாகத் தேகமென்னும் ஓடத்திலே யேற்றி விபரீத நோயாகிய கடலுக்குள்ளே

ஊழ்வினையானது தள்ளிநின்றது; என்செய்வேன்; கஜேந்திரனைக் கரையேற்றின தேவரீர் அடியேனைக் கரையேற்றுதல் இவ்விடத்தில் அரிதல்லவே; தேவர்களுக்குஞ் சுபங்களுக்குங் கர்த்தாவாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. (கந)

வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல்லுமே நிறைசேடன்வாய், தான்சொல்லுமே முனிவோர்பெருஞ் சபைசொல்லுமே சசிசொல்லுமே, தேன்சொல்லிபங் கிறை சொல்லுமே திசைசொல்லுமே திகைபாமலே, நான்சொல்ல வே துவுமாவெனோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவர்களுடைய நாவும், உலகத்தோருடைய நாவும், வேதங்களுடைய நாவும், கல்வி நிறைந்த ஆதிசேடனுடைய இரண்டாயிரம் நாவும், பெரிதாகிய சபையோடுங்கூடிய முனிவருடைய நாவும், சந்திரன் முதலாகிய நவக்கிரகங்களுடைய நாவும் தேன்போலுஞ் சொல்லினையுடைய பார்வதிபாகத்திலிருக்கும் ருத்திரனுடையநாவும், திக்கு பாலகருடையநாவும் தோத்தரிக்கும்படியான தேவரீருடைய கீர்த்தினை மாறுபடாமல் அடியேனுடைய நாவினாலே சொல்வதற்கு நான் காரண மாவனோ? சொல்லும்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கச

சுருக்காமருந் துடற்கூறியே சுழற்றுமருந் தழற்றீயிலே உருக்காமருந் துலர்த்துண்டையா வுருட்டாமருந் துழக்கெண ணெயில், கருக்காமருந் திகற்கையிலே கசக்காமருந் திருக லிலே, நருக்காமருந் திருக்கின்றதே நாராயணா நாராயணா.

(இ-ள்.) வெளியிலே சுருங்காதது; உடலிலேயூறினாற் சுழ ற்றாதது; அக்கினியிலேயுருகாதது; உண்டையாகவுருட்டி யுலர்த்தாதது உழக்கெண்ணெயிலே கருக்காதது; வலியகைகளிலே கசக்காதது இரண்டு கல்லிலே நெருக்காதது; இத்தன்மைகளைக்கொண்ட மருந்

னது இருக்கின்றது; அது யாதெனில், அஷ்டாக்ஷரமே யன்றி வேறில்லை; ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (கரு)

தகவாயுனைப் புகழாமலே சலமேதொடுத் திகல்பேசுவார்
முகவாயிலே புழுவீழுமே முனையந்தகன் கிளைமோதுமே
ககவாகனு மிகுமோகனு கனகன்கமேள பாமார்பெலாம்
நகவாளினு லரிசீயமே நாராயணு நாராயணு.

(இ-ள்.) மேன்மையாகத் தேவரீரைத் தோத்திரஞ் செய்யாமல் கோபமேபொருந்திப் பகையாக இழிவு பேசுவாருடைய முகத்தோடுங்கூடிய வாய்களிலே புழுக்கள் சொரிவது மல்லாமல் எதிர்க்காநின்ற எமதூதர் மோதுவார்கள்; கருடவாகனனே! மோகசொரூபனே!! இரணியனுடைய மார்பையும் அவனது சேனைகளையும் நகமென்னு மாயுதத்தினலே சங்கரியாநின்ற நரசிங்கரூபமாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கசு)

தலமேழையும் படமோதினுஞ் சலமோவிடா தகிலாண்டநற்
பலம்யாவுமென் மனைசேரினும் பசைபோதிடா திசைமாதரார்
குலம்யாவுமின் பமதீயினுங் குறுகாதுமால் பெறுகாயமே
நலமேவுமே பொலமேவுமே நாராயணு நாராயணு.

(இ-ள்) ஏழுலோகத்தையும் அழியும்படியாய்ப் போர் பண்ணினுலும் என் கோபங்க ளடங்குவதில்லை; அகிலாண்டங்களிலே யிராநின்ற நன்மையான பாக்கியங்களெல்லாம் என் வீட்டிலே நிறைந்தாலும் ஆசைக ளொழிவதில்லை; பெண்களென்றிசைந்த சாதிகளெல்லாம் இன்பங் கொடுத்தாலும் காமங்கள் நீங்குவதில்லை; இத்தன்மையைக் கொண்ட என்னுடைய தேகமானது எத்தன்மையைப் பெறுமோ? அறியகில்லேன்; பிரகாசியாநின்ற மேகவண்ணனுன. ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கஎ)

பண்டிட்டதா மரையுந்தியிற் படிவார்கினக் கடியானொனத், தொண்டிட்டுநின் றெழில்கொள்வதோ துயரத்திலே யடைவிப்பதோ, கொண்டிட்டநின் புகழ்நிற்கவே குறையாளரைப் புகழ்கின்றவாய், நண்டிட்டபாழ் வளையொக்குமே நாராயணா நாராயணா.

(இ-ள்) பழமையாயிராநின்ற தேவரீருடைய நாபிக்கமலத்திலே பொருந்தின வுயிர்களையெல்லாம் அன்பராகும்படி அடிமைகொண்டு கைங்கரியத்தைக் கொள்ளவேண்டுமே யல்லாமல் துக்கங்களடையச் செய்பலாமோ; வேதங்கள் கொண்டிராநின்ற உம்முடைய கீர்த்தியை விட்டுக் குறைச்சலான தெய்வங்களைப் புகழாநின்ற வாய்களெல்லாம் நண்டிட்டுத் தோண்டிவிட்ட பாழ்வளைக்கு ஒப்பாயதேயன்றிப் பிரயோசனமில்லை; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கஅ)

பகையானவன் பிணிசெய்கதோர் பதினாயிரம் பிழையுண்டுநான், வகையாயினக் குறைசெய்கிலேன் வருநோயுநின் னருளாதலால், மிகையானபின் முறையிட்டனென் விடுவித்திடாய் விளையாடினால், நகையார்களோ குறையார்களோ நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனுடைய தேகத்திலே பகையாகிய பொல்லாத பிணியானது செய்யாநின்ற உபத்திரவங்கள் பதினாயிரமுண்டு; அவுகளை இன்னவிதங்களென்று தேவரீருக்கு விண்ணப்பஞ் செய்கிலேன் வராநின்ற இந்த நோயானது உமது கிருபையே யல்லாமல் வேறில்லை; ஆதலால் துன்பம் மிகுந்த பிற்பாடு முறையிட்டேன்; இதை நீக்கிவிடாமல் விளையாடினால் உலகத்தார் நகைப்பதுமல்லாமல் இகழ்ச்சியும் பண்ணுவார்கள்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கக)

குப்புற்றகன் றுடனுகெலாங் குழுவாகவோர் குழலூதவே, யப்புக்கொளுந் தொனிகாதிலவ் வழியேகுபுட் களுமுண

ணவே, துப்புக்குமோர் தயிர்வெண்ணெய்பால் சொரிகைக்கு மவ் விடைநங்கைமார், நட்புக்குமா டியகண்ணனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) துள்ளின கன்றுகளுடனே பசுக்களெல்லாங் குவிந்திருக்கவும் ஆகாயவழியிலே செல்லாநின்ற பட்சிகளுடைய காதுகளிலே கேட்கவும் ஒப்பில்லாத வேணுக் குழலூதித் தொனியாக மப்புக்கொட்டினது மல்லாமல் அங்கிருக்கும் இடைப்பெண்கள் பொழியாநின்ற நெய்க்கும் மோருக்கும் தயிருக்கும் வெண்ணெய்க்கும் பாலுக்கும் அவர்களுடைய நட்பினுக்கும் நடனஞ்செய்த கண்ணனாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. (உ0)

தாயற்றபேர் தாயாகுவாய் தமரற்றபேர் தமராகுவாய்
சேயற்றபேர் சேயாகுவாய் செயலற்றபேர் செயலாகுவாய்
வாயற்றபேர் வாயாகுவாய் மலைபோறுநோய்க் குன்நம்பினால்
ஞாயிற்றுமுன் பனிநிற்குமோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) தாயில்லாதபேர்களுக்குத் தாயாகவும், சுற்றமில்லாதபேர்களுக்குச் சுற்றமாகவும், பிள்ளையில்லாதபேர்களுக்குப் பிள்ளையாகவும், உதவியில்லாதபேர்களுக்கு உதவியாகவும், வாக்கில்லாதபேர்களுக்கு வாக்காகவும் அருளாநின்ற தேவரீரை அடியேன் மலைபோலுங் கொண்ட நோய் தீருதற்கு நம்பினால் சூரியன் முன்னே பனி நீங்குமாறுபோல் நீங்குமேயன்றி நிற்குமோ? ஸ்ரீமந்நாராயணனே, எ-று.()

மந்தன்புதன் குருவெள்ளிசெய் மதிராகுகே துநாடொறுந்
தந்தம்பொலா விடமேவினுஞ் சகலேசநின் சரணங்களால்
எந்தம்பிரா னிவனென்றுகொண் டேகாதசப் பலனீவரே
நந்தன்சுதா நம்பும்பதா நாராயணா நாராயணா.

(இ-ள்.) சனி புதன் குரு சுக்கிரன் செவ்வாய் சந்திரன் ராகு கேது சூரியன் இவர்கள் நாடோறுந் தங்கள் தங்கள் பொல்லாத ராசிகளிலே

யிருந்தாலும் சகலத்துக்கும் ஈசனே! தேவரீருடைய திருவடியை அடைந்தால் எங்களுடைய தம்பிரானிவனேயென்று அன்புகொண்டு பதினோராமிடத்துப் பலனைக் கொடுப்பார்கள்; நந்தகோபனுடைய திருக்குமாரா! நாயினேன் நம்பாநின்ற பரமபதத்தை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. (உஉ)

ஆற்றாமையொன் றமையாமையொன் றறியாமையொன்
றருளாமையொன், றேற்றாமையொன் றிசையாமையொன்
றின்னாமையொன் றிருதாளையும், போற்றாமையொன் றடியா
ருடன் பொருந்தாமையொன் றொருமெய்யிலே, நாற்றுய்விளைந்
திடலாகுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்) அயலார் வாழ்வைக் கண்டு அவதிப்படுதல், பொறுமை நீங்குதல், பேதைமை வளர்தல், ஈதன் மறுத்தல், முயற்சியிடைதல், இங்கிதம் ஒழித்தல், கொடுமை மிகுதல், திருவடிப் புகழ்விடுதல், அடியாருடன் கூடாதிருத்தல் இவைகளெல்லாம் நாயினேனுடைய ஒரு தேகத்துக்குள்ளே நாற்றுக்கள்போலே வளரலாமோ? ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (உங)

தன்மைக்குநீ யடியேனுடைச் சலிகைக்குநீ பொலிகைக்குநீ
மென்மைக்குநீ வன்மைக்குநீ மிகுதிக்குநீ தகுதிக்குநீ
புன்மைக்குநீ புலமைக்குநீ பொறுமைக்குநீ மறுமைக்குநீ
நன்மைக்குநீ தின்மைக்குநீ நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனுடையஒழுக்கத்துக்கும், சலிகைக்கும், பிரகாசத்துக்கும், மெலிமைக்கும், வலிமைக்கும், குற்றத்திற்கும், முயற்சிக்கும், பொல்லாங்குக்கும், அறிவுக்கும், பொறுமைக்கும், மோட்சத்துக்கும், நன்மைக்கும், தின்மைக்கும், இன்னும் சகலத்துக்கும் தேவரீரே யல்லாமல் வேறில்லை ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (உச)

ே:பட்பித்ததுன் பெருநெஞ்சமேமேவிபப்பித்ததுஞ் விளையாடலே
கேட்பித்தவுன் பலநூல்களை கிளர்ப்பித்ததுன் பதிவாசமே
பேட்பித்ததுன் கனசத்தியே பிழைபித்தவெம் பிணிபற்றற
நாட்பிச்சையுந் தரவேண்டுமே நாராயணா நாராயணா.

(இ-ள்) உமது திருவுள்ளமே யெனக்கு இன்பந் தந்தது; உமது திருவிளையாடலே யெனக்குச் சந்தோஷஞ் செய்வித்தது; உமது திவ்வியப் பிரபந்த முதலாகிய புராணங்களை நான் என் செவிக்குக் கேட்கப் பண்ணியவை, உமது திருப்பதியே யெனக்கு வாசத்தை யுண்டாக்கியது; உமது கனம்பொருந்திய வலிமையே யெனக்கு ஆதரவு புரிந்தது; ஆதனா லடியேனுடைய குற்றத்தையும் வெவ்விதாகிய ரோகயையும் நீக்கிவிட்டு, இனி வாழ்நாளாகிய பிச்சையுந் தரவேண்டும்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (உ௫)

பூரிக்குநின் கொடியென்னவே புளகிக்குநின் சனமென்னவே
ஏரிக்குநின் சபையென்னவே யிரதிக்குநின் புகழென்னவே
ஆரிக்குணம் பெறுதேவர்தா மடியாருளத் தானந்தமே
நாரிக்குவில் லொடியச்செய்தாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) உமது கருடக்கொடியே யென்றால் எனது தேகம் பூரிக்கும்; உமது அடியார்களே யென்றால் எனது மயிர் புளகிக்கும்; உமது சபையேயென்றால் எனது கண்களிலே ஆனந்தபாஷ்பம் பெருகும்; உமது புகழே யென்றால் எனது மனது ரம்மிக்கும்; ஆதலாலித் நன்மையான குணத்தைத் தேவர்களிலே எவர்கள்தாம் பெற்றார்கள்? பாகவதருடைய இருதயத்தில் ஆனந்தமானவனே! ஜானகிக்காக ருத்திரன் வில்லை ஒடியச்செய்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணனே, எ-று.

தேன்பாடித்தா வனமாலையுந் திருவாழிசங் கமுமேந்தியே
தான்பாடிநா ரதனுடுமுன் சபைமாணிடர்க் கதிதூரமே

வான்பாடிபுட் புயலென்றுதான் வருமென்றுவா டிவிதென்ன
நான்பாடினால் வரவேண்டுமே நாராயணா நாராயணா. [வே

(இ - ள்.) நாரதமகாமுனியானவர் பாடியாடாநின்ற தேவரீருடைய சபையானது மானிடர்களுக்கு அதிக தூரமாக விருக்கும்; ஆதலால் வரக்கூடாது; வானம்பாடி யென்னும் பட்சியானது நீருண்ட மேகங்க ளென்றைக்கு வருமோவென்று மனது வாட்டங்கொண்டு பாடுவதுபோல அடியேன் வருந்திப் பாடினால் அம்மேகம் வருவது போல வண்டுகள் பாடித் தாவாநின்ற துளபமாலையும், அழகிய சக்கரமும், சங்கமும் தாங்கிவந்து இரட்சித்தருளவேண்டும்; ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (உஎ)

மானோயுநின் னருளுற்றநாள் வாய்நீர்மருந் தாயங்ஙனே
தானோடுநின் னருளற்றநாள் சஞ்சீவியைத் தளிபேறுமே
தானோர்ப்பவர் சுகமெய்துவர் சார்வாருளத் தானந்தமே
நானோதவா ஞானோதயா நாராயணா நாராயணா.

(இ - ள்.) மயக்கத்தைச்செய்யும் நோய்களெல்லாந் தேவரீருடைய கிருபையைப் பெற்றநாளையிலே உமிழ்நீரே மருந்தாகி அங்ஙனே ஓடிப் போகும்; உமது கருணையில்லாத காலத்திலே சஞ்சீவியைக் கொடுத்தாலுந் தள்ளிவிட்டு அதிகமாகு மாதலா லிதை யறிந்தபேர்கள் சுகத்தைப் பெறுவார்கள்; அடியார்கள் இருதயத்தில் ஆனந்தமானவனே! நாயினேன் தோத்திரம் பண்ணுதற்கு வந்தருள்வாய்; ஞான உதயஞ் செய்தருள்பவனே! ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (உஅ)

ஈசன்பரன் பிரமன்பிதா விறைவிண்டுவண் டுறைதண்டுழாய்
வாசன்சரா சரனென்றுநின் வழியன்பர்வாழ் பதிநம்மிலே
தீச்சங்கடம் பிணிதாழுமே சிறைசண்டைவஞ் சனைவீழுமே
நாசங்கடந் துயிர்வாழுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) ருத்திரனுக்குப் பாமனே யென்றும், பிரமனுக்குத் தந்தையே யென்றும், கர்த்தனே யென்றும், விஷ்ணுவே யென்றும், வண்டுகளுடனே குளிர்ச்சிபொருந்தாநின்ற திருத்துழாய் வாசனே யென்றும், சராசரங்களானவனே யென்றுந் தேவரீரைத் தோத்திரம் பண்ணி வழிபடாநின்ற அடியவர்கள் வாழ்ந்தருளுந் தலங்களிலே பொல்லாத சங்கடங்களும், நோய்களும், சிறைகளும், போர்களும், வஞ்சனைகளும் ஆகிய இக்குற்றங்கள் யாவும் நீங்கி மற்ற வுயிர்களெல்லாம் வாழ்ந்திருக்கும்; ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (உக)

ஆபாதவா யுனைவையுமே யடியாருடன் படைபண்ணுமே
மாபாவநூல் பலகற்குமே மறைபன்னுவா திபர்தம்மினும்
ஓபாவியேய னிவைமின்முனே யுரைசெய்தனன் வினைசெய்தபூ
நாபாபரா பனேயரி இ நாராயணா நாராயணா.

(இ-ள்.) அபத்தம் நிறைந்த என்னுடைய வாயானது தேவரீரை வைதுகொண்டே யிருக்கும்; அடியார்களுடன் போர் பண்ணிக்கொண்டேயிருக்கும்; மகத்தாகிய பாபசாஸ்திரங்களையே கற்கும்; ஆதலால், வேதத்திலே சொல்லாநின்ற விரோதிகளைப் பார்க்கிலும் அதிகரித்திராநின்ற விரோதியாகிய நாயினேன் தேவரீர் சந்நிதானத்திலே விண்ணப்பஞ் செய்துவிட்டேன்; உமது சித்தம் எனது பாக்கியம்; வாசனை சேர்ந்த நாபிக்கமலம் பொருந்தாநின்ற பராபரனென்னும் அரியாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (௩0)

காற்பாலினிற் கடவாதவன் கலிகாலமே நிரையாடிடுந்
தோற்பாவைநா னறுமெச்சவே தொடுகூத்திரந் துறைகாரனீ
மேற்பாவபுண் ணியமானநல் வினைநிவினைக் கெவராகுவார்
நாற்பாலினுங் கொருமூலமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) கடலிலே உதித்துவாராநின்ற சூரியனாலே அறியும்படியான காலப்பிரமாணத்தோடுங் கூடிய கலிகாலமே நிலையாகவும்,

ஆடாநின்ற தோற்பதுமை யானுகவும், மனது மெச்சும்படியாகத் தொடுக்காநின்ற சூத்திரத் துறைக்காரர் தேவரீராயுமானுல் மேலேவாராநின்ற பாபபுண்ணியங்களுக்கு அதிகாரிகள் எவராகுவார்கள்? இந்த நியாயத்தைத் தெரியப்படுத்தவேண்டும்; பறப்பன, ஊர்வன, நடப்பன, இருப்பனவாகிய நான்குவித சாதிகளுக்கெல்லாஞ் சமானமான ஆதாவு தேவரீரே யன்றி வேறில்லை; ஸ்ரீமந்நாராயணனே, எ-று.

இரையாலெழுஞ் சுவரானநா விருசாணுடம் பிடியாமலே
கரையாமலே தகாமலே கழலாமலே யழலாமலே
திரையாமலே வினைமூடிகண் டிறவாமலே வகையென்னைதா
னரையாதமேசா திடுமையனே நாராயணு நாராயணு.

(இ - ள்.) ஆகாரத்திலே வளராநின்ற எண்சாணுடம்பாகிய சுவரானது கரைந்துபோகாமலும், இடிந்துபோகாமலும், அதிர்ந்துபோகாமலும், உதிர்ந்துபோகாமலும், வெந்துபோகாமலும், திரைந்துபோகாமலும், வினையினுலே இறந்துபோய் மறுபடியும் பிறந்து விழிதிறவாமலும் இருக்கும் வகை யாதெனில், நரைதிரை மூப்பில்லாத அமுதத்தைக் கொடுத்தருளவேண்டும்; என்னையனுகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கஉ)

புற்கொண்டுவாழ்பசுவாரொடார்புலியாழ்கிணற்றிடைவீழினுங்
கற்கொண்டுவா தடிகொண்டுவா கடிதென்பாப் படுபாவிநான்
எற்கொண்டநோய்க் கெவராகுவா ரினிநீயலா திலையெட்டியும்
நற்கொண்டலால் வளர்கின்றதே நாராயணு நாராயணு.

(இ - ள்.) புல்லையுண்டு வாழாநின்ற பசுவானது கிணற்றிலே விழுந்தால் கண்டவர்கள் யாரேனும் எடுத்துவிடுவார்கள்; புலியானது விழுந்ததானுல் சீக்கிரமாகக் கற்களுந் தடிகளுங்கொண்டு கொல்லுவார்கள்; அத்தன்மைபோலப் படுபாவியான என்னுடைய தேகத்திலேகொண்ட நோயைத் தீர்க்க எவரிருக்கிறூர்கள்? இனித் தேவரீரை

யன்றி வேறில்லை; மழையினாலே எட்டிச்செடியும் வளர்வதுபோல உம்முடைய கிருபையினாலே அடியேனும் வளரவேண்டும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. (நடு)

அரசன்கையா லபயம்பெறா ரயலானுமன் னரையண்டினால்
விரசென்றுவந் திடமீவர்நீ வினவாதசீ விகளண்டினால்
வரசங்கரா தியரஞ்சுவார் வருகென்னமேல் வகையென்னைதான்
நரசிங்கனே முரபங்கனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) தாங்கள் நம்பியிருக்கும் அரசனாலே பிரயோசன மில்லையென்று மறுமன்னவரிடத்திலே சேர்ந்தால் அவர்கள் சந்தோஷித்து எதிரேவந்து இடங்கொடுத்து இரட்சிப்பார்கள்; அத்தன்மை யாகத் தேவரீரை நம்பினபேர்கள் யாவரேனும் உம்மை வினவாமல் வெறுத்துப் பக்கத்திலே சென்றால் முக்கியமான சங்கரன் முதலாகிய தேவதைகளானாலும் இரட்சிக்கப் பயப்படுவார்கள்; ஆதலால், கதி வேறில்லை; அடியேனை வாவென்றழைக்க வகையென்னவெண்ணியிருக் கிறீரோ தெரியாது; நரசிங்கரூபனே! முரகாசுரனைக்கொன்ற ஸ்ரீமந் நாராயணனே, எ-று. (நசு)

கோட்சொல்லுவேன் வசைசொல்லுவேன் குறைசொல் லுவேன் முறைசொல்லுவேன், கீட்சொல்லுவேன் மிகை சொல்லுவேன் கிலிசொல்லுவேன் வலிசொல்லுவேன், சூட் சொல்லுவே னயனூழிநாள் சொலவேண்டினுஞ் சிறிதுன்னை யோர், நாட்சொல்லவென் றறிகின்றிலேன் நாராயணா நாரா யணா.

(இ-ள்.) பிரமகற்பபரியந்தம் அடியேனுடைய நாவானது கோள் களையும், வசைகளையும், குறைகளையும், முறைகளையும், கீழ்மைகளை யும், குற்றங்களையும், பயங்களையும், வலிமைகளையும், வஞ்சனைகளையும் சொல்லுமேயன்றிக் கொஞ்சமாகிலும் தேவரீர் நாமத்தை ஒருநாளாகி

லேனுஞ் சொல்லும்படியா யறிந்ததேயில்லை; ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (௧௫)

ஆளாகினின் றிருநாமெழுத் தறியாதநா ளறிவார்களைக்
கேளாதநாள் செவியூறவே கிடையாதநா ளிலாசையே
மூளாதநா ணிலமீதுதான் முதனூலிலங் கெழுதாதநாள்
நாளாகுமோ வாளாயுதா நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஆசாரியனுடைய திருவடிகளுக்கு ஆளாகித்தேவரீருடைய திருமந்திரத்தை அறியாதநாளும், தெரிந்தபாகவதரைக் கேளாதநாளும், செவிகளிலே யூறும்படியாய்ப் பொருந்தாதநாளும், அதிலே ஆசையானது பெருகாதநாளும், அஞ்சாவதுவயதில் முதல்நாளையிலே பள்ளிக்கூடத்தில் அரியென் றுநிலவெழுத்தாகிலும் எழுதிவையாதநாளும் பலநல்லநாளாகுமோ? வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (௧௬)

வீட்டுக்குளே துணையாவதும் வெளியிற்குளே துணையாவதும்
கூட்டுக்குளே துணையாவதுங் குன்றுக்குளே துணையாவதும்
காட்டுக்குளே துணையாவதுங் கடலுக்குளே துணையாவதும்
நாட்டுக்குளே துணையாவதும் நாராயணா நாராயணா.

(இ-ள்.) வீட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும், வெளியினுக்குள்ளே துணையாயிருப்பவனும், சந்திரனுக்குள்ளே துணையாயிருப்பவனும், மலையினுக்குள்ளே துணையாயிருப்பவனும், காட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும், கடலினுக்குள்ளே துணையாயிருப்பவனும், நாட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும் நீயேயன்றிவேறில்லை; ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (௧௭)

வாய்க்கின்றதோர் பகையுன்னலா மணக்கின்றசாந் தையுன்னலாங், காய்க்கின்றமா வெறியுன்னலாங் கறக்கின்ற வாக் கட்டுன்னலாந், தோய்க்கின்றபால் குடையுன்னலாஞ்

சுவைகெட்டமா னிடவாலிலா, நாய்க்கிந்தவாத னையேனையா
நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேன் கூண்டினுக்குப் பகைத்தலும், சந்தனக்கட்டையினுக்குத்தேய்த்தலும், பழுத்தமரத்தினுக்குக்கல்லெறிதலும், கறக்கும் பசுவினுக்குக் கயிறணைத்தலும், தோய்த்த தயிரினுக்கு மத்தாற்குடைதலும் ஆகிய இந்தவுபத்திரவங்களுண்டாகில் பிறருக்குபகாரமாகும்; உருசியும் வாலு மில்லாதமானிடமென்னும் நாயினுக்கு இந்தவாதனையைக்கொடுத்தீரே, இதனாலே உமக்கென்ன பிரயோசனமுண்டு? தெரியச்சொல்லும் ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (௧௮)

தும்பிக்கையா னையுமைவர்முன் றுகிலோடிவா டியநங்கையும்
தம்பிக்கையா மகயோகருந் தாநிற்கவே சதுர்வேதியன்
கம்பிக்கையா லரனுக்குநீ கனியையமிட் டினியையமேன்
நம்பிக்கையா கியதெய்வமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) கஜேந்திரனையும், பாண்டவரையும், வஸ்திரம் நீங்குதென்றுவாடினதுரோபதையையும், ஸ்தம்பிதமாயிருந்து தவம்பண்ணாநின்ற மகத்தாகிய யோகிகளையும் இரட்சித்திருக்கட்டும்; நான்குவேதத்தையுமுடைத்தாகிய பிரமனுடைய சிரத்தைக் கிள்ளின சிவனுக்கும் பிட்சையிட்டுச் சாபத்தைத் தீர்த்தபிற்பாடும் இனிப் பரத்துவம் வேறேயென்று ஐயப்படலாமோ? நம்பிக்கையான தெய்வம் நீயேயன்றி வேறில்லை; ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (௧௯)

பாலாவதோ தேனாவதோ பழமாவதோ பாகாவதோ
மேலானசர்க் கரையாவதோ விரையாருநல் லமுதாவதோ
கோலாகலப் பிணிதீரவே குளிபங்களோ வனமூலியோ
நாலாவதோ நின்பேர்சொலாய் நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேனுடையதேகத்திலே கோலாகலஞ்செய்யாநின்றநோயைத்தீர்க்கும்படியான தேவரீருடைய திருநாமமானது, பாலாகி

யதோ? தேனாகியதோ? பழமாகியதோ? பாகாகியதோ? மேலாகிய சருக்கரையாகியதோ? வாசனைசேர்ந்த நல்லமிர்தமாகியதோ? வனமூலிகையாகியதோ? இவையல்லாமல் மணிமந்திரம் அவிழ்தம் இவைமூன்றுக்கு மேலாகியதோ? என்னென்று சொல்லுவோம்! ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௪0)

பூவுக்குநல் லதுசொல்லவோ பொலிசீதளப் புதுவாசமே
தேவுக்குநல் லதுசொல்லவோ செவியார்முனே யெதிர்நிற்பதே
ஆவுக்குநல் லதுசொல்லவோ வதுசாதுவா யமுதீவதே
நாவுக்குநல் லதுசொல்லவோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) புட்பங்களுக்குள்ளே நல்லதுசொல்லவேண்டுமானால் காந்தியுங்குளிர்ச்சியும் புதியவாசனையும் உண்டாகிய புட்பமேயல்லாமல் வேறில்லை; தெய்வங்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் முறையத்தைக்காதிலே கேட்குமுன்னமே அடியார்களுக்குப்பிரசன்னமாகிய தெய்வமேயன்றி வேறில்லை; பசுக்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் அதுவெகு சாதுவாயமுதத்தைக் கொடுக்கும் பசுவேயன்றிவேறில்லை; நாவுகளுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் தேவரீருடைய திருநாமத்தைச் சொல்லிய நாவேயன்றி வேறில்லை; ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (௪௧)

ஆனந்தமா யழுவார்முனே யலர்சூடியே தொழுவார்முனே, மோனந்தனிற் கரைவார்முனே முகிலென்னவே புகழ்வார்முன்னே, தானந்தவம் புரிவார்முனே சரணென்றுனையடைவார்முனே, நானென்செய்கே னிவையொன்றிலே நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீருடைய திருவடியை நினைத்து ஆனந்தபாட்பங்களைக்கண்களிலே பெருக்குவார்களுக்குமுன்னே, புட்பங்களையலங்காரஞ்செய்துதண்டஞ்சமர்ப்பிப்பார்களுக்குமுன்னே, மௌனத்தியான

த்திஞலே உள்ளங்கரைந்திடுவோர்களுக்குமுன்னே, பசுங்கொண்டலே யென்றுபுகழ்ந்திடுவோர்களுக்குமுன்னே, தானங்களுந் தவங்களுஞ்செய் திடுவோர்களுக்கு முன்னே, சரணுகதி செய்திடுவோர்களுக்கு முன்னே, அடியேன் இவைகளிலே ஒன்ருகிலும் செய்யமாட்டுவேனே? ஸ்ரீமந் நாராயணனே, எ-று. (சஉ)

செரிக்கின்ற வூணுகர்வேனலேன் சிரிக்கின்றகாரியமே செய்வேன், கரிக்கின்றகண் படையேன்வெறுங் கழப்பன்கொ டுங் கடுவஞ்சகன், பரிக்கின்றநின் னடியாரொடும் பழகேன லேன் படர்வந்தபின், நரிக்கின்றனே னினிசெய்வே நாராயணு நாராயணு.

(இ-ள்.) சீரணமாகும்படியான ஆகாரத்தைக்கொள்ளாமல் நகைக் கும்படியான காரியமேசெய்து, தெரிசன அபேட்சையான கண்ணை யும்படையாமல் அன்பைப்பரிக்காநின்ற அடியாருடனேயுங்கூடாமல், விருதாவாகிய கழப்பனுகவும் பொல்லாத விஷம்போலும் வஞ்சகனுக வுமவதரித்துத் துன்பம்வந்தபிற்பாடு அவதியைக்கொள்ளாநின்ற நாயி னே னினியென்செய்வேன்; ஸ்ரீமந்நாராயணனே எ-று, (சங.)

ஆதாரதே வதையென்பனே வடியேனையா ளரசென்பனே
ஓதாதுணர்ந் திடவன்புகூ ருபதேசதே வென்செய்வனீ
மாதாபிதா வுடலாவிநீ மனைகாணிபொன் வலிசெல்வநீ
நாதாவுநீ தாதாவுநீ நாராயணு நாராயணு.

(இ-ள்.) ஆதாரமாகிய தேவதையென்பனே? அடியேனையாளுங் கர்த்தனேயென்பனே ? பலநூல்களையோதாமல் தன்னிலே யறிந்திட நண்புசெய்யாநின்ற உபதேச குருவே யென்பனே ? என்னென்று சொல்லுவேன்? தாயும், தந்தையும், தேகமும், உயிரும், பெண்சாதி யும், காணியும், திரவியமும், வலிமையும், செல்வமும், நாதனும், பிரபு வும், நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (சச)

வடுநிந்தையே யிடுவந்தியேன் மருள்விஞ்சினே னருளஞ்சினேன், அடுசிந்தையே னெடுவிந்தையே னலைபண்பினே னுனைநம்பினேன், விடுதுன்பிலேன் முடுகன்பிலேன் வினைமண்டினே னுனையண்டினே, னடுவொன்றிலேமிடைகுன்றுமோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) குற்றம்பொருந்திய நிந்தையையும், இடுவந்தியையும், மிகுந்த மயக்கத்தையும், அருளில்லாத பொல்லாத இருதயத்தையும், பலவித துர்நடத்தையையும், காரியமென்கிற அலைச்சலையும், தீவினையையும் ஆகிய இவைகளைக் கொண்டிரா நின்ற நாயினேன், இரக்கத்திலே பயந்தவனுகி, அன்பிலே துரிதமில்லாதவனுகி, துன்பம் ஒழிவில்லாமல் தேவரீரை யடைந்தேன்; மத்தியிலே இன்னமொரு விதத்தினாலே எனது வருத்தம் நீங்குமோ? ஸ்ரீமந்நாராயணனே, எ-று. ()

குடிநீர்கொடீர் முகவேதிடீர் குடவெண்ணையை வடியீர்பிரம்
படியீர்வெணீ றெறியீர்விழிக் கதிகோரவஞ் சனமேயிடீர்
கடியீர்வயித் தியரால்வரா கமதாடுகுக் குடமிட்டுளே
னடியீரெனிற் பிணியஞ்சுமோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) குடிக்கும்படியாகக் கிஷாயங்கள் கொடுங்களென்றும், முகத்துக்கு வேது பிடியுங்களென்றும், குடத்திலே யெண்ணெயைக் காய்ச்சிக் கொடுங்களென்றும், பிரம்புகொண்டடித்து வெளுத்த விபூதியை யெறியுங்களென்றும், கண்களுக்கு அதி கோரமாகிய கலிக்கம் போடுங்களென்றும், வயித்தியருக்குக் காட்டித் தீருங்களென்றும், பன்றியும் ஆடும் கோழியும் பலிகொடுத்துச் சன்னதமாட்டிப் பாருங்களென்றும் சொல்லினுல் இவைகளாலே நோய் தீர்வதுண்டோ? ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (சகூ)

பிரம்புக்குமுள் ளிடுதாமரைப் பிணிகட்குநீள் பிணியுற்றவென்
உரம்புக்குளே யறியாததெ னுலகத்தெலா முறைசோதிதால்

வரம்புக்குளேயெலும்புக்குளே வழும்புக்குளே தழுப்புக்குளே நரம்புக்குளே புகவெட்கியோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) முள்ளுகளோடுங்கூடிய பிரப்பம்புதருகளினும் தாமரைக்கொடிப் பிணையல்களினு மிகுந்த பின்னலான நோய்கொண்டிரா நின்ற என்னுடைய நெஞ்சுக்குள்ளே நீ நுழைந்தறியாம லிருப்பதென்ன? உலகத்திலிருக்கும் எல்லா வுயிர்கள்தோறும் வாசம்பண்ணா நின்ற சோதி நீயேயன்றி வேறில்லை; ஆதலா லிது தோலுடம்பும், எலும்பும், வழும்பும், நிணமும், நரம்பும் கூடி நாற்றமா யிருப்பதனாலே புகுந்தறிதலுக்கு நின்மனம் வெட்கமாகியதோ? ஸ்ரீமந்நாராயணனே, எ.-று ()

மன்றாடிய வதிசோபன மழைவண்ணனே விசயங்கரா
வென்றாய்சயஞ் செயமச்சுதா மிகவாழி கேசவனேசுபந்
கன்றால்விள வெறிந்தாய்பெருங் கலியாணமங் கலமாதவா
நன்றாகவேங் கடநாயகா நாராயணா நாராயணா.

(இ - ள்.) கோபிகாஸ்திரீகளுடைய சபையிலே நடனம்பண்ணா நின்றவனே! உனக்கு அதிகசோபனம்; மேகவண்ணனே! உனக்குவிசயம்; முதலையைவென்றவனே! உனக்குச்செயம்; அச்சுதனே! உனக்கு மிகுந்தவாழி; கேசவனே உனக்குச்சுபம்; கன்றால் விளாங்கனியெறிந்தவனே! உனக்குப் பெரிதாகிய கலியாண மாதவனே! உனக்குமங்களம்; வேங்கடநாயகா! நீ இத்தன்மையாக நன்றாயிருக்கவேண்டும்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (சஅ)

இந்தாவெனா வெனதிச்சைநீ யெளிதீவையே விழிவாகுமோ
சந்தானமா மலராலருச் சனைசெய்குவார் தவிர்வார்களோ
வந்தானமேர் அநிபார்களோ வசுதேவர்சீர் குறையாகுமோ
நந்தாதபெண் ணகைசெய்வளோ நாராயணா நாராயணா,

(இ-ள்) அடியேனுடைய இச்சையானபடியே இங்கேவாவென்று தேவரீர் எளிதாகப் பலனைக் கொடுத்தருளினால், உமக்கு இகழ்ச்சியாகுமோ? கற்பகமலரினாலே அருச்சனை செய்யாநின்ற தேவர்கள்விட்டு விடுவார்களோ? சந்நிதானத்தில் வந்த பேர்கள் தூறியார்களோ? வசுதேவருடைய உடைமையிலே குறைந்துபோகுமோ ? அழிவில்லாத ஸ்ரீமகாலட்சுமி நகைப்பாளோ? சொல்லும்; ஸ்ரீமந்நாராயணனே,எ-று.

சிற்றப்பனோ துருவற்குநீ தெதிபாண்டனார் பெரியப்பனோ
கற்றத்தைதே வகிதங்கையோ கண்டாகனன் மிதிலேசனோ
சுற்றத்தரோ பெறுவோரெலாந் தொடுவேன்வழக் கிடுவேன்வி
நத்தப்படும் பொருடந்துபோ நாராயணா நாராயணா. [டேன்

(இ-ள்.) தேவரீர் முன்னாளையிலே இரட்சித்த பேர்களுக்குள்ளே துருவமகாராஜனுக்கு நீ சிற்றப்பனோ? தெதிபாண்டனெனும் குயவன் உமக்குப்பெரியப்பனோ? கல்லுருவம் போக்கிக்கிளிபோலப்பேசப்பண்ணுநின்ற அகலிகையானவள் தேவகிக்குத் தங்கையாகிய உமது சிறிய தாயாரோ? கண்டாகனனென்னும் விரோதியானவன் உமக்குப் பெண் கொடுத்தமிதிலைச் சனகமகாராசனாகிய அம்மானோ? இன்னம் பேறுபெற்றபேர்களும்,பெறும்பேர்களும் உமக்கு உறவின் முறையார்களோ ஆதலால், சம்பந்தமில்லாத பேரையெல்லாம் இரட்சித்தபடியினாலே தேவரீருக்கும் அடியேனுக்கும் வழக்குவிடுவதில்லை; ஆசைப்பட்ட பலனைக் கொடுத்து அப்புறம் போகவேண்டுமே யன்றிப் போகக்கூடாது; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௩௦)

தன்னெட்டெழுத் தயன்மத்தகந் தனிலேபொறித் தடிநாவிலே, உன்னெட்டெழுத் தெழுதாமையா லுலகத்துளோ ரவனைத்தொழார், கன்னெட்டிடத் தருநெட்டிடக் கனனெட்டிடக் கனகாலினின், நன்னெட்டெலாந் தொடர்பாதனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) பிரமதேவனானவன் உலகத்திலேயுள்ள மானிடர்களுடைய தலைகளிலே தனது கெட்டெழுத்தைமாத்திரம் எழுதி அடிநாவுகளிலேதேவரீருடைய அஷ்டாக்ஷரத்தை எழுதாமற்போனபடியினாலே அவனை ஒருவருந்தேடுகிறதேயில்லை; முல்லைநிலத்திலேகல்லுகள்கெட்டிடவும், விருக்ஷங்கள் கெட்டிடவும், அக்கினிகள் கெட்டிடவும், விஸ்தாரமாகிய பசுக்கள்பின்னாலே நன்மைபெறநெடிதான தூரமெல்லாம் நடந்தருளாநின்றதிருவடியை யுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. ()

உரலுக்குமோ ருறுபஞ்சமோ வுனைநச்சினே னெனையச்சமன்
விரலிட்டுத்தேர் வினைவல்லனோ விதிகைக்குளவ் விரலேலுமோ
பொரலுற்றநோய் கழலப்பணாய் புதிதாமருந் தொருதூதனால்
நரலைக்குளாய் வரவேண்டுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) குத்தாநின்ற உரலினுக்கு ஒருகாலத்திலேயும் தரித்திரம் வருவதில்லை; அத்தன்மை போலத் தேவரீரிடத்திலே நிரம்பிய ஐசுவரியமேயன்றி இல்லாததில்லையே; ஆதலால் உம்மிடத்திலே இச்சைகொண்டேன்; இனிஎன்னை அந்த எமனானவன் விரல் விட்டுக்காட்டியறிந்து வினைசெய்யமாட்டுவனோ? பிரமாவினுடையகைகளிலே இராநின்றவிரலும் என்றலையிலே எழுத அசையமாட்டாது; வருத்தத்தைச் செய்யாநின்ற என்னோய்தீரும் படியாய்ச் செய்வதற்கும் புதிதாய் ஒப்பில்லாத சஞ்சீவியானது ஸ்ரீ அனுமாராலே வரவேண்டுமோ? க்ஷீராப்திவாசனாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௫௨)

சமையாதிதே வதையென்பதுஞ் சமையாதிநின் பெய
ரென்பதும், உமையாளுடன் பரமன்பரிந் துனைமாமறைப் பொ
ருளென்பதும், தமையாள்வதென் றிமையோர்திலோத் தமை
யாதிபன் புகழ்கின்றதும், நமையாமலே யெனையாளுவாய்
நாராயணா நாராயணா.

(இ-ள்.) சமயங்களுக்கெல்லாம் அதிதேவதை நீயே யென்பதும், எச்சமயத்துக்கு முரியது உம்முடைய பெயரேயென்பதும், மகத்தாகிய வேதப்பொருள் நீயேயென்று உமையவளுக்குச் சிவன் பரிந்து நிச்சயம்பண்ணினதும், தேவதைகளுக்கும் திலோத்தமைக்கும் அதிபனாகிய தேவேந்திரன் இரட்சிக்கும் கர்த்தனேயென்று புகழ்கின்றதுங் கெடாமற்படி என்னை இரட்சித்தருளவேண்டும்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (ருஅ)

நீயண்டரா லடிபட்டநா ளினைவில்லைநின் னுதரத்துளே [ன்
போயண்டகோ டியிலெந்தவூர் புரையிற்குளே விளையாடினே
மாயங்கடந் தறிவேனெனில் வரதன்கெடீர் வானோர்க்கெலாம்
நாயன்கெடீர் விடுமென்பனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீர் அசோதை முதலாகிய இடையராலே அடிபட்டநாளையிலே அடியேனுக்கு நினைவில்லாமற்போயது; அது எதனாலேயென்றால், உமது குட்சிக்குள்ளே இராநின்ற அண்டகோடிகளிலே எந்தச்சந்துகளுக்குள்ளேயோ விளையாடினேன்; நீர் செய்யும் மாயம் நீங்கி யறிந்தேனேயானால் தேவதைகளுக்கெல்லாம் உம்மை வரதனென்றும், நாயகனென்றும் அந்த இடையர்களுக்குத் தெரியப் படச் சொல்லிக் கெடுவீர்கள், விட்டுவிடுங்கோளென்று நீக்கிவிடுவேன்; திருமேனி யென்னவிதமாக நொந்ததோ? இப்போது பெரியோர்களாலே யறிந்தேன்; அறிந்துஞ்சமயத்திலே உதவாதேபோனேன்; இனி வருந்தி என்ன பிரயோசனம்? ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (ருக)

காசிக்குளுங் கயையிற்குளுங் கழியாதபா தகனாகை
யால், கூசிக்குலைந் தினைவந்தியேன் குறையாகுமோ விளை
யென்பதோர், வாசிக்குவந் தருள்செய்குவாய் வயிரத்திரா
வணன்றங்கைதன், நாசிக்குவா ளெறிவையனே நாராயணா
நாராயணா.

(இ - ள்.) காசியினிடத்திலேயும், கயாவினிடத்திலேயும், வாசம் பண்ணினாலும் நீங்காத பாவியானபடியினாலே மனது கூசிக் குலைந்து தேவரீரைத் தோத்திரம் பண்ணாமல் விட்டுவிட்டேன்; அதினாலே உமக்குக் குறைவாகுமோ? அடியேனுடைய வினையென்னும்வாசி தீரும்படியாய்வந்து கிருபை செய்தருளவேண்டும்; முன்னாளையிலே வயிரத்தோடுங்கூடிய இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகையினது மூக்கறும்படியாய்ச் செய்த வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௩௫)

தாளுக்கவா வியநாவினுஞ் சலியாதுவா சனியானநோய்
ஆளைக்கெடா தின்றைக்குவா வசையாமலே யன்றைக்குவா
தோளுக்குவா ளியையெய்தவன் றுயர்கண்டிரா வணனின்று
நாளைக்குவா வெனுமையனே நாராயணா நாராயணா. [போய்

(இ - ள்.) தேவரீருடைய திருவடிகளுக்கு ஆசைகொள்ளாநின்ற எனது நெஞ்சிலேயும் நாவிலேயும் வருத்தமில்லாமல் வரவேண்டும்; சனியான நோயானது அடிமையைக் கெடுத்துவிடாமல் இன்றைக்கே வரவேண்டும்; சரமதிசையிலேயமனைக்கண்டு சஞ்சலிக்கு முன்னமே அன்றைக்குவரவேண்டும்; முன்னாளையிலே பாணங்களை இராவணனது தோள்களிலே யழுந்தும்படியாய் எய்து அவனது துயரத்தைக்கண்டு வயிரத்தையுடையராவணா! நீ இன்றைக்குச்சென்று நாளைக்குவாவென்று கிருபைபண்ணுநின்ற என்னையனாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. ()

விக்கற்கிடம் பொருமற்கிடம் விடுமூச்சமே லெழுதற்கிடம்
கக்கற்கிட மிருமற்கிடங் கருதற்கிடந் திருகற்கிடம்
சொக்கற்கிடங் குளிர்தற்கிடஞ் சுடுதற்கிடம் வெருவற்கிடம்
நக்கற்கிடந் தருமெய்ப்பருள் நாராயணா நாராயணா.

(இ - ள்.) விக்கலென்றும், பொருமலென்றும், மேல் மூச்சென்றும், கக்கலென்றும், இருமலென்றும், கருதலென்றும், திருகலென்

றும், சொக்குதலென்றும், குளிர்தலென்றும், சுடுதலென்றும், பயப்படுதலென்றும், நக்கலென்றும் சொல்லாநின்ற அந்தப்பீடைகளுக்கெல்லாம் இடங்கொடுத்திராநின்ற தேகத்தையுடைத்தாகிய அடியேனை இரட்சித்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௫எ)

துளசீதளத் துளசீதளத் தூய்நீரதே குடிநீரதாம்
உளதாயிரம் பெயரெண்ணு நூற் றொருகோடிமந் திரமேலதாம்
வளமார்பின்மா மணியென்னவே மணியாமெனைப் பிணியென்
நளகூபரன் பகைவென்றவா நாராயணா நாராயணா. [செயும்

(இ-ள்.) திருத்துழாயினது தளங்களிலே பொருந்துங் குளிர்ந்த நீரே குடிக்குங் கிஷாயங்களுக்கெல்லாம் மேலாகிய கிஷாய நீராகவும், நிலைபெற்றிராநின்ற ஆயிரந் திருநாமங்களும் நூற்றொருகோடி மந்திரங்களுக்கு மேலாகிய மந்திரமாகவும், வளம்பொருந்தாநின்ற திருமார்பிலே யிருக்கும் கவுஸ்துவமணியே மணிகளுக்கெல்லாம் மேலாகிய மணியாகவும் இருக்கின்றன; ஆராயுமிடத்தில் இவைகளே மணிமந்திர அவிழ்தமாக விருக்கப் பிணியானது அடியேனை யென்ன செய்யும்? நளகூபரனுடைய சாபத்தைத் தீர்த்து அருளிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௫அ)

சுவையோசையூ றொளிமாமணந் தொடராமனஞ் சுழல்
கெண்டையுங், கவைமானுமா னையும்விட்டிலுங் களிவண்டுமே
விளிகின்றபோ, லிவைதூயவென் றிவைதீயவென் றினியுண்
டிமேல னினியென்செய்வே, னவைதீரவே யருள்செய்குவாய்
நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஆகாரவுருசையினாலே கெண்டையும், மணியோசையினாலே கிளைமானும், தேகபரிசத்தினாலே ஆனையும், தீபப் பிரகாசத்தினாலே விட்டிற் பூச்சியும், வாசனையினாலே மதர்த்தவண்டும் மனந் தொடர்ந்து சுழன்றுவிழுந்திறந்து போவதுபோலே, எனது பஞ்ச இந்

திரியமும் இது நன்மை யென்றும் இது தீமையென்றும் தெரிந்து புசிப்பதில்லை; இனி யென்செய்கேன்? இந்தக் குற்றந் தீரும்படியாய்க் கிருபைசெய்தருளவேண்டும்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௬௯)

நெட்டேணியின் படியெட்டுமோ நின்னெட்டெழுத் தெழிலண்டமேல், எட்டாமெனும் பதமெட்டவே யிரதித்த சர்க்கரையேயதின், வட்டேயசும் பழமேசதா மதுரித்தவா ரமுதேயெனும், நட்டேயருட் புனல்கட்டிவாய் நாராயணா நாரா யணா.

(இ-ள்.) மூங்கில்களாலே நெடிதாயமைத்திராநின்ற ஏணியினது படிகளிலேயேறினால் பரமபதம் எட்டமாட்டாது, ஆதலால், ஏழு அண் டத்துக்குமேலே எட்டாவதாகிய அந்தப்பரமபதத்துக்கு ஏறிவர உபாய முண்டு; அது யாதெனில், நினது திருமந்திரமாகிற எட்டெழுத்தையும் எனது நெஞ்சிலே நட்டு, இரம்மியமான சர்க்கரையுங் கற்கண்டும் கனி ந்த முப்பழமும் நித்திய மதுரமாகிய நிறைந்தவமிர்தமும் ஆகிய இவை களின் சுவைபோலே பரவும்படியாகக் கிருபைப்புனல் கட்டினால் ஏறி வருவேன்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௭௦)

காணுங்கணே குவியுங்கையே கருதுள்ளமே கனலாஞ்சனம் பூணும்புயம் புளகாங்கமே புகழ்நாவதே திகழ்கேள்வியே ஆணும்பெணுஞ் சரணென்பதே யவையல்லன னபாதிகாண் நாணும்பெபர்க் காதாரமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீர் திருவடியைக் காணாநின்ற கண்களும், உம்மைக் கண்டு குவியாநின்ற கைகளும், நின்னை நினையாநின்ற உள்ளங்களும், மந்திராக்கினி பொருந்திய சங்குசக்கர வாஞ்சனம் பூணாநின்ற புசங் களும், உனக்காகப் புளகங்கொள்ளாநின்ற தேகங்களும், உன்னைப் புகழாநின்ற நாவுகளும், நின் புகழ் கேட்காநின்ற செவிகளும் ஆகிய இவைகள் பொருந்திக் குடும்பத்துடனே சரணாகதி பண்ணாநின்ற அடி

யார்களைப்போலப் பொருந்தினவனல்லன்; மிகுந்த அபராதத்தை யுடையவன்; ஆதலால், தரிசனம் பண்ண வெட்கத்தை யடைந்தேன்; இத்தன்மையாம் வெட்கத்தை யடைந்தபேர்களுக்கெல்லா மாதாரமாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (சுக)

கவிநல்லதோ கவிதீயதோ கனமூடனுன் விதைவித்திடும்
புவிநல்லதேல் விளைவெய்துமேபுகழ்நல்லதேல்புகர்கேட்கவென்
செவிநல்லதே லருணல்லதே செயனல்லதே லியனல்லதே
நவிநல்லதே வரினுவிலே நாராயணா நாராயணா.

(இ-ள்.) மிகுந்த மூடனானவன் பாடாநின்ற கவிதையானது நன்மையாயதோ? தீமையாயதோ? தெரியவராது; விதைக்காநின்ற விதையானது பூமி நல்லதாயிருப்பின் விளையுமேயன்றி விளையாமற் போவதில்லை; ஆதலாலுமது புகழுங் கிருபையுஞ் செயலும் இயலும் நல்லவையான படியினாலே அவற்றை யென்காதிலே கேட்டு நாவினாலே தோத்திரம் பண்ணினால் நன்மைவருமேயன்றித் துன்பம் வருவதில்லை; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (சுஉ)

பசைகொண்டபா கவதாகமம் பருகாதுகா துருகாதுநெஞ்
சசைகொண்டபா தகநீரிலே யமிழ்வேனையா ணவமாதியாம்
கசைகொண்டமோ துகைதாக்குமோ களவுள்ளநா னுனதன்பி
நசைகொண்டகா ரியமாகுமோ நாராயணா நாராயணா. [லேன்

(இ-ள்.) தேவரீரிடத்திலே அன்புபொருந்தாநின்ற பாகவதாள் சொல்லிய ஆகமசாஸ்திரங்களை எனது காதானது கேட்பதுமில்லை; அவ்வாறு கேட்டு நெஞ்சானது உருகுவதுமில்லை; அலையாநின்ற பாதகக்கடலிலே விழுந்த என்னைக் காமம் வெகுளி மயக்கமென்கிற பிரமை எடுத்துக்கொண்டு வினையானது மோதியடிக்கும்; திருட்டு மனத்தையுடைத்தானவனு யுமிடத்திலே பத்தியில்லாமல் பரமபதத்துக்குக் காதல்கொண்டதால்அந்தக்காரியமாகுமோ? ஸ்ரீமந்நாராயணனே, எ-று

பலகூறுபட் டொருநெஞ்சினன் பரிசென்னவெங் கனு மானவா, விலகூறுகொண் டெனைவிண்டதென் விரனீக்கிமோர் நுகர்வார்களோ, மலகூறலாய் நீதானுமென் மதிதன்னைவிட் டெனையொத்தனை, நலகூறுவார் சுரதேனுவே நாராயணா நாரா யணா.

(இ - ள்.) அடியேன் பலவிதமான இடையூறுபட்ட ஒரு நெஞ் சையுடையவனானேன்; தேவரீர்வாய்வு பரிசம்போலே யெங்கும் நிறைந் தவரானீர்; ஆதலா லென்னை மாத்திரம் நீங்கும்படியான குற்றத்தைத் தேடிவிட்ட தென்னோ? விரல் நீக்கி மோரைக் குடிக்கிற பேர்களுமுள ரோ? கிருபையுற்றுப் பெருகிய உண்மையான இருதயத்திலே என்னை மறந்துவிட்டபடியினாலே தேவரீரும் அடியேனுஞ் சமானமேயன்றி அதிசயமில்லை; நன்மையாகத்தோத்திரம் பண்ணாநின்றதேவர்களுக்குக் காமதேனுவாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௩௪)

வாஞ்சித்ததே வதையாகுநீ வடவேங்கடந் தனினிற்கவும் நீஞ்சித்திரிந் தனன்வீணிலே நிழல்கண்டபின் வெயினிற்பரோ காஞ்சித்தலத் தருளாளனே கனகோபுரக் கொடியாடுமோண் நாஞ்சிற்றிருப் பதிவள்ளலே நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேனுடைய நெஞ்சிலே ஆசைகொள்ளாநின்ற தெய்வமாகிய தேவரீரிந்தத் திருவேங்கடத்திலேதானே யெழுந்தருளி யிருப்பது தெரியாமல் வீணிலே உலகமெல்லாந் திரிந்தலைந்தேன்; இனி நிழல்கண்டபேர்கள் வெயிலிலே நிற்பதுண்டோ? கனம்பொருந் திய கோபுரங்களிலே கொடிகளாடாநின்ற அழகிய மதில்களோடுங் கூடிய காஞ்சித்தலமுதலாகிய நூற்றெட்டுத் திருப்பதிகளிலேயும் அரு ளாளனென்றும் வள்ளலென்றும் விளங்கிய ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (௩௫)

மைநாகமா ழியையண்டிவாழ் வகையென்னநின் னருள்
வெள்ளவாஞ், சையினாலிருந் ததிலூறவே சமைவேனுறத்தரு
மாறெவன், கையினாலறிந் திடாண்ணிப கலிதீரநீ யருள்செய்
திடும், நைனாரினிற் சரியாவனோ நாராயணா நாராயணா.

(இ-ள்) மைநாகமலையானது சமுத்திரத்திலே முழுகிவாழுந் தன்மைபோலே தேவரீருடைய கிருபாசமுத்திரத்திலே ஆசையாயிருந்து ஊறும்படியாய்ப் பொருந்தின எனக்கு வரத்தைக் கொடுக்கும்படியான மார்க்கம் எவ்விடத்திலேயோ தெரியவராது; நான், பிரமாவினுடைய சிரத்தைக் கிள்ளிப்பொருந்தாநின்ற தரித்திரம் தீரும்படியாய்த் தேவரீர் கிருபைபண்ணாநின்ற ருத்திரனுக்குச் சமானமாக மாட்டுவேனோ? ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௬௬)

எமக்கென் றுவாழ் குடும்பத்திலே யிழுப்புண் ணுவா ரெம
தாதையர், தமக்கொன்றைவைத் திலரென்பரே சழக்குள்ள
பேர் வழக்குள்ளபேர், சுமக்கின்றவச் சுமையாளனச் சுதன்மற்
றையச் சுமைகட்கெலாம், நமக்கென்னகா ரியமென்பரே நாரா
யணா நாராயணா.

(இ-ள்.) எங்களுக்கென்று வாழாநின்ற குடும்பத்திலே அவதிப்படும்பேர்களாகிய பாவிகள், நம்முடைய அவதி தீரும்படியாய் நம்முடைய பிதாக்கள் நமக்கு ஒன்றையும் வையாமற்போனார்களேயென்று அழுவார்கள்; இந்தச் சம்சாரமாகிய சுமையைச் சுமக்காநின்ற புருஷன் அச்சுதனாகையாலே, அந்தச் சுமைகளைத் தாங்க நமக்கென்ன காரியமென்று அறிவாளர் சந்தோஷிப்பார்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௬௭)

பசுக்கட்குமா யினைபாடியிற் பலபாடியா டியுமாயர்தம் [ன்
சிசுக்கட்குமா யினைமைந்தனாய்த் திருட்டுக்குமா யினையன் றுதா
முசுக்கட்குமா யினைநாயினேன் முசிப்புக்குமாயருள் பூவையே
நசுக்கிங்கிப்பின்வா சனைகொள்வரோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஆயர்பாடியிலே யிராநின்ற பசுக்கூட்டங்களுக்கு இரட்சக கர்த்தாவாகியும், இடைப்பிள்ளைகளுக்குப் பாடலுடனே ஆடல் காட்டியும், சிறுபிள்ளையாகி வெண்ணெய் திருடுந்தொழிலுக்கு இசைந்தது மல்லாமல் முன்னாளையிலே குரங்குகளுக்கு நேசனாகி இரட்சித்த தேவரீர் நாயினேனுடைய தளர்ச்சிக்குக் கிருபைபண்ணாமல் புட்பத்தை நசுக்கி முகர்வாரைப்போல உபேட்சை பண்ணலாமோ? ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கஅ)

குலங்காணவே குடிகாணவே குணங்காணவே பழுதாயினும்
பலங்காணுநின் னடியாரெனிற் பவசாகரப் பரப்பென்னுளங்
கலங்காமலே கலங்காணுமே கழலாமலே கழல்காணுமே
நலங்காமலே நலங்காணுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) குலவண்மையும், குலத்தின் நிலைமையும், குணப்பெருமையும் ஆகிய இவைகளைக் காணுமிடத்தில் பழுதாயிருந்தாலும், தேவரீருக்கு அடிமைப்பட்டார்களேயானால் மேன்மைபெறுவார்கள்; ஆதலால் பாவசமுத்திரப் பரப்புக்குள்ளே என்னுடைய நெஞ்சமான நகட்டுவிட்டுக் கலங்கி ஒதுங்கி நலங்காமல் நலங்காணும் கப்பலைப்போன்ற திருவடியைக் காணும்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (க௯)

ஈன்றோனுநீ யலனோனுமவ் வியலுந்திபண் டினனல்லனிற்[றான்
போன்றோனவன் பெறுபிள்ளையைப் போபோபிதா வினவாதி
சான்றோர்முனே யினிநோயைநீ தவிராவெனிற் சபதங்கெடும்
நான்றோரைவீ சியவாளனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) என்னைப்பெற்றவனும் நீயல்லவோ? நானும் அருமையான யல்பொருந்திய உமது உந்தியிலே இருந்தவனல்லவோ? உம்மைப் போலே இரக்கமில்லார் எவரிருக்கின்றார்கள்? போ போ; பிதாவானவன் பெற்றபிள்ளையை வினவாதிருப்பானோ? பெரியோர்கள் முன்பாக

என்னுடைய நோயை இனித் தீராமற்போனீரானால், உமது சரணாகதி சம்ரட்சணை யென்கிற நெறிகெட்டுப்போகும்; பகைஞரைவீசிய வாளா யுதத்தையுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (எ0)

கஞ்சப்பதந் தனையந்நனே கட்டிக்கரைந் தவசத்தராய் [வார்
நெஞ்சத்துநா ரணவென்றுதா னியமித்துநித் திரைகொள்ளு
கொஞ்சத்தைநின் றளவாக்குவாய் குணபத்தைவாழ் குடியாக்
நஞ்சத்தையா ரமுதாக்குவாய் நாராயணா நாராயணா. [குவாய்

(இ-ள்.) தேவரீருடைய தாமரைபோலும் திருவடியை யுள்ளத் திலே நினைந்து ஞானக்கயிற்றினாலே அங்ஙனே கட்டிக்கரைந்துருகிப் பரவசத்தை யடைந்து ஸ்ரீமந்நாராயணனே யென்று நிச்சயம்பண்ணி ஆனந்த நித்திரைகொள்ளுவார்கள் துரும்புபோலே யிருந்தாலும் அவர்களை மகாமேருவாகச் செய்தருளுவாய்; இதுவுமல்லாமற் புழுக்களை ஐசுவரியத்தை யுடைத்தாகிய குடும்பங்களாகவும், விஷத்தை யமிர்தமாகவுஞ் செய்தருளாநின்ற மகிமையையுடைய ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (எக)

எழுநெட்டிருப் பருமேனிவந் தென்கைக்ககப் படுமென்றுநா
தழுவிக்கொளத் திரிகின்றனன் சகலச்சரா சரமாகுநீ [ன்
வழுவிக்கொடங் கிங்கோடியே வரநல்கமுன் வரவஞ்சியே
நழுவிக்கொடே திரிகின்றதென் நாராயணா நாராயணா.

(இ-ள்.) நெடியதாய் வளர்ந்திராநின்ற உமது பருத்ததிருமேனியானது எனது கைக்குள்ளே வந்தகப்படுமென்று நான் தழுவிக்கொள்ளத் திரிகின்றேன்; சகல சராசரங்களாகிய தேவரீரென் முன்னே வந்து வரத்தைக்கொடுக்கப் பயந்து அங்குமிங்குமோடி வழுவிக்கொண்டும் நழுவிக்கொண்டும் திரிகின்றதென்சொல்லும்? ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (எஉ)

எனைக்காக்கநீ வாமேன்மையென் றிருப்பாய்பராக் கது வுண்டுகொல், றனைக்காத்தவா கனமில்லையோ தருசேனைகா வல னில்லையோ, நினைக்காத்தசே டனுமில்லையோ நினைவில்லையோ விமையோர்பிரா, னனைக்காத்தமா ருதியில்லையோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனை இரட்சிக்கவருதல் மேன்மையென்றெண்ணி யிருப்பீர்; அப்படி இருக்கு மெண்ணத்தில் பராக்குவந்ததோ? அல்லது தேவரீருக்கு வாகனமாகவும் துணையாகவும் காத்துக்கொண்டிராநின்ற கருடனும், சேனைக்காவலனும், ஆதிசேஷனும், தேவர்களாகிய வானவர் களுயிரை இரட்சிக்கச் சஞ்சீவி கொண்டுவந்த அனுமானும் இல்லாமற் போனார்களோ? அல்லது திருவுள்ளத்தில் ஞாபகமில்லையோ? சொல் லும் ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (எ௬)

கண்போன்றகோ மகன்மாற்றவன் கடுகொத்தபொய்க் கிருள்பார்த்ததோர், பண்பொன்றுநூ லுரைசெய்யநான் பல பொய்ச்சொலால் விளையாடினேன், மண்பொன்றிநீ ரனல் பொன்றிவிண் வளிபொன்றவே வருமன்றுநின், நண்பொன்று நீ தரல்வேண்டுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) கண்பார்வைபோன திருதராட்டிரன் குமாரனாகிய துரி யோதனனுக்குப் பகைவனான தர்மராசன் கடுகளவு பொய்சொன்னதி னாலே இருள்சூழ்ந்த நரகத்தைப் பார்த்தானென்றும் ஒப்பில்லாத பண்புபொருந்துஞ் சாஸ்திரஞ் சொல்லச்செயும், நான் அனேகமான பொய்களை விளையாட்டாகச் சொல்லினேன்; ஆதலால், எனக்கென்ன கதிவருமோ தெரியவாராது; பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களுந் தேவர் குட்சியில் அடங்குங்காலத்திலே அடி யேனும் வந்துசேருவேன்; அப்போதாகிலும் உமது நண்பொன்று மாத்திரம் வைத்து என்னை இரட்சித்தருளவேண்டும்; ஸ்ரீமந்நாரா யணனே, எ - று. (எ௭)

போகேந்திரன் சிரமேந்துநின் பூதேவிபுல் லரையேந்தவே
ஆகேனெனு வுரைசெய்வளே லடியேனையேந் துகைவேண்டு
மாகேந்திரன் றனதம்பியே வடவேங்கடா சலவள்ளலே [வாய்
நாகேந்தியே நகமேந்தியே நாராயணா நாராயணா.

(இ-ள்.) சர்ப்பங்களுக்கு இராசனாகிய ஆதிசேஷன் முடிகளிலே ஏந்தாநின்ற உமது தேவியாகிய பூமிதேவியானவள் பாபிகளைத் தாங்குதற்கு வருத்தமாயிருக்குதென்று தேவரீருடைய திருச்செவியிலே விண்ணப்பஞ் செய்தருள்வாளாகில் அடியேனை மாத்திரம் தாங்கிக் கொள்ளும்படியாய் வேண்டிக்கொள்ளவேண்டும்; தேவேந்திரனுக்குத் தம்பியாகவும், திருவேங்கடமலைக்கு நாயகனாகவும் பொருந்திய வள்ளலே! பாஞ்சசன்னியத்தையும் கோவர்த்தன கிரியையு மேந்தியருளா நின்ற ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௭௫)

ஊழிற்பிறந் திடுபாவநோ யுடலைத்தொடா வகைதந்
திடாய், வாழிக்குநா யகனிந்திரன் மனுவின்பதம் பெறவிச்சி
யேன், ஆழிக்கையுன் கொடைமிக்கதென் றடியேன்மிகப்
பெறலாகுமோ, நாழிக்குடங் கலங்கொள்ளுமோ நாராயணா
நாராயணா.

(இ-ள்.) இகத்திலே மனுச்சக்கரவர்த்தியினுடைய பதமும், பரத்திலே வாழ்வுக்கு நாயகனாகிய இந்திரனுடைய பதமும் இச்சியேன்; ஆகையால், ஊழ்வினையினாலே பிறந்திடாநின்ற பாவநோயானது அடியேனுடைய தேகத்திலே சேராவகை செய்தருளிப் பரமபதத்தைத் தேவரீர் கடாட்சித்தருளவேண்டும்; திருவாழி தரித்த திருக்கரத்தையுடையவனே! உம்மிடத்திலே மிகுந்த தியாகமுண்டென்று நானிச்சைகொண்டதினாலே மிகுந்து வருமோ? என் பிராப்தி யெவ்வளவோ அவ்வளவே முடியும்; அதுவும் எத்தன்மையெனில் நாழிக்குடத்தைக் கொண்டுபோய்ச் சமுத்திரத்திலே யமிழ்த்தினால் நாழிகொள்ளுமேயன்றிக் கலங்கொள்ளுவதில்லை; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௭௬)

தனுவுக்குளே யுளராறுபேர் சவிதைக்குநா யகருன்னைநான்
பனுவற்சொலா வகைதட்டுவார் பழகிச்சதா நெறிகட்டுவார்
அனுவற்றசோ ரரையெற்றியே யடியேனைபா ளாசென்னவே
நணுகிக்கொடே திரிகின்றனன் நாராயணா நாராயணா.

(இ-ள்.) என்னுடைய தேகத்துக்குள்ளே இராநின்ற காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், என்று சொல்லா நின்ற ஆறுபேர்களுண்டு; அவர் சவிதைக்கு நாயகராகிய தேவரீருக்குக் கவிதைகள் சொல்லாதபடி தட்டுவார்; அன்றியும் என்னோடு பழகி மார்க்கத்தையும் கெடுப்பார்; ஆதலால் நான் கிரமம் நீங்கிய அத்திருடர்களைக்கொன்று அடியேனை இரட்சித்தருளும் கர்த்தனே யென்று உம்மை அடுத்துக்கொண்டு திரிகின்றனன்; என்னை யாண்டருள வேண்டும் ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (எஎ)

உடைச்சேலைதா குழைக்கோலைதா வுணச்சோறுதா
பணப்பேறுதா, கடைப்பூவடா வடைக்காயடா கறிக்காசடா
கடைக்கோளனே, கிடைக்கோடிவா முடிச்சேதடா வெனப்
பாவையார் கடுப்பார்பொலா, நடைக்காசையா யிறுத்தேனை
லோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) உடுக்கிறதற்குச் சேலைதாடாவென்றும், காதுக்குப் பொன்னோலை தாடாவென்றும், உண்கிறதற்குச் சோறுதாடாவென்றும், மிகுந்த பணங்களைத் தாடாவென்றும், கடைப்புஷ்பங்களை வாங்கித்தாடாவென்றும், பாக்கு வெற்றிலை தாடாவென்றும், கறிக்குக் காசுதாடாவென்றும், கடைப்பட்ட கோளனே யென்றும், படுக்கைக்கு ஓடிவாடாவென்றும், அடிச்சோமணிமேலே முடிச்சேதடாவென்றும் வம்பாகப்பேசி வெறுந்துக் கெடுக்கின்ற வேசியருடைய பொல்லாத நடத்தைகளிலே ஆசையாய்த் திரவியத்தையெல்லாம் இழந்துவிட்டு விழலானேன் ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (எஅ)

கன்னிப்பெருங் கடலோடுவான் கம்பத்திலே விளையாடு நான், உன்னிக்கொளும் பயமென்ன நோயுட்பட்டுநெஞ் சுழல்வுற்றனன், என்னிற்பயந் தெளிவித்திடா யெல்லோர்க்குமீந் தென்மட்டிலே, நன்னிக்குணம் பிடிப்பட்டதே நாராயணா நாராயணா.

(இ-ள்.) பெரிதாகிய கடலிலே நீந்தவும், கம்பத்திலேறி விளையாடவும், பொருந்திய இளம்புத்தியை யுடையவன் சென்ற பிற்பாடு நினைத்துக் கொள்ளாநின்ற பயங்களைப்போலே, நோயுட்சிக்கியபின் எனது நெஞ்சம் வருந்துகின்றனன்; ஆதலால் என்னிடத்திலே உண்டாகிய பயத்தைத் தெளிவித்தருளவேண்டும்; யாவருக்குங் கிருபை செய்கிறநீ என்மட்டுஞ் செய்தருள உமக்கு லோபகுணம் பிடிபட்டதோ? ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (எக)

புட்புள்ளவன் கொடியென்னவே பொற்பொன்னவன் கலையென்னவே, கட்புண்டரீ கமலத்தினேர் கண்ணென்னவே கனைகின்றிலேன், சட்புள்ளவுன் சமயத்திலே சலமண்டினேன் சரணண்டினேன், நட்புள்ளதோ பகையுள்ளதோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) பட்சிரூபமாகிய கருடக்கொடியனே யென்றும், வண்மைபெற்ற சுவர்ணவஸ்திரனே யென்றும், தேனோடுகூடிய சிவந்ததாமரைக் கண்ணனேயென்றும், கரைந்துருகாத பாவியானவன், உமது சமயத்திலே வயிராக்கியம் பொருந்தித் திருவடியடைந்தேன்; அடியேனிடத்திலே நேசமிருக்குமோ பகையிருக்குமோ தெரியவராது; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. (அ௦)

கச்சுப்பிதிர்ந் தெழுகொங்கையார் கடைவாள்விழிப் படைகோடிகள், தச்சுக்கிடந் திடுநெஞ்சிலே தனியம்புதைக் குவருய்வரோ, பிச்சுத்தயா பரனுனநீ பெருமந்திரந் தனிலாற்றுவாய், நச்சுப்பெருஞ் சுதைவேலையாய் நாராயணா நாராயணா.

(இ - ள்.) கச்சடங்காமலெழுந்த கொங்கைகளையுடைய கன்னியர்கடைக்கண் பார்வையாகிய ஆயுதகோடிகள் எனது நெஞ்சிலே தைத்துருவிப் புண்ணாகியது; அந்த நோயை என் சொல்வேன்? ஒரு பாணம்பட்டவர்கள் பிழைப்பதில்லையே; ஆதலால், நீ நித்தியபானாகையினாலே இந்தப் பாணங்களைப்பிடுங்கிப் புண்களை உமது பெரிதாகிய திருமந்திரத்தினாலே ஆறும்படி செய்தருளவேண்டும்; ஆசையுடனே உயர்ந்த அமுதக்கடலிலேமேவும் ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (அக)

எய்தாரிருந் திடவம்பைநோ மிழிவாளர்போற் பழிபாதகம்
செய்தாரிருந் திடலன்றியே தெய்வந்தனைச் சிதைவாகவே
வைதாவதென் விதனத்திலே வழிதப்புமே வாய்பாறுமே
நைதாதுவின் பாகாரனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) பாணத்தை பெய்தவரிருக்க அம்பைநோகாநின்ற இழிவாளர்போலே பழிபாதகஞ்செய்த நானல்லவோ அனுபவிக்கவேண்டும்; அதுவன்றித் தேவரீரை விதனத்தினாலே கெடுதலாகவைதென்ன? இதனால் நன்மார்க்கமுஞ் சத்தியமுங் கெட்டுப்போகுமேயன்றி வேறில்லை; சாமநிசையினாலே நைந்துபோகாநின்ற தாதுவுக்கு வயித்தியனாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (அஉ)

முகிலுக்குளே யடிபட்டவோர் முதுமக்கள்போற் றுணி
விக்குநோய், மிகலற்பமோ விடுவித்திடாய் விமலத்தநீர் மடுவு
க்குள்ளே, துகிலைக்கொடாய் துகில்விட்டிடாய் தொழுவெட்
கமே வியமைக்கணார், நகிலுக்குள்வீழ் நகையச்சுதா நாரா
யணா நாராயணா.

(இ - ள்.) மேகவருஷத்திலடிபட்டகிழவர்கள் வருத்தத்தையடைந்து இறக்குமாப்போல அடியேனிறக்கும்படியாய்த் துணிந்து செய்யாநின்ற நோயானது பெருகுதல் சொற்பமல்லவே; ஆதலாலது நீங்கும்படிக்குக் கடாட்சித்தருளவேண்டும்; முன்னாளையிலே பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய யமுனாநதியிலே ஸ்நானம் பண்ணாநின்ற

கோபிகா ஸ்திரீகளுடைய வஸ்திரங்களை அபகரித்துக்கொண்டுபோய்க் கொடாமலும் விட்டுவிடாமலும் நின்றகாலத்திலே அவர்களும்மைத் தொழுது கேட்க வெட்கத்தை யுடையவர்களாய் மைதீட்டிய கண்பார் வையானது . தங்கள் கொங்கையிலே படியத்தக்கதாய்த் தலையைக் கவிழ்ந்துகொள்ள நகைத்தருளா நின்ற ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (அங)

கமலத்தைவந் தயல்வண்டுணுங் கருகாததே னைகளொக்கவே
அமலத்த நீரிடைவாழினு மதுபோலவே யயலாரெலாம்
நிமலப்பதந் தொழுமூரிலே நிலைபெற்றிருந் துனைவந்தியேன்
ஞமலிக்குமோ மருள்செய்திடு நாராயணா நாராயணா.

(இ - ள்.) பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய தடாகத்திலே இரா நின்ற தாமரையினுடைய பெருமையை யத்துடனே பிறந்த தவளை யறியமாட்டாது; பக்கங்களிலேயிருந்து வண்டுக ளதின்தேனைச் சாப் பிட்டுச் சந்தோஷத்தை யடையும்; அதுபோலத் தேவரீர் நிலைபெற்றிரா நின்ற ஊரிலே அடியேனிருந்துந் தேவரீரைத் தோத்திரம் பண்ணிக் கடைத்தேறவறியேன்; அயலிலே இராநின்ற பிரமாமுதலாகிய பேர்க ளெல்லாந் தேவரீருடைய பரிசுத்தமான திருவடியைத்தொழுது கடைத்தேறுகிறார்கள்; கடைகெட்ட சுவானத்துக்கும் கிருபைசெய்தருளின ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (அச).

என்மாடுவீ டென்பிள்ளைபெண் டென்காணிமண் ணென்
சொம்மெனும், தன்மாலிலே யறியாதபேர் தமதாகுமோ
வவையாவுமே, வன்மாயமென் றதுகண்டவர் வடவேங்கடப்
பதிவைகியே, நன்வானுயர் நிலைநிற்பரோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) என்மாடென்றும், என்வீடென்றும், என் பிள்ளையென்றும், என் பெண்சாதியென்றும், என்காணி மண்ணென்றும், என் னுடைமையென்றும் தங்கள் மயக்கத்தினால் மூடரானபேர் எல்லாம் சொந்தமென் றிருப்பார்கள்; அப்படி அவைகள் சொந்தமாகுமோ?

அவைகளுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமென்ன? இவையெல்லாம் வலியமாய்கையென்று தெளிந்து நன்மைபெற்ற மானிடரெல்லாந் தேவரீருடைய திருமலையை நித்தியபதார்த்தமென்று நினைத்துத் தங்கி உயர்ந்த நிலைபெறுவார்கள் ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (அ௫)

பரலோகமும் பரரூபமும் பரபோகமும் பரமாயுவும்
சுரலோகமுஞ் சுரரூபமுஞ் சுரபோகமுஞ் சுராயுவும்
திரலோகமென்றிவையாவையுந் திருவேங்கடந்தனிலுள்ளதால்
நரலோகமே மிகநன்றுகா ணாரயணா நாராயணா.

(இ - ள்.) பரமபதமும், திவ்விய திருமேனியும், நித்தியானந்தமும், நித்தியதத்துவமும் மற்ற இமையவர்நாடும், இமையவர்மேனியும், இமையவர் ஆயுளும், இமையவர்போகமும், இமையவர்களுக்கு நாயகனாகிய இந்திரனுடைய பதவியும் ஆகிய ஐசுவரியங்களெல்லாந் தமது திருவேங்கடத்தை யடைந்தபேர்களுக்கெல்லா முண்டாகிய தன்மையினாலே இந்த நரலோக மிகுந்த நன்மையானது ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (அ௬)

அசவாதவன் பழிவேடரா ரடியேனுடம் பிணிநோயெலாம்
கசவாதுதின் பவர்போலவே கவராமலிங் கருள்கூறுவாய்
குசவாயுதா சிறுகோவலா குறுவேதியா குலமன்னமா
னசவாவியிற் பயிலன்னமே நாராயணா நாராயணா.

(இ - ள்.) அசைவில்லாமல் வலியபழியைச் செய்யாநின்ற வேடரானவர்கள் தயவில்லாமல் மிருகங்களைக் கொன்றுதின்னுமாப்போலே அடியேனுடைய தேகத்தைப் பிணியானது பிடுங்கித்தின்னாமல் இவ்விடத்திற் கிருபைசெய்தருளவேண்டும்; கலப்பையாயுதத்தை யுடையவனே! இளமையாகிய கோபாலனே! குட்டனாகிய வாமனனே! சூரியகுலமன்னவனே! மானசமடுவிலே விளையாடாநின்ற அன்னரூபமாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (அ௭)

மீன்கூருமங் கிடிபாதிபாண் மிருகங்குறள் பாசாளிகோ
மான்கூரலா யுதனுபன்மேல் வருவாசியும் பெருவாசியோ
தேன்கூருமா கமசாரமுஞ் சிறுபோகமோ கமசாரமும்
நான்கூருரை குருபத்தனே நாராயணு நாராயணு.

(இ - ள்.) மச்சமென்றும், கூர்மமென்றும், வராகமென்றும், நாசிங்கமென்றும், வாமனமென்றும், பாசுராமனென்றும், ஸ்ரீராமனென்றும், பலராமனென்றும், ஸ்ரீகிருஷ்ணனென்றும், வந்ததல்லாமல் மேலும் கற்கியாய்வருவதினலே உமக்குப்பெரிதாகிய பலனுண்டோ? மதுரம்பொருந்திய ஆகமசாத்திரமுஞ் சிற்றின்பமாகிய காமசாரமும் நான்குசாரமும் ஓதுவித்தகுருவாகிய சாந்திபருக்குப் பத்தனுகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (அஅ)

மிறுக்கத்தகா தெனதாவியின் விளக்கிற்குநின் னருணெய்பிடாய், பொறுக்கத்தகா தநுமெய்யுடல் புழுக்கத்தகாதொருபோரிலே, குறுக்கிட்டபேர் நடுக்கிட்டிடக் குலேவாணனர் திரடோளெலாம், நறுக்கிக்கையோர் துணைவிட்டவா நாராயணு நாராயணு.

(இ-ள்.) அவமாகிய எனது தேகமானது புழுக்கங்கொண்டு பொறுக்கத்தகாமல் இறந்துபோகிறது தகுதியான காரியமல்லவே; ஆதலால் உயிராகிய விளக்கானது அவிந்துபோகாமல் தேவரீர் கிருபையாகிய நெய்பமுது பெய்தருளவேண்டும்; ஒப்பில்லாத யுத்தமுகத்திலே குறுக்கிட்ட சிவன் முதலானபேர் நடுக்கங்கொள்ளப் பொல்லாத வாணுசுரனுடைய விஸ்தாரமான தோள்களையெல்லாஞ் சக்கரத்தினலே நறுக்கி இரண்டு கைகளை மாத்திரம் விட்டருளிய ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (அகூ)

புன்சொல்லிலே யகப்பட்டதும் போதாமலே யவமேற்றெனக், கென்சொல்லுவோ மெனவெண்ணிபோ யாதோவெனக்கியாதுநீ, தென்சொல்லிலே வடசொல்லிலே திருவாய்

மொழிச் சதுர்வேதமா, நன்சொல்லிலே விளையாடுவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனுடைய மூடபுத்தியினாலே பாடாநின்ற புல்லிதாகிய கவிதைச் சொல்லிலே அகப்பட்டதும் போதாமல் எனது அக்கியானத்தையெல்லாம் எற்றபடியினாலே இவனுக்கு என்ன சொல்லுவோமென்று திருவுள்ளத்திலே யெண்ணியதோ என்னமோ கிருபை செய்தருளாம லிருப்பதை அறிகிலேன்; தமிழாகிய தென்சொல்லிலேயுங் கிரந்தமாகிய வடசொல்லிலேயுந் திருவாய்மொழியென்னும் நான்கு வேதத்தினுடைய நன்மைபெற்ற சொல்லிலேயுந் திருவிளையாடல் செய்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௯0)

மெலியாமையுந் திருஞானமு மிகுபோகமுந் திடதேகமும்
சலியாமையும் பகைநாசமுந் தனராசியுங் குசீலமும்
கலியாணமும் பெறநீதாக் கடனாளியாற் பினுமுன்னைநான்
நலியாமலே யருள்கூருவாய் நாராயணா நாராயணா.

(இ - ள்.) மெலிதலில்லாமையும், அழகிய ஞானமும், மிகுந்த போகமும், வலிய தேகமும், சலியாமையும், பகைநாசமும், திரவியராசியும், யோக்கியமான ஆசாரமும், கலியாணமும் ஆகிய இவையெல்லாந் தேவரீரிடத்தில் நான் பெறும்படியான கடன்காரனாதலால் இனி உம்மை நான் வருத்தாமல் பூரணமான கிருபை செய்தருளவேண்டும்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௯௧)

சமர்த்தேதுநல் லறமேதருந் தயையேதருந் தவமேதுமிக்
கமைத்தேதுமே லடைவேதுகா ரணமேதுபூ ரணமேதுசங்
கமத்தேதுரா கமேதுசொல் சுமையேதுசெல் கதியாவுநீ
நமத்தேதுவா ரகைவாசனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) சாமர்த்தியங்கள் தாமேது? நல்லதருமங்கள் தாமேது? அருமையான தயவுகள் தாமேது? அரியதவங்கள் தாமேது? மிகுந்த

அமைப்புகள்தாமேது? மேலாகிய அடைவுகள்தாமேது? காரணங்கள் தாமேது? பூரணங்கள்தாமேது? கூட்டங்கள்தாமேது? ஆணவங்கள் தாமேது? சொல்லியபொறமைகள் தாமேது? செல்லாநின்றமோட்சங் கள்தாமேது? இவைகள்யாவும் தேவரீருடைய கிருபையேயன்றி வேறில்லை; ஆதலால் உமது திருவடிகளுக்கே நமஸ்காரஞ்செய்து நின் றேன்; துவாரகா வாசனாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கூ௨)

பித்தங்கயஞ் சொறிமே தமல்கம்பிதமீளை காமலைபாண்டுவுன்
மத்தஞ்சுரஞ் சளிசன்னிகால் வலிசூலைவிக் குதல்கக்குவா
யுத்தம்பனந் தலைநோவுமற் றுளநோயெலாந் தொடராமலாள்
நத்தம்மகர்க் கொருநாவல நாராயணா நாராயணா.

(இ - ள்.) பித்தம், க்ஷயம், சொறி, வெள்ளைப்பாண்டு, கமை, ஈளை, காமாலைப்பாண்டு, உன்மத்தம், சுரம், சளி, சன்னி, கால்வலி, சூலை, விக்கல், கக்குவாய், தம்பனம், தலைநோய், மற்றுஞ் சொல்லா நின்ற நோய்களெல்லாம் அடியேனைத் தொடராமல் இரட்சித்தருள வேண்டும்? ஆசைகொள்ளாநின்ற அழகிய தேவர்களுக்கெல்லாம் ஒப் பில்லாத தெய்வமாகிய ஸ்ரீமந்நாராயணனே, எ - று. (கூ௩)

துறையூருமா முதலைக்குலச் சுனையொத்தமன் னவர்வாசலில்
குறையூர்வதுங் கசைசாடவே குலைக்கின்றதுந் தலைசோரியாய்
முறையூர்வதும் பிறகுன்னையேமுனிபாவமுந் தெரியேனலேன்
நறையூரனே கருடாசலா நாராயணா நாராயணா.

(இ-ள்) முதலைக்குலஞ் சஞ்சரியாநின்ற துறையையுடைய சுனை போலேயிராநின்ற துஷ்டமன்னர்வாசலிலே குறைவுகளைச் சொல்லு மிடத்தில் அவர்கள் தருமம் விசாரியாமல் நேர்ந்தபடிக்குப் பிரம்புக ளாலே அடித்திடத்தேகம் நொந்து தலைகளிலே உதிரம் பெருகும் போது முறையமிட்டுக் கேள்வியில்லாமல் பிற்பாடு தேவரீரைத் தெய் வமேயென்று வெறுத்துக்கொள்பவருடைய பாவந் தீர்வதேயில்லை

ஆதலால் தேவரீர் சன்னிதானத்திலே முன்னமே முறையமிட்டேன்; திருநறையூரிலேயுந் திருவேங்கடமாகிய கருடாசலத்திலேயும் நிலை பெற்ற ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கூஎ)

பிணிவிட்டதே விதிபாவையும் பிழைவிட்டதே சுகசீவியாய்
பணிவிட்டதே நமனுமொனும் பகைவிட்டதே பலபூசனும்
தணிவிட்டதே யதிஞானமே தகவிட்டதே யுனையோதவாய்
நணிவிட்டதே யென்மட்டிலே நாராயணா நாராயணா.

(இ - ள்.) தேவரீர் கிருபைசெய்ததனாலே என்னளவில் சனனங்தோறுந் தொடாநின்ற பிணி நீங்கியது; இன்னும் அவ்வருள் விதிகளையும், எமன் பகைகளையும், மன்மதன் சண்டைகளையும் நீக்கிச் சுகசீவியாகவும் பண்ணிவிட்டது; அதிக ஞானத்தை யடையும்படியும் செய்தது; அதனால் என் வாய் உம்மை ஓதும்படியாகவும் பொருந்தி விட்டது; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கூ௯)

வாய்செய்தபுண் ணியங்கோடியென் வழிசெய்தபுண் ணியங்கோடியென், தாய்செய்தபுண் ணியங்கோடிதந் தையர் செய்தபுண் ணியங்கோடியென், பாசெய்தபுண் ணியங்கோடி யென் பதிசெய்தபுண் ணியங்கோடியென், நாசெய்தபுண் ணியங்கோடிகா ணாராயணா நாராயணா.

(இ-ள்.) எனது வாக்கும், எனது மரபும், எனது மாதாவும், எனது பிதாவும், எனதுபாடலும், எனது ஊரும், எனது நாவும் ஆகிய இவைகளெல்லாஞ் செய்தபுண்ணியம் அனேகங் கோடியானபடியினாலே தேவரீரைத் தரிசிக்கப்பெற்றேன்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கூஸ)

உன்கோயிலிலென் கால்சூழவு முன்பாதமென் கண்காணவும்
பின்பாடலென் வாய்பாடவு நின்காரியங் கைசெய்யவும் [வும்
என்காதுநின் புகழ்கேட்கவு மென்னெஞ்சுநின் னினைவுன்ன
நன்காகநல் வரமேதரு நாராயணா நாராயணா,

(இ-ள்.) உமது திருக்கோயிலை என்கால்சூழவும், உமது திருவடியை என்கண் காணவும், உமது சரித்திரத்தை என்வாய்பாடவும், உமது கைங்கரியத்தை என் கை செய்யவும், உமது புகழை யெனது காது கேட்கவும், உமது தியானத்தை என்னெஞ்சு செய்யவும் பொருந்துகின்ற நல்ல வரத்தைக் கொடுத்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கஎ)

இற்கண்ணெலா நாராயணா வெங்கெங்கணு நாராயணா
சொற்கண்ணெலா நாராயணா தொழிலெங்கணு நாராயணா
முற்கண்ணெலா நாராயணா முகமெங்கணு நாராயணா
நற்கண்ணெலா நாராயணா நாராயணா நாராயணா

(இ-ள்.) வீடுகள் யாவையினும், வெளிகள் யாவையினும், சொல்லுகள் யாவையினும், தொழில்கள் யாவையினும், முன்னிடங்கள் யாவையினும், முகங்கள் யாவையினும், மற்ற நல்லிடங்க ளெல்லாவற்றிலும் பரிபூரணமாயிருப்பது நாராயணாவென்னும் தேவரீர் சொரூபமேயன்றி வேறொருவருண்டோ ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கஅ)

தேறுந்திருப் பதிவேங்கடந் தெரிசித்துநா ரணவென்றுதான்
நூறும்படிப் பவர்பன்னுவார் நூறும்மிருந் துலகாண்டபின்
பேறும்பெறும் பிள்ளைப்பெறும் பெருமைப்பெறும் பெறுவிப்
நாறுந்துழா யணிமார்பனே நாராயணா நாராயணா. [பையே

(இ-ள்.) வேதமுடிவிலே தேறுகின்ற திருவேங்கடமென்னுந் திருப்பதியைத்தரிசித்து ஸ்ரீமந்நாராயணசதகம் நூறுபாடலையும் படிப்பவர்களும், அர்த்தங்களாராய்பவர்களும், நூறுவருஷமிருந்து பிள்ளைகள்முதலாகிய உலகாட்சியினது பலனை அனுபவித்தபிற்பாடு அவர்க்குப் பெருமையைப்பெற்ற பரமபதத்தைக்கடாட்சித்தருள்வாய்; பரிமளிக்குந் திருத்துழாயணிந்த திருமார்பையுடைய ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (கக)

நணிவாழிநின் பல்கோயிலு நணிவாழிநின் பலதேவிமார்
நணிவாழிநின் னடியாரெலா நணிவாழிநின் பல்வைபவம்
நணிவாழிநின் வடவேங்கட நணிவாழிநின் கவிகற்றபேர்
நணிவாழிநின் கவிகேட்டபேர் நாராயணா நாராயணா.

(இ-ள்), சோழநாட்டிலும், பாண்டிநாட்டிலும், மலைநாட்டிலும், நடுநாட்டிலும், தொண்டைநாட்டிலும், வடநாட்டிலும், தேவரீர் நித்தியவைபவமாய் விளங்காநின்ற திருவரங்கம் பெரியகோயில் முதல் பரமபதம் அந்தியமாகவிராநின்ற நூற்றெட்டுத் திருப்பதியிலும் பாகவதர்கள் உச்சீவிக்கத் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிராநின்ற தேவரீருடைய திருக்கோயில்களெல்லாம் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழ்க; தேவரீருடைய வட்சஸ்தலத்தி லின்பமுற்று [illegible] விராநின்ற மகாலட்சுமியும், பூமிப்பிராட்டியும், நீளாதேவியும் [illegible]ண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவர்; திரிகாலங்க[illegible] இடைவிடாமல் தமது திருவுள்ளமே ஆலயமாகச [illegible] தேவரீரைத் தியானஞ் செய்யும் கடல்சூழ்ந்த இவ்வுலகத்தின் பரமபாகவதர்களியாவரும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதி[illegible] ழ்க; தேவரீருடைய மகிமையுற்று விளங்கும் வைபவங்கள் வாழ்க; சமஸ்கிருத பாஷைக்கும் திராவிட பாஷைக்கும் [illegible] யும், சதுர்வேதங்களும் மற்றைய சாஸ்திரங்களும் சொல் பொருள்களுக்கெல்லாம் முடிவாகியும், தர்மத்துக்கு வரம்பாகி[illegible] தேவிக்கு மணிமுடியாகியும், தனக்கொப்பில்லாமல் பெருமை [illegible] திய சொர்ணமயமாகியும், ஓங்கிய தேவரீர் எழுந்தருளியிரா[illegible] வடக்கின்கணுள்ள திருவேங்கடமலையும் பல்லாண்டுபல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது; திரிகாலக்கியானிகளாகிய வசிஷ்டவாமதேவ விஸ்வாமித்திர வியாசபராச சுகசவுனகாதிரிஷிகளும், மகாத்துமாக்களாகிய நம்மாழ்வார் முதலாகிய ஆழ்வார்களும், பதோத்தாகாரகிய இராமானுஜாசாரியரும், வரகவிகளான தண்டிபவபதி காளிதாசன் கம்பர்முத

லாகிய கவிச்சக்கரவர்த்திகளும், பரமபாகவதோத்தமர்களாகிய அழகிய மணவாள பிள்ளைப்பெருமாளையங்கார் முதலாகியவர்களும், இவர்களாற் செய்தருளிய வேதங்களும். வைஷ்ணவாகமங்களாகிய ஸ்ரீ பாஞ்சராத்திர வைகானசங்களும், இதிஹாசங்களாகிய இராமாயண பாரதங்களும், வாமம் வராகமுதலிய புராணங்களும், மற்றுமுள்ள நூல்களுமாகிய இவைகளில் சொல்லப்பட்டிருக்கிற தேவரீருடைய நித்திய கல்யாண குணங்களை அத்தியயனஞ்செய்த பாகவதர்கள் யாவரும் பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவர்; இவ்வாறு மகிமையுற்ற தேவரீர் விஷயமாகச் செய்தருளிய கவிகளைச் சிரவணைந்தத்துடன் கேள்வியுற்ற பாகவதர்களியாவரும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவர்; ஸ்ரீமந்நாராயணனே, எ-று. (௧௦௦)

வடவேங்கட

நாராயணசதகம் மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

உ

சிவமயம்.

ஸ்ரீமத் உபசுப்பிரமணியர் மரபினராகிய

படிக்காசுப்புலவரவர்கள்

இயற்றியருளிய

தொண்டைமண்டல

சதகம்.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

விலை அணா 2

உ

சிவமயம்.

தொண்டைமண்டல சதகம்.

வழிபடு கடவுள் வணக்கம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கொண்டலை நிகர்க்கும் வேளாண் குடியொடு தழீஇய தொண்
மண்டல சதகந் தன்னை வளமையான் வகுப்பதற்குட் [டை
புண்டர நுதலி ரண்டு புயமிசை யிருந்தி ரண்டு
குண்டல நிகரி ரண்டு குமரரை வணக்கஞ் செய்வாம்.

நூல்.

கட்டளைக்கலித்துறை.

சீர்கொண்ட கச்சித் திருவேகம் பத்தரன் செல்வமுக்கட்
கார்கொண்ட மும்மதத் தைங்கரந் தாங்கிக் கடவிகடப்
பேர்கொண்ட சக்கரப் பிள்ளையைத் தான்பெற்ற பேறதனால்
வார்கொண்டகீர்த்திபடைத்ததன்றோதொண்டைமண்டலமே.

மேற்கோள்.

ஸ்காந்தம்.

கலிவிருத்தம்.

"தீகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக

னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்."

சேவடி செய்வ தறியாத மாவலி முன்புசென்று
மூவடி வேண்டுந் திருமான் மருகனிம் மூவுலகுங்
காவடி யாக வொருதலை மேவிய காஞ்சிபுர
மாவடி மேவும் பெருமான் பதிதொண்டை மண்டலமே. (உ)

மேற்கோள்.

ஸ்காந்தம்.

ஆசிரியவிருத்தம்.

"மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
யாவருந் துதிக்கநின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி."

கயிலையுங் கச்சியும் விற்கோ லமுநற் கழுக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாசூரு மச்சிறு பாக்கமுநல்
லயிலையும் வல்லந் திருவொற்றி யூரு மாசிலியு
மயிலையு மீசன் மகிழ்ந்ததன் றேதொண்டை மண்டலமே. (ஙா)

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

"ஈரைாட் டாண்டு மலைநாட்டி லொன்றுகொங் கேழுவையை
வாணாட்ட ரேழ்நடு நாட்டெழு மூன்றொன்றைந் தாம்வடக்கிற்
சோணாட் டொருநூற்றுத் தொண்ணூறென் றோர்வர் துளுவத்தொ
நாணாட் டியதொண்டை நன்னாட்டி லாறைந் திருநகரே." [ன்று

திருப்பதிக்கோவை.

ஆசிரியவிருத்தம்.

"தண்ணார்தண் டலைப்பாதி ரிப்புலியூர் முண்டீச்
சரம்புறவார் பனங்காட்டூர் திருவாமாத் தூரே
யெண்ணாரண் ணாமலையு நடுநாட்டி லிருபத்
திரண்டாகு மிப்பாலே கம்பமேற் றளிவிண்
கண்ணேங்கு மதிலொண்காந் தன்றளியனேக
தங்காவ தங்கச்சி நெறிக்காரைக் காடே
யுண்ணாடு குரங்கணில்முட் டந்திருமா கறலோத்
தூர்வன்பார்த் தான்பனங்காட் டூர்வலமாற் பேறே."

இதுவுமது.

"ஊறலிலம் பையங்கோட்டூர் விற்கோல மாலங்கா
டியர்பாசூர் வெண்பாக்கம் பள்ளில்கா ளத்தி
மாறிறிரு வொற்றியூர் வலிதாயம பாலி
வடமுல்லை வாயில்வேற் காடுதிரு மயிலை
யீறிறிரு வான்மியூர் கச்சூரா லக்கோயி
லிடைச்சுரங்க ழுக்குன்ற மச்சிறுபாக் கம்மே
மாறிறிரு வக்கரையே யரசிலிதொல் லிரும்பை [டே."
மாகாளந் தொண்டை நன்னாட் டெண்ணின்முப்பா னிரண்

இளைத்தெழு வெண்பிறை யார்கச்சி யேகம்ப ரின்னருளால்
விளைத்தெழு நாலி லொருமருந் தாலும் விலக்கரிதாய்
முளைத்தெழும் பொற்சிக ரம்போனு மம்மை முலைத்தழும்பும்
வளைத்தழும் பும்பெற்றிருப்பதன் றோதொண்டை மண்டலமே.

மேற்கோள்.

காஞ்சிப்புராதன புராணம்.

ஆசிரியவிருத்தம்.

"மங்கைநா யகிதன் வரிவளைத் தழும்பும்
வளரிள முலைசெய்த சுவடும்

கொங்கைநா யகமுங் கண்டுகண் டுள்ளக்
குறிப்புட னல்குவாய் கோவே
சிங்கநா யகமா யிருந்தநா ரணனைச்
சிம்புளா யடர்த்தசே வகனே
கங்கைநா யகனே கம்பனே கச்சிக்
கடவுளே காக்குநா யகனே."

சேணார் கழுகு பழகுதெய் வீகச் சிறப்புமன்றி
யேணாரும் பூதங் கொடுபோ வதுமன்றி யெண்ணிறெல்சேர்க்
காணாது காண்பது கச்சியி லேயென்று காசினியோர்
வாணா ளளவுந் துதிப்பதன் றோதொண்டை மண்டலமே. (ரு)

மேற்கோள்.

திருவாசகம்.

"புட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட னேர்பட வந்தி லாத
சழக்க னேனுனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையு மாட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே."

நீடார் துளப மணநாறு கச்சியி னீலமொன்றுங்
கோடா விளக்கொடு சேர்நீல மொன்றுங் குலவுபுக
ழேடார் சுனையின் மலர்நீல மொன்றுமற் றெப்பொழுதும்
வாடாமற் காட்டவும் வல்லதன் றோதொண்டை மண்டலமே.()

மேற்கோள்.

நேரிசை வெண்பா.

"நீல மழைமுகிலோ நீலமணிக் குன்றமோ
கோல நிறைந்த குரைகடலோ—சோலையிளங்
காயா வனமோ கமழ்நீரோ கண்ணமங்கை
மாயா வுனதுவடி வம்."

காஞ்சிப்புராதன புராணம்.

"எங்காளு மொருசுனையி லிந்திரநீ லப்போது மலர்ந்தே தோன்றும்".

பூதவஞ் சூத முதலாக நின்ற பொதும்பிற்சந்த
பாதவம் போன்மிக்க வேளாளர் தங்கிய பான்மையினு
லாதவஞ் சூழ்தரு பல்கோடி தேச மனைத்தினுமா
மாதவஞ் செய்ததன் றேதமிழ் சேர்தொண்டை மண்டலமே.

மேற்கோள்.

பஃறொடை வெண்பா.

"வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையுட் டேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்."

இன்னும் புகழ்நிற்க வோர்பழிக் காமற் றெழுபதின்மர்
துன்னுந் தழல்புக் கொளித்ததெல் லாஞ்சுரு திப்பொருளா
யுன்னும் புரிசைத் திருவாலங் காட்டி னுரைபதிக
மன்னுந் தமிழில் வகுத்ததன் றோதொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

திருக்கடைக் காப்பு.

"தூஞ்ச வருவாருந் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரு முனைநட்பாய்
வஞ்சம் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங் காட்டெம் மடிகளே."

கண்ணார் கருணைக் கடற்றொண்டை மான்கைக் கடாசலத்தைத், தண்ணாரு முல்லைக் கொடிதடுத் தாட்கொண்ட தன்மையெல்லாம், பண்ணாருஞ் செஞ்சொற் றிருமுல்லை வாயிற் பதிகஞ்சொல்ல, மண்ணாழி காலமு நிற்பதன் றோதொண்டைமண்டலமே. (கூ)

மேற்கோள்.

திருப்பாட்டு.

"சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட் டருளிய
விறைவனே யென்று
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி லாதனே
நரைவிடை யேறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுபதாபரஞ் சுடரே."

இரட்டைப்புலவர்கள் பாடிய

ஏகாம்பரநாதருலா.

"முல்லைக் கொடிதடுத்த மூதூரும்."

நன்கண்மை யாக வபாவுற்ற நோய்கண்டு நாடரிய
புன்கண்மை நோக்கியுஞ் சற்றுமெண் ணாதொர் புலவனுக்காத்

தன்கண்மை சூலி முதுகினிற் சோறிட்ட தன்மையினல்
வன்கண்மை செய்யவும் வல்லதன் றேதொண்டை மண்டலமே

மேற்கோள்.

இரட்டையாசிரிய விருத்தம்; மடக்கு.

"பன்றிகோடுழுத நந்திவெற்பனிரு
பாரவெற்பினை யடுக்கிலான்
பாணன்வெம்பிண மெடுத்தவன்கொடிய
பாணன்வெம்பிண மெடுக்கிலான்
சென்றுநன்முளை வாரிஞேன்புதிய
திங்கள்வெண்முளை வாரிலான்
செட்டிதன்பழி தவிர்த்தவன்பரிவு
செய்துபெண்பழி தவிர்க்கிலான்
அன்றுசூலிமுது கன்னமிட்டவனெ
னன்னைகூன்முது களிக்கிலான்
அங்கையாடரவின் வாயிலிட்டவனெ
னல்குலாடரவு தீண்டலான்
வென்றிமேவுதொடை யாடைகீறினவ
னேமியாடையது கீறிலான்
வீறுலாவுதமி ழாறைமேவுபர
மேஸ்வரன்புதல்வ னெல்லனே."

வீறு ரிசையு நசையும்வல் லோரிந்த மேன்மைசற்றுந்
தேறுத போதிது செப்புவ ரால்வரைத் திண்புயத்தே
பேறுன பாணன் பிணஞ்சுமந் தேவரும் பெற்றிகொண்டே
மாறுத கீர்த்தி படைத்ததன் றேதொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

"பாணன்வெம்பிண மெடுத்தவன்."

(இதனை மேற்காட்டிய பன்றிகோடுழுத வென்னும் பாடலிற் காண்க.)

கொங்கலர் மாலையுங் கல்லாய் விடுமன்பு கொண்டெறிந்தா
லிங்கல ராய்விடுங் கல்லா னதுமென்ப தின்றறிந்தோஞ்
செங்கலி ஞலெறிந் தேசிவ னர்பதஞ் சேர்வர்சங்க
மங்கையின் மேவிய சாக்கிய னர்தொண்டை மண்டலமே.(கஉ)

மேற்கோள்.

திருத்தொண்டத்தொகை.

"மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்."

புராண சாரம்.

ஆசிரியவிருத்தம்.

"சங்கமங்கை வருவேளாண் டலைவர்காஞ்சிச்
சாக்கியரோ டியைந்தவர்தந் தவறுஞ் சைவத்
துங்கமலி பொருளுமுணர்ந் தந்த வேடந்
துறவாதே சிவலிங்கந் தொழுவோர் கண்டோ
ரங்கமலர் திருமேனி யழுந்தச் சாத்தி
யமருநாண் மறந்தொருநா ளருந்தா தோடிச்
செங்கலெறிந் திடுமளவின் மகிழ்ந்த நாதன்
றிருவருளா லமருலகஞ் சேர்ந்து ளாரே."

தெள்ளத் தெளிந்தவர் செய்தக்க தோர்முறை செய்யிலையா
வெள்ளத் தனைமலை யத்தனை யாமென்ப தின்றறிந்தோ
முள்ளற் கரிய தொடையாடை கீறிய தொன்றுமொரு
வள்ளற் றகைமையொ டொத்துள தாற்றொண்டை மண்டலமே

மேற்கோள்.

"வென்றிமேவுதொடை யாடைகீறினவன்."

(இதனையும் மேற்காட்டிய பன்றிகோடுழுத வென்னும் பாடலிற் காண்க.)

தாயினு நல்ல தயையுடை யோர்க டமதுடலம்
வீயினுஞ் செய்கை விடுவர்கொல் லோதங்கண் மெய்ம்முழுதுந்
தீயினும் வீழ்வர் முதுகினுஞ் சோறிட்டுச் சீறரவின்
வாயினுங் கையிடு வாரவர் காண்டொண்டை மண்டலமே.(கச)

மேற்கோள்.

விருத்தம்.

"துளையிட்ட முள்ளெயிற் றரவின்வாய் மூழையிற்
றுறுத்திட்டவநசத் திறைல்."

கொச்சகக்கலிப்பா.

"மாறே செயுமரவின் வாய்தீண்ட வும்பயந்து
பேறே மணியுதவப் பெற்றகுல மென்னுமை
லூறே பாத்தையர்க ளூன்வாயில் வைத்தகுறி
யாறேன் களந்தை யழகப் பெருமாளே."

மீனவர் நாட்டினுஞ் செம்பியர் நாட்டினும் வில்லவர்கோ
னனவ னாட்டினு மிக்கதென் பார்க ளதிசயமோ
கோனவ னாட்டிம் முளையமு தாகிற் குலவமுதார்
வானவர் நாட்டினு மிக்கதன் றோதொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

புராணசாரம்.

ஆசிரியவிருத்தம்.

"மன்னியவே ளாண்டொன்மை யிளாசை மாறர்
வறுமையா லுணவுமிக மறந்துழை யகி
யுன்னருகள் விருந்தமழையி லுண்டி வேண்டி
யும்பர்பிரா னணையவய லுழுது வித்துஞ்

செந்நெல்முளை யமுதுமனை யலகா லாக்கிச்
சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து
பன்னலரு முணவருந்தற் கெழுந்த சோதிப்
பரலோக முழுதாண்ட பான்மை யாரே."

சாய்த்திட் டவர்க்குத் திருமேனி முன்கையைச் சந்தனமாத்
தேய்த்திட் டவர்க்கெவர் நேரென்ப ராலங்கஞ் செந்தழலிற்
றோய்த்திட் டவருக்குச் சர்வாங்க முந்திரி தூள்படவே
மாய்த்திட் டவர்க்கரி தோவெளி தோதொண்டை மண்டலமே.

மேற்கோள்.

சேக்கிழார் புராணம்.

ஆசிரியவிருத்தம்.

"மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரு மூழ்கிக் கங்கை
யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப
ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிறித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ."

கேட்டாலு மின்பங் கிடைக்குங்கண் டீர்கொண்ட கீர்த்தியொடு, பாட்டா லுயர்ந்த புகழேந்தி சொன்ன படியறிந்து, பூட்டார் சிலைமன்னன் வையம் பெறினும்பொய் தானுரைக்க, மாட்டா ரெனச்சொன்ன நாட்டார் திகழ்தொண்டை மண்டலமே. (கஎ)

மேற்கோள்.

ஆசிரியவிருத்தம்.

"வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார்
தொண்டை நாட்டாரென்
றையன் களந்தைப் புகழேந்தி யாண்டா
ருரைக்கு மவரோநீ
ரெய்யுஞ் சிலைக்கை மதவேளே யெழுபார்
புரக்கு மெங்கோவே
யையந் தவிர்த்த பெருமானே யாவோ
மடியோ மாவோமே."

கையா றிரண்டுடைக் காளைதன் வாயிற் கவிதைகொண்ட
பொய்யா மொழிக்கும் புகலிட மானது பொய்கையெல்லாஞ்
செய்யார் கமல மலரவண் டானங்கள் சென்றுதிகழ்
மையார் குவளை வயல்புடை சூழ்தொண்டை மண்டலமே (கஅ)

மேற்கோள்.

நேரிசைவெண்பா.

"விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழ்ந்தா
லெழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பொய்யாத கானகத்தே பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிபகைஞர் போல்."

விண்ணிற் பிறக்கும் புகழ்க்குன்ற நாடன் விளங்குதமிழ்ப்
பண்ணிற் பிறக்கும் பெரிய புராணம் பகர்ந்தபிரா
னெண்ணிற் பிறக்கும் பதுதுளி யென்றலை பெய்தவந்த [லமே.
மண்ணிற் பிறக்கவும் வைக்குங்கொ லோதொண்டை மண்ட

மேற்கோள்.

சேக்கிழார் புராணம்.

ஆசிரியவிருத்தம்.

"சேக்கிழானமது தொண்டர்சீர்பரவ நாமகிழ்ந்துலக மென்றுநம்
வாக்கினலடி யெடுத்துரைத்திட வரைந்துநூல்செய்து முடித்தனன்
காக்கும்வேல்வளவ நீயிதைக்கடிது கேளெனக்கனக வெளியிலே
யூக்கமான திரு வாக்கெழுந்தது திருச்சிலம்பொலியு முடனெழ."

நேரிசைவெண்பா.

"கோண்டறவழ் தண்டலைசூழ் குன்றநகர்ச் சேக்கிழா
ரொண்டாணி யோருய்ய வோதினர்—தண்டலில்சீ
ரேன்றபுகழ் நாலா யிரத்திருநூற் றெண்பத்து
மூன்று திருவிருத்த மும்."

தேமாம் பொழினிகழ் சம்பந்தர் வாழுஞ் சிரபுரம்போற்
றுமா தவஞ்செய்த தெத்தனை யோதென் றமிழியல்சேர்
பாமாலை சூட மதுராகல் வாயிற் பதியுடனே
மாமா சிலாமணிச் சம்பந்தன் வாழ்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

"போருமா கடலிடைத் தோன்றலல் லாது புணரிவெள்ளந்
தருமா மணியொன்று கண்டதண் டோவையந் தந்தவனுந்
திருமாலும் போற்றுந்தென் னூரிற் சம்பந்த தேசிகனு
மொருமாசி லாமணி பேரின்ப வாரி யுதவியதே."

பொய்யக மாகிய மாயாப் பிரபஞ்சம் போக்குதற்குக்
கையக நெல்லிக் கனியதன் றேகச்சி யேபெரிதாய்
மெய்யக மேபுரி காரிகைப் பாட்டில் விளங்கவைத்த
வையக மென்னுந் தமிழே புனைதொண்டை மண்டலமே.(உக)

மேற்கோள்.

"வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையுட் டேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு.
(இப்பாடலை யேழாவது பாட்டின் மேற்கோளிற் காண்க.)

அஞ்சொன் முதுதமிழ் நால்வேந்தர் வைகு மவையி லௌவை
செஞ்சொற் புனைகின்ற வேளாளர் வைகுஞ் சிறப்புடைத்தால்
விஞ்சிய வேழ முடைத்தென்னும் பாடல் விளம்பிப்பின்னும்
வஞ்சி வெளிய வெனும்பா மொழிதொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

நேரிசை வெண்பா.

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
றென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து."

இன்னிசை வெண்பா.

"வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்ற
ன்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறைந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியிற் காக்கை கரிது."

படவேங் கடற்கட லன்னதொல் காப்பியப் பாயிரஞ்சொல்
விடவேங் கடவின்றி யேபனம் பாரமற் றெல்லைசொல்லக்
கடவேங் கடலன்ன செந்தமிழ்க் கேயென்று காட்டுதற்கு
வடவேங் கடந்தென் குமரியென் றூர்தொண்டை மண்டலமே.

மேற்கோள்.

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம்.

"வடவேங் கடந்தென் குமரி யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவ
னிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவி ஞன்மறை முற்றிய
வதங்கோட் டாசாற் கரிறபத் தெரித்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திற நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே."

இடஞ்சூழுங் காரிகை யாப்பிற் குதாரண மென்றுகொண்டு
விடஞ்சூ ழரவென் றெழுவாயிற் றோற்றி வெறிகமழ்வேங்
கடஞ்சூழ் காடக் கடாக்களிற் றுனியற் காளிம்பன்மேல் [மே.
வடஞ்சூ ழெனச்சொன்ன பாமாலை யுந்தொண்டை மண்டல

மேற்கோள்.

ஆசிரியவிருத்தம்.

"விடஞ்சூ ழரவி னிடைநுடங்க விலவாய் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிம்பன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சூழ் கொங்கை மலைதாந்தாம் வடிக்க ணீல மலர்தாந்தாங் [யே."
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தாமென்னுந் தன்கைத் தண்ணுமை

படையிற் கொடையிற் பெரியோனை யக்கணம் பாடக்கம்பற்
கடையக் கொடுத்திட வாங்கின னூலரு மந்த முத்தைக்
கடையிற் கடைசிப ருப்பிற்கு மாறக் களகவென
மடையிற் றரளஞ் சொரிவயல சூழ்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

வெண்பா.

"புக்க விடைநழுவிக் கொடுமுத புண்கவெல்லாந்
திக்கிலுயர் காளிம்பன் றென்புழன்மா—னக்கணமே
தோள்வேது கொண்டிலனேற் சுந்தரப்பொற் றோன்றலுக்கு
வாழ்வேது கண்டிலேன் மற்று."

கிளப்பார் கிளப்ப வடிமடக் காகக் கெழுமியசொல்
லளப்பா மதுரத் துடன்பூக் கமலமென் றுப்ந்தெடுத்த
களப்பாள னெற்குன்ற வாணனந் தாதிக் கலித்துறையே
வளப்பார் புகழை வளர்ப்பிக்கு மாற்றொண்டை மண்டலமே.()

மேற்கோள்.

திருப்புகலூரந்தாதி.

கட்டளைக்கலித்துறை.

"பூக்கம லத்து விழிவளர் வானென்றும் போற்றியலூர்
மாக்கம லத்து மகிழ்கின்ற வூர்மது வானிறைந்த
தேக்கம லத்து வழியே பரக்குந் திருப்புகலூர்
நோக்கம லத்துயர் சோதிநெஞ் சேநம்மை நோக்குதற்கே."

"வளப்பா டிலாத வெருக்கு மிதழி மலருமன்ப
ருளப்பா டுறைபுக லூரருக் காதலி னேதிமிக்கோர்
தளப்பா டிதுதமிழ்க் கென்னினுஞ் சாற்றுவன் சந்திரன்சொற்
களப்பாள னெற்குன்றை வாணனந் தாதிக் கலித்துறையே."

போனத்தி ஞலொர் புறவினை யேற்றவன் போலவுமோ
ரேனத்தி ஞலெதி ரேற்றவன் போலவு மேன்றுகொண்ட
மீனத்தி ஞன்மற் றொருகோடி செம்பொன் விலைகொடுத்
மானத்தி ஞலும் வலியதன் றேதொண்டை மண்டலமே

கூட்டுங் காந்தங் கொழுநர்க்கல் லாமற் கொடிவெருவ
வோட்டும் பொழுதுங் காங்குவி யாமு தூட்டுதற்கு
மூட்டுந் தழற்கொரு முன்றினில் லார்கற்பு மூட்டியெரி
மாட்டுந் திறமனை தோறுமுண் டேதொண்டை மண்டலமே

பின்போர் தமைக்கண்டு பாவித்த தோவன்றிப் பின்புவ
தன்போ னடக்கப் பணிப்பித்த தோதமிழ்க் கேயிர
முன்போம் புலவற்குப் பின்போயி ஞனு முகுந்தனி
வன்போ மனத்தினி லன்போசொல் வீர்தொண்டை ம

மேற்கோள்.

நேரிசைவெண்பா.

"கணிகண்ணன் செல்கின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனுஞ் செல்கின்றே னீயுநின்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்."

இதுவுமது.

"முன்போம் புலவற்கு மூதறிவாற் பாய்சுருட் டிப்
பின்போஞ் சவரிப் பெருமாளே—யன்பாகப்
பேய்முலைப்பா லுண்டவனே பேதையே னின்னமொரு
தாய்முலைப்பா லுண்ணமற் று."

சென்னியிற் சென்ற துகிலோடு சென்று சிலரிழிந்தார்
பன்னியிற் சென்றது போலிழிந் தார்சிலர் பாங்குடனே

சென்று கரையேறி னூரைப் புணர்ந்ததன்று
செ... று கரையேறி னூர்தொண்டை மண்டலமே.()

ாறை நந்தி
...போய்த்தலை நீட்டும் புலவன்முன்னூல்
...லம்பக மேகொண்டு காயம்விட்ட
...யனுந்தொண்டை மான்கலி தீர்ப்பதற்கு
...மதிர்த்தாண் டதுந்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

விருத்தம்.

துயிலுணந்து வெட்டுமெங்கள் தொண்டை வேந்தே

நந்திக்கலம்பகம்.

ஆசிரியவிருத்தம்.

"வானுறு மதியை யடைந்ததுன் வதனங்
வையக மடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை யடைந்ததுன் வீரங்
கற்பக மடைந்ததுன் கரங்க
டேனுறு மலரா ளரியிடஞ் சேந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானுமென் கலியு மெவ்விடம் புகுவே
மெந்தையே நந்திநா யகனே."

நீளத் திரிந்தென்று வெண்பாவி ...
காளத்தி வாணனைப் பாடிய பா...
கோளத்தி னுஞ்சென்று பா...
வாளத்தி னுஞ்சென்ற தா...

ர்பழய

ததி

...னெங்கே. (௩௬)

மேற்கோள்.

நேரிசைவெண்பா.

"நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நி...
நாளைக் கிருத்தியோ நல்குரவே—
நின்றைக்கே சென்றக்கா ணீயெங்கே ...
யென்றைக்குக் காண்பே னினி."

பாகொன்று சொல்லியைப் பார்த்தமையாலன்... றுபாண்டி
ஞ்ஞகின்ற சிற்றிடை வேழம்பக் கூத்தி நொடிவ... யிற்
சா...ன்ற போது தமிழ்சே ரயன்றைச் சடையன்றன்... மே
...னச்சொன்ன பாமாலை யுந்தொண்டை மண்... வறுபட
...சொல்
லமே.

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

"...யபொற் றோளான் வழுதிமன் வான்கரும்பின்
சொல்லியைப் பார்த்தெனைப் பார்க்கிலன் பையப்பை...
...புள்ளினங் காள்புழற் கோட்டம் புகுதுவிரேற்
...னளென்று சொல்வீ ரயன்றைச் சடையனுக்கே."

ஆசிரியப்பா.

...வ லாளரே பெருந்திரு வுறுக
...ணியு மலைகட ல்மிர்துங்
...ஞ் சிங்கப் பாலுங்
...ரை வாலு
...லெனை மொழியான்
...வனை நீர்போ
...ளாரே."

லைபி லாகச் சொரிகவி மாரி சுருதிவல்லான்
யில் சோலைக் குறுங்குடி வாழ்நம்பி சென்றுகண்ட
ஙயி னீடுங் காடக் கடாக்களி றென்றுசொன்ன
பிற் காளத்தி வாழ்வா னதுந்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

"பாரடக் கயம்பிடி யென்றான் மதனனிப் பூவையுமா
ரடக் கமுஞ்சற் றறிந்தில ளேதனைத் தாள்பணியா
ராடக் கவுடக் கெடிமண்ட லீ+ர் முடிபிடுங்குங்
ரடக் கடாக்களிற் றுய்வல்லை மாநகர்க் காளத்தியே."

ர் கலைவல்ல செம்பியன் கேட்க நொடித்துமிக்க
கலனெட்டக் கூத்தனை யன்றுதற் கோலியென்று [ட
ர்,கவி சொல்லி நெய்த்தானத் தேசென்று வென்றுகொண்
களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

ஆசிரியவிருத்தம்.

"நற்கோ விப்பூ சற்பா சத்தே தப்பா மற்சா கைக்கே நிற்பீ
முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே முட்டா மற்சே வித்தே
வற்றா நெட்டோ டைப்பா ரச்சேன் மைப்பூ கத்தே றித்
நெற்றா ளூற்றா லைப்பா கிற்சேர் நெய்த்தா னத்தா னைச்

இதுவுமது.

"விக்கா வுக்கா வித்தா விப்போய் விட்டார் கட்டார் சுட்
ரிக்கா யத்தா சைப்பா டுற்றே யிற்றே டிப்போய் வைப்ப
ரக்கா டப்பேய் தொக்கா டச்சூ ழப்பா டத்தீ வெப்பா டப்
ணெக்கா டக்கா னத்தா டப்போ நெய்த்தா னத்தா னைத்தி

ஏரி னியற்றுங் களக்கோட்டை யீந்தன்ன மிட்டுநல்ல
பாரி பறித்தென்னும் பாடல்கொண் டோன்பண்பு சே
னூரி லிருப்பவ னௌவைதன் பாடற் குவந்தபிரான்
மாரி யெனத்தரு கைக்காரி யுந்தொண்டை மண்டலமே

மேற்கோள்.

வெண்பா.

"பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களக்கோடுஞ் — சேரமான்
வாரா யெனவழைத்த வாய்மையுமிம் மூன்று
நீலிச்சிற் றூடைக்கு நேர்."

விழுவே னெனச்சென்று வீழ்ந்தாரி லோர்மைந்தன் வே
வுழுவேலி யிற்சென் றொருநீலி முன்கை யுடையவற்கு
கொழுவே படைக்கல மென்றுசொல் லாமுனங் கூறிய
வழுவே யெனப்பொன் றுவல்லாள னுந்தொண்டைமண்ட

மேற்கோள்.

பழமொழி.

"ன்கையுடையார்க்குக்கொழுவேபடைக்கலம்."

றுப்பிடை வீழ்த்தவும் பாடிமுன் வீழ்த்ததற்பி
ப்பிணை யாறவும் பாடி யடியவரைச்
வத் திருஞான சம்பந்தர் செய்ததமிழ்
றச் படைத்ததென் பார்தொண்டை மண்டலமே.(
தாயிரம் பாடல்கொண் டேநிரை யீந்தெருமைப்
ரித் தாடையும் பூணா முந்தந்து போதாவாய்க்

காத்தளித் தாதரித் திட்டதல் லாமலுங் கம்பருக்கு
மாத்தளித் தாட்பட்டு வாழ்வதன் றேதொண்டை மண்டலமே.

புறவோ டெற்றசை போக்கிய வேந்தன் புரிந்ததிலு
மறவோ கொடிது கொடிதுகண் டீறன் றுமற்றுப்
பிறவோ மறுத்துரை செய்யான் மிகச்சிரம் பேர்த்துவைத்த
மறவோனைத் தாங்கிய வையமன் றேதொண்டை மண்டலமே.

மேற்கோள்.

"தலையிந் தாவெனு மைந்தா தாலோ தாலேலோ
தண்குன்றைப்பதி யெல்லா தாலோ தாலேலோ."

வெண்பா.

"ஆலெங்கே யங்கே யரும்பறவை யாற்றயிலு
மாலெங்கே யங்கே மலர்மடைந்தை—சோலைதொறுஞ்
செங்கே தகைமணக்குஞ் செங்குன்றை யெல்லனெங்கே
யங்கே யிரவலரெல் லாம்."

வள்ளல் சிலைப்பெரு மாணச்சர் சாத்தர் வழுதிமுதற்
றள்ளுநவ ளர்க்குந் தலைபான பேரையுந் தன்னுரையை
விள்ளுநவ ளர்க்குந் திருக்காஞ்சி வாழ்பரிமேலழகன்
வள்ளுநவ ளர்க்கு வழிகாட்டி. னன்றேதொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

வெண்பா.

"தருமர் மணக்குடையர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர்பருதி—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்க ர்வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்."

இதுவுமது.

"பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகர்
தெரித்த வுரை யாமோ தெளி."

கண்ணிலென் னெஞ்சத் தழுக்கறுத் தேகடை யென்றனையுந்
தண்ணருங் கூலிக் கடிமைகொண் டேதடுத் தாண்டருளி [வ
எண்ணருங் காஞ்சித் திருக்குறிப் புத்தொண்ட ரென்னுந்தெய்
வண்ணார் வடிவு கொடுபோந் ததுந்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

திருத்தொண்டத்தொகை.

"திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்."

புராண சாரம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

"கோந்தலர்பூம் பொழிற்கச்சி நகரேகாலிக்
குலந்தலைவர் தவர்குறிப்புக் குறித்து ளார்பால்
வந்திறைவர் நமக்கின்று தாரீ ராகில்
வருந்துமுட லெனவாங்கி மாசு நீத்த
கந்தைபுல ராதொழிய மழையு மாலைக்
கடும்பொழுது வாக்கண்டு கலங்கிக் கன்மேற்
சிந்தைமுடி புடைப்பளவிற் றிருவே கம்பர்
திருக்கைகொடு பிடித்துயர்வான் சேர்த்தி னாரே."

சயிலைத் திருமுலைப் பாலுறப் பட்டுண்ட தண்டமிழாற்
குயிலைப் பணிகொண்டு வெந்தற ருண்ட குடத்திலென்னை

யயிலைப் பொருகண் ணதிரூப மென்கிளி யாக்குவித்த
மயிலைப் பதியுஞ் சிவனேச ருக்தொண்டை மண்டலமே. (உ௩)

மேற்கோள்.

பெரிய புராணம்.

கலிநிலைத்துறை.

"தம்மை யுள்ளவா றறிந்தபின் சங்கரற் கடிமை
மெய்ம்மை யேசெயும் விருப்பினின் மிக்கதோ ரன்பாற்
பொய்ம்மை நீக்கிமெய்ப் பொருளிது வெனக்கொளு முள்ளச்
செம்மை யேபுரி மனத்தினர் சிவநேச ரென்பார்."

திருக்கடைக்காப்பு.

"மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சுரமமர்ந்தா
னொட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்."

பிணிக்கோர் மருந்தனை யார்வாயி லாரன்று பிஞ்ஞகனார்
பணிக்கோர் குறைவின்றி யந்தரி யாகத்திற் பண்ணுவித்த
வணிக்கோ யிலும்பொற் சிகரமும் வீதியு மாடரங்கு
மணிக்கோ புரமு முடையதென் பார்தொண்டை மண்டலமே.

மேற்கோள்.

திருத்தொண்டத் தொகை.

"துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்."

புராணசாரம்.

ஆசிரியவிருத்தம்.

"ஞாயிலார் மதிற்றொண்டை நாட்டு மேன்மை
நண்ணுமயி லாபுரியின் வேளாண் டொன்மை
வாயிலார் மலைவில்லா னடியே போற்றி
மறவாமை தலைநின்ற மனமே செம்பொற்
சோயிலா வுயர்ஞானம் விளக்கா நீராக்
குலவியவா னந்தமன்பே யமுதாக் கொண்டு
தாயிலா னிருசரண நிகழ வேய்த்துந்
தன்மையா ரருள்சேர்ந்த நன்மை யாரே."

பேணிய செந்தமிழ்த் தாதனுக் கேயன்பு பெற்றமையா
ணிய கம்பன் சிவிகையுந் தாங்கி நயந்ததமிழ்
பூணிய நின்றதும் பொச்சாப்பி லாது புகுந்துபின்னும்
வாணியத் தாதற்குத் தாதா னதுந்தொண்டை மண்டலமே.()

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

"ஓங்கிய செந்தமிழ்த் தாதற் கடிமையவ் வூரதனு
ணுங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப னுடன்சொல்ல
வாங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடைப்பையிட்டுந்
தாங்கவி கொண்டதுங் கூவந்தி யாக சமுத்திரமே."

பட்டா பிடேகம் புரிந்தார்க்குண் டோவிந்தப் பான்மைகெடக்
கெட்டார் கவிசொல்லி வந்தோர்க்கெல் லாம்பொற் கிழியளித்
தட்டா னுதவிடுங் கூவந்தி யாக சமுத்திரத்தின் [துந்
மட்டார் கவிகொண்டமண்டலங் காண்டொண்டைமண்டலமே.

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

*"மட்டாருஞ் செங்கழு நீர்மணி மார்பனை வாழ்த்துமந்தக்
கிட்டாத யாசகர் கிட்டிவந் தாலதைக் கேட்டுமுன்னாட்
பட்டோலை வாசித் தவரவர்க் குள்ள பரிசிலெல்லாந்
தட்டா னளிப்பதுங் கூவந்தி யாக சமுத்திரமே."*

தன்னா லிசைபெறக் கூவந்தி யாக சமுத்திரமென்
றன்னா னொருவ னெடுந்தூண்டி லிட்டிட வாங்கொருமீன்
பொன்னா லமைத்துப் பொருந்திடச் சேர்த்துப் புகழ்கொண்ட
மன்னா வுலகத்து மன்னிய சீர்த்தொண்டை மண்டலமே. [தான்

மேற்கோள்.

வெண்பா.

*"இடுவார் சிலரு மிடாதார் பலரும்
வடிவிலா ரவயத் திருக்கப்—படுபாவி
கூவத்து நாரணனைக் கொன்றாயே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கரிக்கு."*

ஈட்டால மன்னவன் பின்னை யறிய வெனக்கெனமுன்
கேட்டா னதற்குமுன் சென்றதவ் வாருயிர் கேட்டவர்க்கு
நீட்டா விடினுந் தனக்கெனக் கேட்பினு நெஞ்சமுய்ய
மாட்டா திரண்டுமுன் கற்றில தோதொண்டை மண்டலமே. ()

உளத்துத் தயைபற்ற வோர்புல வோனுக் குடையுதவிக்
குளத்துப் புனலை யுடுத்தாநின் றேபின்பு கூவியவைக்
களத்துப் புகுதக் கலையுடுத் தேகரை யேறிவந்த
வளத்துப் புகழ்பெற்ற வல்லாள னுந்தொண்டை மண்டலமே.

வில்லைச் செருப்பிட்ட காலா லுதைத்து வியனுலகிற்
சொல்லற் கரிய புகழ்கொடுத் தோன்றுட்ட வீரன்றன்னூற்
பல்லக்கி லேயன்றி மண்படு மோவெனும் பாடல்கொண்ட
வல்லப் பதிகச்சி யப்பனும் வாழ்தொண்டை மண்டலமே.(௫0)

மேற்கோள்.

வெண்பா.

"மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ வன்பாகக் கற்றவர்க்கு—மண்புகழ
மெச்சியப்பா லும்புகழும் வீறுவல்லை யாளவந்த
கச்சியப்ப னையுதைத்த கால்."

மீண்டாரை வெல்லும் வளர்சிங்க ராயன் விலைகொடுப்பத்
தண்டமிழ் மேக முறத்தூரில் வேதியன் றானும்விற்பக்
கொண்டவன் பின்சென்று மண்டலத் தேபுகழ் கொண்டபிரான்
வண்டமிழ்க் கும்ப னனதாரி யுந்தொண்டை மண்டலமே.(௫க)

மேற்கோள்.

வெண்பா.

"கம்பனென்றுங் கும்பனென்றுங் காளியொட்டக் கூத்தனென்றுங்
கும்பமுனி யென்றும்பேர் கொள்வரே—யம்புவியின்
மன்னு வலர்புகழும் வாயிலனை தாரியப்ப
னந்நாளி லேயிருந்தக் கால்."

கொல்லையிற் பாற்பசு மேய்ப்போன் கறப்பவன் கொண்டுசென்
றெல்லையிற் சேர்ப்பவன் பாலடு வோனிவை யித்தனையுஞ் [றே
சொல்லையிற் பாவல னோரோர் கவிசொல்லச் சொல்லநல்கும்
வல்லையிற் றாளத்தி வாழ்வா னதுந்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

வெண்பா.

"பள்ளமே செய்புட் பயிரையெல்லாங் கொள்ளுமுடி
வெள்ளமே யும்மையுநாம் வென்றோமே—புள்ளலம்பும்
பொற்காவி வாவிவல்லைப் பூபதிகா ளத்தியெனு
நற்கார் நெடுமுடியை நட்டு."

கட்டளைக்கலித்துறை.

"பெற்றா ளொருபிள்ளை யென்மனை யாட்டியப் பிள்ளைக்குப்பால்
பற்றாது கஞ்சி குடிக்குந் தாமன்று பாலிரக்கச்
சிற்றாளு மில்லைமற் றெல்லா வறுமையுந் தீரவொரு
கற்றா தரவல்லை யோவல்லை மாநகர்க் காளத்தியே."

இதுவுமது.

"வழிமேல் விழிவைத்து வாடாம லென்மனை யாளைமற்றோர்
பழியாமற் பிள்ளையும் பாலென் றழாமற் பகைஞருஞ்சொன்
மொழியாம லென்னை வரவிட்ட பாவி முசித்துச்சதை
கழியாம லஃவளித் தான்வல்ல மாநகர்க் காளத்தியே."

சீருறும் பாடல்பன் னீரா யிரமுஞ் செழுந்தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனார்
பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீ சிடுந்தொண்டை மண்டலமே (௩௫)

மேற்கோள்.

வெண்பா.

"கூடல்கிழிய வோடுங் கலம்போல வொன்றை
யூடல்கிழிய வொன்கூள்வி திர்த்து—மடல்கிழியும்

பைம்பொற்றூர் மன்னர் படைநடுவே யோடிற்றே
செம்பொற்றண் டேந்தினன் றேர்"

சொல்லாயு மௌவை பரிவாய்த் தனக்கிட்ட சோறுலக
மெல்லாம் பெறுமென்று பாட்டோதப் பெற்றவளின்னருளாற்
கல்லாரற் சுற்றிக் கிணறேறிப் பாயுங் கழனிபெற்றான்
வல்லாண்மை பூத மகிபால னுந்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

வெண்பா.

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டு
முரமுரலு றும்புளித்த மோரும்—விரகுடனே
புள்ளலூர்ப் பூதன் புகழ்ந்து விருந்திட்டா
னெல்லா வுலகும் பெறும்."

ஆரான் முடியுமிக் காரியந் தோடவி ழாத்திமலர்த்
தாரானை வேம்பின் றொடையானைப் பெண்ணையந் தாமனையும்
போராடிக் காவலில் வைத்தவப் பாட்டும் புனைந்ததன்றோ[மே.
வாராரு மோட்டிளங் கொங்கைநல் லாய்தொண்டை மண்டல

குழுவார் குடிமக்க ளானகண் ணாளர் குறும்படக்கி
யெழுவா யமைந்த மனுநீதி யாற்பதி னெண்மரபு
முழுவா னரித்துக் கிடந்து விடாம லுலகுக்கெல்லாம்
வழுவா தமைக்கவும் வல்லது தொண்டை மண்டலமே. (ருக)

அழுவதுங் கொண்டு புலம்பாது நஞ்சுண் டதுமறைத்தே
தெழுவதுங் கொண்டு புகழ்க்கம்ப நாட னெழுப்பவிசை [ன்
முழுவதுங் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக்கையி
னழுவதுங்கொண்டு புகழ்கொண்டதாற்றொண்டை மண்டலமே.

மேற்கோள்.

வெண்பா.

"ஆழியான் பள்ளியணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—யூழியான்
பூணையப் பூணுன் புரமெரித்த பொற்சிலையி
ஞணை யகல நட."

நேயத் துடன்பிறந் தோன்பிண மூடி நெருப்பவித்துத்
தாயெனப் பெணவெதிர் கொண்டழைத் தேதன் னுடனெனவே
யாயத் தமிழ்கொண் டருங்கவி ராயனுக் கன்புசெய்த
வாயற் பதியில் வடுகனும் வாழ்தொண்டை மண்டலமே. (௫அ)

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

"தன்னுடன் கூடப் பிறந்த சகோதரத் தம்பியுயி
ரந்நிலை மாண்டது தோன்றுமன் மூடிவைத் தன்னமிட்டான்
மன்னவர் போற்றிட வாழ்செங் கலங்கை வடுகனுக்குக்
கன்னனுஞ் சோமனு மோவிணை யாகக் கழறுவதே."

நெடுக விரித்துப் பிணமூடி னேன்மக னீயெனில்வா
கடுக வெனக்குமுன் முந்தவென் றேயோர் கவிதைசொல்ல
முடுக வழைப்ப மனையாள் பிணந்தனை மூடிச்சென்ற
வடுக னளித்த மகன்வாய லான்றொண்டை மண்டலமே. (௫௯)

மேற்கோள்.

வெண்பா.

"முந்தவிளை யோன்மாள முத்தமிழோற் கன்னமிட்ட
வந்த வடுகன் மகனுபின்—வந்தென்

றலைக்கலியா ணத்துக்கே தான்பிணத்தை மூடி
யிலக்கணமாச் செய்குறையுநீ யே."

பயிரைப் பெரும்பன்றி தின்றதற் காகப் பரிசனத்தோ
ருயிரைப் பருகி யுடல்வர்க் கீய வொருபுலவோன்
செயிரப் புடைத்ததுந் தானே பொறுத்தந்தச் செய்புதவும்
வயிரப்ப னென்பவன் வாழ்வா னதுந்தொண்டை மண்டலமே.

ஈரக் கருக்கரி வாள்கொண்டு போகையி லின்புலவோ
னேரொக்க வேநின்று வண்டோ லிடுமென நின்றுதனஞ்[லாம்
சேரக் கெடுப்பவொன் றில்லாமன் மன்னவன் செம்பொன்னெல்
வாரிக் கொடுக்கத் துணியவல் லான்றொண்டை மண்டலமே.()

மேற்கோள்.

வெண்பா.

"வண்டோ லிங்தொண்டை மண்டலத்தா னேதியாக
முண்டோ விலையோ வுரை"

பண்டை நிகண்டு திவாகரம் பிங்கலம் பன்னுரிச்சொ
லெண்டிசையின்சொல் வடமொழி செய்யுளெல் லாமுணர்ந்தே
தண்டமிழ் கொண்டு நிகண்டுசூ ளாமணி தானுரைத்த
மண்டல வன்குடி கொண்டது நீடொண்டை மண்டலமே. ()

காரார் களந்தைப் புகழேந்தி சொன்ன கலம்பகத்தி
னோரான றையும் படியென்ற பாடலை நேரியர்கோன்
சீராகச் செப்பிய நற்பாடல் கொண்டவன் செஞ்சியர்கோன்
மாராபி ராமனவ் கொற்றந்தை யூர்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

விருத்தம்.

"நையும் படியே நாங்கொற்ற நங்கோன் செஞ்சி வரைமீதே
பையம் பெறுநுண் ணிடைமடவா யகிலின் றூபமுகிலன்று
பெய்யுந் துளியோ மழையன்று பிரசத் துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்புரைக்க மாட்டார்தொண்டை நாட்டாரே."

தாறற்ற செந்தமி ழொப்பாரி யென்னுந் தமிழ்புனைந்தோன்
சேறைப் பதிசந்த்ர சேகர வாணன்முன் சென்றவந்நாள்
வீறுற் றனரென்று வேளாள ரைமன் விலங்கிலிட
மாறற் குவந்து முடிசூட்டி னன்றொண்டை மண்டலமே. (கூச)

மேற்கோள்.

கட்டளைக் கலித்துறை.

"ஒப்பாரி யாய்நின் மகவைத் தெருவி லொருத்திகண்டே
யப்பா வெனவெடுத் தாளணைத் தாளன்னை தானுமென்று
டப்பாதன் மைந்தனென் றுனங்க னேதலை சாய்த்து நின்றாள்
செப்பா யவளெவள் காண்சேறை வாழ்சந்த்ர சேகரனே."

தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்த
னன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி நற்பதியுஞ்
சின்னூ லுரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியு
மன்னூ புரத்திரு வன்னமின் னேதொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

அகவற்பா.

"மலர்தலை யுலகின் மல்கிரு ளகல; பவணந்தி—
யென்னு நாமத் திருந்தவத் தோனே."

வெண்பா.

"பண்பார் கவிஞர் வியந்தெடுத்த பாட்டியலை
வெண்பாவந் தாதி விளம்பினான்—மண்பரவும்
கோடாத சீர்த்திக் குணவீர பண்டிதனும்
பீடார் களந்தைப் பிரான்."

ஊரார் மலிபுலி யூர்க்கோட்ட நற்குன்றத் தூரிலுள்ள
தீரார் வளமலி பாக்கிழ வோன்புகழ்ச் சேக்கிழவோன்
காராளன் கூடற் கிழவோன் முதுமொழிக் காஞ்சிசொற்ற
வாரார் புரிசைக் கிழவோனும் வாழ்தொண்டை மண்டலமே. ()

நீண்டார் வணங்குந் திருவாலங் காடற்கு நெல்லமுதே
வேண்டா வெனக்கிந்தக் கூழே யமைகென்று வேண்டியகூ
ழூண்டா ரொருவ ரறுபத்து மூவரி லன்புவைத்து
மாண்டா ரவர்க்கு வளநாடு நீடொண்டை மண்டலமே. (கூஎ)

நன்றாய் விளைந்ததை வேதியற் கீந்தந்த நன்மையினாற்
பொன்றான் விளைந்திட நெற்போல வேயதைப் போரடித்துக்
குன்றாக் குவித்ததை நெற்பரி மாற்றங் கொடுத்தளித்தான்
மன்றார் களந்தைக் குடிதாங்கி யுந்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

வெண்பா.

"பொன்னெல்லை யெல்லாம் பொதிப்பொதியாப் பூசுரற்குச்
செந்நெல்லே போலச் சிறந்தளித்தான்—பன்னகத்தின்
சீரார் மணியைவிலை செய்பானுஞ் செய்யகளத்
தூரானுஞ் செய்கரும மொன்று."

வெங்கோலைக் கஞ்சி யடைக்கலந் தான்புக வேந்தன்மைந்த
னுங்கலை யாம லொளித்துவைத் தேதன் னொருமகவை
யிங்கிவன் றானவ னென்றே யடையலர்க் கீந்துவிட்டான்
மங்கலஞ் சேர்கிடங் கிற்பெரு மான்றொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

விருத்தம்.

"வந்தவுயிர் தனையளித்தான் கிடங்கில் வேந்தன்
வயலுழா னறமடங்கா தெனவு ரைத்தான்
செந்தமிழோர் கிளைவளர்த்தான் வேலூர் மன்னன்
செம்பியன்முன் வயிறிடந்தான் பேரையூரா
னந்தமுள நாணளித்தான் வீடூ ராதி
யடையாத வாசலா னிடையா லத்தா
னந்தனுட னமுதுண்டான் பேரா வூரா
னடைப்பரியா யிரங்கொடுத்தா னுறை யர்னே."

எண்ணான் கறந்தொண்டை மண்டலத் தார்க்கன்றி யில்லையெ
தண்ணார் வயலுழன் றன்சொல வேந்தன் றலைதடிந்த [னத்
தெண்ணுமன் மன்னனு மப்படி யேசொல விப்படியின்
மண்ணாளும்வேந்தன் வரிசைபெற் றன்றொண்டை மண்டலமே.

மேற்கோள்.

(வந்தவுயிர் தனையென் னும்பாடலிற்காண்க.)

கோலூ ருழவுக் குடியா னவன்றன் குமிழம்பட்டு
வேலூர்க் கிழானொரு வேளாளன் பஞ்சம் விடியளவு
நாலூரி லுள்ள புலவோர்க்குந் தேசத்து நாவலர்க்கு
மாலூரு மன்னங் கொடுத்தளித் தான்றொண்டை மண்டலமே.

மேற்கோள்.

(௸ பாடலிற் காண்க.)

நூறுங்கூ ழெனையன்றி யுண்டனை யோவென நாணிவயி
றூறுங்கூர் நுதிவடி வாளாற் பிளந்திட் டிருங்கரினை
யுறுங்கூழ் புறத்தி லிருந்தானுக் குய்த்துப்பி லாதபுற்கை [மே.
வறுங்கூழ் சொரிந்திட்ட முற்றவுண் டான்றொண்டை மண்டல

மேற்கோள்.

(௸ பாடலிற் காண்க.)

போதாருந் தண்பொழில் வீடூ ரதிபன் புலவர்க்கெல்லாந்
தாதா வெனக்கொடி கட்டுத லாலவன் றன்மனையை
நீதா வெனவொரு பாவாணன் கேட்பவந் நேரிழையை [மே.
மாதா வெனவழைத் தானென்கொ லாந்தொண்டை மண்டல

மேற்கோள்.

(௸ பாடலிற் காண்க.)

கொடைவா யிலினின்றி யாசகர் கூப்பிடக் காதிலது
தடையா யவனும் பசியால் வருந்தத் தடையகற்றி
யடையாத வாச லுடையா னெனும்பெய ராதரித்தான்
மடையார் கழனி யிடையாலத் தான்றொண்டை மண்டலமே.()

மேற்கோள்.

(௸ பாடலிற் காண்க.)

திரையார் மழையுந் தபனனும் போலத் தடையுமின்றி
யுரையாது நீசனொ டுண்டமை யாலுமொ ரூனமின்றித்

திரையார் புவியிற் புகழே படைத்துத் தினந்தினமும்
வரையாது வள்ளன்மை நாட்டுவ தாற்றொண்டை மண்டலமே.

மேற்கோள்.

(ஷை பாடலிற் காண்க.)

கூற்றார் புலவ னொருபரி சேட்பக் கொடை மதத்தா
லாற்றார்க் கிழான்பரி யாயிர மீந்தன னுதலினால்
வேற்றார் பலவிது நம்மூ ரெனும்படி வெம்பசியை
மாற்றார் பலவுள மண்டலங் காண்டொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

(ஷை பாடலிற்காண்க.)

ஏதிலுந் தொண்டர்க் கிசையா தனகுற்ற மின்பஞ்செய்தாற்
றீதிலு நன்மை பெறலா மெனவையந் தேறத்தெவ்வைச்
சூதிலும் வென்று புலனைந்தும் வென்றெம தாதரையும்
வாதிலும் வென்று வருமூர்க்க ருந்தொண்டை மண்டலமே.()

மேற்கோள்.

திருத்தொண்டத்தொகை.

"நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கருக்கு மடியேன்."

புராண சாரம்.

விருத்தம்.

"தொண்டைவள நன்னாட்டு வேற்காட் டேர்வாழ்
தொல்லுழவர் நற்சூதர் சூதுவென்று
கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுத ளிக்கும்
கொள்கையினா ற் றிருக்குடந்தைக் குறுகி யுள்ளார்

மிண்டிசைவு குழறுமொழி வீணர் மாளா
வெருண்டிலான் மூர்க்கனென விளம்பு நாம
மெண்டிசையு மிகவுடையா ரண்ட ரேத்து
மேழுலகு முடனாளு மியல்பி னாரே."

மெய்ப்பார் மனைவியைக் கொள்வாரு மற்று விளக்கு முட்டக்
கைப்பாணி கொண்டு கழுத்தீர்ந் துதிரங் கலந்தூட்டி.
பொய்ப்பார் புகழ வகல்விளக் கோடு புகழ்விளக்கு
வைப்பார் கலியர் திருவொற்றி யூர்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

புராண சாரம்.

விருத்தம்.

"தடமலர்சூ ழொற்றியூர் நகருள் வாழுஞ்
சக்கரப்பா டியர்குலமெய்த் தவமா யுள்ளார்
படர்புகழார் கலியனார் கலியுங் கூற்றைப்
பாய்ந்தவற்கு விளக்கெரிக்கும் பரிவான் மற்றோ
ருடலிலராய்ச் செக்குழல்வார்க் கதுவு நேரா
துயர்மனைவி யைக்கொள்வா ருளரு மின்றி
மிடறு திரங் கலனிறைய வரிய நாதன்
வியன்கைகொடு பிடிப்பவருண் மேவி னாரே."

திருத்தொண்டத்தொகை.

"கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பற் கடியேன்."

நெடுத்தலர் கோதை விபன்பாண்டி மண்டலக் கொம்பை
த்தம்பால், வைத்திருந் தாங்கவ டன்கைகள்வன் றேடி வாவ
வற்கே, யுய்த்திரு வோர்க்கும் வரிசையு மாற்றி யுடனாஞ்

சென்று, மைத்துனக் கேண்மை படைத்தகன் றேதொண்
டை மண்டலமே. (எகூ)

மோதிச் சிவந்த கவிகாள மேக மொழிந்தவெண்பா
பாதிக்கு முந்திப் பரிசளித் தோன்களப் பாளனெனு
மாதிக்கம் பெற்றவ னூமூர் முதலி யரசிருப்பா
மாதிக்கெ லாம்புகல் கின்றதொல் சீர்த்தொண்டை மண்டலமே

மேற்கோள்.

வெண்பா.

"உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற வொருகோடி
வெள்ளங்கா லந்திரிந்து விட்டோமே - தெள்ளுதமி
ழூமூர் முதலி யரசர்பிரா னிங்கிருக்கப்
போமூ ரறியாமற் போய்."

வேலி யழித்துக் கரும்பையெல் லாந்தின்ன விட்டிடாவோர்
காவில் வணக்கமுஞ் செய்தேத்திப் பின்னுங் கரும்புதின்னக்
கூலி யளந்துங் கொடுத்தா னொருவன் குமணனைப்போல்
வாவிதின் மிக்க கொடையாள னுந்தொண்டை மண்டலமே.

உணலைப் பசும்பொன் முதலான வற்றை யுதவிப்பின்னுங்
குணலச்சை யுள்ளவர் கேட்கவுங் கூசுவர் கொல்லெனவே
யெணலைக் கருதி யெழுதிவைப் பீரென வின்மறைந்து
மணலைப் பரப்பிய முன்றிலுள் ளான்றொண்டை மண்டலமே.

பன்னுந் தமிழ்க்கவன் மாமனை தாதி பரிசளிப்ப
முன்னம்பி காளிக்கு நெற்குன்ற வாண முதலியென்போன்
பின்னுஞ் சிலபல பொன்னுங் கொடுத்துத்தன் பேர்நிறுத்த
மன்னுந் தமிழு முரைத்தான வன்றொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

"கற்குங் கவிவல்லை யாதவர் கோனம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன்ற மும்புகழ் கங்கா நதியும் பொதியமும்போ
னெற்குன் றமுநம் மரபுமெந் நாளு நிலைநிற்கவே."

சீரொன்று தேவர் முதலாத லாற்றில்லை வாழ்முதலி
யாரொன்று நாமம் படைத்தது போன்மற் றவருமந்தப்
பேரொன்று பெற்றது வேளாண் முதன்மையைப் பெற்ற
வாரொன்று பூண்முலை யாயெளி தோதொண்டை மண்டலமே.

கசிட்டன் புடைய விராவணன் வீழக் கயிலையுறைந்
தசிட்டன் றிருவடித் தாமரைப் பூசிக்கச் சார்ந்தபசு
விசிட்டந் தருமுலைப் பாலாறு கொண்டு விருப்பமுடன் [மே.
வசிட்டன் றவஞ்செய்த மண்டலங் காண்டொண்டை மண்டல

மேற்கோள்.

கலிநிலைத்துறை.

"கழிந்த பற்றுடை வசிட்டன திருக்கையாங் கவிஞர்
மொழிந்த நந்தியம் பெருவரை மொய்த்தசூன் முகில்கள்
பொழிந்த நீரது பொற்புறு தாழியிற் பொங்கி
வழிந்த பாலெனத் திசைதொறு மிழிந்தது மன்னோ."

வெல்லாமல் வென்றுநற் சந்தனக் காட்டத்தின் மேலிருந்து
நல்லாறை நந்திக் கலம்பகங் கேட்டபி னற்றுணைக்குக்
கொல்லா புரிசங்க்ரான் மாமுடி சூட்டக் குடைகவித்து
மல்லார்புரித்தொண்டைமானென துந்தொண்டை மண்டலமே.

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

நேற்றினு மின்று மிகுந்தது காத னிலவெனுங்கூன்
ற்றினு மன்னை கொடியள்கண் டாய்மள்ளர் கொன்றபழஞ்
சற்றினு மேதிக் குளம்பா னெருக்குண்ட செங்கருப்பஞ்
ற்றினுஞ் சங்கந் தவழுங்கொல் லாபுரி சந்திரனே.''

புரமு மறுநான்கு கோட்டகத் தாருமொன்றாய்க்
ராணம்பன் னீராயி ரஞ்சொன்ன கச்சியப்பர்
ல் லக்குச் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராண மரங்கேற்றி னார்தொண்டை மண்டலமே. (அஎ)

உறைவ ளரச னெறுப்பானென் றஞ்சி யொளித்ததுவும்
பிறவாயல் வைத்தவர் பேணுத லாலவர் பேர்புனைந்து
திறவா ரிபர்முதற் சாதியுள் ளோரன்று செய்தநன்றி
மறவாம லின்னமும் பாராட் டிடுந்தொண்டை மண்டலமே. ()

மேதைப்புலவரெண் ணேகாம் பரசம்பு மெச்சநெடுங்
காதைப் புலவ ரிரட்டையர் பாடுங் கலம்பகமு
மோதற் கரியநல் லேகம்ப வாண னுலாவுமந்த
மாதைப் பனுவலும் பாராட் டிடுந்தொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

"எறிக்கும் புகழ்க்கச்சியேகாம் பரசம்ப னெண்டிசையும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம் வேட்டபின் பூவையன்னாள்
வெறிக்குங் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந்துள்ளித்
தெறிக்குந் திவலை யழிக்குஞ்சிந் தூரத் திலதத்தையே.''

தாளாண்மை யுள்ள புகழ்கிருஷ்ண ராயன் சமுகத்தி
வேளாண் மகளினைப் போலே விநோதித்து வேடர் காடு
கோளார் வயிரியர் கூத்தாடத் தங்கள் குடிமையெண்ணி
வாளா லவனுயிர் மாய்த்ததன் றேதொண்டை மண்டலமே. ()

தருவுற்ற காளத்தி கச்சிபந் தாதியுந் தண்டமிழ்தேர்
திருவொற்றி யூரிற் குறுந்தொகை தானுந் திரைகடலைப்
பொருவுற்ற கச்சி மலிதே ரெனமுன் புகல்கலியு
மருவுற்ற கூந்தன்மின் னேயுண்டு காண்டொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

"காளத்தியுங் கயிலாயமு நேரென்பர்."

"அறந்சா ணியற்று மவனிலுங் கோடி யதிகமில்லம்."

"ஒருங்கு கடலுடுத்த வொற்றியூரே."

"மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்மு
ளொலியும் பெருமையு மொக்கும்."

பண்டையோர் நாளையி லோரேழ் கலிங்கப் பரணிகொண்டு
செண்டையு மேருவிற் றீட்டுவித் தோன்கழற் செம்பியன்செய்
தொண்டைநன் னாடு புரக்கின்ற கோனக்கித் தோன்றலெங்கள்
வண்டையர் கோனங் கருணா கரன்றொண்டை மண்டலமே. ()

மேற்கோள்.

விருத்தம்.

"இறைமொழிதளவி லெழு கலிங்கமிவை
யெறிவ னென்றுகழ றெழுதனன்
மறைமொழிந்தபடி மாயில் வந்தருவ
திலகன் வண்டைநக ராளனே."

தேர்கொடுத் தோனும் பரிகொடுத் தோனுந் திருமனையிற்
றூர்கொடுத் தோனுந் தலைகொடுத் தோனுந் தமிழினுக்கா
வூர்கொடுத் தோனு முயிர்கொடுத் தோனு முதைகொடுக்க
மார்கொடுத் தோனு மனைவோரு ளார்தொண்டை மண்டலமே.

துரைத்தியாக ராயர்முன் சுந்தரர்க் காவொரு தூதுசென்ற
விரைத்தா மரைமணம் வீசுதல் போல்விடப் பாய்சுருட்டித்
திரைத்தா வணத்தி லொருபுல வோன்பின்பு சென்றசெந்
முரைத்தான் மணமின்ன நாறுங்கண் டீர்தொண்டை மல

வானப்பிர காசப் புகழ்க்கிருஷ்ண ராயற்கு மஞ்ச
கானப்பிர காசப் புகழாய்ந்து கச்சி ... லம்பகர
ஞானப்பிர காச குருராயன் வாழ்
மானப்பிர காச முடையோர் வள

பந்தா கினியிற் றிரிவேணி ச
மந்தா கினியுற்ற பாதாளம் ட
பந்தா கினிக்கு மகவாகக் சே
மந்தா கினிக்கு மாபான த

காவிய மாகிய காமீகங் கண்டுங்
ரோவிய சூத்திர ராக விருபத்த
மேவிய கோட்டத்தி லுங்கரி க
வாவிய மேன்மை கொடுத்தளித்

யுகமேழு கோடி யிருப திலக்க
யுகமேழு மேழும் புகழே நிறுத்

புகழ்மேழி வாகைப் பதாகையும் வீரப் புலிக்கொடியு
மகமேரு விற்சென்று தீட்டிய தாற்றொண்டை மண்டலமே. ()

நாடான கோட்ட மிருபத்து நான்கினு ணற்றண்டகத்
தாடாத செக்கு மரையாத வம்மியு மாகிவளர்
பீடாதி பீடத் திருக்காமக் கோட்டம் பிறங்குகச்சி
ா திபரெனுங் காலாண்ட ருந்தொண்டை மண்டலமே. (

னவர் காலத்தி லெத்தனை பேர்மற் றிவர்களுக்கு
னவர் காலத்தி லெத்தனை பேரிம் முதலிகடம்
ாலத்தி லெத்தனை பேர்கள் பிறப்பவர்முன்
த் தொடர்புடைத் தாற்றொண்டை மண்டலமே.

ாளர் வாழிநன் னீருழவு
ாழிசங் காழிதண்டு
ரு வேங்கடமா [பே
ி வாழ்தொண்டை மண்ட

டல சதகம்

ிற்று.

ழ

சிவமயம்.

தனிக் கவிகள்.

கட்டளைக்கலித்துறை.

தகைவந்த சீர்த்தொண்டை மண்டலத் தார்தஞ் சரிதை யயித், தொகையென் றொருவர்க்குஞ் சொல்லப் படாது சரன் றனுமிக்க, நகைவந் திடுஞ்சொற் புலவோர் சபையினி நம்மால், வகைவந்த மாத்திரஞ் சொல்லிவைத் தோமிந்த ண்டலத்தே. (க)

விருத்தம்.

வைவென் றிடுகத் தூரி கண்மணிக் கறுப்பனென்னு
பாவையம் பதியான் றொண்டை மண்டல சதகங்கேட்டு
பாவலர் புகழ்ந்து மெச்ச நவநிதி பொழிந்து நன்றுப்
மவுல கெங்கும் போற்றப் புகழ்நிலை நிறுத்தினானே. (உ)

வேறு.

கன்மாரி காத்தமுகிற் கத்தூரி யருண்மாவைக் கறுப்ப னென்னு, மின்மாரி தனதுகிளை யத்தனையுஞ் சபைகூட்டி யந்துகேட்டுச், சொன்மாரி பொழிந்திடுவே சிரகாகம்பிதஞ் சய்து சுருளுந் தந்து, பொன்மாரி பொழிந்துதந்தப் பல்லக் ச் சுமந்துமிகு புகழ்பெற் றானே. (ங)

ஓர்கறுப்பு மில்லாத தொண்டைவள நன்னாட்டி லுசித வேளைச், சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி மன்னனருள் சேயைப் பார்மே, லார்கறுப்ப னென்றுசொல்லி யழைத்தாலு நாமவனை யன்பி னாலே, பேர்கறுப்ப னிறஞ்சிவப்பன் கீர்த்தி யினால் வெளுப்பனெனப் பேசு வோமே. (சு)

எல்லப்ப னம்மையப்பன் றருதிருவேங் கடநாத னெ சிராமன், வல்லக்கொண் டையன்மாதை வேங்கடே ச போல வரிசை செய்தான், செல்வத்தம் பியருடனே கத் மகன்கறுப்பன் றெருவீ திக்கே, பல்லக்குத் தான்சும னதுநமக்கோ ராயிரம்பொன் பரிசு தானே.

கட்டளைக்கலித்துறை.

இந்தச் சதக மரங்கேற்று கைக்கிசைந் தேனெவரும்
வந்திக்கு மாவைக்கத் தூரிக் கறுப்பன் வளமைபெறு
புந்திக் குலாவுநள் ளாறர்தம் பாதம் பொருந்துமன்பன்
வந்துற் பவிக்க மகிழ்வா னதுந்தொண்டை மண்டலமே.

தனிக்கவிகள் முற்றுப்பெற்றன.

உ

சிவமயம்.

இந்நூலாசிரியர் சரித்திரக்குறிப்பு.

இத்தொண்டைமண்டல சதகஞ் செய்த புலவர், ஸ்ரீமத் உபசுபிரம்ணிய ரென்றும் சேனைத்தலைவ ரென்றும் சொல்லாநின்ற செங்குந்த மரபிற்றோன்றி, சிவானுக்கிரகத்தால் தமிழ்க்கலைமுழுதும் பயின்று, தெய்வீகம் விளங்கிய நல்வாக்கினைப் பெற்று, சிதம்பரத்தில் ஸ்ரீ சபாநாயகர் பொற்பணம் ஐந்து பஞ்சாக்ஷரப்படியில் வைத்தருள்க்கொண்டு, அதனால் படிக்காசுப்புலவரென்று பெயர்பெற்றவர்.

தொண்டைமண்டலம்.

"வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழவளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து."

என்று ஔவையாரால் புகழப்பட்ட இந்நாடு கிழக்கே கடலும் மேற்கே பர்வதமலையும் வடக்கே வேங்கடமலையும் தெற்கே பினாகிநதியும் எல்லைகளாகவுடையது; இதற்கு இராஜதானி காஞ்சிபுரம்; இந்நாடு முற்காலத்தில் சோழநாட்டைச்சேர்ந்தது; நாகபட்டினத்துச் சோழன் பாதலலோகஞ் சென்றகாலத்திலே நாககன்னிகையை மணம் புரிந்து அவள் வயிற்றிலே பிறக்கும் புத்திரனுக்குத் தனது நாட்டில் பாதி

..க வாக்களித்து மீண்டான்; மீளும்போது நாககன்னிகை
..னுப்புவ தெவ்வாறென்று வினவ, அவன் தொண்டை
..டையாளமாகக் கட்டித் தெப்பத்தி லேற்றியனுப்பு
..யென்றான்; அவ்வாறே அப்புதல்வன் தொண்டைத்தழை
..கொண்டு அலைகளாற் செலுத்தப்பட்டு நாகபட்டினத் துறை
..யடைந்தான்; சோழன் அவனை வளர்த்து இந் நாட்டைப் பிரித்
அவனுக்குக் கொடுத்து தொண்டைமான் என்னும் பெயரும் பு..
யும் சூட்டினான்; தொண்டைமான் ஆண்டமையால் இது தொண்டை
மண்டலம் என்னும் பெயர்த்தாயிற்று; இது நெடுங்காலம் உபநாட..
வும் சிலகாலம் தனி நாடாகவுமிருந்து பெரும்புகழ் படைத்தது.
நாட்டிலே திருவள்ளுவர், கச்சியப்ப சிவாசாரியர், குகனேரியப்..
கம்பர், பரிமேலழகர், ஒட்டக்கூத்தர், இராமாநுஜர், சேக்கிழார், இ..
டையர், அருணகிரிநாதர், பவணந்தி, படிக்காசுப்புலவர், அப்ப..
தீக்ஷிதர்முதலிய வித்வசிகாமணிகளும், அதிகமான், கறுப்பன், ச..
யப்பன், மணிகண்டன் முதலிய மஹாபிரபுக்களும், உத்தம கு..
தாற் சிறந்த அரசர்களும் இருந்து விளங்கினரென்றால், இதன் பெ..
மையை அளவிட்டுரைத்தல் கூடுமோ?; இத்தகைய இந்நாட்டின் பெ..
மையைப் படிக்காசுப்புலவர் இத் தொண்டைமண்டல சதகத்தில் வி..
துப்பாடி யிருக்கின்றனர்.

சிவமயம்.

தொண்டைமண்டல சதகத்தின்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
[illegible]ஞ்சொன்	13
[illegible]ந்தப்	39
[illegible]ழுவதுங்	28
ஆ	
[illegible]ரன்	28
இ	
[illegible]ஞ்சு	14
[illegible]த்தெழு	3
[illegible]னவர்	42
[illegible]னும்	5
ஈ	
[illegible]டால	25
[illegible]	30
உ	
[illegible]லைப்	37
[illegible]தி	25
[illegible]வா	39
ஊ	
[illegible]பர்	32
எ	
[illegible]ணன்	33
ஏ	
[illegible]லுங்	35
[illegible]ளித்	20
ஏரி	20
க	
கசிட்டன்	38
கடைவா	34
கண்ணு	22
கண்ணூர்	6
கயிலை	2
கா	
காரார்	30
காவிய	41
கி	
கிளப்பார்	15
கு	
குழுவார்	28
கூ	
கூட்டுங்	16
கூற்றூர்	35
கே	
கேட்டாலு	10
கை	
கையா	11
கொ	
கொங்கலர்	8
கொண்டலை	1
கொத்தலர்	36
கொல்லை	26
கோ	
கோலூ	
ச	
சயிலத்	
சா	
சாய்த்திட்	
சீ	
சீருறும்	
சீறொன்று	[illegible]
சீர்கொண்ட	1
செ	
சென்னியிற்	16
சே	
சேணூர்	4
சேவடி	2
சொ	
சொல்லாயு	28
சொல்லையி	19
த	
தருவுற்ற	40
தரையார்	34
தன்னு	25
தன்னூர்ச்	31

செய்யுள்.	பக்கம்.
தா	
தாயினு	9
தாளாண்	40
தாறற்ற	31
து	
துரைத்	41
தெ	
தெள்ளத்	8
தே	
[illegible]	12
[illegible]த்	41
[illegible]	
[illegible]	34
[illegible]ண்மை	6
[illegible]ளுய்	32
நா	
நாடான	42
நி	
நிலைவாழ்வு	42
நீ	
நீடார்	4
நீண்டார்	32
நீளத்	17
நூ	
நூலார்	19
நெ	
நெடுகெ	29
நே	
நேயத்	29
ப	
படவேங்	13
படையிற்	15
பட்டாபி	24
பண்டைநி	30
பண்டையொர்	40
பயிரைப்	30
பன்னுந்	37
பா	
பாகொன்று	18
பி	
பிணிக்கொர்	23
பின்போர்	16
பு	
புறவோ	21
பூ	
பூதவஞ்	5
பே	
பேணிய	24
பொ	
பொய்பக	12
பொள்ளா	17
போ	
போதாருந்	34
போனத்தி	16
ம	
மந்தா	41
மி	
மிண்டரை	
மீ	
மீனவர்	
மெ	
மெய்ப்பார்	
மே	
மேதைப்	
மோ	
மோதிச்	
யு	
யுகமேழு	
வ	
வள்ளல்	
வா	
வானப்	
வி	
விண்ணிற்	
வில்லைச்	
விழுவே	
வீ	
வீருரிசை	
வீருர்	
வெ	
வெங்கொலைக்	
வெல்லாமல்	
வே	
வேலி	

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

ஸ்ரீ

கண்ணன்துணை.

பாலூர்

அமிர்தகவிராயர்

பாடிய

கோகுல சதகம்.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1914

விலை பை 9

ஸ்ரீ

கண்ணன்துணை.

கோகுல சதகம்.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

சீர்மேவு பாடியில் வாழண்டர் செல்வஞ் செழிப்புறவே
ஏர்மேவு கோகுல மேன்மைச் சதக மிசைப்பதற்கு
நீர்மேவு மண்ட சராசர மியாவுமோர் நீள்சுடருங்
கார்மேவு முந்தியிற் காத்தான் கழலிணை காப்பதுவே.

நூல்.

கட்டளைக்கலித்துறை.

மணங்கொண்ட வேதன் முகத்திற் புயத்தில் வளர்குறங்கிற்
கணங்கொண்ட பாதத்திற் றோன்றிய நான்கும் கவின்பெறவே
பணங்கொண்ட பாம்பணை யானமிர் தூறுமிப் பார்தழைக்கக்
குணங்கொண்டு முன்வரு மன்பர்தங் கோத்திரர் கோகுலமே. (௧)

அண்டங்க ளாயிர கோடியுண் டாக்க வலர்ந்தவிதழ்
முண்டக னாகிப் பராபரன் பாரில் முறைசிறந்த
மண்டலத் தேவகி யால்வசு தேவன்கை வாய்க்கப்பெற்ற
கொண்டலை யேந்தி வளர்த்தோர்கள் பாடியிற் கோகுலமே (௨)

பழையானை யெட்டக் காத்தானைத் தன்பதம் பற்றினருக்
கிழையானை யானைமுன் னேயெதிர் வானை யெழிற்கருணை
மழையானை ரோகணிப் பாலுதித் தானை மலிந்தவொரு
குழையானை யேந்தி வளர்த்தோர்கள் பாடியிற் கோகுலமே. (௩)

நிலவிய வண்டம் பகிரண்ட கோடியை நேர்படைத்து
நலமுள தாமரை நாபியிற் காத்தவந் நாரணற்குப்
பலவித மாகிய பூச்சூடு நூற்றெண் பதியுரைக்கக்
குலவிய பாட லுரைத்தோர்கள் பாடியிற் கோகுலமே. (௪)

மழவியல் பாக மடிமீ திருத்தி வனசமுகத்
தழகுந் திருவு மருந்திக்கண் ணாலன்பு மானமறைப்
பழமிது வேயெனப் போற்றிய கண்ணனைப் பாரிற்றங்கள்
குழவியைக் காப்பிடு பாடலு ரைத்தவர் கோகுலமே. (௫)

நேறப் புவியின் மறையைக் கடைந்து திரட்டமுதம்
ஏறக் கரையினில் வைத்தது போல வெடுத்ததமிழ்
மீறப் பதின்மர்க ளாலாயி ரத்தினு மெய்ப்புகழைக்
கூறச் சிறந்து வளர்வோர்கள் பாடியிற் கோகுலமே. (௬)

பண்டா டியதழ லாடியும் பாம்பின் படத்திலன்பு
கொண்டா டியுமொன்று மாய்நின்ற மாலண்ட கோளமெல்லாம்
உண்டாடி யுங்கடு கொவ்வாத வாயி லுறியின் வெண்ணெய்
கொண்டாடி யுண்டு தெவிட்டச்செய் தாரவர் கோகுலமே. (௭)

முறையாக நற்றவஞ் செய்திடு வோருடன் முற்றுநின்று
மறையாமற் றேவர்க்கு மாந்தர்க்கும் வேள்வி வகுத்தருளி
நிறைவாகத் தந்து மலர்வாச முற்று நிலைத்த செல்வங்
குறையாத பின்னை யெனுந்திரு வீன்றவர் கோகுலமே. (௮)

தொடுத்தகல் யாணத் தெருத்தேழ் கொடுநிற்கச் சூதச்சுரர்
எடுத்தெறி யத்தெய்வ வுருவாகி யோங்கிய வேற்றைவெல்ல
அடுத்துங் கண்ண னிவரை யழைக்கவந் தகனடுங்கிக்
கொடுத்தா னுயிரைப் பிழைத்தோர்கள் பாடியிற் கோகுலமே. (௯)

ஞாலங்கண் டோங்கிய நான்முகன் கண்ணுநற் றேவர்கண்ணும்
ஆலங்கண் டோடிய வயிராணி கேள்வற் கலர்ந்தகண்ணும்
மூலங்கண் டோமெனுங் காண்பரி தான முகுந்தன்மணக்
கோலங்கண் டேசண் குளிர்ந்தோர்கள் பாடியிற் கோகுலரே. (க0)

நளிர்மலர் நாப னயந்தண்ட ருய்ய நடுக்கடலை
ஒளிர்மலை மத்திற் கடைந்ததிற் றோன்றிய வொண்பொருளிற்
றளிரியல் பார்ந்த திருவை மணந்துபின் றந்தமுதைக்
குளிர்ந்தன்பு கூர்ந்து கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே. (கக)

வானென்ற சொர்க்கப் புரந்தரன் றானு மாலயனுந்
தேனென்ற சொல்லுமை கேள்வனு மற்றுள்ள தேவர்களுந்
தானென் றுலதக் காசரும் பூணத் தகாவிஜயக்
கோனென்ற மேன்பட்டங் கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே. ()

அடுக்குந் தொழிலவர்க் காகிய தேவிரு தாகப்பெற்றார்
எடுக்குந் தொறுமதி லேற்றமுண் டேயெங்க ளாரணமே
தொடுக்குங் கருணை புரிந்தே தனது சுடர்க்கரத்தாற்
கொடுக்கக் கருடக் கொடிபடைத் தாரவர் கோகுலரே. (கங)

நற்றுஞ் சுருதியுங் காணாத நாரண னற்றுளபம்
பெற்ற திருவின் னசைபோன்ற மாரன் பிடித்தவம்பால்
முற்றுஞ் செயஞ்செய்த காலங்க ணேயின் னமிர்துதவிக்
கொற்றந் தருமுல்லை மாலையைத் தாங்கினர் கோகுலரே. (கச)

மண்டலந் தன்னி னிலனைந்து கூறதில் வண்மைபெறுந்
தண்டலை நன்னதி சார்மயி லானிரை தார்குருந்து
விண்டலத் தோர்மகிழ் வேய்ங்குழ லோசை விளங்குபைந்தேன்
கொண்ட வளந்தரு முல்லைத் தலைவர்கள் கோகுலரே. (கரு)

ஆவர்த் தனையுள்ள வெத்தனை யோகுடி யாய்த்தழைத்தோர்
மாவர்த் தனையுள்ள முல்லை நிலத்தர் மலர்நிறைந்த
காவர்த் தனையுள்ள யமுனையுங் காவிரி காளிந்தியுங்
கோவர்த் தனமலை யுள்ளோர்கள் பாடியிற் கோகுலரே. (கசு)

வேலாயு தம்பிடித் தான்முரு கேசன்வெள் வெற்புறைவோன்
சூலாயு தம்பிடித் தான்சசி காந்தன் சுடரும்வச்சிர
மேலாயு தம்பிடித் தான்கஞ்ச னேவிய மேதிக்கன்றைக்
கோலாயு தம்பிடித் தானுபர் பாடியிற் கோகுலரே. (கஎ)

நலஞ்சுத்தி யாகவுந் தார்வேந்தர் சென்னி தரிக்கமுடி
நலஞ்சுத்தி யாகவு நானிலத் தாலய நான்மறையோர்
பலஞ்சுத்தி யாகவும் பதினெட்டுச் சுத்தங்கள் பண்ணவுநற்
குலஞ்சுத்தி யாம்பஞ்ச கௌவிய மீந்தவர் கோகுலரே. (கஅ)

சுற்றிய பாரிலுண் டாகிய தோற்றஞ் சுகம்பெறவே
மற்ற முயற்சியில் வருவதுண் டோவளங் கூர்சதுர்த்தர்
பற்றிய;தங்க டொழில்கடைத் தேறியப் பலனுறவே
கொற்றநல் லேறு கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (ககூ)

புழுங்கிய கோபத்தி லந்தகன் சாபம் பொறுத்தவங்கி
மழுங்கிய தன்னுரு வோடு மறைந்திட மன்னுயிர்கள்
அழுங்கிய போதினி லந்தணர் யாக மனைத்துஞ்செய்யக்
கொழுந்தனல் காட்டு மரணிதந் தாரவர் கோகுலரே. (உ௦)

பிலமா மிலங்கையை வென்றுகற் பாகிய பெண்ணரசை
நலமாக மீட்டு வரும்போது தண்டக நன்முனிவர்
பலமா மிராமனைத் தழுவ நினைக்கவப் பாடியினீர்
குலமாத ராகப் பிறக்க வளர்த்தவர் கோகுலரே. (க)

உண்டா கியபதி ஞறு யிரம்பெண்ணை யோங்குகண்ணன்
கண்டான் கமலத் திருவொப்ப வேகலி யாணஞ்செய்யப்
பண்டான வூர்வலம் வாழ்நாக தல்லி பரிமளநீர்
கொண்டாடி யேழ்தினஞ் சோபனம் பாடினர் கோகுலரே. (உஉ)

பண்டான வாய்மை நினைந்தே மலரயன் பாரதனில்
உண்டான கண்ணன் றிருவிளை யாட லுணர்த்தக் கன்றுந்
தொண்டான வாய ருடன்மறைத் தேகவுந் தோன்றுருவங்
கொண்டானை யன்புடன் கொண்டாண்ட செல்வர்கள் கோகுலரே. ()

பாடிக்கொ ளாத னெண்ணிரண் டாயிரம் பாவையரில்
நாடிக்கொண் டேபொன்று தாவென்ற போதினி னின்மையைத்
தேடிக்கொண் டேகனக் கண்ணினிற் றேன்றுந் திருவுருவாய்க்
கூடிக்கொள் செல்வப் பதிபெற்ற பேறவர் கோகுலரே. (உச)

ஈட்டுற்ற சாய்கையின் சூர்மாவை வேல்கொடு நீக்கிவெற்றி
காட்டு மூருகர்க்கு மேனடு வான கனலிறைக்குந்
தேட்டுக் குரிய விளைநாடி யேற்றிற் றிருகுபுரிக்
கோட்டுத் தகர்பெற வீந்தவர் பாடியிற் கோகுலரே. (உரு)

சமர்தனிற் சூரனை வேல்கொடு தாக்கிச் சயம்புரிந்தே
அமரரைக் காத்தவன் பன்னிரு தோண்மறைத் தௌவைதன்னைக்
கமரரி முல்லையிற் காத்திருந் தேபரி காசஞ்செய்பக்
குமரனு மேதிகண் மேய்க்கப்பெற் றூரவர் கோகுலரே. (உசு)

மாரியி னேர்கொடை யீந்தோர்க ளௌவை மனங்குளிரச்
சீரிய வாடை கொடுத்தோர்கள் போசனஞ் செய்பநல்ல
மூரிய பொன்னிலை யீந்தோர்கள் பாரி யெனமொழிந்த
கூரிய வள்ள லுதித்தோர்கள் பாடியிற் கோகுலரே. (உஎ)

தணவாத நீதி புரிந்தோர் மகுடந் தரித்தனந்தன்
பணமாகத் தாங்கிய சேரனுஞ் சோழனும் பாண்டியனுங்
கணமாகச் சோபனப் பந்தலி லேநின்று கையதனாற்
குணமாய் மணமிடக் கலியாணம் பெற்றவர் கோகுலமே. (உஅ)

வடியாய்ப் பனந்துண்டு மூன்றா சாகிய மன்னவர்க்குத்
துடியாக மூன்று பழந்தா லாலவர் தோத்திரஞ்செய்
படியார்க் கெளியரு மிச்சிக்க நான்கெனும் பாடல்பெற்ற
குடியார் பெரிய கொடையாற் பெரியவர் கோகுலமே. (உகூ)

தண்டா மரைப்பெண்ணைத் தாம்பெற்ற தாலுந் தரணிச்செல்வம்
உண்டான வாய்மை யுடைமையி னாலு மொணர்ந்தெளவையார்
பண்டாங் குடியிற் பெரியோ ரெனச்சொன்ன பாடலனைக்
கொண்டே பெரும்புகழ் கொண்டோர்கள் பாடியிற் கோகுலமே. (கூ௦)

பணத்தா யிரஞ்சென்னிச் சேடனு மேத்தப் பகர்ந்தவிலக்
கணத்தான் மிகுந்தவ ரௌவையை யோர்சொற் கழறிவெல்ல
மணத்தா மரைக்கை மணிப்பொற் கடகத்தை வாங்கியவள்
குணத்தாற் கொடுக்கப் புனைந்தவர் பாடியிற் கோகுலமே. (கூக)

பலமா மிராகவன் காதையைக் கம்பன் பெருகச்செய்ப
நலமா மதிலொரு சீரிற் சமுசய நாடவிடத்
தலமாந் திசைசொலைச் சரஸ்வதி சாற்றத் தயிர்கடையுங்
குலமாது மாகப்பெற் றுரவர் பாடியிற் கோகுலமே. (கூஉ)

தொடுத்தநற் கற்புடைக் கன்னகை கேள்வன் றுயரதனாற்
கடுத்து வருகின்ற போதவள் கொங்கைக் காம்பறித்து
விடுத்தவள் கூடற் புதியினி லாயர்பெண் வெண்ணெயப்பக்
கொடுத்த வரம்பெற்று வாழ்வோர்கள் பாடியிற் கோகுலமே. (கூ[illegible]ஙு)

ஆடற் பதிக்கு நிகர்கடம் பாடலி யானதிலே
தேடற் கரிய பொருளைக்கண் டேதமிழ் செப்பியவர்
நாடத் தயவு புரிந்தேபின் பாக நடந்துவருங்
கூடற் பதிச்சொக்கை யேவல்கொண் டோரவர் கோகுலரே. (௫௪)

நம்பிட வேயிடைக் காட்டேரி லீசனை நாட்டிவைத்துச்
சொம்பிடக் கண்டனன் பாண்டின் பாதத் துணையில்விழ
அம்பிடு சென்னிய னன்பனைப் போற்றெனை வன்றரசன்
கும்பிடச் சொக்கரைக் கோவில்வைத் தாரவர் கோகுலரே. (௫௫)

நாலா கலைக்கென் றும் வல்லவர் சோதனை நற்பலகை
மேலா யிருந்தான் கீழாகி நின்றிட மேன்மைபெற்று
நாலா நிறைநின்ற பேரெழு தாமன்முன் னற்றமிழாற்
கோலா கலச்சங்கம் வென்றோர்கள் பாடியிற் கோகுலரே. (௫௬)

சங்கத்தை வென்றவர் மங்களதநீதி தமிழுரைத்தோர்
துங்கக் கஜேந்திர மோட்சமு மாயிரஞ் சொன்னவல்லோர்
எங்கட் கிறைமகிழ் பாகவதமுமே மாயிரமாய்க்
கொங்குற்ற வாணி கடாட்சத்திற் செய்தவர் கோகுலரே. (௫௭)

அம்போ ருகனு மறியாத மாய னவதரிக்க
உம்பரு மேற்றிட மண்டலமேற்ற வுலகமெங்குந்
தம்போல வாழ்வு தழைத்திடக் கஞ்சனைத் தாக்குபதக்
கொம்பான துர்க்கை யெனுஞ்சத்தி யீன்றவர் கோகுலரே. (௫௮)

மதித்தே வருகின்ற பூதகி யாதி வருபகையை
மிதித்தேறி வென்று முனிந்தே வருகின்ற வேழத்தையும்
எதிர்த்தே மருப்பைப் பிடுங்கியுங் கஞ்சன்மு னேமிக்கண்ணன்
குதித்தே புதைத்திடு காட்சிபெற் றாரவர் கோகுலரே.' (௫௯)

மாவா யிரம்பல முள்ள பராக்கிரம மல்குகஞ்சன்
மேவா யமபுர மேவிய பின்னர் விளங்கவெந் நந்
தேவாதி தேவ னெனவுக்கிர சேனனைச் சீர்பெறவே
கோவாய் மௌலி தரித்தோர்கள் பாடியிற் கோகுலரே. (சo)

கஞ்சனைப் பெற்ற வுக்கிர சேனனைக் காசினியின்
மிஞ்சிய நீதி செலுத்தர சாக்கிப்பொன் வீதிவலம்
நெஞ்சி லுவந்திவ ரைப்பதி ஞயிர நீள்பெரியோர்
குஞ்சர மேற்ற வருவோர்கள் பாடியிற் கோகுலரே. (சக)

ஞானக மாயக் குரூர ரழைக்கநன் மாமதுரைத்
தானநல் வீதியிற் கஞ்சனற் றாசுகள் தந்தியின்மேல்
ஆன பொதியைப் பறித்துப்பீ தாம்பர மானவெல்லாம்
கோனகர் பார்க்கப் புனைந்தோர்கள் பாடியிற் கோகுலரே. (சஉ)

ஒலிபெறு மேகங்க ளேழையு மேவ வுவரியெல்லா
மலிவுடன் மாந்திப் பொழிந்து வருந்தி மகபதிபான்
மெலிவினைக் கூறிட மேதினிக் கோவலர் மெய்ப்புகழைக்
குலிசனு மேத்தப்பெற் றாரவர் பாடியிற் கோகுலரே. (சங)

நடையாய் மகரத்திற் செய்கின்ற பொங்கலை நாரணன்றான்
தடையாக வுட்கொண்ட தென்றறி யாமற் சதமகத்தான்
படையாக மேகங்க ளேழையு மேவப் பரனெடுத்த
குடையான கோவர்த் தனநீழ னின்றவர் கோகுலரே. (சச)

டணமுற்ற முல்லை புனைவீர கோதனன் மாயவனைப்
பணமுற்ற சேடனு மேத்த நினைந்து பலவிதத்தால்
உணர்வுற்று நாணப் பதினு யிரம்விப்ர ருண்ணவன்னங்
குணமுற்று மாய்த்தா லாற்றிரு வீன்றவர் கோகுலரே. (சரு)

மாதனங் கோடி மணிப்பணிப் பேழை மலர்மங்கைநேர்
சாதனச் சேடியர் நூற்றெண்மர் பெண்ணினிற் சார்சிவிகை
சீதனத் தேனு பதினாயி ரம்பல சீர்சிறக்கக்
கோதனன் பெண்ணைக் கண்ணனுக் கீந்தவர் கோகுலரே. (௪௬)

தளவமொப் பாமெனக் கட்டமிர் தாயர் தனையருடன்
உளமகிழ் மாயனுங் கொண்டே யமுனையி லுண்ணவக்கால்
வளமுடன் றங்க ளனமீந்து மாலுக் கவரமிர்தங்
குளவுங் கொடுத்துண் டகமகிழ் வோரவர் கோகுலரே. (௪௭)

துடிகோத் திரமெனச் சொல்வார்க ளொன்றைச் சுதரிசனன்
அடிகோத் திரமிலை யாகும தோவன்று நாரதனும்
படிகோத் திரமனை யைந்து நிலத்தினும் பார்த்துவந்த
குடிகோத் திரமுடன் வாழ்வோர்கள் பாடியிற் கோகுலரே. (௪௮)

அன்றுமை யூர்திரு வேங்கடன் சந்ததி யாரொருவர்
கன்றொடு காலியை முல்லையிற் காக்கும் கடும்பகலிற்
றின்றிட வந்திடுந் தேவா வமிர்தத்தைத் தினைதினமுங்
குன்றெடுத் தாருடன் கூடியுண் டாரவர் கோகுலரே. (௪௯)

நன்றா கவதென்ற கோடான கோடிக ணல்லமிர்தந்
தின்றா ரதிற்பலங் கண்டதொன் றில்லைச்சிற் றாயர்க்கன்பி
னென்றாய்க் கவளங் கொடுத்தத னாலுட லோடவற்குக்
குன்றாப் பதவி கொடுக்கப்பெற் றாரவர் கோகுலரே. (௫௦)

மாகன கத்துரு வீன்றன காளிங்கன் வாழ்தடத்தி
னாகன மிற்றுரு வாகிய வாயர் நலம்பருகித்
தாக மகற்ற மயக்கிய வல்விடந் தான்முறியக்
கோகனை கைக்கட் கருணைபெற் றாரவர் கோகுலரே. (௫௧)

பூபால னஞ்செய்வ ராகுதிப் பாலனம் போந்துசெய்வர்
நாபால னஞ்செய்வர் நல்லமிர் தீந்து நளினமலர்
மாபால னஞ்செய்யு மார்பனு மிச்சிக்க வாழ்வுதருங்
கோபால னஞ்செய்வர் கோபாலர் கோவலர் கோகுலரே. (௫௨)

தவமுள விண்டலத் துண்டான வண்டர்க்குத் தானமிர்தம்
உவகைய தாகவு முண்டிட வன்பி லுதவிசெய்தோர்
புவனமெ லாமிவர் புண்ணிய மேநலம் பொங்குதலாற்
குவலயத் தண்ட ரெனநிகண் டோதிய கோகுலரே. (௫௩)

உணத்தான் பிறந்த வுயிர்களுக் காரமிர் துதவிபுகழ்
மணத்தா லவர்க்கு வழுவாமை யாலும் வழங்குநெறிக்
கணத்தாலு முன்மநு வேந்த னறிந்து கனந்தந்திடுங்
குணத்தாற் பொதுவரென் றேதப்பெற் றாரவர் கோகுலரே. (௫௪)

பூபாரந் தீரவுந் தன்கைக் கபாலம் புனனிறைய
மாபா ரதமுடித் தானென்று மெள்ளி மலைக்கடவுள்
நாபாடல் செய்தது நான்முகன் றானு நலமுணர்ந்து
கோபால னென்று வணங்குமப் பேர்கொண்ட கோகுலரே. (௫௫)

தருமன் முதலியோர் தாங்கிய வேடந் தகுதியென்றே
பெருமைய தாக வறிந்தமெஞ் ஞானம் பெரிதுடையார்
இருமையுங் கண்ட சகாதேவ ராய ரின்னுநவே
குருகுலங் காக்குமென் றேற்றத னற்சேட்டங் கோகுலரே. (௫௬)

பாடற் குருகிமுன் னடிருப் பாற்கடற் பள்ளிகொள்ளும்
தேடற் கரிய பொருளான நாரணன் றேவரைநீர்
நாடற் குரிய நராக முல்லையி னானனைய்க்
கூடப் பிறக்க விளையாடல் பெற்றவர் கோகுலரே. (௫௭)

ஆடவந் தோடயிர் மாய்ந்திடு மூலன்ற னங்கத்திலே
நாட வுயிர்புகுந் தேயவன் செய்து நயந்தபின்பு
தேடரி தானதன் னுடலிற் புகுந்திடுஞ் சித்திகற்றுக்
கூடுவிட் டேவசி சித்தன் மரபினர் கோகுலரே. (ருஅ)

ஆயிர நாமத் தவற்குச்செய் பூசனை யானவெல்லாம்
நேய மிவர்கடம் பொரு ளானிறை வேற்றலல்லாற்
றாயினு நல்ல சிதம்பரந் தன்னிற் றமனியப்பொற்
கோயி லமைத்துப சாரஞ்செய் தாரவர் கோகுலரே. (ருக)

நிலவிய வெள்ளிக் கிரியான சுத்தி னிணைந்துநிதம்
நலமுள வேணுவிற் கானங்கள் பாடி நயந்துருகி
அலமா னீங்கிய வானுயர் தோன்று மருளுருவாங்
குலமெனும் பேறதைப் பெற்றோர்கள் பாடியிற் கோகுலரே. (சுo)

பிரதோடஞ் சேவிக்கும் பெண்மக வேந்தும் பெருமைகண்டு
திரமா மனையிற்சென் றேசமைத் தாளச் சிறுவனட்போ
மறவாமற் பூசனை மண்வீட்டிற் கோவிட மாதுமதைக்
குறையாற் றுடைக்க வதுலிங்க மாக்கிய கோகுலரே. (சுக)

முழுத்தவர் போற்று மரன்செய்த முப்புர வெஞ்சமரில்
வழுத்துநற் றேரொன்று வானோ ரமைக்க வதிலிருந்து
மழுக்கரன் வெற்றி பெறவே மகிழ்வுடன் வானந்தொடர்
கொழுத்தநல் லேறு கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (சுஉ)

கவலையில் லாமற் சகத்துயிர் வாழக் கடவுளருந்
தவறிலை யாகத் தருமங்க ளோங்கவுந் தானறிந்தே
உவகைய தாகவு மெங்கு நிறைந்தவ னெண்டொடியைக்
குவலய மாவென வாண்டோர்கள் பாடியிற் கோகுலரே. (சுரு)

மீறிய ஞானச் சுடர்விளக் கேற்றிய மெய்யுணர்விற்
றேறிய மாதர் சுவையாற் சுகித்துச் செயல்பெறவே
ஏறிய கோடி யுகம்போய்த் திரித யுகமதனில்
கூறிய மூல ரவதரித் தோங்கிய கோகுலமே. (சுச)

நலமான பூசையிற் சிற்றுயர் கேட்டிட நல்லதீர்தம்
இலதேதென் றந்தணர் சீறிய போதவர்க் கீவதுவே
பலனுதம் வேள்வியி லென்னுத மென்றிவர் பண்பையெல்லாங்
குலமாதர் கூறி வணங்கிய பாடியிற் கோகுலமே. (சுரு)

உரைகட வாதவ ரன்பாளர் மாதவ னேரிரண்டு
மரைமலர்ப் பாத மறவாத சிந்தையர் மாயவற்குத்
திரையுறு பாற்கட லீந்து தயிர்நெய் செறியவென்றுங்
குரைகடன் மூன்று மமைத்தோர்கள் பாடியிற் கோகுலமே. (சுசு)

ஆட்டுடனுண் டாகு மயிலு மாவமு மன்பிலொன்றி
நாடகின் றேயுற வாடவுங் கேட்டிடு நான்மறையின்
பாடலென் றேவிண் ணவருட் களிக்கப் பசுப்புலியும்
கூடநின் றேற்கவும் வேணிசை கூறுவர் கோகுலமே. (சுஎ)

வளர்ந்தையி லேபிறை போலே தருமம் வளர்ப்பவர்கள்
தளர்ந்தவர்க் கேநடுக் காட்டினிற் பாலனந் தான்கொடுக்க
உளந்தய வானவ ரியாவரு முண்ணு முயர்குலத்தோர்
குளந்தையில் வந்தவர்க் கேவிருந் தேசெய் வர் கோகுலமே (சுஅ)

அடுத்தோர் பசுவினுக் கோர்பிடி புல்லை யளித்தவர்கள்
நடுத்தா ரணியினற் பாக்கியம் பெற்றுநற் சேய்கள்பெற்று
எடுத்தோங்கு சொர்க்கம் பெறுவா ரிவரெத் தனைபிடிபுல்
கொடுத்தா ரிவர்பல னளவிற் குறைவிலர் கோகுலமே. (சுகூ)

நறுந்திரை வீசிய மூன்றரைக் கோடி நதிப்பலனும்
அறிந்தன வேதத்தி னங்க முரைத்த ததிசய மாய்ச்
செறிந்திவர் தேனுவும் நீருண்டு வால்சுற்றச் சிந்துபுனற்
குறுந்துளிக் கொப்பில்லை யென்றும் புனிதர்கள் கோகுலமே. (எ௦)

மீறத் தவத்தருந் தேவரு நல்வரம் வேண்டத்தரும்
பேறெப் புவிதனி லுண்டென்ப ரானிப் புனிதர்க்கிதந்
தேறப் பலருந் தெளிந்தன்பு கூர்ந்துசெய் தாலுடனே
கூறப் பலிக்குநல் வாக்குள்ள பேறவர் கோகுலமே. (எக)

வடிவி லுதித்த பிராமண ராதி வருணங்களும்
படியி லுதித்தபின் நூல்பூண் டிருபிறப் பாளரென்பார்
நெடியவன் றன்னுருப் போலே யகத்தி னினைக்கவன்று
குடிமிமுந் நூலுடன் றுன்பிறந் தாரவர் கோகுலமே. (எ௨)

சம்புவி னற்கனி சிற்றுயர் கண்ணனுந் தான்பருக
அம்பொ னிறைந்தன கூடை யெடுத்தவ ளாயர்முன்பாய்த்
தம்பிய ரால்வந்த தென்றன னீகொண்டு தான்செல்கெனக்
கும்பிட்ட வன்செல வாசையில் லாதவர் கோகுலமே. (எ௩)

தலமெத் தனையுண் டதற்கேற்ற பூசனை தானதர்மம்
பலனைத் தருங்கோடி கன்னிகா தானங்கள் பண்ணிக்கற்பின்
நலமுற்ற கோசலை போலு மசோதை நகர்க்கழகாங்
குலபத்னி மாதருட் பெற்றோர்கள் பாடியிற் கோகுலமே. (எச)

மரகத மேனிநம் மாயனும் பால்வண்ண மாதவனுங்
கரசத மாகிய வாயருங் கந்துகங் கண்டடிக்க
உரமிக வெற்றி கவரு மிருவரு முவந்துவந்து
துரகத மேறி விளையாடல் செய்தவர் கோகுலமே. (எரு)

மண்டலத் தெங்கு முளதாம் பலநகர் வாழ்வதிலே
திண்டிறற் கஞ்சன் வராததொன் றில்லைசொற் சேர்நகரில்
அண்டப் படாத வரம்பெற்று நாளு மணங்கினருட்
கொண்டுற்ற நற்றிரு வாய்பாடி வாழ்பவர் கோகுலரே. (எசு)

கவலை விடமுணம் மாயோன் விண்ணோர்க்குக் கடைந்தமிர்தம்
உவகைய தாக வொருபாற் கடலி லுதவிசெய்தான்
தவளித பாற்கடத் தேதினந் தோன்றுந் தனியமிர்தாற்
குவலயந் தன்னிற் கவலைக டீர்ந்தனர் கோகுலரே. (எஎ)

மேவிய தேவ ரனைவரும் ரோமங்கள் வீசியவால்
தேவியு மாயன் மடிநான் முகன்முலை சேர்சுருதி
ஆவியு மீச னடித்தலந் தீர்த்த மதின்மயமாங்
கோவினப் பாலனஞ் செய்வோர்கள் பாடியிற் கோகுலரே. (எஅ)

மாறுப் பரிவுட னுயருங் கண்ணனு மாசுணவர்
ஆறு மெனச்செல வப்புறம் போக்கில்லை யாகநின்று
பேறுய்ப் பசுத்தங்கள் பால்பாதி யீயப்பெற் றேயிரண்டு
கூறுய்க் கிழிக்க மகிழ்வோர்கள் பாடியிற் கோகுலரே. (எகூ)

அடக்க முடையா ரரிய தரும மறிந்து செய்வார்
நடக்கு மறநெறி தான்கட வாதவர் நாரணர்க்குத்
தொடுக்கும் விளாவினி லாயிரந் தீவர்த்தி தோன்றநெய்யே
கொடுக்க வரங்கர் கருணைபெற் றாரவர் கோகுலரே. (அ0)

சேவிந்து பூணு மரனயன் றானுஞ் சிறந்தொன்றதாய்ப்
பூவிந்த மாக வளர்ந்தோன் றிருப்பெயர் போற்றுதற்கு
நாவிந்த மாக வனந்த மறைகள் நவில்வனபோற்
கோவிந்த பட்டந் தரித்தோர்கள் பாடியிற் கோகுலரே. (அக)

தோட்டிர டிக்கொண்டு மண்டலம் விண்டலஞ் சூழ்ந்தளந்த
நெட்டிநற் பாதம் பலதரம் வைக்கு நெடுமனையோர்
பட்டி சுார்க்கபி டேக முலைதுடப் பால்சொரியக்
கொட்டிலில் வாழ்பசு வீந்தவர் பாடியிற் கோகுலமே. (அஉ)

நூற்றெண் டிருப்பதிக் காலையிற் பூங்குட னூற்றுப்பத்தோ
டேற்றநற் பாற்பசுப் பூசனைக் கேற்றன வெப்பொருளும்
நேர்த்தி பெறவைத்து மார்க்கங்கள் தோறு நிறைந்தசத்ரங்
கோத்திரம் வாழவைத் தார்நந்த கோன்குலங் கோகுலமே. (அங.)

சாத்திரக் கங்கைப் புனல்படி வோர்கட்குச் சார்யமுனை
மாத்திர மப்பல மாடா விடிற்குறை வந்ததுண்டோ
நேர்த்தி யமுனையுங் காளிந்தி கோதா விரிநினைக்கக்
கோத்திர மோங்கிக் குருவாழ வாழ்கின்ற கோகுலமே. (அச)

வருதேச காலமி லுத்திரம் போய்வரு மாயவர்க்குத்
தருதேசி பால்சுடத் தன்கையில் வாங்கித் தயவதனால்
அருளேற வூக வனைத்தாய னென்றன் றரங்கர்புகல்
குருதே சிகனைப் பணிவோர்கள் பாடியிற் கோகுலமே. (அரு)

நளிவா கனம்பெறக் கடல்கடந் தேயவர் நன்மைமனத்
தெளிவாகி யெங்கள் பங்கனைச் சேர்ந்தகஞ் சேருதற்கு
நளிர்மா மலர்முல்லை யாயர்க் கியற்கைநல் வாசமுறுங்
குளிர்வாச சாந்தங் கொடுக்கப் புனைந்தவர் கோகுலமே. (அசு)

நன்றுள் புவியி லிவர்தேனு நின்றது நரகத்தினும்
அன்றுள வந்த திவர்தேனு வேயகல் பூவுலகில்
என்று லுழவ ரிவர்தேனு வாலுர மேத்திவைத்துக்
குன்றாத செல்வங் கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலமே. (அஎ)

பண்டாந் தவம்புரி யோர்விந்தி யாதரர் பற்பமின்னை
உண்டான சக்கரத் தேயமைத் தேயுயர் யோகமிகக்
கண்டான் விஜய னற்சேய் பிரவிடை காசினியிற்
கொண்டா னரபதி தங்கோத் திரமெனுங் கோகுலரே. (அஅ)

உள்ள புவியிற் பொருள்படைத் தென்ன வுசவுபுனற்
பள்ள நிறைந்த தடாகமுண் டாக்கிப் பரிந்துநிதி
அள்ளிக் கொடுத்து மிவர்தேனு வாய்வைத் தருந்துபுல்லைக்
கொள்ளெண் ணான்கு தருமம் புரிந்தவர் கோகுலரே. (அகூ)

இடிக்கட்டி செய்துமின் னில்லாமன் மேகங்க ளெங்குமின்றிப்
படிக்கட்டி யாண்டு பனிரண்டு வாக்கியம் பண்ணுமன்னார்
மடிக்கட்டி மேட மதினான்கு கோட்கண் மயங்கவென்று
கொடிக்கட்டிக் கொண்ட வீரர்கள் பாடியிற் கோகுலரே. (கூ0)

தலமேழில் மாயன் சமயம் வகுத்திடத் தான்குருவாய்
உலகூடு நான்கு வருணமு மோங்கி யொளிபெறவே
நலமாய் நடுவில் வைணவ நாரண நல்லுருவின்
குலமேவு வைணவ ராகவந் தாரவர் கோகுலரே. (கூக)

நலத்தன யாகங்க ளுள்ளன செய்து நளிர்புனல்சூழ்
தலத்தைப் புரக்கின்ற கோனாதி நந்தன் சந்ததியாய்ச்
சொலப்புக ழோங்க மநுநெறி யோங்கிடச் சூழ்ந்தமதிக்
குலத்தினி லாதவர் தங்கோத் திரமெனுங் கோகுலரே. (கூஉ)

நலத்தைப் பொதுப்பி யருளொன்று நாற்குல நன்குறலாற்
பலத்தி லதிக மிவர்பஞ்ச கௌவியம் பார்கொளலாற்
றலத்தை விளக்கும் புனித மிவர்பொருட் டாமென்றதாற்
குலத்திற் றிலதமென் றோதப்பெற் றாரவர் கோகுலரே. (கூ௩)

மூலத் திருமரு மார்ப னுருவின் முளைத்தவர்நற்
சீலத்தர் தேனுவைப் பாலனஞ் செய்பவர் செந்திருமுற்
காலத்திற் பின்னைப் பிராட்டி யெனப்பெற்ற கருணையெனும்
கூலத்தர் ஞானத்தர் மேலுற்ற பாடியிற் கோகுலரே. (௯௪)

மறையோது வார்முத லுலாம் வருணங்கண் மாண்புபெற
முறையாக வூணி னறுநெயும் பாலு மோர்பிறவும்
நிறைவாக வேண்டிய வெல்லா முதவிய நீதியினூற்
குறையாத செல்வ ரிவரென்ற பேறவர் கோகுலரே.

நாவி லனங்கள் புசிப்போர்க்குச் சுத்தியும் நல்கவல்லார்
பூவில் விளங்கிய தேவால யங்களைப் போற்றிடவே
மேவிய திங்களும் வெய்யோனும் போல விடிவிளக்குக்
கோவில் விளங்கநெய் யீந்தவர் பாடியிற் கோகுலரே.

நேறிபெறு சேய்க்கும் புகர்க்குநல் லாட்சி நிலைக்கவென் றுஞ்
செறிபல மான மனைபணி ரண்டினுஞ் சேய்முதலாய்
அறிவரி தாமக மேரு முகட்டி லரிதிசையிற்
குறிபெற மேட மிடபம்வைத் தாரவர் கோகுலரே. (௯௭)

காதா லுணர்ந்திடுஞ் சோதிடங் கூறுங் கனயோகமும்
வேதாக மங்கள் விளக்கிய யோகமும் வேறுளதும்
போதா தெனமுன் வியாச ரறிந்திவர் போற்றவளர்
கோதாளி யோக மதிகம தாப்பெற்ற கோகுலரே. (௯௮)

நேறியாற் சகத்தினிற் கீர்த்திபெற் றோர்க ணிறைசெல்வரென்
றறிவாளர் பேசிய தல்லாம லன்பரென் றுண்மைபெற்றோர்
செறிவான வேதத்தி னங்க மறிந்து செயலையெல்லாங்
குறியா யுரைத்தமிர் துண்டோர்கள் பாடியிற் கோகுலரே. (௯௯)

செழும்பாரின் முன்னங் கொடாமற் பிறந்து திரிபவர்க்கு
மழுங்காத செல்வம் வருவதண் டோவதின் வாறறிந்து
தொழும்பாய் வறுமைத் துயர்தாங்கிச் சித்தஞ் சுழல்பவர்க்குக்
கொழும்பா லனங்கள் கொடுக்குந் தியாகிகள் கோகுலரே. (க00)

அடியிற் பெரிய துலகளந் தானடி யாதிமன்னர்
முடியிற் பெரியது சோழன் றிருமுடி முத்தமிழ்சேர்
படியிற் பெரியது பாண்டியன் சங்கமிப் பாருலகிற்
பெரியது கோபாலர் தங்கள் குலக்குடியே. (க0க)

யுந் திருப்பாற் கடலிவர் தன்மனைபோல்
பிலும் பிரானரு ளாலண்ட ராய்த்தழைத்தார்
பெறுகின்ற கோகுலப் பாவையர் மகிழ்வடைய
ள் பெரும்புகழ் கொண்டார் குருவரு ளோங்கவுமே. (க0உ)

வாழ்த்து.

குருவாழி கோவலர் கோக்குடி வாழி கொடிக்கருட
உருவாழி முல்லை நிலம்வாழி யாக்குல மோங்கிவளர்
திருவாழி பாடி நகர்வாழி வெற்றி சிறந்தமுல்லை
மருவாழி மாமறை வாழி தமிழ்நிதம் வாழியவே.

கோகுல சதகம் முற்றிற்று.

ஸ்ரீ

கோகுலசதகத்தின்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அடக்க	14
அடியிற்	18
அடுக்குந்	3
அடுத்	12
அண்டங்	1
அம்போ	7
அன்று	9
ஆ	
ஆடலுண்	12
ஆடவங்	11
ஆடற்	7
ஆயிர	11
ஆவர்த்	4
இ	
இடிக்கட்	16
உ	
உணத்	10
உண்டா	5
உரைகட	12
உள்ள	16
ஒ	
ஒலிபெ	8
க	
கஞ்ச	8
கவலையில்	11
கவலைவி	14
கா	
காதா	17
கு	
குருவாழி	18
ச	
சங்கத்	7
சமர்த	5
சம்புவி	13
சா	
சாத்திரக்	15
சீ	
சீர்மே	1
சு	
சுற்றிய	4
செ	
செழும்	81
சே	
சேவிந்து	14
ஞா	
ஞாலங்	3
ஞானக	8
த	
தணவா	6
தண்டா	6
தாங்க	18
தருமன்	10
தலஞ்	4
தலமெத்	13
தலமே	16
தவமு	10
தளவ	9
து	
துடிகோத்	9
தே	
தேறப்	2
தொ	
தொடுத்தகல்	2
தொடுத்தநற்	6
தொட்டிர	15
ந	
நடையாய்	8

செய்யுள்.	பக்கம்.
நம்பிட	7
நலத்த	16
நலத்தை	16
நலமா	12
நளிர்	3
நளிவா	15
நறுந்	13
நற்றுஞ்	3
நன்றாக	9
நன்றாள்	15
நா	
நாலா	7
நாவி	17
நி	
நிலவியவ	2
நிலவியவெ	11
நீ	
நீட்டுற்	5
நூ	
நூற்றெண்	15
நெ	
நெறிபெ	17
நெறியா	17
ப	
பணத்	6
பண்டாடி	2
பண்டாங்	16
பண்டான	5
பழையா	1
பா	
பாடற்	10
பாடிக்	5
பி	
பிரதோ	11
பிலமாமிலங்	4
பிலமாமிரா	6
பு	
புழுங்	4
பூ	
பூபாரங்	10
பூபால	10
ம	
மணங்	1
மணமு	8
மண்டலத்	14
மண்டலங்	3
மதித்	7
மரகத	13
மழவி	2
மறையோ	17
மா	
மாகன	9
மாதனங்	9
மாரியி	5
மாவா	8
மாரூப்	14
மீ	
மீறத்	13
மீறிய	12
மு	
முழுத்	11
முறையா	2
மூ	
மூலத்	17
மே	
மேவிய	14
வ	
வடியாய்	6
வடிவி	13
வருதேச	15
வளங்	12
வா	
வானென்	3
வே	
வேலாயு	4

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமாணிக்கமாமலை

திருத்தொண்டர் சதகம்.

இஃது

காஞ்சீபுரத்தில் தலமூற்றுரென்னும்

கச்சிமயேசுரகுலதிலகராகிய திருப்பாண்டிக்கொடுமுடி

மலைக்கொழுந்து நாவலரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1914

விலை அணா 2

குருவேதுணை.

திருநெல்வேலி புதுத்தெருவிலிருந்த ம-ா-ா-ஸ்ரீ, வித்வான்

அழகிய சொக்கநாதபிள்ளையவர்க ளியற்றிய

சிறப்புப்பாயிரம்.

கோச்சகக்கலிப்பா.

பொன்னிநதிச் சோணாட்டிற் காவிரிப்பூம் பட்டினத்துச்
சென்னியெனு மன்னிகலாற் சிந்தைநொந்து சார்வணிகர்
முன்னியவா றுதரித்துத் தில்லைமூ வாயிரர்போற்
பன்னிருவ ரெனவவரைப் பார்சொலச்சேர்ந் துறைபரமன். (க)

தோட்போக்கி வாணணைமாய்த் தவன்றுருவப் பாதலக்கீழ்த்
தாட்போக்கி நின்றபிரான் றனிநுதற்கட் டழற்படையால்
வேட்போக்கி மலைமகளை மணந்தருணை வெற்பனைய
வாட்போக்கி சிவதையெனு மாணிக்க மலையமர்ந்தோன். (உ)

அலைக்கொழுந்து முடங்குகங்கை யாற்றினொடுங் கீற்றுமதிக்
கலைக்கொழுந்து படருமுடித் தழும்பர்திருக் கழலிணைக்கே
யிலைக்கொழுந்து மலரின்வகை புலருமென வெழிற்கச்சி
மலைக்கொழுந்து நாவலன்பா மாலைதொடுத் தணிந்தனனால். ()

சாத்திடுமம் மாலிகைப்பேர் திருத்தொண்டர் சதகம்மீ
தேத்திடுநல் லடியாகத் திருளகற்றி யெப்பற்று
நீத்திடுமெஞ் ஞானநல்கி நிமலனடி நிழலிருத்திக்
காத்திடுநிச் சயமதனைக் காதலா மலகமென. (ச)

தேர்ந்துருக்க மிகலானு மகிலமெங்குஞ் சிறக்கவுள்ளங்
கூர்ந்துமேற் கூறியபன் னிருவரானுங் குழுவினரு
நேர்ந்துசில பத்தர்களும் வேண்டுநிமித் தமதானு,
மோர்ந்து பெருங் கல்விபறி வொழுக்கமுதா லுபரொருவன்.()

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இந்திரை யான்றாள் பூசித் தின்னருள் பெற்ற நீராற்
செந்திரு வாரூ ரென்னத் திகழ்தலத் துதித்த செல்வன்
மந்திராக் கரங்க ளஞ்சும் வைகலுஞ் சிந்தை செய்வோன்
றந்திர மதியி னான்செந் தமிழ்வளங் கொழிக்கும் வாயன். (௬)

சிவனடி யார்க டம்மை யவனெனப் பேணுஞ் சீலன்
றவமரு ளுருத்தி ராக்க நீற்றணி தழைக்கு மெய்யன்
கவர்புறச் சமைய மேற்கொள் கண்டகர்க் கசனி போல்வா
னவனியிற் பொறையு ளானென் னனையவர்க் குயிரே யன்னான்

அப்பர்சுந் தரர்சம் பந்த ரருட்டிருப் பாட லெல்லாந்
துப்பவிர் சடையான் காதிற் றும்புரு வெனவே பாடு
மொப்பருஞ் சொக்க லிங்க வோதுவா மூர்த்தியென்னச்
செப்பபி தானம் பெற்ற செகப்பிர சித்த னானோன். (அ)

ஷை வேறு.

கருதுபுலப் பிரதிகளைக் கொண்டுநன்கு பார்வையிட்டுக்
கமழுந் தென்றன்
மருவுமலைக் குறுமுனிவன் கமண்டலோ தகப்பொருநை
வளப்பந் தன்னாற்
பருவரலி னெல்லைநகர் முத்தமிழா கரவச்சிற்
பதிப்பித் தும்ப
இருசுடர்க ளுள்ளமட்டும் பெருகுபுகழ்ப் பயிரைவளர்த்
திட்டான் மன்னோ. (௯)

குருவே துணை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர் சதகம்.

கணபதி காப்பு.

நேரிசை வெண்பா.

மாதினொரு பாகர்திரு மாணிக்க மாமலையார்
மீதிலன்பர் பேறுகொண்ட மெய்ச்சதக—மோதிடவே
தந்தனக்கு மெட்டாத சங்கரிதான் பெற்றுகந்த
கந்தனுக்கு முன்னுதித்தோன் காப்பு.

அவையடக்கம்.

ஆசிரிய விருத்தம்.

பூமேவு வன்றொண்டர் கருணைகூர்ந் தெழில்பெறப்
புகறிருத் தொண்டத் தொகைப்
பொற்புலவு நம்பியாண் டார்கவித் துறைவகைப்
பொருள்கொண்டு சேக்கிழார் சொல்
நாமேவு தொண்டர்கள் புராணவிரி கொற்றையார்
நவிலும் புராண சாரம்

நாடித் திருத்தொண்டர் சதகமதை நாயினே
 னுவலர்முன் னோது பான்மை
தூமேவு சோலையிற் சோனைமுகில் கண்டுகளி
 சூழ்ந்துவிளை யாடல் புரியுந்
தோகைமயில் கண்டுதன் சிறகரை விரித்தாடு
 சூட்டுவான் கோழி யொப்பா
மாமேவு வெள்ளைவிடை மீதேறி யன்பர்முன்
 வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
 மாணிக்க மலை நாதனே. (க)

தொண்டர் நூற்சிறப்பு.

படியிலகு மனுநெறி நடத்திவரு முத்தமப்
 பல்லவ னெனுஞ் சோழன்முன்
பைந்தமிழ்ச் சீவகச் சிந்தா மணிக்கினிமை
 பகர்பொழுது சேவை வேளாண்
குடிபெறு மமைச்சரென வருசேக்கி ழார்மடக்
 குண்டர்பொய் நூலி ருமையுங்
குணங்கொடா திருமைக்கு முறுதிநூல் வேறெனக்
 கூறவந் நூலியா தென
வடிகள்புக ழாரூர் தொண்டத் தொகைப்பதிக
 மதன்பொருளை யானை முகனு
லறிந்தினிது நம்பிசொலு மந்தாதி வகையென்ன
 வாசன்விரி பகர்க வெனவே
வடிதமிழ்ச் சேக்கிழார்க் குலகெலா மென்றுமுன்
 வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
 மாணிக்க மலை நாதனே. (உ)

நாயனார் தொகை.

வேதியர்கள் பதின்மூவர் சைவமறை யோர்நால்வர்
மிகுமருத் துவரி லொருவர்
வேந்தர்களி லறுவர்குறு நிலமன்ன ரைவர்புகழ்
விரவுதன வணிக ரைவர்
தீதில்வே ளாளர்பதின் மூவர்குய வர்கள்வேடர்
திகழ்பாணர் கடைஞர் செக்கார்
செய்யவீ ழுவர்தூசர் பரதர்சா லியர்தனிற்
செப்புமோ ரொருவர் மிக்க
நீதிசெறி யிடையர்களி லிருவர்மா பறியார்
நிகழ்ந்தபதின் மூவ ரென்று
நீணில மகிழ்ந்துகொண் டாடவழி யாதபுகழ்
நித்திபா நந்த சைவ
மாதவர் பணிந்திடப் பாதமலர் தந்துமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௩)

நாயனார்கள் திருமரபு.

மோனமிகு தில்லையந் தணர்ஞான சம்பந்தர்
முருகர்தண் டீசர் நக்கர்
முறைமைபெறு சோமாசி மாறர்கண நாதர்மென்
மொழிசிறப் புலியர் கலைபர்
ஞானமிகு பூசலை யாப்பூதி பசுபதியர்
நமிநந்தி வேத மறையோர்
நவிலுய்வன் றொண்டரிசை ஞானியர் புகழ்த்துணைவர்
நற்சடையர் சைவ மறையோர்
போனகந் தருசிறுத் தொண்டர்நன் மருத்துவர்
புகவிடங் கழிபர் சேரர்

பொற்புகழ்ச் சோழர்நெடு மாறர்மங் கைக்கரசி
போற்றுகோச் செங்கண் வளவர்
மானிலம் புகழ்வேந்தர் தாள்பணிந் திடவுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௪)

திருவுலவு கூத்தர்நர சிங்கர்சே தித்தலைவர்
செய்யகா டவர்கோன் கழற்
சிங்கர்குறு நிலமன்ன ரமர்நீதி மூர்த்தியார்
திகழியற் பகை யம்மை யுந்
தருவுயர் கலிக்கம்பர் வணிகர்திரு நாவரையர்
சாக்கியர் கலிக் காமனூர்
சத்தியார் விறன்மிண்டர் மூர்க்கர்கோட்
புலியமொழில் சாற்றுமரி வாட்டாய னார்
கருணையிளை யான்குடிப் பதிமாறர் வாயிலார்
கருதுமுனை யடுவர் மானக்
கஞ்சாற னார்செருத் துணைநாய னாரெனக்
கழறும்வே ளாளர் தொல்சீர்
மருவுமன தன்பினிற் றிருவருள் புனைந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௫)

செப்பரிய திருநீல கண்டர்குய வர்வேடர்
செம்மல்கண் ணப்பர் பாணர்
செய்யதிரு நீலகண் டப்பாணர் கடைஞர்நாட்
செல்வர்செக் கார்கலியனு
ரொப்பிலீ ழக்குலத் தேனாதி யார்வணு
ருயர்குறிப் புத்தொண்டர் மெய்

யோங்குபர தவரிலதி பத்தர்சா லியர்குலத்
துற்றசிவ நேச ரிடையர்
தப்பிலாத் திருமூல ராஞயர் மரபிலார்
தண்டியெறி பத்தர் புல்லர்
தருகுலச் சிறைகாரி யொப்பிய குறும்பரடி
சார்ந்தவடி யாருண் மற்றும்
மைப்புய லெனுங்கருணை யுற்பன நிறைந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதநகர்
மாணிக்க மலை நாதனே. (௬)

குருவருளால் முத்திபெற்ற நாயனுர்கள்.

பூமருவு தெய்வமலை மாமக டனத்திருப்
பொற்கிண்ண வமுதுண்டு மெய்ப்
போதமிகு தமிழ்மாலை யோதுசம் பந்தர்பொய்ப்
புத்தர்வலை நீத்து மின்று
ணேமருவு நாவரையர் திருமூலர் நின்றசீர்
நெடுமாற ரப்பூதி யார்
நேயமுறு சோமாசி மாறர்மங் கைக்கரசி
நீலகண் டப்பாணர் பண்
பாமருவு மிழலைக் குறும்பர்கண நாதரொடு
பகாரிய சைவ நெறியே
பற்றிய குலச்சிறையு மானவிப் பதிெனுருவர்
பாங்குலக மோங்க நான்கு
மாமறை பராவுமுப தேசகுரு வாகமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதநகர்
மாணிக்க மலை நாதனே. (௭)

இலிங்கத்தால் முத்திபெற்ற நாயனார்கள்.

புகழ்பெறுங் கலையரெறி பத்தர்கூற் றுவனார்
புகழ்த்துணைவர் கண்ணப்பர் கோட்
புலியரா னாயர்பசு பதியர்சாக் கியர்விறற்
பூசலையர் புல்லர் முருகர்
அகமறுவில் சண்டேசர் நமிநந்தி வாயிலா
ரருள்சேரர் தண்டி யடிக
ளதிபத்தர் கலியர்வாட் டாயர்கா ரியர்தக்க
வையடிக ணீல நக்கர்
திகழ்பெற வருஞ்சிறப் புலியர்திரு நாட்போவர்
செய்யசெங் கட்சோழ னார்
செப்பிய கலிக்காமர் பொற்கழற் சிங்கர்வான்
செருத்துணைவர் மூர்த்தி யாரா
மகிழுமா றைந்தடியர் பணிலிங்க வடிவெனமுன்
வந்தடிமை கொண்ட கபிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனை. (அ)

வேடத்தால் முத்திபெற்ற நாயனார்கள்.

கணிதமிகு திருநீல கண்டர்விறன் மிண்டர்படை
கற்றுவல வேனாதி யார்
கஞ்சாற னார்சிறுத் தொண்டர்நர சிங்கர்பொய்
கடிகலிக் கம்பர் மூர்க்கர்
பணிதனிறை சத்தியா ரமர்நீதி யார்மிகப்
பரவிய புகழ்ச் சோழனார்
பண்புறை திருக்குறிப் புத்தொண்டர் சிவனேசர்
பகருமெய்ப் பொருண் மாறனார்
அணிதரும் போரின்முனை யடிவர்கா ரைக்காலி
லம்மையு மிடங்கழியர் ஸ்ரீ

ராகிய வியற்பகையர் மேயபத் தொன்பதடி
யார்கண்மன தன்பின் மிக்க
மணிதரும் பூதிசா தனவேட' வடிவெனமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனை. (கூ)

இயலிசைத்தமிழ் நாயனார்களும் ஆச்சிரமமும்.

தனிமைபெறு திருஞான சம்பந்தர் நாவரையர்
தக்கபே யாரிய லிசைத்
தமிழ்மூவ ராயர் திரு நாட்போவர் பாணர்சொற்
றருபரம னைப்பாடு வார்
பனுமிசைத் தமிழ்நால்வ ரையடிக டிருமூலர்
பயில்காரி யார்சேர னார்
பண்புபெறு பொய்யடிமை யில்லாத புலவரியல்
பகர்வலோ ரைவர் மறுவிற்
புனிதமுறு மில்லறந் திருநீல கண்டனார்
பொருமியற் பகையு ளிட்டார்
புகலரையர் மூர்த்தியார் துறவறஞ் சண்டீசர்
புகல்பிரம சாரிய ருளோர்
மனவாக்கு டன்காய மொருமையுற் றடியவர்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனை. (கo)

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்குலவு கயிலையிற் பணிவிடை யகன்றுதென்
பால்நாவ லூர்ச்சடைய னார்
பாலரென வுற்றருட் டுறைமண முடிக்குமுன்
பரமனுக் கடிமை யாகி

விண்குலவு மதிகைசேர்ந் தாரூரி லருள்புரிய
மென்பாவை தோள் புணர்ந்து
விறன்மிண்ட ரூடியரு ளாற்றொண்டர் புகழ்பாடி
வெண்குண்டை நெல்லை ழைத்துத்
தண்புகலி யூர்ச்செங்கல் பொன்செய்து முதுகுன்றர்
தந்தபொரு ளாற்றி லிட்டுத்
தடமெடுத் தெழில்சங்கி லிக்குரிமை யாய்த்தூது
சாற்றியொரு தனைபழைத்து
மண்குலவு சேரனொடு வெண்கய மதிற்செலமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (கக)

தில்லைவாழந்தணர்.

சொல்லுலவு சொர்ணமய மன்றுளார் திருவடித்
தொண்டின்மனம் வைத்த பெரியோர்
தூயநான் மறைகளா றங்கம்வல் லார்கண்முத்
தீயுளா ரறுதொழிலி னர்
இல்லறந் தனில்வழார் கருணைதவ மறிவுபொறை
யெழில்சீல மிக்க புகழார்
இனியகண் டிகைபூதி சாதனத் தோர்பணிந்
தேவரு மிறைஞ்சு செல்வத்
தில்லைவா ழந்தணர்கண் மூவாயி ரத்தொகைத்
தெய்வமறை யோர்கண் மகிமை
செப்பவெவர் வல்லுந ரெனப்புவனி யோதவே
தில்லைவா ழந்தண ரென
வல்லவன் றொண்டரைப் பாடுநீ யென்றுமுன்
'வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (கஉ)

திருநீலகண்டநாயனார்.

கழனிசெறி தில்லைநகர் வேட்கோவர் திருநீல
கண்டர்மிகு காத லோடுங்
கருணையடி யார்க்கமுது செய்வதற் கினியமட்
கலமளித் திடுவ ரன்பா
விழைதனப் பொதுமாதர் பாலணைய வதுதெரிந்
தில்லவள் பொருதாடி நீ
ரெமைத்தொடிற் றிருநீல கண்டமென வஞ்சிமா
லின்பந் துறந்திளமை போய்ப்
பழையவய துற்றவர்மு னற்றவ னெனத்தமது
பாத்திரந் தந்தொ ளித்துப்
பலநா ளகன்றுகேட் பவர்கள்கா ணுமைமறு
பாத்திரந் தரவெ றுத்து
வழுவிறட மூழ்குவித் தவரிளமை பெற்றிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைநகர்
மாணிக்க மலை நாதனே. (கஙு)

இயற்பகை நாயனார்.

போதமரு மருதநீர் நாட்டினிற் காவிரிப்
பூம்பட்டி னத்துள் வணிகர்
புகழியற் பகையடி யவர்கள்வேண் டியவெலாம்
பொருந்தக் கொடுக்கு நாளிற்
காதல்பெறு தூர்த்தமறை யோனெனச் சென்றுநின்
காதலி தனைத்தரு கெனக்
கழறவப் படிதந் தனுப்பவே தமரெலாங்
கருதிமே யதடைகள் செய்ய
வோதுபழி யீதென்று வந்தவரை வீட்டியிடை
யூறெலாம் விலக்கி யாங்கே

உற்றதுணை யாகிவரு மற்றவர்த நிலைமையினை
யுலகெலா மறிய வேண்டி
மாதுமையி னோடுவிடை யேறியெதிர் நின்றுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கச)

இளையான்குடிப்பதிமாறனார்.

பாரின்வள முழவுதொழி லாருமிளை யான்குடிப்
பதிமாற னேரின் மிக்க
பாக்கிய நிறைந்தடிய ருண்டியறு சுவைநல்கு
பண்பினர்செல் வங்கு றைத்துக்
காரின்மழை சாடநடு யாமமனை மூடிக்
கடும்பசி பெறுங் காலையிற்
கடிந்தோ ரெனச்செலக் கண்டமுது செயவன்பர்
காதலியை வினவ வவளிவ்
வூரிலார் தருவரிவ் வேளைவே றிலைவயலி
னுண்டுநென் முளைக ளெனவே
யோதவயல் சென்றரித் தில்லிலக் காற்சமைத்
துறுபயிர்க் கறிசெய் தன்பால்
வாரிரமு தண்கவென வழலுருவ மாகிமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கரு)

மெய்ப்பொருள் நாயனார்.

நன்னய மிகுஞ்சேதி நாட்டினிற் கோவலூர்
நற்குடி விலாட மன்னர்
நம்புதிரு வேடமெய்ப் பொருள்கொண்ட சிந்தையெந்
நாளுமுறை நெறிவழா தார்

பின்னைமறு மன்னர்சம ருன்னிவலி தோற்றடற்
பெறவரி தெனத்தீ தகம்
பெற்றுமிக் கவரெனக் கைப்படை காந்தவொரு
புத்தகக் கவளி யேந்தி
யுன்னிவா யிற்றடை விலக்கிமா தொடுமன்ன
னுறுதுயில் கூரிடஞ் சென்
றுபசார முறஞான மொழிகுவ னெனப்பணி
வுறவஞ்ச நினைவு செய்ய
மன்னன்மெய்ப் பொருளென்று நன்னெறி புரிந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (கசு)

விறன்மிண்டநாயனார்.

விந்தைபெறு மலைநா டியர்ந்தசெங் குன்றாரில்
வேளாளர் தொல்குலத்தில்
விறன்மிண்டர் சிவசமய நெறிகொண்டு பலபதிகண்
மேவியடி யார்களோடுப்
பந்தமற மகிழ்வினொடு மாரூரின் மேவுநாட்
பரவையார் தோண் மணந்த
பாங்கர்வன் றொண்டர்வந் தடியார்க டிருவடி
பணிந்திடா தேகவதனுற்
சிந்தைமிக வூடியது கண்டுவன் றொண்டரைத்
திருவருளி னால்நிறைந்த
சீர்பெறுந் தொண்டர்தொகை யோதுகென வன்றொண்டர்
செந்தமிழ்ப் பதிக மோதி
வந்தனை மொழிந்தன்பர் புந்திமகிழ் வாகமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (கஎ)

அமர்நீதிநாயனுர்.

அருள்பெறும் பொன்னிநா டிலகுபழை யாறையூ
ரதன்வணிக ராடை மாடை
யளவிலெண் ணிதியுடைய வமர்நீதி யாரடிய
ரன்புவைத் துடைகோ வணந்
தருவர்திரு நல்லூர் விழாவின்மட முறைபொழுது
தக்கசிறு முனிவர் பொற்கைத்
தண்டிலிரு கோவணங் கொண்டுசென் றிடவன்பர்
தாமமுது கொள்க வென்ன
வருவநீர் தோய்வமென் றெருகோவ ணந்தந்
தொழித்தவந் தீர மாற்றெம்
முடைகோ வணந்தனைத் தாவெனக் காணவிலை
வேறென்று தருவலென நேர்
மருவுநிறை தாவெனத் தொண்டர்நிறை கோலுறமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநகர்
மாணிக்க மலை நாதனே. (கஅ)

எறிபத்தநாயனுர்.

சீதவயல் நீடுகரு வூரிலெறி பத்தர்மெய்ச்
சிவனடியர் துயர மெல்லாஞ்
சிதைப்பலென் றேபர செடுத்திடுந் திறலினர்
சிவகாமி யார்வை கறைப்
போதுகொய் தாணிலையர் மீதுபுனை மலரைப்
புகழ்ச்சோழர் கைம்மா மதம்
பொழிந்துசித றத்தொண்டர் சிவதா வெனுஞ்சொற்
பொருமலெறி பத்த ரூடி
மோதவய மாவீரர் மாயவெவ் தன்கண்டு
முன்புநின் றென்னுயிரை நீர்

முடியுமென வாளீய வாங்கிவாள் தன்கண்ட
மூட்டியரி பொழுது விரைவால்
மாதங்க மொடுபாக ருய்யவருள் செய்துமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கக)

ஏநாதிநாயனார்.

சாற்றுசோ ணட்டெயின னூரிலீ ழக்குலச்
சான்றரே ஞதி நாதர்
தலைவரெழில் வாட்படைத் தொழில்விஞ்சை புரிதிறமை
சார்ந்துவெண் ணீற்றன்பி னர்
தோற்றமிகு தாயத்தி லிரூரன் வாட்படைத்
தொழில்கண்டு மிதமிஞ்சி யே
சொற்சபத மொடுகங்குல் புலர்காலை சென்றணி
தொடுத்தம ரிழைத்து வஞ்சத்
தேற்றமன தொடுநீறு சாத்திமறை வாயயலர்
செல்லாம லிருவோர் செருச்
செய்யநுதல் நீறுகண் டேழைபோல் நிற்கச்
சினந்தவ னடர்ப்ப வன்பர்
மாற்ரு ரெனுந்திருவெண் ணீற்ரு ரெனத்தொழமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (உ0)

கண்ணப்பநாயனார்.

கானிலகு போத்தப்பி நாடுடுப் பூர்வேடர்
காவலவ ரெனு நாகனர்
காதலுற் றிடுதிண்ண னர்வேட்டை சென்றுதென்
காளத்தி மலைநாத ருக்

கூனிலறு சுவைபெறு மிறைச்சிவாய் மஞ்சனமு
முச்சிமலர் தந்தறு தின
முகந்திடக் கண்டமெய்ச் சிவகோச ரிக்குமன
துறுதுய ரகற்ற விழிநீர்
தானிலங் கியவருவி யோடவு மருந்திடத்
தானடங் காத போதுந்
தன்கண் ணிடந்தப்ப நிற்கமறு கண்குருதி
சாயவது நீக்கு போது
மானிலந் தன்னிலென் கண்ணப்ப னெனவுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (உக)

குங்கிலியக்கலையநாயனார்.

காவுறைந் திடுபொன்னி நாடெனுந் தென்றிருக்
கடவூரின் மறையோர் தமிழ்க்
கலையர்குங் கிலியவெண் புகைநறும் பணிவிடைக்
காதலார் கலியி னன்மான்
மேவுமனை யாள்தாலி கொண்டுநெற் கொளவென்று
மிக்கருங் கிலியம் வாங்கி
வேண்டுபணி விடையன்பு பூண்டமர்ந் திடவில்லின்
மிகுசெல்வ மகல வருளா
லேவியடி யாரமுது பாலுட னருந்தவு
மியல்பனந் தாளி லரச
னெண்ணமுடி வாகவும் வாகீச ருக்கும்வினை
யிருமொரு பிள்ளை யார்க்கு
மாவளத் துடனமுது தானளித் திடவுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (உஉ)

மானக்கஞ்சாறநாயனார்.

கன்னல்வயல் சூழ்கஞ்சை நன்னகர்க் குடியிலகு
காராள ரென்னு மானக்
கஞ்சாற னார்தொண்டர் நெஞ்சாரு மினியபணி
காதலொடு தருபண்பி னார்
தன்னமையு டன்பெற்ற கன்னியே யற்குரிமை
சாற்றுமண வநுவை கேட்டுத்
தக்கமா விரதர்போ விற்குள்வா வன்பர்பெண்
டன்னையடி பணிவித் திட
வன்னமின் குழல்நமது பஞ்சவடி செய்வதற்
காமென மகிழ்ந்து புதல்வி
யளகமது சுரிகையி லரிந்தருள வாங்கிமறை
வாய்வின் ணெழுந்த வாக்கின்
மன்னிய கலிக்காமர் நன்மணஞ் செய்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைநகர்
மாணிக்க மலை நாதனே. (உ௩)

அரிவாட்டநாயனார்.

தழைத்தவயல் நீர்நாட் டுயர்ந்தகண மங்கலந்
தன்னில்வரு பின்னவர் குலத்
தாயனா ரெந்தைதிரு நாயனார் மாவடுத்
தக்கசெந் நெற்கீரை யுஞ்
செழித்திடத் திருவமு தளிப்பவர்க் கேவறுமை
சேர்ப்பவயல் சென்று கூலி
செய்துகரு நெற்றங்க டமதுண்டி யாகவே
செந்நெல்பணி குறையாது கண்
டிழைத்திடக் கருநெற் றவிர்த்துமுண வில்லாத
தெனினுமனை யவளு முன்போ

விடுபரிசு கொடுவாக் கமரில்வீ ழக்களத்
தீட்டும்வாள் பூட்ட வெதிராய்
வழுக்கிய கமர்க்குள்நன் மாவடுவி டேலெனமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (உச)

ஆனாயநாயனார்.

நண்ணுமழ நாட்டின்மங் கலநகரி லிடையர்குல
நண்ணுமா னுயர் சிந்தை
நந்திநம் பற்கடிமை யென்றுநிரை மேய்ப்பபொழில்
நவில்துணைக் கருவி நெறியின்
புண்ணிய மிகுந்ததிரு வெண்ணீறு படிவம்
பொலிந்துபூங் கொன்றை நீழற்
போந்துதிரி கண்குழலி லஞ்செழுத் தமுதம்
புகட்டியா னந்த மூறும்
பண்ணிலக வாயிரங் கண்ணனுல கோர்முதற்
பயில்சரா சரமு ருக்கப்
பைங்குழை பெருக்கவந் தன்பநீ தினமுமிப்
படியூ தெனப் புகன்று
வண்ணமிகு மலர்மாரி விண்ணவர் பொழிந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (உரு)

மூர்த்திநாயனார்.

தாட்டிக மிகும்பாண்டி நாட்டினிற் றென்மதுரை
தனில்வணிகர் மூர்த்தி யார்நற்
சந்தனக் காப்பிடும் புந்திமற வாதபணி
தருநாளின் மறுமன்னர் போர்

நாட்டிமா றன்படையை வீட்டியுல காண்டமனர்
நாவின்மொழி பொய்யு கந்து
நாயனர் பணிவிடைக் கிடையூ றிடும்பொழுது
நன்முழங் கைகள் கல்லிற்
றீட்டியுதி ரந்தசை சிதைந்தென்பு கரையமெய்ச்
சிந்தைகண் டிரவி லவ்வூர்ச்
செங்கோல் நடாத்துமென் ரேறுதியமண் வீய்ந்திடச்
சிந்துரம் பிடரில் வைப்ப
வாட்டமில் லாமும்மை காட்டியுல காண்டுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (உகூ)

முருகநாயனர்.

தேங்குலவு பொன்னிநா டோங்குபூம் புகலூர்
செழிக்குமறை யோர்முருக னர்
செங்கதி ருதிக்குமு னெழுந்துபுனன் மூழ்கிவண்
செறிகாவி னிற்சென்று தேன்
பாங்குபெறு கோட்டின்மலர் நீண்டகொடி மலர்திரைப்
பாணிமலர் ஞால மலரும்
பறித்தபின் பிணைபல தொடுத்துநற் செவ்விவிரை
பயில்காலை தினமு மன்பாய்
நீங்கரிய வர்த்தமா னீச்சர் திரு முடிசூட்டி
நேயவா னந்த மூட்டி
நிகரிலா வஞ்செழுத் தோதியுமை யமுதுண்ட
நேயர்மண மதுவி ருப்பின்
மாங்குயில் பெறுஞ்சோலை சூழ்பெரு மணந்தனின்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (உ...)

உருத்திரபசுபதிநாயனார்.

கங்குலெழு மதியெனச் சங்கவெண் டிரையினொளி
காட்டுநீர்ப் பொன்னி நாட்டிற்
கலைநீடு தென்றிருத் தலையூரி லறுதொழிற்
கற்றபசு பதியர் மெய்ம்மை
தங்குநால் வேதமா றங்கசட் கருமநெடி
தவறும விரவு பகலுந்
தண்புனன் மடுக்குணின் றுச்சிமிசை யங்கையஞ்
சலியொடு மகிழ்ச்சி சார்ந்து
வங்கண ரெனப்பஞ்ச வட்சர முருத்திர
மறைந்திடுந் திறமை யதனு
லன்பினொடு சடைநதி யிலங்கமழு மான்கர
மனுங்கச் சுரும்பார் குழன்
மங்கையுடன் மிகுதிருச் செங்கண்மழ விடையின்முன்
வந்தடிமை கொண்ட கபிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (உஅ)

திருநாளைப்போவார்நாயனார்.

காமலர் சிறந்தமேற் காநாட்டி லாதனூர்க்
கடைஞர்குல நந்தர் திருமுக்
கண்ணர்பதி பலவெனப் பண்ணொலி முழக்குமுக்
கருவிசெய் புறத்தொண்டி னர்
பூமருவு புன்கூர்த் திருக்கோயின் மதில்வலம்
புரியவட வேறு விலகப்
புரிந்துமும் பொய்கைசெய் தம்பலந் தொழுதிடப்
புகலுமொழி நாளை யென்ப
ரேமமறை யோர்தொழுந் தில்லைசென் றெய்திநா
மிப்பிறவி தீரும் வகையென்

றெண்ணகங் கண்டந்த ணர்க்கிரவு கனவுதந்
தெரியிடும் புனன் மூழ்கியே
மாமுனிவ ராகிமறை யோர்போற்ற மன்றுண்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைகர்
மாணிக்க மலை நாதனே. (உகூ)

திருக்குறிப்புத்தொண்டநாயனார்.

தண்டமிழ் மிகுந்தொண்டை நாட்டினிற் கச்சிநகர்
தன்னிலே காலி மாயிற்
றழைக்குந் திருக்குறிப் புத்தொண்ட ரடியார்
சடங்கள்பணி செய்யு நாளிற்
கொண்டன்மலி காலையா துலரின்மா தவரெனக்
கூறைமா சொடுமி ளைத்த
கோலமென வுந்தொண்டர் முன்புசென் றிடவன்பு
கூர்ந்துமா சுறை கூறையைக்
கண்டயர்வி னுடையொலித் திடவரு ளெனச்சீத
காலமுடல் குளிர் பொறுது
காணுமென் றுதவிப் பகலளிப் போமெனக்
கைக்கொண் டொலித்து வருமுன்
மண்டிய பெருந்தூறல் கண்டுமுடி மோதமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைகர்
மாணிக்க மலை நாதனே. (௩௦)

தண்டீசுரநாயனார்.

மெய்யகம் பெறுதிருச் சேய்ஞ்ஞலூர் மறையோரின்
மீறுகா சிபகோத் திரம்
விளங்கெச்ச தத்தர்மனை யாள்பவித் திரைசேய்
விசாரசரு மாவறிவி னிற்

பொய்யிகழ்ந் தோர்கணிரை மேய்க்குமா யன்பிழை
பொறுத்தான் மேய்த்து விரிநீர்ப்
பொங்குமண் ணியனா றீழன்மனன் மேற்பால்
பொழிந்தாட்டி யர்ச்சனை தினஞ்
செய்யவந் தணர்தமக் கயலினோர் கூறவச்
செய்கைதந் தைக்கு ரைப்பத்
தேடிமறு நாள்கண் டடித்துகைத் தவர்கால்
தெறிப்பமழு வெறிய வான்பால்
வையக மதிற்றும முண்கலந் தந்துமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கூக)

திருநாவுக்கரையநாயனார்.

திருமுனைப் பாடிநா டுரியதிரு வாமூர்
செழித்தவே ளாண்குலத்திற்
றிகழ்குறுக் கையாதிபர் புகழனார் மனைவிமா
தினியர்பாற் றிலக வதியின்
மருணீக்கி யென்றுபா டலிபுத்தி ரத்தமணர்
மார்க்கமுற திலத வதியின்
வருசூலை யாலதிகை சேர்ந்துவண் டமிழினைய்
மாற்றிவாக் கிறையென்று மெய்
வெருவுநீற் றறைநஞ்சு வேழமுய்ந் தலைநீந்தி
வெண்பொடிச் சூல மிடபம்
வேண்டியப் பூதிசெய் விடநீக்கி யேகாசு
வேண்டிமறை கதவு நீக்கி
மருவுதாண் முடிகொளப் பூம்புகலி யூரின்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கூஉ)

குலச்சிறைநாயனார்.

பாட்டிசை தரும்பாண்டி நாட்டின்மண மேற்குடிப்
பதிக்குலச் சிறைய ரமணின்
பந்தமுறு தென்னர்கோ மந்திரிகண் மேலாம்
படிக்கிசைந் திடுவ ரடியார்
தாட்டொழும் பெருமைபெறு மரபினர் மேம்படுஞ்
சாதியா ரல்ல ரெனினுந்
தண்பூதி சாதன மணிந்தவர்க ளாயிடிற்
றாழ்ந்தெழுங் காதலுடை யார்ச்
சேட்டலர்த் திருவெனும் பாண்டிமா தேவியார்
திருக்குறிப் பேவல் புரிவார்
செப்பசம் பந்தர்வா திற்றோற்ற குண்டரைத்
திகழ்கழுவி லேற்று புகழோர்
வாட்டமில் லாலவாய் போற்றியருள் வீடுறமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
க வாசனை யிராஜலிங் கேசனே சிவகைநகர்
மாணிக்க மலை நாதனே. (௯௯)

பெருமிழலைக்குறும்பநாயனார்.

மேதினியில் வருமிழலை நாடுயர்ந் திட்டபெரு
மிழலைக் குறும்ப ரன்பர்
விரும்புந் திருப்பணி கிரம்வமு தூட்டிநிதி
வேண்டுவ தளிப்பர் தினமுந்
தீதலா வன்றொண்டர் பாதமலர் கைதொழுது
செப்பவாய் வாழ்த்த மனது
சிந்திப்ப வெந்தையருள் சந்திப்ப தெனவஞ்
செழுத்துணர்ந் தெண்சித்தி யால்
நாதமுறு காரணமொன் றுயறிவு மேற்கொண்டு
நாடிவழி புந்தி யுறவே

நாடுங் கபாலநடு மீதின்மூ லங்குவிய
நாட்டிவன் றொண்டர் வெள்ளி
மாதிரம் பெறுவதறி வாற்றெரிந் தடிதொழுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௩௪)

காரைக்காலம்மையார்.

தாரணி பராவுகா ரைக்காலின் வணிகர்தன
தத்தர்பெறு புனித வதியார்
தமரொனுங் கடனுகை நிதிபதி மகன்பரம
தத்தன்மண முற்று மடியார்
சீரணிய வமுதிடுமி ளிடங் கொழுநர்தரு
செங்கனி யறிந்தன்ப ராய்ச்
சென்றமுது கொண்டபின் கணவருண் டிக்கருட்
செங்கனி யழைப்ப வெருவி
யோரணியு மறுதேச மெய்திவே றிற்றெரிந்
தேகவடி தொழ மறுத்து
மெழிலுடல் குறைந்துமுடி யாற்கயிலை கண்டம்மை
யெனவப்ப னென்று பாடி
வாரணி தனக்காளி யாடுகொட் டிலகமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௩௫)

அப்பூதிநாயனார்.

அங்கமிகு திங்களூர் வாழுநான் மறைநெறிச்
சொற்பயிலு மப்பூதி யார்
அஞ்சுகொலை களவுகட் காமங் கடிந்தறத்
தூயமனை யறம்வழா மற்

றங்குபொரு ளிடமைந்தர் மேதினிரை மற்றதுந்
தக்கவாக் கரசி னுடமைந்
சாற்றிமகிழ் நாளதனில் வாக்கரசர் பந்தர்வழி
சார்ந்துபெயர் கண்டு காதல்
பொங்கமனை சென்றபொழு தன்பர்பெயர் வினவியடி
போற்றியமு தாக்கி மூத்த
புதல்வனைக் கதலியிலை கொடுவா வெனச்சொலப்
பொங்கரவு தீண்டி வீய
மங்காத சேயின்விட மாறவமு திடவுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (௩௬)

திருநீலநக்கநாயனார்.

தண்டலை நெருங்குகா விரிநாட்டில் வருதிருச்
சாத்தமங் கையின் மனையறந்
தக்கமறை யோர்நீல நக்கர்மன தினிதுறச்
சார்ந்துமா திரைவிரத மெய்க்
கொண்டவய வுந்தியார் பூசைசெய் தன்புமிக்
கூர்ந்துபஞ் சாக்கர முருக்
கூறலிங் கத்திற் சிலம்பிவிழ மாற்றுதங்
கோதைமீ துரடி நீத்தல்
கண்டன்று கனவிலவ ளூதிபு மியாமேனி
கன்றிய துரைப்ப வில்லாள்
காதலாய்ச் சம்பந்த ருண்ணமகிழ் வாய்நீல
கண்டயாழ்ப் பாணர் தங்க
வண்டிருத் தழல்வேதி தந்திடப் பெருமணமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (௩௭)

நமிநந்திநாயனார்.

ஊக்கமிக வருபொன்னி நாட்டிலே மப்பேரை
யூர்க்குண்மறை யோர்க்கு ளுபர்சி
ருண்மைபெறு நமிநந்தி யடிகள்சிவ பணிவிடை
யுகந்துமா ரூரி றைஞ்சித்
தேக்கமுறு திருவிளக் கேற்றநினை வாய்மாலை
செல்பொழுது புத்தர் மனையிற்
சென்றுநறு நெய்கேட் டிடத்தி துரைத்திடச்
சிந்தையிற் றுயர்கொண் டைதப்
போக்கிவிட நீர்விளக் கேற்றவிண் வாக்கருள்
புகன்றபடி தீப மேற்றிப்
புதுமைபெற வன்பர்க்கு வேண்டுவன வெல்லாம்
பொருந்திடச் செய்த படியால்
வாக்கரசர் தொண்டருக் காணியென வோதிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கஅ)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

சிரபுரந் தனின்மறைச் சிவபாத விதையர்தந்
தேவிபக வதியா ரருட்
செல்வர்கவு ணியர்நீல வல்லியமு தண்டுபெண்
சேர்ந்துநற் றாள மேந்தித்
தாளநிரை சேர்சிவிகை யேறிமுய லகனோய்
தவிர்த்தினிய பந்தன் மேவித்
தக்ககிழி பெற்றிசையின் யாழ்முறித் தாலந்
தவிர்த்தெழிற் கதவு மூடிப்
புரவலன் சுரம்விடுத் தமணர்நிலை போக்கியிடி
புத்தனார் தலையி லேற்றிப்

பூவாத பெண்ணைகனி காய்த்தங்க மங்கையாய்ப்
புகழ்நம்பி யாண்டார் தரும்
மருமலர்க் குழலிதன் றிருமணஞ் செய்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௫௯)

ஏயர்கோன்கலிக்காமநாயனார்.

கோதிலா நீர்நா டிலாவுபெரு மங்கலக்
குடிகொள்பின் னவரி லேயர்
கோன்கலிக் காமர்புன் கூர்தனக் காம்பணி
கொடுப்பரா ரூர்ப்பரவை யார்
காதலா லெந்தையைத் தூதுவிடு வோன்முகங்
காணவொண் ணாதென்ற சொற்
கண்டுவன் றொண்டர்மொழி கொண்டேயர் பாற்சூலை
காட்டியடி போற்ற வர்க்கு
மீதுவன் றொண்டரிற் றீருமென வேயரிசை
யாதுறவு நம்பி யருளா
லேயவது கேட்டேயர் குடர்பீறி யிடவறிந்
திடுநம்பி யுடலிகழ முன்
வாதைதீர்ந் தேயெழுந் தேயர்தாழ்ந் தேதொழமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௬௦)

திருமூலநாயனார்.

சிந்தையய ராததிரு நந்தியரு ளட்டமா
சித்திபெறு மறைபவ ரெனுந்
தென்கயிலை யுறைசித்தர் வண்டமிழ்ப் பொதியமலை
சேரவரு போது பொன்னி

யந்தமிகு சாத்தனார் நந்தர்குல மூலனு
ரையர்நிரை மேய்ப்ப வீய
வாவின் குழாங்கதறு மாறுகண் டவ்வுடற்றன்
னுவிகொண் டெழவு நிரைகள்
புந்திமகிழ் வாய்மனைகள் சென்றபின் பவரிற்
புகாயற் றுறந்து ஞானம்
புகன்றுமா வடுதண் டுறைக்கெழுந் தரசடி
பொருந்தியாண் டொருபாத் திரு
மந்திரந் தானுமூ வாயிரங் கூறமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (சுக)

தண்டியடிகணாயனார்.

கல்விசெறி யாரூரி னெல்லையெந் நாளுநற்
காணிபெறு தண்டியடிகள்
கண்ணொளி விலாப்பிறவி நண்ணிமெய்ஞ் ஞானக்
கருத்தின்விழி கண்டனுதி னஞ்
செல்வமிகு நமசிவா யப்பதஞ் செப்புநாத்
திறலினர் தறிக் குறியினூற்
செய்யநீர்ப் பொய்கைகல் லப்புத்தர் வந்துகண்
டெரியாத வசட னென்று
சொல்லமன நொந்திடக் கனவிலரு ளியமுறைமை
தோன்றல்பாற் கூறி மறுநாட்
டொண்டர்கண் விளங்கமற் குண்டர்கண் மழுங்கமிகு
துயருழந் தவர் பாழியின்
வல்லகற் கொண்டுதன் செய்பணி முடிப்பமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (சஉ)

மூர்க்கநாயனார்.

கொண்டன்மலி தொண்டைவள நாட்டில்வேற் காட்டூர்
குலாவுமுழ வின்றொழி லினர்
குறைவிலாச் செல்வமுற் றிறைவரடி யார்தமக்
கூநலமுத ளிப்பர் மென்மேற்
பண்டையுள பொருளுமற் றுள்ளன வெலாங்குறைவு
படினுஞ்செய் பணிகுறை படாப்
பான்மையிற் றன்கற்ற சூதுபொரு தொழிலினாற்
பரிவுடன் பெற்ற பொருள்க
ளண்டர்நா யகர்திருத் தொண்டருண் டிக்கினிமை
யாமெனப் பலபதி பணிந்
தருள்குடந் தைப்பதியு ளார்கள்சொற் சூதுபிற
ழாகவும் வெகுண்டவ தனால்
மண்டலம் புகழ்மூர்க்க ரெனுநாம மெய்தமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௬௫)

சோமாசிமாறநாயனார்.

சூதமிகு மம்பரார் வேதியர் குலத்தில்வரு
சோமாசி மாறர் கருணைத்
தூயமெய் யடியார்க ளியாரேனு மிக்கவறு
சுவையமுது தருபெருமை யார்
தீதகல வேசகல தேவர்மகிழ் வேள்விபல
செய்துசை வத்தின் மூலத்
திருவெழுத் தஞ்சுமற வாநாவி னார்புகழ்
சேருமா ரூரின் மேவிப்
போதகப் பண்மாலை யோதுசுந் தரர்செய்ய
பூங்கழல் பணிந்து போற்றும்

புதுமையா லோரா று குற்றமுந் தீநெறிசெல்
புலனைந்தும் வென்று புனித
மாதவனு மோதரிய சிவலோக மேவிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனை. (சச)

சாக்கியநாயனார்.

காரிலகு தண்பொழிற் சங்கமங் கையிலுழவு
கருதுவே ளாண்டலைவர் நாற்
கலைபயின் றேபிறவி வலையொழித் துய்ந்திடக்
கருதியே சென்று காஞ்சி
யூரிலகு சாக்கியர்கள் சீரிசைந் தவருண்மை
யொவ்வாது சைவ நெறியி
னுட்பொரு டெரிந்துற வாதநெஞ் சத்துணவி
னுரியசிவ லிங்க மீது
தாரிலகு மலரெனச் செங்கலங் கையினெறிவர்
சமையமறி யார்குறி படுந்
தக்கபணி யொருதின மறந்துணவு கொள்ளவது
தானினைந் தெறிய மகிழ்வாய்
வாரமுட னேடரீ மூரிவிடை யேறிமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனை. (சரு)

சிறப்புலிநாயனார்.

பொன்னிநீர் நாட்டுவள மன்னுதிரு வாக்கூர்
பொருந்துமறை யவர்திறம் பாப்
புகழ்பெறு சிறப்புலியர் மிகவுமடி யார்திருப்
பொன்னடி பணிந்து தாழ்ந்து

செந்நெலமு தொடுகறிகள் கன்னலறு சுவையுடன்
செம்பொனின் பத்த ளிக்குஞ்
செய்கையுடை யாருஞ் செழுத்தோதி யன்புடன்
றீவேட்டு வேள்வி யெல்லா
முன்னரிய வுன்னுடைய பாதமலர் தன்னிலிட
வுள்ளன்பு செய்து நாளு
முள்ளவள் ளன்மைநீங் காதுமிக வோங்கிட
வுகந்துநீ கருணை செய்ய
மன்னுநின் பாதபங் கயநீழன் மருவிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௪௬)

சிறுத்தொண்டநாயனார்.

குறைவிலாப் பொன்னிநாட் டிலகுசெங் காட்டங்
குடிக்குண்மாத் திரர் குலத்தின்
கொற்றவர் படைத்தொழிலு மற்றுமுள கலைகளுங்
கூர்ந்துணர் பரஞ்சோதி யா
ரிறைவர்புக ழத்திறை கொணர்ந்துவெண் காட்டம்மை
யில்லுகந் தினிய கணப
தீச்சர மதிற்பிள்ளை யாற்கினிமை யாமடிய
ரெழிலிற் சிறுத்தொண்டர் சீ
ருறையுண்மின் காணவயி ரவராகி யாரநிழ
லுறவினளி யன்பர்தொழ நா
முத்தரா பதிவிரத மகவுகறி யுண்பதென
வுண்மைக் கிசைந் தமைப்ப.
மறைவாகி நற்புதல்வர் தமையருளி யுமையொடுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௪௭)

கழறிற்றறிவார்நாயனார்.

சீலமிகு மலைநாடு வாழ்கொடுங் கோளூர்
சிறந்தசெங் கோற்கோதை யார்
செல்வர் திரு வஞ்சையிறை மெல்லடி பணிந்திடச்
செய்யபொறை யன்றவ முற
ஞாலமிகு முடிசூட வேண்டுமென மந்திரிக
ளவில்பரம னருளி னலகி
னன்னிபன யாவையு மறிந்தவன் றனடி
நயந்துநற் பாண பத்ரன்
சிலமிகு திருமுகந் தாநிதி யளித்தோசை
செய்யாத நாளி னம்பி
செயலறிந் தேகியவ ரடிபணிந் தந்தாதி
செப்பியொலி கண்டிரு வரு
மாலுறவி லியானைமுன் கோனவிடு சேரன்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (சஅ)

கணநாதநாயனார்.

ஊழிகா லத்திலெழு மாழியின் மிதந்தபெய
ருண்மைசெறி காழிநகர் வாழ்
வுற்றவை திகமாபு பெற்றுகால் வேதநெறி
யோதுகண நாதர் சண்பை
யாளுடைய வீசர் திரு வாலயப் பணிவிடைக
ளன்பினொடு வந்து புரிவோ
ரவ்வகைப் பத்தர்வந் தெய்திடிற் பண்புட
னவர்குறை முடித்து நாளு
மேழிசையி னமுதுண்ட பிள்ளையார் தாளிணை
யிறைஞ்சியர்ச் சனை புரிந்து

மிடையறு நெஞ்சினுக் குடையாய் மனையறத்
தேற்கைபெறு மார்க்க மதனால்
வாழிய கணங்கட்கு நாதனென வாழ்ந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநகர்
மாணிக்க மலை நாதனே. (௪௯)

கூற்றுவநாயனார்.

குன்றாத கீர்த்தியுறை தென்களந் தைப்பதிக்
கொற்றவரி லுற்ற தொல்பேர்
கூற்றனா ருருணன்மை சாற்றியடி யார்க்கன்பு
கொண்டுநற் றெண்டு புரிவோர்
துன்றுபகை மன்னர்போர் வென்றுதிறை கொண்டுளார்
துகளிலாத் தில்லை நகர்வாழ்
தூயமறை யோர்தமை முடிசூட்ட வேண்டவவர்
சோழனுக் கன்றி யாங்கள்
வென்றிமுடி சூடுவது செய்யோ மெனக்கழறி
வேன்மலைய னாடு செல்ல
மிகமனந் தளர்வாகி நின்னடிக் கமலங்கள்
வேண்டவே கனவில் வந்து
மன்றாடு பூங்கழற் சூட்டியரசாளமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநகர்
மாணிக்க மலை நாதனே. (௫௦)

பொய்யடிமையில்லாதபுலவர்நாயனார்.

எழுத்துமசை சீர்பந்த மடிதொடைகள் பாவினத்
தேற்றவியல் சொற்பொருட் பாட்
டெழிலலங் காரமென் றனைபெறு மிலக்கியத்
தெண்ணுமிய லிசை நாடகந்

செழித்தமுத் தமிழிற் றழைத்தாசு மதுரமிகு
 சித்ரவித் தார நான்குஞ்
செப்பிடக் கவிகமகன் வாதிவாக் கியனெனத்
 தேர்ந்தபல் கலைக ளாய்ந்து
பழுத்தகனி யின்சுவை மொழிக்கினிய செந்தமிழ்ப்
 பாடல்சொல் லவும்வல்ல ராய்ப்
பாரினிற் பொய்யிலாப் புலவரென் றேபெயர்
 படைத்துமனு தின மனத்தில்
வழுத்திடச் சிவமென் றுயர்ந்தபண் மொழிந்திடமுன்
 வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
 மாணிக்க மலை நாதனே. (ருக)

புகழ்ச்சோழநாயனார்.

சிறைபடு புனற்பொன்னி யுறையூரின் மநுநெறி
 செலுத்திய புகழ்ச் சோழனார்
சிருலவு கருவூரி லானிலையர் புனையுமலர்
 சிந்துகரி பாகர் வீழ
வெறிபத்தர் முன்புதந் தலையரியு மென்னவா
 ளீந்துமறு வேந்தர் திறைக
ளிலகமலை யாளமதி லதிகனே திறைகொடா
 திருந்தவுரை கேட்ட பொழுதே
குறிபெறும் படைவிடுத் தமர்தொடுத் தெழில்வெற்றி
 கொண்டுமுடி யின்குவை யெலாங்
கொடுவர முடிக்குளமுல் விரியுமோர் சடையினைக்
 கூர்ந்துகண் டடி வணங்கி
மறிமழுக் கையர்முடி யெனவெரியின் மூழ்கமுன்
 வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
 மாணிக்க மலை நாதனே. (ருஉ)

நரசிங்கமுனையரையநாயனார்.

நாடுபுக டிருமுனைப் பாடிநா டாசுபுரி
நரசிங்க முனையரையர் சீர்
நல்குபுவி நெறிவளமை மல்கிவெண் ணீற்றன்பு
நாடிமிக வாலை யங்கள்
தேடுபொருள் பணிசெய்து நீடுதிரு வாதிரைத்
தினமதனி லன்பர் மகிழச்
செம்பொன்னூ றுதவியவ ருண்பவமு திடுவரொரு
தினமதிற் றூர்த்த வேடங்
கூடுமுட லினர்வரக் கண்டவ ரொதுங்கமெய்
கூர்ந்துவெண் ணீற்றி லுண்மைக்
குறியின ரெனப்பொரு ளிரண்டுபங் கீந்தினிய
கூறியே விடைகொ டுத்து
வாடுதுயர் நீங்கியுன் பாதமலர் மேவிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௫௩)

அதியத்தநாயனார்.

அலைநீடு பொன்னிநா டெலவுகட ணைகைநக
ரழகுபெறு நுழைபர் தலைவ
ரதிபத்தர் வலையின்மீன் விலைவளத் தொழிலின
ரடியவர்க் கன்பு புரிவோர்
சலமேவு கடலிமேல வலையிட வகப்படு
தலைமைசெறி மீன்கலை மூடித்
தா ணுவின் கழலினுக் காமென விடுப்பர்வலை
வீசமறு மீன்ப டாமற்
பலகாலு முணவுகிடை யாமன்மெலி வாய்க்கிளைஞர்
புகரினும் பத்தி மறவாப்

பான்மைகண் டேசெம்பொன் மேனிமீன் வலையகப்
படுநாள் விடுத்த வன்பான்
மலைமாது பாகமுற விடையேறி யன்பர்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (ருச)

கலிக்கம்பநாயனார்.

தண்ணாறு மேல்கரைப் பெண்ணா கடத்தூர்
தழைத்ததன வைசியர் முதன்மை
தங்கிய கலிக்கம்பர் பொங்குமனை வாழ்க்கைநிலை
சார்ந்துதூங் கானை யாடத்
தண்ணலடி போற்றியடி யார்க்கடிமை யாய்மனத்
தன்பினொடு வமுது செம்பொ
னளிப்பர்முன் னேவல்புரி பவர்நீங்கி யருளுருவி
னடியா ருடன்வரக் கண்
டெண்ணரிய மகிழ்வினடி யார்தாள் விளக்குதற்
கிசையாத மனைவி யின்கை
யெறிந்தடியர் தாளிணை விளக்கியறு சுவையினொடு
மினிதமு தளிக்கு மன்பால்
மண்ணோர் பணிபமிக விண்ணோர் புகழமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (ருரு)

கலிநீதிநாயனார்.

தலமுயர்ந் திடுதொண்டை நாட்டில்வரு மொற்றியூர்ச்
சக்கரப் பாடி யாரிற்
சார்ந்தகலி-நீதியார் வேண்டுசெல் வத்துரிய
தன்மையின ரண்ணல் கோயிற்

பலதினமு மிரவுபக லொளிவிளக் கிடுபணியர்
பைம்பொன்மெலி யக்கிளை ஞர்
பக்கல்விலை கொண்டுபிற செக்கூர்ந்து கூலியின்
படியின்றி மனையி ஞளை
விலைகூற வதுமாறி யெந்தைபணி குறையவுயிர்
விடுவனென வகனிரைத்து
மிக்கதிரி யிட்டுரிய கைக்கருவி யான்மணி
மிடற்றரிய வன்பு கூர்ந்து
மலர்செறி கரத்தினிற் பிடிசெய்து கழல்பெறமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை பிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (ருகூ)

சத்திநாயனூர்.

விளங்குகா விரிநாட் டிலங்கிய விரிஞ்சையூர்
வேளாண் குடித் தலைமையின்
வித்தக மிகுத்துவரு சத்தியார் மெய்த்திரு
வெழுத்துமற வாத நாவு
ளுளங்களி துளங்கச் சிவானந்த வாரியமு
துண்டுசுக மான பண்க
ளோதுமடி யார்க்கடியர் நீதிநான் மாறுபா
டுற்றவர்க ளொடுங் கத்
துளங்குதண் டாயத் திழுத்தொளிரும் வாள்கொண்டு
துண்ணென வரிந்து விடுவோர்
சோதிமணி மன்றினட மாடுசே வடிகளைத்
தொழுதுமகிழ் பத்தி யதனுல்
வளங்குலவு மேலாந் தலங்குடி யிருப்பமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை பிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (ருஎ)

ஐயடிகள்காடவர்கோனயனார்.

குவலைய மதித்தபல் லவர்தங் குலத்தினிமை
கொண்டுமா னிலமுழு வதுங்
கூர்ந்துசெங் கோன்முறைக டேர்ந்துவலி பகையொளி
குறைத்துவெண் குழையர் பதியிற்
சிவநெறி தழைத்திடும் படியா சளிப்பமெய்த்
திருவருளின் மிக்க ஞானச்
செய்யவை யடிகள்கா டவர்கோ னெனப்பெருந்
தெய்வமொடு தென்ற மிழ்ச்சொற்
றவமிகுங் கலைகடேர்ந் துடல்வாழ்க்கை பொய்யெனத்
தானறிந் தம்ப லத்துட்
சார்ந்துவெண் பாநடனர் திருவடிகண் முதன்மிக்க
தலமெங்க ணும்பு கன்று
மவுனநின் றிருவடிப் பணிவிடை மகிழ்ந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைநகர்
மாணிக்க மலை நாதனே. (ருஅ)

கணம்புல்லநாயனார்.

எள்ளாத திரையின்வட வெள்ளாறு தென்கரை
யிருக்கும்வே ளூர்க்கிறைவ னு
ரெண்ணில்செல் வத்தின்வள நண்ணியறி வின்பெருமை
யெய்துமேம் பாடுரிய ராய்
வெள்ளமுடி யார்தமையு முள்ளமற வாத்திரு
விளக்கிடும் பணிவிடையி னார்
மெய்யர்தில் லைப்பதி பணிந்துபுலி யீச்சுரம்
விரும்புபணி மேவு நாளிற்
றள்ளரும் பொருண்மாறி யில்லாமை கொண்டுபிற்
றுங்கணம் புல்லிலை யிடுந்

தக்கபொரு ணெய்விளக் கிட்டும்புல் விலையிலாத்
தருண மறவே னென்றிரு
வள்ளல்பணி யெனவுமுடி மீதெரி மடுத்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (ருகூ)

காரிநாயனார்.

கடல்செறி புவிக்குள்வள முடைய திரு நற்பதிக்
கடவூரி னிடமு தித்தக்
காரியா ரெனவரும் பேரினா வோர்தமிழ்க்
கற்றுசொற் பயன்வி ரித்துத்
திடமுலவு செந்தமிழ்க் கோவைதம் பெயராற்
சிறப்புட னுரைத்து வெற்றி
சேர்க்குநெறி மூவேந்தர் பாற்பயின் றவர்தங்கள்
சிந்தைமகிழ் வுட னளித்த
வடல்நிதிக் குவைகொண்டு வடிவாலை யம்பல
வமைத்துமடி யார் தமக்கு
மன்புபெற வேதக்க செம்பொன் கொடுத்துமன
தயாாத கயிலை யுற்று
மடல்பெறு திருக்கமல வடியிணை துதிப்பமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (ருO)

நின்றசீர்நெடுமாறநாயனார்.

தடுமாறு நெறிதனைத் தவமான தென்றரிய
தம்முடலை வீணில் மாய்த்தச்
சாக்கியப் பேய்கடம் பொய்மாய வலையிடைத்
தானகப் பட்டு லைந்தே

விடுமாறு தமிழ்விரகர் பாதார விந்தங்கள்
மெய்யன்பி னாலடைந்து
மேன்மையுடை யார்மங்கை யர்க்கரசி யார்களப
மென்முலை திளைக்கு மார்பி
னெடுமாற னார்கன்னி நாடுசிவ மோங்கவே
நீடுசெங் கோல்செலுத்தி
நிகழுநா ளமர்வேண்டி வந்தேற்ற தெவ்வரை
நெல்வேலி தன்னில்வென்றோர்
வடுமாறு சிவலோக பதவியது பெற்றிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (சுக)

வாயிலாநாயனார்.

பொன்னீடு தொண்டைவள நன்னாட்டின் மயிலா
புரிக்குள்வே ளாண்குடிக் குட்
பொற்புடைய வாயிலார் நற்றவர்க் கின்பம்
புரிந்திட விரும்பி மிகவும்
பன்னாளு மறவாம லுன்னுசெம் பொற்றிருப்
பணிமன திடத்தமைத்துப்
பார்க்குஞா னத்தீப மேற்றியா னந்தவழி
பாராட்டி நீராட்டி யுஞ்
சொன்னீடு மன்பமுத மைத்துச் சிவார்ச்சனைத்
தோற்றமொடு தேற்ற முற்றத்
தொண்டரிப் படிநெடு நாளுமர்ச் சனைசெய்து
தூயதா மனம கிழ்ந்து
மன்னீடு முனதுபத நீழல்வாழ் வுற்றிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (சுஉ

முனையடுவார்நாயனார்.

செம்பியன் புகழ்பெற்ற தண்பொன்னி வளநாடு
சேருநீ ரேர்க்குடி மிகுஞ்
செல்வநிறை வேளாளர் தொல்குலத் தினிலஞ்
செய்புமுனை யடுவ ரென்றுந்
தம்பெயரி னாற்சிறந் தம்புவியின் மாற்றார்
தமக்கம ரிளைத்திடும் பேர்
தங்களில் வெற்றிபெற வுஞ்செய்வ ரெனுமவர்
தரும்பொனடு வைத்து மனதி
னம்புசிவ னடிமலர் போற்றிமாற் றார்மீது
நாடியவ ரோடெ திர்ந்து
நவில்வென்றி செய்துவரு பொருள்கொண்டு தொண்டரை
நன்றமு தருத்தி நிகழ்வார்
வம்புலவு சோலைதிகழ் சிவலோக மெய்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைநகர்
மாணிக்க மலை நாதனே. (௬௬)

கழற்சிங்கநாயனார்.

செகத்தினுபர் பல்லவர் குலத்தில்வரு கோக்கழற்
சிங்கர்சிவ னன்றி மற்றோர்
சிந்தைபற் றார்படையின் வெஞ்சமர் புரிந்துவட
திசைகவர்ந் தரசிய லுநாண்
மிகுத்திடும் பலபதி துதித்துமா ரூரிறைவர்
மெல்லடி தொழும்போது தான்
மேவுதா மத்தின்மணி மாடமுற் றிடுமனைவி
மென்மல ரெடுத்து மோந்த
தகத்திற் பொறுமற் செருத்துணைவர் தான்மூக்
கரிந்திடக் கண்டு வினவி

யவ்வகைக் குத்தண்ட மீதுபோ தாதெனவு
மிரிவைகை மலரை வெட்டி
மருத்துவம் பெற்றுநின் பாதமல ரெய்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௬௪)

இடங்கழிநாயனார்.

தேனாடு சோலைசெறி கோனாடு வாழுந்
திருக்கொடும் பாளூர் மனுச்
செங்கோல் புரிந்திடு மிடங்கழியர் கொங்கிலுயர்
செம்பொனம் பலத்துட்
டானாடு சேவடியர் மேனீடு மணிமுகடு
தான்மேய்ந்த பானு குலநற்
றலைவர்சிவ சமையநெறி யிலகிட விளக்குநா
டனிலொருவர் தொண்டர் மகிழக்
கானீடு கனிகடயிர் பானீடு மமுதிடக்
காண திருட்டி னெல்லைக்
கவர்ந்திடக் காவலர் கொணர்ந்துமுன் விடவன்பர்
காணுநம் பொருள்க ளென்று
மானாடு கையரடி யார்க்கென வழங்கிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௬௫)

செருத்துணைநாயனார்.

செயமிகும் பொன்னிநா டுயர்மருத நாடுபுகழ்
செஞ்சொல்நிறை தஞ்சை நகரிற்
சேரும்வே ளாண்குலத் தாருஞ் செருத்துணையர்
சிந்தைதனி லந்தி பகலுஞ்

தயவுற்ற கடியருக் கயலுற்ற வெமனையுதை
தந்தசெம் பங்க யப்பொற்
றாளைமற வாமலெந் நாளுமா ரூரிறை
தனைப்பணிந் திடவந் நாளிற்
புயலுறு களற்சிங்கர் மயல்பெறுந் தேவிமென்
போதுமோந் திடுதல் கண்டு
புனிதர்முடி யணியுமல ரெனமூக் கரிந்தடற்
பூண்டறொழில் வேண்டு மன்பால்
வயமிகுந் திடுநடன மியல்வருங் கழலுறமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௬௬)

புகழ்த்துணைநாயனார்.

செய்யபுத் தூரிலகு சைவமறை யோர்கலந்
திகழ்புகழ்த் துணையர் வேதச்
செங்கண்விடை யார்தம்மை யாகமப் படிபூசை
செய்யுநன் னியம முடையார்
துய்யவுல கத்தின்மழை பெய்யாமல் வெம்பசித்
துன்பத் துழன்ற யர்ந்து
சோர்ந்திடினு நற்றொண்டு சார்ந்துமட் டலருடன்
றூயநீ ராட்டு பொழுதின்
மெய்யினீர்க் குடமையர் கைதளர்ந் தேமுடியில்
வீழப் பொறாம லடியில்
வீழ்ந்திடத் துயிலுறக் கனவின்க ணருளியே
வியன்படிக் காசு தினமும்
வையமது புகழவே தந்தன்பர் போற்றிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௬௭)

கோட்புலிநாயனார்.

வேதமலி சோணாட்டு நாட்டியத் தான்குடியின்
வேளாளர் கோட்புலியர் மால்
வேந்தர்தந் திரியாரய்ப் பரந்தளணி வார்க்கமுது
வேண்டுமென நெற்குவை மிகப்
போதமனை யவர்தமக் கோதிநாட் டார்கள்வெம்
போரின்மேற் செல்ல வுலகிற்
பொங்கும்வற காலங்கள் வந்திடத் தாம்பசி
பொறுமலுண் டிடவு மாற்றார்
மீதடற் கொண்டுவரு போதறிந் தாணைமொழி
மீறுகிளை ஞர்க்கினிய சொல்
வினவித் தடிந்திடப் பிள்ளையையும் வாளினல்
வீசிடக் கண்டு கந்தே
மாதகவி னிந்நிலையி னுடனணைக வென்றுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைநகர்
மாணிக்க மலை நாதனே. (சுஅ)

பத்தராய்ப்பணிவார்நாயனார்.

ஈசனடி யவரெனுங் காசினியி லுற்றவர்க்
கின்பமொடு தொண்டு புரித
லேற்கைபெற நாளுஞ் சிவார்ச்சனைகள் செய்திடுத
லெண்ணுசிவ நியம நண்ணற்
றேசுபெறு வேள்விமன நேசமோ டியற்றனற்
சிவகதை மகிழ்ந்து கேட்டல்
செப்புமா னந்தமொடு மெய்ப்புளக முறமயிர்
சிலிர்ப்பவிழி நீர்கண் மல்கி
யாசைகொ டிருப்பணி விலாசங்கள் காட்டிவரு
மப்பணி மகிழ்ந்து கொள்ள

லியாதுசெயி னுங்குழைக் காதருக் கெனமொழிக்
தாராத காதல் கூர்ந்து
வாசமிகு பத்தராய்ப் பணியுமடி யார்கண்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவணைநகர்
மாணிக்க மலை நாதனே. (௬௯)

பரமனைப்பாடுவோர்நாயனார்.

சீலமிகு தெய்வமொழி நூலுநற் கலசமுனி
செய்தவண் டமிழி னூலுந்
தேசிகத் தொடுநவில் சிவாகமச் சொற்கள்வகை
தேர்ந்துபல கலைக ளாய்ந்து
ஞாலமதின் மிக்குமெக் காலையினு மெய்யுவகை
நண்ணியெழின் மன்றுளாடும்
நாதவே தாந்தபரி பூரணா னந்தமெஞ்
ஞானமோ னந்த ரூப
பாலமுறை செங்கரதிரி சூலகங் காதர
பராபர சிவாய முக்கட்
பரமனென் றேபாடு மடியார்கள் கெதிபெறப்
பார்வின் புகுந் தேறிய
மாலயனு மறியாத சேவடிகள் தொழுதிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவணைநகர்
மாணிக்க மலை நாதனே. (௭௰)

சித்தத்தைச் சிவன்பாலில்வைத்த நாயனார்.

பாரணவு சுவையொளி யூறோசை நாற்றமாம்
பான்மைபெறு புலனு மனமும்
பயில்புத்தி யோடகங் காரமலை சித்தமும்
படாது நடு நாடியிற்

சீரணவு நாதமும் பங்கயன் முதலான
 தேவர்தம் பதமு நீங்கித்
திகழ்கின்ற பரஞான மெய்ப்பரஞ் சோதியின்
 றேசுபெறு பொலிவு நோக்கிப்
பூரண சிவானுபவ போகவா னந்தமாம்
 பொருதிரைக் கடலின் மூழ்கும்
புண்யபரி பாகரே தங்கள்சித் தத்தினைப்
 பொருந்தநின் பாலில் வைத்தோர்
வாரணியு மொளிர்கனக கலசநகில் மாதினொடு
 மால்விடையின் மீது தோன்றி
மற்றவர்கள் கண்டுனது பாதமல ரெய்திடமுன்
 வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவநைநகர்
 மாணிக்க மலை நாதனே. (எக)

திருவாரூர்ப்பிறந்த நாயனார்.

கார்கொண்ட மேனிவண் டுளபமணி மார்பனுங்
 கமலா சனத்தில் வாழுங்
கருணையுறு நான்முகக் கடவுளு மாயிரங்
 கண்கொண்ட மேனி யானுஞ்
சீர்கொண்ட வேனையநல் முப்பத்து முக்கோடி
 தேவர்களு முனிவர் குழுவுஞ்
சிந்தைமெய் யன்பினொடு தொழுதுமுக் காலமுஞ்
 சேர்ந்தினி திருக்கு மிடமா
யேர்கொண்ட வூழிதோ றூழிதோ றேங்கல்பெற்
 றெந்தைதிரு நந்தி காவ
லென்றைக்கு மகலாத வெள்ளியங் கிரியில்வா
 ழெண்சிவ கணங்க டாமே
வார்கொண்ட வாரூர்ப் பிறந்தார்க ளுய்ந்திடமுன்
 வந்தடிமை கொண்ட கயிலை

வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௭௨)

முப்போதுந்திருமேனிதீண்டுவோர் நாயனார்.

கருதரிய ஞானகாண் டத்தினொடு பாசனா
காண்டநற் கசடில் கிரியா
காண்டமெனு முப்பகுதி யானபல வாகமக்
கலையெலா நன்குணர்ந்தே
பெருமைபெறு முப்பொருளி னுண்மைதெரி வுற்றவர்
பெருந்திருச் சைவ மறையோர்
பேசுமுப் போதுநிகழ் காலமெதிர் காலமும்
பேணுமெதிர் கால மதினு
மொருமையுடன் விதிவழியி னர்ச்சனைத் தொண்டினை
யுஞற்றுதற் குரிய பெரியோ
ருள்ளன்பு மாறாத சிவசாத னங்களை
யுற்றபெரு வாழ்க்கை யுடையோர்
மருவுமா லறியாத நின்னடி யடைந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௭௩)

முழுநீறுபூசியமுனிவர்நாயனார்.

ஆதிவே தாகம புராணசாத் திரமுறைக்
கனுபூதி யெனும் விபூதி
யனுகற்ப முபகற்ப முயர்கற்ப நெறியதின்
தாசா னுரைத்த படியே
காதலொடு சிரநெற்றி மார்புந்தி யுடன்முழங்
கால்தோள் மணிக்கட்டு முன்
கையிடைப் பின்புற மெழில்காது தன்கண்டங்
கருதுதிரி புண்டரமதாய்ப்

போதகம் பெறுசங்கி தாமந்தி ரங்களிற்
புகல்கிழக் குடன் வடக்கின்
பொற்புறுந் திசையிற் பொலிந்துபஞ் சாக்கரம்
புகன்றுகண் மணி புனைந்து
மாதவர்கள் முழுநீறு பூசுமுனி வோர்கண்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைநகர்
மாணிக்க மலை நாதனே. (எச)

அப்பாலுமடிச்சார்ந்தவடியார்நாயனார்.

வெள்ளநீர் சூழநான் கெல்லைசெறி நாட்டின்மூ
வேந்தர்தமிழ் சேர்ந்த நாட்டின்
மேலுமிப் பாலுமெக் காலுநற் றவநெறியின்
மெய்த்தொண் டிசைத்த பேருந்
தெள்ளுசெந் தமிழிசைகள் விள்ளுமா ரூரர்முன்
றிறமைவிறன் மிண்டர் மகிழத்
திருவருள் புரிந்திடும் பரிவிற் றிருத்தொண்டர்
சீர்பெறுந் தொகையெனும் பா
வுள்ளியலும் வைப்பின்மொழி கொள்ளுமிக் கோரதி
லுறுதபெரி யோரு முன்பின்
னுற்றுமப் பாலுமடி சார்ந்தவடி யாரென்னு
முத்தமர்கள் சித்த மகிழ
வள்ளையிற் பணிலமணி வள்ளமெலன வாழ்த்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைநகர்
மாணிக்க மலை நாதனே. (எரு)

பூசலைநாயனார்.

பொங்கமுறை தொண்டைநா டொன்றுதிரு நின்றியூர்ப்
பூசுரரில் வாச முற்ற

பூசலார் கங்கையணி நேசரென மெய்ப்பணிப்
புந்திமற வாமல் நாளுந்
துங்கமுறை கோயில்செய வுங்கையிற் பொருளிலாத்
துயர்கொண் டயர்ந்து சிந்தைத்
தோற்றத்தி னுற்பொருள்கள் சேர்த்துகற் காலந்
தொடுத்துமா லைய மெடுத்து
மிங்கிதப் பிரதிட்டை பண்ணுநாட் கச்சிதனி
லிப்பணிசெய் காட வர்க்கு
மிம்மொழிகள் சொலவந்த வாக்கிது விளம்பவடி
யிணைதொழுது பின்பு நெஞ்சின்
மங்கைபங் காவென்று பூசனை புரிந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே. (எசு)

மங்கையர்க்கரசியார்.

தாணிபுகழ் மணிமுடிச் சோழன்மக ளாய்த்தென்னர்
தம்குடி விளங்கி மாதர்
தனியரசி நாமம் புனைந்துமடி யார்பணிக
டலைகொண்டு காழி நாட்டின்
சிரபுரப் பிள்ளையார் தமிழ்மாலை வைப்பிற்
சிறப்பினிது வப்ப வோங்கித்
தீதுரைத் திடுசமணர் வாதுதீர்த் துத்திருத்
தென்பாண்டி நாடு வாழ்கப்
பரசமைய நெறிகெடும் படிபூதி சாதனம்
பயிலக் குலச்சிறை மனப்
பண்புபணி யின்பமுற் றன்புபெறு தம்கொழுநர்
பாசவினை யுந்து றப்ப
வாமிகுந் தடியர்பணி விடைமிகுந் திடவுமுன்
வந்தடிமை கொண்ட கயிலை

வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (எஎ)

நேசநாயனார்.

தேம்பொழில் வருந்திருக் காம்பீலி மாநகர்ச்
சீலமிகு சாலியர் குலச்
செயலினர் சிவபணிச் செல்வனா ரினிமைபெறு
தேசமதில் நேச ரென்ப
தாம்பெயர் மனச்செய்கை பூங்கழற் காகவெற்றி
சாற்றுவாக் கின்செய்கை மெய்த்
தக்கபஞ் சாக்சர மனுவினுக் காகவெழில்
தருகாத் தொழில்செய் கைசீர்
மேம்படுஞ் சிவயோகி பூண்பணிக் காகவென
மெல்லுடைக் கோவண மிக
வேண்டியது செய்துதின மீந்துமுறை வழுவாத
மெய்ம்மையதி னாலு நீல
மாம்பணி யணிந்திருவர் காண்பரிய கழல்பெறமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (எஅ)

கோச்செங்கட்சோழ நாயனார்.

சோழநா டுரியவெண் ணாவன்மா நகரிற்
றலங்குஞ் சிலம்பி வாய்நூற்
சுற்றிமேற் பந்தரிட் டர்ச்சனைகள் புரியவெண்
டும்பிகண் டனுசித மெனும்
வீழவே செய்தகா மீதிற் கடிப்பவுயிர்
வீய்ந்திரவி குல வேந்தனர்
மேவிடுஞ் சுபதேவன் மாதெனுங் கமலவதி
மின்னினொடு தில்லை தொழுது

தாழவும் வயிற்றிற் பிறந்துகோச் செங்கண்ணர்
தானாகி முடியின் மகுடஞ்
சாற்றியுந் தந்தைதவ முறவுஞ் சிவாலயத்
தக்கபணி செய்து தில்லை
வாழுமறை யோர்க்கம்பொன் னீடிலஞ் செய்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே பிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (எசு)

நீலகண்டப்பாண நாயனார்.

நேயமிக வருமெருக் கத்தமாம் புலியூரி
னீலகண் டப்பாண னார்
நீடுபல பதிபணிந் தாலவாய் சேர்ந்துபண்
ணிபற்றவடி யாரை யேவத்
தூயதிரு வாயின்முன் கொண்டுசெல நின்றிசைச்
சுருதிக ளியற்ற விண்ணிற்
சுந்தரப் பொற்பலகை தந்திட மொழிந்தருள்
சுரந்துமகிழ் வாய கன்று
மேயவா ரூர்த்திருக் கோயில்வந் தியாழிசை
விளம்பவட திசை பணிந்து
மேவுசம் பந்தர்சொற் பாடலியா ழிட்டெழில்
விளங்குபெரு மண மூகந்து
மாயனிறை தேடுபொற் சேவடி பாரவமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே பிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (எ௰)

சடையநாயனார்.

கதிபாவு முமைதிருப் பணிவிடைக் கன்னியர்கள்
கடலிநாம ஸினி வைகறை

காலைமலர் கொய்துவரு காலைதன் றுள்பணிக்
காமர்மலர் கொய்தி டச்சென்
றெதிர்கண் டவர்க்கவர்க ளிச்சைகொண் டேமல
ரெடுத்துவா விறுசெய லறிந்
தினியமல ரனுசித மெனப்புவியி லவதரித்
தின்புற் றிருந்து நம்பாற்
சதிர்பெறும் பணிபுரியு மென்றுகண் ணுடிநிழல்
தன்னையொளிர் சுந்தர மெனத்
தானழைத் திடவந்து பரவைசங் கிலிமணஞ்
சார்ந்தவன் றொண்டர் தம்மை
மதலையென வேபெற்ற சடையனார் தொழுதிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (அக)

இசைஞானியார்.

ஒழியாத பெருமையுள சடையனார் காதல்பெற
வோங்குநற் செய்கை யுடனே
யுற்றநற் பண்புடைய ராயில் லறத்தினுக்
குரியநற் றுணை யாயினு
ரழியாத முப்புரமு மொருநொடியி லெய்தாரை
யன்பினே டுவந்து பாடி
யானதொரு முதலைவாய்ப் பிள்ளைதனை யன்றழைத்
தாற்றினிடை யிட்ட பொருளைக்
குழியார் குளத்தெடுத் தேபரவை யில்விட்ட
கோதிலா ரூரர் தம்மைக்
குணமிகுந் தமிழ்நாடு சைவநெறி தழையவே
குமாரனென வேப யந்த
பழைமதர் நெடுங்கணிசை ஞானியார் தொழுதிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை

வாசனை பிராஜலிங் கேசனை சிவநைதநகர்
மாணிக்க மலை நாதனே. (அஅ)

பரவைநாச்சியார்.

காலைமலர் கொய்துவரு காலைமன திச்சையைக்
கண்டுமை களித்திடு மெனக்
கருணைதர வாரூ ருருத்திரக் கணிகையார்
காதலி யெனப் பிறந்து
வேலைவிட முறழ்விழிப் பரவையென் றேபெயர்
விளங்கியதி ரூப வதியாய்
வேற்றொருவர் மால்மனத் தோற்றமில் லாதுமுன்
வேண்டியா ரூர்க்கோவி லுட்
சோலைப் பசுங்கிளி யெனப்பணிய வாவும்வன்
றொண்டர்கண் டாசை தீரச்
சொற்றமிழ்க் கிரவிலவ ளிற்றூது சென்றுசுப
சோபனஞ் செய்து மகிழ்வாய்
வாலையுமை யாள்பணிக் கோலமிசை வாகமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை பிராஜலிங் கேசனை சிவநைதநகர்
மாணிக்க மலை நாதனே. (அகூ)

சங்கிலிநாச்சியார்.

வெற்றிபெறு கயிலையுமை நற்பணி குறைந்தபின்
மிக்கதிரு வொற்றி யூரில்
வேளாளர் தலைவர்நா யிறுகிழான் புதல்வியென
மேதினி விளங்க மகிழ்வாய்ப்
பெற்றதாய் தந்தைதஞ் சுற்றத்தின் மன்றல்வினை
பேசப் பொறாத வதனாற்
பெம்மான் பணிக்கெனக் கன்னிமா டஞ்செய்து
பேதைபணி மேவு நாளிற்

கற்றவன் றெண்டர்வந் தாற்றுமின் னுண்மீதா
காதல்தீர்த் தருளு மென்னக்
கன்னிமன திசையமகி ழின்கீழ்மு னம்பிமெய்க்
கட்டுரைப் பலமொற்றி யூர்
மற்றவர்க ளறியமணமுற்றபொற் கொடிதொழமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவனைநகர்
மாணிக்க மலை நாதனை. (அச)

நாயன்மார்க்குப் பூசை விபரம்.

சித்திரை, வைகாசி.

செஞ்சொன்மிகு சித்திரைத் திங்கள்பர ணியினுட்
சிறுத்தொண்ட ரோகணி தனிற்
செல்வமங் கைக்காசி யாதிரையில் விறன்மிண்டர்
சித்திரையி லிசை ஞானியார்
தஞ்சமிகு மகவதிடன் மெய்க்குறிப் புத்தொண்டர்
சதையமதி லவரையர் சீர்
சார்ந்தவை காசிமூ லத்தினிற் சம்பந்தர்
தருபாணர் முருகர் நக்கர்
அஞ்சாத சோமாசி மாறரா யிலியந்
துணைக்கழற் சிங்கர் பாணி
சொற்றபுனர் பூசத்தி னம்பியாண் டாரெழிற்
றாயநமி நந்தி பூசம்
மஞ்சுலவு குன்றைபா ரம்பாஞ் சென்றிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனை சிவனைநகர்
மாணிக்க மலை நாதனை. (அரு

ஆனி, ஆடி.

ஆனிமதி தன்னிலா யிலியம் புகழ்த்துணைவ
ரன்பின்மகம் வாத வூர
ரருள்பெறும் பூரமமர் நீதியா ரேவதியி
லார்கலிக் கம்ப ராடி
தானிலகு மசுவதியின் மூர்த்தியார் சித்திரை
தழைத்தமிழ லைக்கு றும்பர்
சாற்றுமா திரையினிற் கூற்றா யிலியந்
தனிற்புகழ்ச் சோழர் சோதி
ஞானமிகு வன்றொண்டர் நேயமுறை சேர்கோ
னவில்விசா கத்தி லினிய
நண்புபெறு பரவைசங் கிலிநாச்சி யார்கேட்டை
நாள்கலிக் காமர் புலியர்
வானநா டெய்திமெய்ஞ் ஞானவீ டிலகமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (அசு)

ஆவணி, புரட்டாசி, ஐப்பசி.

ஆவணி மதிக்குள்வரு பூசஞ் செருத்துணைவ
ராயிலிய மதிபத்தர் சீ
ரானமக நாளிளையான்குடியர் மூலநா
ளார்கலையர் வாணிச்சி யும்
பாவியல் புரட்டாதி யசுபதி யுருத்திரப்
பசுபதி யுரோகணி தனிற்
பணியுநாட் போவருத் திராடமே னதியார்
பகர்சதையம் நரசிங்கர் பேர்
மேவுமைப் பசிமாத வசுபதியின் மூலனார்
மீறுபர ணியின் மாறனார்

மிக்ககார்த் திகையிடங் கழியர்பூ சஞ்சத்தி
மேவுமனு டம்பூச லார்
மாவுலவு மூலநா ளையடிகள் வானுறமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (அஎ)

கார்த்திகை, மார்கழி.

கார்த்திகையின் வருதிருக் கார்த்திகையி னுளிற்
கணம்புல்ல ருத்திர மதிற்
காட்டுமெய்ப் பொருளுப ரத்தமா னுயர்சொற்
கனிமூல மூர்க்கர் வாய்மை
பூர்த்திபெறு பூராட மேற்றிடு சிறப்புலியர்
போதமார் கழிமதி யினிற்
பொங்குமா திரையினுட் டில்லையந் தணர்சடையர்
புகழ்பாவு சோதி நாளின்
சீர்த்திகழ் சிறந்தகஞ் சாறனார் ஞானஞ்
செழித்தபூ ராட மதனிற்
செய்யசாக் கியர்தருண முற்றவுத் திராடத்
தினத்தியற் பகையிரே வதி
வார்த்தைமிகும் வாயிலா ரேற்றசொர்க் கம்பெறமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (அஅ)

தை, மாசி.

கருணைபெறு தைமாத மிருகசீ ரிடமதிற்
கண்ணப்ப ராதிரை யெழிற்
காட்டுமரி வாட்டாய ருத்திராட நாளிற்
கனிந்ததண் டீசர் நீடுந்

தருணமே வியவிசா கத்தினிற் புகழ்பெற்ற
தக்கதிரு நீல கண்டர்
சதையமதி லப்பூதி ரேவதியி லேயர்கோன்
சாற்றுமா சித்திங்க ளிற்
பொருணய முலாவுமத் தந்தன்னி லெறிபத்தர்
பூராட நாட்காரி யார்
பொற்புலவு சதையத்தின் மிக்கசெங் கட்சோழர்
பூவுல ககன்று வாழுள்
வருணநிறை ககனநா டுரியகுடி யாகமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (அகூ)

பங்குனி.

பங்குனித் திங்கள்ரோ கணிதனிற் சிவனேசர்
பாவுதிரு வாதிரை மிகும்
பணிமருவு கணநாதர் பூசமுனை யடுவர்சொற்
பகர்சோதி நாளம்மை யார்
தங்குமனு டந்தண்டி யடிகண்மூ லத்திற்
றழைத்திடு குலச்சிறையர் சீர்
தருபத்தி யொடுபணிவர் பரமனைப் பாடுவார்
தஞ்சமிகு சித்தம் வைத்தோர்
செங்கண்மால் பணியுமா ரூரிற் பிறந்தார்க
டிருமேனி தீண்டு மடியார்
செம்மைதரு முழுநீறு பூசுமுனி வோர்புலவர்
செப்பவடி சார்ந்த வடியார்
வங்கண மிகுந்திருப் பொன்பதி விளங்கிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கூ0)

திருக்கூட்டம்.

மிக்கதென் மதுரைதனி லறுபத்து நான்குதிரு
விளையாடல் செய்து காஞ்சி
மேவுநாற் பத்தியெண் ணாயிரவ ராயருண்
மிகுந்தகா ரோணந் தனிற்
றக்கநா லாயிரவ ராய்த்தில்லை மாநகர்
தழைக்குமூ வாயிரவ ராய்ச்
சாற்றுமா ரூரிலறு நூற்றொருவ ராயுண்மை
சாரும் பெருந்துறை யினிற்
பக்குவ மிகுந்தமுந் நூற்றொருவர் காய்வனம்
பயில்வீழி மிழலை நகரிற்
பண்புபெறு நூற்றொருவ ராய்மிகுஞ் சிவதையிற்
பன்னிருவ ராயனு தின
மைக்கடல் பெறும்புவியி லென்றுந் துதிப்பமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௯௧)

நைமிசாரணியம்.

அங்கிரர் வசிட்டர்சவு னகர்முனிவ ரனைவரு
மவனியிற் றவமி யற்ற
வலாவ னருட்குசையி னாழிசென் றமர்நைமி
சாரணிய முற்ற சூதர்
தங்கநற் றவிசுதந் தியாவரு மகிழ்ந்திடச்
சவுனகன் வாட்போக்கி யின்
ஞானமான் மியவளஞ் சாற்றுமென வண்ணல்சீர்
தருசைவ மாம் புராணத்
துங்கமுறு கதையெந்தை முருகர்பாற் கூறவச்
சொல்லைநந் திக்கு ரைப்பத்

தூயமொழி யுஞ்சனற் குமாரர்க் கியம்புசெஞ்
சொல்வியா தருமெ மக்கு
வங்கணந் தருமாற்ற மென்னமகிழ் முனிவோர்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவகைநகர்
மாணிக்க மலை நாதனே. (கூஉ)

திருமாணிக்கமலையினுற்பத்தி.

பொன்குவட் டினின்மூவர் விண்ணிலனை வோரும்
பொருந்தியுறை கின்ற காலைப்
பொற்புடன் வாய்வுராகர் வந்து நகை நாரதர்
புரிந்தமர் விளைத்து மேரைத்
தென்புரகன் முடிமீ தடக்கவங் கூழ்பிசகு
செய்யமோ தியும் விடாதாற்
றேவர்சொற் குராகர்சற் றயரவுங் கூழ்பிலஞ்
சென்றைந்து முடிகள் வீழ்த்த
நன்குலவு தென்பாண்டி நாட்டில்நீ லந்தொண்டை
நாட்டிலரு ணங்கொங்கு நன்
ஞட்டிற் சுவேதம்நீர் நாட்டின்மர கதமெழில்
நவிற்றுபொன் னித்தென் கரை
மன்குலவு நிம்பநிழல் கண்டுபணி தொண்டர்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவகைநகர்
மாணிக்க மலை நாதனே. (கூஙு)

மாணிக்கமலைச்சிறப்பின்சீர்.

உன்னுநால் விசைகொண் டெழுந்துபூ தலமமர்ந்
துயரமீ ரெட்டகல மூன்று
யோசனை யிரத்தின மலைக்கொழுந் தாய்நிம்ப
மோங்கியெண் டீர்த்த மிக்கத்

தென்னுலவு மங்கிதிசை மின்னுபஞ் சாக்கரத்
தீர்த்தமொடு தெய்வ தீர்த்தஞ்
செப்புபஞ் சாக்கரக் குகையுமுனி வோர்தவஞ்
செய்கையுந் துய்ய புலியும்
பன்னக மிரும்பல விலங்கும்வெந் தொழிலுருப்
பான்மையுங் காக மனுகாப்
பண்பும்விண் டருவெனத் தண்டலை தடாகமும்
பயில்வள மிலங்க வுலகின்
மன்னுபெரி யோர்திருப் பொன்னடி பணிந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கூச)

ஆரியமன்னர் பூசனை.

செஞ்சொலுயர் கங்கைமண் டலமுழுது மனுநெறி
செலுத்துமா ரியமன் னவன்
சேடன் பணிந்துமுடி மணிவிளக் கிடுமணிச்
சிந்தையொடு வேண்டி வந்து
மிஞ்சுமவி டேகமுடி மேல்நிரம் பச்செய்ய
வேண்டுமென் றினிய தண்கா
வேரிநதி நீராயி ரங்கடங் கொண்டுவர
மிக்கபொசி வாசி காட்டத்
தஞ்ரம் பொருமல்வா ளுருவிமுடி மோதிடத்
தான்சுரும் பார்குழ லுமைத்
தையலொடு தோன்றிநின் கிளைஞரொன் சன்னிதி
தனிற்றினம் பொன்னி நதியின்
மஞ்சனப் பணிவிடைகள் புரிகவென் றுரியன்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கூரு)

ஆதிசேடன் பூசைசெய்தது.

பூசவிடு சேடன்முன் வானவர்கள் சொலவாயு
பூசித்து மாச கன்ற
புனிதநெறி மகதியாழ் முனிபுகல வகலிடம்
போந்துமா தலம னேகங்
காசினி புகழ்ந்துகோ கன்னமுத லந்தங்
கடம்பமா நகரி றைஞ்சிக்
காவிரியி னீர்படிந் தேகியத் திரிமுதற்
கற்றநற் றவமுனிவர் பா
லாசையொடு கண்டம்மை கோவிறென் பாற்சுனை
யமைத்துநீர் மூழ்கி வெய்யோன்
அப்பெயர்க் கேணிநூற் றெட்டெனுங் கும்பநீ
ரபிடேக மதுசெய்து மே
மாசுணஞ் சிரமணித் தீபம்வைத் தேற்றிடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கூசு)

தேவேந்திரன் சாபந்தீர்ந்தது.

தேசுறக் கடல்கடைந் தமுதினிற் பலவகை
செனிப்பவக லியைமு குந்தன்
செய்கோ தமனுக் களிப்பநீர் மூழ்கித்
திறங்கொளா தமரர் கோன்மா
லாசுகொண் டேவரிக் குயிலெனக் கூவிமுனி
யகலவக லியை வஞ்சமா
லாகப் புணர்ந்தமுனி சாபித்தி டக்குரு
வறிந்துதல மகிமை புகல
நேசமொடு சென்றிந்தி ரீரமொன் றுற்றுச்சி
நீள்தேவ தீர்த்த மூழ்கி

நிம்பநிழல் கொண்டதற் கீசான மிக்கசிவ
லிங்கஞ்செய் தர்ச்சனை தவம்
வாசவன் செய்துமுனி சாபமது தீரமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைநகர்
மாணிக்க மலை நாதனே.

இடி பூசனை புரிந்தது.

திரமுற்ற வுதயமால் வரையிலுயர் மந்தேகத்
தீவினி லரக்கர் காணுச்
செருவினைத் திரவிதன் றேர்விட் டிரங்கியமர்
செய்தினைப் பமரர் கண்டும்
பரபரர்ச் சனையினிலுன் றீதகலு மெனவுமியாழ்ப்
பண்முனி வரக்கனலி சொற்
பகரலிங் கத்தினி லிரத்னவரை யார்கழற்
பணியநின் பின்னவனெனு
முறைகொண் டகத்தினில் நினைப்பமுன் னுருமுவந்
துற்றுமிவ் வுரைத ரச்சென்
றுயர்சித்தி ரைத்திங்கள் பூரணையி லத்தனை
ளோங்கிரவி தீர மூழ்கி
வருமடங் கற்பணிந் திரவிபகை தீரமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைநகர்
மாணிக்க மலை நாதனே.

அகத்தியர் பூசனை.

கடல்சூழும் நெடியவட வரையினுக் குத்தரதிசை
காட்டிவளர் புட்ப பத்தரைக்
கரையிடத் தறிஞரொடு குறுமுனிவ ருரையும்நாட்
கண்டுநா ரதரிரு வரும்

விடையினோர் பதிபல பணிந்திமைய முறவுமனம்
வெருவும் பிரேத மோட்ச
மேவுநிம் பத்துறை பணிந்துதைய புரியென
விளக்கிநெடு முடியின் மேல்பாற்
றடமொன் றமைத்துநற் சுதையமுதின் மூழ்கியெழில்
சன்னிதி புகுந்துச்சி யிற்
றக்கவர்ச் சனைபுரியும் நட்பில்வண் டார்குழற்
றையலுடன் வெள்ளை விடைமேல்
மடலவிழ்க் கலசமுனி சொக்கரென் றேத்தமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனை யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கூகூ)

உரோமசமுனிவரர்ச்சனை.

சலதிநெடு வுலகின்மனு நெறியிலெண் கோடிபொன்
றருமங்க ளீட்டி வாழுஞ்
சமரவே லரசனொரு தூர்த்தனுற வாய்நெறி
தளர்ந்துலோ காயத மதக்
கல்வியின் சுகமுற் றறம்பாவ மிலையெனக்
காலங் கழிப்ப மறலிக்
கருதியிரு பத்தியெண் கோடிநா கிற்சென்று
கழுகா யலைந்திமைய மீ
தில்குதவ ரோமச ரிடஞ்சென்று ஞானமுற்
றெப்பதி பணிந்து பொன்னி
யெய்தமலை கண்டுபுண் ணியகங்கை யிற்படிந்
தெழில்ரூப மாக முனிவர்
மலரடி பணிந்தரச னுலகியல் புரந்திடமுன்
வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (கoo)

வாயுவுபூசித்தநாயனுர்.

அண்டர்மொழி யுட்கொண்ட சண்டமா ருதமேவந்த
ரவனியி லிசைந்து பொன்னி
யாற்றில்நீ ராடிவந் தேற்றகீழ் பாற்பாறை
யதுதன்னி லங்கை வயிரத்
தண்டமதி னுற்கேணி கண்டுபுனன் மூழ்கியொளிர்
சயிலம்வல முற்று மேல்பாற்
சன்னிதி பணிந்துபல பருவநற் றவநெறி
தழைப்பவெள் விடையின் மீது
துண்டமதி முடிநீல கண்டமழு மானிடத்
தோகையொடு முன்பு தோன்றித்
தோத்திரஞ் செயமாசு தீர்த்துநின் வடிவந்
துலங்குமுன் சுனை படிந்த
மண்டலத் தோர்க்கினிமை யுண்டென மொழிந்துமுன்
வந்தடிமை கொண்ட கபிலை
வாசனே யிராஜலிங் கேசனே சிவநைதகர்
மாணிக்க மலை நாதனே.

ஆயனுர் பூசனை புரிந்தது.

செய்க்கழனி சூழ்குழித் தண்டலை நகர்க்குடிமை
சேர்ந்தகோ பால மாயிற்
றிகழாய ரானிரைகள் மேய்ப்பர்நா டோறுமே
திருமலைச் சார்பி லொருநாள்
மெய்க்கருணை மலைமீது சென்றண்ண லைக்கண்டு
மேவுமான் பால்விருப் பால்
வேண்டியவி டேகஞ்செய் நாள்பலவி லொருநாள்
மிகுந்திடும் பால்க றந்து
கைக்கடந் தன்னையோர் பால்வைத்தி டக்கருங்
காகங் கவிழ்ப்ப வப்பால்

ஆழ்ந் துயிர்விடப் போமெனவு மிம்மலைக்
ட்சிநம் முருவ மென்றும்
க மணுகாத வழல்புரிந் தாயர்முன்
ந்தடிமை கொண்ட கயிலை
னே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
ாணிக்க மலை நாதனே. (௧0௨)

வயிரப்பெருமாள்பணிவிடை.

கமி முயர்தொண்டை நாட்டினிற் கச்சிநகர்
ர்ந்திடுந் தந்து வாயர்
மதிற் ரேன்றியே தன்னொடு பிறந்திடுங்
காதைசெல் வத்துரிமை யா
புகழ் பெறுமகவி லாததுயர் கொண்டதா
லினியசேய் பெற வேண்டியே
யமதி லுற்றுமவ ளெழில்செல்வ னீன்றதா
லெண்ணமுறு படி முடித்த
ரென வந்துமலை மேற்பாங்கர் சன்னிதி
தனக்குமுன் னின்று வாளிற்
றலை துணித்திடுஞ் சிந்தைகண் டன்புடன்
றன்பரி கலங் கொடுத்தே
ாவல் தந்துவயி ரப்பெயர்ப் பெருமாள்முன்
வந்தடிமை கொண்ட கயிலை
சனே யிராஜலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே. (௧0௩)

திருத்தொண்டர் சதகம் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருத்தொண்டர் சதகத்தின்
செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அங்கிரார்	58
அண்டர்	64
அருள்பெ	14
அலைநீ	35
ஆ	
ஆதிவே	47
ஆவ	55
ஆனிம	55
ஈ	
ஈசனடி	41
உ	
உன்னு	59
ஊ	
ஊக்க	26
ஊழிகா	32
எ	
எழுத்து	33
எள்ளாத	38
ஒ	
ஒழியாத	52

செய்யுள்.	பக்கம்.
க	
கங்கு	20
கடல்சூ	62
கடல்சே	39
கணித	8
கதிப	51
கருணை	56
கருதரி	47
கல்வி	28
கழனி	11
கன்னல்	17
கா	
காமல	20
காரில	30
கார்கொ	46
கார்த்	56
காலைம	53
காவுறைந்	16
கானில	15
கு	
குலவுத	65

செய்யுள்.	ப
குவல	
குறைவி	
குன்றுந	
கொ	
கொண்டன்	
கோ	
கோதிலா	
ச	
சலதி	
சா	
சாற்று	
சி	
சிந்தை	
சிரபுரங்	
சிறைபடு	
சீ	
சீதவ	
சீலமிகும	
சீலமிகுதெ	
சூ	
சூதமிகு	

செய்யுள்.	பக்கம்.
சே	
செகத்	41
செஞ்சொலு	60
செஞ்சொன்	54
செப்பரி	6
செம்பி	41
செயமி	42
செய்க்	64
செய்ய	43
சொ	
சால்லு	10
சோ	
சாழ	50
த	
தடுமா	39
ண்டமி	21
ண்டலை	25
ண்ணு	36
ரணி	49
லீமு	36
ழைத்	17
ணிமை	9
தா	
ட்டிக	18
ரணி	24
தி	
ரமு	62
ருமுனை	22
திருவுல	6
து	
துங்க	24
தே	
தேங்குல	19
தேசுற	61
தேம்	50
தேனுடு	42
ந	
நண்ணு	18
நன்னய	12
நா	
நாடுபுக	35
நே	
நேயமி	51
ப	
பங்குனி	57
படியில	4
பண்குல	9
பா	
பாட்டி	23
பாரணவு	45
பாரின்	12
பு	
புகழ்பெ	8
பூ	
பூசலார்	49
பூசலிடு	61
பூமருவு	7
பூமேவு	3
பொ	
பொங்க	48
பொன்கு	59
பொன்னி	30
பொன்னீடு	40
போ	
போதம	11
மா	
மாதினை	3
மி	
மிக்க	58
மெ	
மெய்ய	21
மே	
மேதினி	23
மோ	
மோனமி	5
வி	
விந்தை	13
விளங்கு	37
வெ	
வெள்ளநீர்	48
வெற்றி	53
வே	
வேதமலி	44
வேதியர்	5

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

ஸ்ரீ விருத்திப்பிரபாகரம்:— விசாரசாகர நூலாசிரியராகிய சாது ஸ்ரீ நிச்சலதாஸரவர்கள் ஹிந்திபாஷையி லியற்றிய அரிய வேதாந்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு வசனம் 4 0 0
பஞ்சதசப்பிரகரணம்:—சதுர்வேதபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீ வித்யாரண்யசுவாமிகள் அருளிச்செய்த இந்நூல் தமிழில் வினவிடைரூபமாக எழுதப்பட்டுள்ளது 1 0
அகம்புற ஆராய்ச்சி விளக்கம்:—வேதாந்த சாஸ்திரத்தின் பல அரிய விஷயங்களைத் தமிழில் வசனரூபமாகத் திரட்டி ஸ்ரீமத் சச்சிதாநந்த சுவாமிகள் மாணாக்கர் ஒருவர் இயற்றிய அரிய நூல் [நூலாசிரியர் படத்துடன்] ... 1 4 0
ஸ்ரீ பகவத்கீதை:— ஸ்ரீமத் பொன்னம்பலசுவாமிகளியற்றிய கூடார்த்த தீபிகை என்னும் உரையுடன் 2 0 0
பிரபோத சந்திரோதய வசனம்:—அல்லது மெய்ஞ்ஞான விளக்கம் 1 0
பிரபுலிங்கலீலை வசனம்:— நூதனமாய் தமிழில் வசனப்படுத்தப்பட்ட அரிய நூல் 0 12 0
ஒழிவிலொடுக்கம்:—சிதம்பர சுவாமிகள் உரையுடன் ... 1 0 0
ஸ்ரீ விவேகாநந்த விஜயம்:—விவேகாநந்த சுவாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத் திரட்டும் [சுவாமிகள் படத்துடன்] 1 4 0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச விஜயம்:— ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அற்புத சரித்திரமும், கதாமிர்தமும் [பரமஹம்சர் படத்துடன்] 1 4 0
ஸ்ரீ சங்கர விஜயம்:—ஆதி சங்கராசாரிய சுவாமிகள் சரித்திரம் (ஆதி சங்கரர் படமும், சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் படமும் கூடியுள்ளது) 1 0 0
ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்:—(82 பக்தர்களின் சரித்திரம்) 3 0 0
திவ்ய தேசயாத்திரையின் சரித்திரம்: (இந்தியாவிலுள்ள பல திவ்ய ஸ்தலங்களின் மகிமையும் விசேஷங்களும், அந்த ஸ்தலங்களுக்குஇந்நூலாசிரியர்யாத்திரைசெய்தவரலாறும்) 2 0
மதவிருக்ஷம்:(உலகத்திலுள்ள பெரிய மதங்களின் சரித்திரமும் வரலாறும்:) 1 12 0